# இடைக்கால நாகரிகத்தின் வரலாறு

டாக்டர் கி. ர. அநுமந்தன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண் — 850

# இடைக்கால நாகரிகத்தின் வரலாறு

(கி. பி. 476 முதல் 1453 வரை)

(மேல்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்
டாக்டர் **கி. ர. அநுமந்தன்**, எம். ஏ.,
எம். எஸ். (விஸ்கான்ஸின்) பிஎச். டி.,
பேராசிரியர், பண்டைய வரலாற்றுத் துறை,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1979
Number of Copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 850

© Government of Tamilnadu

**History of Medieval Civilization
(from 476 A.D. to 1453 A.D.)**

Dr. K. R. Hanumanthan

Price Rs. 9-50

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
S. DHANYAKUMAR PRESS,
3, Boag Road, T.Nagar,
Madras-600 017.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்து வரும்பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப்பொருளியல், புவியியல் புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான இடைக்கால நாகரிகத்தின் வரலாறு (கி. பி. 476 முதல் 1453 வரை) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 850 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 885 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின், 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


பக்கம்

1. முந்திய இடைக்கால நாகரிகம் — கிறிஸ்தவ சமய அடிப்படை ... 1

2. முந்திய இடைக்கால நாகரிகம் — ஜெர்மானிய அடிப்படை ... 36

3. பைஸான்ஷிய நாகரிகம் ... 59

4. இஸ்லாமிய சமயமும் சாரசனிக் நாகரிகமும் ... 77

5. பிந்திய இடைக்கால நாகரிகம் அல்லது நிலமானிய கால நாகரிகம் ... 100

6. இடைக்கால ஐரோப்பிய நகரங்களின் வளர்ச்சி ... 132

7. நிலமானிய கால நாகரிகம் — சமயத்துறை ... 154

8. நிலமானிய கால நாகரிகம் கல்வியும் கலைகளும் ... 186

9. இடைக்காலத்தின் இறுதிக் கட்டம்-மறுமலர்ச்சியின் உதயம் ... 223

மேற்கோள் நூற்பட்டியல் ... 251

கலைச்சொற்கள் ... 253

# 1. முந்திய இடைக்கால நாகரிகம்- கிறிஸ்தவ சமய அடிப்படை

## இடைக்காலம் என்பதன் பொருள்

வரலாறு என்பது ஒரு வற்ருத நதியைப் போன்றது. அதன் தொடர்ந்த ஓட்டத்தில், திட்டவட்டமான காலப் பகுதிகளைக் கணித்தலென்பது இயலாத காரியம். ஏதோ ஒரு குறிப்பிட்ட ஆண்டில்தான் ஒரு காலப் பகுதியானது முடிவுற்று மற்ெருரு காலப் பகுதியானது தொடங்கியது என்று நாம் துல்லியமாகக் கூற முடியாது. ஏனெனில், மக்கள் தம் வாழ்க்கையைத் திடீரென்று மாற்றிக் கொள்வதில்லை. ஒரு சமுதாயத்தை அரசியல் அலைகள் அலைக்கழிக்கலாம்; மன்னர்கள் மாறலாம்; அரசாங்கங்கள் ஆட்டங் கொள்ளலாம். ஆனல், வயலில் உழுகின்ற உழவனும், உலைக் களத்தில் உழைக்கின்ற கொல்லனும், நூல்களை எழுதுகின்ற ஆசிரியனும் பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருப்பர் என்பது மட்டும் திண்ணம். படிப்படியாகவே மக்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது வரலாறு கண்ட உண்மையாகும். எனவே, உலக வரலாற்றில் பண்டைக் காலமானது முடிவுற்று இடை நிலைக் காலமானது எந்த ஓர் ஆண்டில் எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின் விளை வாகத் தொடங்கியது என நாம் வரையறுத்துக் கூறுதல் ஒண்ணுது. பொதுவாக ரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்திலிருந்து தற்காலம் வரை நீண்டுள்ள ஓர் ஆயிரம் ஆண்டு களடங்கிய காலப் பகுதியையே இடைக்காலம் என ஐரோப்பிய வரலாற்ருசிரியர்கள் குறிப்பிடுவது மரபாயிருந்து வருகிறது. அதையுங்கூட முந்திய இடைக் காலம் அல்லது இருண்ட காலம் (Early Middle Ages or Dark Ages) *(கி. பி. 400- கி. பி. 800)* என்றும் பிந்திய இடைக் காலம் (Later Medieval Ages) *(கி.பி. 800- கி. பி. 1300)* என்றும் அவர்கள் பிரித்துப் பேசுவது வழக்கம். உண்மையில் இத்தகைய காலப் பிரிவுகள் செயற்கையானவையே எனினும், நடைமுறைக்குகந்ததோர் வழக்காருக அவற்றை ஏற்றுக் கொள்வதால் தவறென்றுமில்லை என்க.

## இடைக்காலப் பொதுப் பண்புகள்

ரோமானியப் பேரரசுக்கு முற்பட்ட ஐரோப்பிய வரலாறு னது, அதற்குப் பிற்பட்ட வரலாற்றினின்றும் பெரிதும் வேறு பட்டதொன்று. 'காட்டுமிராண்டிகள்' (Barbarians) என்று ரோமானியர்களால் அழைக்கப்பட்ட ஜெர்மானியர்களது கடுந் தாக்குதல்கள் காரணமாக ரோமானியப் பேரரசு சிதைவுற்றது. சிறு சிறு நாடுகள் ஆங்காங்கே தோன்றின. கலவரம், பயம், கட்டுப்பாடின்மை என்பன எங்கு பார்த்தாலும் காணப்பட்டன. ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமை மனப்பான்மையும் காழ்ப்பும் எங்கும் தலை விரித்தாடின. மனிதனது தன்னம்பிக்கை தளர்ந்தது. தெய்வ நம்பிக்கை வளர்ந்தது. கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இருபெரும் சமயங்கள் தோன்றி வளரலாயின. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட நிலமானிய முறை (Feudalism) என்ற ஓர் அரசாங்க முறை எங்கும் ஏற்பட்டது. விவசாயம் ஓங்கியது. ஆனால் வாணிபம் குன்றியது. தம்மைக் காத்துத் தம் தொழிலை ஓம்புகின்ற வலிமைமிக்க வேந்தர்கள் இல்லாத காரணத்தால் பல வணிகர்கள் தம் தொழிலை விட்டு விட்டு வேளாண்மையிலீடுபடலாயினர். நகரங்கள் நசித்தன. புரவலரின்மையால் புலமையும், கலையும், இலக்கியமும், இசையும் குன்றின. இங்ஙனம் பல துறைகளிலும் நலிவு ஏற்பட்ட ஒரு காலத்தையே முந்திய இடைக் காலம் என்பர் வரலாற் றாசிரியர்கள். நாகரீக வாழ்க்கைக்குப் பெருமளவுக்கு இருட்டடிப்பு ஏற்பட்டதால் இதை இருண்ட காலம் என்றும் சொல்வது வழக்கம். ஆனால், ஆசியாவைப் பொறுத்த வரையில் இது இருண்ட காலமன்று. டாங் வமிசத்தாரின் ஆட்சியில் இதே காலத்தில் சீனாவில் நாகரீகம் கொடிகட்டிப் பறந்ததென்பதை நாம் அறிகிறோம். பொதுவாக இக் காலத்தே ஐரோப்பிய மக்களது வாழ்வில் ஒளிகுன்றி இருந்ததெனினும், கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயப் போதனைகளால், மக்கள் ஓரளவு அறி வொளியையும், நம்பிக்கையையும் பெற்றனர். கான்ஸ்டான்டி நோபில் என்ற தலைநகரத்தைக் கொண்ட பைசான்டியப் பேரரசு (Byzantine empire) பண்டைய கிரேக்க, லத்தீன் மொழிகளைப் போற்றி வளர்த்து வந்தது. ஐரோப்பாவின் நடுப் பகுதியில் சார்லமேன் (Charlemagne) என்ற பேரரசர் பண்டைய ரோமப் பேரரசை உயிர்ப்பிக்கும் முயற்சியிலீடு பட்டிருந்தார். இக் காரணங்களால்தான் இக்காலத்தை முற்றிலும் இருண்ட காலமென்று கூற முடியாது என ஒரு சிலர் வாதிக்கின்றனர். சார்லமேன் அரசருக்குப் பின் ஐரோப்பாவில் குழப்பம் மீண்டும் ஓங்கியது. அக் குழப்பத்தை ஓரளவு சமாளித்த பெருமை

கிறிஸ்தவ சமயத்துக்கும், நிலமானிய முறைக்குமே உண்டு. நில மானிய முறை மக்களைப் பிரிவினைப் பாதையில் நடைபோடச் செய்த அதே நேரத்தில் கிறிஸ்தவ சமயமானது மக்களை ஒற்றுமைப் பாதையில் முன்னேறச் செய்தது.

பொதுவாக மக்கள் இக்காலத்தே தன்னம்பிக்கையற்றுக் காணப்பட்டனர். கடவுள் வழிபாட்டிலும் பரலோக வாழ்க்கை யிலும் அவர்கள் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். இம்மை இன்பங்களைத் துறந்தாலேயே மறுமை இன்பம் கிட்டுமென அன்னார் நம்பினர். எனவே, அதற்கு வழிகாட்டுவதாகக் கூறிய சமய குருமார்களின் அதிகாரத்துக்கு அவர்கள் அடி பணிந்தனர். எதையும் ஆராய்ந்து பாராமல் அப்படியே நம்புகின்ற வழக்கம் ஏற்பட்டது. எனவே, அறிவியல் பரிசோதனைகள் அருகின. பண்டைய கிரேக்கர்கள்பால் காணப்பட்ட அறிவியல் மனப் பான்மை மாய்ந்தது. சொந்தமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறனை மனிதன் இழந்தான். தனி மனிதர்களின் சுயேச்சையை விட, சமுதாயக் கூட்டுகளின் நலமே முக்கியமெனக் கருதப் பட்டது. இதனால் செல்வாக்கு மிக்க ஒரு சிலர் ஒன்றாகக் கூடிக் கொண்டு தனி மனிதர்களைத் தம் பிரியம் போல் ஆட்டிப் படைத்தனர். அரசியலில் நிலமானியப் பிரபுக்களும், பொரு ளாதாரத் துறையில் கில்டு எனும் வணிகக் குழுக்களும், சமயத் துறையில் கத்தோலிக்க குருமார்களும் தனி மனிதர்கள் மீது எல்லையற்ற அதிகாரம் செலுத்தினர். ஜனநாயகம், கருத்து வெளியீட்டு உரிமை, சொத்துரிமை தனிப்பட்டோரின் சிந்தனை உரிமை போன்ற உரிமைகள் மருந்துக்கும் இல்லாமல் போயின.

இத்தகைய புன்மைகள் யாவும் இடைக் காலத்தின் பிற் பகுதியில் சிறிது சிறிதாய் மாறத் தொடங்கின. சிலுவைப் போர்கள் (Crusades) என்ற சமயப் போர்களின் மூலமாக ஐரோப்பியர்கள் கீழை நாகரிகத்தோடு தொடர்பு கொண்டனர். கீழை நாடுகளோடு வாணிபமும் வளர்ந்தது. வாணிபப் பெருக்கால் ஃபிளாரன்ஸ், வெனீஸ் போன்ற பெரு நகரங்கள் தோன்றின. அவற்றில் பெருஞ் செல்வர்களும் தோன்றினர். அச் செல்வர்களில் பலர் கலைகளை ஓம்பினர். அறிவு அதனால் வளர்ச்சி யடைந்தது. செல்வமிக்க அந் நடுத்தர வர்க்கத்தினர் அரசர்களுக்குப் பலவகையிலும் உதவி செய்து நிலமானியப் பிரபுக்கள், சமயக் குருமார்கள் ஆகியோரின் ஆதிக்கத்தை ஒழிக்க வழி செய்தனர். அதனால் தேசியம் (Nationalism) வளர்ந்தது. தேசிய மொழிகளும் இலக்கியங்களும் வளர்ந்தன. பெரிய பல்கலைக் கழகங்கள் தோன்றி அறிவை வளர்த்தன.

தற்காலப் பண்புகள் பலவற்றின் வித்துக்கள் முளைக்க ஆரம்பித்த இக்காலத்தையே பிந்திய இடைக் காலம் என்பர் வரலாற்றுசிரியர்கள்.

### முந்திய இடைக் கால நாகரிகம்

முந்திய இடைக்கால நாகரிகத்தில் அறிவு ஒருவித தேக்க நிலையை அடைந்தது. மக்கள் அறியாமையில் மூழ்கினர். காட்டுமிராண்டிகள் போன்று வாழ்ந்தனர். எதைச் சொன்னாலும் அதை மெய்யென்று நம்பிக் கொண்டனர். மூடப் பழக்க வழக்கங்களுக்கு எளிதில் உட்பட்டனர். இம்மையை விட மறுமையே உயர்ந்தது என்ற எண்ணம் ஓங்கியது. இல்லறத்தைக் காட்டிலும் துறவறமே உயர்ந்ததாக நம்பப்பட்டது. உலகாவது மாயம். அது மண்ணுவது திண்ணம். உலக இன்பங்கள் யாவும் பொய். அவற்றைத் துறப்பதே மேல் என்ற வறட்டு வேதாந்தம் தழைத்தது. எனவேதான் இக் காலத்தை (கி. பி. 400—800) இருண்ட காலம் என அழைப்பர். ஆனால், 9ஆம் நூற்றாண்டில் கரோலிங்கிய வமிசம் பிரான்ஸில் ஆளத் தொடங்கிய பின் மக்கள் வாழ்வில் புதிய தெம்பும் உற்சாகமும் காணப்படுகிறது. இலக்கியமும் தத்துவமும் உயர்நிலை எய்துகின்றன. அறிவு தழைக்கிறது. விஞ்ஞானம் வளர்கிறது. கி. பி. 800 முதல் கி. பி. 1300 வரையுள்ள பிந்திய இடைக் காலத்தில் உண்மையில் பல நவீனப் பண்புகளைக் காண்கிறோம். கி. பி. 1300 முதல் கி. பி. 1500 வரையுள்ள காலம் இடைக்காலம், நவீன காலம் இவற்றை இணைக்கின்ற ஒரு பாலமாகக் கருதத் தக்கது. நவீன காலப் பண்புகளின் வித்துக்கள் பல அக்காலத்தே ஊன்றப் படுகின்றன.

முந்திய இடைக்கால நாகரிகத்தை உருவாக்கிய சாதனங்கள், மூன்றாகும். அவை முறையே கிறிஸ்தவ சமயம், ஜெர்மானியக் காட்டுமிராண்டிகளின் பண்பு, பண்டைய கிரேக்க ரோமானிய இலக்கியங்களின் செல்வாக்கு எனப்படும். பண்டைய இலக்கியங்களின் செல்வாக்கு தத்துவத் துறையிலன்றி வேறு துறைகளில் அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆனால், ஏனைய இரண்டும் இடைக்கால நாகரிகத்தில் பெரிதும் பங்கேற்றுள்ளன. அவற்றுள் கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்கை முதலில் காண்போம்.

### கிறிஸ்தவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இன்றைய உலகத்தில் பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படும் ஒரு பெருஞ் சமயம் கிறிஸ்தவ சமயமாகும். அதற்கு அடுத்தாற்போல் வைத்து எண்ணப்படக் கூடியது

இஸ்லாமிய சமயமாகும். இவ்விரு உலகப் பெரு சமய மலர்கள் ஐரோப்பிய வரலாற்றின் இடைக் காலத்தில்தான் நன்கு மலர்ந்து நறுமணம் பரப்பின. அதனுற்முன் இடைக் கால ஐரோப்பாவை இருண்ட காலம் என்று அழைப்பது ஒரு வகையில் பொருத்த மற்றதாய்த் தோன்றுகிறது. இவ்விரு பெரும் சமயங்களும் உண்மையில் கீழை நாடுகளில்தான் தோன்றின. ஆனல், ஐரோப்பிய நாகரிகம் இவற்ருல் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஏறத்தாழ ஐரோப்பியர் அனைவரும் கிறிஸ்தவ மதத்தின் ஏதாவது ஒரு பிரிவைச் சேர்ந்தவரேயாவர். இத்தகைய பெருமை வாய்ந்ததோர் சமயத்தைத் தோற்றுவித்தவர் இயேசுநாதர் என்ற பெரியாராவார்.

## இயேசுநாதரின் வாழ்க்கை வரலாறு

ரோமானியப் பேரரசின் கீழை விளிம்பிலிருந்த ஜுடேயா என்ற நாட்டின்கண்தான் இயேசுநாதர் அவதரித்தார். அந் நாட்டின் மன்னன் ஹெராட் (Herod) என்ற யூதப் பெருமகனுவார். ஆனல், அவருடைய மேலதிகாரியாக பிலாத் (Pilate) என்ற ரோமானிய ஆளுநர் அங்கு நியமிக்கப்பட்டிருந்தார். ரோமானிய ஆட்சியினின்றும் தங்களை விடுவிக்க மீட்பர் (Messaiah) ஒருவர் வருவார் என்று யூதர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். அத்தகைய மீட்பர் நானே என்று சொல்லிக் கொண்டு வந்தவர்தான் இயேசுநாதர் ஆவார்.

பெத்லஹேம் (Bethlehem) என்ற சிற்றூரில்தான் இயேசு பிறந்தார். அவருடைய தாய் மேரி (Mary) எ னும் கன்னியாவாள். பரிசுத்த ஆவியின் மூலம் அவள் கருவுற்றத க நம்பப்படுகிறது. அவள் தனது மகவை ஈன்றெடுத்த இடம் ஒரு மாட்டுத் தொழுவமாகும். இஃது கண்ணனின் பிறப்பிடத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுநாதர் பிறந்த காலம் என்டது பற்றி இன்னும் அறுதியிட்டு யாரும் கூறவில்லை. கி. மு. 8ஆ ம் ஆண்டுக்கும் 4ஆம் ஆண்டுக்கும் இடையில் அவர் பிறந்திருக் ; வேண்டுமென்றும், கி. பி. 29 அல்லது 30, அல்லது 33ஆம் . ூண்டில் சிலுவையில் அறையப்பட்டு இறந்திருக்க வேண்டுமென்றும் பலர் பலவாருகக் கூறுவர். அவருடைய சமகாலத்தவர் எவரும் அவரைப் பற்றி எதுவும் எழுதிவைக்கவில்லை. கொரிந்தியர்களுக்கு பால் (Paul) என்பவர் எழுதிய கடிதம்தான் முதல் முதலில் அவரைப்பற்றிக் கூறுகிறது. அது கி. பி. 55-ல் எழுதப்பட்டது. மார்க், லூகா, மாத்யூ, ஜான் போன்றவர்களின் சுவிசேஷங்கள் கி.பி. 55-லிருந்து கி. பி. 100-க்குள் எழுதப்பட்டவையாகும். கி. பி. மூன்றும் நூற்றுண்டில் அவை யாவும் திருத்தி எழுதப்பட்டன.

திட்ட வட்டமான வரலாற்றுச் சான்றுகள் இல்லாவிடினும் இயேசுவின் வரலாறுபற்றி நாம் ஒரோ வழி அறிய முடிகிறது. அவருடைய இளமைக் காலத்தைப் பற்றி நாம் அதிகம் அறியக் கூடவில்லை. ஜார்டன் நதியின் தூய நீரால் அவருக்கு ஞான ஸ்நானம் (Baptism) செய்விக்கப்பட்டது. அதன்பின் நாசரேத் என்னும் ஊருக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார். ஏறத்தாழ 30 ஆண்டுகள் வரை அவர் எங்கு இருந்தார் எப்படி வளர்ந்தார் என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர் தமது முப்பதாம் ஆண்டில் திடீரென்று வெளிப்போந்து ஊர் ஊராகச் சென்று போதனை செய்ய ஆரம்பித்தார். அவருடைய 28ஆம் ஆண்டில் ஜான் என்ற ஞானஸ்நானவாதி அவரை மகான் என்று போற்றிப் புகழ்ந்தார். ''அவர் என்னைக் காட்டிலும் வல்லமை பெற்றவர். அவரது மிதியடிகளை என் தலையில் தாங்குதற்குக்கூட நான் அருகதையற்றவன்'' என்று அவர் புகன்றார். அவர் எஸ்ஸனீ (Essene) என்ற நற்செய்தி பரப்பும் திருக்கூட்டத்தினராவார். இயேசுவும் கூட அக்கூட்டத்தைச் சார்ந்தவராயிருக்கக் கூடுமென ஒரு சிலர் கூறுகின்றனர். ஏனெனில் 1947ஆம் ஆண்டில் பாலஸ் தீனக் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சில தாள்களில் பொறிக்கப்பட்டுள்ள எஸ்ஸனீ என்ற யூதக் கூட்டத்தினரின் கொள்கைகளும் இயேசுவின் கொள்கைகளும் ஒன்றாக இருப்பதைக் காணுகிறோம். இயேசு தமது போதனைகளை உலகுக்கு அறிவிக்கு முன் சைத்தான் (Satan) என்னும் பிசாசால் சோதிக்கப்பட்ட தாகவும், அதை அவர் வென்ற பின்னரே ஒரு மலையின் மீதேறி தமது முதற் சொற்பொழிவை நிகழ்த்தினார் என்றும் சொல்லப் படுகிறது.

மூன்றாண்டுகள் வரை இயேசு இங்ஙனம் தமது கருத்துகளை மக்களிடம் போதித்தார். ஏழை, எளியவர்களிடம் அவர் பெரிதும் பரிவு காட்டினார். தமது ஆன்மீக சக்தியைக் கொண்டு அவர் குருடர்களுக்குக் கண் பார்வை அளித்தார் என்றும், முடவர்களை நடக்கச் செய்தார் என்றும், இறந்தவர்களை உயிர் பெறச் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது. மதகுரு மார்கள் செல்வம் சேர்ப்பதையும், புறச் சடங்குகளில் ஈடுபடு வதையும், போலி வேடம் போடுவதையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். எளிய, தூய்மையான வாழ்க்கையையே அவர் வற்புறுத்தினார். செல்வந்தன் ஒருவன் அவரைப் பின்பற்ற வந்தபோது செல்வங்கள் அனைத்தையும் விட்டு விட்டுச் சிலுவை யைச் சுமந்து கொண்டு வந்தால்தான் தன்னைப் பின்பற்ற முடியு மென்று அவர் குறிப்பிட்டார். பரிசையர்கள், சதுசேயர்கள் போன்ற போலித் துறவிகளின் கபட நாடகங்களை அம்பலப்

படுத்தினர். கடவுளுக்காக உபவாசம் இருப்பது போன்ற சடங்குகளை ஒருவரும் அறியாமல் செய்ய வேண்டுமென்பது அவரது போதனையாகும். அவருடைய போதனைகள் யூதர்களின் கொள்கைகளுக்குப் பெரிதும் மாறுபாடாய் இருந்தது. ரோமானி யர்களிடமிருந்து தங்கட்கு அரசியல் உரிமையை வாங்கித்தரவும், உலகியல் இராச்சியம் ஒன்றை அமைக்கவும், மெசையா ஒருவர் வரப்போகிறார் என்று யூதர்கள் நம்பினர்கள். ஆனல் இயேசுவோ உலக சுகங்களை வெறுத்தார். பரலோக இராச்சியத்தை நிலை நாட்டவே அவரைக் கடவுள் அனுப்பியிருப்பதாக அவர் கூறிக் கொண்டார். யூதர்களின் மெசையா என்பார் தாமே என்று அவர் கூறியதை வைதீக யூதர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். யூதர்கள்தான் இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப் பிள்ளைகள் என்ற கருத்தையும், அவர்கள் மட்டுமே இறைவனல் ஆசீர்வதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தையும் இயேசு பலமாகக் கண்டித்தார். இறைவன் எல்லோருக்கும் பொது வானவன் என்றும், அவரை நேசிக்கிறவர்கள், யூதர்களாயினும் அன்றி வேறு எந்தப் பிரிவினராயினும் பரஸ்பரம் சகோதரர்களே என்றும் அவர் போதித்த கருத்து யூதர்களுக்கு வேப்பங்காயாய்க் கசந்தது. மற்றும் தாங்கள் மட்டுமே உயர்ந்தவர்கள், இவ் வுலகில் உய்யப் பிறந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு அந் நியர்களை மிகக் கேவலமாக எண்ணி யூதர்கள் வெறுத்து வந்ததையும் இயேசு கண்டித்தார். இங்ஙனம் யூதர்களின் குறுகிய மனப்பான்மையையும், சுய நலத்தையும் கண்டித்ததைக் கண்டு மனம் பொருத யூதர்கள் அவரைப் பழி வாங்கத் துடித் தனர். முக்கியமாக யூத மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்த வைதீக மதகுருமார்கள் அவரை எவ்வாறேனும் ஒழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டனர். பரலோக இராச்சியத்தை ஏற்படுத்தவே தாம் பிறந்திருப்பதாக இயேசு கூறியதைத் திரித்துப் பொருள் கூறி ரோமப் பேரரசுக்கு எதிராக ஓர் அரசை அமைக்க இயேசு முயற்சிக்கிருர் என்று கூறி இராஜத் துரோகக் குற்றத்தை அவர் மீது சுமத்தி யூதகுருமார்கள் அவரை ரோமானிய ஆளுநர் பிலாத் என்பாரிடம் அழைத்துச் சென்றனர். அவர் இயேசுவை நன்கு விசாரித்துப் பார்த்ததில் அவருடைய கருத்துகளுக்கும், ஸ்டாயிக்குகள் போன்ற கிரேக்க ஞானிகளின் கருத்துகளுக்கும் பெருத்த ஒற்றுமை இருப்பதைக் கண்டு பெரிதும் வியந்தார். சமத்துவம், சகோதரத்துவம் போன்ற நற்பெருங் கருத்துகளைப் பரப்பிய ஒரு பெரியாரை யூதர்கள் ஏன் கொல்ல விரும்புகிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லை. இயேசு நிரபராதி என்று அவர் தீர்ப்பு வழங்கினர். ஆனல், யூதர்கள் இயேசுவைக் கொன்றே தீர வேண்டுமென்று கூச்குரலிட்டனர்.

பிலாத் மனம் உடைந்தவராய் தம் கைகளைக் கழுவிக் கொண்டு "நீங்கள் செய்கின்ற பாவத்திற்கு நான் பொறுப்பாளியாகேன்" என்று கூறி இயேசுவை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போய் விட்டார். யூதர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொன்றனர். சாகின்ற நேரத்தில் அவர் தம்மைக் குறை கூறிய தம் பக்கத்தி லிருந்த இரு திருடர்களை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டினர். அவர் மரித்த மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து கல்லறையை விட்டு வெளியே வந்து பீட்டர் என்ற தமது முதற் சீடருக்குக் காட்சியளித்தார். ஆனல், அவரது உடலைப் பீட்டர் தொட்டுப் பார்க்க முடியவில்லை. ஏனெனில் அவர் பார்த்தது இயேசுவின் நுண்ணுடலே அன்றிப் பரு உடலை அன்று. தாம் ஆவிரூபத்தில் என்றும் வாழ்வதாகவும், தமது கருத்துகளை உலக மெங்கும் பரப்புமாறும் விரைவிலேயே தாம் மறுபடியும் வந்து தன்னை நம்பியவர்களை எல்லாம் பரலோகத்திற்கு இட்டுச் செல்வதாயும் கூறி அவர் மறைந்து விட்டார். பீட்டரும், ஏனைய பதினொரு சீடர்களும் இயேசுவின் கொள்கைகளை யூதர் களிடையே பரப்பி வந்தனர். ஆனல், அதை உலகப் பொது மதமாக ஆக்கியவர் பால் (Paul) என்ற பெரு மகனுவார்.

## கிறிஸ்துவின் போதனைகள்

இயேசுவின் போதனைகளைப் பற்றி பிற்காலத்தே எழுந்த சுவிசேஷங்களிலிருந்தே நாம் ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. மக்கள் செய்கின்ற பாவங்களுக்காகவே பல தொல்லைகளை அநுபவித்து இறுதியில் மரித்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்பு கின்றனர். உண்மையில் இயேசு ஒரு புதிய மதத்தைத் தோற்று விக்கவில்லை. பழைய யூத மதத்தையே அவர் சீர்திருத்த விரும்பினர். சீர்திருத்தங்களை விரும்பாத வைதீகர்களால் அவர் கொல்லப்பட்டார். உலகப் பெரியார்களாகிய ஆபிரகாம் லிங்கன், மகாத்துமா காந்தி, இராபர்ட் கென்னடி போன்றவர்கள் கொல்லப்பட்டது, மனிதனுக்கு மனிதன் இழைக்கின்ற தீங்கை தைரியமாக எடுத்துக் காட்டியதாலேயாகும் என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. "இறைவனை நேசிப்பது மட்டும் போதாது; மக்களையும் நேசிக்க வேண்டும்; அதுவும் மாற்றானையும் நேசிக்க வேண்டும்," என்பதே இயேசுவின் புரட்சிக் கருத்தாகும். அவர் கூறியுள்ள பொன் விதி (Golden Rule) எல்லோருக்கும் பொது வானதாகும். "அயலவன் உனக்கு எதைச் செய்ய வேண்டு மென்று விரும்புகிருயோ அதையே பிறருக்கும் செய்" என்பதே அப்பொன் மொழி. மற்றவர்களது குற்றங்களை மறக்க வேண்டும், மன்னிக்க வேண்டும் என்பது அவரது சீரிய கொள்கையாம்.

மனம் வருந்தித் தம் பிழையை ஒருவர் உணர்ந்தால் அவரைக் கடவுள் மன்னிப்பார் என்றும் அதே போல் மனிதர்களும் பிறரை மன்னிக்க வேண்டுமென்றும் அவர் உரைத்தார். தீங்கு இழைத்த வனுக்குத் திருப்பித் தீங்கு செய்வதை அவர் ஏற்றுக் கொள்ள வில்லை. ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்ட வேண்டிய அளவுக்கு ஒருவன் பண்பட்டிருக்க வேண்டுமென்பது அவரது கூற்றாகும். ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்து விடல்,'' ''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' என்ற தமிழ் மூதுரைகள் இயேசு நாதரின் போதனைகளை வற்புறுத்துவன போல் அமைந்துள்ளன. அன்பு, சேவை இவற்றை அவர் பெரிதும் வலியுறுத்தினார். ''அன்பே சிவம், ஜீவ சேவையே சிவ சேவை'' என்ற சைவ சமயக் கருத்துகள் இயேசுவின் போதனைகளில் பொதிந்து கிடப்பதைக் காண் கின்றோம். எளிமை, புற ஆடம்பரங்களை வெறுத்தல், போலித் துறவைக் கண்டித்தல் போன்ற இயேசுவின் போதனைகள் பௌத்த, ஜைன சமயக் கருத்துகளோடு ஒத்துள்ளன.

உலகில் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் ஓயாத போராட்டம் நடைபெறுகிறது என்றும், அதில் இறுதியில் தர்மம் வெல்லுகிறது என்றும் இந்துக்கள் கூறுகின்றனர். இக் கருத்தை ஸொராஷ்டிரிய சமயம் வற்புறுத்துகிறது. அஹுரமெஸ்டா (Ahura Mazda) என்ற தர்ம தேவதைக்கும் அஹ்ரிமான் (Ahriman) என்ற துர்தேவதைக் கும் ஓயாத போராட்டம் நடைபெறுவதாக அச் சமயம் கூறுகிறது. இக் கருத்தைத் தழுவியதே போன்று கிறிஸ்தவ சமயத்திலும் கடவுளுக்கும் சைத்தானுக்கும் சதா சண்டை நிகழ்வதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கடவுள் நன்மைக்கெல் லாம் உறைவிடமாகவும், சைத்தான் தீமைக்கெல்லாம் இருப்பிட மாகவும் கருதப்படுகிறது. மற்றும் மெசையா என்ற மீட்பர் ஒருவர் தோன்றி மக்கள் யாவரையும் பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார் என்ற நம்பிக்கையும், கடைசித் தீர்ப்பு வழங்கும் நாள் ஒன்று வரும் என்றும், அப்போது மரித்தோர் களனைவரும் உயிர்த்தெழுவர் என்றும், மெசையா அவர்களில் நம்பிக்கையுள்ளவர்களை மட்டுமே சுவர்கத்துக்கு அழைத்துச் செல்வார் என்றும், கிறிஸ்தவர்கள் நம்புவது போன்றே ஸொராஸ்திரியர்களும் நம்புகின்றனர். கடவுள் மனித வடிவில் வந்து மக்களை உய்விப்பார் என்ற கிறிஸ்தவ சமயக் கோட்பாடு கினஸ்டிஸிஸம் (Gnosticism) என்ற ஒரு சமயப் பிரிவில் காணப் படுகிறது. ஞானஸ்நானம் வழங்குதல், தீர்த்தம் வழங்குதல், ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாகக் கருதுதல், டிசம்பர் 25ஆம்

நாளைப் புனித நாளாகக் கொண்டாடுதல் போன்ற கொள்கைகள் மித்ரேயிஸம் (Mithraism) என்ற சமயப் பிரிவுக்கும், கிறிஸ்தவ சமயத்துக்கும் பொதுவானவைகளாகும். உலக மக்களின் சகோதரத்துவம், சமத்துவம் போன்ற கிறிஸ்தவக் கொள்கைகளே ஸ்டாயிஸிஸம் (Stoicism) என்ற கிரேக்கச் சமயப் பிரிவினரிடம் காணப்படுகின்றன. கடவுள் ஒருவரே என்பதும் (Monotheism) அவருக்கு உகந்தவர்கள் கிறித்தவர்கள் மட்டுமே என்பதும் யூதர்களின் கொள்கைகளுக்கு நிகரானது. கிறிஸ்தவ சமயத்தின் பத்துக் கட்டளைகள் யூதர்களுடைய மதத்தினின்றும் பெறப் பட்டவையே. இங்ஙனம் கிறிஸ்தவ சமயத்தில் பண்டைக் காலத்தே நிலவிய பல்வேறு சமயங்களின் கருத்துகளும் கலந்து கிடப்பதைக் காணுகின்றோம். ஆனால், இவற்றைக் கிறிஸ்து ஏனைய சமயங்களிடமிருந்து கடன் வாங்கினாரா என்று நாம் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. பெரியோர்கள் எங்கிருந்தாலும் ஒரே மாதிரி யாகவே சிந்திக்கின்றனர். தமிழ்ப் பெரியார்களும் கூட இயேசுவின் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். எனவே, இயேசுவினுடைய மன பரிவுக்கூத்தின் விளைவாகவே அவர் மேற் கூறிய உயர்ந்த கருத்துகளை சொந்தமாகவே சிந்தித்து வெளியிட்டிருக்கக் கூடும். ஆனால், கிறிஸ்தவ சமயத்தைச் சூழ்ந்துள்ள புறச் சடங்குகள் பல வேறு பண்டைய மதங்களிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கக் கூடும்.

## கிறிஸ்தவ சமயப் பரப்பு

நாசரேத் நாட்டில் தோன்றிய கிறிஸ்தவ மதத்தை உலகப் பொதுச் சமயமாக மாற்றிய பெருமை பால் (Paul) என்னும் பெரியாரைச் சார்ந்ததாகும். அவர் டார்ஸஸ் என்ற நகரைச் சேர்ந்த யூதர். கல்வி கேள்விகளில் தேர்ந்தவர். உலகிலேயே யூதச் சட்டங்கள்தான் உயர்ந்தவை என்று கருதியவர். எனவே, அச் சட்டத்தை மறுத்த கிறிஸ்தவ சமயத்தை வேம்பென வெறுத் தவர். யூதச் சட்டங்களை நன்கு கற்று அறிவதற்காக அவர் ஜெருசலேம் நகரத்திற்குச் சென்றார், அங்கேயும் கிறிஸ்த வர்களை ஒடுக்குவதில் அவர் முழுமனதோடு ஈடுபட்டார். அதன் பின் சிரியாவில் உள்ள டமாஸ்கஸ் நகரத்துக்குச்சென்று அங்குள்ள கிறிஸ்தவர்களை ஒழித்துக்கட்ட விரும்பினார். யூதத்தலைவர்களின் அநுமதி பெற்று அவர் டமாஸ்கஸ் நகரத்தை நோக்கி விரைந் தார். அங்ஙனம் போய்க் கொண்டிருக்கும்பொழுதுதான் அவரது தலைவிதியை, ஏன் கிறித்துவ சமயத்தின் தலைவிதியையே, மாற்றியமைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது: வானத்தில் திடீ ரென்று ஒரு மின்னல் வீசியது. ஆயிரம் சூரியர்கள் உதித்தாற்

போன்று பால் ஒரு கணம் உணர்ந்தார். அடுத்த கணம் அவரது கண்பார்வை போய்விட்டது. அப்போது அவரது இயற்பெயரான சால் சால் என்று யாரோ கூப்பிடுவதுபோல அவருக்குத் தோன்றியது. ''பிரபுவே! என்னை அழைக்கின்ற நீவிர் யார்?' என்று பால் வினவினர். 'நான்தான் உம்மால் ஒறுக்கப்படுகின்ற இயேசு' என்று பதில் வந்தது. 'அப்படியானல் நான் என்ன செய்ய வேண்டும்' என்று அவர் வினவ, 'என்ன செய்ய வேண்டுமென்பது டமாஸ்கஸ் நகரில் தெரிவிக்கப்படும்'' என்று அந்த அசரீரி கூறிப் பின்னர் மறைந்தது, சால் டமாஸ்கஸ் நகரத்துக்குச் சென்றபோது இயேசுவின் சீடரொருவர் அவரை அணுகி இயேசு தனக்குக் காட்சியளித்ததாகவும், தமது போதனைகளை யூதரல்லாதவர்களுக்கும் வாரி வழங்கும் பெரும் பொறுப்பை சால் என்ற பெருமகனுரிடம் தாம் ஒப்படைத்திருப்பதாக அவரிடம் கூறும்படி இயேசு தம்மைப் பணித்திருப்பதாகவும் தெரிவித்தார், சால் உடனே அப் பணியை ஏற்றுக்கொண்டார். அவரது மனம் திருந்தியது. கண்கள் மீண்டும் ஒளியைப் பெற்றன. கிறிஸ்துவின் உண்மை ஊழியனுக அவர் மாறினர், அவரது கருத்துகளை டமாஸ்கஸ் நகரில் முதலில் அவர் பரப்பினர். அதைக் கண்ட யூதர்கள் அவரைக் கொல்ல முயன்றனர். எனவே அவர் எருசலேம் நகரத்திற்குத் தப்பி ஓடினர். அங்கே உள்ள இயேசுவின் சீடர்களோடு சேர்ந்து கொண்டு அவரது போதனைகளை நகரெங்கும் பரப்பினர். பின்னர் டார்ஸஸ் நகரத்திற்குச் சென்று தமது சொந்த மக்களுக்கு இயேசுவின் செய்தியைத் தெரிவித்தார். சூருவளியெனப் பாய்ந்து அவர் ஆசியா மைனர், கிரீஸ் ஆகிய இடங்களில் கர்த்தரின் வசனங்களைப் பரப்பினர். பின்னர் மீண்டும் அவர் ஜெருசலேம் நகரை அடைந்தபோது யூதர்கள் அவரைச் சிறையிலடைத்தனர். ரோமானியக் குடிமகன் என்ற முறையில் அவர் தமது வழக்கை சீசரிடம் முறையிட்டுக் கொள்ள விரும்பினர். எனவே, அவர் ரோம் நகருக்கு அனுப்பப்பட்டார். அங்கே இரண்டாண்டுகள் அவர் சிறைகிடந்தார். அதன்பின் அவர் கொல்லப்பட்டார்.

பால், தான் இறப்பதற்குள் கிறிஸ்தவ சமயத்தை ஒரு நல்ல நிறுவனமாக அமைத்து விட்டுச் சென்றார். கிறிஸ்தவ சமயம் யூதர்களுக்கு மட்டும் உரித்தானது அன்று; உலக மக்கள் அனைவருக்கும் அது பொதுவானது என்ற கருத்தை அவர் நன்கு நிலை நாட்டி விட்டுச் சென்றார். கிறிஸ்தவ சமயத்தின் இரண்டாவது கர்த்தா என்று அவர் அழைக்கப்படுகின்றார்.

**மத ஒறுப்பு** (Persecution)

கிறிஸ்தவர்கள் ரோமானியக் கடவுள்களை வணங்க மறுத்த தோடு ரோமப் பேரரசரான சீசரையும் வணங்க இணங்கவில்லை. எனவே அரசுத் துரோகக் குற்றம் அவர்கள் மீது சாட்டப் பட்டது. மற்றும் வஞ்சகர்கள், தந்திரக்காரர்கள் என்ற குற்றமும் அவர்கள் மீது சுமத்தப்பட்டது. நீரோ என்ற மன்னனின் காலத்தில் ரோம் நகரில் ஏற்பட்ட பெரும் தீ விபத்துக்கு அவர்களே காரணம் என்று குற்றம் சாட்டப் பட்டனர். எனவே அவர்களை ரோமானிய மன்னர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாக்கினர். பலர் உயிரோடு எரிக்கப்பட் டனர். மேலும் பலர் கொலீசியம் என்ற வட்டவடிவமான ரோமானிய, பெருமண்டபத்தின் மேடையின்மீது வன விலங்கு களுக்கு இரையாக்கப்பட்டனர். இத்தகைய சமய ஒறுப்புகளால் கிறிஸ்துவ சமயம் மேலும் வலுவடைந்தது. நாளடைவில் ரோமானிய மன்னர்கள் சமய ஒறுப்பில் சலிப்படைந்தனர். டயக்லீஷியன் (Diocletian) என்னும் ரோமானியப் பேரரசர் தான் கிறிஸ்தவர்களை வெறுத்த கடைசி மன்னராவார். கி. பி. 303 முதல், கி. பி. 310 வரை அவர் கிறிஸ்தவர்களை மனம் போனபடி எல்லாம் வேட்டையாடினுர். எனினும், மக்கள் மேலும் மேலும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவலாயினர். டயக் லீஷியனுக்குப் பின் வந்த கான்ஸ்டன்டைன் என்னும் அரசர் ரோமப் பேரரசைத் தாக்கிய காட்டு மிராண்டிகளை எதிர்ப்பதற் காகக் கிறிஸ்தவர்களின் உதவியை நாடினுர். அவர்களின் உதவி யால் அக் காட்டுமிராண்டிகளை அவர் வென்றுர். நாளடைவில் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். கி. பி. 337-ல்அவர் இறந்தபோது அவர் தன்னைக் கிறிஸ்தவர் என்று கூறிக் கொண்டே உயிர்விட்டார். உண்மையில் அவர் கதிரவனையே வழிபட்டவர். ஆனுல், போர்க்களம் ஒன்றில் சிலுவையின் காட்சி ஒன்றை அவர் கண்டார். இதன் மூலம் நீர் வெற்றி பெறுக! என்ற எழுத்துகள் அச் சிலுவையில் காணப்பட்டனவாம். அதன் பின்னர் அவர் தாம் சென்ற போர்க்களங்களுக்கெல்லாம் சிலுவை பொறிக்கப்பட்ட கொடியை ஏந்திச் சென்று அதன் மூலம் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுராம். எனவே தான் அவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினுர். கிறிஸ்தவ சமயப் பிரிவுகளிடையே இருந்த பிணக்கு களை எல்லாம் அவர் தீர்த்து வைத்தார். அவருக்குப்பின் கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசில் காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்தது.

**கிறிஸ்தவ சமயம் விரைவில் பரவக் காரணங்கள்**

இடைக்காலத்தின் முற்பகுதியில் கிறிஸ்தவ சமயமானது ஏனைய சமயங்களை எல்லாம் வென்று வெற்றி நடை போட ஆரம்பித்தது. அதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. பலாத்காரமும், காட்டுமிராண்டித்தனங்களும் நிறைந்த ரோமானியப் பேரரசில் அன்பைப் பற்றியும், சமாதானத்தைப் பற்றியும் பேசிய ஒரு மதத்தின்மீது மக்களுக்கு இயல்பாகவே கவர்ச்சி ஏற்பட்டதில் வியப்பொன்றும் இல்லை. மற்றும் அக் காலத்தே நிலவிய சமயப்பிரிவுகள் எல்லாவற்றையும்விட தெளிவான கருத்துகள் கிறிஸ்தவ சமயத்தில்தான் காணப்பட்டன. இன்னின்ன முறையில் வாழ்ந்தால் ஒருவன் அமரத்துவம் அடைய முடியும் என்பதற்குக் கிறிஸ்தவ சமயம் உத்தரவாதம் அளித்தது; பாவத்தைக் கண்டித்ததோடு பாவம் செய்தவர்களுக்கும் விமோசனம் உண்டு என்ற கருத்தைப் பரப்பியதன் மூலம், பாவங்களில் மிதந்து கொண்டிருந்த இடைக்கால மக்களிடையே அது பெரிதும் செல்வாக்குப் பெற்றது. மனிதனை மனிதன் நேசிக்க வேண்டுமென்ற கருத்தை அனைவரும் போற்றினர். மற்றும் பெண்களுக்கும் சமயத்தில் இடமளித்ததன் மூலம் ஏனைய சமயங்களுக்கு இல்லாத பெருமையும் இச் சமயத்திற்கு ஏற்பட்டது. ஏழைகளும், ஒடுக்கப்பட்டவர்களும் முக்கியமாக அடிமைகளும் இம்மதத்தின் மீது பெரிதும் ஈர்க்கப்பட்டனர். ஏனெனில், தங்களையெல்லாம் துன்பப் படுகுழியிலிருந்து மீட்டு, இன்பபுரிக்கு இட்டுச் செல்லும் மெசையா ஒருவர் வருவார் என்ற கருத்து இச்சமயத்தில் காணப்பட்டதேயாகும். சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடந்த அத்தனை பேருக்கும் ஒரு நம்பிக்கை ஊட்டும் நன்மதமாக இம் மதம் திகழ்ந்தது. மற்றும் பாரசீகர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள் ஆகிய மக்களிடையே தொன்றுதொட்டுக் காணப்பட்ட பல்வேறு பழக்கவழக்கங்களையும், சடங்குகளையும், கிறிஸ்தவ சமயம் ஏற்றுக்கொண்டு விட்டதால் எந்நாட்டவர்க்கும் ஒரு புதுமைப் பெருமதமாக கிறிஸ்தவம் விளங்கலாயிற்று. உயரிய ஒழுக்கம், தன்னலமின்மை, எதிரிகளையும் நேசித்தல் போன்ற நற்பண்புகளை வற்புறுத்தியதன் மூலமாக அறிஞர் பெருமக்கள் பலரும் இதை விரும்பி ஏற்றுக் கொள்ளலாயினர்.

**கிறிஸ்தவத் திருச்சபையின் தோற்றமும் வளர்ச்சியும்** (Origin and growth of the Christian Church)

உலகின் பலபாகங்களிலும் இன்று கிறிஸ்தவ சமயம் பரவியிருப்பதற்குக் காரணமாயிருந்தது திருச்சபை (Church) எனும்

அதன் ஒப்பற்ற நிறுவனமேயாகும். ரோம் நகரில் வேரூன்றி எழுந்த அப்பெரு ஆல மரமானது, உலகெங்கும் தனது கிளைகளைக் கொண்டு விளங்குகிறது. புதுப்புது விழுதுகளை விட்டு ஆல மரத்துக் கிளைகள் நீண்டு கொண்டே செல்வது போன்று கிறிஸ்தவ சமயக் கிளை திருச்சபைகளும் அவ்வப்போது புதிய நிறுவனங்களை ஆங்காங்கே ஏற்படுத்தி வளர்ச்சியடைந்து வருகின்றன. மிகச் சிறப்பு வாய்ந்த திருச்சபையானது மெல்ல மெல்ல வளர்ந்து செம்மையுற்ற ஒரு நிறுவனமாகும்.

### திருச்சபையின் தோற்றம்

கிறிஸ்துவின் மறைவுக்குப் பின் அவரது சீடர்களே அவரது சந்ததியர்களாக விளங்கினர். தமது கொள்கைகளைப் பரப்புவதற்காக இயேசுவாலேயே பார்த்து நியமிக்கப்பட்டவர்களாகவும், இறைவனின் ஆதேசத்தைப் பெற்றவர்களாகவும் அவர்கள் தங்களைக் கருதிக்கொண்டனர். அவர்களது போதனைகளைச் செவிமடுத்துக் கிறிஸ்தவர்களாக மாறிய அனைவரும் முதலில் சிறு சிறு தொழுகைக் கூட்டங்களைத் (Congregations) தமக்குள் அமைத்துக் கொண்டனர். அக் கூட்டங்கள் அவ்வப்போது யாதானுமொரு பக்தனின் இல்லத்தில் கூடித் தொழுகை நடத்துவது வழக்கம். ஒவ்வொரு தொழுகைக் கூட்டத்துக்கும் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர்கள் மூத்தோர் எனப் பொருள்படும் பிரிஸ்பிடர்கள் (Presbyters) என அழைக்கப்பட்டனர். இறைவனிடமிருந்து ஆதேசம் பெற்றவர்களாயும், பரிசுத்த ஆவியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டவர்களாயும் கருதப்பட்டவர்களே பிரிஸ்பிடர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்னாரது தலைமையிலேயே வழிபாடும், திருவிருந்துச் சடங்குகளும் (Sacrement) நடைபெற்றன. யார் வேண்டுமானாலும் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படலாம். குருமார்களென்ற தனிப்பட்ட ஒரு கூட்டம் இல்லை.

இவ்வாறு அமைந்த திருக்கூட்டங்கள் பலவற்றைக் கண்காணிக்கவும், தர்ம கைங்கரியங்களைச் செய்யவும், டீகன்கள் (Deacons) என்போர் நியமிக்கப்பட்டனர். தொழுகைக் கூட்டங்களின் அநுமதியின் பேரிலேயே இத்தகைய அதிகாரிகள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் கிறிஸ்தவ சமயத்தில் சடங்குகள் பல ஏற்பட்டன. அவற்றை ஒழுங்காகச் செய்ய ஒரு புரோகிதக் கூட்டம் தேவைப்பட்டது. சடங்குகளில் ஒருமையை உண்டாக்கவும், கிறிஸ்தவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் ஏற்படுத்தவும், புரோகிதர்களைக் கண்காணிக்கவும், பிஷப் (Bishop) என்ற ஓர் அதிகாரி நியமிக்கப்

பட்டார். பிரிஸ்பிடர்களின் தலைவராக அவர் விளங்கினர். நாள் செல்லச் செல்ல பிஷப்புகளின் அதிகாரமும் பெருமையும் அதிகரித்தன. உலகியலில் உழலும் மக்களின் அறநெறியை ஆற்றுப்படுத்தும் இறைவனுல் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக அவர்கள் எண்ணப்பட்டனர். புனிதச் சடங்குகளை முறையே செய்வதற்கும், கிறிஸ்தவ சமயக் கொள்கைகளுக்குச் சரியான விளக்கம் தருவதற்கும் அவர்கள் மட்டுமே தகுதி படைத்தவர்களாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு நகரத்துக்கும் இத்தகைய பிஷப் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நகரிலும், அதைச் சுற்றியிருந்த இடங்களிலும் வாழ்ந்த குருமார்கள் அனைவரும் அவரது ஆணைக்குட்பட்டு நடந்தனர். ரோமானிய அரசில் மிகச்சிறிய ஆட்சித்துறை அலகான (Unit) சிவிடாஸ் (Civitas) எனும் பகுதியும், பிஷப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதியும் ஏறக்குறைய ஒன்ருக இருந்தது. ஒரு பெரிய மாநிலத்தில் இருந்த பிஷப்புகள் அனைவரும் சேர்ந்து சினுட் (Synod) என்ற சபையைத் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் அடிக்கடி ஒன்ருகக் கூடி நிர்வாகம்பற்றிய சிக்கல்களை அலசி ஆராய்ந்தனர். அத்தகைய கூட்டங்கள் 'ecumenical councils' என அழைக்கப்பட்டன. இவ்வாறு, பிஷப்புகள், கிறிஸ்தவ திருச்சபையின் தொடக்கத்தில் மிக முக்கியமான அதிகாரிகளாய் விளங்கினர். கிறிஸ்தவத் தொழுகைக் கூட்டங்களின் தனிப்பெரும் தலைவர்களாய் அன்னுர் விளங்கினர். தமது பொறுப்புகளைச் சரிவரச் செய்வான் வேண்டி, அவர்கள் உலகியல் பொறுப்புகள் எதிலும் சிக்காமலிருக்க வேண்டுமென அனைவரும் எதிர்பார்த்தனர். உலகியல் தலைவர்கள் அவர்களுக்குப் பல அரசியல், பொருளாதாரச் சலுகைகளை வழங்கினர். கிறிஸ்தவ சமயம் ரோமானியப் பேரரசின் அதிகாரபூர்வமான சமயமாக (official religion) ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் தொழுகைக் கூட்டங்களின் எண்ணிக்கை வளர ஆரம்பித்தது. அதன் விளைவாகப் பிஷப்புகளின் உரிமைகளும் அதிகாரங்களும் பெருகலாயின. அவர்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட ஆரம்பித்தன. நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்த பிஷப்புகள் ஏனையோரைவிட உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்டனர். ஒரு மாநிலத்தின் தலைநகரில் வாழ்ந்த பிஷப் அம் மாநிலமனைத்திலுமிருந்த பிஷப்புகளின் தலைவராக மதிக்கப்பட்டார். தலைநகர சமயத்தலைவர் அல்லது மெட்ராபாலிடன் (Metropolitan) என அன்னுர் அழைக்கப்பட்டனர். ரோம், கான்ஸ்டான்டிநோபில், ஆண்டியோக், அலெக்ஸாந்திரியா போன்ற பெருநகரங்களின் பிஷப்புகள் சமய முதியவர் அல்லது

பேட்ரியார்க்குகள் (Patriarchs) என அழைக்கப்பட்டனர். இவ்வாறு பிஷப்புகளுக்குள்ளேயே பேட்ரியார்க்குகள், மெட்ரா பாலிடன்கள், பிஷப்புகள், குருமார்கள் என்ற பல்வேறு படித் தரங்கள் தோன்றின.

நாளடைவில் ரோம் நகர பிஷப், ஏனைய பிஷப்புகள் அனைவரையும்விட உயர்ந்தவராக மதிக்கப்பட்டார். அதற்குக் காரணம் ரோம் நகரின் அரசியல் தலைமையேயாகும். முக்கிய மாகக் கான்ஸ்டான்டிநோபிலுக்கு ரோமானியப் பேரரசின் தலைநகர் மாற்றப்பட்டபோது, ரோம் நகர பிஷப்பின் செல் வாக்கு பெரிதும் அதிகரித்தது. அதுகாறும் ரோம்நகரில் அரசிய லுக்குத் தலைமைதாங்கி நடத்திவந்த பேரரசின் அதிகாரங்கள் யாவும் அதன் பிஷப்பின் கைகளில் வந்து வீழ்ந்தன; ரோம் நகரத்தின் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் அவரது தலையிலேயே விடிந்தது. முரட்டு வகுப்பாரின் தாக்குதல்களின்போது நகரைக் காக்கும் பொறுப் பையும் அவர்கள் ஏற்றனர்; ரோமானியப் பேரரசின் கேந்திரம் கீழைத்திசைக்கு மாற்றப்பட்ட பின் அதன் மேலைப்பகுதியில் ஏற்பட்ட அதிகார சூனியத்தை நிரப்பியவர் ரோம் நகர பிஷப்பேயாவார். ரோமப் பேரரசு அரசியல் துறையில் அமைத்த அதே ஆட்சி முறையைத்தான் திருச்சபையும் கடைப் பிடித்தது. அரசியலில் மாநிலம், மாநில ஆளுநர் என்பது போன்றே டயோஸிஸ் (Dioces), அதன் ஆளுநரான ஆர்ச்பிஷப், அவருக்குக் கீழ் பிஷப்புகள், சாதாரண குருமார்கள் என்ற அதிகார வர்க்கம் சமய நிறுவனத்திலும் ஏற்பட்டது. மாநில ஆளுநர்கள் ரோம் நகரப் பேரரசைத் தங்களது தலைவராக ஏற்றுக் கொண்டது போல் மாநிலத் தலைநகர பிஷப்புகள், ரோம் நகர பிஷப்பைத் தம் தனித்தலைவராக ஏற்றனர். அவர் யாவருக்கும் தந்தை என்ற பொருளில் போப் (Pope) என அழைக்கப்பட்டார். போப்பும், அவரது சக அதிகாரிகளும் சேர்ந்து, அரசியல் நிறுவனத்துக்கு இணையான ஓர் அமைப்பை ரோமானிய மேலைப் பேரரசில் தோற்றுவித்து, அமைதியையும் ஒழுங்கையும் காப்பாற்றினர்.

ரோம் நகர பிஷப், ஐரோப்பாவின் தலைமைக் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்குப் பல காரணங்களைக் கூறலாம். மேலே கூறப்பட்ட அரசியல் காரணங்கள் மட்டுமின்றி, வேறு சில சமயஞ்சார்ந்த காரணங்களாலும் அவரது தலைமை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அர்ச். பீட்டர் (St. Peter) என்ற இயேசுவின் தலைமைச் சீடரால் ஏற்படுத்தப்பட்ட முதற் திருச்

சபை ரோம் நகரில்தான் இருந்தது. எனவே கிறிஸ்தவர்கள் அதைத் தாய்த் திருச்சபையாகக் (mother church) கருதலாயினர். பால் (Paul) என்ற பெரியாரும், பீட்டரும் கிறிஸ்தவ சமயத்துக்காகத் தங்களது உயிர்களைப் பலிகொடுத்த இடம் ரோம் நகரமேயாகும். மற்றும் விவிலிய நூலில், இயேசு தமது திருச்சபைக் கட்டிடத்தைப் பீட்டர் எனும் பாறையின் மீது கட்டுவதாயும், பரலோகத்தின் சாவியினை அவரிடம் ஒப்படைப்பதாயும், யார்யாரை அவர் ஏற்றுக் கொள்கிறாரோ அவர்களெல்லாம் பரலோகத்தில் இடம் பெறுவரென்றும், அவரால் தள்ளப் பட்டவர்களெல்லாம் பரலோகத்தில் இடம் பெறார் என்றும் கூறப்பட்டுள்ளது (மத்தேயு சுவிசேஷம். 16-18) முதலாம் லியோ (Leo I) எனும் போப்பாண்டவர் மேலே கூறப் பட்ட கொள்கையை வலியுறுத்தி யாவரையும் ஒப்புக் கொள்ளுமாறு செய்தார். கிறிஸ்து தமது வாசகங்களையும், ஆசிகளையும் பீட்டருக்கு அளித்து அவர் மூலமாகவே ஏனைய சீடர்களுக்கும் உலகினருக்கும் அவற்றை வழங்கச் செய்தார் எனவும், பீட்டரின் முதற் சபை ரோம் நகரில் ஏற்படுத்தப் பட்டதாலும், அவரது முதற் சீடர் ரோம் நகர் பிஷப்பான போப்பாண்டவர் ஆதலாலும் அவரே கிறிஸ்தவத் திருச்சபைக்குத் தலைவராக விளங்கத் தக்கவர் எனவும் அவர் விளக்கம் கூறினார். அவ்விளக்கத்தை அனைவரும் ஒப்புக் கொண்டனர். இறைவனின் பிரதிநிதியாக இயேசுவும், இயேசுவின் பிரதிநிதியாகப் பீட்டரும், பீட்டரின் வழித் தோன்றல்களாகப் போப்பாண்டவர்களும் ஏற்றுக் கொள்ளப் பட்டனர். பீட்டர் தமது தெய்வீகப் பொறுப்புகளையும், பரலோகத்தின் சாவியினையும் போப் பாண்டவருக்கு ஒரு பத்திரத்தின் மூலம் ஒப்படைத்துச் சென்றார் என்று அனைவரும் நம்பினர். இவ்வாறுதான் போப்பாண்டவர் உலகெங்குமுள்ள கிறிஸ்தவத் திருச்சபையின் தனித் தலைவராக மாறினார். முதலாம் லியோ என்ற போப்பாண்டவர் மேலை ரோமப் பேரரசிலுள்ள திருச்சபைக்கு மட்டுமின்றி, கீழைப் பிரதேசத்திலும், பிரான்ஸ், ஸ்பெயின், ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலிருந்த திருச்சபைகளுக்கும் தலைவரென அறிவித்துக் கொண்டார். வலுவுள்ள ஒரு மத்திய அரசாங்கம் இல்லாத வேளையில், பேரரசின் ஒற்றுமையை வளர்க்கும் ஓர் ஒப்பற்ற சாதனமாகப் போப்பாண்டவர் விளங்கியதால் அவரது தலைமையை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இறுதியில் மூன்றும் வேலன்டினியன் (Valantinian III) என்ற பேரரசரே கி. பி. 455 இல் ஓர் ஆணையை வெளியிட்டு, மேற்கத்திய பிஷப்புகள் அனைவரும் போப்பாண்டவரின் ஆணைக்கு உட்பட வேண்டுமென்பதை வற்புறுத்தினார். கீழை நாட்டு பிஷப்புகள்

பலர் போப்பாண்டவரின் தலைமையை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். எனினும் பொதுவாகப் போப்பாண்டவரின் தலைமைக்குப் பிஷப்புகள் பலரும் பணிந்தனர். பேரரசரின் அதிகாரங்கள் செல்லக் கூடாத மூலை முடுக்குகளிலெல்லாம் போப்பாண்டவரின் அதிகாரக் கரங்கள் நீண்டு அமைதியையும் கட்டுப் பாட்டையும் வளர்த்தன.

**திருச்சபைச் சடங்குகள்**

இடைச் காலத்தே திருச்சபை ஒன்றே மனிதனையும் இறைவனையும் இணைத்து வைக்கும் பாலமாக விளங்கியது. உலகியல் துன்பங்களைச் சமாளிக்கவும், அதன் பின் பரலோகம் புக்கு, மரணமிலாப் பெரு வாழ்வு வாழவும், மக்களுக்கு உதவி செய்யும் இறைவனின் பிரதிநிதியாகத் திருச்சபை கருதப்பட்டது. பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு போன்ற துயரங்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றுதற்குரிய பல்வேறு சடங்குகளைத் திருச்சபை ஏற்படுத்தியது. அச் சடங்குகளின் தொகுப்பு புனிதத் திருவிருந்து முறை (Sacremental system) எனப்பட்டது. இடைக் காலத் திருச்சபையின் செல்வாக்கும் பலமும் எழுவகைப் புனிதச் சடங்குகளைச் சார்ந்திருந்தது. மனிதன் தன் மிருக இயல்புகளை வென்று, தெய்வீக நிலையை அடைய அவை மிக இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. அவை முறையே ஞான ஸ்நாநம் (Babtism), திட்சை (Confirmation) இறுதிவிருந்துச் சடங்கு (Eucharist), பிராயச்சித்தம் அல்லது கழுவாய் நோன்பு (Penance), இறுதி எண்ணெய் பூச்சு (extreme unction), ஆச்சார்ய அபிடேகம் (ordination) திருமண வினை (Matrimony) எனப்படும்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது, ஆதாம் ஏவாள் ஆகிய ஆதி மனிதர்களால் செய்யப்பட்ட பாவத்தைச் சுமந்து கொண்டே பிறக்கிறான் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. ஞான ஸ்நாநம் அல்லது புனித முழுக்கு மூலம் அத்தகைய பாவங்கள் கழுவப்பட்டு விடும் என்று அவர்கள் நம்புகின்றனர். குழந்தை பிறந்த உடன் இச்சடங்கு நடத்தப்படுகிறது. அடுத்து, குழந்தை 12 வயது அடைந்த பின் மீண்டும் அத்தகைய பாவ நீக்கத்தை உறுதி செய்யும் வகையில் ஒரு சடங்கு நடைபெறும். அதுவே திட்சை எனப்படுவது. இயேசுவானவர் இறுதியாகச் சாப்பிட்ட விருந்தில் அருந்திய ரொட்டியையும், திராட்சை ரசத்தையும் நினைவுகூறும் வகையில், குருமார்களின் புனிதக் கரம் பட்ட ரொட்டியையும் திராட்சை ரசத்தையும் அருந்துவதும், அப்படி அருந்தும்போது இயேசுவின் சதையும், இரத்தமுமாக

அவை மாறிவிடுகின்றன என்று நம்புவதும், இறுதி விருந்துச் சடங்காகும். ஆன்மீய விழிப்பு பெறவும், நெருக்கடியான காலங்களில் மன உறுதியைப் பெறவும் இச் சடங்கு தேவை எனக் கருதப் படுகிறது, எவ்வாறே செய்து விட்ட பாவத்துக்குப் பரிகாரம் தேடு முகத்தான் செய்யப்படும் சடங்கே பிராயச்சித்தம் எனப் படும். அதன் மூலம் எத்தகைய பாவம் செய்தவனும் இறைவனிடம் மன்னிப்பைப் பெறலாம் என நம்பப்படுகிறது. மரணப் படுக்கையில் கிடக்கும் ஒருவனது இதயத்தில் தேங்கிக் கிடக்கும் உலகியல் அழுக்கைக் கழுவுவதற்காகப் புனிதத் தைலத்தால் அவன் உடலைக் குளிப்பாட்டுவதே இறுதி எண்ணெய்ப் பூச்சு எனப்படும். குருமாராக ஒருவர் பதவி ஏற்கும்போது, புனிதச் சடங்குகள் மூலம் மக்களுக்கு வாழ்வளிக்கத் தக்க ஆற்றலை ஒருவருக்கு பிஷப் வழங்குவதே ஆசார்ய அபிடேகம் எனும் சடங்காகும். ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதைப் புனிதப் படுத்திக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைச் சட்ட பூர்வமாக வழங்கும் சடங்கே திருமணச் சடங்காகும். இத்தகைய சடங்குகளைச் செய்யத் திருச்சபைக்கு மட்டுமே தனியுரிமை தரப்பட்டிருந்தது. எனவே மக்கள் அதற்குக் கட்டுப் படுவது தடுக்க இயலாததாய்ப் போயிற்று.

### திருச்சபைக் கோட்பாடுகளின் வளர்ச்சி

திருச்சபைக் கோட்பாடுகளின் அடிப்படையாகத் திகழ்ந்தவை விவிலிய நூலும், இயேசுவின் போதனைகளும், அவரது சீடர்களின் போதனைகளுமேயாகும். எனினும் இவற்றின் உட்கிடக்கையைப் பல சமயத் தலைவர்கள் காலத்துக் கேற்றபடி விளக்கம் செய்துள்ளனர். அவர்கள் திருச்சபைத் தந்தையர் (Church Fathers) என அழைக்கப்படுவர். அவர்களில் பலர் நல்ல கல்விமான்கள். கிரேக்க இலக்கியத்தில் நன்கு பயிற்சி பெற்றவர்கள். கிரேக்க தத்து வார்த்தங்களின் அடிப்படையில் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளை விளக்கியவர்களுள் ஒரிஜென் (Origen) என்பார் (185-254 கி. பி.) தலைசிறந்தவர். அலெக்ஸாந்திரிய பிஷப்பாயிருந்த அதனேசியஸ் (Athanasius, 298-373 கி. பி.) என்பார் மூவகைத் தத்துவம் (Trinity) என்ற கோட்பாட்டை வலியுறுத்தினர். கடவுள், இயேசு, பரிசுத்த ஆவி (Holy ghost) ஆகிய மூன்றும் தனித் தனிப் பொருள்கள் என்பது அவரது வாதமாகும். ஆனால் ஏரியஸ் (Arius) என்ற அறிஞர் (310-336) தெய்வம் ஒன்றுதான் என்றும், இயேசு தெய்வமல்ல என்றும், வாதித்தார். 'கடவுள் ஒருவரே, அவர் என்றும் இருப்பவர். அவர் பிறவா யாக்கையர். உலகில்

பிறந்தன யாவும் அவரிடமிருந்து தோன்றியவைகளே' என அவர் நிகாயாவில் (Nicaea) கட்டுரைத்தார். கி. பி. 325 இல் நடைபெற்ற ஒரு சமயக் கூட்டத்தில் அரியஸின் வாதம் தோற்கடிக்கப் பட்டது. புனிதப் பொருள் (Substance) ஒன்றே என்றும், எல்லாவற்றையும் படைத்த இறைவன், அவ்விறைவனது திருமகனுன இயேசு, இயேசு தோன்றக் காரணமாயிருந்த பரிசுத்த ஆவி ஆகிய மூன்றும் ஒரே புனிதப் பொருளின் வெவ்வேறு அம்சங்களேயாகும் என அச்சபை அறிவித்தது. இதன் பின்னர் அரியஸின் சீடர்கள் வடஜெர்மனிக்குச் சென்று தமது கொள்கையைப் பரப்பினர். ரோமானியப் பேரரசு சீர்குலேந்த போது அவர்கள் மீண்டும் கிறிஸ்தவ நாடுகளுக்கும் சென்று தமது கருத்துக்களேப் பரப்பினர். நெஸ்டோரியர்கள் (Nestorians) என்பார் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஐயுற்றனர். இன்னும் சிலர் அவர் தெய்வீக இயல்பும், மானுட இயலும் ஒருங்கே கொண்டவர் எனக் கூறினர். கி. பி. 431-இல் எஃபிசஸ் (Ephesus) நகரில் கூடிய புனித சபை இயேசுவின் தெய்வீகத்தை உறுதி செய்தது. நெஸ்டோரியர்கள் பாரசீகத்துக்கு ஓடிப் போயினர்.

லத்தீன் திருச்சபையைச் சேர்ந்த சில பாதிரிகளும் கிறிஸ்தவ திருச்சபைக் கோட்பாடுகளுக்குப் புது விளக்கம் தந்தனர். உலகியல் துறை, சமயத்துறைக்கு உட்பட்டதே என ஆம்ப்ரோஸ் (Ambrose 340-397 கி. பி.) என்ற பாதிரி கூறினர். ஜெரோம் (Jerome 340-420 கி. பி.) விவிலிய நூலே மொழி பெயர்த்து வழங்கினர். திருச்சபையின் ஆரம்பகால வரலாற்றையும் அவர் எழுதினர். வட ஆப்பிரிக்காவிலிருந்த ஹிப்போ (Hippo) நகரப் பாதிரியான அகஸ்டின் (Augustin 354-430) என்பார் சிடி ஆப் காட் (City of God), கன்பெஷன்ஸ் (Confessions) ஆகிய இரு நூல்களே எழுதிப்பல புதிய விளக்கங்களேத் தந்தார். திருச்சபையே இறுதியான அதிகாரம் உடையதென்றும், இறைவனின் அருளும், முத்தியும் அதன் மூலமாகவே பெறக் கூடுமென்றும் அவர் அறிவித்தார். இறைவன் நன்மையே வடிவானவர் என்றும், தீமை அவரோடு இணைந்துள்ளதென்பது பொய் எனவும் அவர் வாதித்தார். கடவுளின் நகர் என்பது ரோம் அல்ல என்றும் அது மனிதனது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக நகரமென்றும், இறையருள் உள்ளவர்களே அதை அடைய முடியுமென்றும் அவர் கூறினர்.

**அதிகார பூர்வமாக நிலை நாட்டப்பட்ட கிறிஸ்தவக் கொள்கைகள்**

பின்வரும் கொள்கைகள், அதிகார பூர்வமாக திருச்சபையால் கிறிஸ்தவக் கொள்கைகளாக கி. பி. 7ஆம் நூற்றாண்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். அவை யாவன,

1. மும்மைக் கொள்கை (Trinity)-அதாவது யாவர்க்கும் தந்தையான பரமபிதாவும், அவரது குமாரனான இயேசுவும், பரிசுத்த ஆவியும் ஒரே பொருளால் ஆன இறைவன் என்பதும், அதேசமயம் அம் மூன்றும் தனித் தனி ஆட்கள் என்பதுமாகும்.

2. அவதாரம் (Incarnation)-அதாவது கடவுள் இயேசுவின் வடிவில் மனித அவதாரம் செய்தார் என்பது.

3. வீழ்ச்சி (Fall) ஆதாமின் பாவத்தால், மனிதன் கடவுளின் சகவாசத்தை இழந்தான் என்பது.

4. கன்னியின் மூலம் பிறத்தல் (The Virgin Birth) இயேசு கன்னி மூலமாய்ப் பிறந்தார் என்பது.

5. இயேசுவின் இருவித இயற்கை - அதாவது இயேசு கடவுள் என்பதும் அதே சமயம் முழுமையாக மனிதனாகவும் இருந்தார் என்பதுமாகும்.

6. மீட்சி (Atonement)- அதாவது கடவுள், இயேசுவாக வந்து மனிதனாகப் பிறந்து, மனிதகுலத்தை உய்விக்க வேண்டி சிலுவையில் மரித்தார் என்பது.

7. அருள் (grace)- பாவத்திலிருந்து தப்பிக்க இறைவன் தமது அருளைத் தந்து உதவுவான் என்பது.

8. உயிர்த்தெழுதல், படைத்தல் (Resurrection) அதாவது கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, தம்மில் நம்பிக்கை உடையவர்களுக்கெல்லாம் மரணமிலாப் பெருவாழ்வு தருவார் என்பது.

9. திருச்சபை தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டது என்பது. அதாவது மனிதனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள உறவை மீண்டும் ஏற்படுத்துவதற்காக, இயேசு மூலம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதே திருச்சபை என்பது.

10. இரண்டாம் முறை வருதல் - அல்லது இயேசு மீண்டும் ஒரு முறை வந்து நல்லாரையும், பொல்லாரையும் பாகுபடுத்தி, நல்லாரை ஆட்கொள்வார் என்பது.

## கிறிஸ்தவ சமயக் கோட்பாடு (Theology)

மேற் கூறிய திருச்சபைக் கோட்பாடுகளை ஒட்டி கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் அமைந்துள்ளன; அதன்படி இறைவன் முற்றிலும் ஆன்மீய வடிவமானவர். எல்லாம் வல்லவர். என்றும் அழியாதவர். எல்லாம் அறிந்தவர் (சர்வக்ஞர்). அவர் ஒரு மனிதர் என்ற முறையில் தூய்மை, நியாயம், இரக்கம், உண்மை, விசுவாசம் ஆகிய நற்குணங்கள் நிரம்பியவர். யாவர்க்கும் பிதா என்ற முறையில் உலகனைத்தையும் படைத்தவர். நன்மை தீமைகளைப் பகுத்தறிபவர். தேவகுமாரன் வடிவில் அவர் இயேசுவாக அவதரித்து மனிதனோடு தனது தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர். பரிசுத்த ஆவியாக இருந்து உண்மையைப் போதிப்பவர், இப்புவனத்தையும், செடி, கொடிகள், விலங்குகள், மனிதர்கள், தேவதைகள் அனைவரையும் படைத்தவர். ஆதாம் செய்த பாவத்துக்குப் பின்னும் மனிதர்களை ஈடேற்ற வாக்களித்தவர். இரண்டாம் முறையாக உயிர்த்தெழுந்து, இறுதித் தீர்ப்பு வழங்குவதாய், வாக்களித்தவர். அதன் மூலம் நம்பிக்கையுள்ளோர்கள் அழிவில்லாப் பேரின்ப நிலைக்கு உயர்த்தப்படவும் நம்பிக்கையற்றோர் தீராத துன்ப நிலைக்குத் தள்ளப்படவும் வகை செய்தவர்.

## மடாலய வாழ்வு முறை (Monasticism)

இடைக்கால ஐரோப்பாவில் கத்தோலிக்கத் திருச்சபைக்குப் புறம்பாகப் பல மடாலயங்கள் (Monasteries) முளைத்தன. கத்தோலிக்க திருச்சபையானது செய்யத் தவறியதாகக் கருதப்பட்ட ஒரு சில காரியங்களைச் செய்வதற்காகவென்றே ஒவ்வொரு மடாலய முறையும் தோன்றியது. திருச்சபையில் உலகியல் மலிந்து விட்டது எனக் கருதிய ஒருசிலர் தனியே சென்று காடுகளிலும், குகைகளிலும் தவம் செய்து முத்தியடைய விரும்பினர். அங்ஙனம் சென்றவர்கள் ஓரிடத்தில் கூடி வாழ ஆரம்பித்தபோது மடாலயங்கள் தோன்றின. ''தனது சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றுதவன் எவனோ அவன் என் அருகே வர அருகதையற்றவன்'' என்று இயேசு கூறியதைச் சிலர், இவ்வுலக இன்பங்களை எல்லாம் தியாகம் செய்யுமாறு அவர் கட்டளையிட்டிருப்பதாக எண்ணிக் கொண்டனர். எளிய வாழ்க்கை வாழ்வதால் மட்டுமே இறைவனை அடைய முடியுமென்று நம்பினர். எனவே அவர்கள் தாங்கள் மட்டுமே கிறிஸ்தவ சமயத்தை உள்ளபடியே கடைப்பிடித்தவர்கள் எனக் கருதிக் கொண்டனர். அவர்களில் ஒரு சிலர் திருச்சபையால்

அங்கீகரிக்கப்பட்டனர். ஒரு சிலரைத் திருச்சபை சமய விரோதிகள் (heretics) என அறிவித்து ஒதுக்கியது.

### மடாலய வாழ்வு முறையின் தோற்றம்

துறவு வாழ்வின் அடிப்படையிலிருந்து தோன்றியதே மடாலய வாழ்வு முறையாகும்; உலகியல் இன்பங்களைத் துறந்தாலன்றி முக்தி அடைய முடியாதென்பது கீழை நாட்டு மதங்களின் முக்கிய தத்துவமாகும். பௌத்தம், ஜொராஸ்டிரியம் இந்து சமயம், யூத சமயம் முதலியன இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. கிறிஸ்தவ சமயத்தை முதன் முதலில் போதித்தவர்கள் ஏறக்குறைய இதே கருத்தினையே எடுத்தியம்பினர். அர்ச். பால், அர்ச். அகஸ்டின் போன்றோர் காம இன்பம் அநுபவிப்பதை ஒரு பாவமெனக் கருதினர். எனவே, பெண்களை அவர்கள் அபாயகரமானவர்களெனக் கருதி வெறுத்து ஒதுக்கினர். இயேசு திருமணமாகாதவர்; 40 நாட்கள் உபவாசம் இருந்து உள்ளத்தைத் தூய்மை செய்து கொண்டவர்: எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் கி.பி. 3 அல்லது 4 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த துறவிகளைப் போன்று உடலை வருத்த வேண்டும் என்று அவர் எப்போதுமே கூறியதில்லை. எனவே, துறவு மனப்பான்மையின் வளர்ச்சிக்கு, இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மட்டுமின்றி வேறு பல காரணங்களும் இருந்தன. சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் நிலவிய சீரழிவும் இதற்கும் ஒரு காரணமாகும். வாழ்க்கையில் தோல்வி அடைந்த பலர் அதனால் வருகின்ற துன்பங்களினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர். மற்றும் மடங்களைச் சேர்ந்த துறவிகள் ஒரு சில சலுகைகளைப் பெற்றனர். கட்டாய ராணுவ சேவையிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. கடன் தொல்லைகளிலிருந்தும் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்புகளிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது. பெருங்குற்றம் (crime) செய்தவர்கள் சிலர் அதனால் வரக்கூடிய தண்டனைகளில் இருந்து தப்புவதற்காகவும், மடாலயங்களில் சரண் புகுந்தனர். முரட்டு வகுப்பினர்களின் படையெடுப்புகளுக்கு அஞ்சிய பலர் மடாலயங்களைப் புகலிடமாக அடைந்தனர். உண்ண உணவும் உடுக்க உடையும் போதிய அளவு கிடைக்காத ஏழைகள் பலர் வயிறார உண்பதற்காகவும், மடாலய வாழ்க்கையை நாடினர். இத்தகைய குறுகிய நோக்கங்களுடன் மடாலயங்களைச் சென்றடைந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவேயாகும். மற்றபடி உயர்ந்த குறிக்கோள்களுடன், அதில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையே அதிகம்;

மடாலயத் துறவு வாழ்க்கையின் குறிக்கோள் எளிதில் முக்தி அடைய வேண்டுமென்பதேயாகும். ஆன்மாவானது உடம்பு எனும் சிறையில் அடைபட்டுக் கிடப்பதாகவும், கடவுளை அடைவதற்குத் தடையாக இருப்பவை, உடலைப் பொறுத்த ஆசைகளே என்றும் உண்மையான கிறிஸ்தவர்கள் பலர் நம்பினர். உலகியல் இன்பங்கள் யாவும் சாத்தானல் தோற்றுவிக்கப் படுபவை என்றும் தெய்வத்தை அடைய வேண்டுமானல் சாத்தானின் சோதனைகளுக்கு உட்படாமல் இருப்பதொன்றே வழி என்றும் நம்பப்பட்டது. இந் நம்பிக்கையின் விளைவாகப் பலர், உடலை வருத்துவதை ஓர் ஆன்மீயக் கடமையாக எண்ணினர். ஏழ்மை, பிரம்மசரியம், பணிவு ஆகிய விரதங்களை அவர்கள் வலிய கைக் கொண்டனர். செல்வத்தாலும், காமத்தாலும், ஆணவத்தாலும் வரக் கூடிய துன்பங்களில் இருந்து விடுபடுவதற்காகவே அவர்கள் அத்தகைய விரதங்களைக் கடைப் பிடித்தனர். சுருங்கக் கூறுமிடத்து பாவங்களிலிருந்து விடுபடுவதற்கும் புண்ணியங்களைச் சேர்ப்பதற்கும் என்றே, பலர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர்.

கிறிஸ்தவ திருச்சபையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்த ஆடம்பரங்களையும், கேளிக்கைகளையும். சுட்டிக் காட்டவும், அவற்றின் மீது தங்களுக்கிருந்த வெறுப்பை வெளிப் படுத்துதற்காகவென்றும் ஒரு சிலர் மடாலய வாழ்க்கை முறைகளை மேற்கொண்டனர்.

கொள்கைக்காகத் தியாகம் செய்து புகழடைய விரும்பியவர்கள் பலர் அக்காலத்தே இருந்தனர்; ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர்களை ஒறுத்து வந்தபோது, அத்தகையோர் தம்முடைய உயிரையே தியாகம் செய்து பெரும் புகழ் எய்தினர். நாளடைவில் மதஒறுப்பு நின்று போய் விட்டது. எனவே மேற் கண்ட முறையில் புகழடைய விரும்பியவர்கள், தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வதில் ஓரளவு திருப்தி அடைந்தனர். தங்களது, சுயநலமின்மையாலும், பக்தியாலும் பிறருக்கு ஒரு முன் மாதிரியாக விளங்க வேண்டுமென்று நினைத்தனர்.

கிறிஸ்தவர்கள், கீழை நாட்டுச் சமயங்களான, கினஸ்டிசிசம் (Gnosticism) மெனிகிசம் (Manicheism) போன்ற சமயங்களோடு தொடர்பு கொண்டதும் ஓரளவு இத்துறவு மனப்பான்மை வளர்ச்சிக்குக் காரணமாகும். ஏனெனில், உலகை வெறுத்தல், உடலைத் துன்புறுத்தல் போன்றவற்றை அச்சமயங்கள் அளவுக்கு மீறி வற்புறுத்தின.

இத்தகைய முறைகளால், அதாவது சிற்றின்பங்களைத் துறப்பதால் நிலையான பேரின்பத்தை அடையலாம் என நம்பிக் கொண்டு பலர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர். கி. பி. 3-ம் நூற்றுண்டில் எகிப்தில் இத்தகைய வாழ்க்கை முறை முதன் முதலில் தோன்றியது. அங்கிருந்து அது மெல்ல மெல்ல ரோமானியப் பேரரசின் கிழைப் பகுதிகளுக்குப் பரவியது. தங்களுடைய உடல்களை வருத்திக் கொள்வதில் பலர் தீவிரமாக ஈடுபட்டனர். 'பேச்சோமியஸ்' (Pachomius) என்ற துறவி நேராக நின்ற நிலையிலேயே தூங்கினுர் என்றும், மெக்காரியஸ் (Macarius) என்பார் சதுப்பு நிலங்களில் சென்று வேண்டுமென்றே வாழ்ந்து, தமது உதிரத்தைக் கொசுக்கள் தாராளமாகக் குடிக்கும்படிச் செய்தாரென்றும், சிமியோன் ஸ்டைலிடெஸ் (Simeon Stylites) என்பார் அரேபியப் பாலைவனத்தின் நடுவில் நடப்பட்ட ஒரு கம்பத்தின் மீது 30 ஆண்டுகள் கீழே இறங்காமல் வாழ்ந்தார் என்றும் கேள்விப் படுகிருேம். அந்தோணி எனும் ஒரு முனிவர், தனது சொத்துக்களையெல்லாம் விற்றுத் தானம் செய்து விட்டு, எகிப்துக்குச் சென்று பாலைவனத்தின் நடுவே வசித்தார். முள் போல் குத்தக் கூடிய ரோமத்தால் ஆன ஆடையையே அவர் அணிந்திருந்தார். 6 மாதத்திற்கொரு முறை கொண்டு வரப் பட்ட உணவை உண்டு கொண்டே அவர் உயிர் வாழ்ந்தார். இத்தகைய கடுந்துறவிகள் தாம் நாளடைவில் மடாலயங்களைத் தோற்றுவித்தனர். 'பேச்சோமியஸ்' என்ற துறவி முதன் முதலில் எகிப்தில் கி. பி. 4ம் நூற்றுண்டில் ஒரு மடாலயத்தை நிறுவினுர். துறவிகள் தனித்திருப்பதை விட ஒன்று கூடி வாழ்ந்தால் ஆன்மீக வளர்ச்சிக்கு நல்லது என்ற எண்ணத்திலேயே அவர் அம்மடாலயத்தைத் தோற்றுவித்தார்; நாளடைவில் இம் முறை பல்வேறு இடங்களுக்குப் பரவியது. கெப்போடிசியாவின் (Cappodecia) பிஷப்பாக இருந்த அர்ச். பைசில் (St. Basil) என்பவர் முதன் முதலில் மடாலய வாழ்க்கை முறைக்கென்று ஒரு சில விதிமுறைகளை வகுத்தார். உடலை வருத்திக் கொள்வதில் பயனில்லை என்றும், நன்மை பயக்கும் உழைப்பின் மூலம், ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்வதே உகந்தது என்றும் அவர் போதித்தார். எளிய வாழ்க்கை வாழ்ந்து பலமணி நேரங்களைத் தியானத்தில் கழித்தால் நல்லது எனக் கருதிய அவர், மக்கள் நடமாட்டம் இல்லாத குன்றுகளில் தமது மடங்களை அமைத்தார்.

ரோமானியப் பேரரசின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட மடாலயங்கள், கிழை நாட்டு மடாலயங்களை விடப் பல வகைகளில் சிறந்தவை. உடலை வருத்தும் கலை அங்கு பயிலப் படவில்லை. மக்களுக்குச் சேவை செய்வதே மிக முக்கியமாகக்

கருதப் பட்டது. மடாலயங்களின் ஆட்சி முறையானது ரோமானிய சிவில் ஆட்சி முறையைப் போன்று நன்கு அமைக்கப் பட்டது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அர்ச் பெனி டிக்ட் (St. Benedict) என்பார் இத்தாலியில் உள்ள மான்டே காசினோ (Monte Cassino) என்னுமிடத்தில் ஒரு புகழ் பெற்ற மடத்தைத் தோற்றுவித்தார். அதில் சேர்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். அப்போது அவர்களுக்கு ஒரு சில சோதனைகள் தரப்பட்டன. அவற்றை எல்லாம் வெற்றியுடன் சமாளித்தவர்கள் மட்டுமே துறவிகளாக இருக்க அனுமதி பெற்றனர். ஒரு நாளைக்கு 6 மணி முதல் 7 மணி வரை நன்கு உழைத்து வேலை செய்யுமாறு அவர்கள் வற்புறுத்தப் பட்டனர். "சோம்பேறித்தனமே ஆன்மாவின் முதல் எதிரி" என்று அவர் கூறுவது வழக்கம். ஒவ்வொரு துறவி யும் எத்தகைய உணவு உட்கொள்ள வேண்டும், உடை உடுக்க வேண்டும், எவ்வளவு பொருளைக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பது பற்றிப் பல விதிகள் ஆக்கப்பட்டன. மடத் தின் தலைவர் (abbot) அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். மடத்தில் வாழ்ந்த சாதுக்கள் மேல் சர்வாதிகாரம் செலுத்தும் உரிமையை அவர் பெற்றிருந்தார்.

### இடைக்கால சமய சீர்திருத்த இயக்கங்கள்

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு சில மடாலயங் கள், கத்தோலிக்க சமயத்தில் மலிந்து விட்ட ஊழல்களைப் போக்குவதற்காகவே அல்லும் பகலும் பாடுபட்டன. பல்வேறு சீர்திருத்தக் கருத்துகளை அவை வெளியிட்டதோடு நடைமுறை யிலும் நடத்திக் காட்டின. அத்தகைய மடாலய இயக்கங்களுக்கு குளூனிய மறுமலர்ச்சி இயக்கம் (Cluniac revival) மிக முக்கியமான தாகும். குளூனி (Cluny) எனுமிடத்தில் கி. பி. 910 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மடத்திலேயே இவ்வியக்கம் ஆரம்பித்தது. இதில் சேர்ந்தவர்கள், பிரமசரியம் (Celibacy), பக்தி சிரத்தை (Devotion) எளிமை (Simplicity) முதலிய பண்புகளைக் கண்டிப் பாகக் கடைப் பிடிக்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டனர். மற்றும் நிலமானியப் பிரபுக்களின் பிடியிலிருந்து சந்நியாசிகள் விடுதலை பெறுவதற்காக இவ்வியக்கத்தார் பெரிதும் பாடு பட்டனர். 11-ம் நூற்றாண்டில் இவ்வியக்கம் புதிய திருப்பத்தை அடைந்தது. இதன்படி மடாலயங்களில் மலிந்திருந்த ஊழல் களும், லோகாயதமும் கண்டிக்கப்பட்டதோடு திருச்சபை அனைத்திலும் காணப்பட்ட குறைகள் பெரிதும் கண்டிக்கப் பட்டன. துறவிகள் மட்டுமின்றி சாதாரண உலகியல் குருமார் களும்கூட நிலமானிய பிரபுக்களின் கட்டுப்பாட்டிலிருந்து

விடுதலை பெறவேண்டும் என்றும், சமயத்துறையில் போப்பாண்டவரே தனித்தலைமை பெற்று விளங்க வேண்டும் என்றும் இவ்வியக்கத்தார் கூறலாயினர். திருச்சபைப் பதவிகளை விற்பதும் வாங்குவதுமான முறையை (Simony) அவர்கள் அடியோடு தாக்கினர். மதகுருமார்கள் உலகியல் அதிகாரிகளிடமிருந்து பட்டம் பெறுதல் (lay invesgiture) தடுக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் விளைவாகத் திருச்சபையானது நிலமானிய பிரபுக்களின் பிடியிலிருந்து விடுதலையடைந்தது. பிஷப்புகள், குருமார்கள் போன்றவர்களை நியமிக்கும் உரிமையானது போப்பாண்டவரின் தனி உரிமையாக மாறியது. ஏழாம் கிரிகரியின் காலத்தில் இவ்வுரிமை நன்கு வலுப்பெற்றது.

### கார்த்தூஸிய, சிஸ்டர்சியத் துறவுநெறிகள் (Carthusian and Cistersian orders)

நாளடைவில் குளூனிய இயக்கத்தவர்கள் உலகியல் இன்பங்களில் திளைக்கலாயினர். அவர்கள் பேசுவது ஒன்றும் செய்வது ஒன்றுமாக மாறியது. எனவே அவர்களைச் சீர்திருத்துவான் வேண்டி 1084-ம் ஆண்டில் பிரான்சில், கார்த்தூசிய துறவிகளின் (Carthusian movement) இயக்கம் தோன்றலாயிற்று. அதைச் சார்ந்தவர்கள் தவத்தின் வடிவமாய்த் திகழ்ந்தனர். அவர்கள் இருண்ட குகைகளில் வாழ்ந்தனர். வாரத்தில் மூன்று நாட்கள் உபவாசமிருந்தனர். முரட்டு ரோமத்தாலான உடைகளை அணிந்து கொண்டனர். ஓயாது ஜபத்திலும், தியானத்திலும், கைத்தொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர். இவ்வியக்கத்தை ஒட்டி சிஸ்டர்ஸியன் இயக்கம் ஒன்றும் பிரான்சில் 1098-ஆம் ஆண்டில் தோன்றியது. அவர்களும் குளூனியத் தறவிகளிடையே காணப்பட்ட சுகபோக வாழ்க்கையைக் கண்டித்தனர். தன் கையாலேயே உழைத்துப் பெற்ற ஊதியத்தைக் கொண்டு மரக்கறி உணவு மட்டுமே உண்டு, துறவு வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற கொள்கையை இவ்வியக்கத்தினர் பின்பற்றினர். நாளடைவில் இத்துறவிகளிடையே செல்வம் வளர்ந்தது. அதனால் அவர்தம் ஒழுக்கமும் குறைந்தது.

### பிரான்ஸிஸ்கன் துறவு நெறி (Franciscan order)

பதின்மூன்றும் நூற்றுண்டில் கடுந் துறவிகளின் கூட்டமொன்று (Friar) சமய சுக போகிகளை எதிர்த்துக் கிளம்பியது. அவர்கள் உண்மையில் மதகுருமார்கள் அல்லர். சாதாரண உலகியல் பக்தர்கள். ஏனைய மக்களைப் போன்று வாழ்ந்தாலும்கூட அவர்கள் சதா சமுதாய சேவையில் ஈடுபட்டிருந்தார்கள்.

மக்களுக்கு நல்லனவற்றைப் போதிப்பதிலும், நன்னெறியில் நடக்கச் செய்வதிலும் அவர்கள் பெரும் அக்கறை செலுத்தினர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழுகின்ற பெரியார்களே உண்மையான மதவாதிகள் என்ற எண்ணம் மக்களிடையே பரவ இக்கடுந் துறவிகள் பெரிதும் உதவினர். இத் துறவிகளின் கூட்டத்தை உண்டாக்கியவர் அஸிஸியைச் சார்ந்த அர்ச் பிரான்ஸிஸ் (St. Francis of Assisi) என்பவராவார். அவர் ஒரு பெரியசெல்வக்குடியில் பிறந்த போதிலும்கூட ஆடம்பரத்தை வெறுத்துஎளிய வாழ்க்கையை மேற்கொண்டு கந்தைகளை அணிந்து ஊர் ஊராய்க் கால் நடையாய்ச் சென்று, வறியவர்களுக்கும், நோயாளிகளுக்கும், அனாதைகளுக்கும் ஓயாது தொண்டு புரிந்தார். குட்ட நோயால் வருந்தியவர்களைக் கூட அவர் மனம் கூசாமல் தழுவி அவர்களுக்குப் பணிபுரிவதில் இன்பங்கண்டார். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட பெரியாராய்த் திகழ்ந்த அவர் இயேசுவின் உண்மையான சீடராக விளங்கினார். தியாக மனப்பான்மை, எளிமை, பொருளற்ற சடங்குகளின் மீது வெறுப்பு, வைதீகக் கோட்பாடுகளைக் கண்டித்தல், இவற்றில் அவர் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். அவரது அன்பு அருளாக மாறி மனிதர்கள் மீது மட்டுமின்றி இவ்வுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களின் மீதும்கூட அவரது கருணை சென்றது. எரிகின்ற நெருப்பைப் பலவந்தமாக அணைக்கவும்கூட அவர் கூறினார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லால் வாடினேன் பசியினா
(லிளைத்தே
வீடுதோரிரந்தும் பசியிறு தயர்ந்த வெற்றரைக் கண்டுளம்
(பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்து கின்றோரென் னேருறக் கண்டுளம்
(துடித்தேன்
ஈடின் மானிகளா யேழைகளாய் நெஞ்சிளைத்தவர் தமைக்
(கண்டே யிளைத்தேன்

என்று பாடிய இராமலிங்க சுவாமிகளின் பாடலுக்கு இலக்கணமாக அவர் திகழ்ந்தார். ஜீவ காருண்யத்தின் உருவகமாக விளங்கினார். விறகினைச் சேர்க்கும்போது முழு மரத்தையும் வெட்டக் கூடாது என்று அவர் தம் சீடர்களைத் தடுத்தார். ஆனால் அவர் உலகத்தைத் துறந்தாரில்லை. சாதாரண உலகியல் இன்பங்களைத் துய்க்காமலில்லை. தனதுடம்பை வருத்தித் தவம் இயற்றவில்லை. ஜீவ சேவையே இறை சேவை என அவர் வாழ்ந்

தார். கி. பி. 1210-இல் மூன்றும் இன்னொஸெண்ட் எனும் போப்பாண்டவர் அவரது இயக்கத்தை அங்கீகரித்தார்.

**டாமினிக் இயக்கம் (Dominican movement)**

1215-ஆம் ஆண்டில் அர்ச். டாமினிக் என்பார் பிரான்சு நாட்டில் டாமினிக்கத் துறவிகள் இயக்கத்தை நிறுவினர். சமயத்திற்கு விரோதமானவர்களை மனமாற்றம் செய்யவேண்டு மென்பதே அவர்களது முக்கியக் குறிக்கோளாகும். எனவே இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்கள். கடவுள் நம்பிக்கையற்றவர்களிடம் வாதாடி அவர்கள் மனத்தை மாற்றும் திறமையை அவர்கள் பெற்றிருந் தனர். அவர்களில் பலர் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகப் பதவியேற்று மக்களின் அறியாமையைப் போக்கினர். தத்துவம், சமய சித்தாந்தம், இவற்றை வளர்க்க அவர்கள் பெரிதும் பாடு பட்டனர். எனினும் நாளடைவில் இத்தகைய சீர்திருத்த இயக்கங்களிலும் கூட ஊழல்கள் மலிந்தன. ஆனல் இடைக்கால நாகரிக வளர்ச்சிக்கு அவர்கள் செய்த தொண்டு பொன்னெழுத் துக்களில் பொறிக்கத்தக்கனவாம்.

**மடாலயங்களின் சேவைகள்**

மேலே கூறிய மடாலயங்களின் விளைவாகப் பல நல்ல பயன் கள் விளைந்தன. திருச் சபையில் ஊழலும் உலகியல் ஆசைகளும் மலிந்து கிடந்தபோது அவர்கள் தங்கள் தூய வாழ்க்கைகளின் மூலமாக மக்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கினர். உயர்ந்த குறிக் கோள்களை மக்கள் முன் வைத்தனர். கிறிஸ்தவ சமயத்தைச் சீர்திருத்தி அமைத்தனர். சமய சம்பந்தமான பட்டங்களையும் பதவிகளையும் விற்கின்ற 'சிமனி' என்ற முறையை ஒழிக்கவும் சமய குருமார்களிடையே பிரம்மசர்யத்தைப் பரப்பவும், போப் பாண்டவரது கரங்களை வலுப்படுத்தவும் அவர்கள் ஓயாது பாடுபட்டனர். குறிப்பாக 10ம் நூற்றுண்டில் வாழ்ந்த 'குளுனியேக்' (Cluniac) துறவிகள் மேற்கண்ட சீர்த்திருத்தங் களுக்காகப் பெரிதும் போராடினர். போப்பாண்டவரைத் திருச் சபையைச் சேர்ந்த குருமார்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை ஏற்பட்டது. அதற்கென கி. பி. 1059ல் கார்டினல்களின் குழு (College of Cardinals) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதே ஆண்டில், குருமார்கள் திருமணம் செய்து கொள்வது சட்ட விரோதமாக்கப்பட்டது. கி. பி. 1075ல் 'சிமனி' என்ற பதவி விற்கும் முறை ஒழிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப, இத்தகைய துறவிகளே, பெரிதும் சேவை செய்தனர்.

இங்கிலாந்து, ஜெர்மனி, மத்திய ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பியவர்கள் அவர்களே. மற்றும் அவர்கள் உழைப்பின் உயர்வை மக்களுக்கு எடுத்துக் காட்டினர். சதுப்பு நிலங்களை வற்றச் செய்தும், காடுகளை அழித்தும் அவர்கள் விவசாயத்திற்குரிய நிலங்களைப் பெருக்கினர். பிராணிகளை வளர்ப்பதிலும் விவசாயம் செய்வதிலும் புதிய முறையினைக் கையாண்டனர். மாற்றுப் பயிரீட்டு முறையை (Crop rotation) முதன் முதலில் கடைப்பிடித்தவர்கள் அவர்களே. மற்றும் அவர்கள் கண்ணாடித் தொழில், பட்டுத்தொழில், திராட்சை ரசம் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களையும் வளர்த்தனர். மரத்தாலும் உலோகத்தாலும் பல்வேறு பொருள்களை உண்டாக்கினர். இங்கிலாந்து போன்ற இடங்களில் அவர்கள் ஆடு மாடுகளை வளர்த்து, கம்பள உற்பத்தியைப் பெருக்கினர். கலைத் துறையில் அவர்கள் செய்த சேவை மெச்சத்தக்கவை. அச்சுப்பொறி கண்டு பிடிக்கப்படாத அக் காலத்தே கைப்பட பல நூல்களை எழுதி, அக் கைப்பிரதிகளைக் காப்பாற்றி உலகுக்கு ஈந்த பெருமை அவர்களையே சாரும். மற்றும் அவர்கள் ஆங்காங்கே, பள்ளிகளையும் நூலகங்களையும் வைத்துப் பராமரித்தார்கள். உணவகங்கள் இல்லாத அக் காலத்தே வழிப் பயணிகளுக்கும் வறியோர்களுக்கும் உணவளித்துக் காப்பாற்றியவர்கள் அவர்களே. நோய் வாய்ப்பட்ட மக்களுக்கு ஆங்காங்கே மருத்துவ மனைகளையும் அவர்கள் அமைத்துத் தந்தனர். இத்தகைய பல நன்மைகளை உலகுக்கு வழங்கிய மடாலயங்களால் ஒரு சில தீமைகளும் ஏற்பட்டன. உலகுக்கு நல்ல சேவை செய்யக்கூடிய பல அறிஞர்கள் மடாலயங்களுக்குச் சென்று ஒருவருக்கும் பயனின்றி வாழ நேர்ந்தது. அவர்களது வாழ்க்கை இயற்கைக்கு முரணாயும் வெறுக்கத் தக்கதாயும் இருந்தது. குருமார்களிடையே ஒரு பிளவு ஏற்படுவதற்கும் அவர்கள் காரணமாய் இருந்தனர். 'கடுமையான துறவு நிலையைக் கடைப்பிடித்த உண்மையான (Regular clergy) குருமார்கள், உலகியல் துறையில் உழன்ற குருமார்கள் (Secular clergy) என்ற இருவகையான குருமார்கள் தோன்றினர். இவ்விரு கூட்டத்தார்க்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஒருவரையொருவர் குறை கூறுவதில் அவர்கள் போட்டி போடலாயினர். இதனால் பொதுமக்கள் முன்னிலையில் சமயத் தலைவர்கள் மதிப்பையும் கண்ணியத்தையும் இழந்தனர். ஆனால் மொத்தமாகப் பார்க்குமிடத்து மடாலய முறையினால் தீமையைவிட நன்மையே அதிகம் விளைந்ததெனலாம்.

## இடைக்கால நாகரிகத்திற்கு கிறிஸ்தவ சமயம் ஆற்றிய தொண்டுகள்

வன்முறையும் வம்பும் தாண்டவமாடிக் கொண்டிருந்த இடைக்காலத்தின் தொடக்கத்தில் கிறிஸ்தவ சமயமானது மாக்களை மக்களாக மாற்றும் ஓர் அரு மருந்தாக அமைந்தது. முரட்டு வகுப்பினர், காட்டுமிராண்டிகள் என்றெல்லாம் பேசப் பட்ட ஜெர்மானியப் பழங்குடி மக்களை கிறிஸ்தவ சமயம் நாளடைவில் தன்னகத்துக்குள் ஈர்த்துக் கொண்டது. பழக்கப் பட்ட பாம்புகள் போல் அவர்கள் நாளடைவில் பண்பு செறிந்த மக்களாக மாறினர். அமைதி, சமாதானம், அன்பு போன்ற குணங்களை வற்புறுத்துகின்ற கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியதனு லேயே அவர்கள் அங்ஙனம் மாறிப் போயினர். கிறிஸ்தவம் என்ற சொல்லிற்கே ஆங்கிலத்தில் மென்மையான உள்ளம்படைத்தவன், கண்ணியம் வாய்ந்தவன், கருணை பொருந்தியவன் என்பதுதான் பொருள். போரையே தொழிலாகக் கொண்டிருந்த ஜெர்மானிய குலத்தினரிடையே நாளடைவில் இப் பண்புகள் ஊடுருவி ஒரு புதிய பண்பட்ட சமுதாயத்தையே உண்டாக்கி விட்டது. டாயன்பி என்பார் சொல்லுவது போல கிறிஸ்துவ சமயமும் ஜெர்மானிய முரட்டு வகுப்பினர் பண்பாடும் ஒன்று கலந்த நாலேயே இன்றைய மேலை நாட்டு நாகரிகம் தோன்றிற்று எனலாம். ஆதியில் ஒறுக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தம் சகிப்புத் தன்மையின் காரணமாக தம்மை ஒறுத்த ரோமானியர்களையும் மனம் மாறச் செய்தனர். பிற்காலப் பேரரசர்கள் காலத்தில் கிறிஸ்தவ சமயம் தேசிய சமயமாக மாறி அமைந்தது.

ரோமானியப் பேரரசு குலைவுற்ற பின்னர் ரோமானிய கத்தோலிக்க மதம் பேரரசின் பீடத்தைப் பிடித்துக் கொண்டது; ரோம் நகரம் வீழ்ச்சியுற்றபின் அந்நகரத்தின் ஆட்சிப் பொறுப்பை போப்பாண்டவர் ஏற்றுக் கொண்டார். அதே போலத்தான் ஐரோப்பா எங்கணும் முரட்டு வகுப்பினரின் படையெடுப்பால் அலைக்கழிக்கப்பட்ட மக்கட் கூட்டத்தினரிடையே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற பெரும் பணியை ஆங்காங்கே இருந்த திருச்சபையின் கிளைகள் மேற்கொண்டன. கத்தோலிக்க ரோமன் திருச்சபையானது ஆயிரக்கணக்கான தம் கிளைத் திருச் சபைகளின் மூலம் ஐரோப்பா எங்கணும் ஆதிக்கம் செலுத்தியது. சமயத் துறையில் அது ஒரு பேரரசாய்த் திகழ்ந்தது. அரசியல் துறையில் பேரரசு ஆட்டங்கண்டிருந்த நிலையில் சமயத்துறையின் மூலம் நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் காத்த பெருமை கத்தோலிக்க திருச்சபைக்கே உரியதாகும். ரோமானியப்

பேரரசின் பல நிறுவனங்களை திருச்சபை அப்படியே மேற்கொண்டது. பேரரசின் நாட்டுப் பிரிவுகளை ஏற்றுக்கொண்டு அந்தந்த பிரிவுகளில் இருந்த அரசியல் அதிகாரிகளைப் போன்று சமய அதிகாரிகளை அது நியமித்தது. பாரிஷ் (Parish) என்பது மிகச் சிறிய சமய ஆட்சித் துறைப் பகுதியாகும். அதற்கு மேல் டயோசிஸ் (Diocese) பிஷப்ரிக் (Bishopric) போன்ற ஆட்சித் துறைப் பகுதிகள் இருந்தன. இப் பிரிவுகளுக்கெல்லாம் மேலாக ஆர்ச்பிஷப் ஒருவரை போப்பாண்டவர் நியமித்து வந்தார். மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் தனக்கு ஆலோசனை கூற கார்டினல் என்ற தமது பிரதிநிதியையும் அவர் நியமித்திருந்தார். இத்தகைய அதிகாரிகள் பின்பற்றுவதற்காக என்று தனிப்பட்ட சமயச் சட்டங்கள் (Canon Laws) வகுத்தளிக்கப்பட்டன. அச் சட்டங்களை மீறியவர்களை விசாரித்து தண்டிக்க தனிப்பட்ட சமய நீதிமன்றங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டன. கத்தோலிக்க சமயத்திற்குப் புறம்பானவர்களை அது விசாரித்துக் கடுந்தண்டனை அளித்தது. பலர் உயிரோடு எரிக்கப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். சமய ஒறுப்பு நீதிமன்றங்களுக்கு (Inquisitions) அஞ்சி இணங்காதார் பலர் நாட்டை விட்டே ஓடிப் போய் விட்டனர், இருப்பினும் அரசியல் துறையில் சட்டத்தின் அமைதி காக்கப்படாத தருணத்தில் சமயத்துறையில் சட்டங்கள் அமுலாக்கப்பட்டது உண்மையிலேயே பலருக்கும் நன்மை பயப்பதாய் அமைந்தது. சமயச் சட்டங்களுக்கு அஞ்சியாகிலும் சமூக விரோதிகள் பலர் ஒழுங்காக நடந்து கொண்டனர். திருட்டு, கொள்ளை, கொலை போன்ற குற்றங்கள் குறைந்தன. மற்றும் சமுதாயத் துறையில் இடறி விழுந்தோர்களையும், அறநெறிக்குப் புறம்பாக நடந்தவர்களையும் அது தண்டித்து திருத்தியது. குடும்பத்தில் கணவன் மனைவி, பெற்றோர் மக்கள் ஆகியோரின் உறவு முறைகளை அது ஒழுங்குபடுத்தியது. வட்டார நீதிமன்றங்களுக்கெல்லாம் மேலாக தலைமை முறையீட்டு நீதி மன்றமாக போப்ஆண்டவரின் நீதி மன்றம் விளங்கியது. போப் ஆண்டவர் ஒரு பேரரசரைப் போன்றே பெருமிதத்துடன் வாழ்ந்தார். அவரது ஆணைக்குக் கட்டுப்படாத அரசர்களை அவர் சமய விலக்கம் (Excommunication) செய்தார். குருமார்களின் பணிகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. இங்ஙனம் முறைகேடாக நடந்த மன்னர்களையும் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் போப் ஆண்டவருக்கு இருந்தது. சில சமயங்களில் போப்பாண்டவரின் கட்டளைகளை மீறிய சிறிய சமுதாயங்களைக்கூட அவர் தமது தடைக்கட்டளைகளின் மூலம் (Interdict) தண்டித்தார். அக் கட்டளைகளின்படி போப்புக்குக் கீழ்ப்படியாத நாட்டில் திருக்

கோயில்கள் மூடப்பட்டன. குருமார்கள் சேவைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டன.

போப்ஆண்டவர்கள் இடைக்கால ஐரோப்பாவின் நிலங்களில் பெரும்பகுதியைச் சொந்தமாக வைத்திருந்தனர். அடிமைகளைக் கொண்டு அவற்றை உழுது அவற்றின் பொருளை மக்களுக்குத் தந்தனர். அடிமைகளை நடத்துவதில் அவர்கள் பெரிதும் இரக்கம் காட்டினர். உழவர்களுக்கு அவர்கள் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவினர். தொழில்களுக்கும் அவர்கள் கடன் கொடுத்தனர். கடனைத் திருப்பித்தராதவர்களை அவர்கள் ஓரளவு கருணையோடு நடத்தினர். இங்ஙனம் அவர்கள் இடைக்கால ஐரோப்பாவின் தொழில் ஆக்கத்திற்கும், விவசாய வளர்ச்சிக்கும் உறுதுணையாய் நின்றனர்.

இடைக்கால மக்கள், முக்கியமாகப் பிரபுக்கள், போர்க்குணம் மிக்கவர்களாய், தமக்குள் ஓயாது சச்சரவிட்டுக் கொண்டனர். இவற்றைத் தடுக்கக் கத்தோலிக்கத் திருச்சபை பெரிதும் முயன்றது. ஒருசில நாட்களில், அதாவது புதன்கிழமை மாலையிலிருந்து திங்கட்கிழமை காலை வரையில் தமக்குள் யாரும் போரிடக்கூடாது என அது கட்டளை பிறப்பித்தது. அவை ஆண்டவனின் சமாதான நாட்கள் என்று கருதப்பட்டன. பரஸ்பரம் அன்பு செலுத்துவதே உண்மையான பக்தி என்று கிறிஸ்தவ சமயம் போதித்ததால் நாட்டில் ஓரளவு மூர்க்க குணமும், போர்க்குணமும் குறைந்தது. அமைதி மனப்பான்மை வளர்ந்தது.

இடைக்கால ஐரோப்பாவின் சமுதாயத்திற்கு கத்தோலிக்க சமயம் பல பரோபகாரச் செயல்களைச் செய்தது. நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய மருத்துவ மனைகளை அது கட்டியது. அனாதைகளையும் ஏழைகளையும் அது வைத்துப் பராமரித்தது. வேலை செய்ய இயலாத பிச்சைக்காரர்களுக்கு அது உணவும், உண்டியும் அளித்துக் காத்தது. மற்றும் இடைக்கால குழந்தைகளுக்குக் கல்விக் கண்களைத் திறந்தவர்களும் அவர்களே. அக்காலத்துப் பள்ளிகளை நடத்திய ஆசிரியர்கள் அனைவரும் சமயக் குருமார்களே ஆவர். அச்சமயக் குருமார்கள் சமயக் கல்வியை மட்டுமன்றி உலகியல் கல்வியையும் தமது மாணவர்களுக்கு ஊட்டினர், அவர்களில் பலர் கிரேக்கம் இலத்தீன், போன்ற மொழிகளில் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தனர். எனவே அவர்களை அறியாமலேயே பண்டைய பகுத்தறிவுக் கருத்துக்கள் பல அவர்களால் பரப்பப்பட்டன. சமய சித்தாந்தங்களைக்கூட

அவர்கள் பகுத்தறிவின் அடிப்படையில் விளக்கம் செய்ய லாயினர். செண்ட் அக்யூனஸ் போன்றவர்கள் இத்தகைய முறை யைப் பின்பற்றிப் பல நூல்களை எழுதினார்கள். அவற்றின் விளைவாக இடைக்கால மக்கள் தருக்க வாதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றனர். எதையும் துருவித் துருவி ஆராய்கின்ற முறையும் வளர்ந்தது. இங்ஙனம் இடைக்கால போப்ஆண்டவர்களும் மத குருமார்களும் தம்மை அறியாமலேயே நவீனகால மறுமலர்ச்சிக்கு வித்திட்டுச் சென்றனர் எனலாம்.

கத்தோலிக்க திருச்சபை இடைக்கால—நாகரிகத்திற்கு அளித்த மற்றுமோர் பரிசு இலத்தின் மொழியாகும். இலத்தீன் மொழியே அறிஞர்களின் பொதுமொழியாக விளங்கிற்று. கிரேக்க மொழியின் உயர்ந்த கருத்துக்கள் அனைத்தும் ஏற்கெனவே இலத்தீனில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தமையால் பண்டைய கிரேக்கப் பண்பாடுகளை இடைக்கால மக்கள் எளிதில் கற்றுக் கொண்டனர். நாளடைவில் அறிவியல் வளர்ச்சி ஏற்படுவதற்கு இலத்தீன் மொழிப்பயிற்சி பெரிதும் துணையாய் அமைந்தது. போப் ஆண்டவரின் வாடிகன் (Vatican city) நகர நூலகத்தில் ஏராளமான இலத்தீன் நூல்கள் சேமித்து வைக்கப் பட்டன. போப் ஆண்டவர்களில் பலர் பகுத்தறிவு வளர்ச்சிக்கு உதவி புரிந்தனர். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளை வளர்த்தனர். ஆனால் அவை யாவும் சமயத் தொடர்பு கொண்டு விளங்கின.

இங்ஙனம் கத்தோலிக்கத் திருச்சபை பேரரசுக்குள் ஓர் பேரரசாக வளர்ந்து இடைக்கால மக்களைக் கட்டிக் காத்தது. 'தொட்டில் முதல் சுடுகாடு வரை' அவர்களது வாழ்க்கை திருச் சபையால் கண்காணிக்கப்பட்டது. ஏழுவகையான புனிதச் சடங்குகள்மூலம் அது ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் கட்டு படுத்தியது. குழந்தை பிறந்தவுடனே அதற்கு ஞானஸ்நானம் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் அக்குழந்தையின் கல்வி, திருமணம், இறப்பு முதலிய பல நிகழ்ச்சிகளிலும் திருச்சபையின் புனிதச் சடங்குகள் தேவைப்பட்டன. மறந்து பாவம் செய்தவர் கள் குருமார்கள் மூலமாக இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டனர்; ஞாயிற்றுக் கிழமைகளில் ஒழுங்காகக் கோயில்களுக்குச் செல்லல் வேண்டும். சமய விழாக்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். திருச்சபைக்கு டைத் (tithe) என்ற வரியைச் செலுத்துதல் வேண்டும். இங்ஙனம் இடைக்கால மனிதனுடைய வாழ்க்கை திருச்சபையின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அமைந்திருந்தது. இக் கட்டுப்பாடுகளால் ஓரளவு சுயேச்சையாக சிந்திக்கும் மனப்பான்மை குறைந்ததென்பது

உண்மையெனினும் எந்த சமயத்திலும் ஒருவனுடைய உடல், பொருள், ஆவி மூன்றுக்கும் அபாயம் ஏற்படக் கூடிய ஒரு சூழ் நிலையில் திருச்சபையின் கட்டுப்பாடுகளால் மனிதனது ஆன்மாவுக் குச் சாந்தி கிடைத்தது. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலை தலைவிரித்தாடிய காலத்தில் கத்தோலிக்க திருச்சபை அபயம் என வந்த மக்களுக்கு ஒரு புகலிடமாய் அமைந்தது. அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த பெரும்பான்மையான மக்களுக்கு திருச் சபை ஒரு வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழ்ந்தது. இங்ஙனம் பல வகையிலும் மக்களுக்குப் பெரும்பணி ஆற்றிய திருச்சபையில் நாளடைவில் பல ஊழல்கள் மலிந்து விட்ட காரணத்தாலேயே பிற்காலத்தே மதத் சீர் திருத்த இயக்கம் ஏற்பட்டது.

# 2. முந்திய இடைக்கால நாகரிகம்-ஜெர்மானிய அடிப்படை

கிறிஸ்தவ சமயத்துக்கு அடுத்த படியாக, முற்பட்ட இடைக் கால நாகரிகத்தை உருவாக்கிய முக்கிய சாதனமாகக் கருதப் படத் தக்கது ஜெர்மானியர் எனும் காட்டு மிராண்டிகளின் செல்வாக்கேயாகும். பிரிட்டனில் வாழ்ந்த கெல்ட்டுகள் (Celts), கிழக்கு ஐரோப்பாவில் வாழ்ந்த ஸ்லாவ்கள் (Slavs) போன்ற பழங்குடிகளும் ஓரளவு இடைக் கால நாகரிகத்தை உருவாக்க உதவினர் என்றாலும் அதன் பெரும் பகுதியை உருவாக்கிய பெருமை ஜெர்மானியர்க்கே உரித்தாகும்.

### ஜெர்மானியர் யாவர் ?

ஜெர்மானியர் என்போர் பெரும்பாலும் நார்டிக் (Nordic) இனத்தைச் சேர்ந்தவராவர். அவர்கள் பேசிய மொழி இந்தோ ஐரோப்பிய மொழி இனத்தைச் சேர்ந்ததொன்றாகும். அவர் களின் ஆதி உறைவிடம் யாது என்பது பற்றிப் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் மேற்கு ஆசியப் பகுதியிலிருந்தே அவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைந் திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கி.பி. முதலாம் நூற்றாண் டளவில் அவர்களிடையே பல்வேறு இனப் பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. வாண்டல்கள் (Vandals) காத்துகள் (Goths) பிராங்குகள் (Franks) பர்கண்டியர்கள் (Burgandians) ஆங்கிலோ சாக்சனியர்கள் (Anglo Saxons) போன்ற பல்வேறு இனத்தவர்கள் ஐரோப்பாவின் வெவ்வேறு பகுதிகளில் சென்று, குடியேறித் தத்தமுக்கு ஒரு தனி நாட்டினையும் அரசையும் ஏற்படுத்திக் கொண்டனர். கிரேக்கர்கள், ரோமானியர்களோடு அவர்கள் பெரிதும் ஒற்றுமையுள்ளவராய்க் காணப்பட்டனர்.

### ஜெர்மானியப் படையெடுப்புகள்

ஜெர்மானியர்கள் ரோமானியப் பேரரசின் விளிம்பில் வாழ்ந்து வந்த ஒருவகை முரட்டு வகுப்பினர் ஆவர். பேரரச் சேரழியத் தொடங்கிய போது அவர்கள் அலை அலையாக அதனுள்

நுழைந்தனர். சில சமயங்களில் அவர்கள் படையெடுப்புகளை நிகழ்த்தி ஒரு சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் பெரும்பாலும் அவர்கள் குழந்தை குட்டிகளுடன் குடும்பங் குடும்பமாகப் புறப்பட்டு வந்து பேரரசின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர். அவர்கள் நல்ல உடற்கட்டு பொருந்தியவர் களாயிருந்தமையால், ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) போன்ற ரோமானிய தளகர்த்தர்களும் அரசர்களும் அவர்களைப் பெரு வாரியாகப் படைகளில் சேர்த்துக் கொண்டனர். பேரரசரின் மெய்க்காப்பாளர் படையில் அவர்கள் பெரிதும் இடம் பெற்றிருந் தனர். மற்றும் பலர், ரோமானியப் பிரபுக்களின் தோட்டங் களில் பணியாட்களாக அமர்த்தப்பட்டிருந்தனர். வேறு பலர், அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளை ஏற்றுப் பணி புரிந்து வந்தனர். இங்ஙனம் அவர்கள் ரோமானியப் பேரரசின் உள் நுட்பங்களை எல்லாம் நன்கு அறிந்திருந்த தாலேயே, அது பலவீன மடைந்த தருணம் பார்த்து அதைப் படையெடுத்துத் தாக்கி எளிதிலேயே அதைக் கைப் பற்றிக் கொண்டனர். கி.மு. இரண்டாம் நூற்றுண்டிலேயே அவர்களது படையெடுப்புகள் தொடங்கி விட்டன. எனினும் கி.பி. நான்காவது, ஐந்தாவது நூற்றுண்டுகளில் தான் அவர்கள் தொடர்ந்து பல படையெடுப்பு களிலீடுபட்டனர். கி.பி. 378 இல் விஸிகாத்துகள் (Visigoths) எனும் ஜெர்மானியக் குலத்தினர் தம்மை ஆண்டு வந்த ரோமானிய ஆளுநர்களை எதிர்த்துக் கலகம் செய்தனர். அட்ரியனோபில் (Adrianople) எனுமிடத்தில் அவர்கள் ரோமானியப் படைகளை முறியடித்து விட்டு இத்தாலிக்குள் நுழைந்தனர். கி.பி. 410-இல் அலாரிக் (Alaric) என்பாரது தலைமையில் அவர்கள் ரோம் நகரைச் சூறையாடினர். பின்னர் அவர்கள் கால் (Gaul) பிரதேசத்துள் நுழைந்தனர். கி.பி. 455-இல் வாண்டல்கள் (Vandals) எனும் ஜெர்மானியக் கூட்டத் தார் ரோம் நகரைச் சூறையாடிய பின் கார்த்தேஜ் மாநிலத்தில் ஓர் இராஜ்யத்தை ஏற்படுத்தினர். அவர்களைத் தொடர்ந்து வேறு ஜெர்மானியர்களும் இத்தாலியைப் படை யெடுத்து கி.பி. 5-ஆம் நூற்றுண்டு முடிவதற்குள் ரோமானியப் பேரரசின் மேற்குப் பகுதி அனைத்தையும் அவர்கள் கைப்பற்றி கொண்டனர்.

## ஜெர்மானியரின் சமுதாய வாழ்க்கை

பண்டைய ஜெர்மானியரின் வாழ்க்கை நிலை பற்றி அறியத் தக்க ஆதாரங்கள் மிகச் சிலவேயாகும். கி.பி. 98-இல் டேஸிடஸ் (Tacitus) என்பார் எழுதிய ஜெர்மானியா (Germania) என்ற

நூலிலிருந்து ஒரு சில தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஜெர்மானியரின் பண்டைய இலக்கியங்கள், சட்டங்கள் முதலிய வற்றிலிருந்து அவர் தம் வாழ்க்கை நெறி பற்றி நாம் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. ஆனால் அவையாவும், மிக்ப் பிற்காலத் திலேயே எழுத்து வடிவம் பெற்றமையால் அவற்றை நாம் முழுமையாக நம்புவதற்கில்லை. டேஸிடஸின் கூற்றுப்படி, பண்டைய ஜெர்மானியர்கள் எழுத்து வாசனையற்றவர்கள். கல்வி கலைகளில் நாட்டம் சிறிது மில்லாதவர்கள். ஒரோ வழி விவசாயத்தில் ஈடுபட்டாலும் கொள்ளையடிப்பதையே தங்களது முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். வீட்டு வேலைகளனைத் தையும் பெண்களே கவனித்துக் கொண்டனர். வீட்டிலுள்ள சிறுவர்களும், முதியவர்களும் பெண்டிர்க்கு உதவி செய்தனர். அவர்கள் வசித்த வீடுகள் கரடு முரடான மரத்தால் கட்டப் பட்டிருந்தன. மரச் சுவர்கள் மீது, களிமண் பூசப்பட்டிருந்தது, ஆண்கள் தமது பெரும்பாலான நேரத்தைக் கொள்ளையடிப் பதிலும், வேட்டையாடுவதிலும் கழித்தனர். எஞ்சிய நேரத் தைச் சூதாடுவதிலும் மது அருந்துவதிலும் தூங்குவதிலும் போக்கினர். குலத் தலைவர்கள் அரசியல் காரணங்களுக்காகப் பல மனைவியரை மணந்தனரென்றாலும், சாதாரணமானவர்கள் ஏகபத்தினி விரதத்தையே கடைப் பிடித்தனர். விவாகரத்து, விபசாரம் முதலியவை அவர்களிடையே மிக அருகியே காணப் பட்டது. விபசாரத்திலீடுபட்டவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். எனவே ஆண்களும் பெண்களும் கற்பு நெறி பிறழாமல், வரம்பு மீறாமல் வாழ்க்கை நடத்தினர். விதவைகள் மறுமணம் செய்து கொள்வது கூட ஒரு சில குலங் களில் தடுக்கப்பட்டது.

**பொருளாதார நிலை:** ஜெர்மானியர்கள் ஆதியில் விவசாயத் தில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை. வேட்டையாடுவதிலும் கொள்ளையடிப்பதிலுமே பெரும் பொழுதைக் கழித்தனர். ஆனால் நாளடைவில் நிலையான வாழ்க்கையை மேற் கொண்டு பயிர்களைச் சாகுபடி செய்வதில் ஈடுபட்டனர். நிலங்கள் யாவருக்கும் பொதுவாக இருந்ததா அல்லது தனி நபர்களுக்குச் சொந்தமாயிருந்ததா எனத் திட்டமாகத் தெரியவில்லை ஆனால் கிராமத்திலுள்ள புல்வெளிகளும் காடுகளும் அனைவருக்கும் பொது வாகவே இருந்தன. சாகு படிக்கு ஏற்ற நிலங்களை மட்டும் கிராமத் தலைவர்கள் பார்த்து தனிப்பட்டவர்களுக்கு வழங்கி யிருக்கக் கூடும். ஆடுமாடுகளே அவர்தம் செல்வம். அவற்றை வைத்துக் கொண்டே அவர்கள் வியாபாரம் செய்தனர். வாணிபம் பொதுவாகப் பண்ட மாற்று முறையிலேயே நடை

பெற்றது. வீடுகளிலும் நிலங்களிலும் ஏராளமான ஆட்கள் பணி செய்தனர். நிலங்களில் ஊதியம் செய்தோர் தமக்கென்று நிலங்கள் வைத்துக் கொண்டு, அதில் விளையும் விளைச்சலில் ஒரு பகுதியை மட்டுமே தமது ஆண்டையர்களுக்கு வழங்கினர். இவர்கள் ஏறக்குறைய உட்குடிகள் (Serf) போல் வாழ்ந்தனர். இவர்களேயன்றி, சுதந்திர மற்ற அடிமைகள் பலர் இருந்தனர்; போரில் சிறை பிடிக்கப்பட்டவர்கள், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்கள் முதலியோர் இத்தகைய அடிமை நிலையை எய்தினர். சூதாட்டத்தில் தோற்றதால் அடிமையானவர்கள் பலர்.

**அரசியல் நிலை :** பண்டைய ஜெர்மானியர்களிடத்தே நன்கு அமையப் பெற்ற அரசியல் நிறுவனங்கள் எதுவும் இல. ஒருவகை யான படைமானிய முறையே அவர்களிடம் காணப்பட்டது. குலத்தலைவர்கள் ஒரு சிலர் இருந்தனரேயன்றி யாவர்க்கும் மேலான அரசன் என்று எவரும் இல்லை. தலைவர்கள் என்போர் போர் செய்வதில் நல்ல திறமை பெற்றிருந்தனர்; வலுப்பெற்ற சிறு படைவீரர் கூட்டம் ஒவ்வொரு தலைவனிடமும் இருந்தது. தலைவனது ஏவலுக் கிணங்க அப்படைகள் செயல் பட்டன. போரிலும், கொள்ளையிலும் கிடைத்த செல்வத்தைத் தலைவர்கள் தமது வீரர்களிடையே பகிர்ந்து அளித்தனர். வீரர்கள் தமது தலைவர்களுக்கு என்றும் மாறா விசுவாசத்துடன் இருப்பதாக ஒரு வாக்குறுதி எடுத்துக் கொண்டனர். அவர்கள் தமது தலைவர் களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். தலைவர்களின் தேர்தலில் சுயேச்சையான குடிமக்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட குலத் தலைவர்கள், வெளி நாட்டுப் படையெடுப்பின் போது தமக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அத் தலைவர் களில் ஒரு சிலர் அரசனைப் போல் நடந்து கொண்டனர். போர் முடிந்த உடன் அன்னார் தம் தலைமையை இழந்தனர். ஆனால் அடிக்கடி போர் ஏற்பட்டு வந்த காலத்தில் நெடு நாட்களுக்கு ஒரே தலைவர் நீடித்து தலைமை செலுத்தினர். அத்தகையோர் நாளடைவில் அரசராக மாறினர். எனினும் அவர்கள் குடி மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டனரேயன்றிப் பரம்பரையாக அவ்வுரிமையைப் பெறவில்லை.

படை வீரர்களின் சபை என்பது ஜெர்மானியர்களின் முக்கிய அரசியல் நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் அனுமதியின்றி

தானைத் தலைவர்கள் போர்களைத் தொடங்கவோ, அல்லது நிறுத்தவோ, எதிரிகளோடு சமாதானம் செய்து கொள்ளவோ முடியாது. வேற்றிடங்களுக்குச் சென்று கூட்டங் கூட்டமாகக் குடியேறும் செயல்களையும் அச்சபையே நிர்ணயித்தது. மற்றும் தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்கள் பற்றி எழுகின்ற வழக்குகளையும் அச் சபை தீர்த்து வைத்தது. பழைய வழக்காறுகளுக்கு உண்மையான பொருள் கூறும் முகத்தான் அது சில புதிய வழக்காறுகளை உண்டாக்கியது.

மக்களிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க குல நீதி மன்றங்கள் சில இருந்தன. ஆனால் அவைகளில் சட்டங்கள் எதுவும் விவாதிக்கப்படவில்லை. ஏனெனில் ஜெர்மானியர்களுக்கென வரையறுக்கப் பெற்ற சட்டங்கள் எதுவும் இல்லை. எனவே பொது அறிவுக்கேற்பவும், தொன்று தொட்டு வழங்கி வரும் மரபுகளுக்கேற்பவுமே வழக்குகளில் தீர்ப்பு வழங்கப் பட்டது. நீதி மன்றத்தில் வழக்கு தொடுப்பவர் யாரோ, அவர் தான் குற்றவாளியை மன்றத்தின் முன் கொணர்ந்து நிறுத்த வேண்டும். அங்ஙனம் நிறுத்தப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் அவரையே சாரும். சத்தியம் செய்தல், (Oaths) கடுஞ்சோதனை முறைகளைக் கையாளல் (Ordeals) இவைகளின் மூலமே குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கைப்பற்றல், நீரில் அமுத்துதல் போன்ற சோதனை முறைகள் கையாளப்பட்டன. அச்சோதனையில் வெற்றி பெற்றாலன்றி ஒருவன் தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தினின்றும் தப்பிக்க இயலாது. கடவுளின் விருப்பப்படியே இச் சோதனைகளின் விளைவு ஏற்படுமென நம்பப்பட்டது. வழக்குகளில் வழங்கப் பட்ட தீர்ப்புகளை அமுல் நடத்திக் கொள்வதும், வழக்குரைத்தவன் பொறுப்பேயாகும். நீதிபதிகளால் பணிக்கப் பெற்ற அபராதத் தொகையை அவனே தான் எதிரியிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும். இங்ஙனம் ஜெர்மானியர்களிடையே நியாயம் மிகப் பண்டைய முறையிலேயே வழங்கப் பட்டது.

## இடைக்கால நாகரிகத்தில் ஜெர்மானியப் பண்பாட்டின் சாயை

ஜெர்மானியர்களை ரோமானியர்களும் ஏனையோரும் காட்டு மிராண்டிகள் என அழைத்தனரேனும் அவர்கள் தமக்கேயுரிய ஒரு சில பண்பாடுகளைக் கொண்டிருந்தனர் என்பதில்

ஐயமில்லை. அவற்றின் செல்வாக்கை, நாம் இடைக்கால நாகரிகத்தில் பெரிதும் காண்கிறோம்.

சட்டம் என்பது தனியொரு அரசனுல் ஏற்படுத்தப்படக் கூடியதல்ல என்றும், மக்களிடையே தொன்று தொட்டு வருகின்ற பழக்கங்கள் மரபுகள் ஆகியவற்றினின்றும் வடித்தெடுக்கப் படுவதே சட்டம் என்றும் இடைக்காலத்து ஏற்பட்ட சித்தாந்தம் ஜெர்மானியர்களிடமிருந்து பெறப்பட்டதேயாம். மற்றும் சட்ட உரிமை என்பது மனிதனது உடைமை என்பதும் அது ஒருவன் எங்கு சென்ருலும் செல்லுபடியாகுமென்பதும், ஜெர்மானியக் கொள்கையேயாகும். ரோமானியரின் கருத்துப்படி சட்டங்கள் இடத்துக்கிடம் மாறத்தக்கன. அதன்படி ஒரே மனிதன் வெவ்வெறிடங்களில் வெவ்வேறு வகையான சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலையிலிருந்தான். ஆள்வோருக்கும் ஆளப் படுவோருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் நிலவ வேண்டுமென்பதும், இரு சாரார்க்கும் ஒரு சில உரிமைகளும் அதே சமயம் கடமை களும் இருக்க வேண்டுமென்பதும் இடைக்கால நிலமானிய முறையின் பொதுப் பண்பாகும். இத்தகைய தொடர்பு ஜெர்மானியப் படைத் தலைவர்களுக்கும் வீரர்களிடையே நிலவிய உறவு முறையைப் பின்பற்றி ஏற்பட்ட தொன்றேயாம். ஜெர்மானியப் படைவீரன் ஒவ்வொருவனும், தனது தலைவனுக்கு வாழ்நாளெல்லாம் மாரு விசுவாசம் பூண்பதாக உறுதிமொழி எடுத்துக் கொள்வது வழக்கம். அதற்குமாருக வீரனை வாழ் நாளெல்லாம் காப்பாற்றுவதாகத் தலைவன் வாக்குறுதி அளிப்பான். இதே போன்று தான் பிற்காலத்தெழுந்த நில மானிய முறையிலும் (Feudalism) மானியதாரர்கள் (Vassals) தமது பிரபுக்களின் முன் மண்டியிட்டு விசுவாச உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. அவ்விருவருக்கு மிடையே இருந்த கௌரவமான உறவு முறை காமிடாடஸ் (Comitatus) என்ற ஜெர்மானியப் படைவீரர் கூட்டத்தில் தலைவனுக்கும் வீரர்களுக்குமிடையே விளங்கிய உறவு முறையைப் பின்பற்றி ஏற்பட்டதே எனலாம். ஜெர்மானியர்களின் தலைவர் கள், குடிமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் போன்றே இடைக்கால அரசர்களும் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஜெர்மானிய நீதிமன்றங்களில் கடைப்பிடிக்கப்பட்ட கடுஞ் சோதனை முறைகள் இடைக்கால நிலமானிய நீதிமன்றங் களில் தொடர்ந்து வழக்காற்றிலிருந்ததை அறிகிறோம். இங்ஙனம் இடைக்கால நாகரிகத்தில் ஜெர்மானியப் பண்பாட்டின் அடிச் சுவடுகள் பல அமைந்திருப்பதை நாம் எளிதில் காணலாம்.

## முந்திய இடைக்கால ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார வளர்ச்சி

**இதாலி :** ரோமானியப் பேரரசர்களின் ஆட்சி முடிவுற்ற உடன், ஜெர்மானியத் தலைவரான ஓடோவகார் (Odovacar) என்பார் இதாலியன் மன்னரென முடி சூட்டிக் கொண்டார். ஆனால் கி. பி. 493-இல் ஆஸ்ட்ரகாத்துகள் (Ostrogoths) என்ற ஜெர்மானிய வகுப்பினர் ரோமைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களின் தலைவரான தியோடரிக் (Theodoric) என்பார் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து நற்பெயர் பெற்றார். வியாபாரத்தையும், விவசாயத்தையும் நன்கு பேணி வளர்த்தார்; பாதைகளையும் பழைய மாளிகைகளையும் செப்பனிட்டார்; கல்வியையும் கலைகளையும் ஓம்பினார்; பல்வேறு சமயப் பிரிவினர்க்கும் தொழுகைச் சுதந்திரம் அளித்தார். இவ்வளவு நன்மைகளைச் செய்த அவர் தமது அந்திய காலத்தே ஒரு கொடுங்கோலராக மாறினார். அவருடைய நண்பர்கள் சிலர் ரோமானியர்களோடு சேர்ந்துகொண்டு அவருக்கெதிராகச் சதி செய்வதாகச் சந்தேகப் பட்டதே அதற்குக் காரணமாகும். இவ்வையப்பாட்டின் விளைவாக அவர் பலரை ஈவிரக்கமின்றிக் கொன்றார். அவர்களில் போயதியஸ் (Boethius) என்ற தத்துவஞானியும் ஒருவராவார். அவருக்குப்பின் கான்ஸ்டாண்டி நோபிலில் அமையப்பெற்ற கீழை ரோமப் பேரரசுக்கும், ஜெர்மானியப் பேரரசுக்கும் ஆஸ்ட்ரகாத்துகள் பலம்முற்றும் ஒடுங்கியது (கி. பி. 552) ஓயாத போராட்டம் ஏற்பட்டது. அதனால் நலிவடைந்த இதாலியை லம்பார்டுகள் (Lombards) என்ற முரட்டு வகுப்பினர் கி. பி. 568 இல் கைப்பற்றினர். கி. பி. எட்டாம் நூற்றாண்டில், சார்லிமேன் என்ற பேரரசர் இதாலியைக் கைப்பற்றிய வரை அந் நாட்டை லம்பார்டுகளே ஆண்டனர்.

**பிரான்ஸ் :** கி. பி. 481-இல் குளோவிஸ் (Clovis) என்ற வாலிபர், ரைன் நதிக்கரையில் வாழ்ந்து வந்த பிராங்குகள் (Franks) என்ற ஜெர்மானியக் குலம் ஒன்றின் அரசராக முடி சூட்டிக் கொண்டார். அவர் ஒரு சிறந்த தளகர்த்தர். எனவே, இருபது ஆண்டுகள் ஓயாது போர்புரிந்து தற்போது பிரான்ஸ் என்று அழைக்கப்படுகிற பிரதேசத்தின் பெரும் பகுதியையும், ஜெர்மனியின் சில பகுதிகளையும் வென்றார். கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதன் மூலம் போப்பாண்டவரது ஆதரவையும் கிறிஸ்தவ குருமார்களின் ஒத்துழைப்பையும் பெற்றார். அவரால் தோற்று விக்கப்பட்ட மெரோவிங்கிய அரச பரம்பரையானது (Merovingian dynasty) பிரான்ஸை கி. பி. 751 வரை ஆண்டது.

குளோவிஸின் வழித் தோன்றல்கள், மேலும் பல வெற்றிகளைப் பெற்று நாட்டை விரிவாக்கினர். திருச்சபையையும் (Church) அவர்கள் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பிரான்ஸ் நலியத் தொடங்கியது. நாட்டை ஆண்ட மன்னர்கள் பலமற்றவர்களாயிருந்தனர். எனவே அவர்களது கீழதிகாரிகளான அரண்மனை மேயர்கள் (Mayors of the palace) எல்லா அதிகாரங்களையும் தாமே செலுத்த ஆரம்பித்தனர். நாளடைவில் அம்மேயர்களே ஆட்சியைக் கைப் பற்றிக் கொண்டனர்.

அரண்மனை மேயர்களில் ஒருவரான சார்லஸ் மார்டல் (Charles Martel) என்பார் ஒரு மாபெரும் படைவீரர். அவர் பிரான்ஸைப் படை எடுத்த மூர்களை (Moors) டூர்ஸ் (Tours) எனும் போர்க்களத்தில் முறியடித்தார். எனினும் அவர் தன்னை அரசர் என அழைத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவரது மகனான பெபின் (Pepin) என்பார் கி. பி. 751-இல் பிராங்குகளின் மன்னர் என தம்மை அழைத்துக் கொண்டார். இங்ஙனம் அவர் கெரோலிங்கிய ராஜ பரம்பரைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து, ராஜ வம்சத்தைத் தோற்றுவித்தார்.

கெரோலிங்கிய வம்சத்தவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் சார்லமேன் (Charlemagne) என்பவராவார். அவர் காலத்தே பிரான்ஸ் பெரிதும் பலமடைந்தது. நாட்டின் ஒற்றுமைக்கு உலைவைத்துக் கொண்டிருந்த கும்பல்களை ஈவிரக்கமின்றி அவர் ஒடுக்கினார். அரண்மனை மேயர் பதவியை ஒழித்துவிட்டுத் தமது ஆணைக்குக் கட்டுப்படக் கூடிய அதிகாரிகளை நியமித்தார். நாட்டுப்புறங்களில் தனியரசு செலுத்தி வந்த டியூக்குகளை (Dukes) ஒழித்து விட்டு, கவுண்டுகள் (Counts) எனும் கீழ்ப்படிதலுள்ள அதிகாரிகளை நியமித்தார். ஒற்றர்களை நாடெங்கும் அனுப்பி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவைகளைப் போக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். மிஸ்ஸி டாமினிகி (Missi Dominici) எனும் அவ்வரச தூதர்கள் சென்ற இடமெல்லாம் நீதிமன்றங்களை நடத்தி தீங்கிழைக்கப் பட்டோர்க்கு முறை செய்தனர். மக்களை ஒறுத்த தல அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கினர். தனிப்பட்ட பிரபுக்கள் நீதி வழங்கும் முறையை சார்லிமேன் ஒழித்தார். கவுண்டுகள் எனும் தல அதிகாரிகளுக்கு மட்டுமே நீதிவழங்கு முரிமையை அவர் நல்கினார். அவரது நீதிமன்றத்துக்கு வரும்படி அவர் ஆணை பிறப்பிக்கலாம். பற்றும் குற்றம் நடைபெற்ற இடத்திலிருந்து ஒரு சில பொதுவர்களை அழைக்கவும், குற்றவாளியைப் பற்றிய

தகவல்களைத் தரும்படி வற்புறுத்தவும் அவர் அதிகாரம் பெற்றிருந்தார். நடந்த நிகழ்ச்சி பற்றி ஊராரே சத்தியம் செய்து செய்தி உரைத்தனர். இத்தகையோரே பிற்காலத்து நார்மண்டியில், ஜூரிகள் அல்லது தீர்ப்புச் சான்றுளர்கள் (Jury) எனப்பட்டனர். நார் மண்டியிலிருந்து ஜூரி முறை இங்கிலாந்துக்குப் பரவியது.

சார்லமேன் ஒரு பலம் பொருந்திய தளகர்த்தராய் விளங்கினர். ஏறக்குறைய 54 முறை ஒரு போர் முரசு கொட்டிப் புறப்பட்டார். இடைவிடாது போரிட்டதன் விளைவாக மத்திய ஐரோப்பா, மத்திய இதாலி, வட இதாலி ஆகிய பகுதிகளை வென்று தமது நாட்டோடு சேர்த்தார், அவரது ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்தார் படுகொலை செய்யப்பட்டனர். சான்றாக அவரை எதிர்த்த சாக்ஸனியர்களில் (Saxons) 45,000 பேர் ஒரே மூச்சில் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவ சமயத்தில் சேருமாறு சாக்ஸனியர்களைத் தூண்டவே அத்தகைய கடும் நடவடிக்கையை எடுத்ததாக சார்லிமேன் கூறிக்கொண்டார். மதத்தைப் பரப்புதற்காகவே போரிலீடுபடுவதாக அவர் அடிக்கடி உரைப்பது வழக்கம்.

கி.பி. 799 இல் போப்பாண்டவர் மூன்றாம் லியோ பல துன்பங்களுக்கு ஆளானார். அவரது கொடுங்கோன்மையைத் தாங்க முடியாத அவரது குடிமக்கள் கிளர்ந்தெழுந்து கலகம் விளைத்து அவரை ரோம்நகரை விட்டே துரத்தி விட்டனர்; அங்ஙனம் துரத்தப்பட்ட போப்பாண்டவர் சார்லமேனிடம் நேரே சென்று சரணாகதியடைந்தார். சார்லமேன் தமது படை பலத்தைக் கொண்டு கலகக்காரர்களைச் அடக்கிப் போப்பாண்டவரை மீண்டும் அரியணையில் அமர்த்தினர். இவ்வுதவிக்குக் கைம்மாறாகப் போப்பாண்டவர் அவரை ரோமுக்கு அழைத்துத் தனது கரங்களாலேயே முடிசூட்டினர். ''இறைவனால் முடிசூட்டப்பட்ட அகஸ்டஸ் என்ற ரோமானியப் பேரரசர் 'அமைதிக் காவலர்' என்ற பட்டத்தையும் வழங்கினர். சார்லஸ் இக் கௌரவத்தை எதிர்பார்க்கவில்லை. எனவே சற்று திகைப்படைந்து விட்டார். போப்பாண்டவரால் முடிசூட்டப் பட்டதால், தான் அவருக்கு உட்பட்டவர் என்று பொருள் படுமோ என்றெண்ணி அவர் மனம் புழுங்கலானார். தனது அதிகாரம் போப்புக்கு உட்பட்டதல்ல என்ற எண்ணங்கொண்ட அவர், சமயசம்பந்தமான காரியங்களில் அவர் சுயேச்சையாக நடந்து கொண்டார். சமயச் சட்டங்களை அவரே ஆக்கினர். சமய அதிகாரிகளை அவரே நியமித்தார். போப்பாண்டவர் அவற்றுக்கு ஒப்புதல் வழங்கினர்.

சார்லஸால் ஏற்படுத்தப்பட்ட பேரரசு புதியதொன்ருகக் கருதப் படவில்லை . பழைய ரோமானியப் பேரரசு மீண்டும் உயிர்ப்பிக்கப் பட்டதாகவே பலரும் கருதினர். கிழக்கே கான்ஸ் டாண்டி நோபிலில் ரோமானியப் பேரரசு தொடர்ந்து நிலவி வந்ததெனினும் அதற்கு எதிராகப் பழைய ரோமானியப் பேரரசு மீண்டும் ஏற்பட்டதாகவே அனைவரும் நம்பினர். ரோமானியக் கீழைப் பேரரசுக்கும், மேலைப் பேரரசுக்கு மிருந்த இடைவெளி இதனுல் அகலமுற்றது. மற்றும் பேரரசர்கள், போப்பாண்ட வருக்குச் சற்று தாழ்ந்தவர்களே என்ற எண்ணம் ஏற்படவும் மேற்கண்ட முடிசூட்டு விழா வழி வகுத்தது. அரசர்களுக்கும் போப் பாண்டவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிற்காலப் போராட்டத்திற்கு இந்நிகழ்ச்சி வித்திட்டது.

**இங்கிலாந்து :** இடைக்காலத் தொடக்கத்தில் இங்கிலாந்தை ரோமானியர்களே ஆண்டு வந்தனர். ஆனுல் இதாலியில் ஏற் பட்ட தொல்லைகள் காரணமாக அவர்கள் விரைவிலேயே நாட்டை விட்டகன்றனர். அதன்பின் ஜெர்மானிய முரட்டு வகுப்பினரான, சாக்ஸன்கள், ஆங்கில்கள், ஜூட்டுகள் ஆகி யோர் இங்கிலாந்தைப் படையெடுத்து நார்த்தம்பிரியா, கென்ட், எஸ்ஸெக்ஸ், ஸஸ்ஸெக்ஸ், வெஸ்ஸெக்ஸ், மெர்ஸியா, ஈஸ்ட் ஆங்கிலியா, முதலிய இடங்களில் குடியேறி சிறு சிறு இராஜ்யங்களை ஏற்படுத்தினர். 9-ஆம் நூற்ருண்டில் டேனி யர்கள் (Danes) இங்கிலாந்தைப் படை எடுத்துக் கைப்பற்ற முயன்றனர். தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்த ஜெர்மானியக் குலத்தவர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆல்பிரட் (Alfred) எனும் வெஸெக்ஸ் நாட்டு மன்னரின் தலைமையில் போரிட்டு டேனியரை நாட்டை விட்டு விரட்டினர். ஆல்பிரட் படைகளைச் சீர்திருத்தியும், சட்டங்களை ஆக்கியும், கல்விக் கூடங்களை அமைத்தும் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டார். கடற் படைக்கு வித்திட்டார், ஆனுல் அவருக்குப் பின் வந்த அரசர்கள் மிகவும் பலஹீனமானவர்கள். எனவே டேனிய அரசன் கான்யூட் (Canute) இங்கிலாந்தை வென்று தமது ஆட்சியின் கீழ்கொண்டு வந்தார், ஆனுல் கி. பி. 1035க்குப் பின் சாக்ஸனியர்கள் மீண்டும் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றினர், ஆனுல் விரை விலேயே அவர்தம் ஆட்சி வீழ்ச்சியுற்றது. எட்வர்ட் என்ற மன்னரது மரணத்துக்குப் பின் நார்மண்டியின் கோமகனுன வெற்றி வீரர் வில்லியம் என்பார் இங்கிலாந்தின் மன்னன் ஹெரால்டை (Herald) வென்ருர். அதன்பின் இங்கிலாந்தில் பலமுள்ள ஒரு தேசிய அரசு ஏற்பட்டது.

## பொருளாதார நிலை

**இதாலி :** இடைக்காலத்தின் முற்பகுதியில் இதாலியின் பொருளாதாரம் பெரிதும் சீரழிந்த நிலையையடைந்தது. வாணிபமும் தொழிலும் இருந்த இடம் தெரியவில்லை. விவசாயத்திலும் மந்தம் ஏற்பட்டது. மக்கள் சத்துள்ள உணவு கிடைக்காமல் வாடினர். அதனல் நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையலாயிற்று அதைக் கண்ட மன்னர்கள் நாற்பது வயதுக்குட்பட்ட பெண்டிர் எவரும் கன்னிகாமடத்தில் சேரக்கூடாது எனச் சட்டம் இயற்றினர். தியோடரிக் (Theoderic) எனும் மன்னர் வேளாண்மைக்கும் வாணிபத்துக்கும் ஊக்கமளித்தார். எனினும் நாட்டில் வறுமை தாண்டவமாடியது. பல குடியானவர்கள் தமது நிலங்களைப் பெரிய பிரபுக்களுக்கு விற்றுவிட்டு உட்குடிகளாகவும், அடிமைகளாகவும் மாறினர். விரைவிலேயே நிலங்கள் ஒரு சிலரிடம் அபரிமிதமாக செறிந்தன. நிலப்பிரபுக்கள் சிலர்; நிலமில்லா அடிமைகள் பலர், என்ற நிலை ஏற்பட்டது. மன்னர், பிரபுக்களின் தயவில் வாழ்ந்தபடியால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை, தியோடரிக் காலத்துக்குப் பின் நிலைமை இன்னும் மோசமடைந்தது. ஜஸ்டினியன் என்ற கிழை ரோமானியப் பேரரசர் மேலைப் பேரரசை வெல்ல எத்தனித்ததிலிருந்து ஓயாத போர்கள் இதாலியை அலைக்கலைத்தன. உழவர்கள் வேளாண்மையை விட்டுப் போரில் ஈடுபட்டனர். தொழிலாளிகள் பலர் தொழில் செய்ய முடியாமல் தவித்தனர். பஞ்சங்களும், நோய்களும் அவ்வப்போது தோன்றின. மக்கள் பட்டினியால் மடிந்தனர். ஓநாய்கள் காட்டை விட்டு நாட்டுக்குள் புகுந்து பிணங்களைத் தேடியலைந்தன. பஞ்சத்தின் கொடுமையால் மனிதன் மனிதனையே கொன்று தின்னும் நிலைக்கு வந்து விட்டான்; ஒரு சில நகரங்களில் மட்டுமே நாகரிகமான வாழ்க்கை மக்களிடையே காணப்பட்டது. ஏனைய இடங்களில் எல்லாம் மக்கள் காட்டுமிராண்டிகள் போலும், கேவலம் மிருகங்கள் போலும் வாழ்க்கை நடத்தினர்.

### பிரான்ஸ் நிலை

இதாலியில் இருந்தது போன்றே, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும், சிறப்பாகப் பிரான்ஸிலும் பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டது. ஒரு காலத்தே வியாபாரத்தில் பெரிதும் சிறப்புற்று விளங்கிய தென் பிரான்ஸில் இடைக்காலத்தின் தொடக்கத்தில் வறுமை தாண்டவமாடியது. வாணிபம் சுருங்கியது. தொழில்கள் நசித்தன. தொழில் நிறைந்த மார்சேல்ஸ் பட்டி

னத்தில் தெருக்கள் வெரிச்சோடிக் கிடந்தன. கடை கண்ணிகள் இருந்த இடங்களில் புல்லும் புதரும் மூடிக் கிடந்தன. உள் நாட்டுப் பட்டணங்கள் ஒரு சிலவற்றுள் மட்டுமே வாணிபம் ஓரளவு நடைபெற்று வந்தது. அதுவும் யூதர்கள் சிரியர்கள் போன்ற அந்நிய நாட்டினரே வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதாலியில் ஏற்பட்டது போன்றே பிரான்ஸிலும் நிலங்கள் ஒரு சிலரிடையே செறிந்தன. நிலமற்ற உட்குடிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றது. நிலப் பிரபுக்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் வளர்ந்தன. பிற்காலத்து ஏற்பட்ட நிலமானிய முறைக் கொடுமைகளுக்கு வித்தூன்றப்பட்டது. மெரோவிங்கிய, கெரோலிங்கிய மன்னர்கள் கடைப்பிடித்த கொள்கை நிலப் பிரபுத்துவத்தை மேன்மேலும் வளர்த்தது. ஏனெனில் அவர்கள் தமக்குப் பணி செய்த ஊழியர்களுக்கு நிலங்களைப் பரிசாக வழங்கினர். பெபின், சார்லமேன் போன்ற மன்னர்கள் திருச்சபையின் நிலங்களைப் பறிமுதல் செய்து, தமது நண்பர்களுக்கு இனமாக வழங்கினர். இராணுவ சேவைக்கு நிலம் பரிசாக வழங்கப்பட்டது. மன்னரின் அதிகாரிகளுடைய பிடியினின்றும் ஒரு சிலருக்கு விடுதலையளிக்கப் பட்டது. முதலில் பிஷப்புகளுக்கும் மதகுருமார்களுக்கும் அளிக்கப்பட்ட இச்சலுகையானது நிலப்பிரபுக்களுக்கும் நாளடைவில் வழங்கப்பட்டது. எனவே நிலப் பிரபுக்கள் ஏறக்குறைய சுயேச்சை நிலையை அடைந்தனர். நாட்டில் குழப்பமும், கலவரமும், கொலையும் கொள்ளையும் அதிகரித்தது. அதனால் வெகுண்ட பல சாதாரணமான குடியானவர்கள் தமது நிலங்களைப் பிரபுக்களிடம் கொடுத்துவிட்டு அவர்தம் ஆதரவைப் பெற்ற மானியதாரர்களாக மாறினர். இங்ஙனம் பல காரணங்களால் நாட்டில் நிலம் உடையோர் சிலரும், நிலம் இல்லார் பலருமாக இருக்கின்ற நிலை ஏற்பட்டது. சமுதாயத்தில் செல்வாக்கு சிறிதுமின்றி ஏறக்குறைய அடிமைகள் போல் வாழ்க்கை நடத்திய உழவர் வர்க்கம் என்ற இருபெரும் வர்க்கங்கள் தோன்றி நிலைபெறலாயின.

## முந்திய இடைக்காலத்தில் அறிவுத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

இடைக்காலத்தின் முற்பகுதியில் மக்களிடையே அறிவு வளர்ச்சி மிகவும் குன்றிவிட்டது. ஏனென்று கேட்காமல் எதையும் நம்பும் பழக்கம் வளர்ந்தது. சொந்தமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறன் குறைந்தது ஆக்கச் சிந்தனையும், படைப்

பாற்றலாலும் மிக்கவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. உலகியல் அறிவுத் துறையிலும், மெய்யறிவுத் துறையிலும் ஈடுபட்டோர் ஒரு சிலரேயாவர். மெய்யறிஞர் என்று கூறிக் கொண்டவர்களும் சமயத்தை வளர்க்கவே பாடுபட்டனர். அறிவுக்கு ஒத்துவராத புராணங்களுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் அவர்கள் அறிவுக்கேற்ற விளக்கங்களைத் தருவதிலேயே காலத்தைக் கடத்தினர். எனவே சிந்தனை வளர்ச்சியில் ஒருவித மந்தநிலை இக்காலத்து ஏற்பட்டது. எனினும் ஒரு சில பாதிரிகள் பண்டைய கிரேக்க ரோமானிய இலக்கியங்களை ஊன்றிப் படித்தனர். அவர்களிடையே பகுத்தறிவின் மலர்ச்சி பெரிதும் காணப்பட்டது.

### தெர்த்துல்லியன் (Tertullian)

இடைக்காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்த அறிவாளிகள் இருவகைப்படுவர். ஒருவகையினர் நம்பிக்கை வாதிகள். மற்றொரு வகையினர் பகுத்தறிவு வாதிகள். நம்பிக்கை வாதிகள். வேதவாக்குக்கு மறுவாக்கு இல்லை என்பதில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள். அவர்கள் எதற்கெடுத்தாலும் விவிலிய நூல் வாசகங்களையே மேற்கோளாகக் காட்டுவர். அவற்றுக்கு மீறி வாதம் செய்ய மனிதனுக்குத் தகுதி இல்லை என்பது அவர்களின் கருத்தாகும். பகுத்தறிவு வாதிகளும், புனித நூல்களில் காணப்படும் உண்மைகளை அப்படியே நம்பினர் என்றாலும், அவ்வுண்மைகளுக்கு அவர்கள் அறிவின் பாற்பட்ட விளக்கங்களைக் கூறினர். நம்பிக்கை அறிவின் அடிப்படையில் அமைய வேண்டுமென்பதே அவர் தம் கருத்தாகும்.

நம்பிக்கை வாதிகளுள் தலைசிறந்தவர் கார்த்தேஜ் நகரப் பாதிரியான தெர்த்துல்லியன் என்போராவர். மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர் வாழ்ந்தார். கிறிஸ்வத சமயம் என்பது ஒரு சில மாற்ற இயலாத புனிதமான சட்டங்களைக் கொண்டது என்றும் அவற்றை மனிதன் அப்படியே நம்ப வேண்டுமேயன்றி ஏனென்று கேட்கக் கூடாது என்றும் அவர் நம்பினார். இறைவன் மனிதர்களுக்கெல்லாம் மேம்பட்டவர். அவரது நெறி முறைகளையே பெரியோர்கள் மனித நூல்களில் வெளியிட்டுள்ளனர். எனவே அவற்றைக் குறைகூறும் தகுதி மனிதர்களுக்கில்லை. மனித அறிவு வரையறைக்குட்பட்டது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் அது போக முடியாது. எனவே தெய்வீகம் பொருந்திய இயேசுநாதரின் மொழிகளையும், தீர்க்கதரசிகளின் சுவிசேஷங்களையும் மனிதன் நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. புனிதநூற் கருத்துகளைக் குறைகூறவோ ஆராயவோ

முற்படுவது வடிகட்டிய முட்டாள்தனமேயன்றி வேறன்று என்பது அவரது திடமான நம்பிக்கையாகும். வேதம், சுவிசேஷம் இவற்றில் காணப்படும் உண்மைக்கு மாறுனது எதுவும் இல்லை என்பதும், மனித அறிவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அது புரியாமலிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது உயர்ந்தது என்பதும் அவரது கோட்பாடாகும்.

### அர்ச். ஆம்புரோஸ், அர்ச். ஜெரோம், கிரிகரி

சமயக் கோட்பாடுகளை அறிவைக் கொண்டு ஆராயக் கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றிய பெரியோர் பலர். கி. பி. 4-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மிலான் நகர பிஷப்பான அர்ச். ஆம்புரோஸ் என்பாரும் அவரது சமகாலத்தவரான அர்ச். ஜெரோம் என்பாரும் அவர்களுள் மிகச் சிறந்தவர்களாவர். தெர்த்துல்லியனைப் போன்று, அறிவாராய்ச்சியை அடியோடு அவர்கள் வெறுக்கவில்லை எனினும், புனிதக் கருத்துகளுக்கு எதிர் மாற்றம் கூறக் கூடாது என்பதை அன்னுர் ஏற்றுக் கொண்டனர். ஆறும் நூற்றுண்டில் வாழ்ந்த போப்பாண்டவரான முதலாம் கிரிகரி (Pope Gregory I) என்பார் மேற்கண்ட கொள்கையை நம்பியதோடு மட்டுமின்றி நடைமுறையிலும் கடைப்பிடித்தவர். பெரிய செல்வந்தரின் வீட்டில் பிறந்த அவர், கிறிஸ்துவின் போதனையின்படி ஏழ்மையை வலிய மேற்கொண்டார்; தமது செல்வத்தை எல்லாம் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தனது தந்தையின் மாளிகையை மடாலயமாக மாற்றி விட்டார். பாவங்களைப் போக்கிக் கொள்ள கடுமையான தபசுகளில் ஈடு பட்டார். நற்குணங்கள் நிரம்பிய சான்றோர்கள் கூட தாம் செய்த சிறு குற்றங்களுக்காக அழறில் (Purgatory) இடர்ப்பட வேண்டுமென்றும், அவ்விதம் தூய்மையடையப் பெற்றோரே பரலோகத்தில் புகமுடியும் என்றும் அவர் போதித்தார். கோயில் குருக்களின் ஸ்பரிசத்தின் மூலமாக புனிதப் பொருள்களான ரொட்டியும் திராட்சை ரசமும் இயேசுவின் சதையும் இரத்த மூலமாக மாறுகிறது என்பதை அவர் முழு மனதுடன் நம்பினர்.

### கிளமெண்ட், ஓரிஜென் (Clement, Origen)

கி. பி. மூன்றும் நூற்றுண்டில் அலெக்ஸாந்திரியாவில் வாழ்ந்த கிளமெண்ட் என்பாரும், ஓரிஜென் என்பாரும் பகுத்தறிவு வாதிகளில் சிறந்தவர்களாவர். கிரேக்க தத்துவஞானிகளின் கருத்துகளை அவர்கள் பாராட்டியதோடு, விவிலிய நூற் கருத்துகளுக்கு அவை அடிப்படையானவை என்றும் கூறினர்கள். இறைவன் சர்வவல்லமை பொருந்தியவர் என்பதையும் அவனன்றி அணுவும் அசையாது என்ற கொள்கையையும் அவர் மறுத்தார்.

மனிதன் தனது சுய இச்சையின்படியே தனது நில உலக வாழ்க்கையை வகுத்துக் கொள்கிறுன் என்றும், கடவுள் எதையும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் படைக்கவில்லே என்றும், சிருஷ்டி என்பது ஓயாமல், நடைபெறுவதொன்றென்றும், பழையன கழி தலும் புதியன புகுதலுமே சிருஷ்டி என்றும் அவர் கூறினுர். உலக இன்பங்கங்களேத் துறக்க வேண்டுமென்றும், திருமணம் செய்து கொள்வது சிற்றின்பத்துக்கு அடிமையாவதன்றி வேறல்ல என்றும் கூறிய அறிஞர்களே அவர் மறுத்தார். திருமணம் செய்து கொண்டு குழந்தைகளேப் பெறுவது மனிதன் முழுமையை அடைவதற்கும், சமுதாயம் நலமடைவதற்கும் மிக இன்றியமை யாததென்றும் அவர் கட்டுரைத்தார். மற்றும் நரகத்தில் சில உயிர்கள் எக்காலத்தும் உழலவேண்டுமென்ற கொள்கையையும் அவர்கள் கண்டித்தனர்; நரகத்தில் சில காலம் உழன்ற பின்னர் எல்லோருக்குமே விமோசனமுண்டு என்றும், அப்படி விடுதலே இல்லே என்ருல், கடவுள் கருணேவடிவமானவர் என்று கூறுவதில் பொருளே இல்லே எனவும் அவர் வாதாடினுர்.

### அர்ச் அகஸ்டின் (St. Augustine)

மேற் கூறிய இருவகைக் கருத்துகளுக்கும் இடைப்பட்ட ஒரு கொள்கையை உடையவர் அகஸ்டின் என்ற துறவியாவார். சமய உண்மைகள் கடவுளால் வெளியிடப்பட்டவை என்பதை அவர் நம்பினுர். எனினும் அந்நம்பிக்கை அறிவாராய்ச்சியின் விளேவாக ஏற்படவேண்டுமே யன்றி மூடத்தனமாயிருக்கக் கூடாது என அவர் பகர்ந்தார். கி. பி. 354-இல் அவர் கிரேக்க தந்தை யொருவருக்கும், கிறிஸ்தவத் தாய்க்கும் மகனுகப் பிறந்தார். இளவயதில் சிற்றின்பத்தில் அவர் அளவுக்குமீறி ஈடுபட்டார். திருமணம் செய்து கொண்ட பின்னும் கூட அவருக்குக் காமக் கிழத்தி ஒருத்தி ஏற்பட்டாள். 'கன்பெஷன்ஸ்' (Confessions) என்ற நூலில் அவர் தமது புலனின்ப வேட்கையை நன்கு புலப்படுத்துகின்ருர். கல்வி கேள்விகளில் அவர் நன்கு தேர்ச்சி பெற்ருர். 18-வது வயதிலேயே சிசரோவின் (Cicero) ஹார்டன் சியஸ் (Hortensius) என்ற நூலே நன்கு படித்திருந்தார். கிரேக்க சமயம், கிறிஸ்தவ சமயம், மெனிக்கியன் (Manichean) சமயம் போன்ற பல்வேறு சமயப் பிரிவுகளில் அவர் தேர்ச்சி பெற்ருர். எனினும் இறுதியில் ஆம்புரோஸ் என்ற பாதிரியாரின் செல்வாக்குக்கு உட்பட்டு அவர் கிறிஸ்தவசமயத்தைத் தழுவினுர்; கி. பி. 395-இல் அவர் வட ஆப்பிரிக்காவிலுள்ள ஹிப்போ நகரத்தின் பிஷப்பாக நியமனம் பெற்ருர். பிஷப்பாகவே இருந்து கி. பி. 430-இல் அவர் இறந்தார்.

அகஸ்டினுடைய சித்தாந்தம், அறிவுக்கும் நம்பிக்கைக்கும் பாலம் அமைக்க முயற்சிக்கிறது. இறைவனை அறிவதே மெய் யறிவு, மற்றதெல்லாம் பொய்யறிவு என்பது அவர் கருத்தாகும். அறிவுக்கு அறிவான கடவுளை அறிந்தால் மற்ற அறிவெல்லாம் தானுக வெளிச்சமாகும். அங்ஙனம் வெளிப்பட்டவையே புனித நூல்களில் (Scriptures) காணப்படும் கருத்துகளாகும். அவற்றை மனிதன் தனது சிற்றறிவுக் கெட்டியவரை ஆராய்ந்து அதன் பின் நம்ப வேண்டும், அறிவாராய்ச்சியினுல் நம்பிக்கை பலப்பட வேண்டுமேயன்றி குறையக் கூடாது. இவ்வுலகத்தில் நடைபெறுவ தெல்லாம் இறைவனது திருவிளையாடலேயன்றி வேறல்ல. கடவுளின் விருப்பமானது மனிதரின் செயல்கள் மூலமாக எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைக் காட்டுவதே வரலாறு. மனிதர்களால் செய்யப்படும் எல்லாக் காரியங்களும் இறைவனின் விருப்பத்துக்கேற்பவே நடைபெறுகின்றன. எனவே மனிதனுக்கு சுய இச்சை (Free will) என்பது ஒன்றும் கிடையாது. நன்மை எது, தீமை எது என்பதை அறியும் திறன் மனிதனுக்கிருந்தாலும் தீமையை விடுத்து நன்மையைக் கடைப்பிடிக்கக் கூடிய ஊக்கத்தை அருள்பவர் கடவுளேயாவர். மன்பதைக் கூட்டத்தில் ஒரு சிலரை மட்டுமே அவர் நல்வழியில் நடக்கச் செய்கிறுர். அவர்களே இறைவனின் திருநகருக்குள் (City of God) இறந்த பின் செல்வர். ஏனையோர்கள், இறைவனருளின்மையால் தெரிந்து கொண்டே பாவக் குழியில் வீழ்பவர்கள். அவர்கள் இறந்த பின் நரகத்தில் சென்று இடர்ப்படுவதைத் தவிர வேறுவழியில்லை. இத்தகைய வாதங்கள் இடைக்காலத் திருச்சபையில் பெரிதும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. கத்தோலிக்கர்களும், பிராடஸ் டெண்டுகளும் அவரைப் போற்றினர்.

**போயதியஸ் (Boethius) (480—524 கி. பி.)**

முந்திய இடைக்காலத் தத்துவ ஞானிகளுள் போயதியஸ் என்பார் ஒரு சிறந்த அறிஞராவார். அவரது கருத்துகள் சுதந்திர மானவை. அவை கிறிஸ்தவ சமயத்தையோ, அன்றி கிரேக்க தத்துவத்தையோ சார்ந்தவையல்ல. கிறிஸ்துவைப் பற்றியோ திருச்சபையைப் பற்றியோ அவர் எதுவும் குறிப்பிடவில்லை. எனினும் அவரது கருத்துகள் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளையே பெரிதும் ஒத்திருந்தன. தியோடரிக் என்ற மன்னரின் முக்கிய ஆலோசகராக இருந்த அவர் நாளடைவில் அவரது பரம விரோதி யாக மாறி, அதன் விளைவாகச் சிறையிடப் பட்டுப் பின்னர் சிரச்சேதம் செய்யப்பட்டார். சிறையிலிருக்கும் போது அவரால் எழுதப்பட்ட தத்துவ நூல் கன்சலேஷன் ஆஃப் ஃபிலாசபி (Consolation of Philospphy) என்பதாகும். 'தத்துவ ஞானத்தால்

பெறப்படும் ஆறுதல்' என்ற பொருள் கொண்டது அந் நூலின் தலைப்பு. மனிதனுக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு, விதி என்றால் என்ன? தெய்வம் எவ்வாறு உலக காரியங்களில் தலையிடுகிறது என்பதை எல்லாம் அவர் அந் நூலில் விவரிக்கிறார். உலகம் நன்மை மயமானது என்றும், அதில் நாம் காணும் தீமை அனைத்தும் கற்பனையேயன்றி வேறல்ல என்பதும் அவரது கருத்தாகும். இந்துக்களின் கர்மாக் கொள்கையை அவர் நம்பியதாகத் தெரிகிறது. ஒழுக்கமுடையவன் உயர்வும் நன்மையுமடைவதும், அதற்குப் புறம்பாக நடப்பவன் தாழ்வும் தீமையும் அடைவதும் தடுக்க முடியாதது என்று அவர் கட்டுரைக்கிறார். அவரது கருத்துகள் கிரேக்க ஸ்டாயிக்குகள் கொள்கையை ஒத்தன. பல மொழிகளில் அவரது நூல் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

**இலக்கியம் :** இக்காலத்திய மக்கள், கிரேக்க, லத்தீன் மொழிகளைப் படிப்பதில் ஆர்வமற்றவர்களாய் விளங்கினர். எனவே பண்டைய இலக்கியங்கள் சற்றே நலிவுற்றன. 5-ஆம் நூற்றாண்டளவில் லத்தீன் மொழியில் பாண்டித்ய முடையவர்கள் ஒரு சிலரே ஐரோப்பாவில் இருந்தனர். கிரேக்க, லத்தீன் மொழிகள் மூலம் கல்வி கற்ற மதகுருமார்கள் கூட அவற்றின் இலக்கியங்களை வெறுத்தனர். ஒரு சிலர் கிறிஸ்தவ சமயத்தினை உள்ளபடியே அறிந்து கொள்ளவும், அதன் நுட்பங்களை ஆழங் காணவும் பயன்படும் என்பதற்காகப் பேகன் (Pagon) மொழிகளைக் கற்றனரேயன்றி, அதிலுள்ள இலக்கிய நயத்துக்காகவோ, கருத்தாழத்துக்காகவோ அல்ல. லத்தீன் மொழி மூலம் புனித நூல்களைக் கற்பதால் அவற்றின் புனிதத்வம் கெட்டு விடுவதாகக் கூட ஒரு சில பாதிரிமார்கள் நினைத்தனர். தெய்வீக ஆவேசம் பொருந்திய கருத்துகளை இலக்கணக் கட்டுத்திட்டங்களில் அடக்க முற்படுவது தகாத காரியம் என போப் கிரிகரி போன்றவர்கள் கூறினார்கள். எனவே லத்தீன் சொற்களோடு சுதேச மொழிச் சொற்களைக் கலந்து பலர் பேசவும் எழுதவும் செய்தனர். எனவே லத்தீன் மொழிப் படிப்பில் தூய்மையும் துல்லியமும் குறையலாயின. நாளடைவில் ஒரு சில லத்தீன் சொற்களை உட்கொண்டு சுதேச மொழிகள் உருவாயின. அம் மொழிகளில் வளமிக்க இலக்கியங்கள் பல தோன்றலாயின. பதின் மூன்றும் நூற்றாண்டளவில் சுதேச மொழி இலக்கியங்கள் பல ஐரோப்பாவில் வெளி வந்தன.

எட்டாம் நூற்றாண்டில் வெளிவந்த பியோவுல்ஃப் (Beowulf) எனும் காப்பியமானது அக்காலத்து சுதேச இலக்கியங்களுக்கு ஒரு

முன் மாதிரியாய் விளங்கியது. வட ஐரோப்பாவிலிருந்து வந்த ஜெர்மானிய முரட்டு வகுப்பினரின் வீரதீரச் செயல்களை அக்காப்பியம் நன்கு படம்பிடித்துக் காட்டுகிறது. பழைய ஆங்கிலக் கவிதைக்கு அது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். மற்றும் இடைக்காலத்தின் முற்பகுதியில் இங்கிலாந்தில் நிலவிய சமுதாய வாழ்க்கையைப் புலப்படுத்தவும் அது நமக்குப் பெரிதும் உதவுகிறது. கேட்மனின் பாட்டுகள் (Hymns of Caedmon) கையறுநிலைப் பாடல்கள் (Elegies) போன்ற பல ஆங்கிலப் பாடல்களும் அக்காலத்தே எழுந்தன. பண்டைய ஜெர்மானியக் காட்டுமிராண்டி வாழ்க்கையையே அவை நன்கு விவரிக்கின்றன. கி. பி. 5, 6-வது நூற்றுண்டுகளில் ஐரிஷ் மொழியில் பல புதிய இலக்கியங்கள் தோன்றின. நிலத்திலும் நீரிலும் அயர்லாந்தியர்கள் நிகழ்த்திய வீரதீரச் செயல்களை மிக உருக்கமாகப் பல புலவர்கள் பாடியுள்ளனர். சுதேச மொழி இலக்கிய வளர்ச்சிக்கு இக்கால ஐரிஷ் கவிதைகள் தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

**வரலாறு :** இலக்கியங்களேயன்றி வரலாற்று நூல்களும் பல இக்காலத்தே எழுந்தன. அர்ச். அகஸ்டின் என்பாரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரோசியஸ் (Orosius) என்ற ஸ்பானியப் பாதிரியார் 'செவன் புக்ஸ் எகெய்ன்ஸ்ட் தி பேகன்ஸ்' (Seven Books against the pagans) என்ற வரலாற்று நூலை எழுதி வெளியிட்டார். பேகன்களுக்கு எதிரான ஏழு நூல்கள் என்ற பொருள்பட்ட அது பண்டைய கிரேக்க, ரோமானிய வரலாற்றைச் சித்தரிக்கிறது. அந் நாகரிகங்களின் அழிவுக்குக் காரணம் மக்களின் கெட்ட நடத்தையும் கிறிஸ்தவ சமயத்தைப் பின் பற்றாததுமேயாம் என்று கூறுகின்றது. டூர்ஸ் நகரைச் சேர்ந்த பிஷப் கிரிகரி என்பார் எழுதிய 'ஹிஸ்டரி ஆப் தி ஃபிராங்க்ஸ்' (History of the Franks) என்ற வரலாற்று நூல் மிகப் புகழ் பெற்றது. குளோவிஸ் போன்ற பிராங்க் மன்னர்கள் செய்த அட்டூழியங்களை எல்லாம் அது நியாயமெனக் கூறுகிறது. கிறிஸ்தவ சமயத்தைக் காப்பதற்கென செய்யப்பட்ட கொலைகள் நியாயமானவை என்பது அவரது வாதமாகும். வரலாற்று நிகழ்ச்சிகள் தெய்வத்தின் விருப்பப்படி நடப்பதாகவே இந்நூல் கூறுகிறது. பீட் (Bede) என்பார் எழுதிய 'எதிக்லிசியேஸ் டிகல் ஹிஸ்டரி ஆப் தி இங்லிஷ் நேஷன்' (ஆங்கில நாட்டின் சமய வரலாறு 'Ecclesiastical History of the English Nation' என்ற அவ்வரலாற்று நூல் உலகப் பிரசித்தி பெற்றது. மிகக் கவனமாக ஆதாரங்களை சேகரித்து அவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூலில் உண்மை மிளிர்கிறது. நடக்கக்கூடாத நிகழ்ச்சிகளை

யும், காதால் கேட்ட கட்டுக் கதைகளையும், பொய் புரட்டுகளை யும் அவர் பச்சையாக எடுத்துக் கூறிவிடுகிறார்.

**கல்வி :** இக்காலத்தே கல்விக் கூடங்கள் பல எழுந்தன. மடாலயங்களே பள்ளிகளை நடத்தின. மன்னர் தியோடரிக்கின் முக்கிய செயலாளராயிருந்த காஸிடோரஸ் (Cassidorus) என்பார் அபூலியா (Apulia) எனுமிடத்திலிருந்த தமது தோட்டத்தில் ஒரு மடாலயத்தைத் தோற்றுவித்தார். அதில் கைப்பிரதிகளை எழுதும் பணியைத் துறவிகளுக்கு அளித்தார். அச்சுப்பொறி கண்டுபிடிக்கப் படாத அக்காலத்தில் அத்தகைய கைப்பிரதிகள் மக்களுக்கு அருமருந்தாய்த் திகழ்ந்தன. மற்றும் துறவிகள் ஏழுவகைப் பாடங்களில் பயிற்சி பெறவேண்டுமெனவும் அவர் வற்புறுத்தினார். இலக்கணம், அளவைநூல், சொல்லாட்சிக்கலை என்ற அடிப்படை அறிவும், எண் கணிதம், வரைபடக் கணிதம், வானியல், இசை என்ற கலைகளுமே அவ்வேழு பாடங்களாகும். சமயத்துறையில் சேவை செய்யவே மடாலயக் கல்வி உதவிற்று. தொழிற்பயிற்சி அங்கு அளிக்கப்படவில்லை. மற்றும் செல்வந்தர் களான ஒரு சிலருக்கே கல்வி அங்கு வழங்கப்பட்டது. பெரும் பான்மையான மக்கள் கல்விக் கண் இன்றியே வாழ்ந்தனர். யார்க், யாரோ போன்ற இடங்களில் இருந்த மடாலயக் கல்வி நிலையங்கள் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டன.

## முந்திய இடைக்கால நாகரிகங்கள் (Early middle ages)

| | மேற்கு ஐரோப்பா | பைசான்சியப் பேரரசு | சாரசனிக் பேரரசு |
|---|---|---|---|
| 300— | போப்பாண்டவர் பதவி தோன்றல் 50-300 கி. பி. ஜெர்மானியம் வெளியேற்றமும் படையெடுப்பும், 100-600 கி. பி.<br><br>ஆங்கில்ஸ், சாக்சனியர்கள் இங்கிலாந்தை படையெடுத்தல் 400-600 கி. பி.<br><br>தொழிலும் வாணிபமும் நசுக்கல் 400-800 கி. பி.<br><br>விசிகாத்துகள் ரோம் நகரை கைப்பற்றுதல், 410 கி. பி.<br><br>அகஸ்டின் பாதிரியார், சிட்டி ஆப் காட் (City of God) 413-426 கி. பி. | மடாலயமுறை ஏற்படல் 300 கி. பி.<br><br>நிக்காயே திருச்சபை மன்றம் 325 கி. பி, கான்ஸ்டான்டிநோபிள் தலைநகரமாகுதல், 330 கி.பி. | |

## முந்திய இடைக் காலம் (தொடர்ச்சி)

| | மேற்கு ஐரோப்பா | பைசான்சியப் பேரரசு | சாரசனிக் பேரரசு |
|---|---|---|---|
| | ஏழு வகை கலைகள் வளர்ச்சி 450 கி. பி. | மோனோபிசைட் இயக்கம் 450-565 கி.பி. | |
| | பிரான்சில் மெரோவிங்கிய வம்சத்தின் ஆட்சி 481-750 கி.பி. | | |
| 500— | ஆஸ்ட்ரோகாத்திக்குகள் இத்தாலியை ஆட்சி புரிதல், 493-532 கி. பி. அறிஞர் பொயித்தியஸ் | ஜஸ்டினியன் பேரரசு 527-565 கி. பி. | முகமதுநபி 570-632 கி. பி. |
| | | | ஹுஜீரா சகாப்தம், 622 கி. பி. |
| | இத்தாலியை லம்பார்டுகள் படையெடுத்தல் 568 கி. பி. | ரோமானிய சட்டத் தொகுதி மீண்டும் தொடுக்கப்படல் 527-535 கி. பி. | மெக்கா கைப்பற்றப்படல் 630 கி.பி. |
| | டூர்ஸ் போர்க்களம், 732 கி. பி. | சான்டா சோபியா மாதாக் கோயில் எழுப்பப்படல், 523-537, பைசான் சியர்கள் இத்தாலியைக் கைப்பற்றல் 535-552 கி. பி. | பாரசீகம், எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, வட ஆப்பிரிக்கா, ஸ்பெயின் முதலிய நாடுகளை முஸ்லிம்கள் கைப்பற்றல் 332-732 கி. பி. |
| | கரோலிங்கிய வம்சத்தின் ஆட்சி, 751-877 கி. பி. | | |

## முந்திய இடைக் காலம் (தொடர்ச்சி)

| | மேற்கு ஐரோப்பா | பைசான்சியப் பேரரசு | சாரசனிக் பேரரசு |
|---|---|---|---|
| 800— | வெர்டுன் உடன்படிக்கை 843 கி. பி.<br>தூய ரோமப்பேரரசு 962 கி.பி, நிலமானிய முறை வளர்ச்சி 800-1300 கி. பி. | | |
| 1100— | சிலுவைப் போர்கள், 1096-1204 கி.பி. | சிலை உடைப்பு இயக்கம் 725-850 கி. பி.<br>கிழக்கு மேற்கு திருச்சபைகள் தனித்தனியே பிரிதல். 1054 கி. பி. | இஸ்லாம் மதத்தில் பிரிவுகள் ஏற்படல் சன்னிகள்; சூஃபிகள், சையதுகள் 640 கி. பி. |
| 1453— | கருங்கொள்ளை நோயால் மக்கள் மடிதல் 1347-1349 கி.பி. | மேன்ஸிகெர்ட் போர்க்களம் 1071 கி. பி. | இரும்புத் தொழில், தோல் பதனிடல், துணி உற்பத்தி, காகிதம் செய்தல் 800-1400 கி.பி. இந்தோ அராபிய எண்கள் புழக்கத்துக்கு வரல் 1000 கி. பி. சாரசனியர்கள் உலக வாணிபத்தில் ஈடுபடல் 1000-1500 கி.பி. |

## முந்திய இடைக் காலம் (தொடர்ச்சி)

| | மேற்கு ஐரோப்பா | பைசான்சியப் பேரரசு | சாரசனிக் பேரரசு |
|---|---|---|---|
| 1453— | | நான்காவது சிலுவைப் போர் வீரர்கள் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றல். 1204 கி. பி.<br><br>துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றுதல் 1453 கி. பி. | பருத்தி, சர்க்கரை, ஆரஞ்சுகள் எலுமிச்சை, வாழைப் பழங்கள், காபி ஆகியவை உற்பத்தி செய்யப்படல் 1100 கி. பி.<br><br>'அரிஸ்டாட்டி'லின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்படல் 1150 கி. பி.<br><br>திசையறி கருவி, ஆஸ்ட்ரலாப் கருவி ஐரோப்பாவுக்கு செல்லல் 1400 கி. பி. |

# 3. பைஸான்ஷிய நாகரிகம்

## பைஸான்ஷியப் பேரரசு

மேலை ரோமானிய பேரரசானது பல்வேறு காரணங்களால் சீரழிந்து நிலைகுலைந்த பின்பும் பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்து வாழ்ந்து வந்த அதன் கீழைப் பகுதியே நாளடைவில் பைஸான்ஷியப் பேரரசு என அழைக்கப்பட்டது. அதன் தலை நகர் பைஸான்ஷியம் என்ற பழைய கிரேக்கக் குடியேற்றப் பகுதியாகும். கான்ஸ்டன்டைன் என்ற ரோமானியப் பேரரசர் அங்கு ஒரு தலைநகரைத் தனது பெயரில் நிறுவினார். அதுவே கான்ஸ்டான்டிநோபில் என்று அழைக்கப்பட்டது.

இப்பேரரசின் முக்கிய பிரதேசங்களான சிரியா, ஆசியா மைனர், பாலஸ்தீனம், எகிப்து, ஆகிய நாடுகள் உண்மையில் ஐரோப்பாவுக்குப் புறம்பான கீழை நாடுகள் எனலாம். எனவே இந் நாகரிகத்தில் கீழை நாட்டுப் பண்புகள் பெரிதும் விரவி யிருப்பதைக் காணலாம். கிரேக்க நாகரிகத்தின் சாயை இதில் மிகவும் அதிகமாகத் தென்படுகிறது. இதில் வாழ்ந்த மக்களின் பெரும் பகுதியினர் கிரேக்கர்களும், கிரேக்க நாகரிகத்தைப் பின்பற்றிய கீழை நாட்டினருமே ஆவார். சிரியர்கள், யூதர்கள், ஆர்மீனியர்கள், எகிப்தியர்கள், பாரசீகர்கள், ஆகியோர் பெரிதும் கீழைநாட்டு நாகரிகத்தில் திளைத்தவர்கள். எனவே அவர்களுடைய கிறிஸ்தவ மதத்தில் விதியில் நம்பிக்கை உலகைத் துன்பமயமெனக் கருதுதல் (Pessimistic), இறைவனோடு இரண்டறக் கலப்பதில் விருப்பம், அதற்காக பக்தி, யோகம், போன்ற அகமுக முறைகளைக் கடைப்பிடித்தல் முதலிய கீழை நாகரிகப் பண்புகள் சற்றே அதிகமாக இருப்பதைக் காண்கிறோம். இப் பேரரசில் முரட்டு வகுப்பினரைச் சேர்ந்த ஸ்லாவ் (Slavs) இனத்தவரும், மங்கோலிய இனத்தவரும் ஜெர்மானியர்களும் வாழ்ந்துவந்தனர். பல்கர்கள் (Bulgars), ஆவர்கள் (Avars) முதலியோர் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவராவர். அவர்கள் போர் உணர்ச்சி மிக்கவர்கள். ஆடு மாடுகளை மேய்த்து வாழ்ந்தவர்கள். ஸ்லாவ்கள் ஆல்பைன் இனத்தைச் சார்ந்த வர்கள். எண்ணிக்கையில் அவர்கள் மற்றவர்களைவிடச் சற்று

அதிகமாகவே இருந்தனர். இங்ஙனம் பல்வேறு இனத்தவர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது பைசான்ஷியப் பேரரசு.

## பைசான்ஷிய அரசியல் வரலாறு (Political History)

பைசான்ஷியப் பேரரசின் அரசியல்வரலாற்றை ஆறு சிறு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதற் கட்டத்தில் ஜஸ்டினியன் என்ற பேரரசர் தனது நாட்டைப் படையெடுத்த முரட்டு வகுப்பினரைத் தடுத்து நிறுத்தப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவதைக் காண்கிறோம். அம்முயற்சியின் ஆரம்பத்தில் சிறிது வெற்றியைப் பெற்றாலும், பிந்திய காலத்து அவர் பல நாடுகளை இழந்து விடுகிறார். இதாலியை லொம்பார்டுகளும் (Lombards) வட ஆப்பிரிக்காவை முஸ்லிம்களும், தாக்கி பரந்த நிலப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இரண்டாவது கட்டத்தில் அதாவது ஏழாம் நூற்றாண்டில், பாரசீகப் பேரரசோடு ஓயாது போர் நடைபெறுகின்றது. அதனால் இரு தரப்பினரும் சலிப்படைகின்றனர். மூன்றாவது கட்டத்தில் அதாவது கி. பி. 750-ல் ஐரோப்பாவுக்குப் புறம்பான அத்தனை நாடுகளையும், (ஆசியா மைனரைத் தவிர) முஸ்லிம்கள் பிடித்துக் கொண்டனர் நான்காவது கட்டத்தில் பைஸான்ஷியப் பேரரசர்கள் மீண்டும் ஒரு சில நாடுகளை முஸ்லிம்களிடமிருந்து திரும்பக் கைப்பற்றுகின்றனர். சிரியா, கிரீட்தீவு, இதாலிய கடற்கரை முதலிய நாடுகள் மீட்கப் படுகின்றன. ஆனால் பால்கன் தீபகற்பப் பிரதேசங்கள் ஜெர்மானிய முரட்டு வகுப்பினரின் கைகளில் வீழ்ந்து விடுகின்றன. ஐந்தாவது கட்டத்தில் அதாவது பதினோராம் நூற்றாண்டில், ஸெல்ஜீக் துருக்கியர்கள் (Seljuk Turks) பைஸான்ஷியப் படையைத் தோற்கடிக்கின்றனர். டயோஜீனஸ் (Diogenus) என்ற பேரரசர் துருக்கியர்களால் சிறைபடுத்தப் படுகின்றனர். ஒருமில்லியன் பொற்காசுகளைக் கொடுத்து மக்கள் அவரை மீட்கின்றனர். அதன்பின் போப்பாண்டவரின் வேண்டுகோளின் பேரில் ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகள் முஸ்லிம் மன்னர்களோடு சிலுவைப் போர் (Crusades) களில் ஈடுபடுகின்றன. ஆரம்பத்தில் முஸ்லிம்களைத் தாக்கிய ஐரோப்பியர்கள் நாளடைவில் கிறிஸ்தவர்களுக்கே எதிராக மாறிவிட்டனர். கான்ஸ்டான்டிநோபில் நகரை அவர்கள் கொள்ளையடிக்கலாயினர் (கி. பி. 1204). இறுதிக் கட்டத்தில் (கி. பி. 1453) கான்ஸ்டான்டிநோபிலைத் துருக்கியர்கள் பிடித்துக் கொள்கின்றனர்; அதோடு பைஸான்ஷியப் பேரரசு நிலைகுலைகிறது.

**பைஸான்ஷிய அரசாங்கம்**

பைஸான்ஷிய அரசாங்கம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டது (Theocratic). பேரரசர் தமது குடிமக்கள் மீது எல்லையற்ற அதிகாரத்தைச் செலுத்தினர். ஏறக்குறைய ஒரு சர்வாதிகாரி போல் அவர் விளங்கினர். தன்னைக் கடவுளின் பிரதிநிதி என்று அழைத்துக் கொண்டார். சமயத் துறைக்கும் அவரே தலைவராக விளங்கினர். மக்கள் அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். நடமாடும் தெய்வமெனப் போற்றினர். நிர்வாகத்தில் அரசருக்கு உதவி செய்ய ஏராளமான அதிகாரிகள் இருந்தனர். அதிகார வர்கத்தின் உறுப்பினர்கள் ஆட்சித் துறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்தனர்.

**பொருளாதாரம்:** அரசாங்கம் மக்களது பொருளாதார வாழ்க்கையில் பெரிதும் தலையிட்டது. கூலிகளையும், விலை வாசிகளையும், அதுவே தீர்மானித்தது. பல தொழில்களை அது ஏற்று நடத்தியது. சுரங்கத் தொழில், துணி நெய்யும் தொழில், மீன் பிடிக்கும் தொழில் போன்ற பல தொழில்கள் அரசாங்கத்துக்கே சொந்தமாயிருந்தன. பட்டுத் தொழிலை அரசாங்கமே தன் உரிமையாக நடத்த எத்தனித்தது. ஆனல் அது முடியவில்லை. முக்கியமான வியாபாரமெல்லாம் தனிப்பட்ட குழுக்களிடம் (Guild) ஒப்படைக்கப்பட்டன. வியாபாரிகளின் நடத்தையை அக்குழுக்கள் கண்காணித்து வந்தன. தொழிலாளிகளும், முதலாளிகளும், ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக் கொண்டு வாணிபத்தை வளர்த்தனர். வாணிபக்குழுக்கள் அவர்களிடையே பேதத்தை வளர்த்து தமது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டன. அக்குழுக்களையும் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் பேரரசர்களிடமே பொதிந்திருந்தது.

கி. பி. 552-ல் ஒரு சில நெஸ்டோரிய சமயப் பிரிவைச் சேர்ந்த துறவிகள் சீனவிலிருந்து பட்டுத் தொழிலைக் கற்று வந்து பைஸான்ஷியப் பேரரசில் நுழைத்தனர். அரசாங்கத்தின் ஆதரவில் இத் தொழில் நன்கு வளர்ச்சி அடைந்தது. கிரேக்க நாட்டிலும் சிரியாவிலும், பட்டுத் துணிகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. உயர்ந்த ரக பட்டுத் துணிகளைப் பிரபுகள் மட்டுமே வாங்க முடிந்தது. பிற்காலத்தே தனிப்பட்ட வணிகர்களும், இத் தொழிலில் ஈடுபட்டனர். அவர்களை இத் தொழிலிலிருந்து அகற்றுவதற்காக அரசாங்கம் வேண்டுமென்றே பட்டின் விலையினைக் குறைத்தது. போட்டி ஒய்ந்த பின் மீண்டும் விலை உயர்த்தப்பட்டது.

உள்நாட்டு வெளி நாட்டு வாணிபம் அக் காலத்தில் பெரிதும் செழித்தோங்கியது. உலகின் பல்வேறு பாகங்களோடு வியாபாரம் செய்து வணிகர்கள் கொழுத்த லாபம் சம்பாதித்தனர். சிரியாவிலிருந்து மத்திய ஆசியாவிற்கு இட்டுச் சென்ற வியாபார மார்க்கத்தைப் பாரசீகர்கள் கட்டுப்படுத்தி வந்தனர்; எனவே அரேபியா, எத்தியோப்பியா வழியாக இந்தியாவோடு வியாபாரம் செய்யும்படி ஜஸ்டின் என்ற பேரரசர் ஆணையிட்டார். ஆனால் பாரசீகர்களின் பகைமை காரணமாக அது முடியாமல் போயிற்று. கருங்கடல் வழியாகவே பொதுவாக வணிகர்கள் பிற நாடுகளோடு வியாபாரம் செய்தனர். 4.55 கிராம் எடையுள்ள நாணயங்கள் வியாபாரத்தில் பயன் படுத்தப் பட்டன. குறைந்த வட்டிக்குக் கடன் எளிதில் கிடைத்ததால் பல முதலாளிகள் பெருந் தனத்தை வாணிபத்தில் முதலீடு செய்து அதனால் பெருத்த லாபத்தை எய்தினர்; செல்வம் ஒரு சிலர் பால் செறிந்தது. அச் செல்வந்தர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தனர். பகட்டான ஆடையணிகளை அணிந்து அன்னார் வீதிகளில் பவனி வந்தனர். அவர்களது துணிகளில் மணிகள் தைக்கப் பட்டிருந்தன. தங்கச் சரிகைகள் அவற்றின் கரைகளில் மின்னின. இயற்கையின் எழிலோவியம் அவற்றில் பொறிக்கப் பட்டிருந்தது. ஒரு பிரபுவின் ஆடையில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் வண்ண ஓவியங்கள் வரையப் பட்டிருந்தனவாம்.

பைஸான்ஷியப் பேரரசில் விவசாயம் நன்கு செழித்தோங்கியது. பெரும் செல்வந்தர்கள் சிறிய நிலக் கிழார்களின் நிலங்களை வாங்கி பெரும் பெரும் பண்ணைகளுக்கு அதிபர்களாயினர். சுதந்திரக் குடியானவர்களின் தொகை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே சென்றது. அத்தகைய பெரும் பண்ணைகளை உட்குடிகள் (Serfs) எனும் குடியானவர்களே உழுது பயிரிட்டனர். சட்டப்படி அவர்கள் சுதந்திரமானவர்களே யெனினும் விவசாயம் செய்து வந்த நிலத்தை விட்டு வேறு பண்ணைகளுக்குச் செல்ல இயலாத நிலையில் கட்டுண்டு கிடந்தனர். அனஸ்தீஸியஸ் (Anastasius) என்ற பேரரசர் முப்பது ஆண்டுகள் வரை, ஒருவன் ஒரு நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்து வந்தானேயானால் அவன் அதை விட்டு வேற்றுப் பண்ணைகளுக்குப் போகக் கூடாது என்று ஓர் ஆணை பிறப்பித்தார். இதன் விளைவாக உட்குடிகளின் நிலை பெரிதும் இழிந்தது. அவர்கள் ஏறக் குறைய அடிமைகள் போல் வாழ்ந்தனர். எனினும் விவசாயம் நன்கு வளர்ச்சி பெற்று விளங்கியது. நிலவரியின் கடுமை காரணமாக ஒரு சில சிறு குடியானவர்கள் தமது நிலங்களை விற்று விட்டு

நகரங்களில் குடி புகுந்தனர். இதனால் பெரும் நிலப் பிரபுக்கள் பலர் தோன்றினர். அவர்கள் பேரரசர்களுக்கே நிலத்தை தானமாக வழங்கி அவர்களது தயவைப் பெற்றனர். அவர்களுடைய அதிகார வளர்ச்சியைக் கண்ட மன்னர்கள் யாரிடமிருந்து நிலம் வாங்கப்பட்டதோ அவர்களுக்கே அதைத் திருப்பிக் கொடுத்து விடும்படி ஆணையிட்டனர். சமயத் துறையில் ஈடுபட்டிருந்த மத குருமார்களிடமும் ஏராளமாக நிலங்கள் செறிந்தன. உட்குடிகளைக் கொண்டு திருச்சபை (Church) அந்நிலங்களை உழுது பயிரிட்டு நல்ல இலாபமெய்தியது. இங்ஙனம் பெரும் பண்ணைகளுக்குச் சொந்த மாயிருந்த உலகியல் பிரபுக்களுக்குச் சமமாக சமயப் பிரபுக்களும் பெரும் நிலக் கிழார்களாக வாழ்ந்தனர்.

பைஸான்ஷிய நாகரிகமானது விவசாய அடிப்படையில் அமைந்ததொன்றே யெனினும் நாளடைவில் அது ஒரு நகர நாகரிகமாக மாறியது. பல தொழில்கள் ஆங்காங்கே வளர்ந்தன. ஸ்மிர்னு (Smyrna) எபிஸஸ் (Epheses), கொரிந்த் (Corinth), ஸலோனிகா (Salonika), ஹெராக்ளியா (Heraclea) போன்ற பெரும் நகரங்களில் பற்பல தொழில்கள் நன்கு வளர்ச்சியடைந்திருந்தன. தோல் வினைஞர்கள் (Tanners), மிதியடி தைப்பவர்கள் (Cobblers), போர்க் கருவி உற்பத்தியாளர்கள் (Armourers), அணிகலன்களை ஆக்குபவர்கள் (Goldsmiths and Jewellers), உலோக வேலைப்பாட்டு நிபுணர்கள் (Metal-Workers), தச்சர்கள் (Carpenters), மரசிற்பிகள் (Wood-Carvers) முதலியோர் நல்ல செல்வாக்குடன் இந் நகரங்களில் வாழ்ந்தனர். கான்ஸ்-டான்டிநோபில், பாக்தாத், கார்டோவா முதலிய நகரங்களும் தொழில் வளம் செறிந்து விளங்கின. அழகிய மஸ்லின் துணிகளையும், பட்டாடைகளையும் நெய்வதில் கான்ஸ்டான்டிநோபில் நெசவாளிகள் ஈடும் எடுப்புமற்று விளங்கினர். ஏராளமான அடிமைகளின் துணை கொண்டே நெசவுத் தொழில் நாளுக்கு நாள் பெருகியது. பெரும் தொழில்கள் தனிப்பட்ட குழுக்களாக (Guild) நாளடைவில் அமைந்தன. அவைகளின் செயல்களை அரசாங்கமானது பல சட்டங்களின் மூலம் கண்காணித்து வந்தது. அரசாங்க ஆய்வாளர்கள் அக் குழுக்களின் கணக்குகளைச் சரி பார்த்தனர். கூலிகளை நிர்ணயித்தனர். சிறிய தொழில்களை தனிப்பட்ட முதலாளிகள் நிருவகித்தனர். ஒரு சில தொழில்களில் அதில் பணி புரிந்த தொழிலாளிகளே எல்லா அதிகாரத்தையும் செலுத்தினர். இதனால் நாட்டின் தொழில் வளம் யாதொரு தடையுமின்றி வளர்ந்தது. ஒழுங்கும் அமைதியும் பொருளாதாரத் துறையில் காணப்பட்டது. ஆனால்

இத்தகைய அரசாங்கக் கட்டுப்பாடுகள் யாவும் தொழிற் துறையில் புத்தம் புதிய முயற்சிகள் தொடங்கப்படுவதைத் தடுத்து பொருளாதாரத் துறையில் ஒரு விதமான தேக்க நிலை ஏற்பட்டது.

வாணிபத் துறையிலும் அரசாங்கமானது தலையிட்டுப் பல விதக் கட்டுப்பாடுகளை இயற்றியது. துறைமுகங்களையும் கப்பல் தளங்களையும் அரசாங்கம் கண்காணித்து வந்தது. கடன் கொடுக்கல் வாங்கலையும் காப்புறுதிப் பத்திரங்களையும் (Insurance) அது தணிக்கை செய்தது. கொள்ளைகளைத் தடுத்தது. நாடெங்கும் ஒரே மாதிரியான நாணயங்களை புழங்கச் செய்தது. ஒரு சில பொருள்களின் ஏற்றுமதியை அது தடை செய்தது. ஏற்றுமதி இறக்குமதிகளின் மீது அது வரி விதித்தது. தானியம், பட்டு போன்ற ஒரு சிலத் தொழில்களில் அரசாங்கமே தனியுரிமை பெற்றிருந்தது. அந்நிய நாட்டு வணிகர்கள் பைஸான்ஷியப் பேரரசில் வாணிபம் புரியும்படியாக மனமுவந்து வரவழைக்கப் பட்டனர். அத்தகைய அந்நியர் பலர் கான்ஸ்டான்டி நோபிலுக்கு அருகில் தமது சொந்த கிடங்குகளை ஏற்படுத்திக் கொண்டனர். பொருள்களைப் பல்வேறு நாடுகளுக்குக் கப்பல்கள் மூலமாகக் கொண்டு செல்லும் பணியை அந்நிய வணிகர்களே பெரிதும் மேற்கொண்டனர். வாங்கு முறை கான்ஸ்டான்டி நோபிலில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. அந்நியச் செலாவணிச் சீட்டு களைப் (Bills of Exchange) பயன்படுத்தும் முறையை அவர்கள் முதன் முதலாக வாணிபத்தில் புகுத்தினர் என்று தெரிகிறது.

**சமுதாய நிலை :** பைஸான்ஷியப் பேரரசில் நாம் ஏற்கனவே கண்டபடி ஆசிய மக்களான ஸ்லாவ்கள் ஏராளமாகவும், கிரேக்கர்களும் ஏனைய வகுப்பினர்களும் ஒரு சிலராயும் இருந்தனர். ஆனால் அவ்வொரு சிலரே பெருஞ் செல்வந்தர் களாகவும், உயர்குடிப் பெருமக்களாகவும் (Aristocrats) விளங்கினர், பாங்கு உரிமையாளர்கள் (Bankers) தொழிலதிபர் கள் (Industrialists), பெருநிலக் கிழார்கள் (Landlords) ஆகியோர் களே சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உலவினர். அவர்கள் கண்கவர் ஆடைகளை அணிந்து கொண்டு உல்லாச வாழ்க்கை வாழ்ந்தனர். கடற்கரை ஓரங்களில் கட்டப்பட்ட அவர்களது வில்லாக்கள் (Villas) எனும் உல்லாச மாளிகைகளில் கண்கவர் கண்ணாடிச் சாமான்களும், பளிச்சிடும் பீங்கான் பாத்திரங்களும், வண்ண ஓவியங்கள் நிறைந்த திரைச்சீலைகளும் (Tapestries), தரை விரிப்புகளும் (Carpets), அழகிய சுவரோவியங்களும் (Murals), சிறந்த சிற்பங்களும் ஆங்காங்கே காட்சியளித்தன. ரோமானியர்களின் தலைநகரான ரோமிலும், போர்பன்களின்

தலைநகரான பாரிசிலும்கூடக் காணக்கிடையாத அளவுக்கு பைஸான்ஷிய உயர்குடியினர் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். அதோடு அவர்களிடையே சதிகளும், சச்சரவுகளும், காமாந்த காரக் கயமைகளும் மலிந்திருந்தன. உலகத்தில் எப்பாகத்திலும் கண்டிராத அளவுக்கு உயர்குடி மகளிர் தங்கள் மேனிகளை மினிக்கிக்கொண்டனர். வாசனைத் திரவியங்களையும், அழகிய அணிகலன்களையும், அலங்காரமான கொண்டைகளையும், முக மினிக்கித் துகள்களையும் பயன்படுத்துவதில் பைஸான்ஷியப் பெண்டிர் ஒப்பாரும் மிக்காரும் இலராய்த் திகழ்ந்தனர். பைஸான்ஷிய நகரங்களில் இத்தகைய பிரபுக்களின் ஊர்வலங் களும், வரவேற்புகளும், விளையாட்டுகளும் ஆண்டு முழுவதிலும் கோலாகலமாக நடைபெற்றன. பெரும் பெரும் கோச்சு வண்டிகளில் மக்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடும் வகையில் வேகமாக வீதிகளில் ஊர்ந்து சென்றனர். மதகுருமார்களும்கூட இத்தகைய ஆடம்பரங்களிலிருந்து தப்பவில்லை. அவர்களுடைய படையல் மேடைகள் (altars) தங்கத்தாலும் வெள்ளியாலும் பளிங்குக் கற்களாலும் செய்யப்பெற்றிருந்தன.

பைஸான்ஷிய நகரங்களில் செல்வமும் செல்வாக்கும் இங்ஙனம் கொப்புளித்து வழிந்தோடிய அதே சமயத்தில், துன்பத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து கிடந்த மக்கட்கூட்டமும் ஆங்காங்கே பெருகிக் கிடந்தது. முக்கியமாக விவசாய உட்குடி மக்களும் (Serfs), நகரத் தொழிலாளர்களும், வறுமையில் வாடி மிருகத்திலும் கேடான வாழ்க்கையில் உழன்றனர். ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள் கைத்தொழில் விற்பன்னர்கள் போன்ற நடுநிலை வகுப்பினர் மிதமான வாழ்க்கையே வாழ்ந்தனர். செல்வத்தைச் சிதறடிக்கக்கூடிய கேளிக்கைகள் அவர்களது வாழ்வில் இடம் பெறவில்லை; ஆனால் செல்வந்தர்களோவெனில் ஒழுக்கமற்ற வாழ்க்கையில் மூழ்கித் திளைத்தனர். இத்தகைய முறைகேடான வாழ்க்கையானது செல்வந்தர்களிடமும், வறியர் களிடமும்தான் அதிகமாகக் காணப்பட்டது. தனவந்தர்களின் அந்தப்புர மகளிரைக் காக்க வேண்டி பலவந்தமாக அலிகளாக்கப் பட்ட சிறுவர்கள் (Eunuchs) பலர் எங்கு பார்த்தாலும் காணப் பட்டனர். மக்கள் சதா தம்மிடையே சண்டை சச்சரவிட்டு வந்தனர். பல்வேறு இனங்களைச் சேர்ந்த அவர்களிடையே காழ்ப்பும், மனக்கசப்பும், ஓயாத பூசல்களும் மலிந்திருந்தன. தம்முள் போரிடாத வேளையில் மட்டுமே அவர்கள் நாடகம், நாட்டியம், ஊர்வலம், திருவிழா போன்றவைகளில் பங்கெடுத்துக் கொண்டனர். பைஸான்ஷிய நகரங்களில் பரத்தையர்கள் பயமின்றித் திரிந்தனர். விலைமாதர்கள் இல்லாத நகரங்களே

பேரரசில் இல்லையெனலாம். பைஸான்ஷியர்கள் என்றால் கண்ணியமான காமாந்தகர்கள் (Elegant sensuality) என்று பொருள்படும் வகையில் அக்கால மக்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. மன்னர்கள் வேசையர்களையும், அவர்களுக்கு உடந்தையாய் இருப்பவர்களையும் தடுக்கப் பல சட்டங்களை ஏற்படுத்தினர்களெனினும் அவர்களுடைய முயற்சிகளெல்லாம் விழலுக்கிரைத்த நீராகவே அமைந்தன. விதிவிலக்காக ஒருசில செல்வந்தர்கள் மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் குருடர்கள், வயோதிகர்கள் ஆகியோரைப் புரக்கும் சாலைகள், பிரயாணிகள் தங்கும் விடுதிகள், முதலியவைகளை ஏற்படுத்தி மக்களுக்குத் தொண்டு செய்தனர். இத்தகைய பணிகளில் மன்னர்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

**கலைகள் :** கலைத்துறையிலும் அரசாங்கத் துறையிலும் பைஸான்ஷியர்கள் தலை சிறந்து விளங்கினார்கள். அவர்களது கலைச் சின்னங்கள் பலவற்றை முரட்டு வகுப்பினர்கள் அழித்து விட்டனரேயெனினும் எஞ்சியுள்ள சின்னங்களிலிருந்து கலைத்துறையில் அவர்கள் எத்துணை மாண்பு எய்தியிருந்தனர் என்பது சொல்லாமலே பெறப்படும். கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்ப காலத்தில் சிற்பம் ஓவியம் போன்ற கலைகள் சமயத்துக்கு விரோதமானவையென்று கருதப்பட்டன. நிர்வாணச் சிலைகளைக் கோயிலில் வைப்பது மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட கன்னித் தன்மைக்கும், பிரம்மச்சரிய விரதத்திற்கும் முற்றிலும் கேடு பயக்கத்தக்கது எனக் கருதப்பட்டது. ஒரு சில மன்னர்கள் சிலைகளையும், படங்களையும் உடைத்தெறிவதில் பெருமகிழ்ச்சி எய்தினர். ஆனால் நாளடைவில் கிறிஸ்தவ மன்னர்கள் பெரும் பெரும் கோயில்களைக் கட்டினர். அவற்றை அழகு செய்வான் வேண்டி கிறிஸ்து, கன்னிமாதா ஆகியோரின் சிலைகளையும், புகழ் மிக்க துறவிகளின் சிலைகளையும் ஆங்காங்கே அமைத்தனர். பாமர மக்களிடையே பக்தியைத் தூண்ட இத்தகைய சிலைகள் பெரிதும் உதவிசெய்தன.

கட்டிடக் கலையில்தான் பைஸான்ஷிய மக்களின் கைவன்மை படைப்பாற்றல் மிக்கதாய் விளங்கியது. பைஸான்ஷியக் கட்டிடங்கள் திண்மையும் அதே சமயத்தில் எளிமையும் வாய்ந்தவை (Strength and simplicity). பைஸான்ஷியப் பேரரசர்கள் தங்களுடைய திருக்கோயில்களை பாஸிலிகா (Basilica) முறையிலேயே அமைத்தனர். இம் முறையில் கட்டப்பட்ட நெடுமாடக் கோயில்களில் தூண்கள் வரிசை வரிசையாய் அமைந்த நீள் சதுர மண்டபம் ஒன்றும், அரைவட்டமான

ஒதுக்கிடம் ஒன்றும் அமைந்திருக்கும். கான்ஸ்டன்டைன் என்ற பேரரசர் வாடிகன் குன்றின்மேல் செண்ட். பீட்டர் ஆலயத்தைக் கட்டினர். பன்னிரெண்டு நூற்றுண்டுகள் வரையில் அஃது பொலிவுடனும் அழகுடனும் திகழ்ந்தது. அதன் பின்னரே பிரமாண்டே (Bramante) எனும் கட்டிடக் கலைஞர் அதை நவீன முறையில் புதுப்பித்தார். கான்ஸ்டன்டைன் கட்டிய இன்னெரு கட்டிடம் செண்ட். பால் திருக்கோயிலாகும். அதை அவருக்குப் பின்னல் வந்த மன்னர்கள் மேலும் விரிவடையச் செய்தார்கள். தம்முடைய சகோதரியின் நினைவுச் சின்னமாக சான்டா கான்ஸ்டான்ஸா (Santa constaza) என்ற பேரெழில் வாய்ந்த கட்டிடத்தை அவர் நிர்மானித்தார். இன்றைக்கும் அது பழைய கம்பீரம் குறையாது, தாஜ்மஹால் போல அன்பின் உருவகமாக விளங்குகிறது.

மேற்கூறிய பாஸிலிகா கட்டிட முறையானது நாளடைவில் மாறி ஒரு புதிய முறை உருவாகியது. டயக்ளீஷியன் (Diocletian) என்ற பேரரசர் நிர்மாணித்துள்ள கட்டிடங்களில் இந்நூதன முறையைக் கட்டிடக் கலைஞர்கள் முதன் முதலில் புகுத்தினர்கள். இதன்படி கட்டிடத்தின் வளைவுகள் (Arches) தூண்களின் தலைப்புகளிலிருந்தே உற்பத்தியாகின்றன. அழகிய உருவங் களுக்குப் பதிலாக வளைவான கோடுகள் சுவர்களின் மேற் புறத்தை அலங்கரிக்கின்றன. பழைய இயற்கையான கிரேக்க அலங்கார முறைகளுக்குப் பதிலாக, பாரசீகம், சிரியா, ஆசியா மைனர், எகிப்து போன்ற கீழை நாடுகளுக்கே உரித்தான அடையாள அலங்காரச் சின்னங்கள் (Symbolic Decoration) கட்டிடங்களில் பொறிக்கப்பட்டன. அச்சின்னங்கள் கண்கவர் வண்ணங்களில் தீட்டப்பட்டன. வில் வடிவமான கூரைகள், குவிமாடங்கள், முதலியவைகளோடு கீழை நாட்டு பட்டும், படுதாவும் கோயில்களில் ஆங்காங்கே காணப்பட்டன. குருமார் களின் உடைகளிலும், சுவரோவியங்களிலும் தளவரிசைகளிலும் புதிய முறையின் சுவடுகள் நன்கு பதிந்துள்ளதைக் காணலாம். தன் மனதில் எண்ணுகிற எண்ணங்களை, ஓவியன் இங்கு ஒருசில அலங்காரங்களால் குறிப்பாக உணர்த்துகிருன். கிறிஸ்துவின் வாழ்க்கையும், மேரியின் துயரங்களும் துறவிகளின் தவ வாழ்க்கை யும் இங்ஙனம் ஓவியங்களில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. இத்தகைய ஆன்மிக ஓவியங்களில்கூட உலகியல் ஆடம்பரம் தலை தூக்கி நிற்கிறது. கிறிஸ்துவும், மரியன்னையும் கூட ஒரு பேரரசரைப் போலவும், அரசியைப் போலவும் வரையப் பெற்றுள்ளனர். மன்னர்களாலும், சமயத் தலைவர்களாலும்,

ஆதரிக்கப்பெற்ற ஓவியர்கள் அவர்களுடைய ஆணையைச் சிரமேற் கொண்டு அன்னாரின் மனத்துக்கேற்ற ஓவியங்களையே வரைந்தனர்.

பிற்காலக் கட்டிடக் கலைஞர்கள் நீள்சதுர பாஸிலிகா முறையைக் கைவிட்டு, சிலுவை வடிவமான கட்டிடங்களை எழுப்பலாயினர். சில சமயங்களில் திருக்கோயில்களின் அடிமட்ட மானது எண்கோண உருவத்தில் அமைந்திருக்கும். ரேவன்னு (Ravenna) எனுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சான் விட்டாலி (San Vitale) எனும் திருக்கோயிலின் அடித்தளமானது எண் கோண வடிவத்திலேயே அமைந்துள்ளது. இத்தகைய கட்டிடங்களின் சிறப்பு வாய்ந்த பகுதியானது, வட்ட வடிவமான குவிமாடங்களாகும். கோயில்களின் உட்புறத்திலும், குவி மாடங்களின் உட்புறத்திலும் ஏராளமான கலைச் செல்வங்கள் மலிந்துகிடக்கின்றன. ஆனால் அங்கே சிலைகள் அதிகமாக இல்லை. கட்புலனுக்கு அப்பாற்பட்ட நுண்ணிய அழகு, குறிப்பாகப் பொருளுணர்த்தும் உருவங்களின் மூலமாக இக்கால ஓவியர் களால் வெளிப்படுத்தப்படுகின்றது. மக்களுக்கு அறிவூட்டும் வகையிலும், பயமூட்டும் முறையிலும் அவ்வோவியங்கள் அமைந் துள்ளன. கோயில்களின் தளங்கள் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட கண்ணாடித் துண்டுகளும், மொசைக் எனும் பளிங்குக் கற்களும் பாவப்பெற்றிருந்தன. நீலம் அல்லது தங்கமயமான பின்னணியில் அவை பதிக்கப்பெற்றிருப்பது மேலும் அவற்றின் வனப்பை அதிகரிக்கிறது. பன்னிறக் கற்களும், கண்ணாடிகளும் தரையில் மட்டுமின்றி, படையல் மேடைகளிலும் தூண்களிலும், சுவர்களிலும்கூட பதிக்கப்பெற்றுள்ளன. கோயில்களின் சொற் பொழிவு மேடைகளில் தச்சர்கள் தம் கை வண்ணத்தைக் காட்டி அழகோவியங்கள் பலவற்றைப் பொறித்துள்ளனர். தட்டார் களின் நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்த அணிகள் அவற்றை அலங்கரித்தன. தரைமீது விரிக்கப்பட்டுள்ள கம்பளங்களிலும், ஜன்னல்களில் தொங்கும் படுதாக்களிலும், பலி பீடத்தை அலங் கரிக்கும் பட்டு விரிப்புகளிலும், கண்ணுக்கினிய நேர்த்தியான சிற்பங்கள் பல பொறிக்கப்பட்டன.

ஜஸ்டினியன் என்ற பேரரசரால் எழுப்பப்பட்ட சென்ட். சோபியாவின் பெருங்கோயில் (Cathedral of St. Sophia) உண்மை யான பைஸான்ஷிய கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஹேகியா சோபியா (Hagia Sophia) அல்லது தூய்மையான ஞானம் என்ற தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட அக் கோயி லானது உண்மையில் மனிதர்களால் கட்டப்பட்டதா அன்றி இராக்கதர்களால் கட்டப்பட்டதா என்று ஐயுறுமளவிற்கு

பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. ஒரே அளவான கைகளை உடைய செங்குத்துச் சிலுவை வடிவத்தில் (Greek Cross) இக் கோயிலின் தரைமட்டம் அமைந்துள்ளது. அதன் நீள அகலங்கள் முறையே 250 அடி, 225 அடிகளாகும். அதற்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல அமைந்திருப்பது அதன் பிரம்மாண்டமான குவிமாடமாகும்; அக் குவிமாடமானது நான்கு பெரும் வளைவு களின் மேல் எழுப்பப்பட்டுள்ளது. இத்தகைய முறையினுல்தான் பைஸான்ஷியச் சிற்பிகள், கண்டோர் வியக்கத்தக்க பெரும் பெரும் குவிமாடங்களை நிர்மாணிக்க முடிந்தது. இக் கோயிலின் குவிமாடத்தின் குறுக்களவு 100 அடியாகும். உயரம் 180 அடியாகும். வானத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலியின் மூலமாக தொங்கவிடப்பட்டது போன்றதோர் உணர்வை இக்குவிமாடம் காண்போர்க்கு ஏற்படுத்துகிறது. மற்றபடி ஒரு கட்டிடத்தின் மீது அமைக்கப்பட்டது போல் அது தோன்றவேயில்லை. இம் முறைதான் பைஸான்ஷியக் கலையின் மிகச் சிறந்த பண்பாகும்.

செயின்ட். சோபியா திருக்கோயிலின் உட்பாகம் ஓர் அரும் பொருட்காட்சிசாலை போல் தோற்றமளிக்கிறது. வெண்மை, சிவப்பு, மஞ்சள், ஊதா போன்ற பல்வேறு நிறங்களை உடைய பளிங்குக் கற்களால் அதன் சுவர்களும், தூண்களும் பாவப் பெற்றுள்ளன. அதன் விளைவாக எங்கு பார்த்தாலும் அழகிய பூக்கள் பூத்திருப்பது போன்ற ஓர் உணர்வு பார்ப்பவர்தமக்கு ஏற்படுகிறது. ஆங்காங்கே வளைவுகளும், உலோகத்தில் வார்க்கப் பட்ட சிலைகளும், சித்திர வேலைப்பாடுகளும், கட்டிடத்தின் உச்சியை அழகுபடுத்துகின்றன. மாடத்தின் நடுவிலிருந்து நாற்பது கொத்து விளக்குகள் (Chandeliers) அழகாகத் தொங்குகின்றன. அதன் உப்பரிகையைச் சுற்றி அமைந்துள்ள கைப்பிடிச் சுவர்களில் வெள்ளி யாலாய கோடு போன்ற வேலைப்பாடுகள் மிகத் திறமை யாக அமைக்கப்பட்டுள்ளன. கோயிலின் சொற்பொழிவு மேடை யானது (Pulpit) வெள்ளியாலும், தந்தத்தாலும் கண்கவர் வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் விலையுயர்ந்த கற்கள் பல பதிக்கப்பெற்றுள்ளன. தந்தத்தாலாய அதன் படையல் மேடையில் பூசைக்குரிய பாத்திரங்கள் வைக்கப் பட்டுள்ளன. அவை யாவும் பொன்னுலும், வெள்ளியாலும் செய்யப்பட்டவையாகும். பேரரசரும், அரசியும் அமர்ந்து கிறிஸ்துவிடமிருந்தும், மரியன்னையிடமிருந்தும் ஆசீர்வாதங்களைப் பெறுவதே போன்று அமைக்கப்பட்டுள்ள வெள்ளி சிம்மாசனம் இங்கே காணப்படும் பொருள்களிலெல்லாம் மிகச் சிறந்த தொன்றாகும். இத்தகைய அசாதாரணமான அழகுடன் இக் கோயில் விளங்குவதால்தான் இதைக் கண்ணுற்ற பலர் 'ஆதாம்

பிறந்த காலத்திலிருந்து இதுவரை யாருமே இத்தகைய பெருங் கோயிலைப் பார்த்திருக்க மாட்டார்கள் இனியும் பார்க்க மாட்டார்கள்' என்று கூறினர். இதன் பெருமையை உணர்ந்த ஜஸ்டினியப் பேரரசரே 'ஓ! சாலமோன்! நான் உன்னையும் மிஞ்சி விட்டேன்' என்று கூறி தன்னைத்தானே வியந்து கொண்டாராம்.

கட்டிடக் கலையைத் தவிர வேறுபல கலைகளும் நன்கு வளர்க்கப்பட்டன. பைஸான்ஷியர்களின் சிற்பங்களில் கிரேக்கர்களின் நயமும், ஆசியர்களின் பகட்டும் பளிச்சிடுகின்றன. கல்லாலான சவப்பெட்டிகளின் மீது (Sarcophagi) செதுக்கப் பட்டுள்ள மனித உருவங்களில் பைஸான்ஷிய சிற்பிகளின் கைவன்மையை நன்கு காணலாம். தந்தங்களிலும் அன்னார் பல நேர்த்தியான உருவங்களைச் செதுக்கியுள்ளனர். பிஷப்மாக்ஸி மியன் (Maximian) என்பாருக்காகச் செய்யப்பட்ட தந்த நாற்காலி சிற்பக்கலையின் சிகரமாக விளங்குகிறது. ஓவியக் கலையிலும் பைஸான்ஷியர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். கிரேக்க முறைகளையே அவர்கள் பின்பற்றினார்கள். மரப் பலகைகளிலும், சுவர்களிலும் வரையப்பெறும் பெரு ஓவியங் களுக்கும் பதிலாக சிற்றோவியங்கள் (Miniatuses) வரைவதிலேயே இக்கால ஓவியர்கள் கண்ணுங்கருத்துமாய் இருந்தனர். பொன் மயமான, அல்லது நீல மயமான பின்னணியில் வரைய பெற்றுள்ள சிற்றோவியங்கள் இணையிலா வனப்புமிக்கவை. அறிஞர்கள் பயிலும் நூல் கைப்பிரதிகளையும் இத்தகைய ஓவியங்கள் அணி செய்தன, பல்வேறு வண்ணங்களைக் கொண்ட பளிங்குக் கற்களையும், கண்ணாடித் துண்டுகளையும் கொண்டு தளவரிசை அமைப்பதிலும், இக்காலக் கலைஞர்கள் மிகவும் கைதேர்ந்தவர் களாய் விளங்கினார்கள். தரைகளில் பளிங்குக் கற்களைப் பரப்பிய அவர்கள், சுவர்களிலும் ஏனைய இடங்களிலும் கண்ணாடிச் சிமிழ்களைப் பதித்தனர். சுவர்களின் மேற்புறத்தில் அமைக்கப் பெற்ற சிறு சிலைகளில் மொசைக் கற்களும் (Mosaic), விலையுயர்ந்த மணிகளும் இடம் பெற்றன. தளவரிசைகள் சமமாக அமையப் பெறாமல் குவிமாடங்கள் போலவும், சங்குகள் போலவும், சிப்பிகள் போலவும் வளைவு வளைவாக அமைக்கப்பெற்றிருந்தன. அதன் விளைவாக பகலவனின் கதிர்கள் அவற்றின்மீது பட்டு, வெவ்வேறு பகற்பொழுதில் வெவ்வேறு விதமான நிறங்களைத் தோற்றுவித்து, மக்களை வியப்பிலும், களிப்புக்கடலிலும் ஆழ்த்தியது.

மற்றும் பைஸான்ஷியர்கள் சாயந்தோய்ந்த வண்ணக் கண்ணாடித் தொழிலிலும் வல்லுநராய் திகழ்ந்தனர். பொன்னின் மீதும் மணியின் மீதும், நாணயங்கள் மீதும் உருவங்களைப் பொறிக்கும் கலையில் அவர்கள் அவ்வளவு திறமை பெற்றிருக்க வில்லை. ஆனால் பொன்னாலும், வெள்ளியாலும் ஆகிய அழகிய ஆபரணங்களைச் செய்வதில் அக்காலக் கைவினைஞர்கள் மிகச் சிறந்த திறமையை வெளிப்படுத்தினார்கள். அக்கால நெசவாளர் களும் மிக நுட்பமான, மெல்லிய ஆடைகளை நெய்ததோடு அவற்றைப் பல அழகிய ஜரிகைகளையும், பூக்களையும் கொண்டு அழகூட்டினர். திரைச்சீலைகள், விரிப்புகள் போன்றவைகளிலும் இத்தகைய அழகிய பூவேலைப்பாடுகள் காணப்பட்டன.

பைஸான்ஷியர்களின் கலைத்திறன் நாளடைவில் இதாலிக் கும், ருஷ்யாவிற்கும் பரவியது. ருஷ்யர்களுடைய திருக் கோயில்கள் பைஸான்ஷிய முறையிலேயே கட்டப்பட்டன. நவீன காலத்தில் இதாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு கான்ஸ்டான்டி நோபிலிலிருந்து சென்ற கலைஞர்களே பெரிதும் காரணமாவார்கள்.

**இலக்கியம் :** கி. பி. 425ஆம் ஆண்டில் இரண்டாம் தியோடிஷியஸ் (Theodosisus II) என்ற மன்னர் கான்ஸ்டான்டி நோபிலில் ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். அதில் சட்டம், லத்தீன் மொழி, வாக்குவன்மை, முதலியன போதிக்கப் பட்டன. கிரேக்க மொழியிலேயே பாடங்கள் நடத்தப்பட்டன. கிரேக்க இலக்கியத்தைத் தழுவியே நூல்களும், செய்யுள்களும் இயற்றப்பட்டன. 'ஹீரோவும் லியாண்டரும்' (Hero and Leander), என்ற இக்காலக் கவிதையானது முசேயஸ் (Musaeus) என்ற பெரும் கவிஞரால் பாடப்பெற்றது. இதில் லியாண்டர் என்ற வீரன் ஹீரோ என்ற தனது காதலியைக் காண கடலில் குதித்து வீரமாக நீந்திச் சென்று வழியிலேயே இறந்து விடுகின்றான். இதில் தற்காலத்திய பைரன் (Byron) என்ற புலவனின் புத்துணர்ச்சியையும், வீரத்தையும் காண்கின்றோம். வரலாற்றுத் துறையிலும் பல ஒப்பற்ற நூல்கள் இக் காலத்தே தோன்றின. யூனபியஸ் (Eunapaus) என்பார் எழுதிய 'அகில உலக வரலாறு' (Universal History) எனும் நூல் ஓர் ஒப்பற்ற வரலாற்றுக் காவியமெனலாம். ஜஸ்டினியப் பேரரசர்தான் அக்காவியத்தின் தலைவராவார். சாக்ரடிஸ் என்ற மற்றொரு ஆசிரியரால் எழுதப்பெற்ற 'திருச்சபையின் வரலாறு' (History of the Church) என்ற நூல் அக்காலத்து சமய நிலையை நன்கு சித்தரிக்கின்றது. அதே சமயத்தில் அக் காலத்திய மூடப் பழக்க

வழக்கங்களும், கட்டுக் கதைகளும், விந்தைகளும் அதில் இடம் பெற்றுள்ளன. கிறிஸ்தவர்கள் யாவரும் ஒற்றுமையாக வாழ்ந் தால் வரலாறு என்ற ஒன்று எழுதப்படவேண்டிய அவசியமே யிருக்காது என்று அதன் ஆசிரியர் கூறுகின்றார். ஜோஸிமஸ் (Zosimus) என்பாரால் வரையப்பெற்ற 'ரோமப் பேரரசின் வரலாறு' என்ற நூல் கட்டுக் கதைகள் பல நிரம்பியதாகும். பாலஸ்தீனத்தைச் சார்ந்த புரோகோபியஸ் (Procopius) என்பார் தான் இக்கால வரலாற்றாசிரியர்கள் யாவரிலும் மிகச் சிறந்த வராவார். 'போர்களின் புத்தகங்கள்' (Books of Wars), இரகசிய வரலாறு (Secret History) போன்ற அவரது நூல்கள் மிகவும் புகழ் பெற்றவை. கடந்தகால மன்னர்களின் குறைபாடுகளை இந் நூல்கள் உண்மையாக எடுத்துக்காட்டுகின்றன. ஹெரடோடஸ், தூசிடைடஸ் போன்றவர்களின் நூல்களிலிருந்து இவ்வாசிரியர் பெரிதும் கடன்வாங்கியுள்ளார். ஆனால் இவரது நூலில் சகுனம், குறி சொல்லல், விந்தைகள், கனவுகள் போன்றவைகள் அதிக மாக இடம் பெற்றுள்ளன. ஆனால் அவர் தாம் நேரில் கண்ட நிகழ்ச்சிகளை உண்மையாகவே எழுதி வைத்துள்ளார். வெளிப் பார்வைக்கு கிறிஸ்தவர் போல அவர் காட்சியளித்தாலும், அகத்திலே ஒரு கிரேக்கராகவே அவர் திகழ்ந்தார் என்பதை அவரது நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. அதோடு 'எல்லாம் விதியின் செயல்' என்ற விதிக் கோட்பாடு எதையும் நம்பக் கூடாது என்ற ஐயுறவாதகக் கோட்பாடும் (Skepticism) இதில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

### அறிவியலும் தத்துவமும்

பைஸான்ஷியர்கள் காலத்தே கல்வியறிவு பெரிதும் முன்னேறி யிருந்தது. ஆரம்பக்கல்வி, நம்நாட்டு குருகுல முறையில் தனிப் பட்ட ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டது. உயர்தரக் கல்வியை அரசாங்கத்திடமிருந்து ஊதியம் பெற்ற பேராசிரியர்கள் கற்பித்தனர். நல்ல பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஜுலியன் என்ற மன்னர் ஒரு தேர்வு முறையை ஏற்படுத்தினார். அதில் வெற்றியடைந்தோருக்கு மட்டுமே கல்வி கற்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி பெறாத கல்விமான்கள் யாருக்கும் கற்பிக்கலாகாதென தடைவிதிக்கப்பட்டது. அலெக் ஸாந்திரியா, ஏதென்ஸ், கான்ஸ்டான்டிநோபில், ஆன்டியோக் போன்ற நகரங்களில் மருத்துவம், தத்துவம், இலக்கியம், சொல் வன்மைக்கலை ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டன. மருத்துவத் துறையில் சிறந்த முன்னேற்றம் அக்காலத்தே காணப்பட்டது. ஜுலியப் பேரரசரின் அரசாங்க வைதியரான ஒரிபேசியஸ் (Oribasias) என்பவர் ஒரு மருத்துவ களஞ்சியத்தை உருவாக்கினார்.

அவரது சமகாலத்தவரான ஆக்டியஸ் (Actius) என்பவர் வாய், கண், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றைப் பற்றிய நோய்களை ஆராய்ந்து அவற்றுக்கான மருந்துகளை உண்டாக்கினுர். நீர்அச்ச நோயைப் (Hydropholia) பற்றியும், குரல்வளைச் சுரப்பி நோயினைப் பற்றியும் (Goitre) உள்நாக்கு அழற்சியைப் பற்றியும் (Tonsillitus) அவர் அப்போதே ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டுள்ளார். ட்ராலஸ் நகரத்தைச் சார்ந்த அலெக்ஸாந்தர் குடல் கோளாறுகளைப் பற்றியும் செரிமானச் சிக்கல்களைப் பற்றியும் நுரையீரல் சம்பந்தமான நோய்களைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார்; அறிகுறிகள் மூலமாக நோய் எப்படிக் கண்டுபிடிப்பது அதற்கு எங்ஙனம் சிகிச்சை செய்வது என்பது பற்றி அவர் எழுதிய நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கால்நடை மருத்துவம் இக்காலத்தே நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. வெஜியஸ் என்பவர் அத்தகைய மருத்துவத்தில் கைதேர்ந்தவர்.

மண்ணைப் பொன்னுக்கும் ரசவாத வித்தையை மக்கள் விரும்பிக் கற்றனர். அலெக்ஸாந்திரிய நகரில் அத்தகைய விஞ்ஞானிகள் பலர் இருந்தனர். அவர்கள் தமது முயற்சியில் வெற்றி பெருவிட்டாலும், வேதியியல் உண்மைகள் பலவற்றை அவர்கள் கண்டறிந்தனர்; கலப்பு உலோகங்களை உண்டாக்க அவர்கள் தெரிந்து கொண்டனர். வான சாஸ்திரமும், ஜாதகக் கலையும் அறிவியல் முறையில் நன்கு கணிக்கப்பட்டன. எனினும் மக்களை ஏமாற்றுகின்ற மந்திர வாதிகளும், தந்திரவாதிகளும் இக்காலத்தே ஏராளமாக இருந்தனர். ஹைபேஷியா (Hypatia) என்ற பெண்மணி இக்கால விஞ்ஞானிகளுள் தலைசிறந்தவராவார். டாலமி அபலோனியஸ், பிளேடோ, புளோடினியஸ் போன்ற கிரேக்க அறிஞர்களின் கருத்துக்களை ஒட்டி அவள் வெளியிட்ட உண்மைகளை கிறிஸ்தவர்கள் வேம்பென வெறுத்து ஒதுக்கினர்; ஒரு சமயம் அவள் சென்று கொண்டிருந்த வண்டியிலிருந்து அவளைக் கீழே இழுத்துத் தள்ளி அருகிலுள்ள திருக்கோயிலுக்குள் இழுத்துக் கொண்டுபோய் சித்திரவதைச் செய்து கொன்றனர். உண்மைக்காகத் தன் உயிரைப் பறிகொடுத்த உத்தமிகளுள் ஒருத்தியாக ஹைபேசியா விளங்குகிருள். யோகம், போகம் அதாவது ஸ்டாயிஸிஸம், எபிக்கூரியானிஸம் ஆகிய தத்துவங்கள் மக்களிடத்தில் அவ்வளவாக வளரவில்லை. ஆனல் பிளேடோவின் தத்துவங்களை தெமிஸ்டியஸ், (Themistius), பிரிஸ்கஸ் (Priscus) புரோக்லஸ் (Proclus) போன்றவர்கள் விரும்பிப்படித்தனர். தெமிஸ்டியஸ் அரிஸ்டாடிலுக்கு ஒரு பேருரை எழுதினர். இடைக்கால அறிஞர்கள் பலரது கருத்துக்களுக்கு

அதுவே அடிப்படையாக அமைந்தது. புரொக்லஸ் என்பார் பட்டினியின் மூலமாக எங்ஙனம் ஒருவர் தூய்மை பெற்று தெய்வ கணங்களோடு இரண்டறக் கலந்து இன்பமடையலாம் என்பதை எடுத்துக் காட்டினுர். இத்தகைய கிரேக்கத் தத்துவங்கள் அனைத்தும் கி. பி. 529 இல் தடைசெய்யப்பட்டன. கிரேக்க அறிஞர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இங்ஙனம் கிரேக்க தத்துவமானது பைஸன்ஷியப் பேரரசில் இறுதியாக மாண்டொழிந்தது.

## ஐரோப்பிய நாகரிகத்திற்கு பைஸான்ஷியர்கள் அளித்துள்ள நன்கொடை

ஐரோப்பிய நாகரிகம் பைஸன்ஷியர்களுக்குப் பல வகையிலும் கடமைப்பட்டுள்ளது. அலை அலையாக எழுந்து ஐரோப்பாவிற்குள் புக எத்தனித்த முஸ்லிம்களைத் தடுத்து நிறுத்தி ஐரோப்பிய நாகரிகத்தை இஸ்லாமிய ஆதிக்கத்தினின்றும் காப்பாற்றிய பெருமை பைஸான்ஷியர்களுக்கே உரித்தாகும். பைஸான்ஷியர்கள் இருந்திருக்கவில்லையெனில், ஒருவேளை ஐரோப்பா அனைத்துமே இஸ்லாமிய சமயத்தையோ, அன்றி நாகரிகத்தையோ தழுவியிருத்தல் கூடும். அதைத் தடுத்து கிரேக்க ரோமானியப் பண்பாடுகளைப் பாதுகாத்து, செம்மை செய்து ஐரோப்பாவிற்கு அளித்தவர்கள் பைஸான்ஷியர்களே.

இருண்டகாலம் என்று கருதப்படும் இடைக்காலத்திலேயும், ஐரோப்பியர்கள் வெளிவருவதற்கு உதவி செய்தவர்கள் பைஸான்ஷியர்களேயாவர். கீழை நாகரிகத்தோடு கிரேக்க ரோமானியப் பண்பாடுகளைக் கலந்து அக்கலவையை கிறிஸ்தவ சமயத்தில் தோய்த்து ஒரு புதிய பண்பாட்டை உருவாக்கி அவர்கள் ஐரோப்பியர்களுக்கு அளித்தார்கள். அதன் திரண்ட பயனே நவீன ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கமாகும்.

கான்ஸ்டான்டிநோபில் நகரத்திலிருந்து ஐரோப்பாவிற்குச் சென்ற அறிஞர்கள் பலர் கிரேக்க இலக்கியத்தில் நல்ல பயிற்சி பெற்றிருந்ததால் அவர்கள் கிரேக்க இலக்கியங்களையெல்லாம் தொகுத்து ஐரோப்பாவிற்கு வழங்கினுர்கள். மக்கி, அழிந்து போய்க் கொண்டிருந்த கைப்பிரதிகளை அவர்கள் பொன்னே போல் போற்றி, காத்து தமது பிற்கால சந்ததியருக்கு விட்டுச் சென்ருர்கள். கிரேக்க கலைக் களஞ்சியங்களை உருவாக்கியளித்தார்கள். பண்டைக்கால அறிவுகளின் கருவூலங்களாக அவை திகழ்கின்றன. கீழை ரோமானியப் பேரரசர்கள்

இதாலியின் மீது தாம் செலுத்தி வந்த செல்வாக்கை கைவிட்ட போதும்கூட அவர்களுடைய பழைய குடிமக்கள் பலர் தொடர்ந்து ரோமிலேயே வாழ்ந்து வரலாயினர். இன்னும் சில பைஸான்ஷியப் பேரரசர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை துன்புறுத்தி நசுக்கிய போது பல கிரேக்க அறிஞர்கள் இதாலிக்கு ஓடி வந்து விட்டார்கள். அவர்கள் இதாலிய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் வாதிட்டார்கள்.

பைஸான்ஷியர்கள் வாணிபத்தில் வல்லவர்களாய் இருந்த காரணத்தினால் அவர்கள் கீழை நாடுகளுக்கும், மேலை நாடுகளுக்கும் ஒரு கலாசார உறவை ஏற்படுத்தினர். கிரேக்கர் இலக்கியங்கள் பல இதாலியில் நன்கு பயிலப்பட்டன. இவ்விரண்டு நாகரிகங்களின் இணைப்புப் பாலமாக அவர்கள் விளங்கினர். பதினைந்தாம் நூற்றாண்டில் இதாலியில் கிரேக்க இலக்கியங்கள் பெரிதும் செல்வாக்குப் பெறுவதற்குரிய அடிப்படையை அளித்துதவியவர்கள் பைஸான்ஷியர்களேயாவர்.

கலைத் துறையில்தான் பைஸான்ஷியர்களின் செல்வாக்கு ஐரோப்பாவில் பெரிதும் காணப்பட்டது. பைஸான்ஷியர்கள் தங்களுடைய திருக்கோயில்களில் மொசைக்குகள் என்னும் வண்ணக் கற்களைப் பயன்படுத்துவதைப் பார்த்துதான் ஐரோப்பியர்கள் தங்கள் கோயில்களின் சன்னல்களில் பலநிறம் வாய்ந்த கண்ணாடித் துண்டுகளைப் பதித்தனர் என்று சொல்லப்படுகிறது. இதாலியில் உள்ள பெரும் பெரும் திருக்கோயில்கள் பல பைஸான்ஷிய முறையிலேயே கட்டப்பட்டதாகத் தெரிகிறது. வெனிஸ் நகரத்திலுள்ள செண்ட் மார்க் எனும் கோயில் பைஸான்ஷிய கட்டிடக்கலையின் அடிப்படையிலேயே அமைந்ததாகும். ஒரு சிலுவையின் வடிவத்தில் திருக்கோயிலை அமைத்தல், அதன் நடுவிலுள்ள சதுரமான மண்டபத்தின் மீது பிரம்மாண்டமான குவிமாடங்களை எழுப்பல், சதுரக் கட்டிடத்தின்மீது உருண்டையான குவிமாடத்தை எழுப்பல், நாற்புறத்திலும் தூண்களை எழுப்பி அவற்றின்மீது நான்கு பெரும் வளைவுகளை அமைத்து இறுதியில் அவ்வளைவுகளின் மீது குவிமாடத்தைக் கட்டுதல், கண்ணாடி, தந்தம் இவற்றைக் கொண்டு கட்டிடங்களை அலங்கரித்தல், தளங்களிலும், கூரையின் அடிப்பாகத்திலும் மொசைக் வண்ணக் கற்களைப் பதித்தல் போன்ற முறைகளை ஐரோப்பியர்கள் பைஸான்ஷியர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார்கள். பைஸான்ஷிய ஓவிய முறையும் ஐரோப்பிய கலைஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. வெனிஸ் நகரத்து ஓவியங்களும்,

எல் கிரக்கோ (El Gerco) என்ற ஓவிய முறையும் பைஸான்ஷிய ஓவியக் கலைக்குப் பெரிதும் கடன்பட்டவையாகும்.

பண்டைய ரோமானியர்களின் சட்ட நுணுக்கங்களை எல்லாம் தொகுத்து பிற்கால ஐரோப்பியர்களுக்கு அளித்தவர்கள் பைஸான்ஷியர்களே. ஜஸ்டினியன் என்ற பேரரசர் தொகுத்த கார்ப்பஸ் ஜுரிஸ் (Corpus Juris) என்ற சட்ட தொகுதிதான் இடைக்கால ஐரோப்பியர்களுக்கும் நவீன கால ஐரோப் பியருக்கும் சட்டத் துறையில் வழி காட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தது எனலாம்.

இங்ஙனம் பண்டைய நாகரிகமான ரோமானிய நாகரிகம் சிதைந்து போன பின்னரும் அதனுடைய முக்கியக் கூறுபாடுகளை அழியாமல் காத்து அதே சமயத்தில் கீழை நாட்டுப் பண்பு களையும் ஓரளவு அதில் குழைத்து அதன்மூலம் இடைக்காலத் திற்கும் நவீன காலத்திற்கும் ஒரு பாலமாய் அமைந்து வரலாற்றுத் தொடர்புகெடமல் பாதுகாத்த பெருமை பைஸான்ஷிய நாகரிகத்திற்கே உரியதெனலாம்.

# 4. இஸ்லாமிய சமயமும் சாரசனிக் நாகரிகமும்

(Saracenic Civilisation)

### இஸ்லாமிய சமயத்தின் எழுச்சி : முகமது நபி

இஸ்லாமிய சமயத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் வரலாற்றில் நடைபெற்ற அரும் பெரும் அதிசயங்களுள் ஒன்ருகும். சமயத் துறையில் மட்டுமின்றி அரசியல் துறையிலும் இஸ்லாம் அன்றும் இன்றும் பெரும் செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது. இச் சமயத்தை உண்டாக்கியவர் முகம்மது நபி என்னும் பெரியாரா வார். அவர் கற்சிலைகளைத் தெய்வங்களாக வழிபட்ட ஓர் அரபுக் குடியில் கி. பி. 569-ஆம் ஆண்டில் மெக்கா நகரில் பிறந்தார். மெக்கா நகரில் இருந்த ஒரு தூய கோயிலின் சுவரில் சிறிய கருங்கல் ஒன்றைப் பதித்து அவரது மூதாதையர் வழிபட்டு வந்தனர். அரேபியாவில் வாழ்ந்த ஏனைய குடிகள் பல்வேறு தெய்வங்களைச் சிலை வடிவில் வைத்து வணங்கி வந்தனர். முகமதுவுக்கு இளவயதிலிருந்தே சிலை வணக்கத்தின் மேல் ஒரு தீராத வெறுப்பு ஏற்பட்டது. நாற்பது வயது வரை அவர் ஒரு சாதாரண வணிகராகவே இருந்தார். அப்போது சிரியா முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்த யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்களோடு கூடிப்பழகி, அவர்களது சமயக் கருத்துக்களைக் கற்றுக் கொண்டார். கடவுளைப் பற்றி அவர் ஆழ்ந்து சிந்திக்க லானர். அரேபியர்கள் பல்வேறு தெய்வங்களை வணங்குவ தாலேயே அவர்களிடம் ஒற்றுமை இல்லை என்பதை அவர் அறிந்து கொண்டார். கதீஜா என்ற செல்வமிக்க விதவையை மணந்து கொண்ட பின்னர் அவருடைய புகழும், செல்வாக்கும் அதிகரித்தது. அடிக்கடி அவர் தியானத்தில் ஆழ்ந்தார். அச் சமயங்களில் பல உண்மைகள் அவருடைய மனத்தில் பளிச்சிட்டன. இறைவனது அருளால்தான் அத்தகைய கருத்துக்கள் தம் அகத்தே எழுகின்றன என்று அவர் நம்பினர். அவற்றை அவர் முதலில் தமது மனைவிக்கும், நண்பர்களுக்கும் அறிவித்தார். அவர்கள் அவற்றை மகிழ்ந்து வரவேற்றதைக்

கண்ட முகமது மக்கள் அனைவருக்கும் தமது சீரிய கருத்துக்களைப் பரப்புவதில் முனைந்தார்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', என்பதே முகமதுவின் முக்கிய போதனையாகும். கடவுள் அருபியானவர். எல்லாம் உணர்ந்தவர். எங்கும் நிறைந்தவர். அவரை சிலைவடிவில் வழிபடுவது தவறு. அவர் தீர்க்கதரிசிகளின் மூலமாக தமது நற்செய்தியை மக்களுக்குப் பரப்புகிறார். ஆபிரகாம், மோசஸ், கிறிஸ்து முகமது போன்றவர்கள் அத்தகைய இறைவனின் தூதுவர்களேயாவர். அவர்களின் வார்த்தைகளை நம்பி கடவுளுக்குப் பணிபுரிகின்றவர்கள் இறந்தபின் சொர்க்கத்திற்குச் செல்வார்கள். நம்பாதவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் என்று போதித்து வந்தார். தியானத்தில் அவருக்கு வெளிப்பட்ட உண்மைகளை எழுதச் செய்து தூயகுரான் என்ற ஒரு நூலை அவர் உண்டாக்கினார். அல்லா அன்றி தெய்வம் வேறு ஒன்றில்லை; முகமதுவே அல்லாவின் கடைசி தீர்க்கதரிசி என்று அவர் பறையறைந்தார். மூஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்றும், அவர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் சமமாக நடத்த வேண்டுமென்றும் அவர் பெரிதும் வற்புறுத்தினார். அரசர் களாலும், மத குருக்களாலும் ஒடுக்கப்பட்டு வந்த ஏழை எளிய மக்கள் அனைவரும் முகமதுவின் அறிவுரைகளைப் பெரிதும் வரவேற்றனர். சடங்குகளையும், சிலை வணக்கத்தையும் அவர் ஓயாது சாடியதால் அவற்றின்மூலம் பிழைத்துவந்த வைதிகக் கூட்டம் அவரை வெறுத்தது. மது அருந்துதலையும், பல மனைவி யரை (நான்குக்கு மேல்) மணந்து கொள்ளுவதையும், ஒழுக்க மற்ற வாழ்க்கையையும் கண்டித்ததால் மெக்கா நகர செல்வந் தர்கள் பலர் அவரை எதிர்த்தனர். எனவே மெக்கா மக்கள் அவரை ஒருமுகமாக எதிர்த்தனர். இதைக் கண்ட முகமது மெதினா என்னும் நகருக்குச் சென்றார். அந் நிகழ்ச்சி கி. பி. 622 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அவ்வாண்டு முஸ்லிம் சகாப்தத்தின் துவக்க ஆண்டாகக் கருதப்படுகிறது. முஸ்லிம் சகாப்தத்தின் பெயர் ஹிஜிரா எனப்படும். ஹிஜிரா என்றால் 'ஓட்டம்' என்பது பொருள். முகமது அவ்வாண்டில் மெதினாவுக்கு ஓட்டம் எடுத்ததாலேயே இப் பெயர் ஏற்பட்டது.

மெதினா நகருக்குச் சென்ற பின்னர் முகமதுவின் செல்வாக்கு அதிகரித்தது. தற்காப்புக்காக அவர் ஒரு சேனையைத் திரட்டினார். அதன் உதவியைக் கொண்டு கி. பி. 630 ஆம் ஆண்டில் அவர் மெக்காவை கைப்பற்றினார். ஒரு சில ஆண்டுகளில் அரேபியா அனைத்தையும் அவர் வென்று தனிப் பேரரசை நிறுவினார்.

இங்ஙனம் சிதறிக் கிடந்த அரேபிய மக்களை ஒன்று சேர்த்து அவர்களிடத்தில் ஓர் ஒற்றுமையையும், தேசிய விழிப்பையும் ஏற்படுத்திய பெருமை முகமதுவிற்கே உரியதாகும். சிரியா, பாரசீகம் போன்ற இடங்களிலும் அவர் தமது மதத்தைப் பரப்ப எண்ணினர். ஆனல் கி. பி. 632 ஆம் ஆண்டில் அவர் இப்பூதவுடலை விடுத்து புகழுடம்பை எய்தினர்.

## அராபியப் பேரரசு

### கலீபாக்கள் (Caliphs)

முகமதுவின் மரணத்துக்குப்பின் அவரது பணியைத் தொடர்ந்து ஆற்றியவர்கள் கலீபாக்கள் எனப்படுவர். கலீபா என்றால் பிரதிநிதி என்பது பொருள். அதாவது முகமதின் பிரதிநிதிகளாக அவர்கள் விளங்கினர். நாளடைவில் கலீபா என்ற சொல் விசுவாசிகளின் தளகர்த்தர் (Commander of the faith) எனப் பொருள்பட்டது. அபூபக்கர் (Abu Bakr) முதலாம் உமர் (Omar I 634-44) ஆகியோர் முதல் இரு கலீபாக்களாவர். இவர்களில் உமர் மிகவும் புகழ் பெற்றவர். பாரசீகம், சிரியா, பாலஸ்தீனம், ஆசியா மைனர் போன்ற நாடுகளையெல்லாம் வென்று உமர் முகமதுவின் கனவுகளை நனவாக்கினர். கி. பி. 641 ஆம் ஆண்டு அவர் எகிப்தில் புகுந்து புகழ்பெற்ற அலெக்சாந்திரிய நூலகத்தைத் தீக்கிரையாக்கினர். வட ஆப்பிரிக்க நாடுகளில் அவர் இஸ்லாமிய சமயத்தைப் பரப்பினர். பேரரசின் தலைநகரம் மெக்காவிலிருந்து, டமாஸ்கஸுக்கும், அதன்பின் பாக்தாத்துக்கும் மாற்றப்பட்டது. ஸ்பெயின் நாட்டு மூலமாக அரேபியர்கள் ஐரோப்பாவிற்குள் புக முயற்சித்தனர். கி. பி. 711 ஆம் ஆண்டில் தரீக் என்ற அராபியத் தலைவன் ஸ்பெயினின் தெற்குக் கடற்கரையில் வந்து இறங்கி காடிஸ் (Cadiz) துறைமுகப் போர்க்களத்தில் ராடரிக் (Roderic) என்ற ஐரோப்பிய மன்னரை வென்றார். விரைவிலேயே ஸ்பெயின் முழுவதும் அரேபியர்கள் வசமாயிற்று, பிரனீஸ் மலைகளைக் கடந்து அராபியர்கள் பிரான்சுக்குள் புக முயற்சித்தனர். ஆனல் சார்ல்ஸ் மார்டல் (Charles, the Martel) என்ற பிரஞ்சு இளவரசர் அவர்களை டூஸ் என்னும் போர்க்களத்தில் வென்று துரத்தி விட்டார் (கி. பி. 732).

ஸ்பெயினில் ஆட்சி புரிந்த அமீர்கள் உமாயத் (Omayyad) பிரிவைச் சேர்ந்தவர்கள். கார்டவா (Cordova) என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு அவர்கள் ஸ்பெயினில் ஆட்சி புரிந்தனர். பத்தாம் நூற்றாண்டளவில் அராபியப் பேரரசு மூன்றாகப்

பிரிந்தது. பாக்தாத், கெய்ரோ, கார்டவா ஆகிய ஊர்களைத் தலைநகராகக் கொண்டு மூன்று கலீபாக்கள் ஆட்சி புரிந்தனர். கார்டவாவில் ஆட்சி புரிந்த மூன்றும் அப்துர் ரஹிமான் என்பவர் மிகச் சிறந்த அரசராவார். அவர் காலத்தில் ஸ்பெயின் ஐரோப்பாவிலேயே மிகச் சிறந்த நாகரிகம் உடையதாய்த் திகழ்ந்தது. அழகு கொழிக்கும் அரண்மனைகளும், கம்பீரமான மசூதிகளும், எழில் நிறைந்த பூங்காக்களும், ஒளி நிறைந்த வீதிகளும், பொதுக் குளியல் குளங்களும், நூலகங்களும், மருத்துவ மனைகளும் நிறைந்ததாய் கார்டவா நகரமானது ஐரோப்பாவுக்கே ஓர் அணியென விளங்கிற்று. கார்டவாவில் உள்ள பெரும் மாதா கோயிலும் கிரனடாவில் (Granada) உள்ள அல்ஹம்பரா என்ற மசூதியும் முஸ்லிம்களின் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு நல்ல சான்று பகர்கின்றனவாய் இன்றும் நின்று நிலவுகின்றன. மற்றும் அராபியர்கள் பல கலைகளை ஐரோப்பியர்களுக்கு வழங்கினர். மருத்துவம், கணிதம், தாவர நூல், தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் முஸ்லிம்கள் ஐரோப்பியருக்கு அளித்த பரிசுகள் பலப்பல. கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாடில், பிளேடோ போன்றவர்களின் நூல்களை மொழிபெயர்த்து அவர்கள் ஐரோப்பியருக்கு வழங்கினர். வேளாண்மையை வளர்த்து பருத்தி, அரிசி, ஆரஞ்சு, கரும்பு இவற்றை அவர்கள் பயிரிட்டனர்.

அப்துர் ரஹிமானுக்குப் பின்னர் ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அதனுல் முஸ்லிம்களின் செல்வாக்கு குறைந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டின் அளவில் கிரனடாவில் மட்டுமே முஸ்லிம்கள் அல்லது மூர்கள் ஆட்சி புரிந்தனர். கி. பி. 1492 ஆம் ஆண்டில் ஸ்பானியர்கள் மூர்களை அங்கிருந்தும் துரத்தியடித்து விட்டனர்.

### அரபு அல்லது சாரசனிக் நாகரிகம்

சாரசன் என்ற சொல்லுக்கு ஆதியில் அரபுகள் என்ற பொருளே வழங்கப்பட்டது. நாளடைவில் இஸ்லாம் மதத்தைத் தழுவிய யூதர்கள், பாரசீகர்கள், சிரியர்கள் ஆகிய அனைவரையுமே குறிக்கும் சொல்லாக அது வழங்கப்படலாயிற்று. எனவே சாரசனிக் நாகரிகத்தைத் முதலில் தோற்றுவித்தவர்கள் அராபியர்களேயாவர். இருள் நிறைந்ததாகக் கருதப்படும் இடைக்கால ஐரோப்பாவில் ஒளியைத் துவக்கியவர்கள் அரேபியர்களே ஆவர். இடைக் காலத் தொடக்கத்தில் லண்டன், பாரீஸ் போன்ற நகரங்கள் குப்பையும், கூளமும் நிறைந்து ஆட்சிக்கு அருவருப்பான நிலையில் இருந்த காலத்தில் அரேபியர்

களின் நகரங்களான கார்டோவாவும், பாக்தாத்தும் அழகிய கண்கவர் நகரங்களாய் ஒளி வீசின. ஐரோப்பிய நகரங்களின் வீதிகளில் இரவில் இருள் மண்டிக் கிடந்த வேளையில் கார்டோவா நகர வீதிகளில் ஆயிரக் கணக்கான விளக்குகள் ஒளியை உமிழ்ந்த வண்ணம் இருந்தன. இடைக் கால ஐரோப்பியக் கோட்டைகள் காற்றோட்டமின்றி, கலைச் சிறப்பு எதுவுமின்றி கட்டப்பட்டிருந்த நேரத்தில் பல்வேறு ஆடம்பரப் பொருள்களாலும் நிறைந்த பெரிய அரண்மனைகளை அராபியர்கள் கட்டத் தெரிந்திருந்தனர். ஐரோப்பியர்கள் உடல் தூய்மையைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப் படாது இருந்த காலத்தில் முஸ்லிம்கள் தினமும் குளித்தல், முகத்தை மழித்தல், ஆடைகளை வெளுத்து தூய்மையாக உடுத்துதல் போன்ற நற்பழக்கங்களைக் கொண்டிருந்தார்கள். ஐரோப்பாவில் செல்வந்தர்கள் கூட கல்விச் செல்வத்தைப் பெற முடியாமல் இருந்த காலத்தில் முஸ்லிம்கள் பல கல்விக் கூடங்களை வைத்து நடத்தி வந்தனர். ஐரோப்பிய மருத்துவர்கள் மந்திரத் தாலும், தந்திரத்தாலும் நோய்களைக் குணப்படுத்திய அக் காலத்தில் முஸ்லிம்கள் உயர்ந்த மருந்து வகைகளைக் கொண்டு நோய்களைக் குணமாக்கினர்.

இங்ஙனம் அராபியர்கள் இடைக் காலத்தே தனிநாகரிகம் மிக்கவர்களாய் விளங்கியதற்கு முக்கிய காரணம் அவர்களது வெளியுலகத் தொடர்பேயாகும். உண்மையில் அராபியர்கள் சொந்தமாகப் படைத்த நாகரிகப் பண்புகள் ஒரு சிலவேயாகும். மற்றபடி ஏனைய நாகரிக மக்களிடமிருந்து கடன் வாங்கி அவற்றை தமக்கே உரிய முறையில் மாற்றியமைத்து தமதாக்கிக் கொண்ட பெருமையில்தான் அராபியர்கள் சிறந்து விளங்குகின்றனர். அரேபியக் கலீபாக்கள் மிக்க தாராள சிந்தை வாய்ந்தவர்கள். அறிஞர்கள் எந்த நாட்டினராயிருந்தாலும் அவர்களை அழைத்து அவர்களுக்குப் பொன்னும், பொருளும் அளித்துப் போற்றினர். முஸ்லிம் நூலகங்களிலும் பல்கலைக் கழகங்களிலும், கிரேக்கர் களும், பாரசீகர்களும், எகிப்தியர்களும், யூதர்களும் வரவழைக் கப்பட்டு அரபு மொழியில் அவர்களுக்குத் தெரிந்ததையெல்லாம் எழுதும்படி கலீபாக்கள், பணித்தனர். அங்ஙனம் ஆதரிக்கப்பட்ட யூத அறிஞர் மோசஸ் மெய்மானிடஸ் (1135-1204) என்பவ ராவார். அவர் சுல்தான் சாலடின் என்பாருக்கு மருத்துவராய் இருந்ததோடு தத்துவ ஞானியாகவும் இருந்தார். அவருடைய நூல்களிலிருந்தே ஹீப்ரு மொழியின் பெருமையை ஐரோப்பியர் கள் அறிந்தனர். இந்தியாவிலிருந்தும் பல அறிஞர்கள் சென்று கலீபாக்களின் அவையை அலங்கரித்தனர். இந்தியக் கணிதம், அராபியர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. இந்திய எண்

முறைகளை அராபியர்கள் கற்று ஐரோப்பியர்களுக்கு வழங்கினர். அதை அறியாத ஐரோப்பியர்கள் அவற்றை அராபிய எண் முறைகள் என்று அழைத்தனர். இங்ஙனம் நாற்றிசையிலுமிருந்து வந்த அறிவுகளை எல்லாம் அராபியர்கள் திரட்டிப் பக்குவப்படுத்தி வருங்காலத்துக்கு விட்டுச் சென்றுள்ளனர். பல நாடுகளோடு வாணிபம் செய்து பண்ட மாற்றத்தில் ஈடுபட்ட அராபியர்கள் அரிய கருத்துக்களையும் பல இடங்களிலிருந்து சேகரித்துத் தொகுத்து வைத்துச் சென்றுள்ளது உலக நாகரிகத்துக்கு அவர்கள் செய்த ஒரு பெருஞ் சேவையாகும்.

## அராபியர்கள் இவ்வுலக நாகரிகத்துக்கு அளித்துள்ள நன்கொடை

### 1. மெய்யறிவுத்துறை

மெய்யறிவுத் துறையில் மேலை நாடுகள் அராபியர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. கிரேக்க மெய்யறிவு நூல்களை மொழி பெயர்த்து அவற்றை மேலை நாட்டினர்களுக்கு வழங்கியவர்கள் அவர்களே. அரிஸ்டாடில், பிளேட்டோ ஆகிய அறிஞர்களின் நூல்களை இடைக் காலத்தவர் படித்து அதன் மூலம் ஒரு புதிய தத்துவ முறையைக் கண்டு பிடித்தனர். அதன்படி நம்பிக்கையைவிடப் பகுத்தறிவே உயர்ந்தது. அறிவின் அடிப்படையிலேயே சமய உண்மைகள் விளக்கப்பட வேண்டும். இந்த புவனத்துக்குத் தோற்றமும் மறைவும் கிடையாது. அது சதா தோன்றிக்கொண்டே இருப்பது. இறைவனிடமிருந்து சதா வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற பொருளே இவ்வகில உலகமுமாகும். இவ்வுலகில் நடைபெறுவன அனைத்தும் சங்கிலித் தொடர் போல் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. காரணமின்றி எதுவும் நடைபெறுவதில்லை. காரணங்களுக்கெல்லாம் முதற் காரணமாக விளங்குபவன் இறைவன். ஆனால் அவ்விறைவனும் கூட நீதிக்கும் நேர்மைக்கும் விரோதமாகப் போக முடியாது. தனிப்பட்ட ஜீவன்கள் அழியக் கூடியன. ஆனால் இப்புவனமெங்கும் நிறைந்திருக்கின்ற ஆன்மா ஒன்றே என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியது. இத்தகைய அராபிய மெய்யறிவு முறையானது இடைக் கால சமய அறிஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. செண்ட் தாமஸ் அக்யூனஸ் போன்ற அறிஞர்கள் விவிலிய நூலில் காணப்படுகின்ற சமய உண்மைகளை அறிவின் துணை கொண்டு விளக்கப் புகுந்து பல நூல்களை எழுதி உள்ளமைக்கு இத்தகைய செல்வாக்கே காரணமெனலாம். இடைக்கால உலக மெய்யறிஞர்களைப் பெரிதும் கவர்ந்த அராபிய

அறிஞர்கள் மூவராவர். அவர்கள் அல்கிண்டி (Alkindi- அல்ஃபராபி (Alfarabi) அபிசென்னு (Abicenna) என்போராவர். கார்டோவா நகரத்தில் வாழ்ந்த அவரோஸ் (Averroes) என்னும் மெய்யறிஞர்தான் (கி. பி. 1126-1198) கிறிஸ்தவ சமயக் கல்வி மான்களைப் பெரிதும் ஊக்குவித்தவராவார். அவர்களிட மிருந்தே நம்பிக்கை அறிவு ஆகிய இரண்டும் கலந்த ஒரு மெய் யறிவுத் துறை (Scholasticism) இடைக் கால ஐரோப்பாவில் வளரலாயிற்று.

## 2. அறிவியல்

அறிவியல் துறையில் அராபியர்கள் மெச்சத்தக்க முன் னேற்றம் கண்டனர். வான இயல், கணிதம், வேதியியல், பௌதிகம், மருத்துவம் ஆகிய துறைகளில் அவர்கள் சிறப்பாக முன்னேறியிருந்தனர். உலகங்கள் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந் துள்ளன என்ற அரிஸ்டாடிலின் கொள்கையை அவர்கள் மறுத்தனர். பூமியைச் சுற்றி சூரியன் வட்டமிடுகின்றது என்ற அரிஸ்டாடலின் கோட்பாட்டையும் அவர்கள் மறுத்ததோடு பூமி ஓர் அச்சில் தன்னைத் தானே சுற்றிக் கொள்கின்றது என்றும், அதே சமயம் சூரியனையும் சுற்றி வருகிறது என்றும் துணிந்து கூறினர். வானத்தில் கோள்களின் நிலையை நன்கு கணித்துத் துல்லியமான நாட்காட்டியை (Calendar) அவர்கள் அமைத்தனர். அவற்றுள் மிக மிகத் துல்லியமானது உமர்காயாம் (Omar khayam) என்பவரால் இயற்றப்பட்டதாகும். முக்கோண கணிதம் (Trigonometry) குறியீட்டுக் கணிதம் (Algebra) ஆகிய இரண்டிலும் அவர்கள் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். இன்று அராபிய எண்கள் என்று ஐரோப்பாவில் வழக்காற்றில் உள்ள எண்களை வழங்கிய பெருமை அராபியர்களுக்கே உரியது. ஆனால் அதை அவர்கள் இந்தியாவிலிருந்தே எடுத்துச் சென்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஒளியின் குணங்களைப் பற்றிய பல உண்மைகளை அவர்கள் அறிந்திருந்தனர். ஒளிச் சிதறல், ஒளி ஊடுருவல், ஒளியின் வேகம் இவற்றைப் பற்றிய அறிவியல் உண்மைகளை அவர்கள் தம் நுண்ணறிவால் கண்டு பிடித்தனர். பொருள்களைப் பெரிதாகக் காட்டக் கூடிய லென்சுகளின் பயனை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். சாதாரண உலோகங்களைப் பொன்னாக மாற்றும் முயற்சியில் அவர்கள் பெரிதும் ஈடுபட்டனர். அது வெற்றி பெறவில்லை. எனினும் அதன் விளைவாகப் பல வேதியியல் பொருட்களை அவர்கள் கண்டு பிடித்தனர். சோடா, ஆலம் (Alum) போரக்ஸ் (Borax) பாதரஸத்தின் பைகுளோரைடு (Bichloride of Mercury) சில்வர் நைட்டிரேட்டு (Silver Nitrate) சால்ட் பீட்டர் (Salt Peter) நைட்ரிக் அமிலம் (Nitric Acid)

சல்பூரிக் அமிலம் (Sulphuric Acid) முதலியவை அவற்றுள் முக்கியமானவைகளாகும். திரவங்களை வடிகட்டியும் ஆவியாக்கியும் எப்படித் துப்புரவாக்குதல் என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

### 3. மருத்துவம்

மருத்துவத் துறையில் ஐரோப்பியர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர்கள் அராபியர்களேயாவர். "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்ற குறளுக்கிணங்க அவர்கள் நோயின் அடிப்படையான காரணங்களைக் கண்டு பிடிப்பதில் பெரிதும் அக்கறை காட்டினர். தொற்று நோய்கள் இஃனின்னவை என்பதை அவர்கள் கண்டு அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை வகுத்தனர். காச நோய், நெஞ்சுச் சளி போன்ற தீராத நோய்களின் தன்மையையும், நரம்பு சம்பந்தமான பற்பல வியாதிகளின் குணங்களையும் அவிசென்னா என்ற மருத்துவ அறிஞர் கண்டு வெளியிட்டனர். நீர், புழுதி இவைகள் மூலம் நோய்கள் பரவக் கூடும் என்பதை அவர் எடுத்துக் காட்டினர். ஏறக்குறைய பதினேழாம் நூற்றாண்டு வரையில் அவரது மருத்துவ முறையே ஐரோப்பாவில் கடைப் பிடிக்கப்பட்டது. உடலை சோதித்து நோயைக் கண்டறியும் முறையை ரேஸஸ் (Rhazes) என்ற மருத்துவ வல்லுநர் உணர்ந்து வெளியிட்டார். அம்மை (Small pox) என்ற கடும் நோயானது எவ்வாறு நுண்ணிய கிருமிகளால் தோற்றுவிக்கப்படுகிறது என்பதை அவர் கண்டு பிடித்தார். மற்றும் பல வல்லுநர்கள் புற்று நோய், வயிற்று வலி ஆகியவற்றை எவ்வாறு அவை தோன்றுவதற்கு முன்னேயே ஒரு சில அறிகுறிகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்கிற முறையைக் கண்டு பிடித்தனர். நஞ்சுண்டவர்களைப் பிழைக்க வைக்க மாற்று மருந்துகளை அன்னார் பயன் படுத்தினர். கண் நோய்களை அவர்கள் எளிதில் குணமாக்கினர். கொள்ளை நோய் (Plague), என்பது ஒரு தொற்று நோய் என்பதைக் கண்டு பிடித்து அது பரவாமற் தடுத்தற்கான முயற்சிகளை அன்னார் மேற்கொண்டனர். எல்லா வசதிகளும் நிறைந்த மருத்துவ மனைகள் பலவற்றை அராபிய அரசர்கள் கட்டியளித்தனர். சிரியா, எகிப்து, பாரசீகம் ஆகிய நாடுகளில் மட்டும் 34 மருத்துவ மனைகள் அக்காலத்தே கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அத்தகைய மனைகளில் மாணவர்கள் மருத்துவம் பயின்றனர். அவர்களுக்கு உதவியாகப் பெரிய நூலகம் ஒன்று ஒவ்வொரு மருத்துவ மனையிலும் இருந்தது. மாணவர்களுக்கு விரிவுரைகள் வழங்கவும், தேர்வுகளை நடத்தவும் தேர்வில் வெற்றி பெற்றவர்

களுக்குப் பட்டங்கள் அளிக்கவும் மருத்துவமனைகள் பயன் படுத்தப்பட்டன. நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை நடை பெறும்போது வலி தெரியாமல் இருக்க மயக்க மருந்துகளை அரபு மருத்துவர்கள் கொடுப்பது வழக்கம். மிகக் கடினமானவை என்று இக் காலத்திலும் கருதத் தக்க பெரும் அறுவை சிகிச்சைகளை அவர்கள் எளிதாகச் செய்து முடித்தார்கள் என்பதை அறிகிறோம். அக்காலத்தே புகழ் பட வாழ்ந்த மருத்துவர்களில் மோசஸ் மெய்மோனிடாஸ் (Moses Maimonidas) (கி. பி. 1135-1204 கி. பி.) என்பார் குறிப்பிடத் தகுந்தவராவார். அவர் ஒரு யூதர். சுல்தான் சாலடின் என்பாரின் அரண்மனை மருத்துவராக அவர் பணியாற்றினர். புற்று நோய், வயிற்று வலி இவற்றை அவை வருமுன்னரே எவ்வாறு கண்டு பிடிப்பது என்பதை அவர் அறிந்து வெளியிட்டார். அவிசென்ன என்ற மருத்துவர் கிரேக்க மருத்துவ வல்லுனர்களான கெலன் (Galen) ஹிப்போகிரடிஸ் (Hippocrates) ஆகியோரின் நூல்களை மொழி பெயர்த்து ஐரோப்பாவில் புகுத்தினர். அவரே சொந்தமாகவும் ஒரு மருத்துவ நூலை எழுதினர். இங்ஙனம் அராபிய அறிஞர்கள் மருத்துவத் துறைக்குப் பெருங் கொடையை நல்கிச் சென்றனர்.

### 4. இலக்கியம்

இலக்கியத் துறையிலும் ஐரோப்பியர்களுக்கு பல வகையில் வழி காட்டியாய் இருந்தவர்கள் அராபியர்களேயாவர். சீனர் களிடமிருந்து கற்றறிந்த காகிதத்தின் பயனை அவர்கள் ஐரோப் பாவிற்குள் நுழைத்தனர். அதனுல் கல்வி பரவியது. அராபி யர்கள் பாரசீகர்களிடமிருந்தே கல்வித் துறையில் பெரிதும் ஊக்கம் பெற்றனர். அவர்களது கவிதைகள் பாரசீகக் கவிதை களைத் தழுவியே எழுதப்பட்டன. அவற்றில் கற்பனை நயமும், கவிநயமும் ஒருங்கே அமைந்திருந்ததோடு புத்துணர்வும், சிற்றின்ப உணர்வும் பெரிதும் காணப்பட்டன. கிரேக்கர்களின் கவிதைகள் அராபியர்களை அவ்வளவாகக் கவரவில்லை. எனவே தான் அறிவின் ஆதிக்கம் அவற்றில் அதிகம் காணப்படவில்லை; அல்பிர்தாசி (Al Firdousi) எனும் ஓர் ஒப்புயர்வற்ற கவிஞர் ரூபாயத் (Rubaiyat) என்னும் கவிதைத் தொகுப்பை வழங்கி யுள்ளார். ஒமார்கயாமின் கவிதைகள் சாகா வரம் பெற்றவை; வாழ்க்கையை எவ்வாறு ஒருவன் அநுபவிக்க வேண்டுமென்பதை அவரது கவிதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மது, மங்கை இவற்றைச் சுற்றியே அவரது பாடல்கள் பெரும்பாலும் புனையப்பட்டுள்ளன. 'வாழ்க்கையைத் தீர அநுபவித்து விடு' என்பது அவரது சித்தாந்தமாகும். கவிதைகளேயன்றி பல உரை நடை நூல்களையும் அராபிய அறிஞர்கள் உலகுக்கு விட்டுச்

சென்றுள்ளனர். அராபிய இரவுக் கதைகள் (Arabian Nights) என்பன எட்டு ஒன்பதாம் நூற்றுண்டுகளைச் சார்ந்த புகழ் பெற்ற உரை நடை நூலாகும். துணிகரமிக்க காதற் கதைகளைக் கொண்டுள்ள அந்நூல் இன்றும் சுவை குன்ருது பலராலும் படிக்கப்படுகிறது. பாக்தாத் நகர சமுதாய வாழ்க்கையை அக்கதைகள் சித்தரிக்கின்றன. 'அலாவுதீனும் அற்புத விளக்கும்,' 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்பன போன்ற அரபுக் கதைகள் உலக இலக்கியத்துக்கு வழங்கப்பட்ட நிரந்தரக் கொடைகளாகும். இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பஞ்ச தந்திரக் கதைகள் அரபு இலக்கியத்தில் பெரிதும் இடம் பெற்றன. அதைப் படித்த ஐரோப்பியர்கள் அவற்றை ஒட்டிப் பலகதைகளை எழுதினர். சாஸர் என்பார் எழுதிய காண்டர்பரிக் கதைகள், ஈஸாப்பின் கதைகள் முதலியன இந்த ரசத்தைச் சார்ந்தனவேயாகும். பிர்தாஸி என்பார் எழுதிய புக் ஆஃப் கிங்ஸ் (Book of Kings) என்ற நூலிலிருந்தே, மாத்யூ ஆர்னல்டு என்ற புலவர் தமது ஷோரப் அண்ட் ரஸ்தும் (Shorab and Rustum) என்ற கவிதைக்குரிய கருப்பொருளை எடுத்துள்ளார் என்று அறிஞர்கள் கூறுவர். பாக்தாத், கெய்ரோ, கார்டவா போன்ற நகரங்கள் பெரும் பெரும் நூலகங்களை அமைத்து அராபியர்கள் அறிவொளியைப் பரப்பினர். ஹரன்-உல்-ரஷீது போன்ற அராபிய மன்னர்கள், பல கலைஞர்களையும், புலவர்களையும் ஆதரித்தனர்.

### 5. கலைத்துறை

பண்டைய இலக்கியத்தை எவ்வாறு முஸ்லிம்கள் பாதுகாத்து இக்கால சந்ததியினருக்கு, வழங்கினரோ, அதே போன்று பண்டைய கீழை நாட்டு கலைமரபுகளையும் அவர்கள் பாதுகாத்து, வளர்த்து வளமாக்கி, ஐரோப்பியருக்கு வழங்கினார்கள். அவர்களுடைய கலைமரபுகளில் தலையாயது அலங்கார ஒப்பனையாகும். இதுவே ஏனையோரிடமும் காணப்படாத ஒரு தனிப் பண்பாகும். மசூதிகளிலும், பெருங் கட்டிடங்களிலும் இத்தகைய அலங்காரங்கள் பல காட்சியளிக்கின்றன. அவற்றில் அநேகமாக மனித உருவங்களோ, அல்லது விலங்கினங்களின் உருவங்களோ காணப்படுவதில்லை. ஏனெனில் இஸ்லாம் அதை ஒப்புக் கொள்ளுவதில்லை. சமய சம்பந்தமான கட்டிடங்களில் மனித உருவங்களை வரைதல், உருவமற்ற அல்லாவுக்கு செய்யும் பொல்லாப்பாக அவர்கள் அதை எண்ணினர். ஓரளவு சிலை வணக்கத்தின்பாற் பட்டதாகவும் அது கருதப்பட்டது. எனவே சமயச் சார்பற்ற கட்டிடங்களிலெல்லாம், மனித உருவங்களும்

ஏனைய வடிவங்களும் அலங்காரத்திற்காகப் பயன்படுத்தப் பட்டன.

இஸ்லாமிய அலங்காரக் கலையில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுவது அவர்களது சாசனங்களாகும். அச்சாசனங்கள் குரானில் உள்ள ஒரு பகுதியையோ, கவிஞனொருவனது செய்யுளையோ, அன்றி ஒரு வாழ்த்துரையையோ கொண்டு அமைந்திருக்கும். அவை சுவர்களின் மேற்புறத்தில் வரையப் பட்டுள்ள எல்லைக் கோடுகளுக்கு அருகேயுள்ள அல்லது சுருள் தாள் போன்ற ஒப்பனை வேலைப்பாடுகளிலேயோ அமைந்திருக்கும். அவற்றுள் ஒரு சில பெரும் பிரபுவின் பட்டப் பெயரை எடுத்தி யம்பும். அதிலிருந்து அக்கட்டிடத்தின் சொந்தக்காரர்களை நாம் அறிந்து கொள்ள இயலும். சில சமயங்களில் சாசனங்களைப் பொறித்தவர்களுடைய கையெழுத்தும், பொறிக்கப்பட்ட தேதியும், இடமும் அவற்றுள் காணப்படும். எனவே அவை வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படும். இஸ்லாமிய எழுத்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு குரானின் வாசகங்களை செம்மை யான லிபிகளில் எழுதினர். கையெழுத்துக் கலையில் அவர்கள் ஈடும் எடுப்புமற்று விளங்கினர். அழகிய எழுத்துக்கள் அடங்கிய நூல்களைத்தயாரிப்பதில் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். அத்தகைய நூல்களைச் சேகரிப்பதை செல்வந்தர்கள் ஒரு பெருமையாகக் கருதினர். இஸ்லாமிய எழுத்தலங்காரத்தில் கவர்ச்சியுற்ற ஐரோப்பியர்கள் பலர் அவற்றைத் தமது நாணயங் களில் பொறித்தனர். ஆஃபா (Offa) என்ற ஆங்கிலேய மன்னர் அராபியச் சாசனம் பொறித்த நாணயம் ஒன்றை வெளியிட்ட தாக நாம் அறிகிறோம். அந்நாணயம் இன்றும் லண்டன் அரும் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டுள்ளது. அதே சாலையில் அயர்லாந்தைச் சார்ந்த ஒரு வெண்கலப் பூச்சு வாய்ந்த சிலுவையில் ஓர் அராபிய வாசகம் காணப்படுகிறது. பொருளை அறியாமலேயே அக்காலக் கலைஞர்கள் அராபிய எழுத்துக்களை வெறும் அழகிற்காக மட்டும் பொறித்தனர் எனத் தெரிகிறது.

ஐரோப்பியர்களுக்கு முற்றிலும் புதுமையான அஸ்ட் ரோலேப் (Astrolab) என்ற வானியல் கருவியைக் கண்டுபிடித்த வர்கள் அராபியர்களே ஆவர். கடிகாரத்தைப் போன்ற அக் கருவி காலத்தையும், திசையையும் அறியப் பயன்படுத்தப் பட்டது. முஸ்லிம்கள் தங்களது புனிதத் தலமான மெக்கா இருக்கும் திசையையும் அன்றாடத் தொழுகைக்குரிய நேரத் தையும், அறியவும் இக்கருவியைப் பயன்படுத்தினர். பத்தாம் நூற்றாண்டில்தான் அது ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்

பட்டது. கிரேக்கர்களால் ஆதியில் கண்டுபிடிக்கப்பட்ட அக்கருவி டாலமி என்ற அலெக்ஸாந்திரிய வானியல் வல்லுநரால் ஓரளவு செப்பனிடப்பட்டு, பின்னர் முஸ்லிம்களால் அது முற்றிலும் செம்மையாக்கப் பட்டதாகத் தெரிகிறது. அகமது, மகமது ஆகிய இருவர்களால் கி. பி. 984-இல் செய்யப்பட்ட இத்தகைய கருவி ஒன்று இன்றும் பிரிட்டிஷ் அரும்பொருட்காட்சிச் சாலையில் உள்ளது. கடற்பயணிகளும் இதை திசையறி கருவியாகப் பயன்படுத்தினர். கருவியின் பயன் ஒரு புறமிருக்க அதில் பொதிந்து கிடக்கும் கலையழகுதான் யாவருடைய உள்ளத்தையும் ஈர்க்கும் தன்மையதாய் அமைந்துள்ளது. நன்கு செய்யப்பட்ட அஸ்ட்ரோலேப் உண்மையில் ஒரு கண்கவர் கலைப்பொருளாகும். அதில் காணப்படும் குறியீடுகள் மிகக் கவனத்துடனும், கலை யுணர்வுடனும் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். வியக்கத் தக்க அவ் வேலைப்பாடுகள் இன்றும் சீர்குலையாமல் இருப்ப தொன்றே அக்காலக் கலைத்திறனுக்கு ஒரு பெருஞ் சான்றாகும்.

இஸ்லாமிய உலோக வேலைப்பாடும் நல்ல கலையழகு பொருந்தியதாகக் காணப்படுகிறது. கெரோனு (Gerona) என்ற இடத்திலுள்ள மாதா கோயிலில் காணப்படும் ஒரு வெள்ளிப் பெட்டகம் இஸ்லாமிய உலோக வேலைப்பாட்டுக்கு உயர்ந்ததொரு எடுத்துக்காட்டாகும். மரத்தால் செய்யப்பட்ட அப்பெட்டியின் மீது வெள்ளித் தகட்டினால் ஆன ஓர் உறை போடப்பட்டுள்ளது. அவ்வுரையின் மீது அழகிய பூ வேலைப்பாடுகள் காணப்படு கின்றன. அவை தகடுகளின் மறுபுறமிருந்து அடித்து உருவாக்கப் பட்ட உலோக ஒப்பனை வேலைப்பாடாகும் (repousse). பத்தாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட இவ்வழகிய பேழையானது இன்றும் தன் வனப்பிற் சிறிதும் குறையாமல் திகழ்கிறது. அக்கால வெள்ளி வேலைப்பாட்டுத்திறனுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

கெய்ரோ நகரத்துக் கலீபாவான ஃபதிமித் (Fatimid) என்பாருடைய கருவூலத்தில் இருந்த பொன், வெள்ளிப் பொருள்களைப் பற்றி எகிப்திய சாசனங்கள் பரக்கப் பேசுகின்றன. பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட மைக்கூடுகள், பூ ஜாடிகள், சொக்கட்டான் காய்கள், சிறு பறவைகள், ஒளிமிகு கற்கள் பதிக்கப்பெற்ற மரங்கள் முதலியவை பற்றியும், அவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல் திகழ்ந்த அரியணையைப் பற்றியும் நாம் விரிவாகக் கேள்விப்படுகிறோம். மூன்று வெள்ளிப் படிகளுக்குமேல் அமைக்கப்பட்ட பொற்சிம்மா சனத்தில், சொற்களால் விவரிக்க இயலாத வனப்புமிக்க

வேட்டைக் காட்சிகளும், அழகிய பொன் பின்னல் வேலைப்பாடு களும் (Trellis), காட்சி தருகின்றன. ஆரம்பகால இஸ்லாமிய பொன், வெள்ளி வேலைப்பாடுகள் நிறைந்த பொருள்கள் அநேகமாக மறைந்தொழிந்து விட்டன. நமக்குத் தற்போது கிடைப்பதெல்லாம் வெண்கலம், பித்தளை, செம்பு இவற்றால் செய்யப்பட்ட மேசை, நாற்காலிகளும், தட்டுமுட்டுச் சாமான்களுமே ஆகும். பைசா (Pisa) நகரத்தில் கிடைக்கப் பெற் றுள்ளவெண்கலத்தினாலாய கிரிஃபின் (Griffin) என்ற இராக்கத உருவம் அக்கால உலோக வேலைப்பாட்டுத்திறனுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். சிங்கத்தின் உடலையும், கழுகின் தலை யையும் கொண்ட இவ்விராக்கத உருவத்தில் ஏராளமான பூ வேலைப்பாடுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் கைதேர்ந்திருந்த இன்னொரு கலையானது வெள்ளி, தங்கம் இவற்றை வெண்கலம் அல்லது பித்தளை யாலாகிய பொருள்களின் மீது பதிக்கின்ற கலையாகும். இங்ஙனம் பதிக்கும்போது பல உருவங்களை அவர்கள் தோற்றுவித்தனர். கலைஞர்கள் முதலில் தமக்கு வேண்டிய உருவங்களை வெண் கலத்தில் அல்லது செம்பில் செதுக்கிக் கொண்டு அதன் பின்னர் வெள்ளி, அல்லது தங்கத்தினாலாய தகடுகளை அவற்றுள் பதிய வைத்தனர். இடையிடையே உள்ள சந்துகளில் கறுப்பான ஒரு பொருளை திணிப்பதன் மூலம் உருவங்களின் அழகு பெரிதும் பன்மடங்கு பொலிவுடன் எடுத்துக் காட்டப்பட்டது. பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சிச் சாலையில் உள்ள ஒரு பித்தளை ஜாடி அராபியர்களின் உலோக பதிப்புக் கலை வன்மைக்கு ஓர் ஒப்பற்ற சான்றாகும்; அதில் சாசனங்கள், வரை படங்கள், பூ வேலைப் பாடுகள், உருவங்கள், முதலிய பல்வேறு வரைவுகள் எழிலுற பொறிக்கப்பட்டுள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மொசூல் (Mosul) நகர செப்புப் பாத்திரங்கள் பலவற்றில் இத்தகைய வேலைப்பாடுகளின் செல்வாக்கை நன்கு காணலாம். சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும் இக் கலையானது பரவியது.

பித்தளையால் செய்யப்பட்டதும், வெள்ளியும் தங்கமும் ஆங்காங்கே பதிக்கப்பெற்றதுமான ஓர் எழுதுபலகை பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சிச்சாலையில் இன்றும் காணப்படுகிறது. அஃது எழில் மிகுந்த ஒரு கலைப்பொருளாகும். அதனுடைய மூடியின் மேல் வானத்தில் காணப்படும் கோள்களின் நிலைகள் யாவும் நன்கு பொறிக்கப்பட்டுள்ளன. நடுவில் மனித முகத்தையுடைய சூரியன் பொறிக்கப்பட்டுள்ளான். அவற்றைச் சுற்றிலும் மிகச் சிக்கலான வேலைப்பாடுகள் நிறைந்த வரைபடங்கள் மிக அழகாக அமைக்கப்

பட்டுள்ளன. பெரும் விருந்துகளில் பயன்படுத்தப்பட்ட தட்டுகள், பெண்களால் பயன்படுத்தப்பட்ட நகைப்பெட்டிகள், மெழுகு வர்த்தித் தாங்கிகள், பூ ஜாடிகள் போன்ற பல்வேறு பொருள்களில் இஸ்லாமியர் தங்கள் உலோகப் பதிப்புக்கலை வன்மையை நன்கு புலப்படுத்தியுள்ளனர். பதினான்காம் நூற்றாண்டில் இக்கலையானது தேய ஆரம்பித்து விட்டது. ஆனால் ஐரோப்பியர்கள் அதைத் தங்களது நாடுகளில் வளர்க்கலாயினர்.

நமக்குக் கிடைத்துள்ள ஒருசில பொருள்களை வைத்துப் பார்க்கும்போது உலோகப்பூச்சு வேலைக் கலையில் முஸ்லிம்கள் அதிகம் முன்னேறியதாகத் தெரியவில்லை. ஸ்பானியர்களிடமிருந்தே அவர்கள் அதைப் பதினைந்தாம் நூற்றாண்டில் கற்றுக் கொண்டனர். ஆனால் மண்பாண்டங்களை பலவிதமாக மெருகிடும் கலையில் முஸ்லிம்கள் கைதேர்ந்தவர்கள். பளபளப்பான மேற்பரப்பை உடைய ஜாடிகள், ஓடுகள் முதலியவற்றை அவர்கள் ஏராளமாகச் செய்தனர். அவற்றில் பல அழகிய வரைபடங்கள் காணப்படுகின்றன. சூசா (Susa) நகரத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஒரு மட்பாண்டத்தில் வெண்மையான நிறப் பின்னணியில் ஊதா நிறம் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. இது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். நீலம், வெண்மை ஆகிய இரண்டு நிறங்களைக் கொண்டு மெருகூட்டப்பட்ட பானைகள் சாமாரா (Samarra) எனுமிடத்திலும் கிடைத்துள்ளன. இம்முறையை ஐரோப்பியர் பிற்காலத்தே பெரிதும் கடைப் பிடித்து வந்தார்கள். ஆனால் அதை அவர்கள் சீனர்களிடமிருந்தே கற்றுக்கொண்டனர். சீனர்கள் இதை முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

ஒளிமிக்க மேற்பரப்புகளை உடைய மட்பாண்டங்களை வனைவதில் முஸ்லிம்கள் தலைசிறந்தவர்களாயிருந்தனர். மெருகூட்டப் பட்ட பாண்டத்தின் மேற்பரப்பில் முதலில் உருவங்கள், உலோக உப்புக்களைக் கொண்டு வரையப்பட்ட பின்னர், புகை மூலமாக அப்பாண்டத்தைச் சுட்டு உருவத்தைப் பதிவித்தல் இம்முறையின் சிறப்பியல்பாகும். உலோகத்தால் செய்யப்பட்டவை போலவே தோற்றமளிக்கின்ற இத்தகைய மட்பாண்டங்கள் சமீபக் கிழக்கு நாடுகளிலும், ஆப்பிரிக்காவிலும், ஸ்பெயினிலும் நிறையக் கிடைத்துள்ளன.

மங்கோலியர்களால் பதின்மூன்றும் நூற்றாண்டில் அழிக்கப் பட்ட ராய் (Ray) எனும் நகரம் மட்பாண்டங்களை வனையும் கலையில் பல புதிய படைப்புகளை உருவாக்கியது. நீலம், பச்சை,

கருஞ்சிவப்பு முதலிய பல்வேறு வண்ணம் தோய்ந்த மேற் பரப்புகளை உடைய இப்பாண்டங்களில் கண்ணைக் கவரும் ஏராளமான அலங்காரங்கள் நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் சுல்தானாபாத் என்ற பாரசீக நகரில் கருப்பான மேற்பரப்பை உடைய பல அழகிய மட்பாண்டங்கள் வனையப்பட்டன. இதாலியர்கள் இக்கலையைத் தமது மருந்து ஜாடிகளில் பயன்படுத்திக் கொண்டனர். மறுமலர்ச்சிக் காலத்திய ஒளிமிக்க பாண்டங்களில் இஸ்லாமியக் கலையின் செல்வாக்கை நன்கு காணலாம். தங்களுக்கே தெரியாத செடிகளின் இலைகளையும், பூக்களையும் அவர்கள் தங்களது பாண்டங்களில் வரைந்துள்ளதற்குக் காரணம் பாரசீகத்திலிருந்து வந்த மட்பாண்டங்களைப் பார்வையிட்டதேயாகும்.

சிரியாவில் கண்ணாடித் தொழில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. கண்ணாடியில் அலங்காரம் செய்யும் கலையிலும் முஸ்லிம்கள் கைதேர்ந்தவர்கள். புட்டிகள், தட்டுகள் கூஜாக்கள், போன்ற கண்ணாடிப்பொருள்களில் பல்வேறு வண்ணங்களில் பூசப்பட்ட அழகிய உருவங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பியர்கள் சிரியாவிலிருந்தே பூச்சு வேலை செய்யப்பட்ட கண்ணாடிப் பொருள்களைச் செய்யும் கலையைக் கற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. இக்கலை முதலில் வெனிஸ் நகரத்திற்கும் பின்னர் ஸ்பெயினுக்கும் ஏனைய நாடுகளுக்கும் பரவியது.

கண்ணாடியால் செய்யப்பட்ட விளக்கு மூடிகள் பல சிரியாவில் செய்யப்பட்டன. அவற்றில் நேர்த்தியான பூ வேலைப்பாடுகள் நிறையக் காணப்பட்டன. பெரும் பிரபுக்கள் தங்களுடைய வீரப்பிரதாபங்களை அறிவிக்கின்ற முறையில் அடையாள வில்லைகளை அணிகின்ற வழக்கம் இஸ்லாமியர்களிடமிருந்து பெறப்பட்டது ஒன்றாகும். சிங்கம், கழுகு, வாள் போன்ற சின்னங்களை இஸ்லாமியப் பிரபுக்கள் தமது வில்லைகளில் பொறித்தனர். அவ்வில்லைகளை அவர்களது பணியாளர்களும் அணிந்து கொண்டனர். அவற்றில் முஸ்லிம் கலைஞர்களின் கைவேலைப்பாட்டினை நன்கு காண இயலும்.

பாரசீகம், எகிப்து, சிரியா போன்ற நாடுகளில் துணிகளில் அலங்கார வேலைப்பாடு செய்யும் கலை நல்ல வளர்ச்சியடைந்திருந்தது. சிறப்பாக பட்டுத்துணிகளில் மிக அழகிய சித்திரங்கள் வரையப்பட்டன. சாஸர் (Chaucer) என்ற புலவரின் காலத்து ஃபார்ஸ்டியன் (Festian) என்று வழங்கப்பட்ட பட்டுத்துணி ஃபார்ஸ்டாட் என்ற முஸ்லிம் தலைநகரிலிருந்தும், டமாஸ் என்ற

துணி டமாஸ்கஸ் நகரத்திலிருந்தும், மஸ்லின் என்ற மெல்லிய துணியானது மசூல் நகரிலிருந்தும், பல்டாக்கினோ (Baldagino) என்ற பட்டுத்துணியானது பாக்தாத்திலிருந்தும் வந்தன. இலைகள் மலர்க்கொத்துகள் அவற்றுக்கிடையே பறவைகள், மனிதர்கள் ஆகியோரின் உருவங்களை முஸ்லிம்கள் தங்களது துணிகளில் தீட்டினர். இத்தகைய வேலைப்பாடுகளைப் பின்னர் இத்தாலியர் அப்படியே பின்பற்றினர். வீட்டுத்தரைகளில் விரிக்கும் கம்பளங்களில் நேர்த்தியான பூக்களை நெய்யும் கலையில் முஸ்லிம்கள் இணையற்றவர்கள். பாரசீக கம்பளி விரிப்புகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அர்த்தாவில் (Ardavil) என்னும் நகரத்தில் கிடைக்கப் பெற்ற ஓர் அழகிய பாரசீகக் கம்பளமானது ஆல்பர்ட் அரும் பொருட்காட்சிச்சாலையில் இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அதில் முப்பது மிலியன் சிறு முடிச்சுகளுக்கு மேல் இருக்கின்றனவாம். அதன் நடுவில் உள்ள ஒரு பெரிய கட்டத்தில் ஒளி மிக்க வண்ணங்களாலாய இலைபோன்ற உருவங்கள் பல அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அதன் கரைகளில் வட்டங்கள், உருளைகள் போன்ற உருவங்கள் அலங்கரித்தன. துணிகளிலும், கம்பளிகளிலும், உலோகங்களிலும் காணப்பட்ட பூ வேலைப்பாடுகள் தான் இஸ்லாமியக் கட்டிடங்களிலும், புடைப்புச் செதுக்கோவியங்களிலும் (reliefs) காட்சியளித்தன. மரங்களிலும் இத்தகைய வரைபடங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கெய்ரோவிலுள்ள ஒரு மரத்துண்டில் மிக அழகியவோர் பின்னல் ஓவியம் செதுக்கப்பட்டுள்ளது. 1816-ஆம் ஆண்டில் இறந்த ஷேக் (Sheikh) என்பாருடைய கல்லறையில் காணப்படும் சிக்கல் நிறைந்த உருவப் படத்தைக்கண்டு வியக்காதவர் இல்லை. பெரும் பிரபுக்களின் வீட்டுக்கூரைகளை இத்தகைய அழகிய உருவச்சின்னங்கள் பதித்த மரப்பலகைகள் அலங்கரித்தன. நடுவில் சில நட்சத்திரங்களை வரைந்து அவற்றிலிருந்து வெளிப்படுவது போன்று பல்கோண உருவங்களைப் பொறிப்பதில் முஸ்லிம் தச்சர்கள் மிகச்சிறந்த திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அதில் பல்வேறு வண்ணங்களை எங்ஙனம் பயன்படுத்தினால் கண்ணுக்கு அது இனிமையை அளிக்கும் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

தந்தத்தில் பல சிறந்த வேலைப்பாடுகளை செய்வதிலும் இஸ்லாமியர்கள் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். பத்தாம் நூற்றாண்டில் கார்டோவா நகரத்தில் வாழ்ந்த ஒருசில தந்தக் கைவினைஞர்கள் ஒரு புதிய முறையைக் கையாண்டனர். அவர்களால் செய்யப்பட்ட பெட்டிகளிலும், பேழைகளிலும் பல பறவைகளும், மிருகங்களும், செடி, கொடிகளும், இலைகளும், பூக்களும் நிறைய வரையப்பட்டன. பலவித உருவங்கள் பொறி

கப்பட்டதும் அல்லது பூசப்பட்டதுமான ஏராளமான தந்த நகைப்பெட்டிகள் கிடைத்துள்ளன. பளிங்குக் கல்லால் ஆகிய ஜாடிகளிலும் இத்தகைய அலங்கார வேலைப்பாடுகளை காணலாம். எகிப்தியக் கலீபாக்கள் இக்கலையைப் பெரிதும் ஓம்பினர். அல் அஸீஸ் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பளிங்குச்சாடி உலகப் புகழ் பெற்றதொன்றாகும்.

நூல்களை ஆக்கும் கலையில் முஸ்லிம்கள் தன்னிகரற்று விளங்கினர். காகிதம், மை, அச்சு முதலியவைகளில் ஐரோப்பியர்களுக்கு அளித்தவர்கள் முஸ்லிம்களேயாவர். சீனர்களிடமிருந்து அவர்கள் காகிதத்தின் பயனைத் தெரிந்துகொண்டு ஒன்பதாம் நூற்றாண்டிலேயே ஏராளமான கைப்பிரதிகளைத் தயாரித்தனர். பனிரெண்டாம் நூற்றாண்டளவில் ஐரோப்பியர்களும் காகிதத்தின் பயனைத் தெரிந்துகொண்டு ஸ்பெயின், சிசிலி போன்ற நாடுகளில்தான் முஸ்லிம்கள் காகிதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினர். அங்கிருந்து இது இதாலிக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. நூல்களை கட்டுகின்ற முறை, அவற்றின் உறைகளை தோலினால் அழகாகச் செய்கின்ற முறை, நூல் உறைகளில் பல உருவங்களைப் பதிக்கின்ற முறை, இவற்றையெல்லாம் ஐரோப்பியர்கள் முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக்கொண்டனர்.

பொன் மயமான எழுத்துக்களை தோல் உறைகளின் மீது பொறிக்கின்ற கலையை முஸ்லிம்களே செம்மையாக்கினார்கள். பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆக்கப்பெற்ற நூல்களின் விளிம்புகள் சலவைக்கல்லைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தன. இக்கலையை அவர்கள் முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக் கொண்டனர். இத்தகைய விந்தை நிறைந்த கலைப்பொருள்கள் பல சிலுவைப்போர்கள் ஏற்பட்ட காலத்தும், அதன் பின்பும் தான் ஐரோப்பாவில் ஏராளமாகத் தோன்றின. அராபியப் பொருள்கள் ஐரோப்பிய உயர்குடி மக்களின் வீடுகளையெல்லாம் அலங்கரித்தன. இதனால் ஐரோப்பிய வணிகர்கள் பெரிதும் லாபமடைந்தனர். இதைக்கண்ட ஐரோப்பியக் கலைஞர்கள் அக்கலைகளை அப்படியே எடுத்துக்கொண்டு அதை மேலும் வளர்த்தனர். அவையே மறுமலர்ச்சிக் காலக் கலைகளாக பரிணமித்தன.

**கட்டிடக் கலை:** கட்டிடக் கலையில் அராபியர்கள் புதிதாக எதையும் படைத்து விடவில்லை என்றும் ஏற்கனவே எகிப்திலும், மெசபடோமியாவிலுமிருந்த கலையையே அவர்கள் கடைப்பிடித்தனர் என்றும் ஒருசில அறிஞர்கள் கூறுகின்றனர். ஆரம்பத்தில் அராபிய தளகர்த்தர்கள் தங்களுக்கென்று ஒரு

தனிப்பட்ட கட்டிடப்பாணியைக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஏனெனில் அவர்கள் ஓரிடத்தில் நிலைத்து நில்லாமல் நாடோடிகளாகவே ஆரம்பத்தில் திரிந்தனர். பல நாட்களுக்குப் பின்னரே அவர்கள் பல நாடுகளைக் கைப்பற்றி அங்கு நிலையான வாழ்க்கையை வாழ்ந்தனர். தங்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளிலிருந்த கட்டிடக்கலைஞர்களைக் கொண்டே அவர்கள் தங்களுடைய மசூதிகளையும், அரண்மனைகளையும், கோட்டைகளையும், கொத்தளங்களையும் கட்டிக்கொண்டனர். எனினும் நாளடைவில் இஸ்லாம் மதத்தில் அவர்கள் வைத்திருந்த பற்றுதல் காரணமாக பல்வேறு கட்டிட முறைகளின் இடையே ஒரு தனிப்பட்ட பொதுத்தன்மை மலரலாயிற்று. எங்கு சென்றாலும் அவர்கள் ஒரே மாதிரியான மசூதிகளையே கட்டினர். மதினாவிலிருந்த மசூதி ஏனைய மசூதிகளுக்கு முன்மாதிரியாய் அமைந்தது. செங்கல்லாலும், கல்லாலும் கட்டப்பட்ட மதிற்சுவர்களை நாற்புறமும் கொண்ட ஒரு சதுரமான இடமே மதினாவின் மசூதியாய் திகழ்ந்தது. அதன் வடபகுதியில் மட்டுமே கூரை வேயப்பட்டிருந்தது. ஈச்சமரத் தூண்களின்மேல் அமைக்கப்பட்ட கூரைகள் ஈச்சங்கிளைகளால் செய்யப்பட்டிருந்தது. கிளைகளுக்கு இடையே களிமண் பாவப்பெற்றிருந்தது. இதுதான் ஆதியில் ஏற்பட்ட எளிய மசூதியாகும். அதன்பின்னர் மசூதியின் கட்டிடத்தில் ஏராளமான மாறுதல்கள் ஏற்பட்டன. மெசபடோமியாவிலுள்ள கூஃபா (Kufah) நகரத்தில் கட்டப்பட்ட மசூதியில் சலவைத் தூண்கள் கூரையைத் தாங்கப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் மசூதியின் வடிவம் சதுரமாகவே இருந்தது. நாளடைவில் மின்பார் (Minbar) என்ற மேடை மசூதியில் தோன்றியது. அதன் பின் மசூதியில் கூடியிருந்த மக்களிடமிருந்து இமாமைப் பாதுகாக்க மரத்தாலாகிய ஒரு திரை (Maqsurah) என்ற திரை போடப்பட்டது. எட்டாம் நூற்றாண்டளவில் மினரட்டுகள் (Minarets) என்ற நீண்ட கோபுரங்களும் மிஹ்ராப் (Mihrab) என்ற தொழுகை மேடையும் மசூதிகளில் தோன்றின. எனவே மதினாவில் முதல் மசூதி தோன்றி எண்பது ஆண்டுகளுக்குள் மசூதியின் முக்கியமான உறுப்புகள் அனைத்தும் முற்றிலும் வளர்ச்சியடைந்து விட்டன.

ஆரம்பத்தில் மிக எளிமையாக இருந்த மசூதி நாளடைவில் கம்பீரமும், கண்ணியமும் உடையதாக மாறிற்று. மகம்மது இறந்து 20 ஆண்டுகளுக்குள்ளாக மதினாவிலிருந்த மசூதி பளபளப்பான கற்களைக் கொண்டு புதிதாகக் கட்டப்பட்டது. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாறைக் குவிமாடம் (Dome of the Rock) என்ற கம்பீரமான கட்டிடமானது ஜெருசலேம் நகரத்திற்

கருகில் காலிஃப் ஓமார் என்பவரால் எழுப்பப்பட்டது. கல்லால் கட்டப்பட்ட அக்கட்டிடமானது பலவகையாக அலங்காரங்களைக் கொண்டு இக்குவிமாடக் கட்டிட முறையை முஸ்லிம்கள், ரோமானியர்கள் அல்லது பைஸான்டியர்களிடமிருந்தே கற்றுக் கொண்டனர் என்றும், கிறிஸ்தவக் கலைஞர்களே, அதைக் கட்டி முடித்தனர் என்றும் ஒருசில ஆசிரியர்கள் கூறுவர். அங்ஙனம் கூறுவதில் ஓரளவு உண்மையும் இல்லாமலில்லை. ஆனால் பைஸான்டியர்களுக்கு முன்பேயே ஆசிய மைனரில் குவிமாடக் கட்டிடங்கள் இருந்தனவென்றும் அதைப் பின்பற்றியே அராபி யர்கள் தங்கள் கட்டிடங்களை அமைத்தார்கள் என்றும் வேறுசிலர் கூறுவர். இங்ஙனம் இக்கட்டிடத்தின் பெரும்பகுதி பிற நாகரிகங் களிடமிருந்தே கடன் வாங்கப்பட்டதே எனினும், அரைவட்ட மான வளைவுகள் மரப்பிணைப்புகள், பல நிறங்கொண்ட மொசைக் கற்களைப் பயன்படுத்தல் முதலியவை அராபியர்களால் புதிதாக புகுத்தப்பட்டக் கூறுபாடுகளாகும்.

முஸ்லிம் கட்டிடக் கலையில் அடுத்தாற்போல் சிறப்பாக விளங்குவது டமாஸ்கஸ் நகரத்தில் உள்ள பெரிய மசூதியாகும். அது எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அதனுடைய கருவறை மிக உயர்ந்ததொரு கட்டிடமாகும். அதன் வளைவுகளில் பெரிய கதவுகள், திரைகள் போன்றவை காணப்படுகின்றன. அதைச் சுற்றிலும் தாழ்வாரங்களும் காணப்படுகின்றன. அங்குக் காணப்படும் புதுமைகள் பல. இதில் முக்கிய கட்டிடமான லிவான் (Liwan) மூன்று வரிசை வரிசையான பிராகாரங்களைக் கொண்டது. குறுக்கே சிலுவை வடிவமான கட்டிடம் ஒன்று அமைந்துள்ளது. அதன் முடிவில் தொழுகை மண்டபம் இருக் கின்றது. மத்திய முற்றத்தைச் சுற்றிலும் உள்ள வளைவுகள் தூண் களின் மீதும், பாலங்களின் மீதும் அமைக்கப்பட்டுள்ளன. வளைவுகள் குதிரை லாடத்தின் வடிவில் அமைந்துள்ளன. இதுவே முஸ்லிம் கட்டிடக் கலையின் முக்கிய பண்பாகும். நடுவிலுள்ள முற்றத்தைச் (Sahn) சுற்றிலும் அரைவட்ட வடிவமான சன்னல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு வளைவுக்கு மேலும் இரண்டு ஜன்னல்கள் உள்ளன. மசூதி நாற்புறத்திலும் நான்கு உயர்ந்த மினரட்டுகள் (Minartes) அமைந்திருந்தன. ஆனால் அவற்றில் மூன்று இப்போது காணவில்லை. மசூதியின் உட்புற மானது பளிங்குக் கற்களாலும், மொசைக் கற்களாலும் பலநிறங் கொண்ட கண்ணாடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கட்டி டத்தின் நடுவில் அதாவது கருவறைக்கு நேர் மேலாகப் பெரிய குவிமாடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதில் காணப்படும் மெஹ்ராப் (Mihrab) எனும் தொழுகை மண்டபம் இக்கட்டிடத்

திற்கே உரிய கூறுபாடாகும். குதிரைலாட வடிவமான வளைவுகள் கட்டிடங்களில் காணப்படுவது டமாஸ்கஸில்தான் முதல் முறையாகும். குருமார்கள் மக்களைத் தொழுகை நடத்தும்படி அழைப்பதற்காகவே மினரட்டுகள் உயரமாகக் கட்டப்பட்டன போலும். ஸ்பெயினிலுள்ள கார்டோவா நகரத்துப் பெரிய மசூதி முஸ்லிம் கட்டிடக் கலையின் மற்றொரு முக்கிய சின்னமாகும். அதுவும் பலர்கூடித் தொழுகை நடத்துவதற்கேற்ப அமைந்துள்ளது. கருவறையைச்சுற்றி பதினொரு பிரகாரங்கள் இருக்கின்றன. அவை வில்வளைவான நடைவானப் பந்தல்களால் பிரிக்கப் பட்டுள்ளன. அப்பந்தல்கள் ஒவ்வொன்றும் இருபது தூண்களை உடையது. இங்ஙனம் தூண்களைப் பயன்படுத்தும் முறையை முஸ்லிம்கள் ரோமானியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். மசூதியைச் சுற்றிலும் பெரிய மதிற்சுவர் ஒன்று காணப்படுகிறது.

அடுத்தாற்போல் மெசபடோமியாவில் காணப்படும் மசூதிகள் முஸ்லிம் கட்டிடக் கலையில் ஒரு புதிய பாதையை வகுத்துள்ளன. அதில் காணப்படும் சிறப்பான பண்பு கூரான வளைவுகளாகும். மற்றபடி இம்மசூதிகளில் வளைவுகள், முற்றம், தொழுகை மண்டபம், பிராகாரங்கள் முதலியன ஏனைய கட்டிடங்களிலிருப்பது போலவே அமைந்திருந்தன. ஒன்பதாம் நூற்றுண்டுக்குப் பின்னர் சிலுவைப் போர்களின் காரணமாக மசூதிகளில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டன. சிரியாவிலிருந்து புதுவிதமான வளைவுகள் முஸ்லிம் கட்டிடக் கலையில் வந்து புகுந்தன. மதிற் சுவர்களில் தண்டையங்களுக்கு இடையில் இடைவெளிகளை ஏற் படுத்தும் முறை (machicolation) இச்சமயம் ஏற்பட்டது. மதிலைத் தாக்குபவர்கள் மீது கற்களையும், குண்டுகளையும் பொழியவே இத்துவாரங்கள் பயன்படுத்தப்பட்டன. இதை இராணுவக் கட்டிடக் கலையென்றும் சிலர் கூறுவர். இதன் மற்றொரு கூறுபாடானது நேர்கோணத்தில் அமைந்த குறுகிய வாயிற்படியாகும். இத்தகைய வாயிலுள் நுழைந்த எதிரி நேராக உள்ளே இருக்கும் முற்றத்தின் மீது அம்புகளையோ அன்றி குண்டுகளையோ பொழிய முடியாது. இத்தகைய முறை ரோமானியர்களுக்கோ, பைஸாண்டியர்களுக்கோ தெரியாததொன்றாகும்.

பதின்மூன்றும் நூற்றுண்டிலிருந்து முஸ்லிம் கட்டிடக் கலையின் சின்னங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. ஸ்பெயினிலுள்ள அல்ஹம்ப்ரா, அல்கசார் ஆகிய அரண்மனைகள் நயமிக்க அலங் காரங்களுக்குப் பெயர் போனவை. கெய்ரோவில் ஏராளமான மசூதிகளும் கல்லறைகளும் இக்காலத்தே கட்டப்பட்டன. பாரசீகம், துருக்கி, இந்தியா போன்ற இடங்களில் முஸ்லிம் கட்டிடக்

கலைச்செல்வங்கள் நிறையக் கிடைத்துள்ளன. அவற்றில் காணப் படும் கட்டிடக்கலை வகைகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சிரியா - எகிப்தியன் (Syrio-Egyptian), ஹிஸ்பானோ-மாரஸ்க் (Hispano - Maresque), பெர்ஷியன் (Persian) ஆட்டோமான் (Ottoman) இந்தியன் (Indian) என்பனவாகும்.

இடைக்கால மசூதிகளில் குவிமாடம் பொருந்திய சிலுவை வடிவமான மத்ராஸா கட்டிடங்கள்தான் மிகச்சிறந்தவிடத்தைப் பெறுகின்றன. குவிமாடங்கள் சிலவிடங்களில் உருண்டையாகவும் சிலவிடங்களில் முட்டை வடிவமாயும் இருக்கின்றன. அவற்றின் மீது பளிச்சிடுகின்ற ஓடுகள் சிலவிடங்களில் வேயப்பட்டுள்ளன. அக்காலக் கட்டிடங்களில் காணப்படும் குவிமாடங்களை நவீன கட்டிடக் கலைஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனினும் மினரட்டு களின் செல்வாக்கு தற்காலக் கலைப்பண்பில் பெரிதும் காணப் படுகிறது. மாதா கோவில்களில் காணப்படும் கூர்மையான கோபுரங்கள் அத்தகைய செல்வாக்கையே நன்கு எடுத்தியம்பு கின்றன. உருளை போன்ற பாரசீக மினரட்டும், பென்சிலைப் போன்ற துருக்கியர்களின் மினரட்டும் ஐரோப்பாவில் பரவ வில்லை.

கட்டிடக் கலையில் முன்னேற்றம் வளர வளர வட்டமான குதிரை லாட வளைவுகளுக்குப் பதிலாக கூர்முனையை உடைய குதிரை லாட வளைவுகள் மசூதிகளில் இடம் பெறலாயின. அரை வட்டமானதும், கூரானதுமான வளைவுகள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டன. வளைவாக ஆரம்பித்து நேர்க் கோட்டில் செல்லுகின்ற பாரசீக வளைவுகள் இக் காலத்தே பெரிதும் வழக் காற்றுக்கு வந்தன. பிறைக்கதுப்பு போன்ற வடிவமுடைய வளைவுகளும் பொதுவாக வழக்காற்றுக்கு வர ஆரம்பித்தன. மதிற்சுவர்களில் பீரங்கி ஏற்றும் இடங்கள் ரம்பத்தின் பற்களைப் போல் அமைக்கப்பட்டன. அவற்றில் ஏராளமான பூ வேலைகள் செய்யப்பட்டன. ஜன்னல்களிலும், விதவிதமான கண்ணாடிகள் பதிக்கப்பட்டு கல்லாலும் சாந்தாலும் செய்யப்பட்ட பின்னல் வேலைப்பாடுகள் அவற்றினுள்ளே இடம் பெற்றன. பல வித வரைபடங்களோடு இஸ்லாமிய எழுத்துக்களும் அங்கே இடம் பெற்றிருந்தன. நன்கு மெருகிடப்பட்ட ஓடுகளும் பாரசீகம் போன்ற விடங்களில் பயன் படுத்தப்பட்டன. இங்கிலாந்தில் அராபஸ்க (Arabesque) என்று அழைக்கப்படுகின்ற புடைப்புச் செதுக்கோவியங்கள் அராபியக்கலைக்குப் பெரிதும் பயன்பட்டவை. கெய்ரோவிலுள்ள கட்டிடங்களில் ஒரு தனிப்பட்ட அலங்கார முறை கடைபிடிக்கப்பட்டது. கருமையான கற்களும், வெளிறிய கற்களும் மாறி மாறி சமாந்திரமாக இக் கட்டிடங்

களில் இடம் பெற்றன. ரோம் அல்லது பைஸான்டியத்திலிருந்து இம் முறை கடன் வாங்கப்பட்டிருக்கலாம் என்று ஒரு சிலர் கூறுவர். பைசா, ஜெனீவா, பிளாரன்ஸ் போன்ற இதாலிய நகரக் கட்டிடங்களின் முகப்புகளில் காணப்படும் வரி வரியான வேலைப்பாடுகள் முஸ்லிம்களின் கட்டிடங்களிலிருந்தே கடன் வாங்கப்பட்டிருக்கப்பட வேண்டுமென்று தெரிகிறது. இங்ஙனம் இராணுவ சம்பந்தமான கட்டிடங்களைக் கட்டுவதிலும் சமய சம்பந்தமான கோயில்களைக் கட்டுவதிலும் ஐரோப்பியர்கள் பெரிதும் இஸ்லாமிய முறையை கடைப்பிடித்தார்கள். முஸ்லிம்களைத் தாக்கிய கிறிஸ்தவ சிலுவைப் போர் வீரர்கள் கோட்டை, கொத்தளங்களைக் கட்ட வேண்டிய முறையை அவர்கள் தங்கள் எதிரிகளிடமிருந்தே கற்றுக் கொண்டனர். அதே போன்று கூரான வளைவுகள், பாரசீக வளைவுகள் பிறை வடிவமான பல கிளைகளை உடைய வளைவுகள், கல்லில் செதுக்கப்படும் சித்திர வேலைப்பாடுகள், அதே போன்று ஜன்னல்களிலும், தட்டுகளிலும் செதுக்கப்படும் சித்திர வேலைப்பாடுகள், பல்வேறு நிறங்கொண்ட கண்ணாடிகளைக் கொண்ட அலங்காரங்கள் போன்றவைகளையெல்லாம் ஐரோப்பியர்கள் முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக் கொண்டனர். பாலங்களின் முனைகளில் ஆதாரக் கம்பங்களை அமைக்கின்ற முறையை இடைக்காலத்துக் கட்டிடங்களில் காணலாம். அவற்றை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் முஸ்லிம்களேயாவர். கோட்டை, கொத்தளங்களில் காணப்படுகின்ற அலங்காரங்களும் முதன் முதலில் முஸ்லிம்களால் உண்டாக்கப்பட்டவையே. அதை பிற்காலத்தே இதாலியர்கள் கடைப்பிடித்தனர். காதிக் (Gothic) கட்டிட முறையில் அது ஒரு சிறப்பியல்பாக மாறிவிட்டது. காதிக் கட்டிடங்களில் காணப்படுகின்ற வளைவான சாசனங்கள் கெய்ரோவிலிருந்து சென்றவையே ஆகும். பிரான்சிலுள்ள ஒரு சில சாசனங்களில் அராபிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் பிரான்சின் தெற்குப் பகுதியைப் பிடித்தபோது இம் முறையானது பரவியிருக்கலாம். வரிகள் நிறைந்த முகப்புகள், கெய்ரோவிலிருந்து வந்ததாகும். மரத்தில் பின்னல் வேலைகளைச் செய்தல் அல்லது மஷ்ரா பீயா (mashra Biyyah) என்ற முறையைக் கொண்டு மகுதியிலும் பெண்டிர் அந்தப்புரங்களிலும் ஒருவகையான திரைகளை அவர்கள் அமைத்தனர். வரைவுபடக் கணித முறையையும் பல்வேறு வடிவமுள்ள உருவங்களை வரையும் கலையையும் அராபியர்களே ஆங்கிலேயர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இங்ஙனம் நவீன கட்டிடக் கலையின் பல்வேறு கூறுபாடுகள் இஸ்லாமியக் கட்டிடக் கலையினின்றும் தோன்றியதாகவே தெரிகிறது.


இடைக்காலப் பேரரசுகள்
இந்தியா
மங்கோலியர்

# 5. பிந்திய இடைக்கால நாகரிகம் அல்லது நிலமானிய கால நாகரிகம்

## (Later Medieval Civilisation or Feudal Civilisation)

### நிலமானிய ஏற்பாடு (Feudalism)

**நிலமானிய ஏற்பாடு என்பதன் பொருள்**

இடைக்கால ஐரோப்பாவின் சிறப்பியல்புகளில் ஒன்ருகத் திகழ்வது அக்காலத்து மக்களிடையே காணப்பட்ட நிலமானிய ஏற்பாடு என்னுமோர் வாழ்க்கை நெறியாகும். நில உடைமையை அடிப்படையாகக் கொண்டு, அமைக்கப் பெற்ற ஒருவகையான அரசியல் சமுதாய அமைப்புக்கே நிலமானிய ஏற்பாடு என்று பெயர். அதன்படி நில உரிமையே ஏனைய எல்லா உரிமைகளுக்கும் ஆணி வேராகக் கருதப்பட்டது. ஒரு மனிதனின் அரசியல், பொருளாதார, சமய சமுதாய உரிமைகள் யாவும் அவனது நில உடைமை உரிமைக்கேற்பவே (Land tenure) தீர்மானிக்கப்பட்டன. நிலங்களைச் சொந்தமாக உடைய பிரபுக்களே நாட்டையாளும் தகுதி படைத்த குடிமக்களாகக் (Citizens) கருதப்பட்டனர். நில மற்ற ஏழைகளுக்குக் குடியுரிமை இல்லை. போரில் கலந்து கொள்ளவும், விவசாயத்தில் ஈடுபடவும், நீதி விசாரணைகளில் பங்கு பெறவும் நில சொந்தக்காரர்களுக்கு மட்டுமே உரிமை இருந்தது. இத்தகைய நிலப் பிரபுக்கள் அனைவரும் தமக்கு உடனடியாக மேலே இருந்த ஒரு பெரும் பிரபுவிடமிருந்து நிலத்தை மானியமாகப் (Fief) பெற்றவர்கள். பெரும் பிரபுக்கள் யாவரும் மன்னரிடமிருந்து தமது நிலங்களைப் பெற்ற முக்கிய மானியதாரர்களாவர். (Tenants-in-Chief) நிலத்தை அளிப்பவர் மேல் அதிபர் (Overlord) என்றும் பெற்றுக் கொண்டவர் மானியதாரர் (Vassal) என்றும் கருதப்பட்டனர். மேல் அதிபருக்கும், மானியதாரர்களும் தமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி மேல் அதிபர்

மானியதாரர்களை ஆளுகின்ற உரிமை பெற்றிருந்தார். அதோடு வெளிநாட்டினரின் படையெடுப்பினின்றும் உள் நாட்டுக் கலகத்தினின்றும் தமது மானியதாரர்களை அவர் பாதுகாக்க வேண்டும். மானியதாரர்கள் அதற்குப் பதிலாக மேல் அதிபருக்குக் கட்டணங்களைச் செலுத்தியும் போரில் கலந்து கொண்டும் சேவைபுரிய வேண்டும். இத்தகைய சேவைகளின் அடிப்படையிலேயே நில உரிமை வழங்கப்பட்டது. இங்ஙனம் ஒருசில சேவைகளினடிப்படையில் நில உடைமை உரிமையும் நில உடைமை உரிமையினடிப்படையில் அரசியல் சமுதாய உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்ட ஒரு ஏற்பாடே நிலமானிய ஏற்பாடாகும்.

## நிலமானிய ஏற்பாட்டின் தோற்றம் (Origin of Feudalism)

நிலமானிய ஏற்பாடென்பது ஏதோ ஒரு சிலரால் திட்டமிட்டு வகுக்கப்பட்ட ஒரு முறைமை (System) யன்று. அவ்வப்போது ஏற்பட்ட தேவைக்கேற்ப நாளாவட்டத்தில் வளர்ச்சியுற்ற நிறுவனமே அவ்வேற்பாடாகும். முரட்டு வகுப்பினர்களால் தாக்கப்பட்டுச் சிதறுண்டு போன ரோமானியப் பேரரசில் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் வரை (கி. பி. 500 முதல் 1000 வரை) எங்கு பார்த்தாலும் ஒரே அல்லோல கல்லோலமான நிலையே காணப்பட்டது. அந்தக் காலத்தையே வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் (Dark Ages) எனக் குறிப்பர். இக்காலத்தே மக்களின் உடைமைகளையும் உரிமைகளையும் பாதுகாக்கத்தக்க வலிமைமிக்க மத்திய அரசாங்கம் எங்குமே இல்லை. அலை அலையாக வந்த காட்டுமிராண்டிகளின் தாக்குதல்களினின்றும் மக்களைக் காப்பாற்றும் வலிமை ரோமப் பேரரசர்களுக்கோ அப்பேரரசில் ஆங்காங்கே முளைத்த ஜெர்மானிய அரசுகளுக்கோ இல்லை. எனவே மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக உள்ளூர்த் தலைவர்களை அணுகினார்கள். சிறிய நிலச் சுவான்தார்களும், உரிமை பெற்ற குடியானவர்களும், குதிரைப் படை ஒன்றை வைத்துக் கொண்டு, பாதுகாப்பு நிறைந்த, திண்ணிய கோட்டை கொத்தளங்களில் (Castles) வாழ்ந்த பலம் நிறைந்த பெரும் பிரபுக்களிடம் தஞ்சம் அடைந்தனர். தங்களது நிலங்களை எல்லாம் அப் பெரும் பிரபுக்களிடம் ஒப்படைத்து விட்டு, அதற்குப் பதிலாகத் தம்மைக் காட்டுமிராண்டிகளின் தாக்குதல்களினின்றும் காப்பாற்றும்படி அவர்கள் முறையிட்டுக் கொண்டார்கள். அவசியம் நேரும் போது தமக்கு இராணுவ சேவை செய்ய வேண்டுமென்றும், அன்றாடது நிலங்களிலிருந்து வரும் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை தமக்குக் கட்டணமாக வழங்க வேண்டுமென்றும்

அங்ஙனம் செய்தால் தாம் அவர்களைக் காப்பாற்றுவதாயும் பெரும் பிரபுக்கள் வாக்களித்தார்கள். அந் நிபந்தனையை ஒப்புக் கொண்ட சிறு பிரபுக்களுக்கும் குடியானவர்களுக்கும் அவர் தம் நிலங்கள் திருப்பி மானியமாகப் (Fief) பெரும் பிரபுவால் வழங்கப்பட்டன. அதோடு இலவசமாக உழைப்பை மக்களிடமிருந்து பெறவும், வரிவசூல் செய்யவும் பாதைகள் பாலங்கள் சந்தைகள் முதலியவற்றைப் பயன் படுத்துவோரிடமிருந்து கட்டணங்களைப் பெறவும் இன்னும் இது போன்ற சில அரசியல் உரிமைகளும் வழங்கப்பட்டன. இங்ஙனம் பிரபுக்கள் தமக்குள் செய்து கொண்ட பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தங்களின் (Mutual Insurance Agreements) விளைவாகவே நிலமானிய ஏற்பாடு தோன்றியது.

### நிலமானிய முறையின் வளர்ச்சி வரலாறு

இத்தகைய ஏற்பாடு, ஏற்கனவே ரோமானியர்களிடமும், ஜெர்மானியர்களிடமும் வெவ்வேறு வகையில் காணப்பட்ட தொன்றேயாம். வென்றோர், வெல்லப்பட்டார் ஆகிய இரு சாராரது வழக்கங்களும் ஒன்று சேர்ந்ததனால் ஏற்பட்ட ஒரு கலப்பு நிறுவனமே நிலமானிய ஏற்பாடு என்றால் மிகையாகாது. பல காரணங்களை முன்னிட்டுத் தமது சொத்துகளை எல்லாம் இழந்து வறியராகி விட்ட பலர் வலிமைமிக்க செல்வந்தர்களிடம் தங்களை ஒப்படைத்துவிட்டு, அவர்கள் எங்கு சென்றாலும் அங்கு சென்று அவர்களது புகழ் பாடியும், அவர்கள் சொல்லியதற் கெல்லாம் தலையாட்டியும், பல்லிளித்தும், பசப்பு வார்த்தைகள் பேசியும் வாழ்க்கை நடத்தி வந்தனர். அத்தகையோர் சார்பாளர் (Clients) என்றும் அவர்களைப் புரந்தோர் புரவலர் (Patrons) என்றும் அழைக்கப்பட்டனர். இங்ஙனம் தம்மைச் சார்ந்தோரைப் புரக்கும் முறையானது (Clientage) ரோமானியப் பேரரசு சீர்குலைந்த காலத்தில் பெரிதும் வளர்ந்தது. மற்றும் கி. பி. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் விவசாயம் குன்றிய போது, நிலத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் அதை விட்டு நீங்கி வேறிடம் செல்லக் கூடாது என்று ரோமானிய அரசர்கள் ஆணையிட்டனர். இதன் விளைவாக நிலத்தை வேளாண்மை செய்து வந்த அனைவரும் பெரும் நிலக் கிழார்களின் நிரந்தர அடிமைக் குடியேறிகளாக (Coloni) மாறினர். இன்னும் சில இடங்களில் நிலக் கிழார்கள் தங்களது நிலங்களைத் தற்காலிகமாகச் சில குடியானவர்களிடம் ஒப்படைத்திருந்தனர். சரியான படி குத்தகை தரும் வரையில் அன்னார் நிலத்தை அனுபவித்தனர். குத்தகை தராதபோது அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப் பட்டனர். இத்தகைய தற்காலிக நில உடைமை முறை

(Precarium) யின்படிக்குத்தகையைச் செலுத்த இயலாத பல குடியானவர்கள் நிலங்களைப் பிரபுக்களிடமே ஒப்படைத்து விட்டு வெறும் பண்ணையாட்களாக மாறி விட்டனர். இத்தகைய முறைகளால் நாளடைவில் நிலங்கள் பெரும் பிரபுக்களின் கைகளில் செறிந்தன. அத்தகைய பெரு நிலக்கிழார்கள் மத்திய அரசனை உதாசீனம் செய்து விட்டுத் தமக்குக் கீழ் இருந்த குடிமக்கள் மீது ஆட்சி செலுத்தவும் நீதி வழங்கவும் ஆரம்பித்தனர். மன்னரது கைகள் தாழவும், பிரபுக்களின் கைகள் ஓங்கவும் ஆரம்பித்தன. இது நிலமானிய முறையின் ஒரு முக்கிய கூறுபாடாகும்.

இடைக்காலத் தொடக்கத்தில் பல திருச்சபைகள் நிறைய நிலங்களைப் பெற்றன. பக்தர்கள் பலர் தமது நிலங்களைத் திருச் சபைகளிடம் ஒப்படைத்ததாலேயே இங்ஙனம் சேர்ந்தது. திருச்சபையானது நிலங்களைப் பல பிரபுக்களுக்குக் கோயில் மானியமாக (benefice) வழங்கிற்று. பிரபுக்கள் பலர் மத குருமார் களுக்கு மானியதாரர்களாக இருந்து பல பணிகளைச் செய்து வந்தனர். சேவைகளுக்குப் பதிலாக நில உரிமை பெறுகின்ற மற்றொரு நிலமானிய மரபு இங்ஙனம் திருச்சபையால் வளர்க்கப் பட்டது. கி. பி. ஏழு எட்டாம் நூற்றுண்டுகளில் மெரோவிங்கிய (Merobringian) வமிசத்தைச் சேர்ந்த பல அரசர்கள் தங்களது நண்பர்களான பிரபுக்களுக்கு நிலங்களை மானியங்களாக (beneficium) வழங்கினர். மூர்க்கர்களுக்கு எதிராகப் படை உதவி செய்த பிரபுக்கள் பலருக்கு இங்ஙனம் நிலம் வழங்கப்பட்டது. ஃபிராங்கிஷ் மன்னர்களில் சிலர் தம்மிடம் நிலங்களைப் பெற்ற பிரபுக்களுக்கு ஒரு சில வரி விலக்குகளையும், உரிமைகளையும் (Immunities) அளித்தார்கள். அரசர்களின் பகராட்கள் (agents) அத்தகையோரது நிலங்களில் வரி தண்டா வண்ணம் தடுக்கப் பட்டனர். இதன் விளைவாக அவரவரது மானியங்களில் பிரபுக்கள் அவரவர் பிரியப்படி அதிகாரம் செலுத்த ஆரம்பித் தனர். மத்திய அரசினை அவர்கள் அதிகம் பொருட் படுத்த வில்லை. ஆனால் தேவைப்பட்ட போது அரசனுக்குப் படை வீரர்களை அவர்கள் வழங்கினர். நிலங்களை மானியமாக அளித்து இராணுவ உதவி பெறுகின்ற முறையானது பலஹீனர்களான கொராலிங்கிய (Carolingian) வமிச அரசர்கள் காலத்துப் பெரிதும் வளர்ந்தது. இங்ஙனம் வழங்கப்பட்ட நிலங்கள் ஃபியோடம் (Feodum) என அழைக்கப்பட்டன. நிலமானியம் என்ற பொருள்படும் இச் சொல்லிலிருந்தே நிலமானிய ஏற்பாடு (Feudalism) என்ற சொல் பிறந்தது. நாளடைவில் இம்

மானியங்கள் பரம்பரைச் சொத்துகளாக மாறின. ஒரு பிரபு இறந்தால் அவரது மானியம் அவரது மூத்த மகனுக்கு வழங்கப் பட்டது. கி. பி. எட்டாவது ஒன்பதாவது நூற்றுண்டுகளில் மேற்கு ஐரோப்பாவை நார்ஸ்மென் (Norsemen) மெகயர்கள் (Magyars) முஸ்லிம்கள் போன்ற முரட்டு வகுப்பினர் படை யெடுத்து ஏராளமான சொத்துக்களைச் சூறையாடினர். அதோடு பல கொடூரமான கொலைகளிலும் அன்னூர் ஈடுபட்டனர். அவர் களது அட்டூழியங்களைக் கண்டு பயந்த சிறிய குடியானவர்கள் அனைவரும், அருகிலிருந்த பெரும் பிரபுக்களின் கோட்டை களுக்குச் சென்று சரண் அடைந்தனர். பிரபுக்களின் வீரர்படை அவர்களைக் காத்தது. பிரபுக்கள் பலர் சிற்றரசர்கள் போல் வாழலாயினர். சார்லமேன் என்ற பேரரசருக்குப் பின் வலிமை மிக்க அரசர்கள் சிம்மாதனத்துக்கு வராத காரணத்தாலேயே இங்ஙனம் உள்ளூர்த் தலைவர்கள் பலம் பெற்றூர்கள்.

நிலமானிய முறையில் காணப்பட்ட ஒரு சில தனிப்பட்ட கூறுபாடுகள் ஜெர்மானியர்ளின் செல்வாக்கால் ஏற்பட்டவை யாகும். ரோமப் பேரரசை ஜெர்மானியர்களிடம் தோழமைப் பந்தம் (Comitarus) என்ற ஓர் உறவு முறை இருந்தது. அதன் படி ஒரு சில படைவீரர்கள் ஒரு தலைவனிடம் விசுவாசமாக இருப்பதாக வாக்களித்து விடுவார்கள். தலைவனும் அன்னூரைக் காப்பாற்றுவதாக வாக்களிப்பான். ஆ ஞ ல் அவர்களிடம் ஆண்டவன் அடிமை என்ற உறவு முறையைக் காண முடியாது. படை வீரர்கள் தங்களது பிரபுக்களைத் தமக்குச் சமமாகவே கருதினர். அவர்களிடையே கண்ணியமான ஒரு நட்புரிமை காணப்பட்டது. நிலமானிய முறையில் மானியதாரர்கள் மேலதிபர்களிடம் விசுவாசமாயிருப்பதாக உறுதி மொழி எடுத்துக் கொள்வதும், அதிபர் அவர்களைப் பாதுகாப்பதாக உறுதியளிப்பதுமான சடங்குகள் ஜெர்மானியரிடமிருந்தே தோன்றின. மற்றும், சட்டம் என்பது மக்களின் மரபுகளிலிருந்து முகிழ்க்க வேண்டுமேயன்றி அதிகாரத்தால் திணிக்கப்படலாகாது என்ற நிலமானியக் கொள்கையும், சட்டத்தை ஒருவன் எங்கு வேண்டுமாஞலும் எடுத்துச் செல்லலாம் என்ற கோட்பாடும் ஜெர்மானியர்களிடமிருந்து பெறப் பட்டவைகளாகும். இங்ஙனம் ரோமானியர்கள், கிறிஸ்தவ மத குருமார்கள், ஜெர்மானியர்கள் ஆகியோரின் பழக்க வழக்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து உரு வெடுத்த ஒரு முறையே நிலமானிய ஏற்பாடு எனப்படுவதாகும்.

## நிலமானிய முறையின் முக்கிய கூறுபாடுகள்

### அரசியல் கூறுபாடுகள்

நிலமானிய முறையில் அமையப் பெற்ற அரசாங்க அமைப்பானது ஒரு சில அடிப்படைக் கொள்கைகளை உட்கொண்டு விளங்கிற்று. முதலாவதாக நாம் ஏற்கனவேயே கண்டபடி நிலங்களை மானியமாகப் பெற்றவர்கள் மட்டுமே தங்களுக்குட் பட்டவர்களை ஆளுகின்ற உரிமைபெற்றவர்கள். அவ்வுரிமையோடு அவர்களுக்குரிய ஒரு சில கடமைகளும் இருந்தன. அக் கடமைகளைக் கடைப் பிடிக்கத் தவறினுல் அவர்களது மானியமானது உடனே பறிமுதல் செய்யப்பட்டு விடும்.

அரசாங்கமென்பது ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கு மிடையே ஏற்படுகின்ற ஒரு ஒப்பந்தத்தின் (Contract) அடிப் படையில் அமைந்தது என்பது நிலமானிய முறையின் மற்ருெரு முக்கிய கூறுபாடாகும். இதன்படி மன்னர்கள் ஒரு சில பொது வான சட்ட மரபுகளுக்கேற்பவே ஆட்சி புரிய வேண்டும். மக்களின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் அமைந்த சட்டங்களை அரசர்கள் மீறினுல், அவரை எதிர்க்கவும், முடியு மானுல் பதவியிலிருந்து நீக்கி விட்டு வேருெருவரை அரச ராக்கவும், நிலமானியப் பிரபுக்களுக்கு உரிமை உண்டு. அதே போன்று பிரபுக்கள் தமது மன்னருக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகளில் தவறினுல் அவரது நிலங்களைப் பிடுங்கிக் கொள்ளும் உரிமை மன்னருக்கிருந்தது.

வரம்புக்குட்பட்ட ஆட்சி முறையே நிலமானிய ஏற்பாட்டின் மூன்ருவது முக்கிய அரசியற் கூறுபாடாகும். இறைமை (Sovereignty) என்பது இம்முறைப்படி கட்டுக் கடங்காத தொன்றல்ல. சட்டங்களின் கட்டுத் திட்டங்களுக்குட்பட்டதே அரசாங்கம். எந்த அரசனும் தனது மனம் போன போக்கில் நடக்க இயலாது. தான் விரும்பியவாறெல்லாம் சட்டங்களை மக்கள் மீது அவனுல் திணிக்கவும் முடியாது. பிரபுக்களின் பிரதி நிதிகளடங்கிய சட்டசபைகளின் அநுமதி பெற்ற சட்டங்களையே அவன் இயற்ற வேண்டும். அவர்களின் சம்மதம் பெற்ற பின்பே மக்கள் மீது வரிகளை விதிக்க வேண்டும். தக்க காரணமின்றி யாரையும் மன்னன் சிறை செய்யக் கூடாது. இங்கிலாந்தில், நிலப்பிரபுக்களின் பிரதிநிதி களடங்கிய பாராளுமன்றத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஜான் என்ற மன்னன் கையெழுத் திட்ட மாபெரும் பட்டயம் (The great charter or Magna carta) இத்தகைய உரிமைகளுக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

நிலமானிய முறையில் ஒவ்வொரு பிரபுவும் தனக்குட்பட்ட சிறிய பிரபுக்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். சிறிய பிரபுக்களுக்கும் மன்னருக்கும் நேரடியான தொடர்பு இல்லை. எனவே சிறு பிரபுக்கள் தங்களது மேல் அதிபதிகளோடு சேர்ந்து கொண்டு மன்னரையே சில சமயம் எதிர்த்தனர். மன்னருக் கென்று தனிப் பட்டாளம் ஒன்றுமில்லை. பிரபுக்கள் அளித்த வீரர்களைக் கொண்டே அவர் எதிரிகளுடன் போரிட வேண்டி யிருந்தது. எனவே இத்தகைய முறையில் மன்னரை விட நில மானியப் பிரபுக்களே வல்லமையுடன் விளங்கினர். மன்னரின் பலஹீன நிலையும் நிலப் பிரபுக்களின் ஆதிக்கமும் நிலமானிய ஏற்பாட்டின் மற்றொரு முக்கிய கூறுபாடாகும்.

நிலமானிய ஒப்பந்தத்தில் நாடுகளும், அரசர்களுமேயன்றி திருச்சபைக் குருமார்களும் நகரங்களும் கூடப் பங்கெடுத்துக் கொண்டன. பிஷப்புகளும், மடாதிபதிகளும், நகரசபையினரும் சில சமயங்களில் பெரும் பிரபுக்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, அதன்படி ஒரு சில சேவைகளைச் செய்து ஒரு சில உரிமைகளையும் பாதுகாப்புகளையும் பெற்றனர். அதே போலப் பெரும் பிரபுக்கள் மன்னர்களுக்குப் படை உதவி அளிப்பதாகக் கூறி அன்னாரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி மன்னர்கள் அப்பிரபுக்களின் பண்ணைகளில் தலையிடுவதை நிறுத்திக் கொண்டனர். வரி வசூலிப்போரும், அரசாங்க அதிகாரிகளும் அங்கு செல்வது நின்றது. பிரபுக்கள் ஓரளவு சுயேச்சையோடு தமது குடி மக்களை ஆளும் உரிமை பெற்றிருந் தனர்.

### மானியம், மேலதிபர், மானியதாரர்கள்

ஆள்வோர்களையும் ஆளப்படுவோரையும் இணைக்கும் கருவி யாய் விளங்கியது 'மானியம்' (Fief) என்பதாகும். அது அதிபரால் அல்லது அரசரால் அளிக்கப்பட்டுப் பின் பரம்பரை பரம்பரை யாக அநுபவிக்கப்பட்டு ஒரு சில உரிமைகளே (benefice) யன்றி வேறல்ல. அவ்வுரிமை எப்போதும் நிலஉரிமையாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. சில சமயங்களில் அது ஒரு பதவியாகவோ, வரி தண்டும் உரிமையாகவோ, நாணயங்களை அச்சிடும் உரிமையாகவோ, சந்தைகளை வைத்து அதன் இலாபத்தை அடையும் உரிமையாகவோ கூட இருக்கலாம். இங்ஙனம் ஏதேனும் சில நன்மைகளையும் உரிமைகளையும் வழங்கியவர் 'மேல் அதிபர்' (Overlord) என்றும், பெற்றுக்

கொண்டவர் 'மானியதாரர்' (Vassal) என்றும் அழைக்கப் பட்டார். பொதுவாக ஒரு நாட்டின் அரசரே எல்லா மேல் அதிபர்களுக்கும் மேலான சர்வாதிபதி ஆவார். அவருக்கே நாட்டின் நிலமனைத்தும். சொந்தம் அவரிடமிருந்து நேராக நிலங் களையும் பதவிகளையும் பெற்றவர்கள் முக்கிய மானியதாரர் களாவர் (Tenants in chief) அவர்கள் டியூக்குகள் (Dukes) கவுண்டுகள் (Counts) ஏர்ல்கள் (Earls) மார்கிரேவ்கள் (Margraves) எனப் பலவிதமாக ஒவ்வொரு நாட்டிலும் அழைக்கப் பட்டனர். அவர்கள் தங்களுடைய பண்ணைகளைத் தமக்குக் கீழ்பட்ட பிரபுக்களுக்கு மானியங்களாக வழங்கினர். அத்தகைய இரண்டாம் வரிசைப் பிரபுக்கள் வைகவுண்டுகள் (Viscounts) என்றும், பாரன்கள் (Barons) என்றும் அழைக்கப்பட்டனர். மானியங்கள் மீண்டும் மீண்டும் இப்படியே பல சிறு பிரபுக் களிடையே பிரிக்கப்பட்டன. ஆனால் அதற்கும் ஓர் எல்லை இருந்தது. மீண்டும் பிரிக்கப்பட இயலாத சிறிய நிலத்தைப் பெற்றவர்கள் நைட்டுகள் (Knights) என்ற வீரர்களாவர். இங்ஙனம் மன்னரைத் தவிர ஏனைய பிரபுக்கள் அனைவரும் யாதாமொரு நபருக்கு அடிபணிந்து விசுவாசம் செலுத்த வேண்டியவர்களாவர். நைட்டுகளைத் தவிர ஏனைய அனைவரும் யாதாமொரு நபருக்கு மேலதிபர்களாவர். நிலமில்லாதவர்களும் நிலத்தை விட்டு நீங்க உரிமையில்லாதவர்களுமான ஊழியர்கள் செர்ஃபுகள் (Serf) எனப்பட்டனர்.

நிலமானிய முறையில் மேற்கண்டவாறு ஓர் ஒழுங்கான அமைப்பு எல்லா இடங்களிலும் காணப்படவில்லை. நாட்டுக்கு நாடு இடத்துக்கு இடம் அது வேறுபட்டது. ஒன்றுக்கு மேற் பட்ட பிரபுக்களிடம் மானியம் பெற்ற மானியதாரர்கள் பலர் இருந்தனர். மேல் அதிபர்களான பிரபுக்கள் தம்மிடையே போரிட்டுக் கொண்டபோது மானியதாரர்கள் யாருக்குப் படை உதவி செய்வது என அறியாமல் திகைக்க வேண்டிய நிலை பல சமயங்களில் ஏற்பட்டது. சில சமயம் அதிபதிகளும் அவரது மானியதாரர்களும் ஒரே மேலதிபதியிடம் நிலங்களைச் சன்மான மாகப் பெற்றிருந்தனர். யாவருக்கும் மேலதிபரான மன்னர் சிலசமயம் தமது பிரபுக்களிடமிருந்தே நிலங்களை மானியமாகப் பெற்றிருந்தார். மன்னரிடமிருந்தும், ஒரு பிஷப்பிடமிருந்தும், மற்றுமோர் நிலப்பிரபுவிடமிருந்தும் நிலங்களைப் பெற்றிருந்த ஒரு சிலர் யாருக்குத் தான், தாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்றே தெரியாமல் திகைத்தனர். இங்ஙனம் இத்தகைய ஏற்பாட்டில் ஒருவித குழப்பமே மண்டிக் கிடந்தது. எனவேதான் இவ்வேற் பாட்டை விவரிக்க வந்த டேவிஸ் எனும் ஆசிரியர் ''தோராய

மாசச் சீரமைக்கப்பட்ட ஒரு குழப்பநிலை'' (Confusion roughly organized) எனக் கூறிச் சென்றார். சான்றாக ஒரு மேலதிபரிடமிருந்து நிலத்தை மானியமாகப் பெற்றிருந்த பிஷப் ஒருவர் திடீரென்று இறந்து விட்டாரானால் அவரது நிலம் யாருக்குச் சேர வேண்டும் என்பதில் ஒரே சச்சரவு ஏற்பட்டு விடும். தனது திருவனத்துக்குட்பட்ட மதகுரு என்ற முறையில் திருச்சபை தனக்குத் தான் நிலம் சேரவேண்டுமெனக் கூற மேலதிபர் தனக்குத் தான் அந்நிலம் வர வேண்டுமென வாதிக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டு விடும்.

### கடமைகளும் உரிமைகளும்

நிலமானியப் பிரபுக்கள் பல்வேறு உரிமைகள் கடமைகள் எனும் வலையினுள் கட்டுண்டு கிடந்தனர். தமக்குக் கீழ்ப்பட்ட பிரபுக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளித்த மேலதிபர் (Suzerain) ஒரு சில உரிமைகளைப் பெற்றிருந்தார். தனது மானியதாரர் இறக்கும் போது, அவரது மூத்த மகன் வயது வராத சிறுவனாக இருந்தால் அவன் வயது அடையும் வரை அவனுக்குப் பாதுகாப்பாளனாக (Guardian) இருந்து நிலங்களைப் பராமரிக்கும் உரிமை மேலதிபர்க்கே உரித்தாகும். வாரிசின்றியே ஒரு மானியதாரர் இறந்துவிட்டால் அவரது சொத்துக்களனைத்தையும் மேலதிபரே எடுத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தார். அதே போல நிலமானிய ஒப்பந்தத்தை ஒரு மானியதாரர் மீறினாரெனினும் அவரது நிலங்களைப் பறிமுதல் செய்து திரும்பவும் எடுத்துக் கொள்ளும் உரிமையை மேலதிபர் பெற்றிருந்தார். ஆனால் ஒப்பந்தத்தை ஒருவர் மீறினரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவரை ஒத்த நிலையிலிருந்த பிரபுக்களின் சபை ஒன்றுக்கே உண்டு. இங்ஙனம் உரிமைகளைப் பெற்றிருந்த மேலதிபருக்கு ஒரு சில கடமைகளும் இருந்தன. தமது மானியதாரர்களை அவர்களது எதிரிகளிடமிருந்து காப்பாற்ற அவர் அவ்வப்போது படைவீரர்களை அனுப்ப வேண்டும். மானியதாரர்களிடையே சச்சரவு ஏதேனும் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அவருடையதேயாம். நீதி வழங்கும் பொறுப்பு அவருடையது மட்டுமல்ல. நீதி மன்றத்துக்குத் தலைமை தாங்குவதொன்றே அவரது கடமை. ஒரு பிரபுவின் வழக்கை விசாரித்துக் குற்றம் சாட்ட, அவரை ஒத்த பிரபுக்களுக்கே இயலும். தனக்கு நீதி வழங்காத அல்லது பாதுகாப்பு அளிக்க இயலாத மேலதிபரை ஒரு பிரபு மறுதலிக்கவும், அவரது கட்டுப்பாட்டினின்றும் விடுவித்துக் கொள்ளவும் ஒரு மானியதாரர்க்கு உரிமை இருந்தது. ஆனால் அவரது கடமைகளோ

பல. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு (40 நாட்களுக்கு) அவர் தமது மேலதிபருக்கு இராணுவ சேவை செய்ய வேண்டும். அவரது நீதிமன்றத்தில் அமர்ந்து நீதி பரிபாலனம் செய்ய வேண்டும், மேலதிபர் எதிரிகளிடம் சிறைப் பட்டு விட்டால் போதிய இழப்பீட்டுத் தொகையைத் (Ransom) தந்து அவரை சிறையினின்றும் விடுவிக்க வேண்டும். தனது இருப்பிடத்தின் மூலமாக மேலதிபர் பயணம் செய்தால் அவரது வழிச் செலவுகளை மானியதாரரே ஏற்க வேண்டும். அவரது மூத்த மகளது திருமணத்தின் போதும், மூத்தமகன் நைட் எனும் வீரனாகப் பட்டமெய்திய போதும் அல்லது அவர் சிலுவைப் போர்களில் கலந்து கொண்டபோதும் ஒரு குறிப்பிட்ட தொகையை மானியதாரர் செலுத்த வேண்டும். தனது தந்தையின் மரணத்துக்குப்பின் அவரது நிலங்களை முறைப்படி பெறுகின்ற தனயன் மேலதிபருக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தந்தையின் மரணத்தின்போது மானியதாரர் சிறு வனாக இருந்தால் அவரது நிலங்களை அவருக்குப் பதிலாக பரா மரிக்க ஒரு குறிப்பிட்ட தொகையை அவர் தமது மேலதிபருக்குச் செலுத்த வேண்டும். மானியதாரர் பெண்ணாக இருந்தால் அவரது கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மேலதிபருக்கே இருந்தது. ஒரு சில விசித்திரமான கடமைகளும் மானிய தாரர்க்கு இருந்தன. சான்றாக பிரபு ஒருவர் கப்பலில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும்பொழுது அவரது மானியதாரர் அவரது தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வாந்தி வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்.

## நிலமானியச் சட்டம்

நிலமானியப் பிரபுக்கள் அனைவரும் தத்தம் பண்ணைகளில் நீதிமன்றங்களை வைத்திருந்தனர். குடியானவர்களின் சில்லறைப் பூசல்களும், சிறு பிரபுக்களின் எல்லைத் தகராறுகளும், கொலை, கொள்ளை போன்ற குற்றங்களும் அங்கேயே விசாரிக்கப்பட்டன. மக்களிடையே வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்ட வழக் காறுகளே பல இடங்களில் சட்டங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டன. சான்றாக வட பிரான்ஸில் பிராங்குகளின் வழக் கங்களே சட்டங்களின் அடிப்படையாய் விளங்கின, ஆனால் தென் பிரான்ஸில் ரோமானியச் சட்டங்கள் அமல் செய்யப் பட்டன.

சொத்துரிமை பற்றிய சட்டம் மிக சிக்கலாக இருந்தது. கொள்கையளவில் மன்னரே எல்லா நிலங்களுக்கும் சொந்த மானவர். ஆனால் நடைமுறையில் மானியதாரர்களே நிலங்களைச்

சொந்தமாகப் பயன்படுத்தினர். அவர்கள் இறந்தபோது மூத்த மக்களே சொத்துக்களைப் பெற்றனர். பிரான்ஸ் இங்கிலாந்து போன்ற நாடுகளில் மூத்தமகன் சொத்துரிமை பெறும் முறை நன்கு கடைப் பிடிக்கப்பட்டது. ஆனால் ஜெர்மனியில் அக் கொள்கை வழக்கத்துக்கு வரவில்லை. மற்றும் நிலமானிய முறை எல்லா இடங்களிலும் பரவவில்லை. பிரான்ஸ், இதாலி, ஜெர்மனி முதலிய நாடுகளிலுள்ள மலைப்பிரதேசங்களில் வாழ்ந்த வேளாண்மாந்தர், நிலங்களை மானியமாகப் பெறவில்லை. தனிப் பட்ட நிலச் சொந்தக்காரர்களாக அவர்கள் விளங்கினர். பழைய மரபுகளுக்கேற்பவே நில உரிமை வழக்குகள் தீர்க்கப் பட்டன.

நீதிமன்றங்களில் பலவகை இருந்தன. பண்ணை நீதி மன்றங் களில் ஒரு குடியானவருக்கும் (Tenant) மற்றொரு குடியானவ ருக்குமிடையே ஏற்பட்ட வழக்குகளும், குடியானவருக்கும் நிலப் பிரபுவுக்கும் (Lord) ஏற்பட்ட வழக்குகளும் விசாரிக்கப் பட்டன. பிரபுக்களிடையே ஏற்பட்ட வழக்குகளும், பிரபுக்களுக்கும் அவர் களுக்குட்பட்ட மானியதாரர்களுக்கும் ஏற்பட்ட வழக்குகளும் அந்தஸ்தில் அவர்களுக்குச் சமமான நபர்களடங்கிய ஜுரியைக் கொண்டே விசாரிக்கப்பட்டன. ஜுரிகள் அந்தந்த மானியங்களில் நிரந்தரமாய் வாழ்பவர்களாயிருக்க வேண்டும். சமய சம்மந்த மான நீதிமன்றங்களில், குருமார்களின் வழக்குகளும், திருச்சபை ஊழியர்களிடையே ஏற்படும் வழக்குகளும் விசாரிக்கப்பட்டன. இந்நீதி மன்றங்களில் எல்லாம் தீர்க்கப்பட முடியாத வழக்குகள் மன்னரின் நீதிமன்றங்களுக்கு எடுத்துச்செல்லப் பட்டன. மன்னரது நீதிமன்றமே வட்டார நீதிமன்றங்களுக்கெல்லாம் இறுதி முறையீட்டு நீதிமன்றமாக (Final Court of appeal) விளங்கியது.

நெருப்பு, நீர் முதலியவற்றைக் கொண்டு கடுமையாக சோதித்துக் குற்றத்தை மெய்ப்பிக்கும் முறை (Ordeal) ஆரம் பத்தில் வழக்காற்றிலிருந்தது. கிறிஸ்தவ சமயத்தின் பிரசாரத் தால் நாளடைவில் அம்முறை மாய்ந்தது. ஆனால் குற்றம் சாட்டப் பட்ட ஒருவர் குற்றம் சாட்டியவருக்குச் சவால் விடுத்து அழைத்துச் சண்டையிட்டு வென்று அதன்மூலம்தான் நிரபராதி என்று மெய்ப்பிக்கின்ற துவந்தப் போர் முறை (Duel) ஐரோப்பா வில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. தண்டனைகள் மிகவும் கடுமையாக இருந்தன. கசையடி கொடுத்தல், சித்திரவதை செய்தல் முதலிய தண்டனைகள் சாதாரணமாக வழங்கப்பட்டன. கொலை திருட்டு போன்ற குற்றங்களுக்குத் தூக்குத்ததண்டனை

தரப்பட்டது. சமய விரோதிகளை சமய நீதிமன்றங்கள் உயிரோடு கொளுத்துமாறு ஆணையிட்டன. பெண் கொலையாளிகள் சில சமயம் உயிரோடு புதைக்கப்பட்டனர்.

## நிலமானியப் பிரபுக்களின் வாழ்க்கை

பல்வேறு உரிமைகளையும் அதிகாரங்களையும் அனுபவித்த நிலமானியப் பிரபுக்கள் சதா சுகபோக வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்தார்கள் எனக் கருதுதற் கிடமில்லை. ஏனெனில் இடைக் காலக் கல்லறைகளில் காணப்பட்ட எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிவியல் வல்லுநர்கள் அக்காலப் பிரபுக்களின் சராசரி வயது நாற்பத்திரண்டாகத் தான் இருந்திருக்க வேண்டுமெனக் கூறு கின்றனர்.

அவர்களது காப்பரண் மாளிகைகள் பெரும்பாலும் மரத்தா லானவை. எனவே எந்த சமயத்திலும் தீப்பிடித்துக் கொள்ளக் கூடிய அபாயம் அவற்றுக்கிருந்தது. பிற்காலக் காப்பரண் மாளிகைகள் கற்களால் கட்டப்பட்டிருந்தன. எனினும் அவை சற்றும் காற்றோட்ட வசதி இல்லாத முறையிலேயே கட்டப்பட்டி ருந்தன. ஒரு திட்டம் எதுவுமின்றி பல கட்டடங்கள் கோட்டைக்குள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கட்டப்பட்டிருந்தன. நடுவில் பிரபுவின் வாழ்விடமான டஞ்சன் என்ற வீடு கட்டப் பட்டிருந்தது. அதில் கூட அறைகள் இருட்டாக இருந்தன. சமையல் அறையில் ஜன்னல்களின்மையால் புகை சதா மண்டிக் கிடந்தது. நன்கு பாவப்பெறாத தரைகளைக் கொண்ட அதன் அறைகளில் அழுக்கும் முடை நாற்றமும் நிறைந்திருந்தது. அந் நாற்றத்தைப் போக்க வாசனை நிறைந்த பூக்களும் தழைகளும் ஆங்காங்கே தூவப்பெற்றன. நடுமண்டபத்தில் பூனைகளும் நாய் களும் திரிந்தன. சாப்பாட்டு மேஜையினின்றும் எறியப்பட்ட ரொட்டித்துண்டுகளைக் கௌவிப் பிடிக்க அவை போட்டி போட்டுக் கொண்டு ஓடின. தரைகளில் விலையுயர்ந்த கம்பளங்கள் விரிக்கப் படவில்லை. உயர்ந்த புற்களும் நாணல் தட்டுகளுமே அதில் பரப்பப்பட்டிருந்தன. அவற்றின் மேல் நாய்கள் மலங்கழித்து விட்டுச் செல்லும். அதை மறைக்க மேலும் புற்கள் அவற்றின் மீது பரப்பப்படும்.

கோட்டைகளில் அடிக்கடி விருந்து நடைபெறும். அங்கு நல்ல சத்து நிறைந்த உணவு வகைககள் பரிமாறப்படும். சூப்புகள், இறைச்சி, மீன், இனிப்புப் பண்டங்கள் முதலியனவும், முட்டைகோஸ், டர்னிப் கிழங்குகள், கேரட், வெங்காயம், அவரை, பட்டாணி போன்ற காய்கறிகளும், ஆப்பில்கள், பியர்ஸ்

போன்ற பழவகைகளும் பிரபுக்களின் உணவுப் பட்டியலில் இடம் பெற்றன. காபி, டீ போன்ற பானங்களை அன்னூர் அறிந்திலர். மிகப் பிற்காலத்திலேயே சர்க்கரையை அவர்கள் பயன் படுத்தினர்.

பிரபுக்களின் காப்பரண் மாளிகைகள் (Castles) எளிதில் பிடிக்க முடியாதவை. அவை திண்ணிய மதிற் சுவர்களாலும் அதற்கருகில் அமைந்த அகழிகளாலும் சூழப்பட்டிருந்தன. அகழியைக் கடக்க ஒரு தொங்கு பாலத்தை அவர்கள் பயன் படுத்தினர். எதிரிகள் வந்தபோது அப்பாலம் உள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டது. கோட்டையை எதிரிகள் முற்றுகையிட்ட போது, உள்ளிருக்கும் வீரர்கள் அவர்கள் மீது அம்பு மழை பொழிவர். பெரிய பாறுங்கற்களை உருட்டி விடுவர். எதிரிகள் தற்காலிகப் பாலம் ஒன்றை அமைத்து அதன்மூலம் வீரர்கள் நிறைந்த தேர் ஒன்றை அனுப்பி மதில்களைக் கடக்க முயல்வர். மதில்களை இடிக்கப் பல கருவிகளைப் பயன்படுத்துவர்; பாறைகளை மதில் மீது எறிவர். ஏணிகளைக் கொண்டு அதில் ஏறுவர். கோட்டைக்குள்ளிருந்த டஞ்சன் (Donjon) என்ற கோபுரமே எதிரிகளின் குறிக்கோளாகும். அதில்தான் பிரபுவின் அத்தாணி மண்டபமும், பள்ளியறையும், சிறைச் சாலையும் இருந்தன. சில சமயம் வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் எவையும் கோட்டைக்குள் செல்லாதவாறு எதிரிகள் தடுப்பர். அத்தகைய இக்கட்டினின்றும் காத்துக்கொள்ள ஒவ்வொரு பிரபுவும் ஏராள மான தானியங்களையும் உணவுப் பண்டங்களையும் கோட்டையி லுள்ள சேமக்கிடங்கில் சேமித்து வைத்திருப்பது வழக்கம்.

ஒருவரை ஒருவர் சுடுதலையும் மலைதலையும் நிலமானியப் பிரபுக்கள் ஒரு கடமையாகவும் சிலசமயம் ஒரு பொழுதுபோக்கா கவும் கருதினர். நில உரிமை பற்றிய சச்சரவுகளை அன்னூர் போரிட்டே தீர்த்துக் கொண்டனர். பணம் பத்தும் செய்யும் என்றபடி, பண ஆசையின் காரணமாக இளைய புதல்வர்கள் மூத்த மகனோடு பொருது அவனை மாய்த்துவிட முயற்சிப்பர். வலியார் மெலியார்மேல் பாய்ந்து அவர் தம் நிலபுலன்களைக் கைப்பற்ற முனைவர். குறிப்பிட்ட ஓர் அழகிய நங்கையின் கைப்பிடிக்க இளைஞர் பலர் தமக்குள் சண்டையிடுவர். இங்ஙனம் யாதாமொரு சாக்கு வைத்துக் கொண்டு இடைக்காலப் பிரபுக்கள் தமக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டனர். ஒவ்வொரு பிரபுவுக்கும் அவரவர்க்கென ஒரு சிறு பட்டாளம் இருந்ததால் எடுத்ததற் கெல்லாம் போரிடுவதென்பது அவர்களின் வழக்கமாய்ப் போய் விட்டது. இதனால் இரு தரப்பிலும் பலர் மாய்ந்தனர்.

இக்காலத்தைப் போல் அத்தனை பேர் போரில் மடியா விடினும் அடிக்கடி போர் விளைதலை மக்கள் அருவருத்தனர். திருச்சபை அத்தகைய போர்களைத் தடுக்கச் சட்டம் செய்தது. திங்கட் கிழமை முதல் புதன்கிழமை வரையிலும், கிறிஸ்துமஸ் தினத்திலிருந்து எபிகனி தினம் (ஜனவரி 6ந்தேதி) வரையிலும், வசந்த காலம், இலையுதிர்காலம், கோடைகாலம் இவற்றில் ஒரு சில நாட்களிலும் யாரும் வாளேந்திப் போர் புரியக்கூடாது என அது அறிவித்தது. இறைவனின் தற்காலிக அமைதி நாட்கள் (Truce of God) என அந்நாட்கள் அழைக்கப்பட்டன. ஆலயங்களை இடித்தல், ஏழைகளைக் கொள்ளையடித்தல், குருமார்களைத் துன்புறுத்தல் இவற்றில் யாரும் ஈடுபடுவது கூடாது என திருச்சபை ஓர் ஆணையை வெளியிட்டது. அது இறைவனின் சமாதான ஆணை (Peace of God) என அழைக்கப் பட்டது.

வம்புக்குப் போர் செய்யும் பிரபுக்களை விட கண்ணியமான முறையில் போரிலீடுபட்ட நைட்டுகள் எனும் வீரர்களை நிலமானிய முறை தோற்றுவித்தது. இடைக்கால நைட் வீரர்கள் ஒளிமிக்க கவசத்தை அணிந்து கொண்டு துள்ளியோடும் குதிரை மீதேறிச் சவாரி செய்து துணிகரமான பல வீர சாகசங்களில் ஈடுபடுவதாக அக்கால வீரகாவியங்கள் பேசுகின்றன. அது ஒருவகையில் உண்மைதான். எனினும் அவற்றில் மிகைபடக் கூறல் என்ற குற்றம் அதிகம்.

ஒருவன் நைட்டாக வேண்டுமானால் அவன் நல்ல கண்ணியமான குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும். போர்ப் பயிற்சியில் வல்லவனாயிருக்க வேண்டும். அரண்மனையின் மரியாதை முறைகள் (etiquette) அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். வீட்டிலும், ஒரு பிரபுவின் கோட்டையிலும் அவனுக்கு இசை, நாட்டியம், சமயம், குதிரை ஏற்றம், வேட்டையாடுதல், வில், வாள், ஈட்டி, கோடரி இவற்றைப் பயன்படுத்தல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும். இருபது வயது அடைந்த பின் விழா ஒன்று ஏற்பாடு செய்து அதில் அவனுக்கு நைட் பட்டம் வழங்கப்படும். அது வழங்கப்படுவதற்கு முன்னாள் இரவு அவன் விழித்திருந்து இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்; அடுத்த நாள் விழாவில் பிரபு ஒருவர் தமது வாளால் அவனது தலையில் இருமுறை இலேசாகத் தட்டி நைட் பட்டத்தை வழங்குவார். தான் ஒரு சுத்த வீரன் என்பதை மெய்ப்பிக்க அவன் ஒரு சில துணிகரச் செயல்களைச் செய்து காட்ட வேண்டும். அவற்றில் தவறினால் அவனது வாளையும் கேடயத்தையும் பிரபு பிடுங்கிக் கொள்வார். நைட்டுகள் ஒருவகையான கண்ணியமிக்க பண்பாட்டு நெறியினை

கடைப்பிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது. அந்நெறியானது வீரப்பெருந்தகைமை (Chivalry) எனப்பட்டது. அதன் படி நைட் வீரன் ஒருவன் தைரியமுள்ளவனுகவும், சுயநலமற்றவனுகவும், அடக்கமுடையவனுகவும் நடந்துகொள்ள வேண்டும். கிறிஸ்தவ சமயத்தைக் காப்பதும், ஆபத்துக்காலத்தில் ஏழைகள், அநாதைசள், பெண்டிர், குழந்தைகள் ஆகியோரை உயிரை விட்டாவது காக்க வேண்டுவதும் அவன் கடமையாகும். இத்தகைய உயர்ந்த இலட்சியங்களையும், கௌரவத்தையும் வற்புறுத்துவதில் திருச்சபையும் கிறிஸ்தவ சமயமும், ஜெர்மானிய வழக்காறுகளும் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டன. எனினும் ஒருசில நைட்டுகள் வியாபாரிகளைக் கொள்ளையடித்தல், சிறு தவறுகளுக்கெல்லாம் ஆட்களைக் கொல்லல் பிறரது அழகிய மனைவியரைக் கெடுத்தல் போன்ற தீய வழிகளில் இறங்கினர்.

வீரப் பெருந்தகைமை (Chivalry) எனும் பண்பின் வளர்ச்சியால் இடைக்கால மகளிரின் நிலை உயர்ந்தது. அவர்களைச் சீ என்றும் பேயென்றும் நாயென்றும் பழித்த காலம் போய்விட்டது. அழகிய நங்கையரின் காதலைப் பெறப் பல இளைஞர்கள் தவங்கிடந்தனர். அவர்களை மணக்க தங்களது வீரத்தை எல்லாம் காட்டவும் உயிரையே பயணம் வைக்கவும் அன்னார் முன் வந்தனர். விளையாட்டுப் பந்தயங்களில் தன்னல் விரும்பப்பட்ட அழகியின் அடையாள நிறங்களை அவர்கள் தங்களது ஈட்டியிலும் கேடயத்திலும் தீட்டிக் கொண்டனர். தமது காதலிகள் பார்த்துக் களிக்கவென்றே பலர் மல்யுத்தங்களிலும் வேறு பல விளையாட்டுகளிலும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற வீரன், விளையாட்டைக் கண்டு களிக்க வந்த பெண்களிலேயே மிகவும் எழில் நிறைந்த இளமங்கையை முத்தமிடும் உரிமையைப் பெற்றிருந்தான். கோட்டையிலுள்ள இளமங்கையரை அடைவதை ஒவ்வொரு இளைஞனும் தான் பெறற்கரிய பேறு எனக் கருதினன். பெண்களும் பகட்டான உடையணிந்து மேனியைப் பல்லாற்ருனும் அழகு செய்து கொண்டனர். கணவர்களை மகிழ்வித்தலொன்றே பெண்களின் தலையாய கடமை எனக் கருதப்பட்டது. உடலை கொடிபோல் வைத்துக்கொள்ள அன்னர் மிதமாக உண்டனர். ஆண்களைக் கவரும் வகையில் இங்கிதமாகப் பேசிப் பழகினர். இசை, நாட்டியம், குதிரையேற்றம் இவற்றில் நல்ல பயிற்சி பெற்றனர். வண்ணுத்திப் பூச்சியைப் பழிக்கும் வகையில் பல வண்ண ஆடைகளையும் தொப்பிகளையும் அணிந்தனர். கணவர்களைக் கவர, தையல் கலை, சித்திரங்களைத் துணிகளில் பொறிக்கும் கலை இவற்றைக் கற்றனர். வீட்டு நிர்வாகத்தை நன்கு கவனித்துக் கொள்வதே பெண்டிரின் முக்கிய கடமையாகக் கருதப்பட்டது.

இல்லத்தரசியாகத் திகழ்ந்த பெண்களுக்குச் சட்டப்படி பல உரிமைகள் மறுக்கப்பட்டன. சொத்துரிமை அவர்களுக்குத் தரப்படவில்லை. கணவர்கள் மனைவியரை அடித்துத் துன்புறுத்துவ தென்பது சாதாரணமாக நடைபெற்றது.

ஓய்வு நேரங்களில் நிலமானிய பிரபுக்கள் பல பொழுது போக்குகளைக் கையாண்டனர். நன்கு கவசமணிந்த வீரர்கள், குதிரை மீது சவாரி செய்துகொண்டே ஒரு முனைமழுங்கிய ஈட்டியைக்கொண்டு ஒருவரை ஒருவர், குதிரை மீதிருந்து உலுக் காட்ட முயற்சிப்பர். அது ஜௌஸ்ட் (Joust) என்ற விளையாட் டாகும். ஒரு வீரர் கூட்டம் இன்னொரு வீரர் கூட்டத்தோடு விளையாட்டாக மலைந்து தோற்கடிக்க முற்படும். அதற்கு டோர்னமெண்ட் (Tournament) என்று பெயர். இவ்விளையாட்டில் தோல்வியடைந்தவர் தனது குதிரையையும் கவசத்தையும் வெற்றி பெற்றவருக்குத் தந்துவிட வேண்டும்.

பிரபுக்களின் மற்றுமோர் பொழுதுபோக்கு வேட்டையாடுத லாகும். பழக்கப்பட்ட இராஜாளிப் பறவைகளைக் கொண்டு அவர்கள் பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாடுவர். அழகிய குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு ஆடவரும் பெண்டிரும் வேட்டையாடுதல் பொருட்டு அடிக்கடி காடுகளுக்குள் செல்வர். அடிக்கடி விருந்துகளை ஏற்பாடு செய்து அறுசுவை உண்டிகளை உண்டும், தேட்கடுப்பன்ன காட்படு தேறலை மாந்தியும் களிப் புறுவர். பிறரைக் களிப்பிப்பதையே சீர் தொழிலாகக் கொண்ட வித்தைக்காரர்கள், கோமாளிகள், பாடினிகள், ஆடவர்கள் முதலியோரைக் கொண்டு அவர்கள் கலைகளை ரசித்தனர். புலவர்கள் செய்யுள்களை யாத்து மகிழ்ந்தனர். வீரர்களைப் புகழ்ந்து அன்னோர் பாடினர். சொக்கட்டான் ஆடுதல் இன்னொரு பொழுது போக்காகும். இங்ஙனம் இடைக்கால நிலமானியப் பிரபுக்கள் வீரத்திலும் தீரத்திலுமேயன்றி கலைகளிலும், பொழுதுபோக்கு களிலும் சிறந்தவர்களாக விளங்கினர்.

## நிலமானிய ஏற்பாட்டின் சமுதாயப் பொருளாதாரக் கூறுபாடுகள்

### மேனர் பண்ணை முறை (Manorial System)

நிலமானிய ஏற்பாட்டுப் பொருளாதார அமைப்பின் மூலக் கூறுபாடு (Unit) மேனர் (Manor) எனும் பண்ணையாகும். குதிரை மீதேறிப் போர் செய்யும் ஒரு நைட் வீரனுக்கு மானியமாக வழங்கப் பட்ட நிலமே பொதுவாக மேனர் என அழைக்கப்

பட்டது. நைட்டுகளை விட உயர்ந்த பிரபுக்கள் பல மேனர் களுக்கு உரியவர்களாயிருந்தனர். நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் மேனர்களை வைத்திருந்த பிரபுக்கள் பலராவர். ஒரு பண்ணையின் சராசரி அளவு இவ்வளவுதான் என்று திட்டவட்டமாகக் கூற இயலாதெனினும், சாதாரணமாக ஒரு சிறிய சராசரிப் பண்ணை 300 அல்லது 400 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மேனரிலும் பல கிராமங்கள் அடங்கியிருந்தன. அக் கிராமங்களில் பல குடியான வர்களின் குடும்பங்கள் வாழ்ந்தன. குடியானவர்களும் பிரபுக் களும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு நிலங்களைப் பயிரிட்டு அவற்றின் விளைவைத் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். பிரான்ஸின் கிழக்குப் பகுதியிலும், இதாலியிலும், ஜெர்மனி யிலும் தான் முதலில் இவ்விதப் பண்ணைகள் நாட்டுப் புறங்களில் தோன்றின. பிரான்ஸில் சினியூரி (Seigneurie) என்றும், ஜெர்மனியில் கிரண்டர் ஷாப்ட் (Grundher Shaft) என்றும் அவை அழைக்கப்பட்டன. பின்னர் ஐரோப்பிய நாடுகளனைத் திலும் இங்கிலாந்திலும் பண்ணை முறை வேளாண்மை பரவியது. இங்கிலாந்தின் மேனர் பண்ணை முறை, இடைக்காலப் பண்ணை களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாயிருந்தது.

### பண்ணை வீடு (Manor-House)

ஒவ்வொரு மேனருக்கும் ஒவ்வொரு பிரபு (Lord) தலைவராக விளங்கினர். அவரது ஆட்சிக்குட்பட்ட பல குடியானவர்கள் (Tenants) பண்ணையின் பங்குதாரர்களாக விளங்கினர். தலைமைப் பிரபு சில சமயம் ஒரு பிஷப்பாகவோ, மடாதிபதியாகவோ இருக்கக் கூடும். பொதுவாக டியூக், ஏர்ல், பாரன் போன்ற உலகியல் பிரபுவே பண்ணையின் தலைவராக இருப்பது வழக்கம். அப்படியானால், பண்ணையின் நடுவில் அவருக்கென்று ஒரு கோட்டை (Castle) இருக்கும். அதுவே பிரபுவின் இல்லமாகவும் திகழ்ந்தது. மேனர் வீடு (Manor-House) என அதை அனைவரும் அழைத்தனர். அது நாம் ஏற்கனவே விவரித்தபடி டஞ்சன் என்ற அரண்மனையையும், பண்டக சாலைகளையும், தொழிலாளர் கூடங்களையும் கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஆழமான அகழி ஒன்றும் அமைந்திருந்தது. கோட்டையை அடுத்துக் குடியான வர்களின் வீடுகளும், மாதா கோயிலும், தொழிற்கூடங்களும், மாவரைக்கும் பொறிகளும், கடைகளும் அமைந்திருக்கும்.

### மூன்று வயல் வெளிகள்

குடியிருப்புகளுக்கு அடுத்தாற்போல் பயிர் செய்வதற்கான வயல்கள் இருந்தன. அவற்றில் ஒரு பகுதி பிரபுவுக்கு மட்டுமே

உரித்தானது. அது பிரபுவின் நிலம் (Lords Domain) என அழைக்கப்பட்டது. ஏனைய நிலங்கள் யாவும் பிரபுவுக்கும் குடியானவர்களுக்கும் பொதுவானவை. அந்நிலங்கள் சாகுபடி நிலம் (Arable lands) என்றும், புல்வெளி (Meadows) என்றும் காடுகள் (Forests) என்றும் மூவகையாகப் பிரிக்கப்பட்டன. சாகுபடிக்குரிய நிலங்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டன. அவற்றில் ஒன்று வசந்த காலத்தில் பயிரிடப்படுதற்கும், மற்றொன்று இலையுதிர் காலத்தே சாகுபடி செய்யப்படுதற்கும், மூன்றாவது பயிரிடப்படாமல் தரிசாகக் கிடக்கவும் என ஒதுக்கப் பட்டது. ஒரு நிலம் தரிசாகக் கிடப்பதன் மூலம் சூரிய வெளிச்சத்தைக் கொண்டு அது தனது இழந்த செழுமையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையினடிப் படையிலேயே நிலத்தில் ஒரு பகுதி மாறி மாறித் தரிசாகப் போடப்பட்டது. குடியானவர்கள் ஒவ்வொருவருக்கும் இம் மூன்றுவகை நிலங்களிலும் ஒவ்வொரு பகுதி வழங்கப் பட்டிருந்தது. இதற்கு முவ்வயல் வேளாண்மை முறை (Three Field System) என்று பெயர். ஏறக்குறைய ஓர் ஏக்கர் பரப்புள்ள நிலம் ஒவ்வொரு வகை நிலத்திலும் ஒருவனுக்குக் கிடைத்தது. கிராமத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஒவ்வொரு குடியான வனுடைய நிலமும் சிதறுண்டு கிடந்தது. ஒருவனது நிலத்துக்கும் மற்றவனது நிலத்துக்கும் இடையே ஒரு குறுகிய வரப்பு இருக்கும். அதில் புல் வளர்ந்திருக்கும். ஒருவனது நிலத்தில் மாடு புகுந்தால் ஏறக்குறைய எல்லாருடைய நிலங்களிலும் அது புகுந்து மேய்ந்து விட்டுப் போய் விடும். எனவே குடியானவர்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமையாக இருந்தனர். ஒருவனது மாடுகள் மற்றொருவர் நிலங்களில் புகாவண்ணம் அவர்கள் காத்துக் கொண்டனர். திறந்த வயல் வெளி முறை (Open Field System) யில் ஒவ்வொரு வயற்பகுதியிலும் கூட்டாகவே உழவர்கள் பயிர் செய்தனர்.

## விவசாய முறை

இடைக்கால வேளாண்மை முறையில் மரக் கலப்பைகளும் எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. கழுத்தை இறுக்காத நுகத்தடியையும், குளம்பைத் தேய்க்காத இரும்பு இலாடங்களும் பயன்படுத்தப்பட்ட பின் எருதுகளுக்குப் பதிலாகக் குதிரைகள் உழுவதற்கும் பயன்படுத்தப் பட்டன. கலப்பையின் கொழு முதலில் மர முனையையும் பின்னர் இரும்பு முனையையும் கொண்டிருந்தது. விதைகள் கையினாலேயே தெள்ளி எறியப் பட்டன. களைகளும் பயிர்களும் சேர்ந்தே வளர்ந்தன.

சத்துள்ள உரங்களைப் பயன்படுத்தும் உத்தியை அக்கால மக்கள் அறிந்திலர். ஆடு மாடுகளுக்கும் சத்துள்ள தீவனங்கள் போடப் படவில்லை. அரிவாள் போன்ற விவசாயக் கருவிகள் மரத் தாலேயே செய்யப்பட்டன. எனவே இடைக்கால வேளாண்மை யில் விளைச்சல் அதிகமாயில்லை. ஆடு மாடுகளும் நன்கு செழுமை யாக இல்லை.

குடியானவர்கள் தங்களது ஆடுமாடுகளை மேய்த்துக் கொள்ள கிராமப் புல் வெளிகளையும், அடுப்புக்கு விறகு வெட்டிக் கொள்ள கிராமக் காடுகளையும் பயன்படுத்திக் கொண்டனர். புல் வெளி களும், காடுகளும் யாவர்க்கும் பொதுவாயிருந்த போதிலும் அவற்றில் எவ்வளவு தூரம் ஒருவர் பயனடைந்து கொள்ளலாம் என்பது நிலமானியப் பிரபுக்களின் சபையினுலோ, நீதிமன்றத் தாலோ தான் தீர்மானிக்கப்பட்டது.

**விவசாய குடிமக்கள் வகை**

பண்ணையில் விவசாயம் செய்த குடியானவர்களிடையே பல்வேறு வகுப்புகள் இருந்தன. அவர்களது உரிமைகளும் கடமைகளும் வெவ்வேருனவை. சுயேச்சை மானியதாரர்கள் (Free holders) என்போர் ஒருவகை. அவர்கள் மிகச் சிறுபான்மை யினரேயாவர். அவர்கள் பிரபுவினிடம் நேரடியாக ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள். பிரபுவின் சொந்த நிலத்தில் ஒரு பகுதியைப் பெற்று அதை உழுது அதில் வரும் பயனில் ஒரு பாகத்தைப் பிரபுவுக்கு அன்னூர் செலுத்தினர். பண்ணையின் உறுப்பினர் என்ற முறையில் பண்ணைக் குடிமக்களனைவரின் விருப்பத்துக்கு அவர்கள் உட்பட வேண்டுமே எனினும், ஓரளவு சுதந்திரத்தை அவர்கள் அநுபவித்தனர். பிரபுவின் நிலங்களைப் பயிரிடவோ அன்றி அதை விட்டுவிட்டுப் போய் விடவோ அவர் களுக்குப் பூரண உரிமை இருந்தது. பிரபுவின் நீதிமன்ற நடவடிக்கைகளில் அன்னூர் பங்கு கொண்டனர். தமது வழக்குகளில் மன்னரது நீதிமன்றத்துக்கு முறையீடு செய்து கொள்ளும் உரிமையையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

வில்லன்கள் (Villeins) அல்லது செர்ஃபுகளே (Serfs) பண்ணையின் பெரும்பான்மைக் குடிகளாவர். அவர்கள் சுயேச்சைக் குடியானவர்களல்லர். அதே சமயத்தில் அவர்களை அடிமைகள் என்றும் கூறமுடியாது. பிற்காலத்தே இவ்விரு வகுப் பாரிடையே இருந்த வேறுபாடுகள் மறைந்தன என்ருலும் ஆரம் பத்தில் அவர்களிடையே பல வேறுபாடுகள் இருந்தன. வில்லன்கள் என்போர் ஆதியில் சிறு குடியானவர்களாயிருந்து, ஏதோ

இக்கட்டுகள் காரணமாகத் தங்களது நிலத்தைப் பிரபுவிடம் ஒப்படைத்து விட்டு வெறும் ஊழியர்களாக மாறியவர்கள். செர்ஃபுகள் என்போர் கிராமங் கிராமமாக ஒரு பிரபுவால் அடிமைப் படுத்தப்பட்ட குடியானவர்களின் வழித் தோன்றல் களாவர். வில்லன்கள் பிரபுக்களின் நிலத்தில் வேலை செய்யும் நிரந்தரக் குடியானவர்கள். ஆனால் நிலத்தோடு சேர்ந்தவர் களல்லர். அவர்களைப் பிரபுக்கள் விற்க முடியாது. செர்ஃபுகள் நிலங்களோடு பிண்ணிப் பிணைந்து கிடந்தவர்கள். நிலம் விற்கப் பட்டபோது அதோடு அவர்களும் சேர்ந்து விற்கப்பட்டார்கள். வில்லன்களின் கடமைகள் என்ன என்பது ஓர் ஒப்பந்தத்தால் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் செர்ஃபுகளிடம் எத்தகைய ஊழியத்தை வேண்டுமானாலும் பிரபுக்கள் பிரியம் போல் வற்புறுத்திப் பெற்றுக் கொள்ளலாம். வழி வழி வரும் மரபுகளுக் கேற்பவே வில்லன்கள் மீது ஒரு பிரபு வரி போட முடியும். ஆனால் செர்ஃபுகளிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் வரி வசூலிக்கப் பிரபுக்களுக்கு உரிமை உண்டு. 13-ஆம் நூற்றாண்டளவில் வில்லன்கள், செர்ஃபுகள் ஆகிய இரு சாராரின் நிலைகளும் ஒன்றாகிப் போய் விட்டன.

வில்லன்கள் தாம் அனுபவித்த நிலங்களுக்காகப் பணத் தாலும், தானியங்களாலும், உழைப்பாலும் பிரபுவுக்கு வரி செலுத்தினர். ஒரு சில கட்டணங்கள் பணமாகச் செலுத்தப் பட்டன. சாகுபடியில் ஒரு பகுதியையும் ஒரு சில கோழிகள், முட்டைகள், தேன் முதலியவற்றையும் அவர்கள் பிரபுவுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். கிராமத்திய மாவரைப்பு இயந்திரம், மது இறக்குப் பொறி, அடுப்பு கிணறு இவற்றைப் பயன் படுத்தவும் ஒரு கட்டணத்தை அவர்கள் பிரபுவுக்குச் செலுத்தினர். பிரபு பயணத்தில் ஈடுபட்ட போது அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் உபசரிக்கும் கடமையும் அவர்களைச் சார்ந்ததேயாம். உடல் உழைப்பாலேயே அவர்கள் தங்களது கடமையைப் பெரிதும் செய்தனர். ஓர் ஆண்டில் பாதி நாட் களுக்கு அவர்கள் பிரபுவின் நிலங்களில் கூலியின்றி உழைக்க வேண்டும். வாரத்துக்கு மூன்று அல்லது நான்கு நாட்கள், வரை ஓர் ஆளை அவர்கள் அனுப்பிப் பிரபுவின் நிலத்தில் வேலை செய்யச் சொல்ல வேண்டும். அதோடு அறுவடை, பயிர் நடல் போன்ற சமயங்களில் அவர்கள் தேவையான நாட்களுக்கு உபரியாக ஊழியம் புரிய வேண்டும்; சரக்குகளை வண்டியேற்றி வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லல், ஏர் முனைகளைப் பழுது பார்த்தல், ஆட்டு ரோமங்களைக் கத்தரித்தல், வேலி

யடைத்தல் அணை பாலம், பாதை இவற்றைச் செப்பனிடல் போன்ற பல்வேறு சிறு பணிகளையும் அவர்கள் புரிதல் வேண்டும்.

வில்லன்கள் நிலையினும் கேடான நிலையில் ஒரு சிலர் இருந்தனர். குரோஃடர்கள் (Crofters) என்றும், காட்டர்கள் (Cottars) என்றும் அவர்கள் அழைக்கப்பட்டனர். அன்னார்க்குத் தமக்கென்று துளி அளவு நிலம் கூடக் கிடையாது. வில்லன்களுக்கும் பிரபுக்களுக்கும் கூலி வேலை செய்தே அவர்கள் பிழைத்தனர். நிலமானிய முறையில் அடிமைகள் என்ற வர்க்கம் இல்லை. ஆனால் கனவான்களின் வீடுகளில் ஊழியம் புரிந்து வந்த அடிமைகள் (Slaves) ஒரு சிலர் ஆங்காங்கே காணப்பட்டனர். அவர்களுக்கும் பண்ணைகளுக்கும் சம்மந்தமில்லை; கி. பி. 1000 ஆண்டளவில் அடிமைகள் என்ற வகுப்பு ஐரோப்பிய சமுதாயத்தினின்றும் அகன்றது.

### பண்ணை மக்களின் வாழ்க்கை நிலை

பண்ணைப் பிரபுக்கள் ஓரளவு நல்ல வாழ்க்கை நடத்தினர்; அதிகாலையில் எழுந்து அவர்கள் தம் மாளிகையின் கோபுரத்தில் ஏறி யாராவது அதைத் தாக்க வந்து கொண்டிருக்கிறார்களா என்று பார்ப்பார். அதன் பின் காலையுணவு உண்டு, பல்வேறு ஊழியர்க்கும் என்னென்ன பணி புரிய வேண்டுமென ஆணையிடுவார். தானும் சில பண்ணைப் பணிகளில் கலந்து கொள்வார். அடிக்கடி அவர் பண்ணையாட்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளிப்பார். எனவே அவரது மனைவிக்கு ஓயாத வேலை இருக்கும்.

கிராமப் பொருளாதாரப் பளுவனைத்தையும் தாங்கியவர்கள் வில்லன்கள் எனும் குடியானவர்களே யாவர். காலையிலிருந்து மாலை வரை உழைத்து உழைத்து அவர்கள் ஓடாய்ப் போயினர். மண்ணாலும் கல்லாலும் கட்டப்பட்ட சிறு குடிசைகளிலேயே அவர்கள் வாழ்ந்தனர். அக் குடிசைகள் நாணற் புற்களால் வேயப்பட்ட கூரையையும், குப்பையும் கூளமும் நிறைந்த சாதாரண தரையினையும் கொண்டிருந்தன. குடிசைக்குள் மனிதர்களோடு பழக்கப்பட்ட வீட்டுப் பிராணிகளும் சேர்ந்து வாழ்ந்தன. காற்றோட்டமோ, வெளிச்சமோ அக்குடிசைகளுள் மருந்துக்குமில்லை. புகையை வெளியேற்ற கூரையில் ஒரு சிறு துவாரம் விடப்பட்டிருந்தது. அதைத் தவிர சூரிய வெளிச்சத்தை உள்ளே விடத் தக்க வேறு ஜன்னல்களில்லை. தரை சாதாரண களி மண்ணாலேயே பாவப்பட்டிருந்தது. கூரையினின்றும் கசிந்த மழைத் துளிகளாலும், பனித் துளிகளாலும் நனைந்து தரை சதா ஈரமாகவே இருக்கும். குடியானவனும்

அவனது குடும்பத்தினரும் இரவில் நாணற் புற்கள் பரப்பப் பெற்ற தரையிலேயே படுத்து உறங்கினர். சூரியன் உதிக்கும் போது எழுந்து அது மறையும் போது அவர்கள் உறங்கச் சென்றனர். குடிசையில் நெருப்பு பிடித்து விடும் என்ற பயத்தால், அடுப்பு மூட்டி சமையல் செய்வதையே அவர்கள் கை விட்டனர். கிராமத்துக்கு வெளியேயிருந்த பொது அடுப்பு களிலேயே அவர்கள் ரொட்டிகளை சுட்டுக் கொண்டனர். இரவில் அவர்கள் ஏதோ சில சமயங்களில் தான் மெழுகு வத்திகளை ஏற்றினர். மாரிக் காலத்தில் குளிர்காய்வதற்குக் கூட குடிசை களில் வசதி இல்லை. பொது குளிர்காயுமிடங்களுக்குச் சென்றே அவர்கள் உடம்பில் வெப்பம் பிடித்துக் கொண்டனர். குடி தண்ணீர் வசதிகளும், சாக்கடை வசதிகளும் கிராமங்களில் இல்லை. அருகிலுள்ள ஆறு அல்லது நீரூற்றிலிருந்தே மக்கள் நீரை மொண்டு பருகினர். துணிகளையும் அவர்கள் ஆறுகளிலும் குளங்களிலுமே துவைத்துக் கொண்டனர். அவர்களது உணவோ மிக எளிமையானது. வீட்டில் செய்யப்பட்ட கடினமான பழுப்பு ரொட்டிகளும், வீட்டுத் தோட்டத்தில் விளைந்த ஒரு சில காய்கறி களும், பாலாடைக் கட்டிகளும், மீன்களும் உப்புக் கண்டமும் மட்டமான மது வகைகளுமே அவர்களது முக்கிய உணவுப் பொருள்களாகும். மழை பொய்ப்பதால் பஞ்சம் ஏற்படும் போது பல குடியானவர்கள் குடும்பத்தோடு செத்து மடிந்தனர். சுகாதார அறிவு சிறிதுமில்லாததாலும், தூய்மையற்ற வாழ்க்கை யினாலும், பலர் பிளேக், அம்மை, காலரா, விஷஜுரம் போன்ற கொடிய தொத்து நோய்களுக்காளாகி இறந்து பட்டனர். பெரும்பான்மையான மக்களுக்கும் ஏன் பிரபுக்களுக்கும் கூட கல்வி அறிவு சிறிதும் இல்லாமலிருந்தது. எனவே மூட நம்பிக் கைகள் பல அவர்களிடம் மண்டிக் கிடந்தன. மந்திரவாதிகள் பலர் நல்ல செல்வாக்குடன் விளங்கினர். அவர்களது தாயத்து களை வாங்கி பலர் நோயைக் குணப்படுத்தவும், தொழிலில் வெற்றி பெறவும், எதிரிகளை வெல்லவும் எத்தனித்தனர். மொத்தத்தில் கிராமவாசிகளின் வாழ்க்கை நிலையானது. பெரிதும் பரிதாபத்துக்குரியதாயிருந்தது. உழைத்து உழைத்து விளைச்சலைப் பெருக்கிய குடியானவர்களை உயர்குடி மக்கள் மிகவும் இழிவாக நடத்தினர். அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது புல்லர்கள், மடையர்கள், குரூபிகள், ஒற்றைக் கண்ணர்கள், பொய்யர்கள் என்றே பலரும் பேசினர். 'கழுதையின் சாணத்தில் பிறந்த வர்கள்' என்றும் 'அவர்களது உடலில் வீசும் நாற்றம் காரண மாக நரகத்திலுள்ள பிசாசுகள் கூட அவர்களை விரும்புவதில்லை' என்றும் சிலர் கூறினர். நம் நாட்டில் தீண்டாமை ஒழிக்கப்

படுமுன், கிராமத்து நிலக் கிழார்கள் தங்களது நிலங்களில் வேலை செய்த பறையர், பள்ளர், சக்கிலியர் ஆகியோரை நடத்திய கேவலமான முறைகளையே ஐரோப்பிய இடைக்கால நிகழ்ச்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. 'பறை வேலை அரை வேலை' 'பட்டால் தான் தெரியும் பறையனுக்கு' என்று கிராம வாசிகள் பேசிக் கொள்வது போன்றே இடைக்கால ஐரோப்பிய நிலக் கிழார்கள் தமது பண்ணையாட்களைப் பற்றிக் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

இக்காலத்தோடு ஒப்பிடப்படும்போது இடைக்காலத்துக் குடியானவர்களின் நிலை சற்றே கேவலமாகத் தோன்றினும், உண்மையில் அவர்கள் நிலை இக்காலக் குடியானவர்களின் நிலைமையைக் காட்டிலும் ஒரு சில அம்சங்களில் உயர்ந்ததாகவே இருந்தது. எவ்வளவுதான் பற்றுக்குறையும் பஞ்சமும் நாட்டில் ஏற்பட்ட போதிலும் பிரபுக்கள் அவர்களுக்கு எப்படியாவது உணவளித்தனர். பிணி வாய்ப்பட்ட போது மருத்துவ வசதிகளை வழங்கினர். கிழவயதெய்திய ஊழியர்களுக்கு எல்லா வசதிகளும் வழங்கப்பட்டன. வாழ்க்கையில் ஒரு நிம்மதியோடு குடியானவர்கள் காலந் தள்ளினர். அவர்களில் அடிமைகள் எவருமில்லை. எல்லாக் குடியானவர்களுக்கும் ஒரு சில உரிமைகள் தரப்பட்டிருந்தன. எந்த குடியானவனையும் எவரும் நிலத்தை விட்டு அப்புறப்படுத்த இயலாது. நிலம் விற்கப் பட்டபோது செர்ஃபுகள் கூடவே விற்கப் பட்டனர். இராணுவ சேவை செய்ய வேண்டுமென்ற கட்டாயமும் செர்ஃபுகளுக்கில்லை. ஆண்டுக்கு ஏறத்தாழ 60 நாட்கள் விடுமுறையாக வழங்கப் பட்டன. இக்காலத் தொழிலாளர்களுக்குக்கூட இத்தனை ஓய்வு நேரங்கள் இல்லை. பிரபுக்களும், பண்ணைக் குடிகளும் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களெனினும், கிறிஸ்தவ மதம் அவர்களைப் பிணைக்கும் சங்கிலியாய் விளங்கியது. கிராம அரசியலிலும், பொருளாதாரத்திலும் தனக்கும் ஒரு பங்கு உண்டு என ஒவ்வொரு குடியானவனும் நினைத்தான். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கடமைப் பட்டவர்களாகவே எல்லா வகுப்பினரும் எண்ணினர். ஒரு வகையான விவசாய ஜனநாயகம் பண்ணை மக்களது வாழ்க்கையில் காணப்பட்டது.

அறுவடை போன்ற மகிழ்ச்சிக்குரிய காலங்களிலும், ஈஸ்டர், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை காலங்களிலும் பண்ணைப் பிரபுக்கள் தமது ஆட்கள் அனைவருக்கும் பெரிய விருந்துகளை அளித்தனர். இசை வல்லுநர்களும், நகைச்சுவை

விற்பன்னர்களும் அச்சமயங்களில் தோன்றி மக்களைக் களிப்பித்தனர்.

மற்றும் திருச்சபையின் நடவடிக்கைகள் மக்களிடம் ஒரு குதூகலத்தை உண்டாக்கின. ஞானஸ்நானம் அளித்தல், திருமணம் சாவு போன்ற நிகழ்ச்சிகளில் சடங்குகளைச் செய்தல், திருவிழாக்களை நடத்துதல் போன்ற செயல்களால் அவர்கள் பொதுமக்களின் வாழ்விற்கு ஓரளவு தெம்பையும் உற்சாகத்தையும் நல்கினர். திருச்சபைக்கு முன்பிருந்த பச்சைப் புல் வெளியில் அவர்கள் அடிக்கடி கூடி ஆடிப்பாடி அகமகிழ்ந்தனர்.

## நிலமானிய முறையின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

கி பி. 12-ஆம் நூற்றுண்டுக்குப் பின்னர் நிலமானியமுறை ஐரோப்பாவில் நசிக்க ஆரம்பித்தது. அதற்குக் காரணம் இதில் காணப்பட்ட ஒரு சில குறைபாடுகளேயாகும். பலரை வாட்டி வதைத்து ஒரு சிலரை மட்டும் பெருமைப்படுத்தும் முறை எதுவேயாயினும் அது நாளடைவில் நசித்து விடுமென்பது வரலாறு கண்ட உண்மையாகும். மற்றும் காலத்துக் கேற்றபடி இம்முறை வளைந்து கொடுக்க மறுத்தது. எனவே இதற்கு மக்களிடையே பல்வேறு எதிரிகள் தோன்றினர். வணிகர்கள், அரசர்கள், மத குருமார்கள், செர்ஃபுகள் ஆகிய அனைவரும் நாளடைவில் இதன் விரோதிகளாக மாறினர்.

நகரங்களின் வளர்ச்சி நிலமானிய முறைக்கு ஒரு சத்துருவாய் விளங்கியது. நகரில் வாழ்ந்த பல நிலப் பிரபுக்களின் ஓயாத சண்டைகள் காரணமாக வாணிபம் குன்றியது. வணிகர்கள் அதனல் பெரும் நஷ்டத்தை அடைந்தனர். எனவே நாட்டில் அமைதியை நிலை நாட்டக் கூடிய வல்லரசர்களுக்கு அவர்கள் பண உதவி செய்தனர். அப் பணத்தைக் கொண்டு பல மன்னர்கள் தமக்கென ஒரு படையை ஏற்படுத்திக் கொண்டு அதன் உதவியால் பிரபுக்களை அடக்கி ஒடுக்கினர். பிரபுக்களை அடக்குவதற்கென்றே பல வணிகர்கள் மன்னர்களுக்கு நன் கொடை வழங்கினர்.

நகரங்களில் ஏற்பட்ட தொழில்களில் வேலை செய்தோருக்கு நல்ல ஊதியம் வழங்கப்பட்டது. தொழிலதிபர்கள், பண்ணைகளிலிருந்து ஆட்களை ஈர்க்க வேண்டுமென்று கூலிகளை உயர்த்தினர். இதனல் பல செர்ஃபுகள் நகரங்களுக்கு ஓடி விட்டனர். ஓராண்டு காலம் வரை தலைமறைவாக இருக்கக் கூடுமானல் செர்ஃபு ஒருவன் சுயேச்சை பெற்றவனுகக் கருதப் பட்டான்.

இடைக் காலத்தின் பிற்பகுதியில் தோன்றிய பிளேக் போன்ற நோய்களால் ஏராளமான மக்கள் மாண்டு போயினர். விவசாயப் பண்ணையாட்களின் தொகை குறைந்தது. எனவே உயிரோடிருக்கும் செர்ஃபுகளின் கூலி தானாகவே உயர்ந்தது. அதிக ஊதியம் பெற்ற செர்ஃபுகள், சிலர் அதில் மிச்சம் செய்து பணம் சேர்த்து அதைக் கொண்டு சுயேச்சையை விலைகொடுத்து வாங்கிக் கொண்டனர்.

நாளுக்கு நாள் அதிகரித்து வந்த தேவைகளை ஈடுசெய்ய ஏராளமான புதிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்டன. காடுகளை அழித்தும், சதுப்பு நிலங்களை வற்ற வைத்தும் புதிய நிலங்கள் ஏற்படுத்தப்பட்டன. அத்தகைய பணிகளில் ஈடுபடவேண்டி, செர்ஃபுகளுக்குப் பிரபுக்கள் அதிககூலி கொடுத்தனர். சுயேச்சை வழங்குவதாயும் வாக் களித்தனர். வேலை வெற்றிகரமாக முடிந்தபின் பல செர்ஃபுகள் சுதந்திரக் குடியானவர்களாக மாறினர். சுதந்திரக் குடியான வர்களின் தொகை பெருகப் பெருக பண்ணை முறை வேளாண்மை யானது முடியாத காரியமாய்ப் போய்விட்டது.

மன்னர்கள் பலர் நிலமானியப் படைகளை நம்பாமல் தாமே நிலைப்படைகளைத் திரட்டிக் கொண்டனர். நிலமானியப் பிரபுக்களின் படைகள் சீந்துவாரற்றுப் போயின. மற்றும் பீரங்கிப் படை போன்ற புதிய போர்க்கருவிகளுக்கு முன் பிரபுக் களின் கோட்டைகளும், வில்லும் வாளும், கதிரவன் முன் மின் மினி போல் பயனற்றுப் போயின. நிலப் பிரபுக்களின் செல் வாக்கு குறைந்தது. தேசீய வல்லரசர்கள் பல நாடுகளில் தோன்றி நிலமானியப் பிரபுக்களைச் சட்டங்களாலும் வேறு பல வகைகளாலும் ஒழித்து விட்டனர். நூற்றாண்டுப் போரிலும் (Hundred years war) குடியானவர்களது கலகங்களிலும் பல நிலமானியப் பிரபுக்கள் மாண்டனர். ரோஜாப்பூ அடையாளப் போர்கள் (Wars of Roses) போன்ற உள்நாட்டுப் போர்களில் ஏராளமான பிரபுக்கள் மாண்டனர். எஞ்சியிருந்த பிரபுக்களை நவீன கால வல்லரசர்கள் பல்லாற்றானும் ஒறுத்து அடக்கி விட்டனர். நிலமானிய முறை செல்வாக்கை இழந்தது.

சிலுவைப் போர்கள் (Crusades) எனும் சமயப் போர்களில் பல சக்தி வாய்ந்த நிலப் பிரபுக்கள் கலந்து கொண்டு உயிரை விட்டனர். அதில் படை வீரர்களாகக் கலந்து கொள்ள பல செர்ஃபுகளுக்கு விடுதலை வழங்கப்பட்டது. இதனால் பல பண்ணை களில், பண்ணையாரும், குடியானவரும் இருவருமே இல்லாத நிலை

ஏற்பட்டது. சிலுவைப் போர்களுக்கான நிதியினைத் திரட்ட செர்ஃபுகள் பலருக்கு உரிமைகள் விற்கப்பட்டன. நேர்முக வரிகள் பல மக்கள் மீது போடப்பட்டன. இதனுலெல்லாம் மன்னர்களின் கை வலுக்கப் பிரபுக்களின் கைகள் தேய்ந்தன.

நாளடைவில் வேலியே பயிரை மேய்வது போல் நிலமானியப் பிரபுக்களே நிலமானிய முறைக்கு எதிரிகளாக மாறினர். பணத்தின் மேல் மோஹங் கொண்ட பிரபுக்கள் பலர், ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைப் பெற்றுக் கொண்டு செர்ஃபு களுக்கு விடுதலை அளிக்க முன் வந்தனர். மற்றும் சிலர் நகர வாழ்வில் திளைக்கவும், மன்னரது அரண்மனையில் காலங் கழிக்கவும் விரும்பிப் பண்ணைகளைப் புறக்கணித்தனர். அல்லது விற்று விற்றனர். இங்ஙனம் சூழ்நிலைகளின் மாறுபாட்டால், நிலமானிய முறை பதினைந்தாம் நூற்றுண்டளவில் நசிக்க ஆரம்பித்தது. ஒரு சில இடங்களில் அது இருக்குமிடந்தெரியாமல் மறைந்தது.

## நிலமானிய முறையின் நன்மை தீமைகள்

### நன்மைகள்

முரட்டு வகுப்பினரின் படையெடுப்பால் நாட்டில் எங்கும் ஒழுங்கின்மையும், அமைதியின்மையும் தாண்டவமாடிய ஒரு காலத்தில், அரசியல் பொருளாதாரத் துறைகளில் ஓரளவு அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்திய பெருமை நிலமானிய முறைக்கே உரித்தாகும். மக்களது உயிர், உடைமை, உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதில் இம்முறை பெரிதும் வெற்றி கண்டது.

நிலமானிய முறையால் பிரபுக்கள் பலர் பரஸ்பரப் பாது காப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பிற நாட்டார் படையெடுப்பினின்றும் காத்துக்கொண் டார்கள்.

அரசாங்க் ஒப்பந்தக் கொள்கை (Governmental Contract) சட்டங்களின் இறைமை (Sovereignty of law) வரையறைக்குட் பட்ட முடியரசு (limited monarchy) பிரதிநிதித்துவ அரசாங்கம் (Representative Government) போன்ற பல நல்ல அரசியல் கருத்துக்களை இம்முறை உலகுக்கு வழங்கியது.

வீரப் பெருந்தகைமை (Chivalry) என்ற கண்ணியமிக்க ஒரு வீர மரபை இம்முறை வளர்த்தது. அதனுல் நாட்டில் வீரம்

வளர்ந்ததோடு, மகளிரின் பெருமையும் உயர்ந்தது. ஐரோப்பிய நாகரிகத்தில் அதாவது ஐரோப்பிய சமுதாயம், கல்வி முறை, பழக்க வழக்கங்கள், இலக்கியம், கலை ஆகிய பல்வேறு துறைகளில் அழியாத அடிச்சுவடுகளை இம்முறை விட்டுச் சென்றது. தி நைட்ஸ் ஆஃப் பாத் (The Kinghts of Bath) தி நைட்ஸ் ஆஃப் கார்டர் (The knights of Garter) கோல்டன் ஃபிலீஸ் (Golden Fleece) போன்ற சுயநலமற்ற வீரர் கூட்டங்கள் பிற்காலத்தே ஏற்பட இம்முறை வழி செய்தது; ஈடன் (Eton) ஹேரோ (Harrow) வின்செஸ்டர் (Winchestor) போன்ற இடங்களில் உள்ள கல்வி நிலையங்கள் இவ்வீர மரபைத் தமது பாடத் திட்டங்களிலும் ஒழுக்க விதிகளிலும் புகுத்தினர். பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் ஐரோப்பாவில் மலர்ந்த புத்துணர்ச்சி இயக்கத்தில் (Romantic movement) இம்மரபின் செல்வாக்கு பெரிதும் காணப்பட்டது.

சுத்த வீரர்களான நைட்டுகளைப் புகழ்ந்து பல புலவர்கள் வீர காவியங்களை இயற்றினர். அதனுல் ஐரோப்பிய இலக்கியம் நன்கு வளர்ச்சியுற்றது.

மனிதனை மனிதன் உடைமையாக்கிக் கொள்ளும் அடிமை முறை (Slavery) நாளடைவில் மாய்ந்தது. தனிமனிதனது மதிப்பும் கௌரவமும் இம்முறையில் வளர்ந்தன.

நிலமானிய ஏற்பாட்டில் திருச்சபை (Church) முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. தன்பால் சரணடைந்த சிறு நிலக் கிழார்களின் உடைமையையும், உயிரையும், உரிமைகளையும் அது பாதுகாத்தது. நிலதானம் செய்த பக்தர்களுக்காகப் பிரார்த்தனைகளை அது ஏற்பாடு செய்தது. மக்களின் வாழ்க்கையில் ஒரு வகையான ஒழுங்கையும் நன்னடத்தையையும் அது வளர்த்தது. சட்டத்தின் வலிமை குன்றியிருந்த ஒரு காலத்தில் திருச்சபையின் ஒழுக்க விதிகள் (moral laws) சமுதாயத்தில் கட்டுப்பாட்டையும் அமைதியையும் ஏற்படுத்தின. ஐரோப்பாவைப் படையெடுத்த நாகரீகம் அற்ற முரட்டு வகுப்பினர் பலரிடையே நயத்தக்க நாகரீகத்தை வளர்த்த பெருமை கிறிஸ்தவ திருச்சபைக்கே உரித்தாகுமென்க.

### தீமைகள்

நாட்டைப் பல்வேறு பிரபுக்களிடையே பகிர்ந்து கொடுத்ததால், மத்திய அரசாங்கம் வலிமை இழந்தது. சக்திவாய்ந்த பிரபுக்கள் தமது கையாட்களைக் கொண்டு அரசரையே எதிர்க்க ஆரம்பித்தனர்.

இம்முறையால் மக்கள் மனத்தில் உள்ளூரைப் பற்றிய பக்தி ஏற்பட்டதே ஒழிய, தேசிய உணர்வு குறைந்து விட்டது. ஒவ்வொருவனும் அவனுக்கு நேர் மேலே உள்ள பிரபுக்களுக்குக் கீழ்ப்படிந்தானே ஒழிய மத்திய அரசனை எவனும் மதிக்கவில்லை.

செல்வாக்கு மிக்க உயர்குடி வகுப்பினரின் கை ஓங்கியது; அரசர்களின் கொடுங்கோன்மை அதனால் பெரிதும் தணிந்தது. ஆனால் நாளாவட்டத்தில் அதனால் ஜனநாயகமே தேய ஆரம்பித்து விட்டது.

இதனால் திருச்சபையின் கௌரவம் பெரிதும் குலைந்தது. பல பிஷப்புகளும் குருமார்களும் செல்வத்தில் திளைத்தனர். சுக போகங்களில் ஆழ்ந்தனர். அவர்களது மதிப்பும் மரியாதையும் நாளாவட்டத்தில் குறைந்தது. மன்னர்கள் மதகுருவை அலட்சியம் செய்தனர்; மன்னர்களுக்கும், திருச்சபைக்கும் போராட்டம் விளைந்தது. அதனால் இரு சாராரின் மதிப்பும் குறைந்தது.

இம்முறையினால் ஏற்பட்ட தலையாய தீமையாவது நில மானியப் பிரபுக்களிடையே ஏற்பட்ட ஓயாத போராட்டமே யாகும். எதற்கெடுத்தாலும் போர் செய்வது என்ற கெட்ட பழக்கம் பல பிரபுக்களிடையே ஏற்பட்டது. அவர்களது கொட்டத்தை அடக்க வலிமை வாய்ந்த அரசர்கள் மத்திய அரசிலில்லாததால், நாட்டில் குழப்பம் மேலிட்டது. விவசாயமும் வாணிபமும் பெரிதும் தடைபட்டன. ஸ்டீபன் (Stephen) என்ற மன்னரின் காலத்தில் (1134—54) இங்கிலாந்தில் நிலவிய குழப்ப நிலை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நிலமானிய ஏற்பாட்டில் நீதி நன்கு வழங்கப்படவில்லை. பெரும் பிரபுக்கள் செய்த பெருங்குற்றங்கள் மன்னிக்கப்படுவதும், சிறு பண்ணையாட்கள் செய்த சிறு குற்றங்களுக்குக்கூடக் கடுந் தண்டனை விதிக்கப்படுவதும் பரோணிய நீதிமன்றங்களில் சாதாரணமாக நடைபெற்றது. மற்றும் பரஸ்பரம் போரிட்டுக் கொள்வதன் மூலம் பல வழக்குகள் தீர்க்கப்பட்டன. இதனால் பலவானே நியாயவான் என்ற கொள்கையே வென்றது. குற்றங்களை மெய்ப்பிக்கக் கடைப்பிடிக்கப்பட்ட கடுஞ்சோதனை முறைகளில் (Ordeal) நியாயம் ஏற்பட வழியில்லாமலிருந்தது. நீரிலும், நெருப்பிலும் தள்ளப்பட்ட பலர் அப்படியே மாண்டு போனார்கள். அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய நுண்ணிய

விதிகளில் சிறிது பிசகினாலும் ஒருவர் குற்றவாளியாகக் கருதப் பட்டார்.

நிலமானிய முறை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், தொழில்வளம் பெருகவில்லை. வாணிபமும் நன்கு வளரவில்லை. கலைகளும், இலக்கியமும் ஓரளவுதான் வளர்ந்தன. படைவீரனுக்கிருந்த மதிப்பு ஒரு புலவனுக்கு இல்லை. எனவே இடைக்கால ஐரோப்பியரின் அறிவியல் வாழ்வில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. தனிமனிதர்களின் ஆற்றல்கள் குழுக்களால் (Groups) நசுக்கப்பட்டு முழுவளர்ச்சி பெற இயலாமல் தவித்தன.

## பிந்திய இடைக்கால நாகரீகம் (Later middle ages)

| | ஐரோப்பா முழுதும் | தெற்கு ஐரோப்பா | வடக்கு ஐரோப்பா |
|---|---|---|---|
| 800— | நிலமானிய முறை வளர்ச்சி கி. பி. 800-1300 | | சாக்ஸனிய மன்னர்களின் கீழ் இங்கிலாந்து ஒன்றுபடுதல் 802 |
| | வெர்டுன் உடன்படிக்கை கி. பி. 843 | | பிரான்ஸில் தேசிய அளவு ஏற்படல் 957 |
| | போப்பாண்டவர் ஆட்சி (850-1000) | | |
| | சமய தருக்கக் கலை வளர்ச்சி (Scholasticism) 850-1300 | | நார்மானியர்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றல் 1066 |
| | குளுனிய இயக்கம் 950-1150 கி. பி. | | வீரப் பெருந்தகைமை வளர்ச்சி (Chivalring) (1100-1300 கி.பி.) |
| | ரோமன்ஸ்க் கட்டிடக்கலை 1000-1150 கி. பி. | | |
| | கீழை நாடுகளோடு வியாபாரம் 1050-1150 | | |

## பிந்திய இடைக்கால நாகரீகம் (Later middle ages) தொடர்ச்சி

| | ஐரோப்பா முழுதும் | தெற்கு ஐரோப்பா | வடக்கு ஐரோப்பா |
|---|---|---|---|
| | திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே போராட்டம் 1050-1350 கி. பி. | | |
| | கிழை மேலை திருச்சபைகள் தனித் தனியே பிரிதல் 1054 கி. பி. | | |
| | கார்டினல்களின் குழு அமைதல் 1059 | | |
| | சிலுவைப் போர்கள் 1096-1204 | | |
| | கில்டு முறை தோற்றம் 1100-1300 | | |
| | நகரங்களின் வளர்ச்சி 1100-1300 | | |
| | திருச்சபையில் புனிதச் சடங்குகள் பெருகுதல் 1100-1300 | | |

## பிந்திய இடைக்கால நாகரீகம் (Later middle ages) தொடர்ச்சி

| | ஐரோப்பா முழுதும் | தெற்கு ஐரோப்பா | வடக்கு ஐரோப்பா |
|---|---|---|---|
| 1200 கி.பி. | பல்கலைக் கழகங்கள் தோன்றல் 1150<br>காதிக் கட்டிட முறை 1150-1300<br>கருத்துறவிகள் கூட்டம் 1200<br>நான்காவது திருச்சபை மன்றம் 1215<br>நிலமானிய முறை வீழ்ச்சி 1300-1500<br>முதலாளித்துவ முறை ஏற்படல் நாணயப் புழக்கம், வங்கி முறை (1300-1600 கி.பி.)<br>கருங் கொள்ளை நோயால் மக்கள் மடிதல் 1347-1349 கி. பி. | அஸிசி நகரைச் சேர்ந்த அர்ச் பிரான்ஸிஸ் 1182-1226<br>தாந்தே 1265-1321<br>பக்காஸியோ 1313-1375<br>வெனரோலா 1452-1498<br>சலியனர்டோ டாவின்ஸி 1452-1519<br>மாக்கியவல்லி 1479-1527<br>மைக்கேல் ஏஞ்சலோ 1457-1564<br>ஸ்பெயின் ஒன்றுபடுதல் 1492 | தூய ரோமப் பேரரசு 1152-1254<br>ரோஜர் பேக்கன் 1214-1294<br>பேருரிமைப் பட்டயம் (Magna carta) 1215<br>அர்ச். தாமஸ் அக்வினஸ் 1225-1274<br>இங்கிலாந்தில் பாராளு மன்றம் தோன்றுதல் 1265-1295<br>ஹென்சியாடிக் வணிக கூட்டுறவு 800-1500 கி.பி.<br>பிரஞ்சு பாராளுமன்றமான எஸ்டேட்ஸ் ஜெனரல் ஏற்படல் 1302<br>நூற்றாண்டுப் போர் 1337-1453<br>எராஸ்மஸ் 1460-1546 கி.பி.<br>கோபர் நிகஸ் 1483-1543<br>இங்கிலாந்தில் டியூடர்களின் ஆட்சி 1485-1603 கி. பி. |

# 6. இடைக்கால ஐரோப்பிய நகரங்களின் வளர்ச்சி

இடைக் கால ஐரோப்பிய மக்களது வாழ்க்கையை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நாட்டுப்புற வாழ்க்கை, மற்றொன்று நகர வாழ்க்கை. நாட்டுப் புற வாழ்க்கையை நிலப் பிரபுக்களின் வீரமும், காதலும், உழவர்களின் உழைப்பும் தியாகமும், கோட்டைகளும் கொத்தளங்களும், உயர்குடி மக்களின் மச்சு வீடுகளும் அவைகளுக்கருகே குடியானவர்களின் குச்சு வீடுகளும், நைட் வீரர்களின் வீர சாகசங்களும், கோமாளி களின் கூத்தும் பாட்டும் நமக்கு நன்கு படம் பிடித்துக் காட்டு கின்றன. பெரும்பான்மையான மக்கள் அத்தகைய பண்ணை வாழ்க்கையில் கட்டுண்டு கிடந்தது உண்மை எனினும் ஏறக் குறைய கி. பி. பதினோராம் நூற்றாண்டிலிருந்து நகர மக்களின் வாழ்க்கையும் செயல்களும் இடைக்கால நாகரிகத்தில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன.

மேனர் பண்ணை வாழ்க்கைக்கும், நகர வாழ்க்கைக்கும் மடுவுக்கும், மலைக்குமுள்ள வேறுபாடு காணப்பட்டது. பண்ணை களில் சுதந்திரம் ஏதுமின்றி, வறுமையில் வாடிக் கொண்டிருந்த செர்ஃபுகளுக்கு நகரங்கள் பூலோக சுவர்க்கமாய்க் காட்சி யளித்தன. அந்நியப் படையெடுப்புகளினின்றும் மக்களைக் காக்கத் தக்க திண்ணிய மதிற் சுவர்களும், ஆழமான அகழிகளும் கம்பீரமான கோட்டை வாயில்களும் அவர்களை வா வா என்று வரவேற்பது போல் தோன்றின. தொங்கு பாலத்தின் மூலம் கோட்டைக்குள் அடியெடுத்து வைத்த நில ஊழியர்கள் 'நகரத்தின் காற்று, சுதந்திரக் காற்று' (The City air is free air) என்று கூச்சலிடலாயினர். வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பெரும் மாதாக் கோயில்கள், பரந்த மண்டபங்களைக் கொண்ட நகராட்சிக் கட்டடங்கள், பல்வேறு நாடுகளிலிருந்து வந்த தேவைப் பொருள்களும் சுக போகப் பொருள்களும் நிறைந்த நகரச் சந்தைகள் பல வண்ண ஆடைகளணிந்த மாணவர்கள் நிறைந்த பல்கலைக் கழகங்கள் மது வகைகள்

நிறைந்த உல்லாச மாளிகைகள் இவற்றைக் கண்ட நாட்டுப்புற மக்கள் மூக்கின் மேல் விரலை வைத்து வியந்து போனார்கள். ஒரே மாதிரியான விவசாய வேலையைச் செய்து வந்த அவர்களுக்கு வகை வகையான தொழில்கள் நகரங்களில் காத்திருந்தன. ஏதாவது ஒரு தொழிலிலோ, வாணிபத்திலோ ஈடுபட்டு விரைவில் முன்னுக்கு வரக் கூடிய வாய்ப்புகள் பல அங்கே காணப்பட்டன. பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கவும், மாதா கோயிலில் சென்று வழி படவும் அவர்கள் விரும்பினர். நகரத்தின் செல்வாக்கு மிக்க குடி மக்களில் ஒருவராக மாறவும் அவர்கள் கனவிலும் கண்டிராத ஆடம்பரப் பொருள்களை நுகரவும் அன்னார்க்கு வாய்ப்பிருந்தது. எனவே ஏராளமான நாட்டுப்புற மக்கள் நகர்களின் பால் ஈர்க்கப்பட்டார்கள். அங்ஙனம் நகருக்குச் சென்றவர்கள் ருசி கண்ட பூனைகள் போல் மீண்டும் கிராம வாழ்க்கைக்குத் திரும்ப மறுத்தார்கள்.

நகர வாழ்க்கை புறப் பார்வைக்குக் கவர்ச்சியாகத் தோன்றினும் பல அபாயங்களையும் பிரச்னைகளையும் அது தன்னகத்தே கொண்டு விளங்கியது. வீடுகள் மரங்களால் கட்டப்பட்டிருந்ததால் எந்த நேரத்திலும் தீப்பிடிக்கின்ற அபாயம் இருந்தது. தீப்பிடித்து விட்டால் அதனை உடனே அணைக்கக் கூடிய வசதிகள் அக்காலத்திலில்லை. மக்களுக்கு மிக இன்றியமையாத குடி தண்ணீர் துப்புரவு சிறிது மற்றதாய் பல நோய்க்கிருமிகளை உட்கொண்டதாய் விளங்கியது. அதை உண்ட மக்கள் பல நோய்களுக்கு ஆளானார்கள். விஷ ஜுரத்தால் (typhoid) ஏராளமான மக்கள் மடிய அது காரணமாயிருந்தது. சாக்கடைகள் பூமிக்கடியில் செல்லவில்லை. எனவே அவற்றிலிருந்து நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. அவற்றின் அழுக்கு நீரில் கொசுக்கள் நன்கு வளர்ந்தன. கொசுக்களால் பரவிய நோய்கள் பல. மலம், குப்பை கூளம் இவற்றை அகற்ற நகராட்சி மன்றங்கள் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே தெருக்களில் பல பொருள்கள் அழுகிக் கொண்டு அப்படியே கிடந்தன. குப்பை மேடுகள் தெருவின் இரு புறங்களிலும் காணப்பட்டன. மழை பலமாகப் பெய்த போது, அவை நீரால் அடித்துச் செல்லப்பட்டாலொழிய, வேறு வகையில் அவை அகற்றப்பட வழியில்லை. மக்களால் கழிக்கப்பட்ட மலங்களை நாய்களும் பன்றிகளும் சேர்ந்தே உண்டு தீர்த்தனவேயன்றி அவற்றை அகற்ற வேறு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பாரிஸ் போன்ற நகரங்களில் கூடப் பன்றிகள் வீதிகளில் தாராளமாக நடமாடின. ஆறாம் லூயியின் மகன் குதிரை மேல் போய்க் கொண்டிருந்த போது ஆண் பன்றி ஒன்று குதிரையின் கால்களைத் தாக்கிக்

கீழே விழச் செய்ததால், அவ் வரசிளங்குமரன் உயிர் நீத்தான் எனக் கேள்விப் படுகிறோம். இடைக்கால நகரங்கள் சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் மிகக் கேவலமான நிலையிலேயே இருந்தன.

ஒவ்வொரு நகருக்கும் ஒவ்வொரு கோட்டையிருந்ததால், மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப அவை விரிவடைய இயலாது தவித்தன. வீடுகளின் நெருக்கம் அதிகமாயிற்று. கட்டிடங்கள் வீதிக்குள்ளெல்லாம் நீட்டிக் கொண்டிருந்தன. கடைத்தெருவின் ஒருபுறத்திலிருந்த கட்டிடம் ஒன்றின் மாடியிலிருந்து மற்றொரு புறத்திலிருந்த கட்டிடத்துக்கு ஒருவன் எளிதில் தாவிக் குதிக்கின்ற அளவுக்கு அவை வீதிக்குள் நீட்டிக்கொண்டிருந்தன. மக்களின் நெரிசலும், வீடுகளின் நெருக்கமும் சேர்ந்து பல தொத்து வியாதிகளைத் தோற்றுவித்தன. அதனால் பலர் மாண்டனர். இரவில் வீதிகளில் விளக்குகள் போடப் படவில்லை. எனவே இடைக்கால நகரங்கள், கொள்ளைக்காரர்களுக்கும் திருடர்களுக்கும் நல்ல வேட்டையிடமாய் அமைந்தது. சிலசமயம் போட்டிக் காரணமாகக் குடும்பங்களும் வாணிபக் குழுக்களும் கூடத் தம்முள் போரிட்டுக் கொண்டன. நகரத்தில் திறந்த வெளிகள் இல்லாத காரணத்தால் சிறுவர்கள் வீதிகளையே விளையாட்டு அரங்கங்களாகப் பயன்படுத்தினர். மக்கள் ஒருவரொடொருவர் சண்டையிட்டுக் கொள்ளும் இடமாக அமைந்ததும் வீதியேயாகும். மல்யுத்தம், கால்பந்தாட்டம், போன்ற விளையாட்டுகள் கூட வீதிகளில் விளையாடப் பட்டதால், கனவான்களும் குருமார்களும் பெண்களும் அவற்றைக் கண்டித்தனர். நகர மக்களின் தொகை பெருக பெருக வீட்டின் விலைகள் விஷம் போல் ஏறின. வாடகைகளும் உயர்ந்தன. வாடகை வாங்கி செல்வஞ் சேர்க்கின்ற புதிய வகுப்பு பல நகரங்களில் தோன்றிற்று. இங்ஙனம் பல சமுதாயப் பிரச்னைகள் இடைக்கால ஐரோப்பிய நகரங்களை அலைக்கழித்தன.

### நகரங்கள் வளர்ச்சியுற்ற விதம்

இருண்ட காலம் எனப்படுகிற இடைக் காலத்தின் முற்பகுதியில் நகரங்கள் பெரிதும் நலிவுற்றன. நகர மாந்தர் செல்வாக்கிழந்து சீர்குலைந்து நின்றனர். ஆனால் இடைக் காலத்தின் பிற்பகுதியில் நகரங்கள் மீண்டும் தழைத்தோங்க ஆரம்பித்தன. புதிய சூழ்நிலைகளில் பல புதிய பட்டணங்கள் தோன்றின. ஒரு சில இடங்களில் பண்டைக் காலப் பட்டணங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. சான்றாக ரோம், நேப்பிள்ஸ் ஜெனோவா, பைசா, ஃபிளாரன்ஸ், மார்சேல்ஸ்,

லயோன்ஸ், கோலோன், மெய்ன்ஸ், லண்டன், யார்க் போன்ற நகரங்கள் பண்டைய ரோமானியப் பேரரசில் சீருடனும் சிறப்புடனும் விளங்கி இடையில் நலிவுற்று மீண்டும் அவை வளமார்ந்த நகரங்களாக வடிவெடுத்தவை. இவை தவிர புதிதாய்த் தோன்றிய நகரங்கள் பல காட்டு மிராண்டிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சிய மக்கள் பாதுகாப்பு நிறைந்த காப்பரண்களும் (Castles) காவற் கோட்டைகளும் எங்கெங்கிருந்தனவோ அங்கெல்லாம் மக்கள் திரளாகச் சென்று குடியேறினர். இயற்கையாகவே பாதுகாப்பு நிறைந்த இடங்களிலும் நகரங்கள் புதிதாக முளைத்தன. லொம்பார்டுகள் என்ற காட்டுமிராண்டிகளின் தாக்குதல் களினின்றும் தங்களைக் காத்துக் கொள்ள விரும்பிய மக்களே நீரால் சூழப்பட்ட வெனீஸ் (Venice) நகரத்தைத் தோற்றுவித்தார்கள். ஜெர்மனி, போலந்து, செக்கோஸ் லோவேகியா, ஹங்கேரி போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் அரசர்களும், நிலமானியப் பிரபுக்களும் பல்வேறு நகரங்களைப் பல்வேறு காரணங்களுக்காக உண்டாக்கினர்.

எதிரிகளின் நடமாட்டங்களைக் கண்காணித்து அவர்களது தாக்குதல்களை முளையிலேயே கிள்ளி எறிய ஒவ்வொரு நாட்டின் எல்லையிலும் பல கோட்டைகள் கட்டப்பட்டன. அக் கோட்டைகளைச் சுற்றியும் நகரங்கள் நாளடைவில் அமைந்தன. புதிதாக வெல்லப்பட்ட நாடுகளில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப ஒரு சில இடங்களில் குருமார்களுக்குக் குடியிருப்புகளும், கோயில்களும் கட்டித் தரப்பட்டன. அத்தகைய குருமார் குடியிருப்புகள் பல நாளடைவில் நகரங்களாகப் பரிணமித்தன. பல்வேறு பண்ணைகளைச் சேர்ந்த குடியானவர்கள் தமக்குள் பண்டங்களைப் பரிமாறிக் கொள்ள சில குறிப்பிட்ட சந்தைகளில் கூடினார்கள். அத்தகைய சந்தைகளும் சில சமயங்களில் நகரங்களாகப் பெருகின. பல்வேறு இடங்களுக்கும் மையமான இடத்தில் அமைந்து வாணிபத்துக்கு வசதியாயிருந்த ஒரு சில மேனர் பண்ணைகளே நகரங்களாக வளர்ச்சியடைவதும் உண்டு.

நகரங்களின் தோற்றத்துக்கு மிக முக்கியமான காரணம் பதினேரும் நூற்ருண்டிலிருந்து வியாபாரத் துறையில் ஏற்பட்ட பெருத்த முன்னேற்றமேயாகும். பைஸான்ஷிய, முஸ்லிம் நாடுகளோடு வாணிபம் புரிய பல இதாலிய நகரங்கள் முன் வந்தன. பைஸா, ஜெனேவா, வெனீஸ் ஆகிய இந்நகரங்கள் கீழை நாட்டு வியாபாரத்துக்கு முன்னேடிகளாய் விளங்கின. பாக்தாத், டமாஸ்கஸ், கெய்ரோ போன்ற நகரங்களுடன் அவை வியாபாரம் செய்தன. அவர்கள் அங்கிருந்து கொண்டு

வந்த பண்டங்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏகப்பட்ட கிராக்கியாக இருந்தது. இதைக் கண்ட பல நகரங்கள் கீழை நாட்டு வியாபாரத்தில் புகுந்தன. ஒரு சிலர் கீழை நாட்டுப் பண்டங்களை ஒத்த பொருள்களை உற்பத்தி செய்வதில் முனைந்தனர். இத்தகைய வியாபாரிகளின் கூட்டம் செறிந்த இடங்களே பிற்கால ஐரோப்பிய நகரங்களாக மலர்ந்தன. பதினுன்காம் நூற்றுண்டளவில் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தவர்களில் ஏறக்குறைய பாதிப் பேர்கள் வாணிபத்தில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

## நகரங்களின் ஆட்சி முறை

இடைக்கால நகரங்கள் பல பிஷப்புகளின் இருப்பிடங்களாயிருந்தமையாலும், கோட்டைகளால் சூழப்பட்டு எதிரிகளின் தாக்குதல்களினின்றும் பாதுகாப்பை அளித்தமையாலும், அரசர்களும், நிலமானியப் பிரபுக்களும் அவற்றைக் கண்ணியமாகவும் கௌரவமாகவும் நடத்தினர். பல தனிப்பட்ட சலுகைகளை வழங்கினர். ஓரளவு உள்ளூர் சுயாட்சியையும் (Local self government) அளித்தனர். பல நகரங்கள் ஏதாவது ஓர் அரசர் அல்லது பிரபுவின் மானியமாகவே விளங்கின. ஒரு சில, பிரபுக்களுக்கே சொந்தமாக இருந்தன. சில நகரங்கள் வேறு சில நகரங்களைத் தமக்குட்பட்ட மானியங்களாக வைத்திருந்தன. நிலமானிய ஏற்பாட்டுக்குள் வராமலேயே தனித்திருந்த நகரங்களும் சில இருந்தன.

நகர மக்கள் கூட்டமாக ஒரு பிரபுவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். தங்களது உரிமைகளை எல்லாம் பட்டயங்களில் பொறித்துப் பிரபுவிடமிருந்து அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். ஆண்டான், அடிமை, மேலாள் கீழாள் என்ற பாகுபாடுகள் எதுவும் நகரங்களில் இல்லை. நிலமானியச் சட்டத்தின் முன் அனைவரும் சமமாகவும், யாவருமே சுதந்திரக் குடிகளாகவும் கருதப்பட்டனர். ஒரு சில பட்டணங்கள் பெருந் தொகையைத் தங்களது மேலதிபர்களுக்குச் செலுத்தி பூரண சுயேச்சையைப் பெற்றுக் கொண்டதுமுண்டு.

ஒவ்வொரு நகரத்துக்கும் அதன் தலைவராக ஒரு மேயர் (Mayor) அல்லது பர்கோமாஸ்டர் (Burgomaster) இருந்தார். அவருக்கு உதவி செய்யவும் ஆலோசனை கூறவும் பிரபுக்களின் பிரதிநிதிகளடங்கிய சபை ஒன்று தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. பொருளுற்பத்தியாளர்கள், பாங்கர்கள், வியாபாரிகள் போன்றோர்களே சபையில் இடம் பெற்றனர். அவர்கள் பொதுவாக

பூர்ஷுவாக்கள் (Bourgeoisie) என அழைக்கப்பட்டனர். அவர்களது செல்வம் நிலமாக அன்றிப் பணமாக இருந்தது. நிலப்பிரபுக்களைவிட அவர்கள் அதிக செல்வமும் செல்வாக்கும் பெற்று விளங்கினர். அவர்களுடைய புதல்வர்களுக்கு தங்களது புதல்வியரை மணஞ்செய்து கொடுக்க விரும்பிய நிலப் பிரபுக்கள் பலராவர். பூர்ஷுவா சபையே நகரங்களுக்கான சட்டங்களை இயற்றியது. மக்களின் சுயேச்சையை அது ஓரளவு கட்டுப்படுத்தியது. சவச் சடங்கின் போது எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமென்றும், தோட்டத்தில் எத்தனை மரங்கள் பயிரிடலாமென்றும் கட்டுப் படுத்துகின்ற சட்டங்கள் பல இயற்றப்பட்டன. நகர வழக்குகளைத் தீர்க்க நீதி மன்றங்கள் இருந்தன. நகர சொத்துக்களை அவை பிரியம் போல் பிரித்து வழங்கின.

நகர ஆட்சி முறையில் பலம் பெற்ற மத்திய அரசாங்கம் அமையப் பெறவில்லை. எனவே மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்ள முன் வந்தார்கள். அதற்காகப் பல கில்டுகள் எனும் குழுக்கள் (Guilds) ஏற்பட்டன. கில்டுகள் நகர ஆட்சியைக் கண்காணித்ததோடு, பல வகுப்பினரும் கூடிக்குலாவும் சமூக சங்கங்களாகவும் திகழ்ந்தன. வியாபாரம் உற்பத்தி இவை ஒழுங்கே நடைபெற இக் குழுக்கள் துணைபுரிந்தன. பல்வேறு சட்டங்களை அதற்கென அவை ஏற்படுத்தின.

ஒவ்வொரு நகரமும் தனது மேலதிபர்க்குப் பல கட்டணங் களைச் செலுத்தி வந்தது. பாலங்கள், பாதைகள் முதலிய வற்றைப் பயன்படுத்திக் கொள்ள அவை வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தது. கடன் கொடுக்கல் வாங்கல், பாங்கு முறை இவை நகரங்களில் வளர்ச்சி பெறவில்லை. வட்டி வாங்குவதை மக்கள் பாவமென எண்ணினர். எனவே இக்காலத்தே போன்று மூலதன வளர்ச்சி அப்போது ஏற்படவில்லை.

நகரங்களின் ஆட்சியாளர்களாகப் பணக்காரக் குழுவினரே பெரும்பாலும் பணியாற்றினர். எனவே செல்வச் சிறுகுழு ஆட்சி (Oligarchy) என அவற்றை அழைக்கலாம். ஆட்சியாளர்கள் பல இடங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஓரளவு பிரதிநிதித்வ ஜனநாயகம் (Representative democracy) அங்கு வளர்ந்தது. ஒரு சில நகரங்களில் தேர்தல்கள் நடைபெறவில்லை. பணக்காரர்களுக்கு வாக்குரிமை தரப் பெறாத நகரங்களும் சில இருந்தன.

## கில்டு முறைப் பொருளாதாரம் (Guild System)

நகரப் பொருளாதார வாழ்க்கை பொதுவாக கில்டு முறை அல்லது குழு முறையிலேயே நடைபெற்றது. ஒரே தொழிலில் ஈடுபட்ட பலரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு கூட்டமாக அத்தொழிலையோ வியாபாரத்தையோ நடத்துகின்ற முறையே கில்டு முறை எனப்படும். கில்டு என்பது ஒருவகை தனியுரிமைக் குழுவேயன்றி வேறல்ல. ஏனெனில் குழு உறுப்பினர்களைத் தவிர வேறெவரும் அத்தொழிலிலோ வியாபாரத்திலோ ஈடுபட முடியாது. கில்டுகள் இருவகைப்படும். ஒன்று வாணிபக் கில்டுகள் (Merchant guilds) மற்றொன்று அகவினைஞர் கில்டுகள் (Craft guilds) என்பனவாகும்.

## வாணிபக் குழுக்கள் (Merchant guilds)

வாணிபக் குழுக்களில் நகரத்திலிருந்த அத்தனை வியாபாரிகளும் உறுப்பினராவர். தொடக்கத்தில் அதில் சில கைவினைஞர்களும் சேர்ந்திருந்தனர். ஆனால் விரைவிலேயே அவர்கள் தனியே பிரிந்தனர். நகர வாணிபத்தைக் கட்டுப் படுத்துவதும், அயலவர்களின் போட்டியினின்றும் அதைக் காப்பாற்றுவதுமே குழுவின் முக்கிய கடமையாகும். உள்ளூர் சந்தையானது உள்ளூர் வியாபாரிகளுக்கே தனியுரிமையாக்கப்பட்டது. வெளியூர் வியாபாரிகள் நகருக்குள் வராமல் தடுக்கப்பட்டனர். அப்படியே அநுமதிக்கப்பட்டாலும் கில்டுகளால் வரையறுக்கப்பட்ட விலைக்கு விற்பவர்களே உள்ளே அநுமதிக்கப்பட்டார்கள். பண்டங்களின் விலைகள் நன்கு நிர்மானிக்கப்பட்டு ஒரே மாதிரியாக விளங்கின. பண்டங்களைப் பதுக்கி வைத்தல், தேவை பெருகும்போது அதிக விலைக்கு விற்றல் போன்ற பழக்கங்கள் முற்றிலும் தடை செய்யப் பட்டன. விளம்பரங்களில் வீண் செலவு செய்வதும் தடுக்கப் பட்டது. குழுவின் ஆணைகள் பெரும்பாலும் நகராட்சி நிறுவனத் தின் சட்டங்கள் மூலமாக அமல் செய்யப்பட்டன. ஏனெனில் குழுவின் உறுப்பினர்களில் பலர் நகராட்சி சபையிலும் இடம் பெற்றிருந்தனர். இன்னும் சில இடங்களில் இக் குழுக்கள் நேரடியாகவே நடவடிக்கைகளை எடுத்தன. வேற்றூன் ஒருவன் நகருள் புகுந்து பண்டங்களைக் குறைந்த விலையில் விற்க ஆரம்பித் தால், உடனே குழுவின் ஆட்கள் அவனை மொய்த்துக் கொண்டு நையப் புடைத்துக் குற்றுயிராய்ப் போட்டுவிட்டுப் போய் விடுவர். குழுவின் உறுப்பினர்கள் அவ்வப்போது கூடிப் பேசி வாணிப விதிகளை மாற்றினர். புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், குழு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் போன்ற செயல்களை இப் பொதுக் கூட்டங்கள் செய்தன.

ஒவ்வொரு வாணிபத் துறைக்கும் ஒவ்வொரு குழு இருந்தது. அதற்குரிய பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலாளிகளை அது தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ஒரு குழுவுக்குப் பொருள் செய்பவன் வேறொன்றுக்கு அதே பொருளைச் செய்து அளிக்கக் கூடாதெனத் திட்டம் செய்யப்பட்டது.

பெரிய கில்டுகள் ஒன்று சேர்ந்து பெருவாணிபக் கூட்டுக் கழகங்களாக (Corporations) மாறின. மூலப் பொருள்களை அவை மொத்தமாக வாங்கிக் கொண்டன. உறுப்பினர்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு செய்யும் பணியையும் அது செய்தது. உற்பத்தி எவ்வாறு நடைபெற வேண்டும், தொழிலாளர்கள் எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டும், அவர்களுக்கு எவ்வளவு கூலி வழங்கவேண்டும், என்ன விலைக்குப் பொருள்கள் விற்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் அவையே தீர்மானித்தன. நகருக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கி வழங்கல், நகர சாக்கடைகளைத் துப்புரவு செய்தல், சந்தைகளை ஒழுங்கு படுத்தல், துறைமுகங்களை ஆழமாக்குதல், புதிய துறைமுகங்களைக் கட்டல், பாதைகளைச் செப்பனிடுதல், அவற்றில் அபாயம் நேராதவாறு பாதுகாத்தல், முதலிய பணிகளையும் இவ் வாணிபக் கழகங்கள் சிலசமயம் மேற்கொண்டன; உற்பத்தி செய்வோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், அதே சமயம் நுகர்வோருக்கு அதிருப்தி ஏற்படாத வகையிலும் பண்டங்களின் விலையை நிர்ணயிக்க ஆண்டுக்கு நான்கு அல்லது ஐந்து முறைகள் கழகக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. வியாபாரிகளைக் கொள்ளையடிப்போரை ஒழிக்க அவை முழு மூச்சுடன் பாடுபட்டன. நிலமானிய பிரபுக்களும், அரசர்களும் அத்துக்கு மீறி வரிவசூல் செய்ய முற்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்தி மக்களுக்கு நியாயம் வழங்கியவை இக்கழகங்களேயாம். கழக உறுப்பினர்கள் நகர மன்றங்களில் உறுப்பினராயிருந்து கொண்டு பெரும் செல்வாக்கைச் செலுத்தினர். அவர்கள் தமக்கென தனி வில்லைகளை (badges) அணிந்து கொண்டனர்.

ஒவ்வொரு வாணிபக் குழுவிற்கும் தனி அத்தாணி மண்டபங்கள் இருந்தன. இவை பார்ப்போர் கண்களைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப் பட்டிருந்தன. ஆல்டர்மென், பெய்லிப், பொருளாளர், பதிவாளர் போன்ற அதிகாரிகள் குழுவின் கண்காணிப்பின் கீழ் வேலை செய்தனர். வணிகர்கள் தம்மிடையே ஏற்படும் வழக்குகளை முதலில் குழுவின் நீதிமன்றங்களிலேயே முறையிடு செய்து கொண்டனர். அதன் பின்னரே அவசியப் பட்டால் நகர நீதி மன்றங்களுக்கு முறையிடு செய்து கொண்டனர்.

வாணிபக் குழுக்கள் உறுப்பினரின் நலன்களைப் பேண பல பரோபகாரச் செயல்களிலீடுபட்டது. நோயுற்றவர்களுக்கு, மருந்து வசதியையும், இக்கட்டில் மாட்டிக் கொண்டவர்களுக்கு தேவையான உதவிகளையும் அது வழங்கியது. சிறைப்பட்ட வர்களை ஈட்டுப்பணம் கொடுத்து அது மீட்டது. கிழவர்களுக்கும் பலஹீனர்களுக்கும் அது வாழ்க்கை வசதி செய்து கொடுத்தது. இறந்த உறுப்பினர்களின் சவங்கள் அடக்கம் செய்யப்படவும் அவர்தம் ஆன்மா சாந்தி அடைய வழிபாடுகள் செய்யப்படவும் அது வழிவகை செய்தது. நகரத் திருச்சபைக் கோயில்களை அலங் கரிக்கவும், அங்கு விழாக்கள் நடைபெறவும் அது பொருளுதவி செய்தது. இங்ஙனம் நகர வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் அனைத்திலும் இக்குழுக்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டன.

கைவினைஞர் குழுக்கள் (Craft guilds)

கைகளால் செய்யப் பெறும் பொருள்களை உற்பத்தி செய்து வந்த சிறு தொழிலாளர்களும் தமக்குள், குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஒவ்வொரு சிறு தொழிலுக்கும் ஒரு குழு அமைக்கப்பட்டது. ரொட்டி சுடுபவர்கள், தட்டார்கள், கருமார்கள், தோல்வினைஞர்கள், ஆடுமாடு மேய்ப்போர் போன்ற பற்பல தொழில்களுக்கும் தனித்தனிக் குழுக்கள் இருந்தன. கி.பி. 1099 ஆம் ஆண்டிலேயே லண்டன், லின்கன், ஆக்ஸ்போர்டு போன்ற நகரங்களில் நெசவாளிகளுக்கென்று தனி குழுக்கள் இருந்தன, பின்னர் ஒவ்வொரு நகரிலும் ஏராளமான கைவினைஞர் குழுக்கள் ஏற்பட்டன. 12ஆம் நூற்றாண்டில் ஜெனேவா நகரில் மட்டும் 33ம், வெனீஸ் நகரில் 58ம், பிளாரன்ஸில் 21ம், பாரிஸில் 100ம் இருந்ததாக அறிகிறோம். ஒரே தொழிலின் பல்வேறு வகைகளுக்கும் தனித்தனிக் குழுக்கள் இருந்தன. சான்றாக தச்சுத் தொழிலிலேயே, மேஜை செய் வோர், பெட்டி செய்வோர், தொட்டி செய்வோர், படகு செய்வோர் ஆகியோருக்குத் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒரு தொழிலின் வெவ்வேறு நிலைகளுக்கும் கூடத் தனிக் குழுக்கள் இருந்தன. சான்றாகத் தோல் தொழிலில், தோல் உரிப்போர், தோல் பதனிடுவோர், தோலை வெட்டுவோர், பாதுகாப் போர், ஆகியோர்களுக்கும் தனித்தனிக் குழுக்களிலிருந்தன.

ஒவ்வொரு பெரிய நகரத்திலும் மூன்று வகையான கைவினைஞர் குழுக்கள் இருந்தன. முதலாவது வகை உள்ளூர் மக்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்த ரொட்டி செய் வோர், மெழுகுவர்த்தி செய்வோர், மது இறக்குவோர் போன்ற வர்களை உட்கொண்டவை. இரண்டாவது வகை உள்நாட்ட

வர்க்கு மட்டுமின்றி வெளிநாட்டவர்க்காகவும் பொருள்களை உற்பத்தி செய்த துணி நெய்வோர், தோல் வினைஞர், உலோகத் தொழிலாளிகள் முதலியோரை உட்கொண்டவையாகும். மூன்றாவது வகை மொத்தமாகப் பொருள்களை வாங்கி விற்றவர்களை உட்கொண்டது. கம்பளித்துணி, எண்ணெய், வாசனை திரவியங்கள், பட்டுகள் முதலியவற்றில் மொத்த வியாபாரம் செய்தவர்கள் இவ்வகையினைச் சேர்ந்தவர்கள். முதல் வகைக் குழுக்கள் ஏறக்குறைய எல்லா நகரங்களிலும் காணப் பட்டன. செல்வத்திலும் செல்வாக்கிலும் அவை உயர்ந்து நின்றன. இரண்டாம் வகைக் குழுக்கள் ஒரு சில இடங்களில் மட்டுமே இருந்தன. தனிப்பட்ட ஒரு பொருளை அவை சிறப்பாக உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. ஜெர்மனி, இதாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் உலோகத் தொழிலும், ஸ்பெயினிலிருந்த முஸ்லிம் நகரங்களில் தோல் தொழிலும், பிரான்ஸ், நெதர்லாந்து, இங்கிலாந்து முதலிய இடங்களில் கம்பள நெசவுத் தொழிலும் சிறப்பாக வளர்ச்சியடைந்தன. நகருக்கு நகர் கம்பளத் துணியின் தன்மை மாறுபட்டது. காஞ்சிபுரம் பட்டு, சேலம் குண்டங்கி வேட்டி என நாம் சொல்வது போல ஒவ்வொரு நகரும் ஒரு தனிப்பட்ட துணியை உற்பத்தி செய்து அதில் புகழை எய்தியது. மூன்றாவது வகை மொத்தப் பொருள் வணிகர்கள், வாணிபக் குழுக்களோடு ஒன்று சேர்ந்து கொண்டனர்.

கைவினைஞர் குழுவின் தலைவர் ''மாஸ்டர்'' (Master) அல்லது கைவினை வல்லுநர் எனப்பட்டார். குறிப்பிட்ட சிறு தொழிலைச் செய்தவரும் அதற்குரிமையாளரும் அவர் ஒருவரே. அவரே முதலாளி. அவரே தொழிலாளி. அவரது வீடே தொழிற் கூடம். அதுவே கடையும் கூட. வீட்டில் விற்கப் பட்டது போக எஞ்சிய வற்றையே அவர் சந்தைகளுக்கு எடுத்துச் சென்றார். அங்ஙனம் மிஞ்சிய பொருள்களை வாணிபக் குழுக்களுக்கு அனுப்பி அவை மூலம் வெளிநாட்டுக்கு அனுப்புவதும் உண்டு. வாணிபக் குழுவில் ஒவ்வொரு மாஸ்டரும் ஓர் உறுப்பினரா யிருத்தல் வழக்கம். கைவினை வல்லுநர் தன் கைகளாலேயே பொருள்களை முழுமை யாகச் செய்து மனம் மகிழ்வார். ஒரு பொருளைப் படைத்த பூரிப்பு அவர் முகத்தில் பொலியும். பொருளின் பல்வேறு பாகங்களை மட்டும் உற்பத்தி செய்யும் தற்காலத் தொழிலாளர்க்கு அத்தகைய மனநிறைவு மருந்துக்கும் கிடைக்காத தொன்றாகும். கைவினை வல்லுநர்க்கு அவரது மனைவி மக்கள் ஓரளவு உதவுவர். மற்றபடி அவருக்கு நிரந்தரமாக உதவி செய்தவர்கள் பயிற்சி முற்றுப் பெற்ற தொழிலாளியான ஜர்னிமேனும் (Journey man)

பயிற்சி பெற்று வரும் தொழிலாளியான அப்ரண்டீஸும் (apprentice) ஆகிய இருவருமாவர். அவர்களும் கைவினைஞர் குழுவில் உறுப்பினர்களாவர். இக்காலத் தொழிற் சங்கங்களில் நடைபெறுவது போலல்லாமல் முதலாளியும் தொழிலாளிகளும் ஒருங்கே தொழிற்சங்கத்தில் இடம் பெற்றிருந்தனர்.

கைத்தொழில் ஒன்றைச் சுதந்திரமாகச் செய்கின்ற உரிமை இடைக்காலத்தே சாதாரணமாகக் கிடைப்பதொன்றன்று. மூன்று முதல் பனிரெண்டு ஆண்டுகள் வரை ஒருவன் பயிற்சி பெற்ற பின்னரே ஒருவன் ஒரு தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்தும் அனுமதியைப் பெறமுடியும். பயிற்சியின் போது தொழிலாளி ஒருவன் தன் மாஸ்டருடைய வீட்டிலேயே தங்கி அவர் கொடுப்பதை உண்டு அவருக்குக் குற்றேவல் புரிந்து வர வேண்டும். அப்போது அவனுக்குக் கூலி கிடையாது. ஏழு அல்லது பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பே அவனுக்கு ஓரளவு ஊதியம் வழங்கப்படும். அப்போது அவன் தனது மாஸ்டரை விட்டு வேறு மாஸ்டர்களிடம் சென்று வேலைசெய்து கூடப்பொருள் திரட்ட லாம். வேற்றிடங்களுக்குப் பயணம் செய்து கூலிக்கு வேலை செய்த தாலேயே அவன் பயணத் தொழிலாளி எனப்பெயர் பெற்றான். ஓரளவு மூலதனத்தைச் சம்பாதித்துக் கொண்டபின் பயணத் தொழிலாளி தனிப்பட்ட முறையில் சுயேச்சையாகத் தொழில் செய்து பிழைக்கும் உரிமையைப் பெற்றான். கைவினைப் பொருள் களை செம்மையாகச் செய்யக்கூடிய நிலையை ஒருவன் பெற்று விட்டபோது கைவினைச் செம்மல் (Master Craftsman) என்று அழைக்கப்பட்டான். பயிற்சியின் போது அவன் மிகக் கடுமை யாகவே நடத்தப்பட்டான். இடையில் ஓடிவிட்டால் மீண்டும் அவன் அத்தொழிலில் ஈடுபட இயலாது. பொறுமையாக இருந்து தனது குருவின் மனம் கோணாமல் நடந்து கொண்டவனே ஒரு தொழிலில் ஈடுபட அனுமதிக்கப் பட்டான்.

பொதுவாக ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தவனின் மக்களும் அத்தொழிலிலேயே ஈடுபடுவதே வழக்கம். ஆனால் சில பிள்ளைகளை வேறு தொழில்களில் ஈடுபடுத்திய தந்தைகளுமிருந்தனர். எனவே நம் நாட்டில் ஏற்பட்டது போல தொழிலடிப்படையில் சாதிகள் அக்காலத்தே தோன்றவில்லை. மற்றபடி உயர்வு தாழ்வுகள் சமுதாயத்தில் பெரிதும் காணப்பட்டன. பயிற்சி பெறும் நிலையில் ஒரு தொழிலாளி ஏறக்குறைய அடிமை போலவே நடத்தப் பட்டான். பயணத் தொழிலாளியான பின்னும், திருமணம் செய்துகொண்டு சொந்த வீட்டில் வாழும் தகுதி பெற்ற பின்பே அவன் கைவினைஞர் குழுவில் உறுப்பினனாகச் சேர்த்துக்கொள்ளப்

பட்டான். சற்றே சோம்பியவர்கள் வாழ்நாள் பூராவும் பயணத் தொழிலாளிகளாகவே காலங்கழித்தனர்.

கைவினைஞர் குழு ஒவ்வொன்றுக்கும் கடுமையாள பல சட்ட திட்டங்கள் இருந்தன. அச் சட்டதிட்டங்களுக்குட்பட்டே ஒவ்வொரு மாஸ்டரும் உற்பத்தியிலீடுபட வேண்டும். தேவைக் கேற்ற அளவே பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் அளவு, அவற்றின் தன்மை முதலியவைகளைக் குழுவே தீர்மானித்தது. பயிற்சியாளர்கள் எத்தனை பேர் சேர்க்கப்படலாம், அவர்கள் எத்தனை ஆண்டு களுக்குப் பயிற்சி பெறவேண்டும், பயணத் தொழிலாளிகளுக்கு எவ்வளவு கூலி வழங்கலாம் என்பதையும் அது தீர்மானித்தது. வெளியிலிருந்து வரும் பொருள்களை அது தடை செய்தது. கில்டு உறுப்பினர்களுக்கு நோய்க் காலத்தும், முதுமையின் போதும், விபத்துக் காலத்தும், போதிய நிதியுதவியை அது வழங்கியது. விதவைகளையும் அநாதைகளையும் அது காப்பாற்றியது. நாடகங்கள், பண்டிகைகள், விருந்துகள் முதலியவற்றை ஏற்பாடு செய்து உறுப்பினர்களுக்கு வாழ்வில் உற்சாகத்தையும் அது மூட்டியது. ஒவ்வொரு தொழில் முதலாளியும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பொது நிதி ஒன்றுக்கு அவ்வப்போது நன்கொடை யாக வழங்கி வந்தான். அப்போது நிதியிலிருந்தே உறுப்பினர் களின் திடீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. குழு உறுப்பினர்கள் தனிப்பட்ட கொடிகளையும், உடைகளையும் கொண்டிருந்தார். அவற்றை அணிந்து கொண்டுதான் அவர்கள் நகரத்தின் வீதிகளில் ஊர்வலமாகச் சென்று திருச்சபை விழாக் களில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு குழுவும் ஒரு துறவியைத் தம் குலதெய்வமாகக் கொண்டு அவருக்கு விழா எடுத்தனர். இங்ஙனம் குழுக்கள் சமுதாய உல்லாசக் கழகங்களாவும், தொழிலாளர் சங்கமாகவும், முதலாளிகள் கூட்டுறவாகவும், சமயக் கூட்டாகவும் திகழ்ந்தன. ஒவ்வொரு குழுவும் தனது தொழில் அல்லது வியாபார இரகசியத்தைப் பொன்னே போல் பாதுகாத்தது.

குழுவின் விதிகள் கண்டிப்பானவை. அவற்றை மீறினோர் கடுந்தண்டனைக்கு ஆளாயினர். பொருள்களைச் செம்மையாகச் செய்தவர்களும், குறிப்பிட்ட கூலிகளைக் கொடாதவரும், குறிப் பிட்ட நேரத்துக்கு மேல் தொழிலாளிகளிடம் வேலை வாங்கிய வரும், வரையறுக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்றவர்களும் குழுவினின்று விலக்கப் பட்டார்கள். சான்றாக கலப்படமான மதுவை விற்ற ஒருவனைக் குழு அம்மதுவை அருந்தும்படி

வற்புறுத்தி, குடித்தது போக எஞ்சிய மதுவை அவன் தலையின் மீதே ஊற்றிக் குளிப்பாட்டி வீட்டுக்குத் துரத்தியதோடல்லாமல் மது விற்கும் உரிமையையும் அவனிடமிருந்து ரத்து செய்தது. பொருள்களின் விலையைக் குழுவே தீர்மானித்தது. உற்பத்திக் காகும் செலவு போக முதலாளிக்கு ஓரளவு லாபம் கிடைக்கும் படியாகவே விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அது நியாய விலை (Fair price) என்று அழைக்கப்பட்டது. நியாய விலைக்கு மேல் விற்றவர்கள் குழுவினின்றும் நீக்கப்பட்டார்கள். குழுவில் புதிய உறுப்பினர்கள் சேர்வதென்பது முயற்கொம்பாயிருந்தது. ஏற்கனவே ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் மக்களே எளிதில் உறுப்பினராக முடிந்தது. ஏனையோர் பலர் இன்னும் தற்காலிகப் பயணத் தொழிலாளிகளாகவே இருக்க வேண்டி நேர்ந்தது.

## கில்டு முறையின் நன்மை தீமைகள்

கில்டு முறைப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கொள்கை கள் உண்மையிலேயே மிகச் சிறந்தனவாகும். அவற்றில் நாம் இடைக்கால கிறிஸ்தவ சமயத்தின் வாடையைக் காணலாம். கிறிஸ்தவ சமயம் துறவு மனப்பான்மையைப் போற்றியதொன்று. இம்மையைக் காட்டிலும் மறுமைக்கே அது அதிக முக்கியத்துவம் கொடுத்தது. எனவே மக்களை எளிமையாக வாழ்வதே சிறந்தது என்றும், செல்வத்தை அளவுக்கு மீறி சேர்க்கக் கூடாதென்றும், வட்டி வாங்குவது பாவமென்றும், மனிதனை மனிதன் ஏமாற்று வது அதர்மம் என்றும் கூறி வந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஏற்பட்ட பொருளாதாரக் குழுக்களும், வியாபாரத் துறையில் நியாயத்தை வற்புறுத்தியதில் வியப்பொன்றுமில்லை ஆனால் ஒரேயடியாகத் துறவு மார்க்கத்தையும் இவை போதிக்கவில்லை. நியாயமான விலை, தர்மமாக சேர்க்கப்பட்ட செல்வம் இவற்றை இவை ஏற்றுக்கொண்டன. அரிஸ்டாடலின் இடைநிலைக் கொள்கை (Golden Mean) யின் வாடையையும் நாம் இக்குழுக் களின் விதிகளில் காண்கிறோம்.

இவற்றில் கடைப்பிடிக்கப்பட்ட விதிகளில் தலையாயது சமுதாய மனப்பான்மையோடு கூடிய பொருளாதார நடவடிக்கை யாகும். சமுதாயத்துக்குத் தேவையான பொருள்களையும், சேவைகளையும் செய்வதே பொருளாதார நடவடிக்கையின் குறிக் கோளாக இருக்க வேண்டும். ஒரு சிலர் செல்வந்தர்களாக மாற, பலர் வறுமையால் வாடுகின்ற நிலை ஏற்படக் கூடாது. ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்த அளவு தேவை எதுவோ அதை மட்டும் பூர்த்தி செய்தால் போதும். அதற்கு மேல் உற்பத்தி செய்து,

அதிகமாகப் பொருள் சேர்க்க முற்படுவது அடாத செயலாகும். இலாபமொன்றையே குறிக்கோளாகக் கொள்ளும் வணிகர்கள் பகற்கொள்ளைக்காரர்களேயன்றி வேறல்லர் என்பது அக்காலக் குழுக்களின் அடிப்படைக் கொள்கையாக விளங்கிற்று.

இரண்டாவதாக அக்காலப் பொருளாதார நிறுவனங்கள் நியாயமான விலையை வற்புறுத்தின. ஒரு பொருளை உற்பத்தி செய்யவும், இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லவும், ஆகின்ற செலவோடு கொஞ்சம் கூட்டி விலை வைத்து விற்பதே நியாயம் எனக் கருதப்பட்டது. அளவுக்கு மீறி லாபம் வைத்து விற்பது பாவம் எனக் கருதப்பட்டது.

மூன்றாவதாக ஒரு மனிதன் தனது தேவைகளுக்கு மீறிப் பொருளைச் சேர்ப்பதும் தடுக்கப்பட்டது. ஒருவனது தேவைக்கு மேற்பட்டு அவனிடம் வந்து சேர்கின்ற பொருள் சமுதாயத்துக்கே சொந்தம். அதை அவன் சமுதாயத்துக்கே திருப்பிக் கொடுத்து விட வேண்டும் அல்லது சமுதாய நலனுக்காகச் செலவு செய்துவிட வேண்டும்.

நான்காவதாகச் சமுதாயத்துக்கெனப் பயன்படும் வகையில் ஊழியம் புரியாத எவரும் ஊதியம் பெறுதல் தகாது. ஊழியத்திற்கேற்பவே ஒருவனது வருமானம் இருக்கவேண்டும். ஒருவித சமுதாய சேவையுமின்றி ஈட்டப்படும் செல்வம் பாவகரமானது. முதலுக்காக வட்டி வாங்குவது கூடப் பாவம். ஏனெனில் அது, உழைப்பின்றி வருகிற ஊதியமாகும்.

இத்தகைய கொள்கைகள் உண்மையில் சிறிய சிறிய மக்கள் கூட்டங்களுக்குப் பெரிதும் ஏற்றவைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சமுதாயம் பெரிதாக விரிவடையும் போதும், பொருளாதாரம் பெரிய அளவில் நடைபெறுகிற போதும் மேற்கண்ட கொள்கைகள் நடைமுறைக்கு ஒவ்வாதனவாய்ப் போய்விடுகின்றன. எனவேதான் கி. பி. பதினைாம் நூற்றாண்டளவில் மேலே கூறப்பட்ட இருவகைப் பொருளாதார அமைப்புகளும் மங்கி மறைய ஆரம்பித்தன. ஏனெனில் வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்றவாறு பொருள்களை அவைகளால் உற்பத்தி செய்ய இயலவில்லை. புதிய தொழிலாளிகள் மிக அரிதாகவே குழுக்களில் சேர்க்கப்பட்டனர். மற்றும் புதிய உற்பத்தி முறைகளை அவை ஊக்குவிக்க மறுத்தன. சுயநலமிக்க பணக்காரக் கும்பல்களாக (Oligarchies) அவைமாறின. தொழிலாளிகளுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. 14ஆம் நூற்றாண்

டில், வறுமையால் வாடிய பல பயணத் தொழிலாளிகள் கலகத்திலீடுபட்டனர். எனினும் போக்குவரவு வசதி இல்லாத அக்காலத்தே வட்டார மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இக் குழுக்கள் பெரிதும் வெற்றி கண்டன. நவீன காலத்தே புதிய கடல்வழிகள் கண்டு பிடிக்கப்பட்டு, உலக வாணிபம் தழைக்கத் தொடங்கிய போது, கில்டுகள் தாமாகவே வீழ்ச்சியுற்றன. ஏராளமானப் பொருள்களைக் குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய பொறிகள் கண்டு பிடிக்கப்பட்டபோது அவற்றோடு போட்டிபோட அக் குழுக்களால் முடியவில்லை. அரசின் ஆதரவும் மக்களின் ஆதரவும் அவைகளுக்குக் கிடைக்க வில்லை. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும் (Industrial Revolution), பிரெஞ்சு நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியும் சேர்ந்து இடைக்கால கில்டு முறைப் பொருளாதாரத்துக்கே சாவு மணி அடித்து விட்டன எனலாம்.

## இடைக்கால நாகரிகத்தில் நகரங்களின் பங்கு

இடைக்கால நாகரிக வளர்ச்சியில் நகரங்கள் ஆற்றிய தொண்டுகள் பல. உழைப்பின் உயர்வை இடைக்கால உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை அவற்றுக்கே உரித்தாகும். பண்டைய நாகரிகத்தின் பாசறைகளான கிரீசிலும், ரோமிலும், உடம்பைக் கொண்டு உழைக்கும் பிழைப்புக் கேவலமாகக் கருதப் பட்டது. அத்தகைய வேலைகள் எல்லாம் அடிமைகளால் மட்டுமே செய்யத்தக்கவை எனக் கருதப்பட்டது. நகத்தில் மண்படாமல் செய்யக் கூடிய வேலைகளே கண்ணியமுள்ளவர் களால் மேற்கொள்ளப் படத்தக்கவை என்று பொதுவாக எண்ணப்பட்டு வந்தது. இந்தத் தவறான கருத்தை இடைக்கால நகரங்கள் மறுத்தன. நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த கில்டுகள் எனும் பொருளாதாரக் கழகங்கள், உழைப்பை வற்புறுத்தின. வேலை செய்யாதவர் அவரும் கில்டுகளில் உறுப்பினராகத் தகுதியற்றவராகக் கருதப்பட்டனர். கில்டுகளில் உறுப்பினராயிருந்தவர்கள் மட்டுமே, தல ஆட்சி நிறுவனங்களில் பங்குபெற அநுமதிக்கப்பட்டனர். பொருளாதாரத் துறையிலும் அவர்களுக்கு மட்டுமே சலுகைகள் காட்டப்பட்டன. இங்ஙனம் தனது கரங்களைக் கொண்டு உழைக்கத் தெரியாதவனுக்கு அரசியல், பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டதால், உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்கும் சமுதாயத்தில் நல்ல மதிப்பு ஏற்பட்டது. இன்றைய பொது உடைமை நாடுகளில் இக்கருத்து பெரிதும் போற்றப்படுவதைக் காண்கிறோம்.

பொருளாதாரத் துறையில் கூட்டு முயற்சியின் இன்றியமையாமையை இடைக்கால நகரங்கள் நன்கு வலியுறுத்தியதைக் காண்கிறோம். பொருளுற்பத்தியில் ஈடுபட்டோர் ஒரு கழகமாக அமைய வேண்டும் என்ற கருத்தின் செயற்பாட்டையே அக்கால கில்டுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அக்கில்டுகளில் முதலாளிகள் மட்டுமேயன்றி, தொழிலாளிகளும் உறுப்பினராயிருந்தது, மற்றுமோர் சிறப்பியல்பாகும். இக்கால ஸிண்டிகலிசம் (Syndicalism) என்ற பொருளாதார தத்துவத்தில் இத்தகைய கருத்தே வற்புறுத்தப் படுகிறது. உற்பத்தித் துறையில் தொழிலாளிகளும் பங்கு பெறவேண்டும் என்ற கருத்தை அக்கால கில்டுகள் நடைமுறையில் செயல்படுத்தியதைக் காண்கிறோம்.

இடைக்கால வாணிப வளர்ச்சியில், நகரங்கள்தான் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன. அக்கால வாணிபத்துக்கு ஒரு முதுகெலும்பாக விளங்கியது சந்தைகளாகும் (Fair). அச்சந்தைகளில்தான் பரஸ்பரப் பண்டமாற்றுகள் நடைபெற்றன. கீழை நாட்டுப் பொருள்களும், மேலைநாட்டுப் பண்டங்களும் அவைகளில்தான் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அத்தகைய சந்தைகள் நடைபெற்றதெல்லாம் லண்டன், கொலோன் (Cologne), பாரிஸ், ட்ராய்ஸ் (Troys) போன்ற பெருநகரங்களிலேயாகும். ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த கைவினைஞர்களும் (artisans), உற்பத்தியாளர்களும், வணிகர்களும் இச்சந்தைகளில் பங்கு பெற்றனர். அரசர்கள் அவைகளுக்குத் தக்க பாதுகாப்பளித்தனர்.

வாணிபத்துக்குப் பெரிதும் தேவையான கப்பல்களைக் கட்டும் தொழிலில் அக்கால நகரங்களே சிறந்து விளங்கின. துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்கள் (light houses) கட்டப்பட்டிருந்தன. துறைமுகங்களில் பண்டக சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. கீழை நாடுகளுக்கும், மேலை நாடுகளுக்கும் வாணிபமானது அக்காலத்தே மத்தியத் தரைக்கடல் மூலமாகவே பெரிதும் நடைபெற்றது. எனவே இத்தாலிய துறைமுகங்கள் அதில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டன. மிலான், கோமோ (Como), வெரோனு (Verona), வெனீஸ் (Venice) போன்ற நகரங்கள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுப் பெரும்பொருளீட்டின. போப்பாண்டவரது ஆணைகளையும் மீறி ஜெனேவா (Genoa), வெனீஸ் (Venice), பைசா (Pisa) போன்ற இத்தாலிய நகரங்கள் முஸ்லிம் நாடுகளோடு வாணிபம் செய்தன. ஜெனேவாவும், வெனீசும் தமக்குள் போரிட்டுக் கொண்டதன் விளைவாக மார்சேல்ஸ் (Marseilles) மாண்ட்பில்லியர் (Montpilier) போன்ற பிரெஞ்சு

நகரங்களும், பார்சிலோனு (Barcelona), வேலன்சியா (Valencia) போன்ற ஸ்பானிய நகரங்களும் மத்தியத் தரைக்கடல் வாணிபத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இலண்டன் நகரம் துணி, கம்பளம் இவற்றை ஏற்றுமதி செய்து, அரேபியாவிலிருந்து வாசனைத் திரவியங்களையும், சீனுவிலிருந்து பட்டையும், ரஷ்யாவிலிருந்து கம்பளத்தையும், பிரான்சிலிருந்து திராட்சை ரசத்தையும் இறக்குமதி செய்தது. ஃபிளாண்டர்ஸிலிருந்த (Flanders), ப்ருக்ஸ் (Bruges) எனும் நகரம் பெரும் வாணிப கேந்திரமாய் விளங்கியது. இங்கிலாந்திலிருந்து கம்பளத்தை வாங்கித் துணியாக நெய்து அதைப் பல நாடுகளுக்கும் ஃபிளாண்டர்ஸ் விற்றது. ஜெர்மனியின் வாணிப நகரங்கள் யாவும் ஹேன்ஸியாடிக் லீக் (Hanseatic League) எனும் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, வட ஐரோப்பிய வாணிபத்தில் தனியுரிமை பெற்று விளங்கின. ஜெர்மனி பிற்காலத்தே அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த, இத்தகைய பொருளாதார ஒற்றுமை பெரிதும் துணை புரிந்தது எனலாம்.

வாணிபத்துக்கு மிக இன்றியமையாத சாதனங்களான நாணய முறை(Currency system), பாங்கு முறை, நாணய மாற்று முறை (Exchange system) முதலியவை இடைக்கால நகரங்களில் தான் வளர்ச்சியடைந்தன. இத்தாலியிலிருந்த ஃபிளாரன்ஸ், வெனிஸ் போன்ற நகரங்களில் பெரும் பாங்கிகள் இருந்தன. அவை வியாபாரிகளுக்குக் கடன்தொகை வழங்கின. அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் கூட அவைக் கடன் கொடுத்து, போர் முயற்சிகளுக்கு உதவி செய்தன. பிளாரன்சைச் சேர்ந்த பாங்குதாரர்கள் தனிப்பட்ட கப்பல்களைக் கூட சொந்தமாக வைத்திருந்தனர். வெனீஸ், ஜெனேவா போன்ற நகர்களிலிருந்த பாங்குதாரர்கள், பிறநாடுகளில் செல்லக் கூடிய உறுதிப் பத்திரங்களையும் (Promissory notes), மாற்று முறிகளையும் (Bill of exchange), காசோலைகளையும் (Cheques) வழங்கினர். நெருப்பு, பூகம்பம் போன்ற விபத்துக்கள் நேர்ந்ததால் வணிகர்களுக்கு இழப்பீடு செய்யும் காப்புறுதி முறைகளையும் (Insurance System) அக்காலப் பாங்குகள் கடைப்பிடித்தன. தாள் நாணய முறையும் (Paper Currency), கணக்கு வைக்கும் முறையும் (Book keeping) இக்காலத்தே நன்கு வளர்ச்சியடைந்திருந்தன. இவ்வாறு, இக்கால பந்நாட்டு வாணிப வளர்ச்சிக்கு (International trade) இடைக்கால நகரங்கள் முன்னேடிகளாய் விளங்கின.

இடைக்கால நகரங்கள் பல, அரசர்களிடம் உரிமைப் பத்திரங்களைப் (Charter of liberties) பெற்று ஏறக்குறைய சுயாட்சி

யுடன் விளங்கின. இக்கால தலசுயாட்சி முறைக்கு (Local self Government) அவை ஒரு முன்னோடியாய் விளங்கின. நகரத்தை ஆண்ட சபைகளில் வணிகர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினர். இக்காலப் பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கு (Representative Government) அக்கால நகரமன்றங்கள் வழிவகுத்துக் கொடுத்தன என்றால் மிகையாகாது.

தல ஆட்சியில் மட்டுமின்றி, மத்திய ஆட்சியிலும் ஜனநாயகப் பண்புகள் வர இடைக்கால நகரங்கள் துணை புரிந்தன. நகரங்கள் தோன்றுவதற்கு முன், நாடாளு மன்றங்களில் (Parliaments) நிலப் பிரபுக்களும், உயர் மதகுருமார்களுமே இடம் பெற்றிருந்தனர். நகரத்தில் புதிதாய்த் தோன்றிய பூர்சுவா எனும் நடுத்தர வர்க்கத்தினர் (middle class bourgeois) தங்களுக்கும் நாடாளு மன்றத்தில் இடம் வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். அதன் விளைவாக ஏற்கனவே இருந்த பிரபுக்கள் சபை, (Estate of the Nobles), குருமார்கள் சபையோடு, (Estate of the Clergy) பொது மக்கள் (Estate of the Commons) என்ற மூன்றாவது மன்றமும் பல நாடுகளில் ஏற்பட்டது. சட்டங்கள் செய்வதில் பலதரப்பட்ட மக்களும் பங்குபெற வேண்டுமென்ற ஜனநாயகக் கருத்து நகரங்களின் முயற்சியாலேயே வெற்றி பெற்றது.

இடைக்கால நகரங்கள் தாம் அக்காலக் கலைகளுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் தாயகங்களாக விளங்கின. பிளாரன்ஸில் ஆண்ட மெடிசி மன்னர்களும், ரோம் நகரை ஆண்ட போப்புகளும் இலக்கியம், கலை முதலியவற்றை ஓம்பினர். நூலகங்களை வைத்துக் காத்தனர். கிரேக்க நாட்டு இலக்கியங்களையும், கலைப்பொருள்களையும் கொண்டுவந்து தமது வில்லாக்களில் நிரப்பினர். கான்ஸ்டாண்டி நோபிள் முஸ்லிம்களால் கைப்பற்றப் பட்டபோது அங்கிருந்து ஓடிவந்த கிரேக்கப் புலவர்களுக்கு அடைக்கலம் தந்து ஆதரித்தவர்கள் இத்தாலிய நகர வணிகர்களேயாவர். இங்ஙனம் அவர்கள் இத்தாலிய மறுமலர்ச்சிக்குக் (Renaissance) காரணமாயிருந்தார்கள் எனலாம்.

இடைக்கால நாகரிகத்தை எடுத்து இயம்பும் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை முதலியவைகளெல்லாம் நன்கு வளர்ச்சியடைந்த இடங்கள் அக்கால நகரங்களே யாகும். கான்ஸ்டாண்டி நோபிளில் இருந்த அர்ச். சோபியாவின் திருக்கோயில் போன்ற கோயில்கள், மாபெரும் அரண்மனைகள், பளிங்கு மண்டபங்கள், தங்க வாயில்கள், கேளிக்கை நிலையங்கள், குளியலறைகள் போன்றவைகள் இடைக்கால நாகரிகத்தை எடுத்

தியம்பும் சின்னங்களாகும். ரோம் நகரிலிருந்த பல்கலைக் கழகங்களில் இலக்கணமும், இலக்கியமும், தத்துவமும், பேச்சுக் கலையும் போதிக்கப் பட்டன. இடைக்கால இசை அங்குள்ள திருக்கோயில்களில் நன்கு வளர்ச்சிப் பெற்றன. அலெக்ஸாந்திரிய நகரில் அமைந்திருந்த நூலகம் உலகப் பிரசித்திப் பெற்றது. உலோகம், தந்தம், மரம் இவற்றாலான கலைப் பொருள்கள் அங்கு ஏராளமாகச் செய்யப் பட்டன; காதிக் கட்டட முறையும், ரோமானியப் பசலிகா கட்டட முறையும் அங்கு வளர்ந்திருந்தன. ரேவன்னு (Ravenna) நகரில், கீழை நாட்டுப் பாணியில் அமைந்த கட்டடங்கள் பல கட்டப் பட்டிருந்தன. அவற்றில் மாபெரும் குவிமாடங்கள் (Domes) காணப்பட்டன. பாக்தாத், டமாஸ்கஸ் போன்ற நகரங்களில் முஸ்லிம்களின் கட்டடக்கலை ஒளி விட்டுத் துலங்கியது. உலகிலேயே பெரிய நகரமாகப் பாக்தாத் விளங்கியது. மசூதிகளும், கல்லறைகளும், கிறிஸ்தவத் திருக்கோயில்களும், மடங்களும், நூலகங்களும், பள்ளிகளும் அங்கு ஏராளமாக இருந்தன. கல்வியும், கலைகளும், நாகரிகமான பழக்க வழக்கங்களும், மரியாதை முறைகளும் அங்கு போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தன. செல்வந்தர்கள் மிக விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தனர். வாசனைத் தைலத்தை உடம்பெல்லாம் பூசிக் கொண்டனர். இத்தாலியப் பெரு நகரமான வெனீஸில் இசைக்கலை நன்கு வளர்க்கப்பட்டது. பள்ளிகள் அங்கு ஏராளமாக இருந்தன. மாணவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. பல நாட்டு மக்கள் வந்து குடியேறித் தத்தம் கலைப் பண்புகளை அங்கு நிலை நாட்டினர். மிலான், சியானு (Siena), பிளாரன்ஸ் போன்ற நகரங்களும் கலைகள் பலவற்றை ஓம்பின. தாந்தே (Dante), பெட்ரார்க் (Petrarch), பொக்கேஷியோ (Boccacio), மாக்கியவல்லி (Machiavelli), மைக்கோல் ஏஞ்சலோ (Michael Angelo), லியனுர்டோ டாவின்ஸி (Leonardo Davinci) போன்ற பெரும் சிந்தனையாளர்களையும், கலைஞர்களையும் தோற்று வித்த பெருமை பிளாரன்சுக்கு உரியதாகும். அதை ஆண்ட மெடிசி மன்னர்களின் கொலு மண்டபங்களில் கலையழகு கொஞ்சியது. புலவர்களும், கலைஞர்களும் அவர்களால் பெரிதும் ஆதரிக்கப் பட்டனர். நகரை அழகு நிறைந்த கட்டடங்களால் அவர்கள் நிறைத்தனர். இத்தகைய பல நற்பண்புகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்த இடைக்கால நகரங்களில், தேவை யற்ற போட்டிகள், சுகாதார வசதியின்மை, விபசாரம், ஒழுக்கமும் கட்டுப்பாடுமின்மை போன்ற குறைபாடுகளும் இல்லாமலில்லை.

# இடைக்கால ஐரோப்பிய சமுதாயத்தின் பொதுப் பண்புகள்

**கூட்டுறவு மனப்பான்மை**

இடைக்கால ஐரோப்பிய மக்கள் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு மனப்பான்மையைப் புலப்படுத்தினர். முதலில் அத்தகைய மனப்பான்மை குடும்பத்தில் வெளிப்பட்டது. கணவன், மனைவி, மக்கள் யாவரும் தனக்கென அன்றி குடும்பத்துக்கென்றே உழைத்தனர். சம்பாதித்த பொருள் அனைத்தையும் குடும்பத்துக்கே செலவழித்தனர். குடும்பத்தின் நன்மைக்கே யாவரும் முதலிடம் கொடுத்தனர். குடும்பமில்லாதவன் மனிதனாகவே மதிக்கப்படவில்லை. பண்ணையிலோ, வாணிபக் குழுக்களிலோ, கைவினைஞர் குழுக்களிலோ ஒருவன் உறுப்பினனாக வேண்டுமானால் முதலில் அவன் திருமணம் செய்து கொண்டு குடும்பஸ்தனாக மாற வேண்டும்.

பண்ணை வாழ்க்கையிலும், தொழில்களிலும் மக்கள் கூட்டாகவே பணியாற்றினர். சொத்துகள் கூட்டாகவே அநுபவிக்கப்பட்டன. பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததே பண்ணையாகும். அவர்கள் அநுபவித்த விளை நிலங்கள் கூட்டாகவே உழுது பயிரிடப்பட்டன. புல் வெளிகளும் காடுகளும் கூட்டாகவே அநுபவிக்கப் பட்டன. கிராமத்தில் பண்ணைகள் போன்று நகரங்களில் கில்டுகள் கூட்டமாக நடைபெற்றன. குழுக்களில் உறுப்பினனாயிருந்தாலொழிய ஒருவன் எவ்வித தொழிலிலும் ஈடுபட முடியாது.

கிறிஸ்தவத் திருச் சபையிலும் மக்கள் கூட்டாகவே பணியாற்றினர். எந்த நாட்டவராயினும் அன்னார் திருச்சபையின் உறுப்பினனாகக் கருதப்பட்டனர். கிறிஸ்தவச் சமயக் கொள்கைகளை யாவரும் திருச்சபையின் பொதுக் கட்டளைகளுக்கேற்பவே கடைப்பிடித்தனர்.

இங்ஙனம் மக்கள் சமயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் கூட்டு வாழ்க்கை வாழ்ந்தனர். கூட்டம் ஒன்றின் கட்டுப்பாட்டுக்குட்பட்டே தனி மனிதன் எல்லாத் துறைகளிலும் வாழ்ந்தான்.

கிறிஸ்தவ சமயம் இடைக்கால மக்களின் அறநெறியைப் பெரிதும் ஓம்பியது. இயேசுவின் அன்புக் கொள்கைகளை அது நடைமுறையில் நடத்திக் காட்டியது. பஞ்சமா பாதகங்கள்

கண்டிக்கப் பட்டன. மனிதனை மனிதன் சுரண்டுவதும், பலர் வாட ஒருசிலர் உண்டு களிப்பதும், அநியாய விலைக்குப் பண்டங்களை விற்பதும், வட்டி வாங்குவதும் போன்ற சமுதாய விரோதச் செயல்கள் வெறுக்கப் பட்டன. அவை முழுவதுமே நடைமுறையில் கடைப் பிடிக்கப்பட வில்லை எனினும், மக்களின் குறிக்கோள்களாய் அவை துலங்கின.

ஏழைகளும், நோயாளிகளும், விதவைகளும், அநாதைகளும் சமுதாயத்தால் காப்பாற்றப் பட்டனர். மருத்துவ மனைகள், அநாதை இல்லங்கள், இலவசப்பள்ளிகள், உடல் ஊன முற்றூர்க்குப் பாதுகாப்பு மனைகள், மூளைக்கோளாறு உள்ளவர்களுக்குச் சிகிச்சை விடுதிகள் போன்றவைகளைப் பொருளாதாரக் குழுக் களும், மடாலயங்களும் ஏற்படுத்தின. வறியோர்க்கு உண வளித்தல், வழிப்போக்கர்களை உபசரித்தல், குஷ்டரோகிகளை ஓம்பல் போன்ற பரோபகாரச் செயல்களை மடாலயங்கள் உவந்து செய்தன. பிச்சை யெடுப்பதையே தொழிலாகக் கொண்ட ஒரு சிலரை அவை ஊக்கு வித்தாலும் பொதுவாக அவை மாந்தர்க்கு இன்றியமையாத அறச் சாலைகளாய் விளங்கின.

சமுதாயத்தில் பல வகுப்புகள் இருந்தன. அதன் முதல் வகுப்பில் இருந்தவர்கள் மதகுருமார்களாவர்; இரண்டாம் வகுப்பினர் கனவான்களும் பிரபுக்களுமாவர். இவர்கள் அரச னிடம் பல சலுகைகளைப் பெற்றவர்கள். சலுகை அதிகமில்லா தவர்களும் கடமைகள் நிறைந்தவர்களுமாய் விளங்கியவர்கள் குடியானவர்களும் உழவர்களுமாவர். அவர்கள் மூன்றும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். நகர வணிகர்களும் தொழிலதிபர் களும் நான்காம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். நிலமற்ற ஏழை ஊழியர்கள் ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். இவ் வகுப்பாரிடையே ஏற்றத் தாழ்வும் போட்டியும் பொறாமையும் இல்லாமலில்லை. பெரும் பிரபுக்களான டியூக்குகள், கவுண்டு களைச் சிறு பிரபுக்களானப் பாரன்களும், நைட்டுகளும் வெறுத் தனர். குடியானவர்களை வில்லன்கள் நொந்தனர். செல்வ மிக்க வணிகர்களைக் கண்டு தொழிலதிபர்கள் மனம் புழுங்கினர். செல்வமிக்க மதகுருமார்களைக் கண்டு சாதாரண குருமார்கள் எரிச்சலடைந்தனர். பிச்சைக் காரர்கள் கூலிக்கு வேலை செய்த ஜர்னிமேன் எனும் தொழிலாளிகள் முதலியோர் நிலை மிகவும் கேவலமாயிருந்தது. இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் சமுதாயத்தி லிருந்த போதிலும், திருச்சபை அவர்களை ஒன்று படுத்தியது. எல்லோரும் இறைவன் முன் ஒன்றாகவே கருதப் பட்டனர். மற்றும் சில ஒப்பந்தங்களின் படியே எல்லாம் நடந்து கொண்டதால்

ஒவ்வொருவரும் சமுதாயத்தில் இன்றியமையாத உறுப்பினராகவே எண்ணிக் கொண்டனர். மற்றும் மிகத் தாழ்ந்த நிலையிலிருப்போர்களும் மிக உயர்ந்த நிலையை அடைய வாய்ப்பு இருந்தது. சாதாரண கைத் தொழிலாளிகள், குடியானவர்கள் ஆகியோரின் குடும்பங்களில் பிறந்த சிலர் போப்பாண்டவர்களாகக் கூட வந்தனர். திருச்சபை, வாணிபக் குழுக்கள், மேனர் பண்ணைகள் முதலிய எல்லாக் கூட்டு நிறுவனங்களிலுமே சாமானிய மனிதர்கள் உயர்ந்த வகுப்புகளுக்குச் செல்லக் கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. இதுவே இடைக்கால சமுதாயத்தின் ஒரு சிறந்த பண்பாகும்.

# 7. நிலமானியகால நாகரிகம்-சமயத்துறை

இடைக் காலத்தின் பிற்பகுதியில் அரசியல், பொருளாதாரம், கலை ஆகிய துறைகளில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. முரட்டு வகுப்பினரின் படையெடுப்பால் ஏற்பட்ட அரசியற் குழப்பங்கள் ஓரளவு மாறி நிலையான அரசாங்கங்கள் ஆங்காங்கே ஏற்பட்டன. நகரங்கள் வளர்ச்சியுற்று அதன் மூலம் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. மக்கள் ஓரளவு தமது தேவைகளைப் பெற்றுத் திருப்தியாக வாழ்ந்தனர். எனவே அறிவுத் துறையில் அவர்களது கவனம் செல்லலாயிற்று. பன்னிரண்டு பதின்மூன்றுவது நூற்றுண்டுகளில் இடைக் கால மக்கள் அறிவுத் துறையின் உச்சியில் இயங்கலாயினர். எதற்கெடுத்தாலும் அஞ்சி நடுங்கும் மனப்பான்மை மாய்ந்தது. உலகம் அநித்தியம் அதன் இன்பங்கள் மாயை என்ற எண்ணங்கள் மாறின. மறுமையை விட இம்மையைப் பற்றி மக்கள் அதிகமாகச் சிந்திக்க ஆரம்பித்தனர். உலக இன்ப நுகர்ச்சிகளில் அவர்களது நாட்டம் அதிகமாயிற்று. அவர்களது வாழ்க்கையில் ஒரு விதத் தெம்பும் நம்பிக்கையும் மிளிர்ந்தன. இதன் விளைவாக சமயத் துறையிலும் கூட ஓரளவு உலகியலின் சாயை தோன்றலாயிற்று.

## கிறிஸ்தவச் சமயத்தில் மாற்றம்

### குருமார்களின் ஆதிக்கமும் சடங்குகளின் முக்கியத்துவமும் பெருகுதல்

சமயத்துறையின் அடிப்படைக் கொள்கைகளில் இக்காலத்தே அதிக மாற்றங்கள் ஏற்படவில்லை. ஓரிறை வழிபாடு, பரலோகத்தில் இன்பம் துய்த்தல், புனிதப் பொருள் மாறுபாடு முதலிய கொள்கைகளில் மக்களின் நம்பிக்கை குறையவில்லை. பின் என்னை எனில் மக்கள் சமயத்தை அணுகுகின்ற முறையில் ஒரு பெருத்த மாற்றம் ஏற்பட்டது. இடைக்காலத்தின் முற்பகுதியில் மக்கள் எல்லாம் விதியின் பயன் என்றும், உலகம் துன்பமயமானதென்றும், உலக சம்பந்தமான எத்தகைய காரியமும் இறைவனுக்கு விரோதமானதென்றும் கருதினர். மனிதன் இயற்கையாகவே ஒரு பாபி என்றும், இறைவனது அருளினுலன்றி

அவன் கடைத்தேற இயலாதென்றும், கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மட்டுமே பரலோகத்திற்குச் செல்ல முடியு மென்றும், ஏனையோரெல்லாம் நரகத்திற்கே செல்ல வேண்டு மென்றும் மக்கள் நம்பினர். ஆனால் 13 ஆம் நூற்றாண்டளவில் இந் நம்பிக்கைகள் ஓரளவு தளர்ந்தன. இவ்வுலக வாழ்க்கை யானது மிகவும் இன்றியமையாத வொன்றாகக் கருதப்பட்டது. இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்பவர்கள் யாவரும் வானுலகத்தை எளிதில் அடையக்கூடும் என்ற நம்பிக்கை வளரலாயிற்று. மனிதன் இயற்கையில் தீயவன் அல்லன் என்றும், எத்தகைய மனிதனும் இறைவனது அருளால் ஆன்மீக விடுதலையைப் பெற முடியும் என்றும் மக்கள் பரவலாக எண்ணலாயினர். பிந்திய இடைக்கால சமயக் கொள்கைகளின் சாராம்சத்தைப் பீட்டர் லொம்பார்ட் (Peter Lombard) என்பார் எழுதிய ''ஸெண்டன்ஸஸ்'' (Sentences) என்ற நூலில் காணலாம். அர்ச். தாமஸ் அக்குவினாஸ் (St. Thomas Aquinas) என்னும் பாதிரியார் எழுதிய ஸம்மரி ஆஃப் தியாலஜி (சமய சித்தாந்தத்தின் சுருக்கம்- Summary of Theology) என்ற நூலில் புதிய கிறிஸ்தவ மதக் கொள்கைகள் பேசப்படுகின்றன. 1215 ஆம் ஆண்டில் கூடிய திருச்சபை மன்றமும் ஏனைய திருச்சபை மன்றங்களும் அவ்வப் போது வெளியிட்ட கோட்பாடுகள் இடைக்கால சமய சித்தாந்தத் தைத் தெள்ளிதின் உணர்த்துகின்றன. மத குருமார்களின் மகிமை இவற்றால் பெரிதும் வளரலாயிற்று. சாதாரண மக்களுக்குப் புறம்பான ஒரு சில தெய்வீக சக்திகளைக் குருமார்கள் பெற்றிருந்தனர் என்றும், அவற்றின் மூலமாக அவர்கள் பாவி களைக் கடைத்தேற்ற முடியுமென்றும் ஒரு நம்பிக்கை மக்களி டையே வளரலாயிற்று. புனிதச் சடங்குகள் பற்றியும் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டன. சடங்குகளைச் செய்தால் தான் கடவுளின் அருள் கிட்டும் என்ற நம்பிக்கை வளரலாயிற்று. சடங்குகள் புனிதமானவையாதலால் அவற்றை யார் வேண்டு மானாலும் செய்விக்கலாம் என்ற நம்பிக்கை வளர்ந்தது. ஒழுக்கம் என்பது மருந்துக்கும் இல்லாத குருமார்கள் கூட சடங்கு களைச் செய்ய உரிமையுள்ளவர்களாகக் கருதப்பட்டனர். இங்ஙனம் குருமார்களின், ஆதிக்கம் சடங்குகளின் ஆதிக்கம் இவ்விரண்டும் சேர்ந்து இடைக்காலத் திருச்சபையைப் பெரிதும் மாற்றியமைத்து விட்டது. புறச் சடங்குகளைப் போற்றிய அளவிற்கு மக்கள் அகப் பண்பினை வளர்க்கத் தவறி விட்டனர்.

மேலே கூறப்பட்ட இருவகை கோட்பாடுகளோடு வேறு இரண்டு புதிய கொள்கைகளும் இடைக் காலச் சமயத் துறையில் புகுந்து அதை ஊக்குவித்தன. ஒன்று பகுத்தறிவு வாதம்

(Rationalistic Philosophy), மற்றொன்று மனிதாபிமான மனப் பான்மை (Humanistic Attitude). துறவிகளும், பக்தர்களும் தங்கள் மோட்சத்தையே பெரிதாகக் கொண்டு வாழ்வது சுய நலமென்றும் மக்களுடைய பல்லாயிரக் கணக்கான துன்பங்களைக் கண்டு மனமிரங்கி அவர்களது குறை களையப் பாடுபடுவதே துறவிகளின் கடமையென்னும் ஒரு கருத்து வளரலாயிற்று. இறைவனும், கிறிஸ்துவும், சாதாரண மக்களுக்கு வெகு தூரத்தி லிருப்பவர்கள் என்றும், ஆனால் சமயப் பெரியார்களும், துறவி களும், கன்னிமேரியும் பாமர மக்களின் குறை தீர்க்க ஓடோடியும் வருபவர்கள் என்றும் ஒரு நம்பிக்கை வளர்ந்தது. கன்னிமேரி வணக்கம் மக்களின் மனிதாபிமான உணர்ச்சியில் இருந்தே தோன்றியது. தனது மகனைப் பறிகொடுத்த அத்தாய் துன்பத்தின் எல்லையைக் கண்டிருப்பாளாதலால் மக்களுடைய துயரங்களை அவர் ஒருவரே உணரக்கூடும் என்று மக்கள் நம்பினர். 'நமது துயர் நிறைந்த சீமாட்டி, (Our Lady of Sorrows) என்றும், 'மங்கையர் திலகம்' (Ideal woman) என்றும், 'வாழ்க்கையின் தேவதை' (Goddess of Life) என்றும் அவரை மக்கள் பலவாறு துதித்தனர்.

திருச்சபை அமைப்பிலும் இக் காலத்தே ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டன. போப்பாண்டவரை குருமார்களின் சபை ஒன்று தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நியதி கி. பி. 1509-ல் ஏற்பட்டது. அத்தேர்தல் தொகுதியில் ஆரம்பத்தில் ரோமாபுரியிலிருந்த ஒருசில குருமார்களே இடம் பெற்றனர். நாளடைவில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து அக்குருமார்கள் நியமிக்கப் பட்டனர். தேர்தல் முறை அமுலுக்கு வருமுன்பு பேரரசர்களும், பிரபுக்களும் சேர்ந்தே போப்பாண்டவர்களை நியமித்தனர். இம்முறை செயலாக்கப்பட்ட பின்னர், திருச்சபையில் அரசாங்கம் செலுத்தி வந்த கட்டுப்பாடு நீங்கியது. இதனால் போப்பாண்ட வருடைய தனித் தலைமை ஓங்கியது. நாடெங்கும் உள்ள பிஷப்புகள், ஆர்ச் பிஷப்புகள் யாவர் மீதும் தனியாதிக்கம் செலுத்தும் உரிமையைப் போப்பாண்டவர் பெற்றார். போப் பாண்டவர் முதலாம் நிக்கோலாஸ் (Nicholas I) என்பார் இத்தகைய சர்வாதிகாரத்தை முதன் முதலாகச் செயல் படுத்தினார். அவருக்குப் பின் வந்த போப்பாண்டவர்கள் பலஹீனர்களாய் இருந்தமையால் ஆதிக்கம் செலுத்த இயல வில்லை. ஏழாம் கிரிகரி (Gregory VII 1073-1085 A D.) காலத்தும், மூன்றும் இன்னஸென்ட் (Innocent III 1198-1216) காலத்தும் போப்பாண்டவரின் தலைமை மீண்டும் தலையெடுத்தது. திருச் சபையின் அதிகாரம் குருமார்களிடையே மட்டுமின்றி, உலகியல்

மக்கள் அனைவர் மீதும் பரவியது. தமது ஆணைக்குப் பணிய மறுத்தவர்களைச் (அவர்கள் அரசர்களாயிருப்பினும்) சமய விலக்கம் (excommunication) செய்தனர். அதனல் திருச்சபையின் சேவைகளும் சலுகைகளும் ஒருவருக்கு முற்றிலும் மறுக்கப் பட்டன. சமய விலக்கம் செய்யப்பட்டோருக்கு எவ்விதச் சடங்குகளையும் செய்ய குருமார்கள் முன்வரார். அவர் இறப்பினும் கூட அவரது ஆன்மா அமைதியடைய குருமார்கள் ஜபம் செய்ய முன்வரார். வைதீகக் கிறிஸ்தவர்கள் அவரோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளார். இதோடு கூட தனக்குப் பணியாத வர்களைக் கீழ்ப்படியச் செய்யப் போப்பாண்டவர்கள் தடையாணை என்ற முறையையும் (Interdict) கையாண்டனர். ஓர் அரசனை அல்லது பிரபுவைப் பணியவைக்க நினைத்த போப்பாண்டவர் அன்னுருடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடு அனைத்தின் மீதும் தடையாணையை விதித்து விடுவார். அதன் விளைவாக அந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சமயச் சலுகைகள் மறுக்கப்படும். அதனல் மக்கள் வெகுண்டு திருச்சபைக்குப் பணியும்படி மன்னனை வற் புறுத்துவர் என்பது போப்பாண்டவரின் நம்பிக்கை.

உண்மையில் இவ்விரண்டு முறைகளினலும் போப்பாண்ட வர்கள் தனியாதிக்கத்துடன் திகழ்ந்தனர். ஆனல் 13ஆம் நூற் ருண்டுக்குப் பின்னர் இத்தகைய ஆதிக்கம் தளர்ந்தது. 1215ஆம் ஆண்டில் திருச்சபை மன்றத்தால் (Council) இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆண்டுக்கொருமுறை பாதிரியாரிடம் சென்று பாவமன்னிப்புக் கோர வேண்டுமென்றும், பாதிரியார் விதிக்கிற தண்டனையை அனுபவித்த பின்னரே அவர் புனிதத் திருவிருந்துச் சடங்கில் (Eucharist) கலந்து கொள்ள முடியுமென்றும் ஏற்பட்டது. இதன் மூலம் ஒரு குறிப் பிட்ட பாரிஷில் (Parish) வாழ்ந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அதன் மதகுரு ஓர் அறங்காவலராக மாறினர். போப் ஆண்டவரின் தனி ஆதிக்கம் பெரிதும் குறைந்தது.

## திருச்சபைக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்ட போராட்டம்
## (The Struggle between the church and the state)

திருச்சபைக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்ட கடும் போராட்டமானது இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். பதினேரும் நூற்ருண்டு முதல் பதினன்காம் நூற்ருண்டு வரை விட்டு விட்டு நடைபெற்ற இப்போராட்டத்தில் சில சமயங்களில் போப்பாண்டவரும், இன்னும் சில வேளைகளில் பேரரசரும் வெற்றிப் பெற்ருர்கள்.

இறுதியில் அரசு தனது இறைமையை நிலைநாட்டியது. போப்பாண்டவர் உலகியல் துறையில் அரசர்களுக்குக் கட்டுப்பட்டவரே என்ற கொள்கை வென்றது. கத்தோலிக்க சமயத் துறையைப் பொறுத்த வரையில், போப்பாண்டவர் தனி ஆதிக்கம் பெற்றார்.

## போராட்டத்துக்கான காரணங்கள்

இடைக்கால ஐரோப்பாவில் தூயரோமானியப் பேரரசும், கத்தோலிக்கத் திருச்சபையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தன. பதினோராம் நூற்றாண்டளவில் இரு நிறுவனங்களுமே வலிமையும் செல்வாக்கும் பெற்று விளங்கின. பத்தாம் நூற்றாண்டில், போப்பாண்டவராயிருந்தவர், குடிவெறியில் திளைத்த ஒரு சிறுவனாவார். ரோமாபுரிக் கிறிஸ்தவர்களிடையிலேயே பல பிளவுகள் காணப்பட்டன. இவற்றால் திருச்சபையின் கௌரவம் பெரிதும் குன்றியது. ஆனால் பதினோரும் நூற்றாண்டில் திருச்சபையின் தலைமையைப் பெற்றவர் ஹில்டிபிராண்ட் (Hildebrand) எனும் பெயர் கொண்ட பெருமகனாவார். அவர் நல்ல ஒழுக்க சீலர். குளுக்னி (Clugny) மடத்தில் அப்பழுக்கற்ற வாழ்க்கை வாழ்ந்து புகழ் பெற்றவர். அவர் ஏழாம் கிரிகரி (Gregory VII) என்ற பெயருடன் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, போப்பாண்டவர் பதவிக்கே புது மதிப்பு ஏற்படலாயிற்று. அதே போன்று தூய ரோமானியப் பேரரசும் இக்காலத்தே ஆட்டோ (Atto) போன்ற மன்னர்களால் புத்துயிர் பெற்றது. பேரரசர் தன்னைப் போப்பாண்டவரை விட உயர்ந்தவர் என எண்ணலானார். இங்ஙனம் பேரரசரும், போப்பாண்டவரும், தம்முள் யார் உயர்ந்தவர் என்பது பற்றிச் சச்சரவிடலாயினர். போப்பாண்டவர் சமயத்துறையிலும், பேரரசர் உலகியல் துறையிலும் தனித்தலைமை கொண்டாடினர். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் அதிகார வரம்பை விரிவாக்கிக் கொண்டே சென்றனர். அவர்தம் அதிகாரமானது எங்கு தொடங்கி எங்கு முடிய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. சமாதான முறையில் ஏற்பட்ட இச் சச்சரவு நாளடைவில் பெரும் போராக வடிவெடுத்தது.

போப்பாண்டவருக்கும் பேரரசருக்குமிடையே நிலவ வேண்டிய உறவுபற்றி மூவ்வகையான கொள்கைகள் இடைக்கால ஐரோப்பாவில் உலவின. ஒரு கொள்கையின்படி போப்பாண்டவரும், பேரரசரும் சுயேச்சையான அதிகாரமுடையவர்கள். உலகியல் துறையில் பேரரசரும், சமயத்துறையில் போப்பாண்

டவரும் தனித்தலைமை பெற்றவர்கள். மக்களின் புற உடலை மன்னரும், ஆன்மாவைப் போப்பும் ஆளவேண்டும். அதற்கெனவே அவர்கள் இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்பதாகும். இரண்டாவது கொள்கையின்படி உலகியல் துறையில் பேரரசர், போப்பாண்டவரைக் காட்டிலும் அதிக அதிகாரமுடையவர். கிறிஸ்து பெருமானே ''சீசருடைய பொருள்களைச் சீசருக்கே செலுத்துங்கள்'' என்று கூறியதோடு, யாவரும் பேரரசருக்குக் கப்பம் கட்ட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டார். எனவே உலகியல் துறையில் அரசர்களின் இறைமையைக் கிறிஸ்துவே ஒப்புக் கொண்டுள்ளார். மற்றும் ஆட்டோ போன்ற பேரரசர்கள், போப்புகளுக்கு நிலங்களை மானியமாக வழங்கியுள்ளனர். எனவே போப்புகள், பேரரசரின் மானியதாரர்களே (Vassals) அன்றி வேறல்லர். மூன்றாவது கொள்கையின்படி, சமயத்துறை, உலகியல்துறை இரண்டுக்கும் போப்பே தனித் தலைமை வாய்ந்தவர். போப்பாண்டவர் சூரியனையும், பேரரசர் சந்திரனையும் ஒத்தவர்கள். இரண்டையும் இறைவன் படைத்தாரெனினும், சந்திரன் சூரியனைவிடத் தாழ்ந்தது. ஏனெனில் அதற்கு சுயமான ஒளி இல்லை. சூரியனிடமிருந்து அஃது ஒளியைப் பெறுகிறது. அதே போன்று அரசர்களின் அதிகாரங்கள் போப்பாண்டவர்களிடமிருந்தே பெறப்பட்டவையாகும், எனவே போப்பாண்டவர் மன்னரை விட உயர்ந்தவர். இம்மூன்று கொள்கைகளில் தமக்குச் சாதகமான ஏதாவதொன்றைப் பற்றிக் கொண்டு இருவரும் தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டனர்.

போப்பாண்டவர் வெறும் சமயக் குரவராக மட்டும் இல்லை. காட்டுமிராண்டிகள் இத்தாலியைத் தாக்கியபோது அவர்கள் நாட்டைக் காக்க பல முயற்சிகளை மேற்கொண்டனர். குலைந்து போன ஆட்சித்துறை அமைப்பை சீர்படுத்தினர். இவற்றின் விளைவாக அவர்களுக்குப் பெரும் பெரும் நிலபுலங்கள் பரிசாகக் கிடைத்தன. அவற்றையெல்லாம் அவர்கள் நிலமானியப் பிரபுக்கள் போன்று ஆண்டு வந்தனர். தங்களது ஆட்சிக்குட்பட்ட நிலபுலங்களில் பேரரசர்கள் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் தூய ரோமப் பேரரசர்களோ வெனிஸ், இத்தாலி ரோம் முதலிய எல்லா நாடுகளும் சார்லஸ் காலத்திலிருந்து தங்களது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருந்தமையால் போப்பாண்டவரும் தங்களுக்குட்பட்ட மானியதாரர்களே என வாதாடினர்.

போப்பாண்டவரின் அதிகாரங்கள் உலகியல் துறையில் ஊடுருவிச் சென்றிருந்ததைப் போன்றே பேரரசரின் அதிகாரங்கள்

சமயத்துறையில் விரவிக் கிடந்தன. தங்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளில் மதகுருமார்களை நியமிக்கும் அதிகாரங்களை அவர்கள் பெற்றிருந்தனர். குருமார்களின் சின்னங்களான மோதிரத்தையும், ஆட்சிக்கோலையும் (Crozier) அவர்களே வழங்கினர். இங்ஙனம் உலகியல்துறைத் தலைவரொருவர் சமயச் சின்னங்களை வழங்குதல் தகாது எனப் போப்பாண்டவர்கள் கண்டனம் தெரிவித்தனர். பிஷப்புகளை நியமிக்கும் உரிமை தமக்கே உரியது என அவர்கள் வாதாடினர். மன்னர்கள் தங்களிடம் சேவைபுரியும் திறமைமிக்க பிஷப்புகளைப் போப்பாண்டவரின் கட்டுப்பாட்டுக்குட்படுவதை எதிர்த்தனர். பிஷப்புகளின் அதிகாரச் சின்னங்களை வழங்கும் உரிமை யாருக்கு என்பதில் இருவரும் சச்சரவிட்டுக் கொண்டனர்.

போப்பாண்டவர்கள் ஒரு சில சலுகைகளையும் தனியுரிமைகளையும் வற்புறுத்தினர். சமயகுருமார்கள் தனிப்பட்ட நீதி மன்றங்களிலேயே விசாரிக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறினர். ஆனால் குருமார்கள் பெருங்குற்றங்களைச் செய்தால் அரசருக்குச் சொந்தமான உலகியல் நீதி மன்றங்களிலேயே விசாரிக்கப்பட வேண்டுமென பல அரசர்கள் கட்டுரைத்தனர். இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இவ்வுரிமை பெரிதும் மன்னர்களால் கொண்டாடப்பட்டது. மற்றும் குருமார்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், மக்களிடமிருந்து டைத் என்னும் வரியை வசூலிக்கும் உரிமை திருச்சபைக்கு உண்டென்றும், போப்பாண்டவர்கள் கொண்டாடிய சலுகைகளைப் பல மன்னர்கள் தர மறுத்தனர்.

மற்றும் இத்தாலிய மண்ணில், இத்தாலிய மொழி இன்னதென்றே அறியாத ஜெர்மானியப் பேரரசர் ஆதிக்கம் செலுத்துவதை இத்தாலிய மக்கள் அடியோடு வெறுத்தனர். இவ்வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்டு போப்பாண்டவர் பேரரசரின் தலைமையை எதிர்க்க முன்வந்தார். அவருக்கு இத்தாலியர் அனைவரும் முழுமனதோடு ஆதரவுதந்தனர். முக்கியமாக வாணிபத் துறையில் முன்னேறி பெருஞ் சீரும் சிறப்புமுற்றுத் திகழ்ந்த நகர குடியரசுகளான வெனிஸ், பிளாரன்ஸ், மிலான், ஜெனோவா போன்ற பட்டணங்கள் ஜெர்மானியப் பேரரசிடமிருந்து விடுபட விரும்பி, அதற்காகவே போப்பாண்டவரை ஆதரித்தனர். நேப்பில்ஸ், சிசிலி போன்ற பகுதிகளில் குடியேறிய நார்மானியர்கள் மதபக்தி மிக்கவர்கள். அவர்கள் போப்பாண்டவரை ஆதரிப்பதைத் தங்களது தெய்வீகக் கடமையாகக் கருதினர். பொதுவாகவே இத்தாலிய மக்கள் சமயப் பற்று மிகுந்தவர்கள்.

மறுமையில் இன்பம் பெற வேண்டுமானுல் போப்பாண்டவரை ஆதரித்தாலன்றி முடியாது என்று நம்பியவர்கள். உடலைக் காட்டிலும் ஆன்மா எவ்வாறு முதன்மை வாய்ந்ததோ அங்ஙனமே போப்பாண்டவரும் அரசரை விட உயர்ந்தவர் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை யாகும். இத்தகைய நம்பிக்கைகளைத் துணையாகக் கொட்டதாலேயே, படை பலமும் பொருள் பலமும் இல்லாத போப்பாண்டவர், பேரரசையே எதிர்க்கத் துணிவு பெற்றுர் எனலாம்.

## போப்பாண்டவர் ஏழாம் கிரிகரியும் ஹில்டி பிராண்டைன் இயக்கமும் (Pope Gregory VII and the Hildebrandine movement)

அரசு திருச்சபையின் ஆதிக்கப் போராட்டம் ஏழாம் கிரிகரி என்ற போப் பாண்டவரின் காலத்தில் தான் (1073-1085 கி. பி) நன்கு சூடு பிடித்தது. ஏனெனில் அவர் குளுக்னி மடாலயத்தைச் சேர்ந்தவர். குளுனியாக்குகள் (Cluniacs) தூய்மை, பிரமசரியம், கட்டுப்பாடு முதலிய கொள்கைகளைத் துறவிகள்பால் வற்புறுத்தியவர்கள். அதோடு திருச்சபையானது, போப் பாண்டவரது தலைமையில் சுதந்திரமாக இயங்கிலைன்றி கிறிஸ்துவின் போதனைகள் உலகில் நிலை பெறு எனும் நம்பிக்கை கொண்டவர்கள். இந்த நம்பிக்கைக்கு கிரிகரி தமது அதிகார பூர்வமான ஆதரவை நல்கினுர். போப்பாண்டவரின் ஆதிக்கம் பேரரசரின் அதிகாரத்தை விட உயர்ந்ததென்றும், கிறிஸ்தவ நாடுகள் அனைத்தும், போப்பாண்டவரின் தலைமையின் கீழ் ஒரு பெரும் பேரரசாக அமைய வேண்டுமெனவும் அவர் அறை கூவலானுர்.

தமது எண்ணத்தை நிறைவேற்ற கிரிகரி இரு பெரும் சீர் திருத்தங்களைத் திருச் சபையில் புகுத்தினுர். குருமார்கள் அனைவரும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனவும் உலகியல் பிரபுக்களிடமிருந்து எந்த பிஷப்பும் பணம் கொடுத்துப் பதவியைப் பெறக் கூடாது (Simony) எனவும் அவர் ஆணையிட்டார்; முதலாவது சீர்திருத்தத்தின் மூலம் தமக்கென வாழ்நாள் முழுதும் விசுவாசமாயிருக்கக் கூடிய ஒரு துறவிப் படையை அவர் உண்டாக்க எண்ணினுர். இரண்டாவது சீர்திருத்தத்தின் மூலம், பிஷப்புகளை உலகியல் பிரபுக்களின் ஆதிக்கத்தினின்றும் விடுவித்து தமது முழு ஆதிக்கத்தின் கீழ் கொணர விரும்பினுர். தமது ஆணையை மீறிய தனிப்பட்ட நபர்களை அவர் சமய விலக்கம் (excommunication) செய்யப் போவதாகவும், தனக்கே கீழ்படிய

மறுத்த நாடுகள் அல்லது நகரங்களையும் அங்ஙனமே சமயத்தின் பணிகளிலிருந்து விலக்கிவைக்கும் தடை ஆணைக்கு (interdict) உட்படுத்தப் போவதாகவும் பயமுறுத்தினர். மத பக்தி மிகுந்த அக்காலத்தில் போப்பாண்டவரின் இத்தகைய தண்டனைகளை ஏற்கின்ற துணிவுள்ளவர்கள் மிகமிகக் குறைவானவர்களேயாம். இத்தகைய முறைகளால், உலகத்திலுள்ள மன்னர் களெல்லாம் தலைவணங்கும் தனித் தலைவராக கிரிகரி விளங்க ஆசைப் பட்டார்.

இத்தகைய ஆசையை நிறைவேற்றுவான் வேண்டி, கிரிகரி கி. பி. 1075 இல் ஓர் ஆணையை வெளியிட்டார். பிஷப்புகளையும் குருமார்களையும், பேரரசரோ அன்றி அவரது பிரபுக்களோ எவரும் நியமிக்க கூடாதென்றும், அப்படி நியமித்தால் திருச்சபையிலிருந்து விலக்கப் பெறுவர் என்றும் அவ்வாணை அறிவித்தது. இதைக் கண்ட பேரரசரான நான்காம் ஹென்றி (1056-1106), கிரிகரியைக் கபட சந்யாசி எனவும், போப்பாண்டவர் பதவிக்குத் தகுதி யற்றவர் எனவும் வர்ணித்து, அவரைப் பதவியினின்றும் தாம் விலக்கி விட்டதாக அறிவித்தார். உடனே கிரிகரி, ஹென்றியைத்தான் பதவியினின்றும் நீக்கி விட்டதாயும், மக்கள் யாவரும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டிய தில்லை எனவும் அறிவித்தார். ஹென்றி அச்சமயம் பிரபுக்கள் பலரது எதிர்ப்புகளுக்கு ஆளாகி இருந்தார். அப் பிரபுக்கள் எங்கு போப்பாண்டவரோடு சேர்ந்து கொண்டு தம்மை எதிர்ப்பார்களோ எனப் பயந்து விட்ட ஹென்றி போப்பாண்டவரிடம் மன்னிப்பு கோர எண்ணி அவர் தங்கியிருந்த கனோசா (Canossa) நகரை நோக்கி விரைந்தார். ஆனால் போப்பாண்டவர் அவரைப் பார்க்க மறுத்து விட்டார். ஹென்றி மூன்று நாட்கள் வரை போப்பாண்டவரின் கோட்டை வாயிலில், நடுங்கும் குளிரில் மிதியடி யின்றி பனிமீது நின்று தவங்கிடந்து போப்பாண்டவரின் கருணைக்காகக் காத்திருந்தார். மூன்று நாட்களுக்குப் பின்னரே கிரிகரியின் மனம் இளகியது. ஹென்றியை உள்ளே வர அநுமதி தந்தார். உள்ளே சென்ற ஹென்றி, போப்பாண்டவரிடம் மண்டியிட்டு மன்னிப்பு கோரினர். போப்பாண்டவரும் அவரை மன்னித்து விட்டதாக மனமுவந்து கூறினர்.

இங்ஙனம் போப்பிடம் சரணகதி அடைந்து தமது பதவியைத் திரும்பப் பெற்ற ஹென்றி தான் அடைந்த அவமானத்தைத் துடைக்கப் போப்பாண்டவரைப் பழிக்குப் பழி வாங்க எண்ணினர். தம்மை எதிர்த்த பிரபுக்களோடு ஒருவாறு சமரசம் செய்துகொண்ட பின்னர் கி. பி. 1084 அவர் ரோமாபுரியைப்

படையெடுத்தார். அழகிய அப்பட்டணம் தீக்கிரையாக்கப் பட்டது. நேப்பில்ஸ் நாட்டு நார்மானியர்களின் உதவியால் போப்பாண்டவர் சாலர்னே (Salerno) என்னும் இடத்திற்குத் தப்பி ஓடினர். கி. பி. 1085ல் அவர் அங்கே மாண்டார். கி. பி. 1106ல் நான்காம் ஹென்றியும் இறந்தார். அவருக்குப் பின் அரியணை ஏறிய ஐந்தாம் ஹென்றியின் காலத்திலும் மேற் கண்ட போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இரண்டாம் காலிக்ஸ்டஸ் (Calixtus II) ஐந்தாம் ஹென்றியுடன் கி.பி. 1122ல் ஒரு தற்காலிக உடன்பாட்டைச் செய்து கொண்டார். அது வோர்ம்ஸ் நகர சமய உடன்பாடு (Concordat of Worms) என அழைக்கப்பட்டது. அதன்படி பிஷப்புகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் திருச்சபைக்கே வழங்கப்பட்டது. தேர்தலின்போது அரசரின் பிரதிநிதி ஒருவர் தேர்தல் களத்தில் இருக்க வேண்டு மெனவும் தேர்தல் பற்றி ஏதேனும் வழக்குகள் ஏற்பட்டால் அதை, அவரிடம் தெரிவிக்கவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது. பிஷப்புக்களுக்குரிய அதிகாரச் சின்னங்களான மோதிரத் தையும் ஆட்சிக்கோலையும் வழங்கும் உரிமையைப் போப்பாண் டவர் பெற்றார். பேரரசரிடமிருந்து பெற்ற நிலங்கள் பற்றிய விவகாரங்களில் பிஷப்புகள் பேரரசருக்கே அடிபணிய வேண்டு மெனவும், பதவிச் சின்னங்களை அவரிடமிருந்தே பெறவேண்டு மெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பு இதே போன்றதொரு உடன்பாடு ஆங்கில மன்னரான முதலாம் ஹென்றிக்கும், ஆங்கில ஆர்ச் பிஷப்பான ஆன்சலமுக்கும் (Anselm) இடையே ஏற்பட்டதென்பது ஈண்டு நினைவு கூர்தற்குரிய சுவையான வரலாற்று நிகழ்ச்சியாகும்.

### கிரிகரிக்குப் பின் போராட்டம்

பனிரெண்டாம் நூற்றாண்டில் மேற்கண்ட போராட்டம் மீண்டும் துவங்கியது. போப்பாண்டவர் நான்காம் ஹார்டியன் (Hadrian IV) என்பார் கி. பி. 1157ல் பிரடரிக் பார்பரோசா (Frederick Barbarossa) எனும் பேரரசருக்கு எழுதிய கடித மொன்றில், பேரரசு என்பது போப்பாண்டவரால் பேரரசருக்கு வழங்கப்பட்ட மானியமே அன்றி வேறில்லை என்றும் பேரரசர் தமது அதிகாரத்துக்குட்பட்டவரே என்றும் குறிப்பிட்டிருந்தார். பேரரசர் அதற்குப் பதிலாக தமது பேரரசானது இறைவனால் அளிக்கப்பட்ட பரிசு என்றும், போப்பாண்டவரால் இடப்பட்ட பிச்சை அல்ல என்றும் எழுதினர். அதோடு இதாலியை நோக்கிப் படையெடுத்தார். போப்பாண்டவரும் அவரது சகாக்களான வட

இதாலிய நகரங்களின் அதிபர்களும் சேர்ந்து லொம்பார்ட் லீக் (Lombard League) எனும் கூட்டுறவை ஏற்படுத்தினர். அதன் படைகள் பேரரசரை லெக்னேனோ (Legnano) எனுமிடத்தில் கி. பி. 1176இல் தோற்கடித்தனர். பிரடெரிக் அவ்வமயம் போப்பாண்டவராக இருந்த மூன்றும் அலெக்ஸாந்தரிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதோடு வட இதாலியில் தமக்கிருந்த ஆதிக்கத்தையும் இழந்தார்.

பிரடெரிக்கின் மைந்தரான ஆறும் ஹென்றி நேபிள்ஸ் நாட்டு இளவரசியை மணந்தார். அதன் மூலம் ஜெர்மனி, நேபிள்ஸ், சிஸிலி முதலிய நாடுகளின் அதிபதியாகத் திகழ்ந்தார். 1197இல் அவர் இறந்தபோது அவரது மகனை பிரடெரிக் பட்டத்திற்கு வந்தார். வயது வராத சிறுவனை பிரடெரிக்கை போப்பாண்டவர் மூன்றும் இன்னொசென்ட் (Innocent III) அரசரென அங்கீகரிக்க மறுத்தார். தன்னை சூரியனுக்கும் பேரரசரைச் சந்திரனுக்கும் ஒப்பிட்டு தாமே உயர்ந்தவர் எனக்கூறிக் கொண்டார். பிரடெரிக்கின் போட்டியாளரான ஆட்டோவை (Otto) ஆதரித்தார். ஆட்டோ பட்டத்துக்கு வந்தவுடன், அவர் நேபிள்ஸ் நாட்டுக்கு உரிமை கொண்டாடியதால் போப்பாண்டவர் அவரைப் பதவியினின்றும் நீக்கிவிட்டு இரண்டாம் பிரடெரிக் என்பவரைப் பேரரசராக நியமித்தார். ஜெர்மனியிலேயே தான் தங்கிவிடப் போவதாகவும் அப் நாட்டிற்கு வரப்போவதில்லை என்றும் அவர் உறுதி தந்திருந்தார். ஆனால் அதற்கு மாறாக அவர் நேபிள்ஸ் பாப்பட்டிலேயே பெரும்பான்மையான நாட்களைக் கழித்தார். இதைக்கண்ட போப்பாண்டவரான நான்காம் இன்னொசென்ட், பேரரசரைப் பதவியில் இருந்து விலக்கி விட்டதாக அறிவித்தார். தமது பதவி இறைவனால் அளிக்கப்பட்டதென்றும் அதிலிருந்து விலக்கப் போப்பாண்டவருக்கு உரிமை இல்லையென்றும் அறிவித்துவிட்டு பிரடெரிக் தொடர்ந்து பதவியில் இருந்தார்.

இரண்டாம் பிரடெரிக்கின் பெயரரான கான்ராடின் (Conradin) காலத்தில்தான் திருச்சபை அரசு போராட்டம் ஒருவாறு ஓய்ந்தது. நான்காம் அர்பன் (Urban IV) எனும் போப்பாண்டவர், பேரரசருக்கு எதிராகப் படையெடுக்குமாறு பிரெஞ்சு அரசரை வேண்டினர். அதற்குக் கைம்மாறாக நேப்பிள்ஸையும் சிசிலியையும் அளிப்பதாக உறுதி கூறினர். பிரெஞ்சுப் படைகள் ஆஞ்சு கோமகன் சார்லஸின் தலைமையில் சென்று, பேரரசுப் படைகளை இதாலியில் தோற்கடித்தன. நேப்பிள்ஸ் நகரச் சந்தையில் கான்ராடினின் சிரம் துண்டிக்கப்பட்டது.

(1268 கி. பி.) அவருடைய மரணத்தோடு போப்பாண்டவரைத் தொடர்ந்து எதிர்த்து வந்த ஜெர்மானிய ஹோஹன்ஸ்டாபன் (Hohenstaufen) வமிசம் ஒழிந்தது. தனது எதிரிகள் பூண்டற்றுப் போயினர் என போப்பாண்டவர் மார்தட்டினார். ஆனால் அவர் தனது சுயநலத்தால் பேரரசரை ஒழிக்கவில்லை என்பதை மறந்து விட்டார். இன்றைக்கு நண்பர்களாயிருப்பவர்கள் நாளைக்குப் பகைவர்களாக மாறக்கூடும் என்பதையும் அவர் உணரவில்லை. விரைவிலேயே பிரெஞ்சுப் பேரரசருக்கும் அவருக்கும் பகைமை ஏற்பட்டது. வட இதாலிய நகர அரசுகள் அவரைக் கைவிட்டன. ஏனெனில் பேரரசின் பிடியினின்றும் விடுவித்துக்கொள்ளவே அவைகள் போப்பாண்டவரோடு சேர்ந்தன. தங்களது நோக்கம் நிறைவேறியதும் அவை போப்பினை உதாசீனம் செய்தன. நேப்பில்ஸிலும், சிசிலியிலும் வாழ்ந்த மக்கள் தங்களைப் பிரெஞ்சுக் காரர்களிடம் ஒப்படைத்த போப்பாண்டவரை வெறுக்கலாயினர். இங்ஙனம் போப்பாண்டவர் திடீரெனத் தான் தனி மரமாய் நிற்பதை உணர்ந்தார்.

இந்நிலையில் எட்டாம் போனிஃபேஸ் (Boniface VIII) எனும் போப்பாண்டவர் (1294—1303 கி. பி.) பிரெஞ்சு அரசரோடு அநாவசியமாக மோதிக்கொண்டார். தனது அனுமதியின்றி குருமார்களிடமிருந்து அரசர் வரி வசூலிக்கலாகாது என ஓர் ஆணையைப் பிறப்பித்தார் (1296). இதை அறிந்த பிரெஞ்சு மன்னரான நான்காம் பிலிப் (Philip IV) போப்பாண்டவருக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களைத் தடை செய்தார். பிரெஞ்சு திருச்சபையின் வருமானமனைத்தும் பிரான்ஸை விட்டு வெளியேறலாகாது என ஆணையிட்டார். உடனே போப்பாண்டவர், பிரெஞ்சு குருமார்கள், அவசியமானபோது அரசருக்குத் தாமாகவே முன்வந்து நன்கொடை வழங்கலாம் என அறிவித்தார். 1302-இல் போப்பாண்டவர், சமய குருமார்களை விசாரிக்கும் உரிமை பிரெஞ்சு அரசருக்கில்லை என அறிவித்து, ஒரு பிஷப்பை இராஜ துரோகக்குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் விசாரிக்க எத்தனித்த குற்றத்துக்காக ரோமாபுரி நீதிமன்றத்துக்கு வந்து தனது விசாரணைக்குட்படுமாறு பிலிப்புக்குக் கட்டளையிட்டார். பிரெஞ்சுப் பேரரசரை விசாரிக்கும் தகுதி போப்பாண்டவருக் கில்லை என பிரெஞ்சு சட்டசபை, பிலிப்பின் தூண்டுதலின் பேரில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. உடனே போப்பாண்டவர் பிரெஞ்சு மன்னரைத் தாம் சமய விலக்கம் செய்துவிட்டதாக அறிவித்தார். ஆனால் அவரது ஆணைக்குக் கீழ்படிய பிரெஞ்சு அரசர் மறுத்தார். அவரால் தூண்டப்பட்ட பணியாள் ஒருவன் போப்பாண்டவரைக் கைப்பற்றி ஆநக்னி (Anagni) நகருக்குத்

தூக்கிச் சென்று கழுதையின் முதுகுமீது வைத்துக்கட்டி, ஊர்வலம் செய்து அவமானப்படுத்தினன். ஆநக்னி மக்கள் தலையிட்டுப் போப்பாண்டவரை விடுவித்தனர். ஆனால் எண்பது வயதைத் தாண்டிவிட்ட போப்பாண்டவர் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க இயலாமல் உடனே இறந்து போனார் (1303). அவருக்கப்புறம் தேர்ந்தெடுக்கப்பட்ட போப்பாண்டவர் பிரெஞ்சு அரசரின் உதவியாலேயே அப்பதவியைப் பெற்றார். எனவே பிரெஞ்சு நாட்டு எல்லைக்கருகிலுள்ள அவிக்னன் (Avignan) எனும் நகருக்குத் தமது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டு, பிரெஞ்சு மன்னரின் சொற்படி கேட்டு நடந்து வந்தார். 1305 முதல் 1377 வரை போப்பாண்டவர்கள் பிரெஞ்சுக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு வாழ்ந்தனர். இக்காலத்தைப் 'பாபிலோனிய சிறைவாசம்' (Babylonish Captivity) எனக் கத்தோலிக்கர்கள் அழைப்பர். 1378 இல் போப்பாண்டவர் இதாலிக்குத் திரும்பி வந்தபோது, இதாலிய மக்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, வேறொரு இதாலியரைப் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இங்ஙனம் பிரெஞ்சுக்காரரும், இதாலியரும் வெவ்வேறு போப்புகளை ஆதரித்ததால், திருச்சபை தனது கட்டுக்கோப்பை இழந்தது. இதையே 'பெரும்பிளவு' (Great Schism) எனத் திருச்சபையினர் கூறுவர். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல, திருச்சபையில் ஏற்பட்ட பிளவைக் கண்டு அதனோடு போட்டி போட்ட ஐரோப்பியர்கள் உளம் பூரித்தனர். அவர்கள் ஒன்றுகூடி இரண்டு போப்புகளையும் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அறிவித்து எல்லாருக்கும் பொதுவாக ஒரு புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுத்தனர். கான்ஸ்டன்ஸ் நகரில் கூடிய மன்னர்களின் பேரவையானது (Council of Constance) இவ்வரிய பணியைச் செய்தது (1414—1418 கி. பி.). இங்ஙனம் சமயக்குரவரான போப்பாண்டவர், உலகியல் தலைவர்களான அரசர்களின் கைப்பாவையாக மாறினார். அரசு திருச்சபை ஆதிக்கப் போராட்டத்தில் அரசு வென்றது. திருச்சபை தோற்றது. ஒரு நாட்டின் தலைமையானது சட்டப்படி அமைந்த அரசரிடம் இருக்க வேண்டுமேயன்றி, போப்பாண்டவரோ அன்றி வேறெந்த வெளிநாட்டினரோ, அதில் தலையிட உரிமையற்றவர் என்ற கொள்கை நன்கு நிலைநாட்டப் பட்டது. கடவுள் பக்தி மிகுந்த இடைக்காலத் தொடக்கத்தில் இத்தகைய நிலை போப்பாண்டவருக்கு ஏற்படுமென்பதை எவரும் கனவில் கூடக் கருதியிருக்க முடியாது. ஆனால் இடைக்காலத்தினிறுதியில் அதாவது பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டில் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. போப்பாண்டவரும், பல தவறுகளைச் செய்யக்கூடிய

சாதாரண மனிதரே என்ற எண்ணம் சிறிது சிறிதாக மக்களிடையே பரவ ஆரம்பித்தது. மற்றும் தேசிய உணர்ச்சி ஒவ்வொரு நாட்டிலும் வளர ஆரம்பித்தது. கடவுள் பக்திக்குப் பதிலாகத் தேசபக்தி தலைதூக்கியது. தேசபக்தி இராஜ பக்தியாக வடிவெடுத்தது. மக்களுடைய மனதில் தேசபக்தி அல்லது இராஜ பக்தி முதலிடத்தையும், கடவுள் பக்தி இரண்டாமிடத்தையும் வகித்தது. எனவே மன்னர் நாட்டில் தந்நிகரற்ற தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டதில் வியப்பொன்றுமில்லை. குறிப்பாக இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் இத்தகைய தேசிய உணர்வு மிகுதியாக வெளிப்பட்டது.

மற்றும் இப்போரோட்டத்தின் விளைவாக மக்கள் பண்டைய ரோமானியச் சட்டங்களையும் நூல்களையும் தங்களது கொள்கைகளுக்கு ஆதாரங்கள் காட்டுவதற்காக ஊன்றிப் படித்தனர். அதனால் அறிவு வளர்ந்தது. புதிய பல அரசியல் சித்தாந்தங்கள் உருவாயின. சமையல் துறை அரசியல் துறைக்கு உட்பட்டு விட்டதால், ஐரோப்பிய நாடுகள், உலகியல் துறையில் பெரிதும் முன்னேற வழி ஏற்பட்டது.

## சிலுவைப் போர்கள்

முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் வரை விட்டு விட்டு நடைபெற்று வந்த போர்கள் இடைக் காலத்து ஐரோப்பிய நிகழ்ச்சிகளுள் மிக முக்கியமானவைகளுள் ஒன்றாகும். இதைச் சமயப் போர்கள் என்று சிலரும் அரசியல் ஏகாதிபத்தியப் போர்கள் என்று வேறு சிலரும் குறிப்பிடுவர். பாலஸ்தீனத்திலிருந்த கிறிஸ்தவ யாத்திரைத் தலங்களை முகமதியர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகவும் கீழை ரோமானியப் பேரரசை முகமதியர்களிடமிருந்து மீட்பதற்காகவுமே இப்போர்கள் முக்கியமாக நடைபெற்றன. இதில் கலந்து கொண்ட போர் வீரர்கள் தங்களது இராணுவ உடைகளில் சிலுவை அடையாளம் ஒன்றை தரித்துக் கொண்டனர். எனவேதான் அவை சிலுவைப் போர்கள் என வழங்கப் படுகின்றன. மொத்தம் எட்டு சிலுவைப் போர்கள் நடைபெற்றன. அவற்றுள் நான்குதான் மிக முக்கியமானவை. இப்போர்கள் இஸ்லாமுக்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் நடைபெற்ற போராட்டம் மட்டுமல்ல. தொன்று தொட்டு வருகின்ற கீழை மேலை நாடுகளின் அதாவது ஆசிய ஐரோப்பிய நாடுகளின் தொடர்ந்த போராட்டதின் ஒரு பகுதியாகவே இவற்றைக் கருதலாகும்.

**காரணங்கள்**

சிலுவைப் போர்களின் மிக முக்கியமான காரணங்கள் சமய சம்மந்தப்பட்டவையாகும். நாம் ஏற்கெனவே கண்டபடி இடைக் காலமானது சமய உணர்ச்சி நிறைந்தவோர் காலமாகும். மக்கள் தாங்கள் இழைத்த பாவங்களுக்குத் தக்க தண்டனை கிடைக்குமென்றும் அங்ஙனம் கிடைக்காமல் இருக்க வேண்டுமெனில் பல்வேறு விதமான விரதங்களைக் கடைப் பிடிக்க வேண்டுமென்றும் உறுதியாக நம்பிய காலமது. பாவங்களிலிருந்து விடுபட மக்கள் கடைப் பிடித்த பல்லேறு விரதங்களுள் சமய சம்பந்தப் பட்ட தூய தலங்களுக்கு யாத்திரை செல்வதும் ஒன்றாகும். கிறிஸ்துவின் பிறப்பால் தூய்மையடையப் பெற்ற பாலஸ்தீன நாட்டிற்கு ஒரு முறை யாத்திரை சென்று வரவேண்டுமென்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் வேட்கையாக இருந்தது. 'காசிக்குச் சென்றால் கர்மம் தொலையும்' என்று இந்துக்கள் நம்புவது போன்றே ஜெருசலேம் நகரில் அடியெடுத்து வைத்தால் செய்த பாவங்கள் யாவும் மாய்ந்து விடுமென்று கிறிஸ்தவர்கள் நம்பினர். எனவே ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான கிறிஸ்தவ யாத்ரிகர்கள் பாலஸ்தீனப் புனிதத் தலங்களுக்கு யாத்திரை செய்தனர். பதினோராம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இத்தகைய யாத்திரைகள் எவ்வித முட்டுப்பாடுமின்றி நடை பெற்று வந்தன. கி.பி. 1065-இல் பாம்பர்க் (Bombarc) நகரத்து பிஷப் ஏறக்குறைய ஏழாயிரம் ஜெர்மானியர்களை அழைத்துக் கொண்டு ஜெருசலேம் நகரத்துக்குச் சென்றார் என்று கேள்விப்படுகிறோம். இங்ஙனம் ஆயிரக்கணக்கில் சென்ற யாத்ரிகர்கள் எல்லோருமே சமயப் பற்று மிகுந்தவர்கள் என்று கூறவியலாது. புது இடங்களைப் பார்க்க வேண்டுமென்ற விருப்ப மிக்கவர்களும் துணிகர மனப்பான்மை உள்ளவர்களும், உல்லாச மாகப் ஓரிரு மாதங்களைக் கழிக்க விரும்பியவர்களும் பலர் அக் கூட்டத்திலிருந்தனர். அத்தகையோர் திரும்பி வரும்போது பல சுவையான நிகழ்ச்சிகளைத் தங்கள் உற்றார் உறவினருக்கும் நண்பர் களுக்கும் கூறுவர். இதனால் யாத்திரிகர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டே வந்தது. பாலஸ் தினத்தை ஆரம்பத்தில் ஆண்டு வந்த அராபியர்கள் கிறிஸ்தவ யாத்திரிகர்களுக்கு எவ்வித இடர்பாட்டையும் செய்யவில்லை. மாறாக அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்தனர். ஆனால் கி. பி. 1076-இல் சிறிதும் சகிப்புத் தன்மையற்ற முரட்டு வகுப்பினர்களான செல்ஜூக் துருக்கியர்கள் ஜெருசலேத்தைக் கைப்பற்றிக் கொண்டு பாலஸ்தீனத்தில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டினர். கிறிஸ்தவ யாத்திரிகர்

களுக்கு அவர்கள் பல இடையூறுகளை ஏற்படுத்தினர். பலர் சிறையில் தள்ளப்பட்டு மற்றும் சிலர் சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டனர். இதையெல்லாம் கேட்ட கிறிஸ்தவர்கள் புனித நாடான பாலஸ்தீனத்தை துருக்கியர்களிடமிருந்து மீட்க புனிதப் போர்களில் ஈடுபட முன் வந்தனர்.

சிலுவைப் போர்கள் நடைபெறுவதற்கு ரோமானியப் போப் பாண்டவர்கள் பெரிதும் காரணமாயிருந்தனர். கிறிஸ்தவ திருச்சபையானது கீழைத் திருச்சபை மேலைத் திருச்சபை என இரண்டாகப் பிளவு பட்டிருப்பதை அவர்கள் விரும்பவில்லை. இரண்டு திருச்சபைகளும் ஒன்றுபட்டாலொழிய கிறிஸ்தவ சமயம் தழைக்க முடியாதென்றும், போப் ஆண்டவர்களின் ஆதிக்கம் பெருக இயலாது என்றும் அவர்கள் கண்டனர். கி. பி. 1088-இல் போப் ஆண்டவராக வந்த ஏழாம் கிரிகரி என்பார் ஒன்றுபட்ட கிறிஸ்தவ சமயத்தைச் சமைக்க விரும்பினார். புனிதத்தலங்களைக் காக்கும் பொருட்டு ஒரு போரைத் துவங்கினால் அதன் விளைவாக கீழை ரோமப் பேரரசிலும் மேலை ரோமப் பேரரசிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையை அடைந்து விடுவர் என்று அவர் உறுதியாக நம்பினார். மக்கள் தம்மிடம் வைத்திருந்த மதிப்பையும் மரியாதையையும் பயன் படுத்திக் கொண்டு அவர் இத்தகைய போர்களில் ஐரோப்பியர்களை ஊக்குவித்தார்.

கீழை ரோமானியப் பேரரசர்களும் சிலுவைப் போர்களுக்குப் பெரிதும் காரணமாயிருந்தனர். ஏழு நூற்றுண்டுகளாக காட்டு மிராண்டிகளிடமிருந்தும் முஸ்லிம்களிடமிருந்தும் கிறிஸ்தவ சமயத்தைக் காத்துக் கொண்டு வந்த அப்பேரரசர்கள் பதினோ ராம் நூற்றுண்டளவில் பெரிதும் பலவீனமடைந்தனர். திருச் சபைக்குள்ளேயே ஏற்பட்ட பல பிளவுகளின் காரணமாக பேரரசர்கள் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாமல் திகைத்தனர். எனவே செல்ஜுக் துருக்கியர்கள் பைசான்ஷியப் பேரரசின் பெரும் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். கி. பி. 1071-இல் துருக்கியர்கள் பைசான்ஷியப் படையை மான்சிகர்ட் (Manzikert) எனும் போர்க்களத்தில் படுதோல்வி அடையச் செய்தனர். விரைவிலேயே பேரரசின் தலை நகரான கான் ஸ்டான்டி நோபிளும் துருக்கியர்களின் கைகளில் வீழ்ந்து விடும் போல் தோன்றியது. எனவே அலெக்ஸியஸ் (Alexius) என்ற பைசான்ஷியப் பேரரசர் கீழைக் கிறிஸ்தவ சமயத்தை முஸ்லிம் களிடமிருந்து காப்பாற்றும்படி போப் ஆண்டவருக்கு ஓலை விடுத்தார். போப் ஆண்டவராயிருந்த இரண்டாம் அர்பன்

உடனே கிளர்மாண்ட் என்னுமிடத்தில் பிரஞ்சு பிரபுக்களின் சபை ஒன்றைக் கூட்டி முஸ்லிம்களின் மீது படையெடுக்க வேண்டுவதின் அவசியத்தை வற்புறுத்தினர். கேட்பவர்களின் உள்ளத்தை உருக்கத் தக்க வகையில் அவர் நிகழ்த்திய சொல் வன்மை மிக்க சொற்பொழிவைக் கேட்ட பிரபுக்கள் அனைவரும் சமயத்திற்காகத் தங்கள் உயிரையே தியாகம் செய்வதாக வாக்கெடுத்துக் கொண்டனர். 'பீட்டர் தி ஹெர்மிட்' (Peter The Hermit) என்ற மற்றொரு பெரும் பேச்சாளரும் தமது உணர்ச்சி மிக்க பேச்சாற்றலால் மக்களைச் சிலுவைப் போர்களில் ஈடுபடும்படி தூண்டினர்.

மற்றும் இடைக் காலத்து மக்களிடையே காணப்பட்ட வீரமும், துணிகர மனப்பான்மையும், போர்க் குணமும் சிலுவைப் போர்களுக்கு ஒருவகையில் காரணமெனலாம். இடைக்கால நிலமானியப் பிரபுக்கள் தமக்குள் ஓயாது போரிட்டுக் கொண்டிருந்தனர். அதன் விளைவாக குடியானவர்களின் சொத்துக்களே அன்றி திருச்சபைக்குச் சேர்ந்த சொத்துகளுக்கும் பெரிதும் சேதம் ஏற்பட்டது. வணிகர்களின் பண்டங்கள் சூறையாடப் பட்டன. புனிதச் சின்னங்கள் கூட பல சமயங்களில் தீக்கிரை யாக்கப்பட்டன. இஸ்லாமிய சமயத்தின் செல்வாக்கால் கிறிஸ்தவர்கள் போர் உணர்ச்சி மிக்கவர்களாக மாறினர். இதை யெல்லாம் கண்ட போப் ஆண்டவர் இடைக்காலப் பிரபுக்களின் வீரத்தைத் திசை திருப்ப எண்ணினர். புனிதப் போர் ஒன்றைத் துவங்கி விட்டால் இடைக்காலப் பிரபுக்கள் அதில் தம் முழு கவனத்தையும் செலுத்தி விடுவார்களேயாதலால் ஐரோப்பாவில் அமைதி தானகவே ஏற்பட்டு விடுமென்று அவர் நம்பினர்.

இடைக் காலத்தே ஏற்பட்ட ஒரு சில மடாலய இயக்கங்கள் மக்களிடத்தே சமய உணர்ச்சியை அபரிமிதமாகத் தூண்டி விட்டன. இங்ஙனம் மக்களிடையே பொங்கி வழிந்த உற்சாகத் தைப் பயன் படுத்திக் கொள்ளப் போப் ஆண்டவர்கள் முன் வந்தனர். சிலுவைப் போர்களில் அவை திசை திருப்பி விடப் பட்டன.

பதினேராம் நூற்றுண்டில் நார்மானியப் பிரபுக்கள் பலர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றைத் தாக்கினர். வில்லியம் என்பவர் இங்கிலாந்தைக் கைப்பற்றினர். இராபர்ட்கெய்ஸ்கார் என்பவர் சிசிலியைக் கைப்பற்றி முஸ்லிம்களைத் துரத்தினர். பல இடங்களில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஒருவித பகை உணர்ச்சியை அவர்கள் உண்டாக்கினர். அவைகள் ஒன்று

இரண்டு நாளடைவில் சிலுவைப் போர்களுக்கு இட்டுச் சென்றன.

சிலுவைப் போர்கள் ஏற்படப் பல்வேறு பொருளாதாரக் காரணங்களும் இருந்தன என்பதில் ஐயமில்லை. ஐரோப்பாவில் நாளுக்கு நாள் வளர்ந்து வந்த மக்கட்கூட்டத்தினருக்கு ஒரு போக்கிடம் தேவைப்பட்டது. தேனும் பாலும் ஓடுவதாகக் கருதப்பட்ட பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினுல் அங்கு ஏராள மான மக்கள் குடியேறி செல்வாக்குடன் வாழலாம் என்று போப் பாண்டவரே பிரஞ்சுப் பிரபுக்களுக்கு ஆசை காட்டினுர். செயற்கை உரத்தைப் பற்றி அறியாத அந்நாளில் ஐரோப்பிய நிலங்கள் யாவும் செழிப்பிழந்து நல்ல விளைச்சலின்றிக் கிடந்தன. எனவே பல நிலக்கிழார்கள் கடனில் மூழ்கிப் போயிருந்தனர். இங்கிலாந்து பிரான்சு போன்ற இடங்களில் பிரபுக்களின் நிலங்கள் யாவும் மூத்த மக்களுக்கு மட்டுமே உரிமையாக்கப் பட்டதால் இளைய மக்கள் அனைவரும் நிலமின்றி வாடினர். அத்தகையோருக்கு சிலுவைப் போர்கள் பிற்காலத்தே ஏதாவது நன்மையை உண்டாக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டின. சாதாரணமாகவே அவர்கள் புரட்சிக் குணமிக்கவர்களாக இருந்தனர். சதா ஏதாவது சண்டைகளில் ஈடுபட்டவண்ண மிருந்தனர், அத்தகையோருக்கு சிலுவைப் போர்கள் வெறும் வாயை மெல்பவருக்கு அவல் கிடைத்தது போலாயிற்று. மற்றும் நிலங்களில் அடிமைகளாக உழுது பயிரிட்டு வந்த ஏழை மக்கள் பலர் எப்படியாகிலும் அங்கிருந்து தப்பித்தால் போதுமென்ற எண்ணத்தில் சிலுவைப் போர்களில் சேர்ந்தனர். பெரும் குற்றம் செய்தவர்களும் கடன்களை அடைக்க முடியாமல் தவித்த வர்களும் சிறைவாசத்தினின்றும் தப்பித்துக் கொள்ள சிலுவைப் போர்களில் வந்து கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய மக்கள் பலரும் பாலஸ்தீன நாடுகளின் மீது படையெடுப்பதற்கு சூழ்நிலை பெரிதும் சாதகமாயிருந்தது. ஹங்கேரியர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி விட்டதின் விளைவாக கீழைநாடுகளுக்கு எளிதில் செல்லத்தக்க நிலமார்க்கம் ஒன்று ஐரோப்பியர்களுக்குக் கிடைத்தது. இரண்டாவதாக பதினேராம் நூற்றுண்டில் நார்மானியர்கள் சிசிலியைக் கைப்பற்றிக் கொண்டு வெனிஸ், ஜெனிவா போன்ற நகர அரசுகளின் துணையுடன் முஸ்லிம் கடற் கொள்ளைக்காரர்களை அறவே ஒழித்து பாலஸ் தீனத்திற்குச் செல்லத்தக்க கடல் வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். மூன்றுவதாக செல்ஜுக் துருக்கியர்களின் பேரர சானது பல சிறு நாடுகளாகப் பிரிந்து தமக்குள் ஓயாமல்

போரிட்டுக் கொண்டிருந்தன. இத்தகைய ஒற்றுமையின்மையை ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். மற்றும் அராபியர்களும், துருக்கியர்களும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டிருந்ததும் கிறிஸ்தவர்களுக்கு சாதகமான சூழ்நிலையாய் அமைந்தது. இறுதியாக ஐரோப்பிய மக்கள் மீது போப்பாண்டவர்கள் செலுத்தி வந்த செல்வாக்கு சமயத்துக்காகப் போரிடும் முயற்சியில் கிறிஸ்தவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தியது. இங்ஙனம் சிலுவைப் போர்கள் ஏற்பட பல்வேறு அடிப்படைக் காரணங்கள் இருந்தனவெனினும் பைசான்ஷியப் பேரரசரான அலக்ஷியஸ் என்பார் போப்பாண்டவருக்கு விடுத்த வேண்டுகோளே அவற்றுக்கு உடனடியான காரணமெனலாம். அவரும், பீட்டரும் நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவுகளைக் கேட்ட ஆயிரக்கணக்கான மக்கள் சிலுவைகளை உடைகளில் அணிந்து கொண்டு முஸ்லிம்கள் மீது போர் தொடுக்க வேண்டுவது இறைவனின் விருப்பம் என்று கூவிக் கொண்டு முன்வந்தனர்.

## முதலாவது சிலுவைப் போர் (1096-99)

கிளர்மான்ட்டில் நடைபெற்ற கவுன்சிலுக்குப் பின் உடனடியாக முதலாம் சிலுவைப் போர் தொடங்கியது. அதில் கலந்து கொண்டவர்களுக்கு போப்பாண்டவர் பல சலுகைகளை வழங்கினர். நிலங்களில் மாடுபோல் உழைத்து வந்த அடிமைகள் விடுதலை பெற்று போரில் சேர உரிமை அளிக்கப்பட்டனர். போரில் சேர விரும்பிய கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டது. மரண தண்டனை பெற்றவர்களுக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. போரில் கலந்து கொண்ட அரசர்களின் நாடுகளை வேறு எவரும் தாக்கலாகாது என்று போப்பாண்டவர் ஆணையிட்டார். இத்தகைய சலுகைகளின் காரணமாக ஏறக்குறைய பனிரெண்டாயிரம் பேர்கள் 'பீட்டர் தி ஹெர்மிட்' என்பாரது தலைமையில் கூடினர். அவர்கள் பிரான்சிலிருந்து புறப்பட்டு பாலஸ்தீனத்தை நோக்கி நிலமார்க்கமாக விரைந்தனர். அவர்களில் பலர் பெண்களும் குழந்தைகளுமாவர். ஜெர்மனி, ஹங்கேரி வழியாகச் சென்றபொழுது அவர்களில் பலர் வழியிலேயே மாண்டு போயினர். பாஸ்போரஸ் பூ சந்தியைக் கடந்தவுடன் அவர்களைத் துருக்கியர்கள் எளிதில் ஒருவர் விடாமல் கொன்று தீர்த்து விட்டனர். பேரரசர் அலக்ஷியஸ் அவர்களுக்கு உண்டியும் உடையும் கொடுக்க இயலாமல் வேண்டுமென்றே துருக்கியருக்கு இரையாக்கி விட்டார் என்றும் கூறப்படுகிறது.


சிலுவைப் போர்கள்
காஸ்பியன் கடல்
கருங் கடல்
ரஷ்யா
அரேபியா
மத்திய தரைக் கடல்

பௌலியனைச் சேர்ந்த காட்ப்ரே (Godfrey of Bouillion) நார்மண்டி பிரபு இராபர்ட் போன்ற பல பிரஞ்சு பிரபுக்களின் தலைமையில் மூவாயிரம் போர் வீரர்கள் ஒன்றுகூடி கான்ஸ்டான்டி நோபிலை நோக்கி விரைந்தனர். அவர்கள் ஆசியாமைனர், சிரியா முதலிய நாடுகளைக் கடந்து சென்று ஜெருசலேத்தைக் கைப்பற்றினர். காட்ப்ரேயின் தலைமையில் ஒரு லத்தீன் அரசு ஜெருசலேத்தில் அமைக்கப்பட்டது. முட்களாலான கிரீடத்தை இயேசுநாதரது தலையில் அவரது எதிரிகள் அணிவித்த ஜெருசலேம் நகரில் பொன்னாலான கிரீடத்தை அணிந்து கொள்ள காட்ப்ரே விரும்பவில்லை. அரசர் என்ற பட்டத்தையும் அவர் ஏற்றுக் கொள்ள மறுத்தார். தூய பிரபு என்று மட்டும் அவர் தம்மை அழைத்துக் கொண்டார். ஜெருசலேமைச் சுற்றியுள்ள நாடுகளை அவருடன் வந்த பிரபுக்கள் தமக்குள் பிரித்துக் கொண்டனர். ஏனைய வீரர்களில் பலர் தங்களது காரியம் வெற்றிகரமாக முடிந்ததை நினைத்து மகிழ்ந்து ஐரோப்பாவிற்கே திரும்பி விட்டனர். ஜெருசலேத்தைப் பாதுகாக்கப் போதிய வீரர்கள் இல்லாமல் போயினர். எனவே துருக்கியர்கள் மீண்டும் பாலஸ்தீனத்தைப் படையெடுத்து கி பி. 1144-இல் எடேசா (Edessa) என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**இரண்டாம் சிலுவைப் போர்**

துருக்கியர்களின் வெற்றியைக் கேள்விப்பட்ட ஐரோப்பியர்கள் வெகுண்டெழுந்தனர். கிளயர்வாக்ஸ் (Clairvaux) நகரைச் சார்ந்த செண்ட். பெர்னார்ட் எனும் துறவி மீண்டும் சிலுவைப் போர்களில் ஈடுபடும்படி மக்களை அழைத்தார், பிரஞ்சு அரசரான ஏழாம் லூயியும் ஜெர்மானிய அரசரான மூன்றாம் கனர்டும் (Conard III) அவரது வேண்டுகோளுக்கிணங்க ஒரு பெரும் படையுடன் புறப்பட்டனர். ஆனால் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்குமிடையே ஒற்றுமையில்லை. வெவ்வேறு வழிகளில் அவர்களது படைகள் சென்றன. ஜெர்மானியப் படைகள் வழியில் கிரேக்க நகரங்களைக் கொள்ளையடித்து கிரேக்கர்களின் பகைமையைத் தேடிக்கொண்டன. கனர்டின் படைகள் ஆசிய மைனரில் வழிதப்பி பாலைவனத்தில் சிக்கி உணவின்றி மடிந்து விட்டன. பிரஞ்சுப் படைகள் ஜெருசலேம் நகரை அடைந்தனவெனினும் அவர்களது எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. விரைவில் அவர்களுடன் வந்து சேர்ந்த கனர்டின் எஞ்சிய படைவீரர்களும் போர் செய்யக்கூடிய உற்சாகமிழந்து காணப்பட்டனர். அவர்களில் பலரை முஸ்லிம்கள் லஞ்சம்கொடுத்து படையிலிருந்து பிரித்துவிட்டனர். எனவே கனர்டு விரைவிலேயே தோற்கடிக்கப்பட்டு ஜெர்

மனிக்குத் திரும்பினர். ஏழாம் லூயி பல புனிதத் தலங்களை தரிசித்து விட்டு வெறுங்கையுடன் பிரான்சு திரும்பினர். இரண்டாவது சிலுவைப் போர் பயன் ஏதுமின்றி முடிந்தது.

**மூன்ரும் சிலுவைப் போர்** *(1189- 1192)*

பனிரெண்டாம் நூற்ருண்டில் மீண்டும் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம் களுக்கும் இடையே சச்சரவு மூண்டது. ஜெருசலேம் நகரைச் சுற்றி அமைக்கப் பெற்ற கிறிஸ்தவ நாட்டின் தலைவரான ரெஜினல்டு (Reginald) பிரபு, படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு செங்கடல் கரைகளில் வந்திறங்கினர். மக்கா, மதீன நகரங்களைக் கைப் பற்றி விட அவர் விரும்பினர். ஆனல் எகிப்தியப் படை ஒன்று அவரை மடக்கித் துரத்தி விட்டது. கி. பி. 1186-இல் அவர் மீண்டும் ஒரு முஸ்லிம் வணிகர் கூட்டத்தை வழி மடக்கிக் கொள்ளையடித்ததோடு, சுல்தானின் மகளையும் கடத்திக் கொண்டு போய் விட்டார். இதைக் கேட்ட எகிப்திய சுல்தானகிய சலாடின் பெரிதும் வெகுண்டார். சிரியா நாட்டையும் எகிப்தினையும் ஒருங்கிணைத்துப் பெரும் புகழுடன் ஆட்சி செலுத்தி வந்த சலாடின் கிறிஸ்தவர்கள் மீது ஜிகாத் (Jihad) எனும் சமயப் போரைத் துவக்கியுள்ளதாக 1187 இல் அறிவித்தார். விரைவிலேயே அவர் கிறிஸ்தவப் படைகளை முறியடித்ததோடு ரெஜினல்டையும் தனது கரங்களாலேயே கொன்ருர். ஜெருசலேம் நகரைக் கைப்பற்றிப் பாலஸ்தீனத்தில் முஸ்லிம் ஆட்சியை அவர் நிறுவினர்.

முஸ்லிம்களின் கைகளில் வீழ்ந்த ஜெருசலேம் நகரை மீட்க வேண்டிய கடமை பற்றி டைர் (Tyre).நகர ஆர்ச் பிஷப்பான வில்லியம் என்பவர், கிறிஸ்தவர்களுக்கு உணர்ச்சி பொங்க எடுத்துரைத்ததோடு, மூன்ரும் சிலுவைப் போரையும் தொடங்கினர் (1189). அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பிரடரிக் பார்பரோசா (Frederick Barbarossa) எனும் ஜெர்மானியப் பேரரசர் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு நிலமார்க்கமாகப் பாலஸ்தீனத்தை நோக்கிப் புறப்பட்டார். அவரது படை வெற்றிகரமாக ஆசிய மைனர் பகுதியை அடைந்தது. ஆனல் பேரரசர் வெள்ளம் பெருக்கெடுத்தோடிய ஒரு நதியைக் கடக்கும் போது நீரில் மூழ்கி இறந்து போனர். இதைக் கண்ட அவரது படை வீரர்களிற் பலர் மனமுடைந்து தங்களது தாயகத்துக்குத் திரும்பி விட்டனர்.

பிரெஞ்சு மன்னரான பிலிப் அகஸ்டஸ் (Philip Augustus) என்பாரும், இங்கிலாந்து அரசரான ரிச்சார்டு என்பாரும்

ஜெருசலேம் நகரை முஸ்லிம்களிடமிருந்து மீட்கக் கடல் வழியாகப் புறப்பட்டனர். அக்ரே (Acre) எனும் நகரை அவர்கள் வழியில் கைப்பற்றினர். ஆனால் விரைவிலேயே அவ்விருவரும் தமக்குள் பகைத்துக் கொண்டு சச்சரவிடலாயினர். நோய் வாய்ப்பட்ட பிலிப் தமது படைகளை மட்டும் பாலஸ்தீனத்தில் விட்டு விட்டு பிரான்சுக்குத் திருப்பினர். ரிச்சர்டு மன்னன் எஃகு போன்ற உறுதியுடன் சலாடினை எதிர்த்து இரண்டு ஆண்டுகள் ஓயாது போர் புரிந்தார். அவரது துணிகரமிக்க வீரச் செயல்களைக் கண்ட மக்கள் அவருக்கு "ஏறு வின் இதயம் படைத்தவர்" (Lion hearted) எனப் பட்டம் சூட்டினர். சலாடினை அவர் தோற்கடித்து அவருடன் ஒரு தற்காலிக சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். அதன்படி 3 ஆண்டுகள் 8 மாதங்கள் வரை கிறிஸ்தவர்கள் தங்களது புனிதத் தலங்களுக்குச் சுதந்திரமாகப் போய் வர அநுமதி பெற்றனர். பாலஸ்தீனத்தின் கடற்கரைப் பகுதியில் ஆட்சி புரியவும் அன்னார் உரிமை பெற்றனர். அதன் பின் ரிச்சர்டு தாய் நாட்டுக்குத் திரும்பினர். வழியில் அவரது கப்பல் புயலால் நொறுங்கியது. எனவே அவர் ஜெர்மனியூடே புகுந்து நிலமார்க்கமாகப் பயணம் செய்தார். இதையறிந்த பிரெஞ்சுப் பேரரசர் ஆறும் ஹென்றி அவரைக் கைப்பற்றிச் சிறையிலடைத்தார். ஆங்கில மக்கள் நூறாயிரம் பொன் ஈட்டுத் தொகை கொடுத்த பின்பே அவர் விடுதலை செய்யப் பட்டார். கிறிஸ்தவர்கள் ஓரளவு இப் போரால் பயனடைந்தனர் எனினும் அவர்களது குறிக்கோள் நிறைவேற வில்லை.

### நான்காம் சிலுவைப் போர் (1202-1204)

மூன்றும் சிலுவைப் போரின் விளைவாக அக்ரே நகர் பிடிபட்டதே ஒழிய, கிறிஸ்தவர்களின் புனிதயாத்திரைத் தலமான ஜெருசலேம் இன்னும் முஸ்லிம்கள் கையிலேயே இருந்தது. இந்நிலையை மாற்ற விரும்பினர் போப்பாண்டவர். சலாடின் எனும் மன்னர் இறந்த பின் முஸ்லிம்களிடையே ஒற்றுமை குலைந்தது; முஸ்லிம் தலைவர்கள் ஒருவரோடொருவர் சச்சர விட்டுக் கொண்டனர். இதுவே தக்க தருணம் எனக் கருதிய போப்பாண்டவர் மூன்றும் இன்னொசென்டர் (Innocent III) என்பார் நான்காம் சிலுவைப் போரைத் துவக்கினர். பெரு மன்னர்கள் எவரும் அதில் கலந்து கொள்ள முன்வரவில்லை. ஒரு சில பிரெஞ்சுப் பிரபுக்கள் மட்டும் தத்தம் படைகளுடன் புறப்பட்டனர். வெனிஸ் நகரை அடைந்த அவர்கள், மேற் கொண்டு தமது பயணத்தைத் தொடர வெனிஸ் நகர அரசிடம் கப்பல்களை

வாடகைக்குக் கேட்டனர். வேகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற முதுமொழிக்கிணங்க வெனீஸ் நகர அரசு தனது சொந்த பகைவர்களைப் பழி தீர்த்துக் கொள்ள சிலுவைப் படைகளைப் பயன் படுத்திக் கொள்ள முன் வந்தனர். படைகளின் பயணக் கட்டணத்தை அளவுக்கு மீறி அதிகமாக அவர்கள் கேட்டனர். அப்பெருந் தொகையைத் தர இயலாது சிலுவைப் படையினர் திகைத்த போது, கொடுக்க இயலாத மிச்சத் தொகைக்கு ஈடாக வெனீஸின் வாணிபத்துக்குப் போட்டிருந்த ஸாரா (Zara) எனும் துறைமுகத்தைக் கைப் பற்றித் தரும்படிச் சிலுவைப் படையினரை வெனீஸ் வேண்டிக் கொண்டது. அதை ஏற்றுக் கொண்ட சிலுவை வீரர்கள் ஸாராவைக் கைப்பற்றியதோடு ஏராளமான பொருளைக் கொள்ளையடித்தனர். அதன் பின் வெனீஸின் வேண்டுகோளுக் இணங்க கீழை ரோமானியப் பேரரசின் வாரிசுரிமைச் சிக்கலொன்றில் அன்னூர் தலையிட்டனர். அரியணையினின்றும் துரத்தப் பட்ட இரண்டாம் ஐஸக்கை (Isac II) ஆதரித்து அப்படைகள் கான்ஸ்டாண்டி நோபிளைத் தாக்கின. அரியணையைப் பலாத்காரமாகக் கைப் பற்றிய மூன்றாம் அலெக்சியசைத் (Alexius) தோற்கடித்து ஐசக்கின் மைந்தனை அவை அரசனாக்கின. இவ்வுதவிக்குக் கைம்மாறாக பெரும் தொகை ஒன்றை அப் படைகள் வேண்டின. அது கிடைக்காமற் போகவே அவர்கள் கட்டிழந்து கான்ஸ்டாண்டி நோபிள் நகரைச் சூறையாடினர். கவின் நிறைந்த கான்ஸ்டாண்டி நோபிள் நகர மாளிகைகளும், அரண்மனைகளும், செண்ட் சோபியா திருக்கோயில் போன்ற மாதாக் கோயில்களும் கொள்ளையிடப் பெற்றன. நூலகங்கள் கொளுத்தப் பட்டன. அழகு மிக்க கலைப் பொருள்கள் பொன்னுக்காக உருக்கப்பட்டன. மனம் போன போக்கெல்லாம் நகரைக் கொள்ளையடித்து மக்களைக் கொடுமைப் படுத்திய பின் சிலுவைப் படையினர் லத்தீன் பேரரசு ஒன்றை பால்டுவின் என்பவர் தலைமையில் கான்ஸ்டாண்டி நோபிளில் அமைத்தனர். கிரேக்க திருச்சபை ஒழிக்கப் பட்டு ரோமானிய லத்தீன் திருச்சபை ஏற்படுத்தப் பட்டது. இங்ஙனம் கீழை மேலைத் திருச்சபைகள் ஒன்று பட்டன. கான்ஸ்டாண்டி நோபிள் கொள்ளையடிக்கப் பட்டதைக் கண்டித்த போப் பாண்டவர், திருச்சபைகள் ஒன்றுக்கப் பட்டதைப் பாராட்டினூர். ஆனூல் விரைவிலேயே கிரேக்கர்கள் மீண்டும் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றினர். எனினும் பைசான்ஸியப் பேரரசு சிலுவைப் படையினரின் தாக்குதல்கள் காரணமாக நிலை குலைந்தது. எந்த நோக்கத்தோடு படைகள் புறப்பட்டனவோ அந்த நந்நோக்கத்தை மறந்து அவை செயல் பட்டன. குறுகிய

பொருளாசையின் காரணமாக, கிறிஸ்தவ சமய எதிரிகளான முஸ்லிம்களைப் பல்லாண்டுகளாக தடுத்து நிறுத்தி வந்த கீழை ரோமானியப் பேரரசை அவர்கள் பலவீனப் படுத்தி விட்டனர். அதன் விளைவாகவே பிற்காலத்தில் (1453) கான்ஸ்டாண்டி நோபிள் துருக்கியர்களால் எளிதில் கைப்பற்றப்பட்டது.

**சிறுவர்களின் சிலுவைப் போர்கள் (Children's Crusades)**

சிலுவைப் போர்கள் ஐரோப்பிய மக்களிடையே புதியதோர் உணர்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்தின. சிறுவர்கள் பலர் கிறிஸ்தவப் புனிதத் தலங்களைக் காக்க ஆர்வத்தோடு முன் வந்தனர். ஜெர்மனியிலிருந்து 40,000 பேர்கள் கொண்ட சிறுவர் பட்டாளமொன்று கிளம்பியது. இளங்கன்று பயமறியாது என்ற பழமொழிக்கிணங்க அச்சிறுவர்கள் ஆல்ப்ஸ் மலைகளை எல்லாம் கடந்து மத்தியத்தரைக்கடலை அடைந்தனர். கடலுக்குள் விசித்திரப் பாதை ஒன்றிருப்பதாக எண்ணி அவர்கள் இதாலியக் கடற்கரையை அடைந்து அத்தகைய பாதையைத் தேடும் முயற்சிலீடுபட்டனர். இதைக்கண்ட போப்பாண்டவர் அச்சிறுவர் கள் பால் மனமிளகி அவர்களிடம் நயமாகப் பேசி அவரவர்களின் சொந்த நாட்டுக்கே திரும்பச் செய்தார். 30,000 பேர் அடங்கிய மற்றுமோர் பிரெஞ்சு சிறுவர் பட்டாளமானது, சிலுவைப் போரில் பங்கெடுத்துக் கொள்ளும் விருப்பத்துடன் மார்சேல்ஸ் (Marseilles) நகரை அடைந்தது. தெய்வத்தின் அருளால் அன்று மோசேவுக்குக் கடல் வழி விட்டது போல், தங்களுக்கும் கடலிடையே ஒரு பாதை தோன்றும் என அவர்கள் பெரிதும் நம்பி கடற்கரையை அடைந்தனர். ஆனால் அங்ஙனம் ஒன்றும் நிகழாமையைக் கண்டு மனமுடைந்து பல இளஞ்சிறுர்கள் வீடு திரும்பி விட்டனர். 6000 இளைஞர்கள் அடிமை வியாபாரிகளின் கைகளில் சிக்கி விட்டனர். அவர்கள் அச்சிறுவர்களை அவரவர் தம் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஏமாற்றிக் கப்பலில் ஏற்றி அலெக்ஸாந்திரியா நகருக்குக் கொண்டு சென்று அங்கே அவர்களை அடிமைகளாக விற்று விட்டனர். கடவுளையும் சமயத்தையும் நம்பித் துணிகர முயற்சியிலீடுபட்ட பச்சிளங் குழந்தைகள் இத்தகைய துயர நிலைக்கு ஆளாக்கப்பட்ட கொடுமை உண்மையிலேயே மிக மிக இரங்கத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

உயிரைத் துச்சமென மதித்து சமயத்துக்காகப் பாடுபட முன் வந்த சிறுவர்களின் செயலானது, அங்ஙனம் முன்வராத வயதான வர்களைக் கண்டு எள்ளி நகையாடுவது போல் இருந்தது. எனவே வயதுவந்த கட்டிளங் காளைகள் பலர் சிலுவைப் போர்களில்

ஈடுபட வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டனர். 5, 6, 7, 8 வது சிலுவைப் போர்கள் இங்ஙனம் நடைபெற்றன; ஆனல் அவை பெருமளவில் திட்டமிடப்பட்டு நடத்தப்படவில்லை. சமய உணர்ச்சி எனும் மண்ணில் பூத்த காளான்களென அவை தோன்றி உடனே மாய்ந்து விட்டன. ஐந்தாவது சிலுவைப்போரை ஹங்கேரிய மன்னர் ஆன்ட்ரூ (Andrew) என்பார் 1217-இல் தலைமை தாங்கி நடத்தினர். அவரது படைகள் எகிப்திலுள்ள டாமியட்டா (Damietta) எனும் நகரைக் கைப்பற்றின. ஆனல் மேல் உதவிகள் வராத காரணத்தால் அவை பிடித்த இடத்தையும் விட்டு விட்டு, கேவலமான சமாதானமொன்றைச் செய்து கொண்டு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. 1228 இல் இரண்டாம் பிரடரிக் ஆறும் சிலுவைப்போரை நடத்தினர். ஆனல் பாலஸ்தீனத்திலிருந்த கிறிஸ்தவப் பிரபுக்கள் அவருடன் ஒத்துழைக்காததால் எல்லாம் பயனற்றுப் போயிற்று. அதே போன்றுதான் 7வது, 8வது போர்களும் வீண் முயற்சிகளாய் முடிந்தன. 1291-ஆம் ஆண்டில் ஆக்ரே நகர் முஸ்லிம்கள் கைகளில் வீழ்ந்ததோடு பாலஸ்தீனத்தில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் மாய்ந்தது.

## சிலுவைப் போர்களின் விளைவுகள்

கிறிஸ்தவர்களின் புனித நாடான (Holy Land) பாலஸ்தீனத்தை முஸ்லிம்களின் பிடியினின்றும் விடுவிக்கும் முயற்சியில், சிலுவைப் போர்கள் வெற்றி பெறவில்லை எனினும் அவற்றின் விளைவாக வேறுசில நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப் பட்டனர். அதனல் சில புதிய நாடுகளும் ஆங்காங்கே தோன்றின. ஐரோப்பிய வரலாற்றில் அவை சிறந்த பணியாற்றின. சான்ருக முதலாம் சிலுவைப் போரின் முடிவில், ஐபீரிய தீபகற்பத்தின் மேற்குப் பகுதியிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப் பட்டனர், அதனல் அங்கே போர்ச்சுகல் எனும் புதிய நாடு தோன்றியது. இரண்டாம் சிலுவைப்போரின் போது கிறிஸ்தவ வீரர்கள் லிஸ்பன் நகரை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் நடைபெற்ற சிலுவைப்போர்கள் காலத்தே முஸ்லிம்கள் ஸ்பெயினின் தென்பாகத்துக்குத் துரத்தப்பட்டனர். அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பல பிரதேசங்கள் விடுதலை பெற்று, ஒருங்கிணைந்ததாலேயே தற்கால ஸ்பெயின் நாடு ஐரோப்பாவில் உருவாகியது. மற்றும் விஸ்டுலா நதிக்குக் கிழக்கிலும், பால்டிக் கடலின் ஓரங்களிலும் வாழ்ந்து வந்த ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்கள் பலர், கிறிஸ்தவ வீரப்பாதிரிமார்களின் முயற்சியால்

கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றப்பட்டனர். அதன் விளைவாகப் பிரஷ்யாவின் ஒரு முக்கிய பகுதியானது உருவெடுத்தது.

சிலுவைப் போர்களின் விளைவாக கீழை ரோமானியப் பேரரசு முஸ்லிம்களிடமிருந்து காப்பாற்றப்பட்டது. மேலும் 300 ஆண்டுகள் வரை அப்பேரரசு தொடர்ந்து ஆட்சி புரிய அவை துணை செய்தன. மேலை ஐரோப்பிய நாடுகளும் தற்காலிகமாக முஸ்லிம் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றப்பட்டன. கிறிஸ்தவ நாடுகள் தம்மை நன்கு பலப்படுத்திக்கொள்ளவும், தங்களது நாகரீகப் பண்புகளை நன்கு பேணி வளர்த்துக் கொள்ளவும் தேவையான அமைதியான சூழ்நிலையை ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கேனும் இப்போர்கள் அமைத்துத் தந்தன. இல்லெனில் 11-ஆம் நூற்றுண்டிலேயே ஐரோப்பாவின் பல பகுதிகளை முஸ்லிம்கள் பிடித்திருப்பர். 15, 16 ஆம் நூற்றுண்டில் படையெடுத்த துருக்கியர்களைக் காட்டிலும் பன்மடங்கு சேதங்களை அன்னுர் ஐரோப்பாவுக்கும் ஐரோப்பிய நாகரீகத்துக்கும் விளைத்திருப்பர். அராபியருக்கு உட்பட்ட கீழை நாடுகள் போன்று ஐரோப்பாவும் அறிவுத்துறையிலும் உலகியல் துறையிலும் தேக்கநிலையை எய்தி இருக்கும். அதற்கு மாருக கிறிஸ்தவர்கள், சமுதாய பழக்க வழக்கங்களிலும், கல்வியிலும், கலையிலும், அறிவியலிலும், உலகியல் துறையிலும், முஸ்லிம் நாடுகளைவிடப் பலவகையிலும் முன்னேற்றமடைந்தனர். சிலுவைப்போர்களே இவ்வகையான முன்னேற்றத்துக்கு அடிகோலின எனலாம்.

சிலுவைப்போர்களின் விளைவாக இடைக்கால ஐரோப்பிய நகரங்கள் பல, ஆக்கமும் வலிவும் பெற்றன. போரில் கலந்து கொண்ட நிலமானிய பிரபுக்களும் இளவல்களும், நகரப் பெரு மக்களிடமிருந்து நிறையக் கடன் வாங்கினர். அதற்கு ஈடாகப் பல அரசியல் உரிமைகளை அன்னுர் நகரங்களுக்குத் தனி சாசனங்கள் வாயிலாக வழங்கினர். இதனுல் தன்னுரிமை பெற்ற நகரங்கள் பல ஐரோப்பாவில் இக்காலத்தே தோன்றின.

நிலமானிய முறை ஐரோப்பாவில் பெரிதும் நலிவுறச் சிலுவைப்போர்கள் பெரிதும் காரணமாயிருந்தன. பல பிரபுக்கள் பாலஸ்தீனத்திலிருந்து திரும்பி வரவேயில்லை. எனவே அவர்களின் நிலங்களை மன்னர்கள் கைப்பற்றிக் கொண்டனர். திரும்பி வந்த பிரபுக்களும், தமது செல்வங்களை எல்லாம் போர் முயற்சிகளில் செலவழித்து விட்டு வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தனர். எனவே நிலமானிய பிரபுக்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் பெரிதும்

குன்றின. அதற்குப் பதிலாக மன்னர்களின் கைகள் வலுத்தன. சிலுவைப்போர்களுக்கு ஏராளமான வீரர்களை அனுப்பிவைத்த பிரான்சில் இத்தகைய நிலை விரைவில் ஏற்பட்டது. இங்கிலாந்திலும் மன்னர்கள் வலிமையுடைந்தமைக்கு இதுவே காரணமாகும்.

நிலமானிய சமுதாயத்தில் கடை நிலையிலிருந்த ஊழியர்கள் பலர் சிலுவைப் போர்களின் போது, தங்களது பிரபுக்களிடமிருந்து விடுதலை பெற்றுக் கொண்டு போர்களில் கலந்து கொண்டனர். இதனால் நிலத்தோடு கட்டுண்டு கிடந்த பல நில அடிமைகள் உரிமை பெறற குடி மக்களாக மாறினர். மற்றும் சிலர் பிரபுக்களிடம் அநுமதி பெறுமலேயே நிலங்களை விட்டு ஓடிப் போய் சிலுவைப் போர்களில் கலந்து கொண்டனர். அவர்களில் பலர் மீண்டும் நிலங்களுக்குத் திரும்பவே இல்லை. பிரபுக்கள் போர்களில் ஈடுபட்டிருந்த வேளையில் அன்னாரின் நிலங்களிலிருந்து ஓடிப்போன ஊழியர்கள் பலராவர். இதனாலெல்லாம் நிலமானிய முறை பெரிதும் பலஹீனமுற்றது.

சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பியப் பொருளாதாரம் பெரிதும் மாற்றமடைந்தது. கீழை நாட்டுப் பண்டங்களுக்கு ஐரோப்பாவில் நல்ல கிராக்கி ஏற்பட்டது. மத்திய தரைக் கடல் மூலமாகக் கீழை நாடுகளோடு வியாபாரம் செய்ய ஐரோப்பியர்கள் கற்றுக் கொண்டனர். எனவே கான்ஸ்டாண்டிநோபில் மூலமாக நடைபெற்று வந்த வியாபாரம் குறைந்தது. அதற்குப் பதிலாக வெனீஸ், ஜெனோவா, பைசா போன்ற இதாலிய நகரங்கள் கீழை நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருளீட்டின. கப்பல்கள் மூலமாகப் பயணங்கள் அதிகமாக நடைபெற்றதால் கப்பல் கட்டும் தொழில் பெரிதும் முன்னேற்றமடைந்தது. கப்பல்களின் மூலமாக வாசனைத் திரவியங்கள், ஆடம்பரப் பொருள்கள் முதலியன கீழை நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குச் சென்றன, ஐரோப்பியர்கள் முன்பின் பார்த்திராத புதிய பயிர்களும், செடிகளும், மரங்களும் கீழை நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டு ஐரோப்பாவில் பயிரிடப்பட்டன. நெல், மக்காச் சோளம், எள், எலுமிச்சை, முலாம் பழம், செர்ரி ஆப்ரிகாட் பேரிச்சை பீச் போன்ற பழங்கள் ஐரோப்பாவுக்குள் நுழைந்தது இக்காலத்திலேயேயாகும். செடிகொடிக் காட்சி சாலைகளும், விலங்குக் காட்சி சாலைகளும் ஐரோப்பாவில் தோன்றலாயின; டமாஸ்க்குகள், மஸ்லின், சேட்டின், வெல்வெட், கம்பள விரிப்பு, திரைச் சீலை, சாயங்கள், வாசனைப் பொருள்கள், விலையுயர்ந்த கற்கள் முதலியவை

ஐரோப்பியப் பிரபுக்களின் வீடுகளை அலங்கரிக்க ஆரம்பித்தன. இப் பொருள்களுக்குப் பதிலாகப் பண்டங்களைத் தர விரும்பிய ஐரோப்பியர்கள் பல புதிய தொழில்களிலீடுபட்டனர். தொழில் நகரங்கள் பல தோன்றின. அந்நகர்களில் வாழ்ந்த வணிகர்கள் பல புதிய பொருளாதார சாதனங்களைக் கைக் கொண்டனர். பாங்கி முறைகள், கடன் கொடுத்தல், நாணயப் புழக்கம், இவைகள் பெருகின. விவசாயப் பொருளாதாரம் மாறி தொழில் மயமான பொருளாதாரம் வளரத் தொடங்கியது. நிலமானியப் பிரபுக்களுக்குப் பதிலாக ஒரு புதிய பணக்கார வணிகர் வகுப்பு தோன்றலாயிற்று. அதன் உதவியை மன்னர்கள் பெற்று தம் கரங்களை வலுவாக்கிக் கொண்டனர்.

ஐரோப்பியர்களின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் இக் காலத்தே நிகழ்ந்தன. அராபியர்களின் தொடர்பால், ஐரோப் பியர்களிடையே முகத்தை மழித்துக் கொள்ளும் பழக்கம், பொதுக் குளியல் குளங்களில் ஒன்றுகக் கூடிக் குளிக்கும் பழக்கம், தனிப்பட்ட கழிவிடங்களை வீடுகளில் அமைத்துப் பயன் படுத்தும் வழக்கம் முதலியன ஏற்பட்டன. சாயமேற்றப்பட்ட கண்ணுடி களைக் கட்டிடங்களில் அமைக்கும் முறையை ஐரோப்பியர்கள் முஸ்லிம்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். சிலுவைப் போர் களில் கலந்து கொண்ட வீரர்கள் பலர் படிப்பறிவற்றவர்கள். எனவே அவர்கள் முஸ்லிம்களின் நாகரீகத்தைப் புரிந்து கொண்டு, ஐரோப்பாவில் கொண்டு வந்து புகுத்தியிருப்பார்கள் என்று கருத வழியில்லை. மற்றும் அவர்கள் முஸ்லிம்களின் நாகரிகப் பாசறை களான டமாஸ்கஸ், டாலிடோ, போன்ற நகரங்கள் வரை செல்லவில்லை. ஜெருசலேம், ஆன்டியோக் போன்ற நகரங் களையே அவர்கள் பார்த்தனர். எனவே ஐரோப்பிய வாழ்க் கையில் நாகரிகம் மலரச் சிலுவைப் போர்களே காரணம் என சாதிப்போரின் கூற்று அவ்வளவாக ஒவ்வாததொன்றேயாகும். ஸ்பெயின், சிசிலி போன்ற இடங்களில் வாழ்ந்த முஸ்லிம்களிட மிருந்தும், தூரக் கிழக்கு நாடுகளிலிருந்துமே ஐரோப்பியர் நாகரிக சாதனங்களைக் கற்றுக் கொண்டனரேயன்றி, சிலுவைப் போர் வீரர்களிடமிருந்து அல்ல என்பது உணர்தற்பாற்று. இடைக் காலத்து ஏற்பட்ட நிலமானிய முறை வீழ்ச்சிக்குக் கூட, அவ்வமயம் ஐரோப்பாவை அலைக் கலைத்த கருங்கொள்ளை நோயும், நகரப் பொருளாதார வளர்ச்சியும், தேசீய முடியரசு வளர்ச்சியுமே பெரிதும் காரணங்களாகும். சிலுவைப் போர்கள் ஓரளவிற்கே ஐரோப்பாவின் நவீன அரசியல் பொருளாதார மாற்றங்களுக்குக் காரணம் எனலாம்.

சிலுவைப் போர்கள் மக்கள் மனதில் ஓர் உற்சாகத்தையும் குதூகலத்தையும் ஏற்படுத்தின என்பது மறுக்க முடியாததாகும். சுயநலமின்றி ஒரு குறிக்கோளுக்காகப் பாடுபடவும், ஏழை எளியவர்களைக் காப்பாற்ற ஓடோடி முன் வரவும் அன்னார் பழகிக் கொண்டனர். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பலஹீனர்களுக்கும் வலிய வந்து உதவுகின்ற வீர மரபு (Chivalry) மக்களிடை பெருகியது. வீர மரபையும் துணிகர முயற்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட பல இலக்கியங்கள் ஆங்காங்கே எழுந்தன. ஐரோப்பிய இலக்கியங்களில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்குச் சிலுவைப்போர்கள் ஓரளவு காரணமெனலாம்.

சிலுவைப் போர்களால் தூண்டப்பட்ட துணிகர உணர்ச்சி பல கடல் வழிகளும் புதிய நாடுகளும் கண்டுபிடிக்கப்பட உதவி செய்தது. வெனிஸ் நகரத்து மார்க்கோ போலோவின் கீழை நாட்டுப் பயணங்களும், கொலம்பஸ், மகல்லன் போன்றோரின் துணிகரப் பயணங்களும் சிலுவைப் போர்களால் பெரிதும் தூண்டப்பட்டவை என்றால் மிகையாகாது.

சமயத் துறையில் சிலுவைப் போர்கள் அவ்வளவு நல்ல பலன்களை விளைவிக்கவில்லை. அப் போர்களைத் தூண்டி விட்டதன் விளைவாகப் போப்பாண்டவர்களின் செல்வாக்கு வளரவில்லை. போப்பாண்டவர்கள் தங்களைத் தூண்டிவிட்டதன் உண்மையான சுயநலக் காரணங்களை அறியவந்த மக்கள் அவர்கள் பால் கொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும் இழந்தனர். தொடக்கத்தில் போப்பாண்டவர்கள் பெரிதும் ஆதிக்கம் பெற்றனர் என்றாலும், நாளாவட்டத்தில் அவர்கள் தம் செல்வாக்கை இழந்தனர். தம் மதத்துக்குப் புறம்பானவர்களைத் துன்புறுத்தும் உணர்ச்சியைச் சிலுவைப் போர்கள் வளர்த்தன. கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை வெறுத்தது போன்றே யூதர்களையும் வெறுக்க ஆரம்பித்தனர். பொருளாதார வசதியுடன் வாழ்ந்த யூதர்களைப் பழிவாங்க ஐரோப்பியர்கள் சமய உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டனர். சமயப் பொறை மக்கள் பால் குறைந்தது. சமயத்தைக் காக்கவென்றே சில வீரர் குழாங்கள் தோன்றின. ஹாஸ்பிடலர்கள் (Hospitalers) டெம்ப்லார்கள் (Templars) போன்றவர்கள் இத்தகையோராவர். ஹாஸ்பிடலர்கள் பாலஸ்தீனத்திலிருந்து விரட்டப்பட்ட பின் சைப்ரஸ், ரோட்ஸ் போன்ற தீவுகளைக் கைப்பற்றினர். அங்கிருந்தும் துரத்தப்பட்டபின் அவர்கள் மால்டாவை அடைந்து அங்கு தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். டெம்ப்ளார்கள் பிரான்சுக்குச் சென்று அங்கு நிலபுலன்களைப் பெற்று சுகபோகிகளாய்

வாழ்ந்தனர். அவர்களது ஒழுக்கமற்ற வாழ்வைக் கண்ட பிலிப் எனும் பிரஞ்சு அரசர் அவர்களின் நிலங்களை எல்லாம் பிடுங்கிக் கொண்டார். பலரைச் சிறை செய்தும், துன்புறுத்தியும் அவர்களை நசுக்கினர். ஐந்தாம் கிளமெண்ட் எனும் போப் பாண்டவர் அதைக் கண்டித்தும் பயனில்லை. சிலுவைப் போர் களின் போது போப்பாண்டவரும் அவரது கையாட்களும் மக்களிடமிருந்து ஒருவித வரியை வசூலித்து வந்தனர். போர் நின்ற பின்பும் அவ்வரி வசூல் செய்வதை அவர்கள் நிறுத்த வில்லை. மற்றும் அவ்வாறு வசூலித்த பொருளை அவர்கள் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்தினர். தமக்கு முரண்பட்ட அரசர்கள் மீது போர் செய்ய அவர்கள் அப் பொருளைப் பயன் படுத்தினர். இதனால் மக்கள் பலர் போப்பாண்டவரை வெறுக்க லாயினர். சிலுவைப் போரில் ஈடுபட்ட பல பிரபுக்கள் தமது நிலங்களையும் சொத்துகளையும் திருச்சபையிடம் அடகு வைத்தனர். அவர்களில் பலர் திரும்பவும் அவற்றைப் பெற முயற்சிக்கவில்லை. எனவே பல திருச்சபைகளில் செல்வம் கொழித்தது. இதைக் கண்டு பொறுமைப்பட்ட மக்கள் திருச் சபையையும், அதன் தலைவரான போப்பாண்டவரையும் வெறுத்துக் குறை கூறலாயினர். பின்னல் ஏற்பட்ட மறு மலர்ச்சிக்கும், மதச் சீர்திருத்த இயக்கத்துக்கும் கூட சிலுவைப் போர்கள் ஓரளவு காரணமாயிருந்தன எனக் கூறலாம். ஆனல் அவைகள் தாம் முற்றும் காரணமாயிருந்தன என்று கூறுவது தான் உண்மைக்குச் சற்றே முரண்பட்டதாகும்.



மேற்கத்திய நாகரிகங்களின் போக்கு

# 8. நிலமானிய கால நாகரிகம்
# கல்வியும் கலைகளும்

'கண்ணுடைய ரென்பவர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' என்பது வள்ளுவர் வாக்கு. மனிதனை, உண்மையான மனிதனாக மாற்றுவது கல்வியறிவே என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியைப் பண்டைய கிரேக்கரும் ரோமானியரும் நன்கு ஓம்பினர். எனவே தான் அவர்கள் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர். ரோமானியர்களின் அருமையான கல்வி முறையானது முரட்டு வகுப்பினரின் தாக்குதல்களினால் சிதைவுண்டது. இடைக்காலத் தொடக்கத்தில் கல்விக் கூடங்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தன. ஒரு சில குருமார்களே பள்ளிகளை நடத்தி வந்தனர். அங்கு சமயக் கல்வி மட்டுமே போதிக்கப்பட்டது. எனவே அறியாமை எனும் இருள் மக்கள் உள்ளத்தே படரலாயிற்று. அதனாற்றான் இடைக்காலத்தின் முற்பகுதி இருண்ட காலம் எனப்படுகிறது. ஆனால் இடைக்காலத்தின் பிற்பகுதியில் கல்விக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் மக்கள் மீது மீண்டும் பாய ஆரம்பித்தன. கெரோலிங்கியப் பேரரசர்கள் பல பள்ளிகளையும் நூலகங்களையும் நிறுவினார்கள். கெரோலிங்கிய மறுமலர்ச்சியால் (Carolingian Renaissance) நாட்டில் அறிவு பெரிதும் வளர்ச்சியடைந்தது. சார்லமேன் போன்ற அரசர்கள் சமயக் கல்வியையேயன்றி உலகியல் பாடங்களைக் கற்பிக்கும் பள்ளிகளையும் ஏற்படுத்தினர். எழுத்தறிவுற்றவர்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகியது. எனினும் சமயக் குருமார்களே கல்வியறிவு மிக்கவர்களாய்த் திகழ்ந்தனர். ஒரு சில உயர்குடிமக்களும் கல்வியைப் பயின்றனர்.

இடைக்காலத்தே கல்வி ஒரு சில செல்வாக்கு மிக்கோர்களிடையே முடங்கிக் கிடந்ததற்குப் பயிற்றுமொழி தாய்மொழியாயில்லாதது ஒரு முக்கிய காரணமாகும். லத்தீன் மொழியே கல்விகற்பதற்குரிய மொழியாகக் கருதப்பட்டது. கடினமான லத்தீன் மொழியில் பயில ஒரு சிலரே முன்வந்தனர். மற்றும்

நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே இருந்தன. நூல்களைக் கைகளாலேயே எழுதிய சமயக் குருமார்கள் ஏராளமான நூல்களை மக்களுக்கு வழங்க முடியாத நிலையிலிருந்தனர். மற்றும் அக்காலத்துக் கல்வி சமயச் சார்புடையதாயிருந்தது. எனவே துறவிகளாகவும், குருமார்களாகவும் மாற விரும்புகின்றவர்கள் மட்டுமே படித்தனர். ஏனையோர் வாழ்க்கைக்குத் தேவையான தொழில்களைப் பயில்வதில் கவனம் செலுத்தினர். பண்ணையில் வாழ்ந்த இளஞ்சிறுர்கள், வேளாண்மை செய்வதெப்படி என்பதைத் தமது பெற்றோர்கள் உறவினர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். வணிகர்கள் தம் மக்களுக்கு வியாபார முறையையும், கைவினைஞர்கள் தம் மக்களுக்குத் தங்களது குலத்தொழிலையும் கற்பித்தனர். சிறுமிகள் வீட்டு வேலைகளையும், சமையற் கலையையும் தங்களது தாய்மார்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். பள்ளிக்குச் சென்று கணிதம், இலக்கணம், வரலாறு போன்ற பாடங்களைப் படிப்பதைப் பொதுமக்கள் கட்டாயமாக நினைக்கவில்லை. அத்தகைய பள்ளிப் படிப்பு செல்வாக்குமிக்க ஒரு சிலரின் உரிமையாகவே கருதப்பட்டது.

**பள்ளிகளும் படிப்பும் :** கல்வி பயில்வது கட்டாயமாக இல்லாவிடினும், இடைக்கால ஐரோப்பாவில் கல்விக் கூடங்கள் பல நிறுவப்பட்டன. அவற்றுள் காலத்தால் மிக முற்பட்டவை மடாலயக் கல்வி நிலையங்கள் (Monastic schools) ஆகும். ஒவ்வொரு மடாலயமும் ஒரு பள்ளியை நடத்தி வந்தது. சந்யாசிகளாகவும், குருமார்களாகவும் மாற விரும்பியவர்கள் அதில் சேர்ந்து சமயக் கல்வி பயின்றனர்.

சமய சீர்திருத்த இயக்கங்கள் பெரிய அளவில் வளரத் தொடங்கியபோது, மடாலயங்கள் கல்வியில் ஊக்கம் குன்றின. எனவே மடாலயப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தது. இக் குறையைப் போக்கப் பெரும் மாதாக் கோயில்கள் (Cathedrals) முன் வந்தன. ஏராளமான பள்ளிகளை அவர்கள் நாடெங்கும் தோற்றுவித்தனர்.

மடாலயப் பள்ளிகளிலும், மாதாக்கோயிற் பள்ளிகளிலும் (Cathedral schools), இன்று நாம் 'தாராளக் கலைகள்' (Liberal arts) என்று அழைக்கின்ற மனிதாபிமானப் பாடங்களே (Humanities) பெரிதும் போதிக்கப்பட்டன. அவை முப்பால் கலைகள் (Trivium) என்றும் நாற்பால் கலைகள் (Quadrium) என இருவகைப்படும். இலக்கணம், சமய தருக்கக் கலை (Dialectic), சொல்லாட்சிக் கலை (Rhetoric) ஆகியவை முப்பாற் கலைகளின்

பாற்படும். வடிவியல் கணிதம் (Geometry) எண் கணிதம் (Arithmetic) இசை (Music) வானியல் (Astronomy) என்பன நாற்பாற் கலைகளிலடங்கும். லத்தீன் மொழியையும், அதன் இலக்கியங்களையும் படிப்பதே இலக்கணமாகும். சட்ட நுணுக்கங்கள், செய்யுள் யாத்தல், கட்டுரை வரைதல் முதலியன சொல்லாட்சிக் கலையில் அடங்கும். கடினமான விவாத முறைகளைக் கொண்டது தருக்கக் கலையாகும். யுக்லிட் (Euclid) என்ற கிரேக்க கணித மேதையின் சித்தாந்தங்களையும், புவியைப் பற்றியும், இயற்கையின் விசித்திரம் பற்றியும் படிப்பதே வடிவியல் கணிதமாகும். ரோமானிய எண்களைப் பற்றியும், நாள் அட்டவணையைப் பற்றியும் படிப்பதே எண் கணிதமாகும். கோயிற் பாட்டுகளை ஓதுவதும் ஒலியைப் பற்றியும் அதன் இசைவு பற்றியும் (Harmony) ஆராய்வதும் இசை எனப்பட்டது. கோள்கள் பற்றியும், வேதியியல் (Chemistry) இயக்க நூல் (Physics) பற்றியும் படிப்பதே வானியல் பாடமாகும். ரோமானியர்கள் காலத்திலேயே எழுதப் பட்டுப் பாதுகாக்கப்பட்ட பாட நூல்களிலிருந்தே மேற்கண்ட பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

மேற்கண்ட சமயச்சார்புடைய பள்ளிகளேயன்றி இலக்கணப் பள்ளிகள் (Grammar schools) என்ற உலகியல் சார்ந்த கல்விக் கூடங்களும் ஆங்காங்கே நகரப் பொருளாதாரக் குழுக்களாலும், நிலமானியப் பிரபுக்களாலும் ஏற்படுத்தப்பட்டன. சாதாரணமாக எழுதவும் படிக்கவும், பாடவும் இவற்றில் கற்பிக்கப்பட்டன. லத்தீனுக்குப் பதில் தாய்மொழியே இவற்றில் பயிற்று மொழியாகப் படுத்தப்பட்டது.

மகளிர்க்கெனத் தனிப் பள்ளிகள் கன்னிமாடங்களால் (Nunneries) நடத்தப்பட்டன. உயர்குடிப் பிறந்த மகளிரே அவற்றில் பெரும்பான்மையாகச் சேர்ந்து படித்தனர். எழுத்தறிவோடு, கணக்கு வைத்துக் கொள்ளுதல், தையற்கலை, வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்தல், எளிய மருத்துவம் போன்ற கலைகளிலும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

பிரபுக்கள் தங்களது புதல்வர்களை நல்ல வீரர்களாக ஆக்கத் தனிப்பள்ளிகளை நிறுவியிருந்தனர். அவைகளில் எழுதவும் படிக்கவும் மட்டுமின்றி, எண் கணிதம், மரியாதை விதிகள்' கௌரவ நடத்தை, சதுரங்க ஆட்டம், யாழ்வாசித்தல் செய்யுள் யாத்தல், இசை பாடல் ஆகிய கலைகளில் தனிப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டது

பணம் படைத்த பிரபுக்களும், மதகுருமார்களுமே பெரும்பாலும் செல்வத்தைப் பெறுதற்குரிய வாய்ப்பினைப் பெற்றிருந்தாலும். மதிநுட்ப மிக்க ஏழைச் சிறுவர்கள் பலருக்கு இலவசக் கல்வி வழங்க திருச்சபை ஏற்பாடு செய்தது. திருச்சபையில் வந்து குவிந்த செல்வம் இங்ஙனம் ஏழை மாணவர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் வறியோர் பலர் நல்ல கல்விமான்களாக மாறினர். அவர்களில் பலர் பெரிய எழுத்தாளர்களாயும், கவிஞர்களாயும், அரசியல் மதியூகிகளாயும், மாறினர். ஒரு சில ஏழை மாணவர்கள் போப்பாண்டவர்களாகவும் உயர்ந்தனர். சமயஞ்சார்ந்த பாடங்களேயன்றி, மருத்துவம் சட்டம் போன்ற பாடங்களும் பல கல்விக்கூடங்களில் கற்பிக்கப்பட்டன; பள்ளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயிற்று. அவற்றில் பயின்றோர்க்கு சமயத் திருச்சபையிலும், அரண்மனையிலும் உயர்ந்த பதவிகள் கிடைத்ததால் மாணவர்கள் திரளாக வந்து அவற்றில் சேர்ந்து பயிலலாயினர். ஊதியம் வாங்கிக் கொண்டு கற்பிக்கும் பல ஆசிரியர்கள் முளைத்தனர். உலகியற்பள்ளிகள் பல தோன்றின. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் உலகியற் பள்ளிகள் ஐரோப்பா எங்கும் பரவி விட்டன.

**பல்கலைக் கழகங்கள் :** இடைக் காலத்தே தோன்றிய பல்கலைக் கழகங்கள் (Universities) என்பன, அக் காலத்துக் கல்விக் குளத்தில் பூத்த நறுமணமிக்க மலர்களாகும். அமைப்பிலும், கல்வித் திட்டத்திலும், பழக்க வழக்கங்களிலும் ஏறக்குறைய தற்காலப் பல்கலைக் கழகங்களை ஒத்த நிறுவனங்களை ஏற்படுத்திய பெருமை இடைக் கால ஐரோப்பியர்க்கே உரித்தாகும்.

பதினோராம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய சர்ச்சைகளும், சீர்திருத்த இயக்கங்களும், பெனிடிக்டைன் துறவிகள் போன்றவர்களின் ஆராய்ச்சித் திறனும் சேர்ந்து பல உயர்ந்த ஆசிரியப் பெரு மக்களை உண்டாக்கின. அதோடு சாதாரண படிப்பை விட உயர்ந்த படிப்பையும், ஆழ்ந்த ஆராய்ச்சியையும் விரும்புவோரின் எண்ணிக்கை வளர்ந்தது. இங்ஙனம் உயர் படிப்பில் நாட்டங்கொண்ட ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்த பல பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தினர்.

இடைக் காலப் பல்கலைக் கழகங்கள், அக்கால வாணிபக் குழுக்களைப் போன்ற கூட்டுறவு நிறுவனங்களாகும். அவை இரு வகைப்படும். ஒன்று மாணவர்களுடையது. மற்றொன்று

ஆசிரியர்களுடையது. மாணவர்களை மட்டுமே உறுப்பினராய்க் கொண்ட பல்கலைக் கழகங்கள் ஸ்பெயின், இதாலி, தெற்கு பிரான்ஸ் போன்ற தெற்கு ஐரோப்பிய நாடுகளில் தோன்றின போலக்ஞ (Bologna) பல்கலைக் கழகம் அவற்றுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். அங்குள்ள ஆல்ப்ஸ் மலையின் இரு புறமும் வாழ்ந்த மாணவர்கள் தாம் முதன் முதலில் யுனிவர்ஸிடாஸ் (Universitas) என்ற கூட்டுறவுக் கழகத்தைத் தோற்றுவித் தார்கள். அதிலிருந்தே பல்கலைக் கழகம் என்று பொருள் படும் யுனிவர்ஸிடி என்ற சொல் பிறந்தது. தங்களது உணவு, உடை, தங்குமிடம் இவற்றை நகர அதிகாரிகள், செல்வர்கள் ஆகி யோரிடம் நியாயமான கட்டணங்களுக்குப் பெறவே அங்ஙனம் அவர்கள் ஒன்று கூடினர். மற்றும் அவர்களே பார்த்து தங்களது பேராசிரியர்களை நியமித்துக் கொண்டனர். ஆசிரியர்களின் ஊதியங்களை அவர்களே நிர்ணயித்தனர். ஓர் ஆசிரியரை அவர் களுக்குப் பிடிக்கவில்லையாஞல், உடனே அவர்கள் அவரது வகுப்புக்குப் போவதையும் ஊதியத்தை வழங்குவதையும் நிறுத்தி விடுவர். ஓர் ஆசிரியர் அளவுக்கு மீறி நீண்ட நேரம் சொற் பொழிவாற்றிஞலோ அல்லது வகுப்புக்குக் காலங்கடந்து வந்தாலோ அல்லது வராமற் போஞலோ அவர் மீது அபராதம் விதிக்கும் உரிமையை மாணவர் குழு பெற்றிருந்தது. பாடத் திட்டத்தை வகுத்தவர்களும் மாணவர்களே யாவர்.

ஆசிரியர்களால் மட்டுமே அமைக்கப்பட்ட பல்கலைக் கழகத் துக்குப் பாரிஸ் பல்கலைக் கழகத்தை ஒரு சான்ருகக் காட்டலாம். பொதுவாக வட ஐரோப்பிய நாடுகள் அம்முறையிலேயே நிறுவப் பட்டன. பீட்டர் அபெலார்டு (Peter Abelard 1079-1142) என்ற புகழ் பெற்ற ஆசிரியர் பாரிசுக் கருகில் அமைத்த சிறு பள்ளியே நாளடைவில் பெரும் பல்கலைக் கழகமாக மாறியது. அவ்வா சிரியரது நூதனமான வாதங்களைக் கேட்க மாணவர்கள் ஆயிரக் கணக்கில் அவரிடம் கூடினர். கற்பிக்கும் திறமை அவரிடம் அபரிமிதமாகக் காணப்பட்டது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், ஆழ்ந்த படிப்பு, எதிரிகளை மடக்கும் திறன் முதலிய அவரது தனிப் பண்புகள் மாணவர்களைக் காந்தம் போல் ஈர்த்தன. எண்ணிக்கை அதிகமானதால் ஆசிரியர் ஒரு குழுவாகத் தம்மை அமைத்துக் கொண்டார்கள்.

பாரிஸ் பல்கலைக் கழகம் ஏனைய இடைக் காலப் பல்கலைக் கழகங்களுக்கு ஒரு வழி காட்டியாக இருந்தது. அக் கழகத்தில் இளங்கலைஞர் பள்ளி, முது கலைஞர் பள்ளி என இருவகைப் பள்ளிகள் இருந்தன. இளங்கலைஞர் பள்ளியில், மாதா கோயிற்

பள்ளிகளில் கற்பிக்கப்பட்ட எழுவகை தாராளக் கலைகளே கற்பிக்கப்பட்டன. அவற்றில் தேர்வுற்றோர் இளங்கலைஞர் (B A.) என்ற பட்டம் பெற்றார்கள். அக்கலைகளைக் கற்பிக்கும் அளவுக்குத் தங்களைத் தயார் செய்து கொள்கிறவர்கள் ஆரம்பப் பாடங்களுக்கு ஆசிரியர்களாகப் பணியாற்ற அநுமதிக்கப் பட்டனர். சமயக் கோட்பாடு (Theology) சட்டம், மருத்துவம் போன்ற பாடங்களில் தனிப் பயிற்சி கொடுத்த பள்ளிகள் முது கலைப் பள்ளிகள் எனப்பட்டன. அவற்றில் தேர்வுற்றார் முது கலைஞர் (M.A.) என்ற பட்டத்தை அடைந்தனர்; ஏற்கனவே இளங்கலைஞர் பட்டத்தைப் பெற்றவர்களே முதுகலைஞர் பட்டத்தை அடையத் தகுதி படைத்தவர்கள். முதுகலைஞர் பட்டம் பெற்றவர்களே கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்ற முடியும். அவர்கள் சட்ட நிபுணராகவோ, மருத்து வராகவோ, சமய குருமாராகவோ கூடத் தொழிலில் இறங்க லாம். இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகளுக்குத் தனிப்பட்ட உடைகளும் தொப்பிகளும் இருந்தன.

இளங்கலைப் பள்ளிகளின் தலைவர் ரெக்டார் (Rector) என்பவர். அவர் கழக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுவார். மாணவர்கள் அவர்களது சொந்த ஊர்களுக்கு ஏற்ப நேஷன்கள் (Nations) என்ற வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கப் பெறுவர். ஒவ்வொரு குழுவுக்கும் பிராக்டர் (Proctor) என்ற தலைவர் இருப்பார்; ஒவ்வொன்றுக்கும் தனி வாழிடமும், உணவுக் கூடமும், வழிபாட்டுக் கூடமும் இருக்கும். இத்தகைய நேஷன்கள் என்ற குழுக்களே நாளடைவில் வெவ்வேறு கல்லூரி களாக வடிவெடுத்தன. முதுகலைஞர் பள்ளிகளின் தலைவர் டீன் (Dean) எனப்பட்டார். சமயக் கோட்பாடு, தத்துவம், சட்டம், மருத்துவம் ஆகிய நான்கு பாடங்களுக்கும் நான்கு தனித் தலைவர்கள் இருந்தனர்.

ஆதியில் மடாலயப் பள்ளிகளாயும் மாதா கோயிற் பள்ளி களாயுமிருந்தவைகளே நாளாவட்டத்தில் பல்கலைக் கழகங்களாக மலர்ந்தன. முதலில் அவை தாமாகவே தோன்றின வெனினும், பிற்காலத்தே அவற்றைப் போப் பாண்டவர் தமது அதிகாரத்தின் கீழ்க் கொணர்ந்தார். ஏற்கனவே ஏற்பட்டிருந்த பல பல்கலைக் கழகங்களுக்கு அவர் உரிமைப் பட்டயங் (Charters) களை வழங்கினார். அரசர்களின் உதவியைக் கொண்டும் அவர் பல பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தார். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு துறையில் தனிப்பட்ட நிபுணத்வத்தை அடைந்தது. சான்றாக இதாலியிலிருந்த சாலர்னோ (Salerno)

பல்கலைக் கழகம் மருத்துவத்திலும், போலக்னு பல்கலைக் கழகம் சட்டப் படிப்பிலும், பாரிஸ் பல்கலைக் கழகம் சமயக் கோட்பாடு, தத்துவம் ஆகிய பாடங்களிலும், தனித் திறமை கொண்டு விளங்கின. சட்டத்தில் தனிப் பயிற்சி பெற விரும்பினோர் போலக்னேவுக்கன்றி வேறிடம் செல்லார்கள்.

தொடக்கத்தில் பல்கலைக் கழகங்களில் ஏழை மாணவர்கள் மட்டுமே குடியிருந்தார்கள். நாளடைவில் எல்லா மாணவர் களுமே ஒரே இடத்தில் வாழ்ந்து அங்கேயே பயிற்சி பெறும் வழக்கம் ஏற்பட்டது. இத்தகைய வழக்கம் ஐரோப்பாவில் அருகி விட்ட போதும், இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் இன்றும் நீடித்து செயல்பட்டு வருகிறது. பல கல்லூரிகள் ஒரே இடத்தில் ஏறக்குறைய சுயேச்சையுடன் செயல்பட்டு வருகின்றன. தாய்க்கல்லூரிக்கு ஏனையவை மிகக் குறைந்த அளவிலேயே கட்டுப்பட்டுள்ளன. ஒருவகையான கூட்டாட்சி முறை அவற்றிடையே காணப்படுகிறது.

**பல்கலைக்கழக வாழ்க்கை :** பல்கலைக் கழகங்களில் ஆயிரக் கணக்கில் மாணவர்கள் பயின்றனர். பாரிஸில் மட்டும் 50,000 மாணவர்களும் ஆக்ஸ்போர்டில் 10,000 மாணவர்களும் பயின்ற தாய்த் தெரிகிறது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் லத்தீன் பொது பயிற்றுமொழியாயிருந்ததால் மாணவர்கள் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து மற்றொன்றுக்கு எளிதில் மாறிக்கொள்ள முடிந்தது. பல்கலைக் கழகத்தில் படித்தவர்களெல்லாருமே கிளார்க்குகள் (Clerks) அல்லது குருமார்கள் என அழைக்கப் பட்டனர். எனவே குருமார்களுக்குரிய தனிச்சலுகைகளை அவர் களும் பெற்றனர். யாருக்கும் அவர்கள் வரி செலுத்த வேண்டிய தில்லை. போர்களில் பணி புரிய வேண்டியதில்லை. குற்றம் ஏதேனும் செய்யுமி தனிப்பட்ட சமய நீதிமன்றங்களில் மட்டுமே அவர்கள் விசாரிக்கப் படலாம். கடுங்குற்றங்களுக்கன்றி அவர்களை சிறை செய்யக்கூடாதெனை மன்னர்கள் ஆணையிட்டனர்.

மாணவர்கள் குளிர் மிகுந்த மண்டபங்களில், கரடுமுரடான பலகைகளின் மீதமர்ந்தே பாடங்கேட்டனர். மிக அதிகாலை யிலேயே பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நூல்கள் கிடைப்பது அரிதாதலின் அவர்கள் ஆசிரியர் சொல்வதை அப்படியே குறிப் பெடுத்துக் கொண்டனர். சொற்பொழிவு முறையையே பேராசிரி யர்கள் பின்பற்றினர். மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் முறையே தேர்வு முறையாயிருந்தது. அவ்வப்போது ஒருசில விவாதங்களும் நடைபெற்றன. வாதங்களில் ஆசிரியர்களும், மாணவர்களும்

ஒருங்கே கலந்து கொண்டனர். வெளியூரிலிருந்து வரும் சிறந்த பேராசிரியர்களின் சொற்பொழிவுகளும் ஒரோ வழி ஏற்பாடு செய்யப்பட்டன. சிறந்த நூலாசிரியர்களின் கூற்றுக்களை எடுத்து விளம்புவதில்தான் விவாதத்திறமை காட்டப்பட்டது. சொந்த கருத்துக்களைக் கூற எவரும் அஞ்சினர்.

பெரும்பான்மையான மாணவர்கள் ஏழைகளாயிருந்தனர். அவர்களது செலவுகளைத் திருச்சபைகள் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டன. ஓய்வு நேரங்களில் வேலை செய்தும், செல்வந்தர்களிடம் பிச்சை வாங்கியும் படித்த மாணவர்கள் பலர். பெரிய பிரபுக்களின் மக்கள் மட்டுமே சிறிது ஆடம்பரமாக வாழ்ந்தனர்.

ஆசிரியர்களும் மாணவர்களும் அவரவர்க்குரிய சீர் உடைகளை அணிந்து கொண்டே வகுப்புகளுக்குச் சென்றனர். அவ்வப்போது நாட்டியங்கள் நடனங்கள் விருந்துகள் முதலியன நடைபெறும். மற்போர் போன்ற மூர்க்கமான விளையாட்டுகளிலும், சதுரங்கம் போன்ற சாத்வீக விளையாட்டுகளிலும் அவர்கள் பங்கு கொண்டனர். பந்தாட்டம், ஓட்டம், தாண்டல் போன்ற விளையாட்டுகளிலும் அன்னார் பங்கேற்றனர்.

அக்காலத்தில் படிப்பில் கவனம் செலுத்தாத முரட்டு மாணவர்களும் பலர் இருந்தனர். அவர்களுள் சிலர் நகருக்குள் சென்று அங்குள்ள மக்களை வம்புக்கிழுத்தனர்; அருகிலுள்ள காடுகளுக்குச் சென்று மிருகங்களை வேட்டையாடினர். புதிதாய்க் கல்லூரியில் சேர்ந்த மாணவர்களுக்குப் பழைய மாணவர்கள் பல விசித்திரமான கட்டளைகளை இட்டு இழிவான காரியங்களைச் செய்யச்சொல்லி வேடிக்கை காட்டும் வழக்கமும் அக்காலத்தே இருந்தது. எல்லோரும் கடைப்பிடித்து வருகின்ற கொள்கைகளுக்கு மாறுபட்ட கொள்கை உடைய எத்தர்களையும், உலக ஆசை கொண்ட உலுத்தர்களையும், காமாந்தகர்களையும் பல்கலைக் கழகம் உற்பத்தி செய்து வெளியே விடுவதாகப் பலர் குறை கூறினர். ''சமயக் கோட்பாடுகளைப் பாரிஸிலும், சட்டங்களைப் போலக்னேவிலும், மருத்துவத்தை மாண்ட் பெல்லியரிலும் (Mont pellier) கற்ற மாணவர்கள் இறைவனுக்கு இனியதோர் நல்வாழ்க்கை வாழ மட்டும் எங்குமே கற்றுக் கொள்ளவில்லை'' என்று பலர் கூக்குரலிட்டனர். நாட்டர் டாம் திருக்கோயில் பலி பீடத்தின் மீது சதுரங்கம் விளையாடக் கூடாது எனப் பாரிஸ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப் பட்டதாக அறிகிறோம். இங்ஙனம் இடைக்காலப் பல்கலைக் கழக மாணவர்களிடையே சில சமயங்களில் ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும் காணப்பட்டது.

## கலைகளின் நிலை

### இலக்கியம், மொழி

ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவன அதன் இலக்கியமும், மொழியுமேயாகும். சமுதாயத்தில் ஏற்படும் மாறுபாடுகளுக்கேற்ப அவை மாறுபடு கின்றன. மக்கள் பிறப்பதும் இறப்பதும், பழக்க வழக்கங்கள் மாறுவதும் சதா நிகழ்ந்து கொண்டிருப்பது போன்று ஒரு மொழி யிலும் பல சொற்கள் இறப்பதும், பல புதிய சொற்கள் பிறப்பதும் சாதாரணமாக நிகழ்ந்து வருகின்றது. சில காலங்களில் சீருஞ் சிறப்புமுற்றுத் திகழ்கின்ற சில மொழிகள் சில காலங்களில் பேசுவாரற்று இறந்து விடுகின்றன. அத்தகைய ரகத்தைச் சேர்ந்ததுதான் லத்தீன் மொழியாகும். இடைக்கால ஐரோப்பா வில் தந்நிகரற்று கொடிகட்டிப் பறந்த லத்தீன் மொழி இன்று இறந்த மொழிகளுள் ஒன்றுகக் கருதப்படுகிறது.

### லத்தீன் மொழி

பொது மொழி, பொது திருச்சபை, பொதுப்பேரரசு இவை இடைக்கால ஐரோப்பாவின் சிறப்பியல்கள். அக்காலத்தே சமய குருமார்கள் சட்ட நிபுணர்கள், வழக்கறிஞர்கள், ராஜதந்திரிகள், எழுத்தாளர்கள், மாணவர்கள் யாவரும் பயன்படுத்திய மொழி லத்தீன் ஒன்றேயாம். பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் அதுவே பயிற்று மொழியாயிருந்தது. அறிஞர்களின் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் அது திகழ்ந்தது. சிறப்பாகச் சமய குருமார்கள் அதை நன்கு படிக்கவும், எழுதவும் தெரிந்திருந்தனர். இதாலியில் பிறந்து அது பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. பண்டைக்கால தூய்மையான லத்தீன் மொழியை யாரும் பேசவில்லை. புதிதாக ஐரோப்பாவில் வந்து புகுந்த முரட்டு வகுப்பினரின் மொழிச்சொற்களோடு கலந்த ஒரு வகையான கலப்பு மொழியே அறிஞர்களின் பொது மொழியாக விளங்கியது. சுதேச மொழிகள் (Vernacular) மொழியின் தூய்மையைக் காக்க அறிஞர் பெருமக்கள் ஒருபக்கம் போராடிக் கொண்டிருந்த அதே வேளையில், இன்னொரு பக்கத்தில் எளிய சொற்களும், எளிய இலக்கணமும் கொண்ட கொச்சையான லத்தீன் மொழி வளரலாயிற்று. அது வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபட்டது. நாளடைவில் ஒவ்வொரு வட்டாரமும், தனது தாய்மொழியை வளமாக்கிக் கொண்டது. லத்தீனிலிருந்து பல சொற்களை அது கடன் வாங்கிக்கொண்டதே எனினும், தனக்கே உரிய பல சொற்களையும் அவை உண்டாக்கிக் கொண்டன.

அவற்றை லத்தீன் மொழிப்பண்டிதர்கள் அடிமை மொழிகள் எனப் பொருள்படும் வெர்னேகுலர் மொழிகள் (Vernacular tongues) என்று அழைத்தனர். எனினும் அவை படிப்படியாக இலக்கிய மொழிகளாக வடிவெடுத்தன.

தெற்கு ஐரோப்பிய நாடுகளில், அதாவது இதாலி, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் லத்தீன் மொழியை அடிப்படையாகக் கொண்ட பேச்சு மொழிகள் பல எழுந்தன. அவை ரொமான்ஸ் அல்லது ரோமானிய மொழிகள் (Romance or Romanic) என அழைக்கப்பட்டன. வட பிரான்ஸில் பிரெஞ்சும், தென் பிரான்ஸில் புரோவென்சலும் (Provencal), ஸ்பெயினில் கேடலியனும் (Catalian) போர்ச்சுகலில் போர்த்துகீஸியமும் (Portuguese) ருமேனியாவில் ருமேனியனும் (Rumanian) இங்ஙனம் எழுந்த மொழிகளாகும். வட ஐரோப்பாவில் டியூடானிய அல்லது ஜெர்மானிய மொழிகள் (Teutonic) பல எழுந்தன. அவை ஜெர்மானிய முரட்டு வகுப்பினரின் பேச்சு மொழியினடிப்படையில் அமைந்தவை. ஜெர்மன், டச்சு, ஆங்கிலம், பிளமிஷ் (Flemish) டேனிஷ், நார்வீஜியன், ஸ்வீடிஷ் மொழிகள் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. கிழக்கு ஐரோப்பாவில் தோன்றிய ஸ்லாவிக் (Slavic) மொழிகள் மூன்றுகர் ரகத்தைச் சேர்ந்தவை. ருஷியன், போலிஷ், செக் போன்ற மொழிகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை. மேலே ஐரோப்பாவின் கோடியில் கெல்டிக் (Celtic) இனத்தைச் சேர்ந்த ஸ்காட்டிஷ், வெல்ஷ் ஐரிஷ் போன்ற மொழிகள் வடிவெடுத்தன. பைஷான்ஸியப் பேரரசு நாடுகளில் கிரேக்கம் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. மற்றும் மெகயர் (Maygar) பின்னிஷ் (Finnish) போன்ற துரானிய மொழிகளும் ஹங்கேரி, பின்லாந்து போன்ற நாடுகளில் தோன்றின. இவையேயன்றி, ஒவ்வொரு மொழியிலும் பல கிளை மொழிகள் (Dialects) ஆங்காங்கே தோன்றின.

**லத்தீன் இலக்கியம்**

இடைக்காலத்தின் பிற்பகுதியில், பண்டைய லத்தீன் இலக்கியங்கள் பல புதிய மெருகுடன் வெளிவந்தன. சிறப்பாக பைபிள் (Bible) என்ற கிறிஸ்தவ வேத நூலும் வர்ஜில் (Virgil) என்ற கவிஞரின் கவிகளும் நாடெங்கும் படிக்கப்பட்டன. இவையேயன்றிப் பல புதிய நூல்களும் இக்காலத்தே உருவாக்கப்பட்டன. இடைக்கால ஐரோப்பிய இலக்கியங்கள் வெறுஞ்சமயச் சார்புடையவை என்ற குற்றச்சாட்டுக்கு விதிவிலக்காக அமைந்த பல நூல்கள் இக்காலத்தே தோன்றின. கிரேக்க, ரோமானிய, இஸ்லாமியக் கருத்துக்கள் ஒன்று கலந்த கலப்பில் விளைந்தவையே

இவ்விலக்கியங்களாகும். இவற்றில் மனிதருக்கே உரிய ஆசாபாசங்களும், மனோபாவங்களும், உணர்வுகளும் ததும்பி நின்றன. அமரத்வத்துக்குப் பதிலாக மனிதத்வம் (Humanism) அவற்றில் ஊடாடுவதை நன்கு அறியலாம். வாழ்க்கையை நன்கு வாழ வேண்டுமென்ற ஆசை, பொங்கித் ததும்பும் மகிழ்ச்சி, பெருக்கெடுத்தோடும் உணர்ச்சி வெள்ளம் இவைகள் அவற்றில் எதிரொலித்தன. ஏறக்குறைய நவீன மலர்ச்சிக்கால இலக்கியங்கள் போன்றே அவை காட்சியளித்தன.

## லத்தீன் கவிதைகள்

இடைக்கால ஐரோப்பாவில் ஆங்காங்கே எழுந்த பல்கலைக் கழகங்களிலும், மாதாகோயிற் பள்ளிகளிலும், லத்தீன் மொழி பெரிதும் ஓம்பப்பட்ட காரணத்தால் லத்தீனில் பல உயர்ந்த கவிதைகள் மலர்ந்தன. கோலியார்டுகள் (Goliards) என்ற ஒரு நாடோடிப் புலவர் கூட்டம் பாடியளித்துள்ள இன்சுவைப் பாடல்கள் இக்காலக் கவிதைகளுக்கு நல்ல எடுத்துக் காட்டுகளாகும். கோலியார்டுகள் என்போர் நம் தமிழ்நாட்டில் சங்க காலத்தில் வாழ்ந்த பாணர்களைப் போன்ற புலவர்கள். ஓரிடத்தில் தங்காது அவர்கள் பயணம் செய்து கொண்டேயிருந்தனர். அவர்களிற் பலர் துறவிகளும் மதகுருமார்களுமாவர். யாதானுமோர் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்காகப் பயணம் செய்த மாணவர்களும் சிலர் அக்கூட்டத்திலிருந்தனர். அவர்கள் யாவரும் கோலியாஸ் (Golias) என்ற ஒரு குருவின் சீடர்கள் என்று கூறிக் கொண்டனர். உண்மையில் கோலியாஸ் என்று யாரும் இல்லை. அவர் ஒரு கற்பனைக் குரு. அவரைத் துறவி என்றனர் சிலர். பிசாசு என்றனர் வேறு சிலர். உண்மையில் கோலியார்டுகள் சாத்தானின் சீடர்கள் போலவே நடந்து கொண்டனர். ஏனெனில் அவர்கள் தங்களது பாடல்களில் பாவையரின் அழகையும், இயற்கையின் எழிலையும், மாறி மாறி வரும் பருவங்களின பாங்கையும் வர்ணித்தனர். மயக்க மூட்டும் மதுவைப் பருகுவதிலும், மகிழ்ச்சியூட்டும் மகளிரை மருவுவதிலும் சூதாட்டத்தில் ஈடுபடுவதிலும் வருகின்ற அலாதியான இன்பத்தைப் பற்றி அவர்கள் எண்ணற்ற செய்யுள்களை யாத்தனர். மற்றும், சமயச் சடங்குகளைச் சாடியும், புனிதப் பொருளை (Sacrement) பொய்யென்றுரைத்தும், விவிலியக் கதைகளை வேடிக்கை செய்தும் திருச்சபையின் செல்வத்தை எள்ளி நகையாடியும் பாட்டுக்கள் பல புனைந்தனர். பசுத்தோல் போர்த்த புலிகள் எனவும், பிசாசின் பிரதிநிதிகள் எனவும் பிஷப்புகள் பலர் இவர்களை ஏசினர். எனினும் இவர் தம்

நையாண்டிப் பாடல்களைப் பல பிரபுக்களும் சாதாரண மக்களும் ரசித்தனர். பொன்னும் பொருளும் கொடுத்து ஆதரித்தனர். கிறிஸ்தவ மதத்தால் விதந்தோதப்பட்ட துறவற வாழ்க்கையை எதிர்த்து எழுந்த கவிகளுள் இவையே முதலாவதாகும். ஆர்ச்சி பொயடா (Archipoeta 1161) என்ற கோலியார்டியின் கவிதை களில் நல்லொழுக்கங்கள் தேவையற்றவை, தீயொழுக்கங்களில் ஆழ்ந்துகிடப்பதே ஆநந்தம் என்றும் பாடப்பட்டுள்ளது. கார்மினு புரானு (Carmina Burana) என்ற கவிதையில் காதலின் பல்வேறு வகைகள் வர்ணிக்கப் படுகின்றன; மது, மாது இவை பற்றிய கவிகளே இவர்களால் பெரும்பான்மையாக புனையப் பட்டன.

மேற்கண்ட உலகியல் கவிதைகளேயன்றி சமயச்சார்புடைய பல செய்யுள்களும் இக்காலத்தே இயற்றப்பட்டன. அழகிய சந்தங்களைக் கொண்ட செய்யுள் வடிவிலேயே இக்கால அறிஞர்கள் தமது கருத்துக்களை வாரி வழங்கினர்; அஸிஸியைச் சேர்ந்த ஃபிரான்ஸிஸ் (St Francis of Assisi) என்ற துறவியின் சீடரான தாமஸ் எழுதிய டயஸ் இரா (Dies Irae) என்ற கவிதை பல புனிதமான கருத்துக்களை உடையது. தாமஸ் அக்வினஸ் (Thomas Aquinas) என்பார் எழுதியுள்ள டான்டம் எர்கோ (Tantum ergo) போன்ற கவிதைகளும், க்ளேர்வாவைச் சேர்ந்த பெர்னர்டு (Bernard of Clairvaux) என்ற பெரியாரின் பாடல்களும் பக்திச் சுவை நிரம்பியவையாகும். இக்காலத்திலும் கூடக் கிறிஸ்தவர்கள் பலர் பெர்னர்டின் பாடல்களை மனங் கனிந்து பாடி இன்பமடைகின்றனர். பீடர் டாமியன் (Peter Damian 1007-1072) என்ற புலவர், கிறிஸ்துவின் அழைப்பை ஒரு காதலனின் அழைப்புக்கு ஒப்பிடுகிறார், ஜீவாத்மாவை அக்காதலுக்கு ஏங்கி நிற்கும் பருவப் பெண்ணாக உவமித்துப் பல பாடல்களை அவர் எழுதியுள்ளார். நமது சமயாசாரியார்களின் நாயக நாயகி பாவனையோடு கூடிய பக்தியை அவரது பாடல்கள் பிரதிபலிக்கின்றன. ஹில்டிபெர்ட் (Hildebert) என்ற ஆர்ச் பிஷப் ஓர் ஒப்பற்ற கவிஞர். சிதைந்து போன ரோம் நகரைப் புகழ்ந்து அவர் பாடியுள்ள பாடல் உள்ளத்தை உருக்கும் தன்மையதாகும்.

**லத்தீன் மொழிச் சட்ட நூல்கள்:** ஜஸ்டினியன் காலத்திய உரோமானியச் சட்டமுறையை ஒட்டிப் பல சட்டநூல்கள் எழுதப்பட்டன. கத்தோலிக்க சமய நடவடிக்கைகளை ஒழுங்குப் படுத்தப் பல சட்டங்கள் எழுந்தன அவற்றை எல்லாம் தொகுத்து கிராஷியன் (Gratian) ஒரு நூலை வெளியிட்டார்.

போப்பாண்டவர்களாலும், பேரரசர்களாலும் வெளியிடப் பட்ட ஆணைகள், அவற்றைப் பற்றிய விரிவுரைகள் முதலியன லத்தீன் மொழியில் எழுதப்பட்ட சட்டத்தொகுதியில் இடம் பெற்றன.

**லத்தீனில் வரலாற்று நூல்கள்**

இடைக்கால வரலாற்று நூல்கள் சமயக் கொள்கைகளை மெய்ப்பிக்கவும், வீரர்களைப் போற்றவுமே பயன்படுத்தப் பட்டன. நிகழ்ச்சிகளின் காரண காரியங்களை அவை ஆராய முற்படவில்லை. மடாலயங்களைப் பற்றிய வரலாறுகளில் அவ்வக் காலத்தே நடைபெற்ற உலகியல் நிகழ்ச்சிகள், வானியல் உண்மைகள் முதலியன இடம் பெற்றுள்ளன எனினும், நம்பத் தகாத பல பொய்மையான கருத்துக்களும் அவற்றில் பெரிதும் இடம் பெற்றுள்ளன. எனினும் மடாலயங்களும், துறவிகளுமே தத்தம் வரலாறுகளை எழுதவென்று தனிப்பட்ட ஆட்களை அமர்த்தியவர்களாவர். மற்றும் உலக வரலாற்றைப் பற்றிப் பொதுவாக எழுதியவர்களும் உண்டு. சுஜார் (Suger 1081-1151) என்ற பிரெஞ்சு மடாதிபதி தமது மடத்தின் வரலாற்றை மட்டு மின்றி ஆறும் லூயி, ஏழாம் லூயி ஆகிய பிரஞ்சு மன்னர்களைப் பற்றிய வரலாறுகளையும் எழுதி வைத்துள்ளார். ஃபிரீஸிங் (Frizing -1114-1158) என்ற ஜெர்மானிய பிஷப், உலக வரலாறு ஒன்றையும், ஃபிரடரிக் பார்பரோசா (Frederick Barbarossa) என்ற பேரரசரின் வரலாறு ஒன்றையும் லத்தீனில் எழுதி யுள்ளார். ஆர்டரிகஸ் வைடாலிஸ் (Ordericus Vitalis) என்ற அறிஞர் (1075-1143) ''ஹிஸ்டாரிகா எக்லீசியாஸ்டிகா'' (Historica Ecclesiastica) என்ற விரிவான வரலாற்று நூலை எழுதியுள்ளார்.

**மொழி பெயர்ப்பு நூல்கள் :** மூல நூல்களேயன்றி பல மொழி பெயர்ப்பு நூல்களும் லத்தீன் மொழியில் இக்காலத்தே வரையப் பெற்றன. அராபியம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் இருந்த அறிவுச் செல்வங்களை எல்லாம் பல அறிஞர்கள் லத்தீன்மொழியில் மொழி பெயர்த்து வழங்கினர்கள்,

**சுதேச மொழி இலக்கியங்கள்** (Varnacular Literature)

உயர்ந்த கருத்துக்களைப் புலப்படுத்தத் தக்க ஆற்றல் இல்லாத கொச்சை மொழிகளாக (Vulgar languages) முதலில் கருதப்பட்ட சுதேசமொழிகள் நாளடைவில் வளம்பெற்று பல இலக்கியங்களை ஈன்றெடுத்தன. மதகுருமார்கள் கோயிலிலும்,

பள்ளியிலும் லத்தீன் மொழியைப் பயன்படுத்திய போதிலும், சாதாரண மக்களிடையே அவரவரது தாய்மொழிகளிலேயே சமய உண்மைகளைப் போதித்தனர். சமய நம்பிக்கையையும் பக்தியையும் மக்களிடை வளர்க்க அதுவே உற்றவழி என அவர்கள் நம்பினர். அதுபோன்றே அரசர்களும், தலைவர்களும் தமது சட்டங்களையும், ஆணைகளையும் பொதுமக்களின் பேச்சு மொழிகளிலேயே பிறப்பித்தனர்.

சுதேச மொழிகளில் முதன் முதலில் எழுந்த நூல்கள் வீர காவியங்களின் (Heroic Epics) வடிவத்திலேயே இருந்தன. வீரம், விசுவாசம், மானம் இவையே அவற்றின் கருப்பொருளாய்த் திகழ்ந்தன. மன்னர்களும், அவர்தம் படை வீரர்களும் போரில் காட்டிய வீரத்தையும் வெற்றியையும் பாடிக்கொண்டு பல புலவர்கள் ஊர் ஊராய்ச் சென்றனர். பட்டி தொட்டிகளிலும், மாட மாளிகைகளிலும் ஒருங்கே அவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. பியோவுல்ஃப் (Beowulf) என்ற வீர காவியம் முதன் முதலில் தோன்றியது. ஆங்கிலோ சாக்ஸனிய மொழியில் எழுதப்பட்ட அவ்வுணர்ச்சிக் கவிதை பியோவுல்ப் என்ற வீரனின் தீரச்செயல்களை வர்ணிக்கிறது. கடலுக்கடியில் உள்ள குகையில் வாழ்ந்து வந்த ஒரு வேதாளத்தை அணுகி வீராவேசமாகப் போராடி அவ்வீரன் வெற்றி பெறுகின்ற காட்சியை காவியம் நன்கு சித்தரிக்கிறது. ஜெர்மன் மொழியில் புனையப் பட்ட நிபெலெஞ்சன்லீட் (Nibelungenlied) எனும் வீரகாவியத் தலைவனும் வேதாளமொன்றைக் கொன்று, நெருப்பு வளையத்துள் துணிவுடன் புகுந்து சென்று தூங்கும் அழகி ஒருத்தியைக் காப்பாற்றுகிறான். பிரஞ்சு மொழியில் பாடப்பெற்ற சாங் ஆஃப் ரோலண்ட் (Song of Roland) என்ற பாடல் வீரகாவியங்களிலேயே தலைசிறந்த தொன்றாகும். சார்லிமேன் (Charlemagne) பேரரசரின் ஒப்பற்ற தளகர்த்தனான ரோலண்ட், ஸ்பெயினிலுள்ள மூர்களை வென்று வாகை சூடித் தன் நாடு திரும்பும் வேளையில், பாஸ்க்குகள் (Basques) என்ற எதிரிகளால் பின்னிலிருந்து தாக்கப்பட்டபோது, பேரரசரைத் துணைக்கழையாமலேயே தனித்து நின்று அவர்களை எதிர்த்துப் போராடி மடிந்த நிகழ்ச்சியானது மேற்கண்ட காவியத்தில் சோகமும் வீரமும் ஒருங்கே நிறைந்த பாடல்களால் வர்ணிக்கப் படுகிறது. இது போன்றே மை, ஸிட் (My cid) என்ற ஸ்பானிய வீரகாவியத்திலும், ராட்ரிகோ டயாஸ் (Rodrigo Diaz) என்ற கிறிஸ்தவ நைட் வீரன் மூர்களை எதிர்த்து வீராவேசமாகப் போராடும் காட்சி சித்தரிக்கப்படுகிறது. மூர்களை ஒழித்துக் கட்டும் வரை ஊர் திரும்புவதில்லை என்று சூளுரைத்து, தனது மனைவி மக்களைக்

கன்னிமாடத்தில் விட்டு விட்டுச் செல்லும் டயாஸ் நிகழ்த்திய வீரசாகசங்கள் பல. மற்றும் அவன் ஏழைகள் குஷ்டரோகிகள் முதலியோரை ஆதரிக்கும் ஈவிரக்கம் கொண்ட நல்லோனுகவும் விளங்குகிருன். ஸ்பானியர்களின் இதயங்களில், டயாஸ் ஒரு நீங்காத இடத்தைப் பெற்றுள்ளான். நார்ஸ்மென், ஐஸ்லாந்தியர்கள் ஆகியோரும் பல வீர காவியங்களைப் படைத்துள்ளனர். ஒரு தலைவனுக்கு மாருத விசுவாசம் பூண்டு அவனுக்காக உயிரையே ஈந்த வீரர்களின் வீரத்தையே இக் கவிதைகள் விதந்தோதுகின்றன. ஆண்மையை அளவுக்கு மீறிப் போற்றும் அவை பெண்மையைப் புறக்கணிக்கின்றன. இரண்டாந்தரமான பாத்திரங்களாகவே அவர்கள் ஒரோ வழிக் குறிப்பிடப் பெறுகின்றனர்.

பனிரெண்டு, பதின்மூன்றும் நூற்ருண்டுகளிலெல்லாம் நிலமானிய சமுதாயம் நல்ல பண்பட்ட நிலையை எய்தி விடுகிறது. பழைய முரட்டுத்தனமும், போர்ப் பழக்கங்களும் ஓரளவு குறைந்து விடுகின்றன. இஸ்லாமியமும், கிறிஸ்தவமும் அவர்களிடையே ஓர் இளகிய மனப்பான்மையைத் தோற்றுவிக்கின்றன. அதன் விளைவாக வீரர்களிடையே கண்ணியமிக்க நடத்தையும் ஜீவகாருண்யமும் வளர ஆரம்பிக்கின்றன. பெண்கள் குழந்தைகள் நலிந்தோர் ஆகியோரிடம் அவர்கள் ஆழ்ந்த பரிவு காட்டுகின்றனர். எனவே இக்காலத்தே எழுந்த கவிதைகளில் வீரத்தோடு பாசமும் பரிவும் பளிச்சிடுவதைப் பார்க்கிருேம். காதலும் கனிவும் அவற்றில் ததும்புவதைக் காண்கிருேம். தென் பிரான்சைச் சேர்ந்த புரோவென்ஸ் (Provence) மாநிலத்தில் வாழ்ந்த ட்ருபதூர்கள் (Troubadours) என்ற நாடோடிக் கவிஞர்களும், ஜெர்மனியில் வதிந்த மின்னிசிங்கர்கள் (Minnesingers) என்ற பயணப் பாடகர்களும் மேற்கண்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் கவிதைகளை நாடெங்கும் பாடிக்கொண்டு சென்றனர். காதலர்களைப் பற்றியும், அவர்கள் தங்களது காதலிகளை அடையப் படும் அல்லல்களைப் பற்றியும், ஆரம்பத்தில் அவர்களை வெறுத்து ஒதுக்கும் காதலிகள் நாளடைவில் காதலர்களின் கரங்களில் வீழ்வதைப் பற்றியும் இக் கவிஞர்கள் உணர்ச்சியோடு பாடினர். மக்கள் யாவரும் அத்தகைய பாடல்களுக்கு அப்படியே அடிமையாயினர். ரொமான்ஸ் (Romance) என்று அழைக்கப்பட்ட அவர் தம் காதற் சுவைப் பாடல்களில் பெண்களுக்கு ஏற்றமிக்க இடமளிக்கப் பட்டது. சாத்தானின் கருவிகள் என சமய குருமார்களால் பழிக்கப் பெற்ற பெண்கள் இப்போது வானளாவப் புகழப்பட்டனர். அவர்களைக் காதல் தேவதைகளாக

ட்ருபதார்கள் வர்ணித்தனர். அவர்கள் மீது காதலர்கள் செலுத்தியது வெறும் மிருக உணர்ச்சியின் பாற்பட்டதாக விவரிக்கப்படவில்லை. தெய்வீகத் தன்மை பொருந்தியதாக அக்காதல் காட்டப்பட்டது. தனது காதல் தெய்வத்தின் கனிவு மிக்க பார்வையிலும், அன்பு கனிந்த புன்னகையிலும், அல்லது அவளது கையால் அளிக்கப்பட்ட ஒரு சிறு பரிசிலிலும் முழு திருப்தியடைந்தார்கள் அக் காதலர்கள். ட்ருபதார்கள் எனும் இக்கவிஞர்கள் சில சமயங்களில் சமய குருமார்களின் ஒழுக்கக் கேடுகள், பேராசை பற்றியும் குத்தலாகச் சில வசை பாடல்களையும் பாடினர்.

இங்கிலாந்தைப் படையெடுத்த ஆங்கிலோ சாக்ஸனியர்களை வீராவேசத்தோடு எதிர்த்த ஆர்தர் எனும் கெல்டிக் அரசரை மையமாகக் கொண்டு பல வீரகாவியங்கள் முளைத்தன. மேரி டெ பிரான்ஸ், கிரீஸியன் டெ ட்ராய்ஸ் (Marie de France, Chretien de Troyes) போன்ற பிரெஞ்சு கவிஞர்களும், வுல்ஃப்ராம் வான் எஸ்ச்சென்பாக் (Wolfram Von Eschenbach) காட்ஃபிரீட் வான் ஸ்டிராஸ்பர்க் (Gottfried Von Strassburg) போன்ற ஜெர்மானிய கவிஞர்கள் இத்தகைய காவியங்களைப் படைத்தனர். காட்ஃபிரீட் என்பாரது ட்ரிஸ்டனும் ஐசல்டியும் (Tristan and Isolde) என்ற காவியத்தில் வீர உணர்ச்சியோடு சோக உணர்ச்சியும் புகுத்தப்பட்டுள்ளது. பொதுவாக இத்தகைய காவியங்களில் துணிகரமிக்க செயல்களே இடம் பெற்றன. அநுபவமே அறிவுக்கு அடிப்படை என்பதையும் அவை விளக்கின. மற்றும், உண்மை, மானம், வீரம், எளியோர்க்கு இரங்கல் அன்பின் வலிமை போன்ற பண்புகளும் இவற்றில் பெரிதும் இடம் பெற்றன.

பதின் மூன்றும் நூற்றுண்டில் பல நகரங்கள் நன்கு செழித்தோங்கியதால், அங்கு வாழ்ந்த செல்வர்களைக் கவரும் வகையில் பல கவிதைகளும் கதைகளும் தோன்றின. பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட 'அகாசினும் நிகோலெட்டும்' (Aucassin and Nicolette) என்ற காதல் கதை இடைக்கால ஐரோப்பிய நகரங்களில் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டது. கதாநாயகனுக வரும் அகாசின் எனும் பிரபு இடைக்கால வீரமரபை ஒட்டி, உப்பரிகையில் வாழும் ஒய்யார மங்கையைக் காதலிக்கவில்லை. சாதாரண ஒரு மூஸ்லிம் அடிமைப் பெண்ணைக் காதலிக்கிருர். அதனுல் நரகத்துக்கே அவர் செல்லவேண்டி நேரும் என்று பலரால் எச்சரிக்கப்பட்டபோது பரவாயில்லை என்று கூறி அவர் மீண்டும் தமது காதலில் தீவிரமாக இறங்கு

ஞர். விவசாயிகள் பால் அவர் பரிவு காட்டுவதும், அக்கால மரபுக்குச் சற்றே புறம்பானதாகும். ஃபேப்லியாக்ஸ் (Fabliaux) என்ற சிறுகதைகள் பல நகரமாந்தரால் விரும்பிப் படிக்கப் பட்டன. அவற்றில் துறவிகளும், குருமார்களும் எள்ளி நகையாடப்படுகின்றனர். வீர மரபும், துணிகரச் செயல்களும் நையாண்டி செய்யப்படுகின்றன. படிப்போருக்குக் களிப்பூட்டக் கூடிய சுவையான, அதே சமயம் ஒழுக்கத்துக்குப் புறம்பான, நிகழ்ச்சிகளே மையமாகக் கொண்டே அவை எழுதப்பட்டன. நகர வாசிகளின் உலகியல் போக்குக்கும், சிற்றின்ப வேட்கைக்கும் ஏற்றதாக அவை அமைக்கப்பட்டிருந்தன.

இடைக்கால இலக்கியங்களுக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் விளங்குவன வில்லியம் ஆப் லாரிஸ் (William of Lorris) என்ற பிரெஞ்சு அறிஞரால் எழுதப்பட்ட ரொமான்ஸ் ஆப் தி ரோஸ் (Romance of the Rose) என்ற காதற் கதையும், தாந்தே என்ற இதாலியரால் புனையப் பெற்ற 'டிவைன் காமெடி' (Divine Comedy) என்ற கவிதையுமாகும். ரோஜாவின் காதல் என்று பொருள்படும் ரொமான்ஸ் ஆப் தி ரோஸ் என்ற நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. அதில் முதற் பகுதி வில்லியத்தாலும், இரண்டாம் பகுதி ஜான் என்பவராலும் எழுதப் பெற்றது. முதற் பகுதியில் இடைக்கால வீரமரபு ஓர் உருவகக் கதை வடிவில் (Allegory) வெளிப்படுத்தப் படுகிறது. இரண்டாம் பகுதியில் பகுத்தறிவின் மேன்மை விதந்தோதப்படுகிறது. சமயமும், சமயஞ்சார்ந்த குருமார்கள், போப்பாண்டவர்கள், துறவிகள், அவர் தம் அர்த்தமற்ற மூடப் பழக்க வழக்கங்கள் முதலியன அதில் பெரிதும் குறை கூறப்படுகின்றன. இடைக்கால நாகரிகத் தின் இரு புறங்களை இந் நூல் தெள்ளிதின் படம் பிடித்துக் காட்டுகிறது.

தாந்தே என்பார் எழுதிய தெய்வீக இன்பியல் நாடகம் எனப் பொருள்படும் டிவைன் காமெடி என்ற நூலும் இடைக் காலக் கொள்கைகள், மக்கள் வாழ்க்கை முதலிய அனைத்தையும் நன்கு வெளிப்படுத்தும் நூலாகும். ஃபிளாரன்ஸ் நகரத்தில் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்த அவர் தமது கட்சி பலஹீன மடைந்ததால் நகரை விட்டே விரட்டப்பட்டார். நகருக்கு வெளியே இருந்தபோது தான் மேற்கண்ட நூலை அவர் எழுதினார். அதில் மோட்சத்தை அடைய விரும்பும் ஜீவனின், சோதனைகள், போராட்டங்கள், இறுதி வெற்றி ஆகியவையே உருவகமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. பகுத்தறிவும் அதே சமயம் தெய்வீக அருளும் இருந்தால் தான் மக்கள் உய்ய முடியு

மென்று அவர் அதில் வலியுறுத்தியுள்ளார். வர்ஜில், அரிஸ்டாடில் போன்ற பண்டைய அறிஞர்களை அவர் பெரிதும் போற்றி யுள்ளார். அவர்கள் யாவரும் சுவர்க்கத்துக்குப் போகும் வழியுள்ள நடு உலகியல் இருப்பதாக வர்ணித்துள்ளார். கிறிஸ்தவ குருமாரையன்றி வர்ஜிலே அவரது ஆன்மாவை நரகங்களினூடே இட்டுச் செல்லும் வழிகாட்டியாக வருகிறார். பியட்ரீஸ் (Beatrice) எனும் அவரது காதல் நங்கையே அவரது ஆன்மாவை சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லுகிறாள். இங்ஙனம், காதல், அறிவு ஆகியவற்றுக்கு முதலிடம் கொடுத்ததன் மூலம், அவர் இடைக்கால வீரமரபுக்குச் சற்றே புறம்பாகச் செல்கிறார். ஆனால் மறுமலர்ச்சி இலக்கியங்களுக்கு அவர் ஒரு முன்னோடியாக அமைந்து விடுகிறார்.

**நாடகங்கள் :** இடைக்கால ஐரோப்பிய நாடகங்கள் பெரும் பாலும் சமயச் சார்புடையனவாகவே இருந்தன. செல்வர்கள் வாழ்ந்த நகரங்களில் மட்டுமே உலகியல் பற்றிய நாடகங்கள் நடிக்கப்பட்டன. சமயஞ் சார்ந்த நாடகங்கள் மூன்று வகைப் படும். அவை தெய்வீக இரகசிய நாடகங்கள் (Mystery plays) தெய்வீகத் திருவிளையாடல் நாடகங்கள் (Miracle plays), நந்நெறி நாடகங்கள் (Morality plays) என்பனவாகும். முதல் வகைப் பட்ட நாடகங்களில் பழைய ஏற்பாட்டுக் (Old Testament) கதைகளே பெரிதும் நடிக்கப்பட்டன. அவற்றுள் மிக முக்கிய மானது ஆதாம் ஏவாள் பற்றிய கதையாகும். வெண்ணிற ஆடையணிந்து கொண்டு ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத் தில் உலவி வருவர். ஏதேன் தோட்டத்தைச் சித்தரிக்கப் பூச் செடிகள், புதர்ச் செடிகள் முதலியன மேடை மீது வைக்கப் பட்டிருக்கும். அதற்கிடையே சிவப்பு உடையணிந்து கொண்டு பிசாசு தோன்றும். பிசாசு வேடம் அணிபவர் முகத்தைப் பல கோணமாகச் சுளித்துக் கொண்டு நடிப்பார். பிசாசு ஏவாளை ஏமாற்றித் தின்னத் தகாத பழத்தைத் தின்ன வைத்துவிடும். பின் ஏவாள் ஆதாமை மயக்கி அப்பழத்தை அருந்தும்படி செய்வாள். உடனே ஒரு பயங்கர சத்தம் மேடையில் கேட்கும். மேடை நடுவிலுள்ள ஒரு துவாரத்தின் மூலம் ஆதாமும் ஏவாளும் நரகத்துக்குச் செல்வது போல் காட்டப்படும். அதைக் கண்டு பிசாசுகள் சிரிப்பது போல் உள்ளிருந்து பல விந்தையான சத்தங்கள் செய்யப்படும். இத்தகைய நாடக உத்திகள் நிறைந்த தாலேயே அவை தெய்வீக இரகசிய நாடகங்கள் எனப்பட்டன. தெய்வீகத் திருவிளையாடல் நாடகங்களில் புதிய ஏற்பாட்டுக் கதைகளும், அருள்மிக்கத் துறவிகளின் வாழ்க்கை வரலாறுகளும் நாடகங்களாக நடிக்கப்பட்டன. நன்னெறி நாடகங்களில்,

நீதி, நேர்மை, நியாயம், போன்ற நல்லொழுக்கப் பண்புகளும், பேராசை, காமம் குரோதம் போன்ற தீயொழுக்கப் பண்புகளும், மனிதர்களாக உருவகமாக்கப்பட்டு நடிக்கப்பட்டன. நல்வழி நடப்போர் வாழ்க்கையின் நலம் பெறுவதையும், அல்வழி நடப்போர் அல்லலுறுவதையும் இத்தகைய நாடகங்கள் மக்களுக்குப் பாடங்களாகப் புகட்டின. இவற்றில் பெரும் பாலும், சமய குருமார்களே நடிகர்களாக நடித்தனர். எவ்வரி மேன் (Everyman) என்ற நாடகம் இவ்வகையைச் சேர்ந்த தொன்றாகும்.

செல்வங் கொழித்த நகரங்களில் மேற்சொல்லப் பட்ட தெய்வீக நாடகங்கள் நடிக்கப்பட்டன. அவற்றிற்குரிய மேடைகள் மக்கள் கூடும் இடங்களான சந்தைகள் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டன. அவற்றில் மதகுருமார்கள் நடிக்க மறுத்தனர். எனவே ஜாங்லியூர்கள் (Jongleuirs) என்ற நாடோடிக் கூத்தாடிகளே அவற்றில் நடித்தனர். கேலியும், கூத்தும், கும்மாளமும், விரசமான நடிப்புகளும், அவற்றில் பெரிதும் இடம் பெற்றிருந்தன. உலக சம்மந்தமான கதைகளே அங்கு நாடகங்களாக நடிக்கப்பட்டன. எனவே அவற்றைப் பிஷப்புகள் கண்டித்தனர். அவற்றில் நடித்தவர்களைப் போப் பாண்டவர்கள் சமயத்திலிருந்து விலக்கி வைத்தனர் (Excommunicated). எனினும் அத்தகைய நாடகங்களை மக்கள் திரளாகச் சென்று, கண்டு களித்தனர். இனிப்பையே உண்டு வந்த ஒருவன் காரத்தையும் புளிப்பையும் விரும்புவது போன்று தெய்வீக நாடகங்களையே கண்டு சலித்துவிட்ட மக்கள், ஆசா பாசங்கள் நிறைந்த நாடகங்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

### இடைக்கால இசை

இடைக்கால இசையிலும் சமயமே பெரிதும் ஊடுருவி நின்றது. இறைவனை நினைந்து நினைந்து, உணர்ந்துணர்ந்து பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாடல்களே மக்களால் பெரிதும் பாடப் பெற்றன. ஆதியில் அவை மிக எளியனவாக இருந்தன. போப்பாண்டவர் கிரிகரி (Pope Gregory) என்பாரால் தோற்றுவிக்கப் பட்டதாக எண்ணப்பட்ட அவ்விசையில் ஒருவித ஓசை நயம் இருந்ததே யன்றிப் பண் அமைதி (Melody) காணப்படவில்லை. தனிப்பட்ட ஒருவரோ, பலரோ சேர்ந்து கொண்டு ஒரே மாதிரியான ஓசையோடு அப் பாடல்களைப் பாடினர். பல்வேறு ஒலிகளை ஒருங்கு இணைத்துக் குழைத்து இசை ஒருமையை (Harmony) ஏற்படுத்தும் முறை பத்தாம் நூற்றுண்டளவில் தான் முதலில் தோன்றியது. நான்கு

அல்லது ஐந்து சுருதி வரையில் சுரங்கள் அப்போது சேர்த்துக் பாடப் பெற்றன. நாள் செல்லச் செல்ல அவற்றுக்கிடையே சில சுருதிகள் சேர்க்கப்பட்டன. குயிடோ (Guido) என்ற பெனிடிக் டைன் துறவி இசை எண்மான முறையைக் (Musical notation) கண்டு பிடித்தார். ஞானஸ்நான வாதியான ஜான் என்பாரைப் புகழ்ந்து பாடப்பெற்ற ஒரு பாட்டில் வருகின்ற ஐந்து வரிகளின் முதல் சொற்பகுதிகளைக் கொண்டு அவர் அட், ரி, மி, ஃப, சொல், ல (ut, re, mi, fa, sol, la,) ஆகிய ஆறு இசைப்பண்களை நிறுவினர். இக்கால ஆரம்பத்தில் இசையில் பல்வேறு சுரங்கள் அல்லது ஒலிகள் ஒருங்கு சேர்க்கப்பட்டிருந்தனவே ஒழிய அவை யாவும் ஒரே ஒலி கொண்ட ஒரு பண்ணுக வடிக்கப்படவில்லை. 13-ஆம் நூற்றுண்டளவில்தான் நான்கு அல்லது ஐந்து தனிப்பட்ட ஒலிகளை ஒன்ருகக் கூட்டி இனிமைமிக்க ஒரு பண்ணுகப் பாடும் கலையை மக்கள் கற்றுக் கொண்டார்கள்.

கான்ஸ்டாண்டி நோபில் திருச்சபைகளில் மாஸ் ஜெபம் (Mass) செய்யப்பட்ட போது மக்கள் கூட்டாக நின்று பாடும் வழக்கம் ஏற்பட்டது. அதன் மூலம் கோஷ்டி கானம் (Choirs) வளர்ந்தது. துறவிகளால் புனையப்பட்ட பாடல்கள் அவ்வமயம் பாடப் பெற்றன. இத்தகைய கோஷ்டி கான முறையானது நாளடைவில் ஐரோப்பா வெங்கணும் பரவியது. திருக்கோயில் களில் ஓதப்பட்ட பாடல்களுள் மிகச் சிறந்தது டைஸ் இரா (Dies Irae)என்ற பாட்டாகும். இயேசு கிறிஸ்து, கடைசித் தீர்ப்புக் காலத்தில் (Last Judgment Day) இந் நிலவுலகிற்கு வருங்காலை, பாவிகள் என்ன பாடுபடுவார்கள் என்பதை இப்பாடல் சித்தரிக் கிறது. அச்ச உணர்ச்சியை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளது. ஜெருசலம் தி கோல்டன் (Jerusalem the Golden) என்ற பாடல் மன அமைதியை ஏற்படுத்தும் முறையில் அமைந்துள்ளதொன்ருகும். கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற பண்டிகை காலங்களில் கொரோல்கள் (Carols) எனும் மகிழ்ச்சி யூட்டும் இன்பப் பாடல்களை மக்கள் பாடி மகிழ்ந்தனர்.

மேற்கூறிய தெய்வீக இசையேயன்றி, உலகச் சார்பான பல களியாட்டப் பாடல்களும் இக்காலத்தே தோன்றின. சில சமயம் தெய்வீகப் பாடல்களிலேயே உலகியல் கருத்துக்களைக் கொண்ட சொற்கள் கலந்து பாடப் பெற்றன. குடிவெறியர்கள் ஒரு சில பாடல்களைப் பாடிக் கொண்டே குடித்தனர். வயலில் பாடுபடும் உழவர்கள் ஒரு சில தெம்மாங்குப் பாடல்களைப் பாடிக் கொண்டே வேலை செய்தனர். அறுவடை காலத்தில் அதற் கென்றே ஒருசில பாடல்கள் பாடப் பெற்றன. ட்ருபோதூர்கள்,

மின்னி சிங்கர்கள் போன்ற நாடோடிப் பாடகர்கள், காதல், வீரம், போர் இவைப்பற்றிப் பல பாடல்களை நாடெங்கும் பாடிக் கொண்டு சென்றனர். இவர்களது பாடல்களேயன்றி மக்களிடம் தானுகவே முளைத்தெழுந்த நாட்டுப் பாடல்களும் (Folksongs) சேர்ந்து கொண்டன. அவை யாவும், சமயப் பாடல்களைப் போலன்றி சந்தம் செறிந்தனவாய் பாடுதற்கு எளிய முறையில் அமைந்திருந்தன. லத்தீன் மொழியிலன்றி சாதாரண மக்கள் மொழிகளில் அவை பாடப் பெற்றன. அவற்றைப் பாடும்போது இசைக் கருவிகள் எவையும் உடன் வாசிக்கப் படவில்லை.

ஆனால் கோயில்களில் பாடப் பெற்ற பாடல்களோடு யாழ், (lute) மத்தளம், (Drums) துந்தேரி (Trumpets) பைக்குழல் (Bagpipes) போன்ற இசைக் கருவிகளும் வாசிக்கப் பெற்றன. அவையாவும் சேர்ந்தால் ஓசை அதிகரிக்கப் பட்டதே யன்றி இசையின் இனிமை எவ்வாற்றேனும் போற்றி வளர்க்கப் படவில்லை. ரோமானியர், கிரேக்கர் ஆகியோர் பயன் படுத்தியதைப் போன்ற குழல் கருவிகள் (Pipe organs) திருக் கோயில்களில் நிரந்தரமாக அமைக்கப் பட்டிருந்தன. இவற்றேடு இசையை மீட்டுவதற்காக ஆணிப்பட்டடைகள் (Key boards) மிதிப் பலகைகள் (Pedals) முதலியன முறையே பதினேராம், பதினன்காம் நூற்றண்டுகளில் பொருத்தப் பட்டன. நாடோடிப் பாடகர்கள் யாழ் எனும் இசைக் கருவியில் பல புதிய உத்திகளைக் கையாண்டனர். அதற்கென்று தனிப்பட்டதோர் இசை எண்மான முறையை (Musical notation) அவர்கள் கண்டு பிடித்தனர். இங்ஙனம் தெய்வீக இசை ஒரு புறமும், உலகியல் இசை மற்றெரு புறமும் இடைக்கால ஐரோப்பாவில் நன்கு வளர்ந்தன.

**சிற்பம்**

ரோமானியப் பேரரசில் பெரிதும் முன்னேற்றமடைந்திருந்த சிற்பக்கலையின் சீரிய படைப்புகளை, முரட்டு வகுப்பினர் தாக்கி உடைத்தெறிந்து விட்ட போதிலும், கீழைநாட்டு ரோமானியப் பேரரசு அவற்றில் பலவற்றை பாதுகாத்து வைத்திருந்தது. அங்கே வந்து குடிபுகுந்த கிரேக்கச் சிற்பிகள் தங்களது கலைத் திறனைத் தக்கோர்க்குக் கற்பித்தனர். எனவே கிறிஸ்தவத் திருக் கோயில்களில் பதுமைகள் பல படைக்கப் பட்டன. மத பக்தியை வளர்க்கத் தக்க சிலைகளே பெரும்பாலும் கோயில்களில் அமைக்கப் பெற்றன என்றாலும், உலகியல் பற்றிய உருவங்களும் இடையிடையே அங்கு எழுப்பப்பட்டன. அவை பெரும்பாலும் பளிங்குக் கல், கருங்கல், வெண்சலவைக்கல் இவற்றிலேயே பொதுவாக செதுக்கப் பட்டன. ஊர்வலமாக எடுத்துச் செல்லப்

பட்ட பதுமைகள் இலேசாக இருக்கும் பொருட்டு மரத்தால் செய்யப்பட்டன. அரண்மனைகள், கல்லறைகள், கோயில்கள் ஆகிய கட்டிடங்களில் மேற்கண்ட பொருள்களாலாகிய சிற்பங்கள் எழிலுற விளங்கின.

இடைக்கால சிற்பங்கள் இயற்கைக்கு முரண்படாத உண்மை உருவங்களாய் விளங்கின. தெய்வீகச் சிலைகளும் கூட மனிதர் களைப் போன்றே அமைக்கப் பட்டன. ரெய்ம் நகர (Reim) பெருமாதாக் கோயிலுள்ள சிற்பங்களில் தேவகணங்கள் தாமாகவே பேசி மகிழ்வது போலவும், பலவித நடவடிக்கை களில் இயற்கையாக ஈடுபட்டிருப்பது போலவும் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாதாரண குடியானவர்களின் உருவ அமைப்பையே அவை பெரிதும் பிரதிபலிக்கின்றன. ரூவன் (Rouen) நகரிலுள்ள ஒரு தத்துவ ஞானி, பன்றியின் தலையைக் கொண்டு விளங்குகிறார். அவர் ஆழ்ந்த தியானத்திலிருப்பது போல் அமர்ந்துள்ளார். ஸ்டிராஸ்போர்கிலுள்ள (Strasbourg) ஒரு தூண் தலைப்பில் ரேய்னர்ட் (Raynard) என்ற குள்ள நரியின் புதையல் சடங்கு சித்தரிக்கப் பட்டுள்ளது. அதில் ஒரு கரடியும் வெள்ளாடும் சேர்ந்து பிணப் பெட்டியைத் தூக்குவது போலவும், ஓநாய் ஒன்று சிலுவையை ஏந்திச் செல்வது போலவும், முயல் ஒன்று மெழுகுவர்த்தி பிடிப்பது போன்றும், கரடி ஒன்று தீர்த்தம் தெளிப்பது போன்றும், கலைமான் ஒன்று மாஸ்ஜெபம் செய்வது போலவும், கழுதையொன்று, பூனையின் தலையின் மீது வைக்கப் பட்டுள்ள ஒரு நூலிலிருந்து மந்திரங்களை ஓதுவது போலவும் அமைக்கப் பட்டுள்ள காட்சி உண்மையிலேயே கண்களையும், மனதையும் ஒருங்கே கவர்வனவாகும். மற்றுமோர் சிற்பத்தில், பக்தி மிக்க வாத்துக் கூட்டமொன்றுக்கு ஒரு குள்ள நரி உபதேசம் செய்கிறது.

கற்பனையும் திறனும் ஒருங்கே கலந்த சிற்பங்கள் பல பெரு மாதாக் கோயில்களில் தான் காணப்படுகின்றன. உலகில் வாழு கின்ற அத்தனை பிராணிகளும், மரம் செடி, கொடிகளும் அவற்றில் இடம் பெற்றுள்ளன. சில கோயில்களில், ஒரு தோட்டம் முழுவதுமே நன்கு சித்தரிக்கப் பட்டுள்ளன. பல்வேறு மரங்கள், பழங்கள், பூக்கள் முதலியன அனைத்தும் அவற்றில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற உழவுத் தொழில்களும் சில இடங்களில் சுவர் களில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. ஆனால் மனிதனது பிறப்பு இறப்பு பற்றிய சிற்பங்களே இவற்றில் பெரும் பாலானவையாகும். லயோன்ஸ், போர்ஜஸ் நகரக்

கோயில்களில் உலகத்தின் படைப்பு அப்படியே சித்தரிக்கப் பட்டுள்ளது. லெயோன் (Laon) நகரில் உள்ள சிற்பமொன்றில் இறைவன் உலகைப் படைத்து விட்டுக் களைத்துத் தூங்குவது போல் காட்டப் பட்டுள்ளது. சில கோயில்களில், முக்கிய பண்டிகைகள், திருவிழாக்கள் முதலியவை பற்றிய கால அட்டவணைகள் கல்லில் பொறிக்கப் பட்டுள்ளன. கட் புலனாகாத தத்துவக் கருத்துக்களை விளக்கும் வகையில் ஒரு சில சிற்பங்கள் அமைந்துள்ளன. மேகத்தில் தலைமறையப் பெற்ற தாயும், ஒரு கையில் வேதநூலையும், மற்றொரு கையில் கிரீடத்தையும் ஏந்திக் கொண்டுள்ளதையும் செதுக்கப் பட்டுள்ள உருவம் மெய்ஞ்ஞானத்தின் உருவகமாகும். நாட்டர்டாம் 'கோயிலில் தன் கண்களைத் துணியால் கட்டிக் கொண்டுள்ள அழகிய மங்கை ஒருத்தியின் உருவமும் அதன் எதிர்ப் புறத்தில், வீராப்புடன் கம்பீரமாக இராணியின் உடையில் விளங்கும் மற்று மோர் பெண்ணின் உருவமும் காணப்படுகின்றன. அவை முறையே யூதர்களின் கோயிலையும், கிறிஸ்தவர்களின் கோயிலையும் குறிப்பனவாம்.

இடைக் காலத்தே மலர்ந்த காதிக் பாணி சிற்பங்களில் (Gothic Sculptures) மனித வாழ்க்கையில் காணப்படும் ஆழ்ந்த உணர்வுகளும், இயற்கையில் காணப்படும் விசித்திரங்களும், நன்கு சித்தரிக்கப் பட்டுள்ளன. கிரேக்க சிற்பங்களில் உள்ள அழகு இவற்றில் அவ்வளவாக இல்லையெனினும், தனக்கேயுரிய ஒருவகையான மென்மைத் தன்மையும், நயமும் கொண்டு இக் கால சிற்பங்கள் விளங்குகின்றன. ரெம்ய்ஸ் கோயிலில் புன்னகை பூத்த முகத்துடன் விளங்கும், தேவமாது, சார்ட்டர்ஸ் கோயிலிலுள்ள கன்னிமாது ஆகியோரின் எழில் உருவங்கள் இடைக்கால சிற்பநயங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

**கட்டிடக் கலை**

இடைக்கால ஐரோப்பியரின் செம்மை சான்ற சிறந்த சாதனைகளை அவர்தம் கட்டிடங்களில் தான் நன்கு காணலாம். வானளாவிய அவர்களது கட்டடங்கள் பெரும்பாலும் துறவிகள் வதியும் மடங்களாகவும், இறைவனை வழிபடும் திருக்கோயில் களாகவுமே இருந்தன. சமயத்தின் பால் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அக்கால மக்கள், தமது பக்தி சிரத்தையின் உயர்வை, உயர்ந்த கோயில்களைக் கட்டுவதன் மூலம் வெளிப்படுத்தினர். அக்கட்டிடங்களைக் கட்ட செல்வ மிகுந்தோர் நிதியை வாரி வழங்கினர். ஏழைத் தொழிலாளிகள் தமது உழைப்பை இலவசமாக நல்கினர். போப்பாண்டவர்களும், அரசர்களும். பெருவணிகர்களும் தாராளமாகப் பொருளுதவி செய்தனர்.

இங்ஙனம் கட்டப் பெற்ற கட்டிடங்கள் இரு ரகங்களைச் சேர்ந்தவை. ஒன்று ரோமனஸ்க் (Romanasque) மற்றொன்று காதிக் (Gothic) ரகம். முதலாவது ரகக் கட்டிடங்கள் ரோமானிய அரண்மனையைப் போல் ஏறத்தாழ காணப்பட்டதால் அவை ரோமனஸ்க் முறைக் கட்டடங்கள் எனப்பட்டன. குளுனியக் (Cluniac) மடாலயத் துறவிகள் இம்முறைப்படியே தங்களது மடாலயங்களைக் கட்டினர். நாளடைவில் கோயில் கட்டுவதிலும் இம்முறை பயன் படுத்தப்பட்டது. இங்ஙனம் கட்டப்பட்ட திருக் கோயில்களின் தரை சிலுவை வடிவில் அமைந்திருந்தது. கோயிலின் நடு மண்டபம் (Nave) நீள்சதுர வடிவில் அமைக்கப் பட்டது. மண்டபத்தின் முனையில், சிலுவையின் கைகளைப் போன்ற இரு சிறிய குறுக்கு மண்டபங்களும் (Transepts) அவை களுக்கிடையே அரைவட்ட வடிவமான மண்டபமும் (Apse) அமைக்கப் பட்டிருந்தன. அக் கட்டிடத்தின் கனமான கூரை களைத் தாங்குதற்கான வலிமை மிக்க சுவர்களும், தூண்வரிசை களும், அவற்றில் இடம் பெற்றிருந்தன. பைசா நகரத்து மாதா கோயிலும், சாய்ந்த கோபுரமும் ரோமனஸ்க் கட்டிட முறைக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். அவற்றில் ஜன்னல், கதவு ஆகியவை அமைக்கப் பட்டிருந்த இடங்களுக்கு மேலே அழகிய வளைவுகள் தென்பட்டன. கட்டிடத்தின் நடு உச்சியிலும் சில சமயம் ஓரங்களிலும் குவிமாடங்கள் (Domes) பல அமைக்கப் பட்டிருந்தன. சுவர்களின் வலிமையைப் பாதுகாக்க வென்று ஜன்னல்கள் மிகச் சிறியனவாக அமைக்கப் பட்டன. எனவே கோயிலுக்குள் பெரும்பாலும் இருட்டு கம்மிக் கொண்டிருந்தது. கோயிலின் உட்பகுதிகளில் வண்ணம் செறிந்த சலவைக் கற்கள் ஆங்காங்கே பதிக்கப் பெற்றன. மற்றபடி ரோமனஸ்க் முறைக் கட்டிடங்களில் பலத்த அலங்காரங்கள் எதுவும் இல்லை. எளிமை, தூய்மை இவற்றைத் தூண்டும் வகையில் இக்கட்டட முறை அமைந்திருந்தது.

காதிக் கட்டட முறையானது பிரான்ஸில் முதலில் தோன்றிப் பின்னர் பல நாடுகளுக்கும் பரவியது. இம்முறையிலும், கட்டடத் தரையானது சிலுவை வடிவிலேயே அமைந்திருந்தது. ஆனால் வில் வளைவான கூரை தாங்கிகளுக்குப் பதில் கூரான கூரை தாங்கிகள் அமையப் பெற்றிருந்தது அக்கட்டிடங்களின் புதுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. மற்றும் சுவரின் மேற்பகுதியிலிருந்து ஆதாரம் வரை செலும் அரை வடிவுடன் கூடிய உதைகட்டுமானங்கள் (Flying buttresses) இத்தகைய கட்டடங்களின் மற்றுமோர் சிறப்பியல்பாகும். உதை கட்டுமானங்களும், கூரிய வளைவுக் கட்டுமானங்களும் சேர்ந்து கட்டடமானது மிக உயரமாகக்

கட்டப்பட துணை புரிந்தன. சுவர்கள் உயரமாகவும் அதே சமயம் மெல்லியனவாகவும் கட்டப்பட மேற்கூறிய இருமுறைகளும் பெரிதும் உதவியாயிருந்தன. எனவே காதிக் கட்டடங்கள் உயர மாகவும், லாவகமாகவும் காட்சியளிக்கின்றன. ஒரு வகையான பெண்மை அழகு அவற்றில் வெளிப்படுகின்றது. சுவர்கள் மெல்லி யனவாக இருந்ததால் இடம் அதிகமாகக் கிடைத்தது; அங்கெல் லாம் சாயமூட்டப்பெற்ற பல வண்ணக்கண்ணாடிகளாலான பெரிய ஜன்னல்கள் அமைக்கப்பெற்றன. அவற்றினூடே சூரியனின் ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் சென்று கோயிலின் உட்புறத்தில் ஒரு வகையான இனிய தோற்றத்தை உண்டாக்கின; உயர்ந்த கூரான கோபுரங்கள், பெரும் பெரும் ஜன்னல்கள், சித்திர வேலைப்பாட மைந்த கற்கள், அலங்காரமாகச் செதுக்கப்பட்ட முகப்பு, ஜதை ஜதையான தூண் வரிசைகள், இடைவெளிகளெல்லாம் அமைக்கப்பட்ட இராக்கத உருவங்கள் இவையே காதிக் கட்டடங் களின் அழகுக்குரிய சிறப்பியல்புகளாகும்; ஏமியன்ஸ், சார்ட்ரெஸ், நாட்டர் டாம், ரெய்ம்ஸ் போன்ற நகரங்களில் காதிக் கட்ட டங்கள் பல உருவாகியுள்ளன.

காதிக் என்ற பெயரைக் கண்டு ஒரு சிலர் அக்கட்டட முறை காட்டுமிராண்டித்தனமானது என்றும், பிற்போக்குக் கட்டடக் கலை என்றும் கருதுவர். மறுமையைப் பெரிதாய்ப் போற்றிய இடைக்கால நாகரீகத்தின் தனிப்பெருஞ் சின்னமே காதித் திருக்கோயில்கள் எனவும் சிலர் கருதுவர். ஆனால் உண்மையில் காதிக் கட்டடக் கலையானது இடைக்காலத்தே வளர்ந்து வந்த நகர நாகரீகத்தின் சின்னமாகும். அதில் பகுத்தறிவின் பிரதி பலிப்பு நன்கு வெளிப்படுகிறது. உலகியல் சம்மந்தமான பல காட்சிகளை அவற்றில் காணலாம். கோயிற் சுவர்களில் கண்கவர் வண்ணங்களில் உயிரோவியங்கள் தீட்டப்பட்டிருக்கும். தரையில் பலவண்ணப் பளிங்குக் கற்கள் பாவப்பட்டிருக்கும். சுவர்களின் இூக்கட்டுகளிலும், சந்துகளிலும் கன்னிமாதா, துறவிகள் முதலிய பல்வேறு பெருமக்களின் உருவங்கள் அழகாக வைக்கப்பட்டி ருக்கும். பெரிய வண்ணத்திரைச் சீலைகளில் வரையப்பெற்ற சித்திரங்கள் கண்ணைப் பறிக்கும். கட்டடத்தின் வெளியேயுள்ள ஒதுக்கிடங்களில் நகைச்சுவை மிக்க குள்ளர்கள் பயங்கரமான இராக்கதர்கள் முதலியோரின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும். இங்ஙனம் உலகியல் பற்றிய பல காட்சிகள் ஆங்காங்கே சிற்பம், ஓவியம் வாயிலாகப் புலப்படுத்தப் பட்டிருப்பதைக் கொண்டு இடைக்காலக் கட்டடக் கலையில் தெய்வீகம் மட்டுமின்றி மனிதத்வமும் இயற்கையும் பெரிதும் விரவிக் கிடந்தனவென்றே கூற வேண்டும். காதிக் முறையில் கோயில்கள் மட்டுமேயன்றி

நாளடைவில் அரண்மனைகளும், வில்லாக்களும், கோட்டைகளும் கட்டப்பட்டன. அவற்றிலேயும், அற்புதமான அலங்கார வேலைப் பாடுகள் பல காணப்படுகின்றன. காதிக் கட்டடங்களில், முக்கிய மாகப் பெருங்கோயில்களில் காணப்படும் உருவங்கள், மரஞ்செடி கொடிகள், விலங்குகள் முதலியனவும், கோபுரங்களின் உயரமும், மாண்பும் சித்திர வேலைப்பாடுகளும், இடைக்கால நாகரீகம் அனைத்தையும் அப்படியே படம் பிடித்துக் காட்டும் கலைக் களஞ்சி யங்களாய் விளங்குகின்றன எனில் மிகையாகாது.

**தத்துவம்** (Philosophy) :

தெய்வ பக்தி நிறைந்த இடைக்கால ஐரோப்பாவில், "கலை களின் ராணி" (Queen of sciences) எனக் கருதப்பட்ட சமய சித்தாந்தமே (Theology) பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டது. கடவுள், கத்தோலிக்க சமயம் ஆகிய இரண்டைச் சுற்றியே அச்சித்தாந்தம் சுழன்றது. அதில் ஒரு பிரிவு, சமய நம்பிக்கைக்கும் பகுத்தறிவுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடு பட்டது. அது வெறும் நூலறிவின்பாற்பட்ட ஒருவகையான வறட்டு வாதமேயன்றி வேறன்று. எனினும் இடைக்கால அறிஞர் பலர் அதில் சதா ஈடுபட்டிருந்தனர். பகுத்தறிவைக் கொண்டு வாதித்து சமயக் கொள்கைகளில் மக்களுக்கு நம்பிக்கையை வளர்க்க அன்னூர் முயன்றனர். ஒரு கொள்கையை மெய்ப்பிக்க, அவர்கள் அதற்கு மாறுபட்ட பற்பல தடைகளையும் முதலில் எழுப்புவர். அதன்பின் அத்தடைகள் ஒவ்வொன்றுக்கும் விடை கூறி அவற்றை உடைத்தெறிவர். இங்ஙனம் தடைவிடை முகத் தான் சமயக் கோட்பாடுகளை நிறுவும் முறையையே ஸ்கொலாஸ் டிசிசம் (Scholasticism) அல்லது புலமைக் கொள்கை என நூலோர் வழங்குவர். அக்கொள்கையில் வல்லுநர்கள் ஸ்கூல்மென் (Schoolmen) என அழைக்கப்பட்டனர்.

புலமைக் கொள்கையானது ஒருசில அடிப்படையான பண்பு களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அதன்படி, முதலாவதாக மெய்ப்பொருள் காண்பதில் அறிவுக்கு மட்டுமே அது முதலிடம் கொடுத்தது. எப்பொருள் எத்தன்மைத்தாயினும், யார் யார் வாய்க் கேட்பினும், அதன் மெய்ப்பொருள் என்ன என்பதை அறிவின் துணைகொண்டு காணவேண்டுமேயல்லாது வெறும் அனுபவத்தை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வரக்கூடாது. ஐம்புலன்களால் உணரப்படுவதை உண்மை என்று நினைத்து விடக் கூடாது. ஐம்புலன்கள் இவ்வுலகின் வெளித்தோற்றத்தை மட்டுமே நமக்கு உணர்த்துகின்றன. ஆனால் அதன் உண்மையான இயல்பை நாம் புலனறிவைக் கொண்டு உணர்ந்துகொள்ள

முடியாது. அதற்கு நாம் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். அறிவைக் கொண்டு பல்வேறு வகையிலும் நன்கு விவாதித்த பின்னரே ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதுவே உண்மை. அதாவது உண்மை என்பது அறிவின்பாற் பட்டதேயன்றி (Rational) அனுபவத்தின்பாற் பட்டதல்ல (empirical) என்பதே புலமைக் கொள்கையினரின் முக்கிய வாதமாகும். தக்க சான்று களைக் காட்டி அவற்றினடிப்படையிலேயே எந்த உண்மையும் நிறுவப்பட வேண்டும் என்பது அவர்களின் இரண்டாவது வாத மாகும். அறிவைக் கொண்டு வாதித்துப் பெறப்படுகின்ற உண்மை களும் கூட, கிறிஸ்தவ வேதாகமங்களுக்கும், கிறிஸ்தவ சமய ஆதிகர்த்தாக்களின் வாக்குகளுக்கும், பிளேடோ, அரிஸ்டாடல் போன்ற தத்துவ சாஸ்திரிகளின் கொள்கைகளுக்கும் உடன் பாடுள்ளவைகளாயிருக்க வேண்டும். சுருதி, யுக்தி, அனுபவம் இம் மூன்றையும் கொண்டே உண்மை காண வேண்டும்; என்பது நம் இந்திய முன்னோர்களின் மரபு. ஆனால் இடைக்கால ஐரோப்பியத் தத்துவ ஞானிகள் சுருதி, யுக்தி ஆகிய இரண்டை மட்டுமே உண்மையைக் காண்பதற்குரிய கருவிகளென மதித்தனர். மூன்றாவதாக அவர்கள் எதையும் மனிதாபிமானக் கண்கொண்டு (Humanistic) நோக்கினர். மக்களுடைய நல்வாழ்வை ஓம்புகின்ற அறக்கொள்கைகளையே (Ethical doctrines) அவர்கள் உண்மை என ஒப்புக்கொண்டனர். உலகமும், உலகத்திலுள்ள அனைத்து நெறிகளும், மனித குலத்தின் நன்மைக்காகப் படைக்கப் பட்டவையேயன்றி வேறல்ல என்பது அவர்தம் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். நான்காவதாக அவர்கள் உலகிலுள்ள பொருள் களின் தன்மைகளையும், குணங்களையும் (attributes) ஆராய முற்பட்டனரேயன்றி, அவற்றின் மூலத்தைப் பற்றியும், உற்பத்தியைப் பற்றியும் கவலைப்படவில்லை. இவ்வுலகப் பொருள் களின் புறத்தோற்றத்தையும் இயல்பையும் அவர்கள் ஐயுற்றார் களேயன்றி, உலகத்தின் இருப்பில் அவர்கள் ஐயப்பாடு கொள்ள வில்லை. நம் நாட்டு வேதாந்திகளைப் போன்று உலக நிலையாமைக் கொள்கையை அவர்கள் பரப்பவில்லை. உலக உற்பத்தியைப் பற்றியும் அவர்கள் ஆராய முற்படவில்லை.

இடைக்காலத் தத்துவ மேதைகளுள் முதலிடம் பெறத் தக்கவர் பீட்டர் அபெலார்டு (1079-1142) எனும் பிரெஞ்சு அறிஞராவர். பாரிஸிலுள்ள நல்ல பள்ளிகளில் பயின்ற அவர் இளமையிலேயே அழகும் அறிவும் ஒருங்கே அமைந்தவராய், வாக்கு வாதத்தில் தந்நிகரற்றவராய் விளங்கினர். பாரிஸில் அவர் தத்துவாசிரியராகப் பலகாலம் பணிபுரிந்தார். பாரிஸ் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவர் அவரே. மாணவர்கள்,

பூவை நாடும் வண்டுகள் போலத் திரள் திரளாக வந்து அவரிடம் பாடம் கேட்டுச் சென்றனர். துறவி வாழ்க்கையை அவர் மேற் கொண்டிருந்த போதிலும், உலகத்தையும் அதன் இன்பங்களையும் வெறுக்கவில்லை. அதன் விளைவாக அவர் ஹெலாய் (Heloise) என்ற அழகிய நங்கையைக் காதலித்தார். ஆனால் அக்காதலில் அவர் வெற்றி பெறவில்லை. அவருடைய காதற் கடிதங்கள் நல்ல இலக்கியங்களாகக் கருதப் படுகின்றன. 'எனது இடையூறுகளின் வரலாறு' (The Story of my misfortunes) என்ற நூலில் அவரது சோகக் கதை நன்கு விவரிக்கப் படுகிறது. ''உண்டு அதே சமயம் இல்லை'' (Yes and no or Sic et Non) என்ற அவரது தத்துவ நூல் ஒப்புயர்வற்றது. முரண்பாடான பல்வேறு சமயக் கருத்துக்களையும் அவர் அதில் தொகுத்து வைத்துள்ளார். அவை களுக்கு அவர் தக்க சான்றுகளையும் வேத நூல்களிலிருந்து எடுத்துத் தந்துள்ளார். அவற்றைக் கொண்டு வாதித்து உண்மை காணும்படி அவர் வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறார். 'கேள்வி முயல்' என்பதே அவரது முக்கிய கோட்பாடாகும். 'ஓயாத, சலியாத கேள்வி. இதுவே உண்மைக்கு முதல் திறவு கோல்......ஒன்றை ஐயப்படுவதன் மூலம் நாம் அதை விசாரிக்க முற்படுகிறோம். விசாரிப்பதன் மூலம் உண்மை பிறக்கிறது' என்று அவர் அடிக்கடி கூறுவது வழக்கம். இவரது அறிவா ராய்ச்சி முறை பலருக்குப் பிடிக்கவில்லை. செண்ட். பெர்னார்டு போன்றவர்கள் அவரைச் சமய விரோதிகளுள் ஒருவர் (Heretic) எனக் கூறிப் பலமாகக் கண்டித்தனர்.

கி. பி. 1193இல் ஜெர்மனியில் தோன்றிய ஆல்பெர்ட்டஸ் மாக்னஸ் (Albertus Magnus) என்ற பெரியார் மற்றுமோர் சிறந்த இடைக்கால தத்துவ மேதையாவார். அரிஸ்டாடலின் நூல் களில் அவர் துறைபோய அறிஞர். கொலோன் (Cologne) பாரிஸ் நகரங்களிலிருந்த பல்கலைக் கழகங்களில் தத்துவாசிரிய ராகப் பணியாற்றிய அவர், தமது சிந்தனைகளை இருபதுக்கு மேற்பட்ட நூல்களில் தொகுத்து வைத்துள்ளார். முன்னோர்கள் கூறியதெல்லாம் சரி என்று நம்பக் கூடாதென்றும், ஆராய்ச்சி யையும் அநுபவத்தையும் கொண்டே எதிலும் உண்மை காண வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார். தீக்கோழிகள் இரும்பை உண்ணும் என்ற நம்பிக்கையானது எவ்வாறு அநுபவத் துக்கு ஒத்து வராததோ, அப்படியே அநுபவத்துக்கு முரணான எதுவும் ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல என அவர் வாதித்தார். இம் முறையில் அவர் நவீன விஞ்ஞானிகளுக்கோர் முன்னோடி யாகத் திகழ்ந்தார்,

கி. பி. 1225 இல் இதாலியில் தோன்றிய சென்ட். தாமஸ் அக்வினஸ் (St. Thomas Aquinas) என்ற துறவியே புலமைக் கொள்கையின் தலைசிறந்த போதகராவர். அவர் ஆல்பர்ட்டின் மாணவர். டாமினிகன் துறவோர் கூட்டத்தில் சேர்ந்து தனது வாழ்நாளைக் கல்வி போதனைக்காகவே அர்ப்பணித்தவர். அப் பழுக்கற்ற துறவி; அரிஸ்டாடலின் தத்துவங்களைக் கசடறக் கற்று அதன் வழி நின்று கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளை விளக்க அவர் ஓயாது பாடுபட்டார். தமது 25 வது வயதிலேயே அவர் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியேற்றார். ''சமய சித்தாந்தத்தின் மொத்தம்'' (Summa Theologica) என்ற அவரது நூல் அக்கால கடவுட் கொள்கைகளுக்கோர் களஞ்சியமாகும். அதில் கடவுள், மனிதன், உலகம் இவை பற்றி முறையே ஆராயப்பட்டுள்ளன. இவைபற்றிய உண்மைகளை அவர் எடுத்துக் கூறி, முந்தையோர் கூற்றுகளிலிருந்து சான்று காட்டி நிறுவுவதோடு, அவற்றுக்கு மாறுபாடான பல்வேறு வாதங்களையும் வன்மையாக மறுத்துள்ளார்; பண்டைய நூல் களின் ஆதாரங்களோடு, பகுத்தறிவின் பாற்பட்ட வாதங் களையும் கலந்து அவர் தம் எதிரிகளுக்கு மாற்றம் புகல்கிறார். வெறும் பகுத்தறிவினால் மட்டுமே புவனத்தை உள்ளபடி உணர முடியாதென்றும், அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு சில அடிப் படைத் தத்துவங்களை அப்படியே நம்புவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர் கூறுவது வழக்கம். அறிவின் பாற் பட்டவாதங்கள் சமய சித்தாந்தங்களுக்கு உரம் ஊட்டும் வகையில் அமைய வேண்டுமேயன்றி, அவைகளுக்கு விரோதமாக ஒருக் காலும் இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் அது சரியான வாதமல்ல என்று அவர் வற்புறுத்தினார். இயற்கைக்கும் மேலாக ஒரு சில உண்மைகள் உண்டென்றும், அவை தெய்வீக மானவை என்றும், தெய்வீகமானதும் அறிவுக்கும் அப்பாற் பட்டதுமான இயற்கை விதிகளுக்குட்பட்டே உலகம் இயங்குகிற தென்றும், அவற்றை அநுசரித்து நடந்து கொள்வதே முறை என்றும் அவர் கூறி அதற்கேற்ற மேற்கோள்களை பழைய ஏற்பாட்டிலிருந்தும் (Old Testament) செண்ட் அகஸ்டினின் வாக்குகளிலிருந்தும் எடுத்துக் காட்டுகிறார். ஒருவன் தனது உண்மை இயல்புகளை அறிவதே உயர்ந்த சாதனை என்ற அரிஸ் டாடலின் போதனையை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அங்ஙனம் ஒருவன் தன்னைத் தான் அறிய, இறைவனை அறிந்தாலன்றி முடியாதென்றும் கூறுகிறார். இங்ஙனம், அவரது போதனைகள் இடைக்கால சமய சித்தாந்தங்களுக்கும், பண்டைய அரிஸ்டா டலின் கோட்பாடுகளுக்கும் ஒரு சிறந்த பாலமாக விளங்கு கின்றன. அவைகளின் அருமை பெருமைகளை உலகெல்லாம்

பரப்ப வேண்டுமென்று 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போப் பாண்டவரான 13 ஆம் லியோ (Leo XIII) என்பவரே பறை யறைகிறார், என்றால் அவரது வாதங்களின் திறமை சொல் லாமலே பெறப்படுமென்க.

13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புலமைக் கொள்கை சிறிது சிறிதாக நலியத் தொடங்கியது. ஜான் டன்ஸ் ஸ்காடஸ் (John Duns Scotus) என்ற பிரான்சிஸ்கன் துறவியின் போதனைகளே அதற்கு முக்கிய காரணம். சமயக் கொள்கைகள் பல, அறிவுக்கும் அதன் அடிப்படையில் தொடுக்கப்படும் வாதங் களுக்கும் அப்பாற்பட்டவை என்பதை அவர் வற்புறுத்தினார். சமயம் வேறு தத்துவம் வேறு என்பது அவரது வாதமாகும். அவருக்குப் பின் வந்தவர்கள் அவரை விட ஒரு படி மேலே சென்று எந்த சமயக் கொள்கையையுமே வாதங்களால் மெய்ப்பிக்க முடியாது எனக் கூறலாயினர்.

புலமைக் கொள்கையை அடியோடு மறுத்த பெயருண்மைக் கொள்கையினர் (Nominalists) விரைவிலேயே தோன்றினர். உலகத்திலுள்ள தனித்தனிப் பொருள்களே உண்மையாக உள்ளவை என்றும், அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு பொதுத் தன்மை (Universals) என்பது வெறும் பெயரளவானதே என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர். வெறும் அறிவின் துணை கொண்டு உண்மை காண முயல்வது தவறு என்றும் அநுபவத்தின் மூலமே எதையும் மெய்ப்பிக்க வேண்டுமென்றும் அவர்கள் கூறினர். அநுபவத்துக்கு அப்பாற்பட்டவைகளை அவர்கள் வெறும் நம்பிக்கைகள் (Beliefs) என்றும் நம்பிக்கைகளை வாதங் களால் மெய்ப்பிக்க முடியாது என்றும் அவர்கள் கூறினர். நாளடைவில் அவர்கள் தெய்வீக இரகசியங்களை உட்கொண்ட அநுபூதி முறைகளில் (Mysticism) நம்பிக்கை உள்ளவர்களாக மாறினர். காட்சிப் பொருள் கொள்கையினர் (Realists) தனிப் பொருள்களின் இருப்பை மறுத்தனர். ஒவ்வொரு பொருளும், அதற்கு மூலமான பொதுமைப் பொருளின் அம்சம் என்றும், பொதுமைப் பொருளே உண்மையில் உள்ளவை என்றும், தனிப் பட்ட பொருள்கள் வெறும் பெயரளவினவே என்றும் அவர்கள் கூறினர். சான்றாக நாற்காலித் தன்மை (Chairdom) என்பதே என்று முள்ள பொருள் என்பதும், நாற்காலி என்பது வெறும் பெயர் என்பதும் அவர்களின் கொள்கை. நாற்காலி என்பதுதான் உண்மை என்றும் நாற்காலித் தன்மை என்பது கற்பனை என்றும் பெயருண்மைக் கொள்கையினர் கூறினர். அரசுத் துறையில் இக் கொள்கையை அமைத்துப் பார்ப்போமேயானால், தனிப்

பட்ட மனிதர்களே உண்மையாக இருப்பவர்கள். அவர்கள் யாவரும் அடங்கிய 'அரசு' (State) என்பது வெறும் பெயரளவானதேயாகும். எனவே தனிமனிதர்களுக்குப் பணி செய்வதே அரசின் கடமை என்பது பெயருண்மைக் கொள்கையினருக்கு ஏற்ற வாதமாகும். ஆனால் காட்சிப் பொருள் கொள்கையின்படி 'அரசு' என்பதுதான் உண்மையில் இருப்பது. தனிப்பட்ட மனிதர்கள் அதன் பொதுத் தன்மையின் வெவ்வேறு அம்சங்களே யன்றி வேறல்ல. எனவே அரசின் விருப்பப்படியே தனிமனிதர்கள் வாழவேண்டும் என்பது காட்சிப் பொருள் வாதிகளின் கோட்பாட்டுக்குகந்ததாகிறது.

**அரசியல் சித்தாந்தம் :** இடைக்காலத் தத்துவ மேதைகள் பலர் 'அரசு' 'அரசின் அதிகாரம்' இவை பற்றியும் சிந்தித்து தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். 'அரசு' என்பது மக்களால் அவர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டதேயன்றி தெய்வத்தால் ஏற்பட்டதொன்றல்ல என்ற கருத்தை அன்னார் ஏற்றுக் கொண்டனர். ஆனால் தனிப்பட்ட நாடுகள் தத்தம் பிரியம் போல் ஆதிக்கம் செலுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. எல்லாரும் ஒரே போப்பாண்டவர், அல்லது பேரரசருக்குட்பட்டு வாழவேண்டுமென்பது அவர்களது கருத்து. தாந்தே (Dante) தமது 'டிமொனார்க்கியா' (Demonarchia) என்ற நூலில் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒரே பேரரசரின் கீழ் ஐக்கியமாக வாழ வேண்டுமென்று அறிவுரைத்தார். ஜான் ஆஃப் சாலிஸ்பரி (John of Salisbury) யும் தாமஸ் அக்வினசும், போப்பாண்டவரின் இறைமைக்கு உட்பட்டே எல்லா நாடுகளும் இயங்க வேண்டுமெனக் கூறினர். தலைவர் எவராயிருப்பினும், அவர்கள் சட்டத்துக்கும், நீதிக்கும் உட்பட்டே ஆட்சி புரிய வேண்டுமென்றே எல்லா அறிஞர்களும் கூறினர். கட்டற்ற வல்லரசை அவர்கள் ஆதரிக்கவில்லை. வரையறைக்குட்பட்ட கோனாட்சியையே (Limited monarchy) அவர்கள் ஆதரிக்கவில்லை. மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க கொடுங்கோல் அரசர்களைக் கொலை செய்வது கூடச் சரியானதே என ஜான் என்பார் கூறினார். ஆனால் இடைக்கால அறிஞர்கள் கூறிய மரபுகள் சட்டங்கள், நீதி எல்லாம் நாட்டில் வழி வழியாக வந்தவைகளாகவும், இறைவனால் உண்டாக்கப் பட்டவைகளாகவும் கருதப்பட்டனவேயன்றி, மக்களால் ஏற்படுத்தப்பட்டவைகளாக எண்ணப்படவில்லை. எனவே இக்கால ஜனநாயகக் கொள்கைகளை அவர்கள் எடுத்துக் கூறினார்கள் என நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. மார்சிக்லியோ ஆஃப் படுவா (Marsiglio of Padua) என்ற ஒரே அறிஞர்தான் பொதுமக்களின் இறைமை பற்றிப்

பேசியவர். அரசனை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அவன் கொடுங்கோலனாக மாறினால் மக்கள் அவனை அரியணையிலிருந்து அகற்றுவதற்கும் உரிமை உண்டென்றும் அவர் எடுத்துக் கூறினார். மக்களின் பிரதிநிதிகள் அரசியல் சட்டங்களை இயற்றலாம் எனக் கூறினார். ஆனால் மிகச் சிறந்தவர்களே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள்கூட பொதுமக்கள் பற்றிய சட்டங்களைச் செய்யக் கூடாது என்றும் அவர் கூறினார். நாடு என்பது ஓர் உடம்பு போன்றது என்றும், அரசன் அதன் தலை என்றும், சட்டமன்றம் அதன் இதயமென்றும், குடியானவர்கள் அதன் பாதங்கள் என்றும், அரசியலதிகாரிகளும் மற்றோரும் உடலில் பல்வேறு உறுப்பு போன்றவர்கள் என்றும் ஜான் ஆஃப் சாலிஸ்பரி என்ற அறிஞர் கூறினார். நாட்டில் எவ்வித மாற்றமும் கூடாது என்போருக்கு இக் கொள்கை நன்கு பயன் பட்டது. ஆனால் பெரும்பாலான அறிஞர்கள் மக்களின் சமத்துவத்தையும், மாற்றத்தின் அவசியத்தையும் வற்புறுத்தினர்.

## அறிவியல்

### அறிவியல் வளர்ச்சிக்குத் தடைகள்

இடைக்கால ஐரோப்பியர்கள் மறுமையில் அடையப் போகும் பேரின்பத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தமையால் இம்மையின்பத்தைப் பயக்கும் அறிவியல் துறையில் அதிக நாட்டம் செலுத்தவில்லை. மெய்ஞ்ஞானத்தையும் கடவுட் கொள்கையையும் போதிக்கின்ற நூல்களையே அவர்கள் பெரிதும் விரும்பிக் கற்றனர். எனவே எல்லாம் ஈசன் செயல் என்ற நம்பிக்கை மக்களிடையே வளரலாயிற்று. சாதாரண அபாயங்களும், இயற்கையின் கோளாறுகளும் கூட இறைவனால் அளிக்கப் பட்ட தண்டனைகளாக எண்ணப்பட்டன. பதினான்காம் நூற்றாண்டில் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, முதலிய கண்டங்களில் பரவிய கருங்கொள்ளை நோய் ஒன்று லட்சக் கணக்கான மக்களின் உயிர்களைக் குடித்துச் சென்றது. கடலில் சென்று கொண்டிருந்த கப்பல்கள் அதில் பயணம் செய்தவர் களெல்லாம் இறந்து போனதன் விளைவாகக் காலியாகக் கடற் கரையை அடைந்தன. கிராமங்களிலும், நகரங்களிலும், குச்சு வீடுகளும் மச்சு வீடுகளும் அவற்றில் வாழ்வாரின்மையால் வெரிச்சிட்டுக் கிடந்தன. தெருக்களில் பிணங்கள் எடுப்பாரின்றிக் குவிந்து கிடந்தன. இத்தகைய நிலையில் ஐரோப்பிய மருத்துவர்கள் ஒன்று கூடி ஆலோசித்து கொள்ளை நோய்க்குரிய காரணத்தைக் கண்டு பிடிக்கவில்லை. மாறாக, சனி (Saturn)

செவ்வாய், (Mars) வியாழன் (Jupiter) ஆகிய மூன்று கோள்களும் கும்பராசியில் (Aquarius) ஒன்று கூடியதன் விளைவாகவே கொள்ளை நோய் ஏற்பட்டது எனக் கூசாமல் கூறி அன்னார் வாளா இருந்தனர். ஜோஸியத்தில் (Astrology) மக்களுக்கு இருந்த நம்பிக்கை அவ்வளவு அசைக்க முடியாததாயிருந்தது. நல்லோரையில் காரியங்களைத் துவங்கினால்தான் அது வெற்றியடையும் என்பதற்காக மக்கள் தம் பொன்னான நேரத்தை வீணாக்கினர். வயலில் வேளாண்மை செய்த உழவன் நல்லநாள் பார்த்தே விதை விதைத்தான். நாட்டை ஆண்ட மன்னர்கள் நல்ல நாள் பார்த்தே போர்களைத் துவக்கினர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்வதற்குரிய முகூர்த்த நாளை அறிய ஜோசியர்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தனர். நோய் வாய்ப்பட்டவர்கள், அதற்குக் காரணம் தம்மைப் பிடித்திருக்கும் பிசாசுகளே எனக் கருதி அவற்றை விரட்டத்தக்க மாய தாயத்துகளை (Talismen) வாங்க மந்திரவாதிகளைத் தேடிச் சென்றனர். மந்திரங்களும், தந்திரங்களும், மாயா ஜாலங்களும், வித்தைகளும் மக்களை ஆட்கொண்டு ஆதிக்கம் செலுத்தின. மூட நம்பிக்கைகள் விஷம்போல் மக்கள் மனதில் வளர்ந்தன. நீலமணிக் கல்லை (Sapphire) ஒருவர் அணிந்தால் போர்க்களத்தில் வெற்றி நிச்சயம் கிட்டும் என வீரர்கள் நம்பினர். சில விலையுயர்ந்த கற்கள், சில உலோகங்களாலான பதக்கங்கள் இவற்றை அணிவதால் எடுத்த காரியங்களில் வெற்றியும், வேறு சில மணிகளை அணிவதால் துரதிர்ஷ்டமும் ஏற்படும் என்ற நம்பிக்கை பலமாக இருந்தது. மூலிகைகள், பிராணிகளின் உறுப்புகள் இவைகளுக்கு நோய்களைக் குணமாக்கும் ஆற்றல் இருப்பதாக நம்பப்பட்டது. பல் வலியால் துடித்த ஒரு மனிதனின் பற்களுக்கிடையில், நாயின் பற்களைத் தூள் செய்து தயாரிக்கப்பட்ட பஸ்பமோ அல்லது கௌதாரிக் குருவிகளின் மூளையோ அப்பப்பட்டது. புழுக்களை விழுங்குவதாலும், முயலின் பாதங்களை உண்பதாலும், குள்ளநரியின் குருதியைக் குடிப்பதாலும் பல நோய்கள் தீருமென்று பரவலாக நம்பப்பட்டது. ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்தபின் ஐரோப்பாவில் வந்து புகுந்த காட்டுமிராண்டிகளின் கூட்டம் இத்தகைய பல மூட நம்பிக்கைகளைத் தம்முடன் கொணர்ந்து இடைக்கால சமுதாயத்தில் புகுத்தி விட்டது. எதற்கும் அஞ்சி அஞ்சி வாழ்ந்து வந்த பாமர மக்களிடையே இவை நன்கு கால் கொண்டு விட்டன. அறிஞர்கள் மறு உலகைப் பற்றிய ஆராய்ச்சிகளிலேயே தமது முழுகவனத்தையும் செலுத்தியதால், இத்தகைய நம்பிக்கைகளை அகற்ற எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. மேனாட்டுக்

கல்வியறிவு பரவாத நம் நாட்டுப் புறங்களிலும், ஏன் நகரங்களிலும் கூட இத்தகைய மூடப்பழக்கங்கள் மக்களிடையே பரவியிருப்பதையே இடைக்கால ஐரோப்பாவின் நிலை நமக்கு நன்கு நினைவூட்டுகிறது. வள்ளலார் கூறியது போல 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண் மூடிப் போகும்' காலம் வந்தால் தான் நம் நாடும் நவீன ஐரோப்பாவைப் போல் முன்னேற முடியுமென்பது ஒரு தலை.

இடைக்கால ஐரோப்பாவில் அறிவியல் வளர்ச்சி ஏற்படாததற்கு, இன்னொரு காரணமும் இருந்தது. அதாவது எதெற்கெடுத்தாலும், முன்னோர்கள் கூறியதைச் சான்று காட்டி மறுப்பது. ஒரு சில பழைய நூல்கள் சொல்லியதை மக்கள் முடிந்த முடிபுகளாக எண்ணினர். நம்மில் சிலர் வேதவாக்கு என்று கூறி அதற்கு மேல் மனிதர்கள் பேசக் கூடாது என்று சொல்வது போலவே, பைபிள், அரிஸ்டாடலின் நூல்கள் இவற்றுக்கு முரண்பட்ட கருத்துக்களாயின் அவை பொய்யெனக் கூறி அக்கால அறிஞர்கள் மறுத்தனர்.

**அறிவியல் வளர்ச்சி :** இடைக்கால சமுதாயத்தில் இருந்தவர்கள் எல்லோருமே, மந்திரவாதிகளாகவும், பூதம் பேய் பிசாசுகளில் நம்பிக்கையுள்ளவர்களாயும் இருந்தனர் என்று கூறி விட முடியாது. விதி விலக்காக ஒரு சில அறிவியல் வல்லுநர்கள் அக்காலத்திலும் தோன்றாமலில்லை. முஸ்லிம்களிடமிருந்தும், கிரேக்கர்களிடமிருந்தும் பலர் பல அறிவியல் நுட்பங்களைக் கற்றுக் கொண்டதோடு அவற்றை மேலும் வளர்த்துக் கொண்டனர். மூட நம்பிக்கைகளாக முதலில் அரும்பிய ஜோதிடம், ரசவாதம் (Alchemy) போன்ற பாடங்கள் நாளடைவில் அறிவியல் பாடங்களாக மலர்ந்தன. ரசவாதம் செய்து தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றவும், காயகல்பம் செய்து மரணமிலாப் பெருவாழ்வில் வாழவும், பலர் முயன்றனர். பல சோதனைகளில் அன்னார் ஈடுபட்டனர். அதன் விளைவாகப் பல அறிவியல் உண்மைகள் வெளிவந்தன. தற்கால வேதியியல் (Chemistry) இடைக்கால ரசவாத வித்தைக்குப் பெரிதும் கடன்பட்டுள்ளது என்றால் மிகையாகாது. அதே போன்று ஜாதகக் கணிப்பில் ஈடுபட்ட பலர், தம்மை யறியாமலேயே, வான இயல் (Astronomy) பற்றிய பல உண்மைகளைக் கண்டு பிடித்தனர். மற்றும் முஸ்லிம்களிடமிருந்து கற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டு, புவியியல், மருத்துவம், ஒளியியல் (Optics) இயற்பியல் (Physics) கணிதம் முதலிய துறைகளில் இடைக்கால அறிஞர்கள் பெரிதும் முன்னேற்றம் கண்டனர்.

அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் ஆதிகாரணமான அறிவியல் ஆராய்ச்சி முறையை (Scientific method) வற்புறுத்திய ஒரு சில பேரறிஞர்கள் இக்காலத்தே தோன்றினர். அடலார்டு (Adelard) என்ற ஆங்கிலேய அறிஞர் அவர்களுள் தலை சிறந்தவர். சொந்தமாகச் சிந்தித்து செயல்பட்ட அறிஞருள் அவரே முதலிடம் பெறுகின்றார். பனிரெண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அவர், எதற்கெடுத்தாலும், ஒரு நூலையோ, முன்னோரையோ ஆதாரம் காட்டி மறுக்கும் வழக்கத்தைக் கண்டித்தார். இயற்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உற்று நோக்குதல் (Observation) பரிசோதித்தல் (Experimentation) இவற்றின் இன்றியமையாமையை அவர் வற்புறுத்தினார். 'இயற்கையைப் பற்றிய கேள்விகள்' (Questions about Nature) என்ற நூலில், அவர் எதையும் நன்கு பரிசோதித்து அறிவின் துணை கொண்டு அலசி ஆராய்வதே உண்மை காணுதற்கு உற்ற வழி என அறுதியிட்டுக் கூறியுள்ளார். யுக்லிட் (Euclid) என்ற கிரேக்க அறிஞரின் வரைப்படக் கணித நூலை (Geometry) அவர் லத்தீனில் மொழி பெயர்த்தார். பூகம்பங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள், மூளையின் பல்வேறு பாகங்களின் தொழில்கள், செறிமானம், மூச்சு விடுதல் பற்றிய உண்மைகள், இவற்றை அவர் ஆராய்ந்து அக்காலத்திலேயே வெளியிட்டார். பருப்பொருள் (Matter) என்பது அழிக்க முடியாததொன்று என்ற உண்மையை முதலில் கண்டு வெளியிட்டவர் அவரேயாகும்.

அரிஸ்டாடலின் நூல்களில் சொல்லியவைதான் வேதவாக்கு, என்று சாதித்தவர்களின் வாய்களை முதன்முதல் மூடியவர் ரோஜர் பேகன் (Roger Bacon) எனும் ஆங்கிலேய அறிஞராவார். பதின் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிஸ்கன் துறவியான அவர், ஆக்ஸ் போர்டு, பாரிஸ் ஆகிய நகரங்களில் பேராசிரியராகவும் பணியாற்றினார். அடலார்டைப் போன்று இவரும், பரிசோதனை முறையால் உண்மைகாணும் முறையை வற்புறுத்தினார். அறிவியல் முறையைப் பயன்படுத்துவதன் மூலம், குதிரை பூட்டாமல் ஓடுகின்ற வண்டியையும், பறக்கின்ற இயந்திரங்களையும் துடுப்பும் பாய்மரமும் இன்றிக் கடலில் பயணம் செய்யக்கூடிய கப்பல்களையும் உண்டாக்க முடியும் என அவர் கூறினார். இக்கால மோட்டார் வண்டி, வான ஊர்தி, நீராவிக் கப்பல் ஆகியவற்றைப் பற்றி அக்காலத்திலேயே அறிந்து கூறிய அவரது நுண்மாண் நுழைபுலம் வியந்து பாராட்டத் தக்கதொன்றாகும். மற்றும் அவர் வெறும் வாய்ச்சொல் வீரர் மட்டுமின்றிக் காரியத்திலும் வல்லவர் என்பதை மெய்ப்பித்தவர். ஒளியியல் துறையில் அவர் பரிசோதனை செய்து வெளியிட்ட

உண்மைகள் பல நூற்றுண்டுகள் வரை அறிஞர்களிடையே பெருஞ் செல்வாக்குடன் விளங்கின. உருப்பெருக்கிக் கண்ணுடி ஒன்றையும் அவர் கண்டு பிடித்தார். புவியியல் பற்றியும் பல உண்மைகளைக் கண்டு அவர் வெளியிட்டார். ஜூலியன் கால அட்டவணையின் குறைபாடுகளைக் கண்டு பிடித்து, அதை மாற்றி யமைக்க வேண்டுவதன் அவசியத்தை அவர் வற்புறுத்தினுர். அறிவியலைப் போற்றிய அதே நேரத்தில் அவர் சமயக் கல்வியே, சாலச் சிறந்தது என்றும் வாதித்தார். நூல்களைப் படிப்பதால் வரும் அறிவைவிட, வேதாளத்தின் இறைச்சியை உண்பதால் வரும் ஞானம் அதிகமானது என்ற மூடக் கொள்கையில் அவரும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இடைக்கால ஐரோப்பாவிலேயே மிகத் துணிச்சல் மிக்க பகுத்தறிவு வாதியாய்த் திகழ்ந்தவர், இரண்டாம் பிரடரிக் (Frederick II) என்ற தூய ரோமப் பேரரசராவார். 13-ஆம் நூற்றுண்டின் முதற்பகுதியில் ஜெர்மனியை ஆண்ட அவர் எதிலும் நம்பிக்கையற்றவராயிருந்தார். ஆன்மா அழிவற்றது என்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். சதா ஏதாவது பரிசோதனையிலீடுபட்டு வந்த அவர் ஒரு சமயம் செயற்கை முறையில் முட்டைகளைப் பொரிக்க வைக்க முயன்முர். இராஜாளிப் பறவை இரவில் கண்பார்வையைக் கொண்டு இரைதேடுகிறதா அல்லது வெறும் மோப்பத்தைக் கொண்டே இரையினிருப்பிடத்தை அறிகிறதா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டி, அதன் கண்களைத் தைத்து விட்டாராம். உடலோடு ஆன்மாவும் இறந்து போகிறது என்பதை மெய்ப்பிக்க அவர் ஒரு மனிதனைச் சாராயப் பெட்டிக்குள் போட்டு அடைத்துக் கொன்முரெனக் கேள்விப் படுகிறேம். முஸ்லிம் நாகரிகத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட அவர், முஸ்லிம் நூல்கள் பலவற்றை லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கச் செய்தார். அறிவியல் வல்லுநர்களை நன்கு ஆதரித்தார். பைசா நகரத்து லியனுர்டு என்ற கணித மேதையை அவர் தம் அருகிலேயே வைத்துக் கொண்டிருந்தார். மறுத்துவ முறை ஓங்கப் பெரிதும் பாடு பட்டார். நேப்பில்ஸ் நகரில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவி அதில் மருத்துவம் சிறந்த முறையில் கற்பிக்கப்பட வழி செய்தார். நன்கு படித்து அநுமதி பெற்றவர்களே மருத்துவர்களாக இருக்க வேண்டுமென வற்புறுத்தினுர். அறிவியல் வளர்ச்சிக்காக அவர் இங்ஙனம் ஓயாது பாடுபட்டு வந்தார்.

இடைக்கால ஐரோப்பியர்கள் அராபியர்களிடமிருந்து பெற்ற அறிவியல் செல்வங்களை மேலும் பெருக்கிக் கொண்டார்கள்.

கணிதத் துறையில் மெச்சத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. ரோமானிய எண்களுக்குப் பதிலாக அராபிய எண்கள் (0, 1, 2, 3 முதலியன) பயன்படுத்தப் பட்டன. தசாம்ச முறை வழக்காற்றுக்கு வந்த காலமும் இதுவே. லியனுர்டோ ஃபிப்போனஸியோ (Leonardo Fibbonacio) என்பார் வரைபடக் கணித சித்தாந் தங்களை மெய்ப்பிக்க குறியீட்டுக் கணிதத்தைப் (Algebra) பயன் படுத்தினர். ராபர்ட் ஆவ் செஸ்டர் (Robert of Chester) என்பார் திரிகோண கணிதத்தை (Trigonometry) இங்கிலாந்துக்குள் புகுத்தினர். வான இயலைப் பொறுத்தவரையில் பூமியைச் சுற்றியே சூரியனும் ஏனைய கிரஹங்களும் வட்டமிடுகின்றன என்ற தவருன கருத்தே வழக்காற்றிலிருந்தது. சூரியனையே ஏனைய கிரஹங்கள் சுற்றுகின்றன என்று கூறியவர்களை மக்கள் கொன்று விட்டனர். எனினும் கிரஹங்களின் நிலை நன்கு துல்லியமாகக் கணக்கிடப் பட்டது. ஜூலியன் பஞ்சாங்கத்தில் பல சீர்திருத்தங்கள் இக் காலத்தே ஏற்படுத்தப்பட்டன.

# 9. இடைக்காலத்தின் இறுதிக் கட்டம் மறுமலர்ச்சியின் உதயம்

## 1. இதாலியின் ஆரம்ப கால மறுமலர்ச்சி (Early Renaissance in Italy) கி. பி. 1500 வரை.

ஐரோப்பாவின் இடைக்காலமானது (Middle Ages) அறியாமை எனும் இருளில் சூழப்பட்டிருந்தாலும் கூட ஆங்காங்கே ஒரு சில கல்விமான்கள் தோன்றிக் கலை வளர்த்தனர். 12-ம் நூற்றுண்டிலிருந்தே உண்மையறிவு பெறுவதில் அறிஞர்களிடையே ஒரு வேட்கை காணப்படுகிறது. அவ்வேட்கையின் காரணமாக மதக் கொள்கைகளையும் ஏனைய எல்லா அறிவுகளையும் இணைத்துக்காட்டும் ஒரு தத்துவ ஆராய்ச்சி (Scholastic Philosophy) வளர்ந்தது. மெல்ல மெல்ல மறுமலர்ச்சி பரிணமித்தது. மறுமலர்ச்சியின் காரணமாக, வெறும் நூலறிவின்பாற்பட்ட விதண்டாவாதமான மேற்படி ஆராய்ச்சி மாறி, மனிதத்துவம் (Humanism) எனும் மனித இயல்புகளைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ந்தது. இம் மனிதத்துவ ஆராய்ச்சி எனும் கட்டிடமானது பண்டைய கிரேக்க, ரோமானிய நாகரிகங்கள் எனும் அடிப்படையின் மேல் எழுப்பப்பட்டது.

### ஆரம்ப கால இதாலிய மறுமலர்ச்சியின் இலக்கியக் கூறுபாடுகள்

**கிரேக்க ரோமானிய இலக்கியங்களின் மறுமலர்ச்சி**

இருண்டகாலமெனப்படும் முந்திய இடைக்காலத்தில் கூட பண்டைய லத்தீன் மொழியும் இலக்கியமும் முற்றிலும் அழிந்து விடவில்லை. கிரேக்க இலக்கியம் மேற்கு ஐரோப்பாவில் ஓரளவு அழிந்துபோய் விட்டாலும் லின்கன் (Lincoln) நகர பிஷப்பான (Bishop) கிராசடெஸ்டி (Grosseteste) என்பார் பல கிரேக்க நூல்களை கி. பி. 1253-லேயே இங்கிலாந்துக்குக் கொண்டு

வந்தார். விட்பி (Whitby) எனும் நகரத்திலிருந்த நூல் நிலையத்தில் ஹோமர் (Homer) ப்ளேடோ (Plato), இவர்களது நூல்கள் பலவும், லத்தீன் ஆசிரியர்களது நூல்கள் பலவும் 13-ம் நூற்றுண்டிலேயே காணப்பட்டன. ரோஜர் பேகன் (Roger Bacon) என்பார் கிரேக்க மொழிக்கு ஓர் இலக்கியம் எழுதினுர். இதாலிய ஆசிரியர்கள் பலருக்கு கிரேக்க இலக்கியம் ஒரு வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தது.

**மறுமலர்ச்சியின் முன்னோடிகள்** (Forerunners of Renaissance)

**தாந்தே** (Dante) தற்கால அறிவியக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் தாந்தே எனும் கவிஞர் எனலாம்; அவரது தெய்வீக இன்பியல் நாடகம் (Divine Comedy) மனித உள்ளத்து எழும் உணர்ச்சிகளையும் இயல்புகளையும் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. ''மனிதனது துக்கம் சுகம் இரண்டையும்'' அது நன்கு பிரதிபலிக்கிறது. மனிதத்வம் அந்நூலில் மிளிர்கிறது.

**பெட்ரார்க்** (Petrarch) (*1304—1374*)

பெட்ரார்க் எனும் பெரியார் நன்கு படித்த ஒரு முதறிஞர். பண்டைய கிரேக்க இலக்கியங்களின் பெருமையை அவர் பலருக்கும் எடுத்துக் காட்டியவர். கிரேக்க மொழியை அவர் அறியாதிருந்தும் கூட அதன் பெருமையை கிரேக்க மேற்கோளடங்கிய லத்தீன் நூல்களிலிருந்து அறிந்தவர். அறிந்தபின், விரிந்த அறிவுலகத்துக்குத் திறவுகோல் கிரேக்க இலக்கியமே என எங்கும் பறைசாற்றியவர். இதன் காரணமாக இவரை இதாலிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை என்பர் சிலர். 'புதியதோர் ஆன்மீகப் பேரரசரைக் கண்டுபிடித்த கொலம்பஸ்' என்பர் வேறு சிலர், (Columbus of a new spiritua Empire). அவர் கிரேக்க இலக்கியங்கள் பலவற்றின் கைப்பிரதிகளைச் (manuscripts) சேகரித்தார். கிரேக்க நாகரிகத்தை அறிய உதவும் புதைபொருளாராய்ச்சியிலும் (archaeology) அவர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

**ஜியோவன்னி பொக்கேஷியா** (Geovanni Boccacio)

இவர் பெட்ரார்க்கின் நண்பர். கிரேக்க மொழியில் முதன் முதல் பாண்டித்யம் பெற்ற இதாலியர் இவரே. இவர் காலத்து நிலவிய ஒழுக்கமற்ற வாழ்க்கையை இவரது நூலான டெக்கமெரான் (Decameron) பிரதிபலிக்கிறது. சிருங்கார ரசம் செறிந்துள்ள இவரது உரைநடை மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பட்டது. இவரது நடை இலக்கியத்துக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியது.

**மானுவல் கிரைசோலாரஸ்** (Manuel Chrysolorus)

இவர் ஒரு பெரும் கல்விமான். பெரும் பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர். 1397 முதல் 1400 வரை பிளாரன்ஸ் (Florence) நகரில் கிரேக்கப் பேராசிரியராய் இருந்தவர். மிலான் வெனிஸ் நகரங்களிலும் அவர் கிரேக்க மொழியைப் போதித்தார். அவரது பேருரைகள் (Lectures) மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. கிரேக்க இலக்கியம் மீண்டும் இதாலியில் புத்துயிர் பெற (Revival) அவரது சொற்பொழிவுகள் பெரிதும் துணை செய்தன.

**கைப்பிரதிகள் சேகரிக்கப்படல்** (Collection of manuscripts)

கிரேக்க மொழி புத்துயிர் பெறுதற்கு உறுதுணையாயமைந்தவை கிரேக்க இலக்கியங்களின் கைப்பிரதிகள். அவற்றைச் சேகரிப்பதில் பலர் முனைந்தனர்.

a) ஐந்தாம் நிக்கோலஸ் (Nicholas V) எனும் போப்பாண்டவர் தனது வாடிகன் நூல் நிலையத்தில் 5000 கிரேக்கப் பிரதிகளைச் சேகரித்தார். நான்காம் சிக்ஸ்டஸ் (Sixtus IV) என்னும் போப்பாண்டவர் அந்நூல் நிலையத்தை ஒழுங்குபடுத்தி மேலும் பெருக்கினார். நிகோலோ நிகொலி (Niccolo Niccoli) என்பார் 800 கைப்பிரதிகளைச் சேகரித்து, அவற்றைத் தமது நண்பரான காஸிமோ-டி-மெடிஸி (Cassimo de Medici) என்பாரிடமும் மற்றும் சில நூல் நிலையங்களுக்கும் தந்தார். மெடிஸியின் ஆட்கள் மேற்கு ஐரோப்பாவெங்கும் சுற்றி 600 கைப்பிரதிகளைச் சேர்த்தனர். பிளாரன்ஸ், அர்பினோ (Urbino) முதலிய இடங்களிலுள்ள நூல் நிலையங்கள் 15 ஆம் நூற்றாண்டின் இடையிலேயே தோன்றி விட்டன.

**சில சிறப்பான கண்டுபிடிப்புக்கள்** (Some Special discoveries)

கைப்பிரதிகளைச் சேகரிக்கும் முயற்சியிலீடு பட்ட ஒரு சிலர் சில சிறப்பான நூல்களைக் கண்டு பிடித்தனர். க்வின்டிலியன் (Quintilian) என்ற நூலானது ஃகால் மடத்தில் பாஃகியோ பிரேகியோலினி (Poggio Bracciolini) என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டது. ப்ளாடஸ் (Platus) என்பாரின் 12 இன்பியல் நாடகங்களும், சிசரோவின் (Cicero) சொற்பொழிவுகளும் இங்ஙனமே கண்டு பிடிக்கப் பட்டன. (Pliny) எனும் ஆசிரியரின் நூலை காஸிமோடி மெடிஸி (Cosimo de Medici) என்பர் லூபெக் (Lubeck) மடத்தினின்றும் விலைக்கு வாங்கினார்.

இங்ஙனம் கண்டு பிடிக்கப்பட்ட நூல்களின் பிரதிகள் மிக விழிப்புடன் படி எடுக்கப்பட்டன. காஸிமோடி மெடிஸி என்பார்

200 ஆட்களை அமர்த்தி 32 மாதங்களில் மொத்தம் 200 நூல்களின் பிரதிகளை எழுதச் செய்தார். பெடரிகோடி மான்டபெல்ட்ரோ (Federigo de Montefeltro) என்பார் பிரதிகள் எடுக்கவென்றே 20 முதல் 30 ஆட்களை அமர்த்தியிருந்தார். அச்சடிக்கப் பட்ட நூல்களை வைத்திருக்க அவர் பெரிதும் நாணமுற்முர். எனினும் அச்சுயந்திரம் கண்டு பிடிக்கப் பட்டதன் விளைவாக பலகிரேக்க நூல்கள் அச்சில் வெளிவந்தன. அஸிகிலஸ் (Aeschylus) என்பாரின் நூல்கள் 1518-ல் வெளியிடப்பட்டன. அதன்பின் ஒன்றன்பின் ஒன்ருய் மற்ற எல்லா கிரேக்க நூல்களும் வெளிவர ஆரம்பித்தன.

### கல்வி வளர்த்த காவலர்கள் கலைக் கூடங்கள்

கிரேக்க லத்தீன் மொழி இலக்கியங்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தவர்கள் இதாலிய சிற்றரசர்களாவர். ப்ளாரன்ஸ் நகரின் மன்னரான மெடிஸி என்பாரும், நேபில்ஸ் மன்னரான அல்ஃபான்ஸோ (Alfonso) என்பாரும் கலை வளர்த்த காவலர்களுள் சிறப்பாக வைத்து எண்ணப்பட வேண்டியவர்கள். பெடரிகோ மான்டிபெல்ட்ரோ (Federigo de Montefeltro) சிகிஸ் மாண்டோமாலடெஸ்டா (Sigis mondo Malatesta) என்பாரும் அங்ஙனமே பண்டைய கிரேக்க கலைகளை வளர்த்தனர்.

### பிளேடோனிய கலைக்கூடம் (Platonic Academy)

கிரேக்க கல்வியையும் கலைகளையும் வளர்க்க ஆங்காங்கே பல கலைக் கூடங்கள் தோன்றின. அவற்றில் மிகச் சிறந்தது ப்ளாரன்ஸ் நகரத்தில் 1438-ல் தோற்றுவிக்கப் பட்ட பிளேடோனிய கலைக் கூடமாகும். இது காஸிமோடி மெடிஸி என்ற மன்னரால் ஆதரிக்கப் பட்டது. கெமிஸ்டோஸ் ப்ளிதான் (Gemistos Plethon) என்பவர் அக் கலைக் கூடத்தின் தலையாய புலவராய்த் திகழ்ந்தார். அவரது தூண்டுதல் பேரிலேயே ப்ளாரன்ஸ் கலைக்கூடம் மெடிஸியில் தோற்றுவிக்கப்பட்டது. அவர் பிளேடோவின் மறு அவதாரமோ என்று எண்ணத் தக்க முறையில் பிளேடோவின் தத்துவங்களை விளக்கிக் காட்டினர். ஃபிலல்போ (Filelfo) என்ற பேராசிரியர் ப்ளாரன்சில் தினமும் 400 மாணவர்களடங்கிய கூட்டத்துக்கு கிரேக்க லத்தீன் இலக்கியங்களைப் பற்றி சொற்பொழிவாற்றினர். அம்ரோகியோ ட்ராவெர்ஸரி (Ambrogio Traversari) எனும் புலவர் பல மத நூல்களை லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். அவரது மாணவரான மானெட்டி (Giannozzo Manetti) என்பார் ஹீப்ரு

மொழியைப் படித்து, அம்மொழியிலிருந்து பல மதப்பாடல்களை (Psalms) லத்தீனில் மொழிபெயர்த்தார். லொரன்ஸோ (Lorenzo) என்பாரது காலத்தில் இக் கலைக் கூடத்தில் பிகோடெல்லா மிரான்டோலா (Pico Della Mirandola) என்னும் அறிஞர் கிறிஸ்தவ மதக் கொள்கைகளையும் பிளேடோவின் தத்துவங்களையும் ஒன்றுபடுத்திக் காட்ட அரும்பாடு பட்டார்.

இக்கலைக் கூடத்தில் பணியாற்றிய லத்தீன் மொழிப் புலவர்கள் பலர். மைக்கேல் ஆஞ்சலோ, ஆல்பர்ட்டி, பாலிடியன் (Politian), கிரிஸ்டோபோரோ லாண்டினோ (Christoforo Landino) போன்றவர்கள் இதன் உறுப்பினர்களாய்த் திகழ்ந்தனர்.

### ரோமானிய கலைக் கூடம்

இக்கலைக்கூடம் 1460-ம் ஆண்டில் ஜூலியஸ் பாம்போனியஸ் லாக்டஸ் (Julius Pomponius Lactus) என்பவரால் நிறுவப் பட்டது. இங்கு லத்தீன் மொழி இலக்கியங்களே பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டன. இரண்டாம் பால் என்னும் போப் ஆண்டவர் இக் கலைக்கூடத்தைச் சிறிது காலம் இயங்காமல் ஒடுக்கிவிட்டார் எனினும் அஃது மறுபடியும் நான்காம் சிக்ஸ்டஸ் எனும் போப்பாண்டவர் காலத்தில் புத்துயிர் பெற்றது. பத்தாம் லியோ எனும் போப்பாண்டவர் காலத்தில் (1513-1521) அஃது சீரும் சிறப்புமுற்றுத் திகழ்ந்தது. தியோடோர்ஃகாஜா, டெமெட்ரியஸ் சால்கொண்டிலாஸ் என்ற பெரும் கிரேக்க அறிஞர்கள் இந்தக் கலைக் கூடத்தோடு தொடர்பு கொண்டவர்கள். அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிலிலிருந்து 1447-ல் இங்கு வந்தவர்கள். ஜான் லாஸ்காரியஸ் (John Los Carius) என்ற கிரேக்கப் புலவர் 1533-ல் ரோம் நகரிலேயே இறந்தார்.

### நியாபாலிடனிய கலைக்கூடம்

1460-ல் இஃது தோற்றுவிக்கப் பட்டது. லத்தின் மொழி இங்கு பெரிதும் பேணி வளர்க்கப்பட்டது.

### வெனீஸ் நகரப் புதுக் கலைக்கூடம் (Neo academia at Venice)

ஆல்டோ மானுஜியோ (Aldo Manuzio) எனும் அச்சுப் பதிப்பக முதலாளி 1500-ம் ஆண்டளவில் வெனீஸ் நகரில் ஒரு கலைக்கூடத்தைத் தோற்றுவித்தார். அவர்தம் பதிப்பகத்தில் என்னென்ன நூல்களை எங்ஙனம் வெளியிட வேண்டுமென்பதற் கான ஆலோசனைகள் கூறுவதற்கென்றே இக்கலைக்கூடத்தை

ஆரம்பித்தார். இவரது ஆல்டைன் பதிப்பகம் (Aldine Press) இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

**கிரேக்க மொழிப்படிப்பு**

கிரேக்க மொழியைப் பல அறிஞர்கள் கற்றுத் தேர்ந்தனர். இதற்குத் துணைபுரிந்தவை அவ்வப்போது வெளிவந்த கிரேக்க இலக்கிய இலக்கண நூல்களாகும். 1476-இல் லாஸ்காரியஸ் என்பாரின் கிரேக்க இலக்கணம் வெளியிடப்பட்டது. அதன்பின் தியாக்ரிடஸ் (Theocritus), ஹெலியாட் (Heliod), ஐஸோக்ரெடிஸ் (Isocrates) என்பவர்களது இலக்கியங்கள் அச்சிடப்பட்டன. கி. பி. 1484 இல் வெனிஸ் நகரத்தில் கிரிசோலாரஸ் (Chrysolaras) என்பவரது கிரேக்க இலக்கண நூல் வெளியிடப்பட்டது. ஹோமர் எனும் கவிஞரது நூல்களையும் அவர் தொகுத்து 1488 ஆம் ஆண்டில் ப்ளாரன்ஸ் நகரில் வெளியிட்டார். அரிஸ்டாடல் என்னும் அறிஞரது நூல்களின் மொழி பெயர்ப்புகளும், தியோடார் காஜா என்பாரின் கிரேக்க இலக்கணமும் கி. பி. 1495 ஆம் ஆண்டில் ஆல்டோ என்பவரால் வெளியிடப்பட்டன.

இக்கிரேக்கப் படிப்பானது மக்களிடையே ஓர் அறிவு விழிப்பை உண்டு பண்ணியது. குணங்குற்ற ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மையும், திறனாய்வும் (Criticism) ஒப்பிட்டுப் பார்க்கும் மனப்பான்மையும் (Comparison) வளர்ச்சியடைந்தன. திருச்சபையின் துறவிகள் கனவிலும் கண்டிராத ஒரு தத்துவ உலகத்துக்கு இவ்விலக்கியங்கள் மக்களை அழைத்துச் சென்றன. கலையிலும், இலக்கியத்திலும் அழகுணர்ச்சியைக் காண அறிஞர்கள் விழைந்தனர் (Sense of the beautiful in art and literature). அறிவியல் படிப்புக்கும் (Science) கிரேக்கப் படிப்பு அடிகோலியது.

இலக்கியத் திறனாய்வு (Literary criticism) வளர்ந்த காரணத்தால் கிரேக்க இலக்கியங்கள் துருவி ஆராயப்பட்டு, அவற்றின் உண்மையான பிழையற்ற பதிப்புகள் வெளிவர ஆரம்பித்தன. உதாரணமாக இடைக்காலத்து விதண்டாவாதிகள் (Scholastic Philosophers) அரிஸ்டாடிலின் நூல்களை அராபிய மொழிலியிருந்து தங்களுக்குச் சாதகமான முறையில் பலப்பல பிழைகளோடு வெளியிட்டு வந்தனர். உண்மையான பதிப்புகள் வெளிவந்ததும் அவர்களது வாதங்களின் உயிர் போய்விட்டது.

**லத்தீன் மொழிப் படிப்பு**

கல்வி மறுமலர்ச்சியின் காரணமாக லத்தீன் இலக்கியங்கள் புத்துயிர் பெற்று வளர்ந்தன. லத்தீன் மொழி பல ஆண்டுகளாக

கவனிப்பாரற்றுக் கிடந்ததால் அதன் நடை அழகு பெரிதும் குன்றியிருந்தது. இந்நடையழகு புதுமெருகுடன் இப்போது மிளிர ஆரம்பித்தது. லத்தீன் இலக்கியங்கள் ஆராய்ச்சி மனப்பான்மை யுடன் படிக்கப்பட்டன. இலக்கணப் பிழையின்றி, அழகுற, அமைவுற எழுத வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது. சிசரோவின் இலக்கியங்களையும், கடிதங்களையும் முன்மாதிரியாக வைத்துக்கொண்டு அவரது நடையையே அறிஞர்கள் பின்பற்ற ஆரம்பித்தனர். பிளினியின் நடையும் பெரிதும் பின்பற்றப் பட்டது. பொதுப்பத்திரங்கள் (Public Documents) புது முறை யில் சிறப்பாக எழுதப்பட்டன. லியர்னேடோ ப்ருனி (Leonardo Bruni) கார்லோ மார்சூபினி (Carlo Marsuppini), பாஹியோ (Poggio) என்ற அரசாங்கச் செயலாளர்கள் லத்தீன் மொழியில் பெரிய புலவர்கள். லத்தீன் மொழியில் ஆராய்ச்சி நூல்கள் பலவும், வரலாற்று நூல்கள் பலவும் வெளிவந்தன.

லொரென்ஸோ வல்லா (Lorenzo Valla) எனும் அறிஞர் அல்பான்ஸோ (Alfonso) எனும் நேப்பிள்ஸ் நாட்டு அரசரின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார். கி. பி. 1459 இல் அவர் பிழையற்ற முறையில் லத்தீன் மொழியை எழுதுதற்காக விதி முறைகளை ஏற்படுத்தினர். 1440 இல் அவர் எழுதிய ஓர் ஆராய்ச்சி நூல் போப்பாண்டவரின் உரிமைகளுக்கு அதுகாறும் காரணமாயி ருந்து வந்த ஒரு பத்திரத்தைப் பொய்ப்பத்திரமென்று நிரூபித்து விட்டது. வரலாறு, வரலாற்றுத் திறனாய்வு இரண்டுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அவரது ஆராய்ச்சி நூல் திகழ்ந்தது. 1514இல் விவிலிய நூலின் புது ஏற்பாடு (New Testament) கிரேக்க மொழி யில் பல கைப்பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்தபின் பதிப்பிக்கப் பட்டது. இதனால் கிறிஸ்தவ சமயத்தின் உண்மையான கோட் பாடுகள் மக்களுக்குத் தெரியவந்தன.

### 8. ஹீப்ரு மொழி பெயர்ப்பு

பிக்கோ டெல்லா மிராண்டோலே எனும் அறிஞர் யூதர்களின் சட்டங்களையும் மதக்கொள்கைகளையும் நன்கு நுணுகி ஆராய்ந் தவர். அவரது ஹீப்ரு நூல்கள் அம்மொழியில் ஒரு புதிய திருப் பத்தை ஆரம்பித்து வைத்தன. ஹீப்ரு கல்வி மறுமலர்ச்சியானது 16 ஆம் நூற்றுண்டில் தோன்றிய மதசீர்திருத்த இயக்கத்துக்குப் பெரிதும் துணைபுரிந்தது எனலாம்.

### சுதேச இலக்கியங்களின் வளர்ச்சி (Growth of Vernacular Literature)

தாந்தே எனும் கவிஞர் இதாலிய மொழிக்குப் புத்துயிரளித்த பெரியார். அவரது இன்பியல் நாடகம் எனும் கவிதை நூல்

தற்கால்க் காவியத்துக்கு ஒரு முதல் நூல். எனினும் அக்காலத்தே கிரேக்க, லத்தீன் மொழிப்பற்று பெரிதும் ஓங்கியிருந்த காரணத்தால் அவருக்கு அறிஞர் உலகம், 'பாமர மக்களின் புலவர்'. அதாவது ரொட்டிச் சுடுபவர், செருப்புத் தைப்பவர், ஆகியவர்களின் புலவர் (Poet of the bakers and cobblers) என்ற பட்டத்தைச் சூட்டியது. எனினும் லொரென்ஸோ டி மெடிஸி என்பவரது இடையறு ஆதரவாலும், ப்ருனி, பிலெல்போ, லான்டிநோ போன்ற புலவர்களின் அயரா உழைப்பாலும் இதாலிய மொழிவளம் பெற்றுப் பல வகையிலும் வளர்ச்சியுற்றது.

**நாவல்லா :** இதாலிய மொழி மறுமலர்ச்சியில் முதலிடம் வகிப்பவை நாவல்லா என்ற கற்பனைச் சிறு கதைகள். இவை நடுத்தர வகுப்பினரின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தன. ஒரு நீதியை உட்கொண்ட ஒரு நிகழ்ச்சியைக் கற்பனை கலந்த நடையில் எழுதப்பட்ட இக்கதைகளை மக்கள் விரும்பிப் படித்தனர். பொக்கேஷியோவின் டெக்காமெரான்தான் நாவல்லா நூல்களுக்கு ஆதிநூல். அதன்பின் பான்டெல்லோ (Bandello 1560) சிந்தியோ (Cinthio) என்பவர்கள் இத்தகைய நூல்கள் பல எழுதினர்.

**அகவற்பா (Idyll)**

பொக்கேஷியோதான் இவ்வித இலக்கியத்துக்கும் கர்த்தா ஆவர். இயற்கையில் கொழிக்கும் எழிலையும், நாட்டுப்புறங்களின் அழகையும் வர்ணிக்கும் அகவற்பாக்களே இடில் எனப்படுவன. கள்ளமில்லா உள்ளம் வாய்ந்த கிராமிய மக்களடங்கியதாகக் கருதப்பட்ட ஆர்க்கேடியா (கிரீஸில் உள்ளது) என்ற எழில் நிலத்தைப்பற்றியே இக்கிராமியப் பாடல்கள் பாடப் பெற்றன. பாலிடியன் (Politian) லொலின்ஸோ என்பவர்கள் இடில் கவிதைகளை எழுதினர். ஜேகோபோ சானஜாரோ (Jacobo Janazzaro) (1458—1530) என்பவர் ஆர்க்கேடியாவைப் பற்றி கவிதை புனைந்தார்.

**புத்துணர்ச்சிக் காப்பியங்கள் (Romantic Epics)**

பிரென்சு மொழியில் காணப்பட்ட பல துணிகரச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு பல்ஸி (Pulci), பாயர்டோ (Boiardo) (1434—1944), என்ற அறிஞர்கள் பல கதைகளை எழுதினர். ஆர்லாண்டோ இன்னமாரேடோ (Orlando Innamorato) என்ற இதிகாசத்தை எழுதியவர் பாயர்டோ என்பவராவர். ஆர்லாண்டோ ப்யூரியோசா எனும் புகழ்பெற்ற இதி

காசத்தை அரியஸ்டோ (Ariosto) எனும் புலவர் 1515இல் வெளியிட்டார்.

**வசைப்பாடல்கள் (Satire)**

அரியஸ்டோ என்பவர் இத்தகைய காவியங்களை முதலில் புனைந்தார். ஆனால் மனிதர்களைக் கேலி செய்வதில் தற்காலச் செய்தித்தாள்களைத் தோற்கடிக்கும் வகையில் எழுதியவர் பியட்ரோ ஆரிடினோ (Pietro Aretino கி. பி. 1557) என்பவராவர்;

**நாடகம்:** மறுமலர்ச்சியால் நாடகங்களும் புத்துயிர் பெற்றன. பாயார்டோ, பாலிடியன் என்பவர்கள் பல நாடகங்களை எழுதினர். ஸோபானிஸ்பா (Sofanisba) என்ற முதல் துன்பியல் நாடகத்தை டிரிஸினோ (Trissino) என்ற புலவர் 1515 இல் எழுதினர். சப்போஸிடி (Suppositi) எனும் இன்பியல் நாடகத்தை அரியஸ்டோ என்பார் 1509 இல் வெளியிட்டார். நாடகங்கள், நாவல்லாவைப் போல் இதாலிய மக்களைக் கவரவில்லை. கிரேக்க லத்தீன் நாடகங்களையே மக்கள் விரும்பிப் போற்றினர்.

**வரலாறும் சுயசரிதைகளும்**

1494 முதல் 1540 வரை பல வரலாற்று அறிஞர்கள் இதாலியில் தோன்றினார்கள். மாக்கியவல்லி, நார்டி, க்யூகியார்டினி (Guicciardini), நெர்லி (Nerli) என்ற அரும் பெரும் வரலாற்றாசிரியர்களைப் ப்ளாரன்ஸ் நகரம் தோற்றுவித்தது. செல்லினி (Cellini) என்பாரது புகழ்பெற்ற சுயசரிதம் இக்காலத்துத் தோன்றியதே ஆகும்.

**கல்வி**

இருபெரும் கல்விமான்கள் மறுமலர்ச்சிக் காலத்தின் சிறப்பான பண்புகளைப் பேணி வளர்த்தனர். விட்டாரினோ டெ பெல்ட்ரி (Vittarino de Feltre 1378—1446) என்பவர் ஒரு பெரிய ஆசிரியர்; மாண்டுவா கோமகனது (Duke of Montwa) பிள்ளைகளுக்குக் கல்வியூட்டியவர். அவரது பாட முறையே அலாதியானது. பண்டைய கிரேக்க லத்தீன் இலக்கியங்களும், கணிதம், இயற்கையறிவு நூல், வரலாறு, இசைக்கலை இவற்றைக் கற்பித்ததோடு நந்நடத்தை, நற்பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், உடற்பயிற்சி, போர்ப்பயிற்சி இவற்றையும் அவர் கற்பித்தார். மாணவர்களின் முழு இயல்பையும் வளர்க்க அவர் பாடுபட்டார்.

**காரினோ டெ வெரோனோ** Guarino de Verona (1370—1460) என்பார் மற்றொரு பேராசிரியராவார். பெராரா கோமகனது

பிள்ளைகளுக்கு ஆசிரியர். மாணவர்களிடையே கட்டுப்பாட்டை வற்புறுத்திய கண்டிப்பு நிறைந்தவர். கற்பிக்கும் முறையில் புதுமை கண்டவர்.

## ஆரம்பகால மறுமலர்ச்சியும் கட்டிடக்கலையும்

### 2. கட்டிடக்கலை மறுமலர்ச்சிக்குமுன்

மறுமலர்ச்சி காலத்துக்குமுன் இதாலியில் மூன்று வகையான கட்டிடக் கலைகள் இருந்தன.

**இதாலிய முறை :** இதாலிய கட்டிடமுறை பல இடங்களில் பலவகையாயிருந்தது. இதாலியின் வடக்கே லொம்பார்டுகள் குடியேறியதின் காரணமாக லொம்பார்டுகளின் கட்டிடமுறை அங்கே கையாளப்பட்டது. தெற்கு இதாலியில் அராபியர்கள், நார்மன்கள், பைஸான்டியர்கள் ஆகியவர்களின் கட்டிடமுறை காணப்பட்டது. கீழை நாடுகளில் காணப்பட்ட கட்டிட முறையும் சில இடங்களில் காணப்பட்டது.

**டஸ்கன் ரோமானஸ்க் முறை** (Tuscan Romanasque)

பண்டைய கிரேக்க கட்டிடக்கலையின் சாயல் இம்முறையில் காணப்பட்டது. பைசா நகரப் பெருங்கோயில் (Cathedral) சான்மினியாடோ கட்டிடம் இவைகள் மேற்சொன்ன முறையில் கட்டப்பட்டனவாகும்.

**ஃகாதிக் முறை** (Gothic)

ஜெர்மானியப் பேரரசர்களின் செல்வாக்கால் இம்முறை இதாலியில் கையாளப்பட்டது. சியனு (Siena), லுக்கா (Lucca), ப்ளாரன்ஸ், மிலான் ஆகிய இவ்விடங்களில் கட்டப்பட்ட பெருங்கோயில்கள் இம்முறையிலேயே கட்டப்பட்டனவாகும். ஆனால் இதாலியர்களுக்கு இம்முறை அவ்வளவாகப் பிடிக்க வில்லை.

**மறுமலர்ச்சி கால கட்டிடக்கலை** (Renaissance architecture)

கிரேக்க ரோமானிய இலக்கியங்கள் புத்துயிர் பெற்றதன் காரணமாக கட்டிடக்கலையிலும் பண்டைய கிரேக்க ரோமப் பண்புகள் வந்து புகுந்தன. பண்டைய கிரேக்கமுறை அல்லது ரோமானஸ்க் முறையில் காணப்பட்ட வட்டமான (ஆர்ச்சும்) வளைவும், பண்டைய ரோமானிய முறையின் சின்னமான தட்டையான கூரையும், முகப்பும் (lintel) கட்டிடங்களில் புகுத்தப்

பட்டன. ஒரு வகையான ஓர்மையும் (Uniformity) சீர்மையும் (Symmetry) இப்புதிய முறையின் சிறப்பியல்புகளாயிருந்தன. இப்பண்புகள் ஆங்காங்கே ஏராளமாய் எழுந்த கோட்டைகள், அரண்மனைகள் இன்னும் பல பொதுக் கட்டிடங்களில் நன்கு மிளிர்ந்தன.

மறுமலர்ச்சிக் கட்டிடக்கலைஞரில் சிறந்தவரென எண்ணப் படுபவர் ப்ரூனெல்ச்சி (Brunellschi 1377-1466) என்பவராவார். அவர் காஸிமோடெ மெடிஸிக்கு, சான்லாரன்ஸோ (San Lorenzo) என்ற அழகிய மாளிகையை 1425-ல் கட்டித் தந்தார். டூமா எனும் கட்டிடத்திற்கு ப்ரூனெல்சி டூம் ஒன்றை 1436-ல் சேர்த்தார். லியோன் பாட்டிஸ்டோ ஆல்பர்ட்டி (Leon Battisto Alberto) என்பவர் தமது ரூசெல்லாய் அரண்மனையில் Rucellai Palace) இடைக்காலப் பண்பான பருமனையும், பண்டைய பண்பான எளிமையையும் கலந்தார். ஸ்டாமாரியா நோவெல்லா என்ற கட்டிடத்தின் (Sta Maria Novella) முன் புறத்தைக் (Facade) கட்டியவர் (1470ல்) ஆல்பர்ட்டியே ஆவார். பார்மாண்டி என்பவர் (1455-1514) ஆர்ச் பீடர் கோயிலை நிர்மாணித்தார். அக்கோயில் பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட்டுள்ளது. கம்பீரமாகவும் அதே சமயத்தில் எளிமையாகவும், ஒருவித ஒருமைப்பாட்டுடனும் அது காணப் படுகிறது. கிரேக்கப் பண்பான அழகுணர்ச்சிக்கு இங்கே இரண் டாந்தரமான இடமே தரப்பட்டுள்ளது.

### 3. சிற்பக்கலை (Sculpture)

கி. பி. 1260 ல் நிக்கொலோ பிசானோ (Niccolo Pisano) எனும் சிற்பி, ப்ளாரன்ஸ் நகர கோயிலின் ஞானஸ்நான மேடையைக் கட்டினார். அவருடைய மாணவரான ஆர்கேக்னே (Orcagna) என்பார் ஆர்சாம்மிசெலே (Orasammichela) என்ற இடத்திலுள்ள புகழ்மிக்க கூடாரக் கோயிலைக்கட்டினார். மறு மலர்ச்சிக் கலை உண்மையில் ஃகிபர்டி (Ghiberti 1378-1455) என்ற சிற்பியின் காலத்திலிருந்துதான் தொடங்குகிறது எனலாம். ப்ளாரன்ஸிலுள்ள ஞானஸ்நான கட்டிடத்தின் (Baptistry) வெண்கலக் கதவுகளைச் செய்தவர் அவரே. அக்கதவுகளில் காணப்பட்ட சிறபச்செறிவையும், அழகின் நெளிவையும் பார்த்த மைக்கேல் ஆஞ்செலோ எனும் சிற்பி, அக்கதவுகள் சொர்க்கத்தின் கதவுகளாயிருக்கத் தக்கவை (Gates of Paradise) என்று கூறினர்.

**டானடெல்லோ:** (Donatello) என்ற சிற்பி பல அழகிய சிலைகளைச் செய்தார். ப்ளாரன்ஸ் நகரில் அவர் எடுப்பித்த

ஆர்ச். ஜார்ஜ், ஆர்ச். டேவிட் ஆகியவர்களது உருவச்சிலைகள் மிகவும் புகழ்பெற்றவையாகும். அவை உண்மையான மனிதர்களைப் போன்றே காட்சியளிக்கின்றன (Realistic). அவரது சிற்பத்தில் கிரேக்க சிற்பக் கலைப் பண்பும், கிறிஸ்தவப் பண்பும் ஒருங்கே மிளிர்கின்றன. சியனு நகரத்திலுள்ள கட்டிடத்தின் கோபுரப் பொம்மைகள் (Relief) அல்லது புறநோக்கிச் சிற்பங்கள் ஒரு நாடகத்தில் வரும் பல பாத்திரங்களைப் போன்று காட்சியளிக்கின்றன.

**ஜேகோபோ டெல்லா கவெர்ஸியா (1381-1438)**
(Jacapo della Quercia)

இவர் லூக்கா நகரிலுள்ள இல்லாரியா டெல் காரெட்டோவின் கல்லறையைச் செதுக்கியவர். படுக்கடையாயுள்ள சிலைகளுள் (Recumbent figures) மிகவும் அழகு வாய்ந்தவை என்று சொல்லப்படும் சிற்பங்கள் அக் கல்லறையில் செதுக்கப்பட்டுள்ளன. மைக்கேல் ஏன்சலோ என்ற புகழ்மிக்க சிற்பிக்கு ஓர் ஆதர்சமாய் இச்சிற்பங்கள் விளங்கின.

வெர்ராச்சியோ (Verrocchio) என்பார் மற்றோர் பெருஞ் சிற்பியாவார். அவரது சிறந்த வேலைப்பாடெனக் கருதப்படுவது வெனிஸ் நகரத்திலுள்ள பார்த்தலோமியோ கால்லியோனி (Barthalomeo Colleoni) என்பவரது சிலையாகும். லூக்கா (Lucca) ஆன்றியா டெல்லா (Andrea Della) ஆகியோரது பளபளப்பான சுட்ட மண் பொம்மைகளில் (Glazed Terracotta work) சித்திர வேலைப்பாடுகள் சிறந்து விளங்குகின்றன. அவை ரெப்பேல் என்ற புகழ் பெற்ற ஓவியருக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தன.

**ப்ளாரன்ஸ் நகரில் இருந்த மற்றைய புகழ்மிக்க சிற்பிகள் கீழ் கண்டவர்களாவர்**

1. லியானார்டி ப்ருனி (Leonardi Bruni) என்பாரின் கல்லறையைச் செதுக்கிய பெர்னார்டோ ராசெல்லினோ (Bernardo Rosellino).

2. கார்லோ மார்சூப்பினி (Carlo Marsuppini) என்பவரின் கல்லறையைச் செதுக்கிய டெசிடரியோ டெ செட்டிக்னனோ (Desideri'o de Settignano). இந்த இரு நினைவுச் சின்னங்களும் பெருமை பொலிய, பண்பு செறிய விளங்குகின்றன. மறுமலர்ச்சி-சிற்பத்தின் பேராசிரியர்களாகக் கருதப்படும் மைக்கேல்

ஆஞ்சலோ, பென்வெனுடோ செல்லினி (Benvenuto Cellini) போன்றவர்கள் 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்கள்.

### 4. ஓவியக்கலை (Painting)

இதாலியில் ஆரம்பத்தில் இருந்த ஓவியக்கலை கான்ஸ்டான்டி நோபிலில் காணப்பட்ட பைசாண்டிய ஓவியங்களையே பெரிதும் ஒத்திருந்தன; அவை வெறும் சமயச் சார்புடையவைகளாய் சமய சம்பந்தப்பட்ட காரியங்களுக்காகவே வரையப்பட்டன. அங்ஙனம் வரையப்பட்ட ஓவியங்களில் ஒரு நெளிவு சுளிவு இல்லை. அவை விரைப்பாக இருந்தன (Stiffness in form). இயற்கைக்கு முரணான சாயல்களில் (Unnatural attitudes) தப்புந் தாறுமாக அவை தீட்டப்பட்டிருந்தன. கண்ணுக்குப் பளிச்சென்று படுகிற வண்ணங்களையும் தங்கநிறங்களையும் அவர்கள் தம் உருவங் களுக்குத் தீட்டி வந்தனர்.

மறுமலர்ச்சி, ஓவியக்கலையைப் பெரிதும் பாதித்தது. அதிலே ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது. இயற்கையழகில் விருப்பமும், மனித உருவங்களில் காணப்பட்ட அழகைப் போற்றுவதில் தனி விருப்பமும் ஓவியர்களிடையே காணப்படுகிறது. சுவரோ வியங்கள் (Fresco) கண்டு பிடிக்கப்படுகின்றன. எண்ணெய்ச் சித்திரமும் (Oil Paintings) செப்புப் பட்டயத்தில் உருவங்களைப் பொறிக்கும் கலையும் வளர்கின்றன. உடற்கூறு பற்றிய அறிவும், ஓவியக் கலைஞர்களிடையே பரவுகிறது. ஓவியப் புலவனிடையே ஒரு விடுதலை மனப்பான்மை காணப்படுகிறது. அதனால் அவன் தனது சொந்த திறமைகளைப் பயமின்றி வெளிப்படுத்துகின்றான்.

## ப்ளாரண்டைன் ஓவிய முறை (Florentine School)

### கியோட்டாவும் அவரது ஓவிய முறையும் (Giotto and his school)

கியோட்டோடி பாண்டோனி, (Giotto de Bondoni 1266-1336) என்பார் சிமாபுவின் (Cimabue) மாணுக்கராவார். எனினும் அவர் பைஸாண்டிய முறையை அறவே கைவிட்டார். புதியதோர் முறையைக் கையாண்டார். இயற்கையை அவர் நுணுகிக் கவனித்து அதன் அடிப்படையில் தமது ஓவியங்களைத் தீட்டினர். அவைகளில் பொருள்களை நேரில் பார்ப்பது போன்ற ஓர் உண்மைத் தன்மை (Realism) தெரிந்தது. உருவங்களின் பல்வேறு அம்சங்களும் நன்கு விளக்கமாக வரையப்பட்டிருந்தன. இயற்கையின் எழிலை அவர் போற்றி அதை நன்கு படம் பிடித்துக் காட்டினர். அவருக்கு முன்னிருந்தோர் அழகைப் பின்தள்ளி, எளிமை, தூய்மை, சமயச்சார்பு இவற்றையே அவர் பெரிதும்

வெளிப்படுத்தினுர். உருவங்களை அவர்கள் சப்பையாகவோ, அன்றி தட்டையாகவோ எழுதினுர்கள் (Flat). ஆனுல் கியோட்டோவோ அவற்றை உருண்டையாக எழுதினர். பார்க்கும்போது அவற்றைத் தொட்டுப் பார்ப்பது போன்று ஓர் உணர்ச்சி (tactile) பார்ப்பவர்க்கு உண்டாகும்படி, ஓவியங்கள் வரையப்பட்டதால், கியோட்டோவின் ஓவியங்கள் உயிருள்ள வைகளாகவும், உணர்வு ஓட்டமுள்ளவைகளாகவும் விளங்கின. சுயேச்சையாக நாடகபாணியின் அவை வரையப்பட்டிருந்தன. பழைய ஓவியங்களோவெனில் விரைப்பாகவும் உயிரற்றவை யாகவும் இருந்தன. சைகைகளாலும், நடிப்பாலுமே கியோட்டா வின் ஓவியங்கள் ஒரு கதை சொல்லும் பாணியில் அமைந்திருந்தன.

கியோட்டோவின் ஓவியங்களுள் சிறப்பாக வைத்து எண்ணப் படுவது அர்ச். பிரான்ஸிஸ் என்பவரின் மரணப்படுக்கை ஓவியம். அது ப்ளாரன்ஸ் நகரிலுள்ள சாண்டா க்ராசெ (Santa Croce) திருக்கோயிலுள் காணப்படுவது. பார்கெல்லோவிலுள்ள (Bargello) தாந்தேயின் சுவரோவியமும், அரீனு கோயிலிலுள்ள (Arena Chapel) சுவரோவியமும் அவரால் வரையப்பட்டவையே ஆகும். 'ப்ளாரன்சின் லில்லிப் பூ' (The Lily of Florence) என்று அழைக்கப்படும் காம்பனைல் எனும் கட்டிடத்தை ஆக்கியவரும் இவரே.

### கியோட்டோவைப் பின்பற்றியவர்கள்

கியோட்டோவின் ஓவியமுறை அவருக்குப் பின்வந்த பல ஓவியப் புலவர்களுக்கு முன் மாதிரியாய் அமைந்தது. முக்கிய ப்ளாரன்ஸ் நகர ஓவியர்களான டாடியோ ஃகாடி (Taddeo gaddi), ஆன்றியா ஆர்க்காஃனு (1308—1368), ஸ்பினெல்லோ (Spinello of Arezzo), அம்ப்ரோசியோ, (Ambrosio), பியட்ரோ லாரன் செட்டி (Pietro Lorenzetti of Siena) என்பவர்களின் ஓவியங்களில் கியோட்டோவின் ஓவியச் சாயல் (Influence) பெரிதும் தென்படுகிறது.

### ஃபிரா ஏஞ்சலிகோ (Fra Angelico (1387—1435)

கியோட்டோவின் வழியினைப்பின் பற்றியவரும், மறு மலர்ச்சி ஓவிய முறையின் செல்வாக்கில் சிக்காதவருமான ஏஞ்சலிகோ என்பார் ஓர் உணர்ச்சி மிக்கப் பெரும் புலவராவர் (Emotional Painter). இறைவனை வழிபடாமல் அவர் தம் தூரிகையை எடுக்கமாட்டார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை வரையும்போது அவர் கன்னங்களில் கண்ணீர்

புரளும். வெளியுலகைப்பற்றி அவருக்குச் சிறிதும் அக்கரையில்லை. ஆன்மிக உலகிலேயே அவர் மனம் சதா சஞ்சரித்தது. அவரது ஓவியங்கள் சுவர்க்கத்துக்கு வழிகாட்டியாயிருந்தன. சுவர்க்கத்தைக் காட்டும் சாளரங்களாய்த் திகழ்ந்தன. சமயச் சார்புடையனவேயாயினும், அவரது ஓவியங்கள் கைவண்ணமிக்க கலைச் செல்வங்கள். அவற்றில் உருவங்களின் உண்மை அமைப்பு அப்பட்டமாய் மிளிரும். ஒளியும் நிழலும் அவரது ஓவியங்களில் அளவாகவும், கட்டுப்பாடுடனும் அமைந்து அழகுறத் திகழும். ப்ளாரன்ஸ் நகரிலுள்ள சான் மார்க்கோ சமயப் பள்ளி (San Marco Convent) யிலுள்ள சிறந்த சுவரோவியங்கள் அவரால் வரையப்பட்டவையே. இயேசுவை சிலுவையிலறையப்பட்டதைச் சித்தரிக்கும் அவரது ஓவியம் மற்றெல்லாவற்றையும் விட பேரெழில் பொருந்தியதாகும்.

அவரது மாணவரான ப்பெனோஜோ ஃகாஜோலி (Benozzo Gozzoli), நீட்டுவாக்கிலும், பக்கவாட்டிலும், உருவங்களின் உண்மையமைப்பை, அதாவது அவற்றை நேரில் பார்ப்பது போன்று வெளிப்படுத்தும் திறனில் தனித் தேர்ச்சி பெற்று விளங்கியவராவர்.

## மறுமலர்ச்சி ஓவியர்கள் (Painters of the Renaissance)

### மசாச்சியோ (Masaccio 1410—1428)

கியோட்டோவுக்குப்பின் கலை இவ்வுலகை விட்டகன்று விட்டது என்று டாடியோ என்பார் புலம்பினர். ஆனால் அது மறுபடியும் மசாச்சியோவின் காலத்தில் புத்துயிர் பெற்றது (Revival).

உருவங்களை அழகிய பல பாவனைகளில் அல்லது நிலைகளில் முதன் முதலாக வரைந்தவர் அவரே. பொருள்களின் இயற்கையான பாவம் அவரது ஓவியங்களில் நன்கு வெளிப்படுத்தப் பட்டது. அந்த பாவனைகளில் ஓர் உயிர் ஓட்டம் காணப்பட்டது. பொருள்கள் தம் இயற்கைச் சூழ்நிலையினின்றும் நீட்டிக் கொண் டிருப்பதை உண்மையிலேயே அவை அங்ஙனம் இருப்பது போன்றே அவர் வரைந்தார்.

அவரது சிறந்த ஓவியங்கள் எனப்படுபவை 'கப்பப்பணம்' (Tribute Money) என்பதும், ஈடனிலிருந்து வெளியேற்றம் (Expulsion from Eden) என்பதுமாகும்.

**ஃபிரா லிப்போ லிப்பி** (1406—1469) (Fra Lippo Lippi)

இவர் பிச்சை எடுத்து வாழ்ந்த ஒரு கடுந்துறவி (Friar). எனினும் உலகாபிமானம் பெரிதும் உடையவர். இவ்வுலகை அவர் நேசித்து இவ்வுலகப் பொருள்களின் அழகைப் போற்றினர், அவ்வழகினை வடித்தெடுத்துத் தம் ஓவியங்களில் தந்தார். ஆனல் நேடிவிடி (Nativity) என்ற அவரது ஓவியத்தில் அவரது மத உணர்ச்சி அல்லது சமய மனப்பான்மை நன்கு வெளிப்படுகிறது (Religious Spirit). அவரது மகனுன ஃபிலிப்பினே லிப்பியும் இதே முறையைக் கடைப்பிடித்தார்.

## ப்ளாரன்டைன் ஓவிய முறை

**ஃபோடிசெல்லி** (Botticelli—1444—1510)

இவரது ஓவியங்களில் பழமையும் புதுமையும் கலந்து தென்படுகின்றன. விவிலிய நூலில் காணப்பட்ட கதைகளையே சித்திரமாக வரைதல் அக்காலத்திய வழக்கமாயிருந்தது. அதை விட்டு ரோம கிரேக்க இலக்கியங்களில் காணப்பட்ட கதைகளைப் படங்களாக வரைய முன் வந்த முதல் ஓவியப் புலவர் இவரே யாவார். இதைத்தான் வரைவது என்ற ஒரு குறிக்கோளின்றி கண்டதையெல்லாம் அவர் வரைந்த காரணத்தால் அவரது ஓவியங்களில் ஒருவித சபல மனப்பான்மை (Element of indecision) பிரதிபலிக்கிறது. 'ப்ரைமவிரா' (Primavera) என்ற அவரது ஓவியம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்ததொன்று. எனினும் அதிலே கூட துயரம் தோய்ந்து காணப்படுகிறது. அவரது ஆரம்பகால ஓவியங்களில் அழகு மிளிர்கின்றது. பிற்கால ஓவியங்களில் கியோட்டோவின் முறை கையாளப்படுகிறது.

**பாலோ உக்கெல்லோ** (Paolo Ucceilo)

போர்க்களங்களை இவர் தமது ஓவியங்களில் சித்தரித்தவர். உருவங்களை தத்ரூபமாகக் காட்டுவதில் இவர் தேர்ந்தவர். (Skilful use of perspective)

**டாமினிகோ ஃகிர்லாண்டோஜா**
Dominico Ghirlandajo (I449—1498)

இவர் மைக்கேல் ஆஞ்சலோவின் முதல் ஆசிரியர். இவரது ஓவியங்கள் நல்ல அமைப்பு (Skilful Composition) வாய்ந்தவை. வர்ணங்கள் நல்ல முறையில் கலக்கப்பெற்றவை. இவரது ஓவியங்களில் ஆடை அலங்காரங்கள் நேர்த்தியாய் வரையப் பட்டிருக்கும் (Drapery). கட்டிடங்கள் உண்மையான கட்டிடங்

களைப் போலவே காட்சி தரும். கட்டிடக் கலையின் சிறப்பு அவற்றில் காணப்படும் (Successful treatment of drapery and architecture).

**ஃபிரா பார்டோலோமியா** (1475—1517)
(Fra Bartolommeo)

இவர் சாவனரோலாவின் மாணவர் (Disciple of Savanarola) ஆரம்பகால ஓவியர்களுக்கும், பிற்கால ஓவியர்களுக்கும் இடையில் ஒரு பாலமென வாழ்ந்தவர். ரெப்பேல் (Raphael) ஆன்ட்ரியா டெல்சார்டோ (Andrea delsarto) போன்றவர்களின் ஓவியங்கள் இவரது முறையைப் பின்பற்றியனவாகும்.

**பொது :** ப்ளாரன்ஸ் நகர ஓவிய முறை அல்லது ப்ளாரன் டைன் முறை இங்ஙனம் பழைய முறையைக் கைவிட்டுப் புதிய வழிகளில் சென்றது. சமயச் சார்பு வரவரக் குறைகிறது. மனிதத்துவம் இவைகளில் மிளிர்கிறது. மனிதர்களைப் பற்றிய அக்கறைதான் மறு மலர்ச்சியின் முக்கிய பண்பு. அது இவ்வோவியங்களில் காணப்படுகிறது. ஒளியையும், நிழலையும் (Light and Shade) தக்க முறையில் பயன்படுத்தும் கலையால் உருவங்கள் செம்மையாக அமையப்பெறுகின்றன. உடற்கூறு பற்றிய அறிவும் (Anatomy) அதற்குத் துணைபுரிந்தது.

**அம்ப்ரிய போலக்னீஷ் முறைகள்**
(The Umbrian and Bolognese Schools)

**அம்ப்ரிய முறை :** இந்த முறை ஏறக்குறைய பழைய பாணியிலேயே அமைந்திருந்தது. சமயப் பிரசாரத்துக்கான ஒரு சாதனமாகவே அவை பயன்படுத்தப்பட்டன. ப்ளாரன்டைன் முறையில் காணப்பட்ட தனிச்சிறப்பு இதில் காணப்படவில்லை (More conventional and less individualistic). பழைய மரபை ஒட்டியே இது அமைந்திருந்தது. எனினும் இவ்வோவியங்களில் காணப்பட்ட வானவெளி அமைப்பும் (Space composition) எல்லையற்ற தன்மையும் (Infinity) மிகவும் போற்றத்தக்கவைகளாயிருந்தன. ஒரு புதிய சுவர்க்கம், ஒரு புதிய உலகம் இவற்றைப் பின்னணியாகக் கொண்டு வரையப்பட்ட உருவங்கள் தனிப் பொலிவுடனும் கண்ணியத்துடனும் காணப்பட்டன. 'By opening out behind their figures a new heaven and a new earth gave a heightened dignity to the human beings in the foreground.'

அம்ப்ரியா ஓவியர்களில் சிறப்பாக வைத்து எண்ணப் படுவர்கள் சைமோன் மெம்மி (1284—1344) யும், ஜென்டைல் டா ஃபேப்ரியானோ (1360—1428) (Gentile da Fabriano) என்பவர்களாவர்.

**ப்யரோ டெல்லா ப்ரான்செஸ்கா** (1416—1492) (Piero della Francesca)

இவரது ஓவியங்கள் பண்டைய முறையிலேயே பெரும்பாலும் வரையப்பட்டிருந்தன. எனினும் அவற்றில் ஓர் ஊட்டம் (Vigour) தென்பட்டது. அவரது காலத்திய பல ஓவியர்களுக்கு அவர் தம் ஓவியங்கள் ஊக்கமளிப்பனவாயிருந்தன. உள்ளதை உள்ளபடி வரைந்து காட்டும் பிரபல ஓவிய விற்பன்னர்களுக்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்களில் இவரும் ஒருவர் எனலாம். வளியில் ஏற்படும் மாறுதல்கள் (Changes in atmosphere) எங்ஙனம் பொருள்களின் நிறங்களை மாற்றியமைக்கின்றன என்பதை இவரது இயற்கைக் காட்சி ஓவியங்கள் (Landscape painting) நன்கு எடுத்துக் காட்டுகின்றன. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் இயற்கைக் காட்சி ஓவியர்களின் திறமை இவரது ஓவியங்களில் பிரதிபலிக்கிறது. இவரது மாணவரான லூகா சிக்னோரெல்லி (Luca Signorelli 1441—1523) என்பவரது ஓவியங்களில் வரைவுத் திறனும், உடற்கூறு பற்றிய அறிவும் பொருள்களை உள்ளது உள்ளபடியே காட்சியளிக்கும்படி சமதளத்தில் வரையும் திறமையும், அல்லது தொலைவிலுள்ள காட்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டும் திறமையும் ஒருங்கே காணப் படுகின்றன. பிற்காலத்துப் புகழ்பெற்றோங்கிய மைக்கேல் ஆஞ்செலோ என்ற புலவருக்கு இவரது ஓவியங்கள் ஊக்க மூட்டின (Influenced Michael Angelo.)

**பெருகினோ அல்லது பியட்ரோவானுச்சி** (Perugino or Pietro Vanucci 1446—1524)

இவரது ஓவியங்களில் வானவெளி அமைப்பு (Space composition) மிக நல்ல முறையில் காட்சியளித்தது. வண்ணக் கலவையும், தோற்றப் பொலிவும் (Tone and colour) போற்றத் தக்க முறையில் அமைந்திருந்தன. ரெப்பேல் என்ற புகழ்பெற்ற ஓவியர் இவரது மாணவராவார்.

**பெர்னார்டோ பின்ட்டுரிஸியோ** (Bernardo Pinturiccio)

இவர் பெருகினோவின் மாணவர். அம்ப்ரிய முறையைப் பின்பற்றியதோடு அவரது காலத்திய பழக்க வழக்கங்களையும் அவர் நன்கு படம் பிடித்துக் காட்டினார்.

**போலோக்னிஷிய முறை (The Bolognese School)**

இல் பிரான்ஸியா (Il Francia, 1450—1517) என்பவரே இம் முறையைக் கையாண்டவர். இவரது ஓவியங்களில் உண்மை யான பக்திப் பெருக்கும், மனதையுருக்கும் உணர்ச்சிப் பெருக்கும் (Pathos), மிகுதியாகக் காணப்பட்டன. ரெப்பேல் எனும் ஓவியர் இவரிடம் ஓவியம் பயின்றவர். காரிஃகியோ (Correggio) என்பவரும் இவரது மாணுக்கரே.

## வெனிஷிய ஓவிய முறை
## (The Venetian School)

**ஃபெல்லினி (The Bellini)**

வெனீஸ் நகரம் பல சித்திர மேதைகளைத் தோற்றுவித்தது. அவர்களில் மிக முக்கியமானவர்கள் ஜேகோபோ ஃபெல்லினி (Jacobo Bellini) என்பவரும் அவரது சகோதரரான விவாரினி (Vivarini) என்பவருமாவார் (1450–1500). அவரது இரண்டு மக்களுள் ஜென்டைல் (1429-1507) என்பவர் பிற்காலத்திய ஓவிய மேதையான திஷியன் (Titian) என்பார் இவரிடம் பாடம் பயின்றவரேயாவார். ஆடம்பரமானக் காட்சிகளை வரைவதில் (Pageants) இவர் வல்லவர். ஃகியோவன்னி (Giovanni, 1430-1516) எனும் ஓவியப் புலவரும் இக்குடும்பத்தைச் சார்ந்தவரே. அவரது ஓவியங்களில் மிதமானமகிழ்ச்சி தென்படும் (Sober Joy), வண்ணக் கலவையும், சீர்மையும் (Breadth)) திறம்பட அமைந்திருக்கும்.

**ஜியார்ஜியோன் (Giorgione, 1477-1510)**

இவர் உலக ஓவியப் பெரு மேதாவிகளில் ஒருவர். தஷியன் போன்ருேருக்கு இவர் வழி காட்டியாயிருந்தார். மாடோன்ணு (Madonna) என்ற அவரது புகழ் பெற்ற ஓவியம் ஒரு வண்ணக் காவியம் போல் அமைந்துள்ளது. இயற்கைக் காட்சிகளைப் பின்னணியாகக் கொண்டு, கருத்துகளைப் புலப்படுத்தும் கலையில் வல்லவர். வெளிச்சமும், நிறமும் ஒருங்கே நல்ல முறையில் இவரது ஓவியங்களில் அமைந்திருக்கும். வாழ்க்கையில் காணப் படும் காதல், விரம், புகழ், மகிழ்ச்சி இவைகள் கரைபுரண் டோடும் ஓவியங்களைத் தீட்டியவர் இவர்.

**ஏனைய வெனிஷிய ஓவியர்கள்**

கார்லோ க்ரிவெல்லி (Carlo Crivelli, 1430-1494) ஒரு நல்ல ஓவியர். அவரது ஓவியங்களில் அழகிய கற்பனை (Charming fantasy) மிளிரும். சீர்மை பொழியும் (breadth harmony in general after keeping the details in the background). கேடிஞு

உடற்பயிற்சி, போர்ப்பயிற்சி இவற்றையும் அவர் கற்பித்தார். மாணவர்களின் முழு இயல்பையும் வளர்க்க அவர் பாடுபட்டார்.

காரினோ டி வெரோனோ (Guarino de Verona, 1370—1460) என்பார் மற்றொரு பேராசிரியராவார். பெராரா கோமகனது பிள்ளைகளுக்கு ஆசிரியர். மாணவர்களிடையே கட்டுப்பாட்டை வற்புறுத்திய கண்டிப்பு நிறைந்தவர். கற்பிக்கும் முறையில் புதுமை கண்டவர்.

## ஆரம்பகால மறுமலர்ச்சியும் கட்டடக்கலையும்

**2. கட்டடக்கலை—மறுமலர்ச்சிக்குமுன்**

மறுமலர்ச்சிக் காலத்துக்குமுன் இத்தாலியில் மூன்று வகையான கட்டடக்கலைகள் இருந்தன.

இத்தாலிய முறை: இத்தாலியக் கட்டடமுறை பல இடங்களில் பலவகையாயிருந்தது. இத்தாலியின் வடக்கே லொம்பார்டுகள் குடியேறியதன் காரணமாக லொம்பார்டுகளின் கட்டடமுறை அங்கே கையாளப்பட்டது. தெற்கு இத்தாலியில் அராபியர்கள், நார்மன்கள், பைஸாண்டியர்கள் ஆகியவர்களின் கட்டடமுறை காணப்பட்டது. கீழைநாடுகளில் காணப்பட்ட கட்டடமுறையும் சில இடங்களில் காணப்பட்டது.

**டஸ்கன் ரோமான்ஸ்க் முறை (Tuscan Romansque)**

பண்டைய கிரேக்கக் கட்டடக்கலையின் சாயல் இம்முறையில் காணப்பட்டது. பைசா நகரப் பெருங்கோயில் (Cathedral) சான்மினியாடோ கட்டடம் இவை மேற்சொன்ன முறையில் கட்டப்பட்டனவாகும்.

**ஃகாதிக் முறை (Gothic)**

ஜெர்மானியப் பேரரசர்களின் செல்வாக்கால் இம் முறை இத்தாலியில் கையாளப்பட்டது. சியனா (Siena), லூக்கா (Lucca), ஃபிளாரன்ஸ், மிலான் ஆகிய இவ்விடங்களில் கட்டப்பட்ட பெருங்கோயில்கள் இம் முறையிலேயே கட்டப்பட்டனவாகும். ஆனால், இத்தாலியர்களுக்கு இம் முறை அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

**மறுமலர்ச்சிக் காலக் கட்டடக்கலை (Renaissance Architecture)**

கிரேக்க ரோமானிய இலக்கியங்கள் புத்துயிர் பெற்றதன் காரணமாகக் கட்டடக்கலையிலும் பண்டைய கிரேக்க ரோமப்

பண்புகள் வந்து புகுந்தன. பண்டைய கிரேக்கமுறை அல்லது ரோமான்ஸ்க் முறையில் காணப்பட்ட வட்டமான (ஆர்ச்சும்) வளைவும், பண்டைய ரோமானிய முறையின் சின்னமான தட்டையான கூரையும், முகப்பும் (lintel) கட்டடங்களில் புகுத்தப் பட்டன. ஒரு வகையான ஓர்மையும் (uniformity) சீர்மையும் (symmetry) இப் புதிய முறையின் சிறப்பியல்புகளாயிருந்தன. இப் பண்புகள் ஆங்காங்கே ஏராளமாய் எழுந்த கோட்டைகள், அரண்மனைகள் இன்னும் பல பொதுக் கட்டடங்களில் நன்கு மிளிர்ந்தன.

மறுமலர்ச்சிக் கட்டடக்கலைஞரில் சிறந்தவரென எண்ணப் படுபவர் புருனெல்ச்சி (Brunellschi, 1377—1466) என்பவராவார். அவர் காஸிமோ டி மெடிஸிக்கு, சான் லாரன்ஸோ (San Lorenzo) என்ற அழகிய மாளிகையை 1425-ல் கட்டித் தந்தார். டூமா எனும் கட்டடத்திற்கு புருனெல்சி டூம் ஒன்றை 1436-ல் சேர்த்தார். லியோன் பாட்டிஸ்டோ ஆல்பர்ட்டி (Leon Battisto Alberto) என்பவர் தமது ருசெல்லாய் அரண்மனையில் (Rucellai Palace) இடைக்காலப் பண்பான பருமனையும், பண்டைய பண் பான எளிமையையும் கலந்தார். ஸ்டா மாரியா நோவெல்லா (Sta Maria Novella) என்ற கட்டடத்தின் முன்புறத்தைக் (Facade) கட்டியவர் (1470-ல்) ஆல்பர்ட்டியே ஆவார். பார்மாண்டி என்பவர் (1455—1514) ஆர்ச் பீட்டர் கோயிலை நிருமாணித் தார். அக் கோயில் பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட் டுள்ளது. கம்பீரமாகவும் அதே சமயத்தில் எளிமையாகவும், ஒரு வித ஒருமைப்பாட்டுடனும் அது காணப்படுகிறது. கிரேக்கப் பண்பான அழகுணர்ச்சிக்கு இங்கே இரண்டாந்தரமான இடமே தரப்பட்டுள்ளது.

### 3. சிற்பக்கலை (Sculpture)

கி. பி. 1260-ல் நிக்கோலோ பிசானோ (Niccolo Pisano) எனும் சிற்பி, ஃபிளாரன்ஸ் நகரக் கோயிலின் ஞானஸ்நான மேடையைக் கட்டினார். அவருடைய மாணவரான ஆர்கேக்னே (Orcagna) என்பார் ஆர்சாம்மிசெலே (Orasammichela) என்னும் இடத்திலுள்ள புகழ்மிக்க கூடாரக் கோயிலைக் கட்டினார். மறு மலர்ச்சிக் கலை உண்மையில் கிபர்டி (Ghiberti, 1378—1455) என்ற சிற்பியின் காலத்திலிருந்துதான் தொடங்குகிறது எனலாம். ஃபிளாரன்ஸிலுள்ள ஞானஸ்நானக் கட்டடத்தின் (Baptistry) வெண்கலக் கதவுகளைச் செய்தவர் அவரே. அக் கதவுகளில் காணப்பட்ட சிற்பச்செறிவையும் அழகின் நெளிவையும் பார்த்து

மென்றும், குதிரைகளின் உதவியின்றி வண்டிகளை ஓட்ட முடியு மென்றும் அவர் கூறினர். இக்கால வானவூர்தி, கப்பல், உந்து வண்டி (Motor Car) முதலியவைகளைப் பற்றி அக்காலத்திலேயே அவர் கனவு கண்டார் என்பது இதனுல் நன்கு விளங்குகிறது.

ரோஜர் பேகனின் கருத்துகள் இடைக்கால ஐரோப்பாவில் அதிகம் கால் கொள்ளவில்லை. கடலிற் கரைத்த பெருங்காய மென அவை மறைந்து ஒழிந்து போயின. ஆனுல் எலிஸபெத் இராணியார் காலத்தில் வாழ்ந்த ஸர் பிரான்ஸிஸ் பேகன் (Sir Francis Bacon) என்பார் மீண்டும் அத்தகைய கருத்துகளை மக்களிடம் பரப்பலானுர். 'நவீன விஞ்ஞானத்தின் தந்தை' (Father of Modern Science) என்று அழைக்கப்படுகின்ற அவர், யாரோ சொன்னுர்கள் என்பதால் எதையும் உண்மை என நம்பிவிடக் கூடாதென்றும், தன் கண்ணுலேயே நேராகக் கண்ட தையும், நன்கு அறிவினுல் ஆராயப்பட்டதையுமே நம்பவேண்டு மென்றும் கூறினுர். அறிவியற் சோதனைகளுக்கு அவர் பெரிதும் முக்கியத்துவம் தந்தார். அவர் எழுதிய 'கல்வியின் முன் னேற்றம்' (Advancement of Learning-1604), 'நோவம் ஆர்கானம்' (Novum Organum-1620) ஆகிய நூல்களில் உண்மை காண்பதில் அறிவியல் முறைகள் (Scientific methods) கடைப் பிடிக்கப்பட வேண்டுவதன் இன்றியமையாமையை அவர் நன்கு வற்புறுத்தியுள்ளார்.

**காம்பஸ்**

மேற்கூறிய அறிவியல் முறைகள் கடைப்பிடிக்கப்பட்டதன் விளைவாகப் புதுமைப் படைப்புகள் பல ஏற்பட்டன. அவற்றுள் இடைக்கால மக்களின் வாழ்க்கை முறைகளில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்த படைப்புகள் நான்காகும். காம்பஸ் (Compass) என்ற திசையறி கருவி, டெலஸ்கோப் (Telescope) என்ற தொலை நோக்குக் கருவி, பீரங்கி (Cannon) எனும் வெடி மருந்துப் படைக் கருவி, நூல்களை விரைவில் வெளியிட உதவும் அச்சுப் பொறி ஆகிய இந் நாற்பெரும் புதுமைப் படைப்புகளே நவீன உலகத்தை ஆக்கியுள்ள அரும்பெருஞ் சாதனங்களாகும். அவற்றைப் படைத்துத் தந்த அறிஞர் பெருமக்களுக்குத் தற்கால உலகம் பெரிதும் கடப்பாடுடைத்து என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**அச்சுப்பொறி**

காம்பஸ் என்ற கருவியின் உதவியால் புதிய கடல் வழிகளும் நாடுகளும் எங்ஙனம் கண்டு பிடிக்கப் பட்டதென்பதையும், அதன் விளைவாக வணிகத்துறையில் எங்ஙனம் ஒரு பெரும் புரட்சி ஏற்

பட்டதென்பதையும் நாம் ஏற்கெனவேயே கண்டோம். அதே போன்றுதான் அச்சுப் பொறி கண்டுபிடிப்பால் அறிவுத் துறையில் பெரும் புரட்சி ஏற்பட்டது. அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் நூல்களை மக்கள் தம் கைகளாலேயே எழுதிப் படி எடுத்தனர். அதற்கென்று பழக்கப்பட்ட ஒரு சில எழுத்தர்களிருந்தாலும், நூல்கள் அரிதாகவே வெளிவந்தன. அங்ஙனம் வெளி வந்த நூல்களும் ஒருசில செல்வந்தர்களிடம் மட்டுமே முடங்கிக் கிடந்தன. அறிவு சாதாரண மக்களை எட்டுவதற்கே வழி இல்லாமலிருந்தது. இந் நிலையில்தான் ஹாலந்து நாட்டில் நவீன அச்சுக் கோர்க்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்பெல்லாம் எழுத வேண்டிய எழுத்துகளை எல்லாம் ஒரே பலகையில் செதுக்கி அவற்றின் மேல் மையைப் பூசி அதைப் பதனிட்ட தோல் மீதோ, பேபைரஸ் (Papyrus) என்ற எகிப்திய நாணற் புல்லிலிருந்து செய்யப்பட்ட காகிதத்தின் மீதோ அழுத்திப் பதிவித்தல் வழக்கமாயிருந்தது. அதன்படி ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒவ்வொரு பலகையைத் தயார் செய்ய வேண்டியிருந்தது. இந்தக் குறையைப் போக்க ஹாலந்து நாட்டு ஹார்லம் (Haarlem) பட்டணத்தில் வாழ்ந்த லௌரன்ஸ் கோஸ்டர் (Lourens Coster) என்பார் புதிய முறையொன்றைக் கண்டறிந்தார் (1440). எழுத்துகளைத் தனித் தனியே மரத்துண்டுகளில் ஒரே அளவில் செதுக்கி வைத்துக் கொண்டு, அவற்றைச் சேர்த்தும் பிரித்தும், ஒரு பலகையில் அமைத்துப் பல படிகளை அவ்வொரு பலகையைக் கொண்டே எடுத்துக் கொள்ளலாமென்பதை அவர் கண்டு பிடித்தார். இயக்கத் தக்க அச்சு (Movable type) எனப்படும் இவ்வச்சுகளைக் கண்டு பிடித்ததால் இக்கால அச்சுக் கோர்க்கும் முறையும் நூல் ஆக்கும் முறையும் பெரிதும் வளர்ந்தது. இம் முறையைப் பயன்படுத்தி முதன் முதலில் நூல்களைத் தயாரித்தவர் மெயின்ஸ் (Mainz) எனும் ஜெர்மன் நகரத்தில் வாழ்ந்த ஜான் கூடன் பர்க் (John Gutenberg) என்ற அறிஞராவார். கி. பி. 1454ஆம் ஆண்டளவில் அவர் கிறிஸ்தவர்களின் வேதமான விவிலிய நூலை (Bible) மேற்கண்ட முறையில் வெளியிட்டார். விவிலிய நூலின் தோத்திரப் பாடல்களடங்கிய நூல் ஒன்றை (Mainz Psalter) அவர் 1459ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூதன அச்சு முறை காட்டுத் தீ போல், பிரான்ஸ் இத்தாலி போன்ற அண்டை நாடுகளில் பரவலாயிற்று. வெனிஸ் (Venice) என்ற இதாலிய நகரத்தைச் சேர்ந்த ஆல்டஸ் மனூஷியஸ் (Aldus Manutius) என்பார் தமது புகழ் பெற்ற ஆல்டைன் பதிப்பகத்தைத் (Aldine Press) தோற்றுவித்து அதன் மூலம் பல நூல்களை வெளியிட்டார். கிரேக்க,

ஓர் உண்மைத் தன்மை (realism) தெரிந்தது. உருவங்களின் பல்வேறு அம்சங்களும் நன்கு விளக்கமாக வரையப்பட்டிருந்தன. இயற்கையின் எழிலை அவர் போற்றி அதை நன்கு படம்பிடித்துக் காட்டினார். அவருக்கு முன்னிருந்தோர் அழகைப் பின்தள்ளி, எளிமை, தூய்மை, சமயச்சார்பு இவற்றையே அவர் பெரிதும் வெளிப்படுத்தினர். உருவங்களை அவர்கள் சப்பையாகவோ அன்றித் தட்டையாகவோ (flat) எழுதினார்கள். ஆனால் கியோட்டோவோ அவற்றை உருண்டையாக எழுதினார். பார்க்கும்போது அவற்றைத் தொட்டுப் பார்ப்பது போன்று ஓர் உணர்ச்சி (tactile) பார்ப்பவர்க்கு உண்டாகும்படி ஓவியங்கள் வரையப்பட்டதால், கியோட்டோவின் ஓவியங்கள் உயிருள்ளவைகளாகவும், உணர்வோட்டமுள்ளவைகளாகவும் விளங்கின. சுயேச்சையாக நாடக பாணியில் அவை வரையப்பட்டிருந்தன. பழைய ஓவியங்களோவெனில் விறைப்பாகவும் உயிரற்றவையாகவும் இருந்தன. சைகைகளாலும் நடிப்பாலுமே கியோட்டோவின் ஓவியங்கள் ஒரு கதை சொல்லும் பாணியில் அமைந்திருந்தன.

கியோட்டோவின் ஓவியங்களுள் சிறப்பாக வைத்து எண்ணப்படுவது அர்ச் பிரான்ஸிஸ் என்பவரின் மரணப்படுக்கை ஓவியம். அது ஃபிளாரன்ஸ் நகரிலுள்ள சான்டா கிராசெ (Santa Croce) திருக்கோயிலுள் காணப்படுவது. பார்கெல்லோவிலுள்ள (Bargello) தாந்தேயின் சுவரோவியமும், அரீனா கோயிலிலுள்ள (Arena Chapel) சுவரோவியமும் அவரால் வரையப்பட்டவையே ஆகும். 'ஃபிளாரன்சின் லில்லிப் பூ' (The Lily of Florence) என்று அழைக்கப்படும் காம்பனைல் எனும் கட்டடத்தை ஆக்கியவரும் இவரே.

**கியோட்டோவைப் பின்பற்றியவர்கள்**

கியோட்டோவின் ஓவியமுறை அவருக்குப் பின்வந்த பல ஓவியப் புலவர்களுக்கு முன்மாதிரியாய் அமைந்தது. முக்கியமாக ஃபிளாரன்ஸ் நகர ஓவியர்களான டாடியோ காடி (Taddeo gaddi), ஆன்றியா ஆர்க்காஞா (1308-68), ஸ்பினெல்லோ (Spinello of Arezzo), அம்ப்ரோசியோ (Ambrosio), பியட்ரோ லாரன் செட்டி (Pietro Lorenzetti of Siena) என்பவர்களின் ஓவியங்களில் கியோட்டோவின் ஓவியச் சாயல் (Influence) பெரிதும் தென்படுகிறது.

**ஃபிரா ஏஞ்சலிகோ (Fra Angelico, 1387—1435)**

கியோட்டோவின் வழியினைப் பின்பற்றியவரும், மறுமலர்ச்சி ஓவிய முறையின் செல்வாக்கில் சிக்காதவருமான ஏஞ்சலிகோ

என்புரர் ஓர் உணர்ச்சிமிக்க பெரும் புலவராவார் (Emotional Painter). இறைவனை வழிபடாமல் அவர் தம் தூரிகையை எடுக்கமாட்டார். இயேசு கிறித்து சிலுவையில் அறையப் பட்டதை வரையும்போது அவர் கன்னங்களில் கண்ணீர் வழியும். வெளியுலகைப்பற்றி அவருக்குச் சிறிதும் அக்கறை யில்லை. ஆன்மிக உலகிலேயே அவர் மனம் சதா சஞ்சரித்தது. அவருடைய ஓவியங்கள் சுவர்க்கத்துக்கு வழிகாட்டியாயிருந்தன; சுவர்க்கத்தைக் காட்டும் சாளரங்களாய்த் திகழ்ந்தன. சமயச் சார்புடையனவேயாயினும், அவர் ஓவியங்கள் கைவண்ணமிக்க கலைச்செல்வங்கள். அவற்றில் உருவங்களின் உண்மை அமைப்பு அப்பட்டமாய் மிளிரும். ஒளியும் நிழலும் அவர் ஓவியங்களில் அளவாகவும் கட்டுப்பாட்டுடனும் அமைந்து அழகுறத் திகழும். ஃபிளாரன்ஸ் நகரின் சான் மார்க்கோ சமயப் பள்ளியிலுள்ள (San Marco Convent) சிறந்த சுவரோவியங்கள் அவரால் வரையப்பட்டவையே. இயேசுவைச் சிலுவையிலறையப் பட்டதைச் சித்திரிக்கும் அவரது ஓவியம் மற்றெல்லாவற்றையும் விடப் பேரெழில் பொருந்தியதாகும்.

அவருடைய மாணவரான பெனோஜோ காஜோலி (Benozzo Gozzoli) நீட்டுவாக்கிலும், பக்கவாட்டிலும், உருவங்களின் உண்மையமைப்பை, அதாவது அவற்றை நேரில் பார்ப்பது போன்று வெளிப்படுத்தும் திறனில் தனித் தேர்ச்சி பெற்று விளங்கியவராவார்.

## மறுமலர்ச்சி ஓவியர்கள்
## (Painters of the Renaissance)

மசாச்சியோ (Masaccio, 1410–28)

கியோட்டோவுக்குப்பின் கலை இவ் வுலகை விட்டகன்று விட்டது என்று டாடியோ என்பார் புலம்பினார். ஆனால் அது மறுபடியும் மசாச்சியோவின் காலத்தில் புத்துயிர் (revival) பெற்றது

உருவங்களை அழகிய பல பாவனைகளில் அல்லது நிலை களில் முதன்முதலாக வரைந்தவர் அவரே. பொருள்களின் இயற்கையான பாவம் அவரது ஓவியங்களில் நன்கு வெளிப் படுத்தப்பட்டது. அந்தப் பாவனைகளில் ஓர் உயிரோட்டம் காணப் பட்டது. பொருள்கள் தம் இயற்கைச் சூழ்நிலையினின்றும் நீட்டிக் கொண்டிருப்பதை உண்மையிலேயே அவை அங்ஙனம் இருப்பது போன்றே அவர் வரைந்தார்.

அவாது சிறந்த ஓவியங்கள் எனப்படுபவை 'கப்பப்பணம்' (Tribute Money) என்பதும், 'ஈடனிலிருந்து வெளியேற்றம்' (Expulsion from Eden) என்பதுமாகும்.

ஃபிரா லிப்போ லிப்பி (Fra Lippo Lippi, 1406–69)

இவர் பிச்சை எடுத்து வாழ்ந்த கடுந்துறவி (Friar). எனினும், உலகாபிமானம் பெரிதும் உடையவர். இவ் வுலகை அவர் நேசித்து இவ்வுலகப் பொருள்களின் அழகைப் போற்றினார். அவ் வழகினை வடித்தெடுத்துத் தம் ஓவியங்களில் தந்தார். ஆனால் நேடிவிடி (Nativity) என்ற அவரது ஓவியத்தில் அவரது மத உணர்ச்சி அல்லது சமய மனப்பான்மை (Religious spirit). நன்கு வெளிப்படுகிறது. அவரின் மகனான ஃபிலிப்பினோ லிப்பியும் இதே முறையைக் கடைப்பிடித்தார்.

ஃபோடிசெல்லி (Botticelli, 1444–1510)

இவருடைய ஓவியங்களில் பழைமையும் புதுமையும் கலந்து தென்படுகின்றன. விவிலிய நூலில் காணப்பட்ட கதைகளையே சித்திரமாக வரைதல் அக்காலத்திய வழக்கமாயிருந்தது. அதை விட்டு ரோம கிரேக்க இலக்கியங்களில் காணப்பட்ட கதைகளைப் படங்களாக வரைய முன்வந்த முதல் ஓவியப் புலவர் இவரே யாவார். இதைத்தான் வரைவது என்ற ஒரு குறிக்கோளின்றிக் கண்டதையெல்லாம் அவர் வரைந்த காரணத்தால் அவரது ஓவியங்களில் ஒருவித சபல மனப்பான்மை (Element of indecision) பிரதிபலிக்கிறது. 'பிரைமவிரா' (Primavera) என்னும் அவரது ஓவியம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்ததொன்று. எனினும், அதிலேகூடத் துயரம் தோய்ந்து காணப்படுகிறது. அவரின் ஆரம்பகால ஓவியங்களில் அழகு மிளிர்கின்றது. பிற்கால ஓவியங்களில் கியோட்டோவின் முறை கையாளப்படுகிறது.

பாலோ உக்கெல்லோ (Paolo Uccello)

போர்க்களங்களை இவர் தம் ஓவியங்களில் சித்திரித்தவர். உருவங்களைத் தத்ரூபமாகக் காட்டுவதில் இவர் தேர்ந்தவர் (Skilful use of perspective).

டாமினிகோ ஃகிர்லாண்டோஜா (Dominico Ghirlandajo, 1449–98)

இவர் மைக்கேல் ஆஞ்சலோவின் முதல் ஆசிரியர். இவரது ஓவியங்கள் நல்ல அமைப்பு (Skilful composition) வாய்ந்தவை.

கொண்டிருந்த கொலம்பஸ் எனும் மாலுமி, இந்தியாவுக்கு எவ்வாறேனும் ஒரு கடல் வழி கண்டு பிடித்தேயாக வேண்டும் என்று தீர்மானம் செய்தார். அதற்குரிய செலவுகளைச் சமாளிக்க அவர் பண உதவியைத் தனது நாட்டு மன்னரிடம் கேட்டார்; ஆனால் தனது சொந்த இத்தாலி நாட்டில் அவருக்கு உதவி செய்ய ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் ஸ்பெயின் நாட்டையாண்டு வந்த ஃபெர்டினெண்டும், அவரது இராணி இசபெல்லாவும் அவருக்குப் போதிய கப்பல்களையும், பொருளையும் கொடுத்துதவினர். உலகம் உருண்டை என அறிவியலார் கூறிய உண்மையை நம்பி அவர் மேலைத் திசை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர். அப்படியே போய்க் கொண்டிருந்தால் கீழைத்திசைக்குத் தானாகவே போய் விடலாமென எண்ணினர். 1492இல் புறப்பட்ட அவர் அமெரிக்காவுக்கு அருகிலிருந்த பஹாமாஸ் தீவுகளை அடைந்தார். அவற்றை இந்தியா என நினைத்த அவர், அங்கு வாழ்ந்த மக்களை அவர்கள் சிவப்பு நிறமாயிருந்த காரணத்தால் சிவப்பு இந்தியர் என அழைத்தார். பின்னல் வந்த அமெரிகோ வெஸ்புசி (Amerigo Vespucci) என்ற பிளாரண்டைன் மாலுமிதான், கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தியா அல்ல என்பதை நிரூபித்தவர். தென் அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் அவரே. அவரது இயற்பெயரினடிப்படையிலேயே புதிய உலகம் அமெரிக்கா என அழைக்கப்பட்டது.

இத்தகைய கண்டுபிடிப்புகள் ஏற்பட்ட பின்னர் ஆறும் அலெக்ஸாந்தர் எனும் போப்பாண்டவர் ஐரோப்பாவுக்குக் கிழக்கே உள்ள நாடுகளெல்லாம் போர்ச்சுகீஸியரின் வாணிபத்துக்குரியவை என்றும், மேற்கே உள்ள நாடுகள்யாவும் ஸ்பெயினுக்கு உரியவை என்றும் 1493இல் ஒரு கட்டளை பிறப்பித்தார். இதன் விளைவாக ஸ்பெயின் நந்நம்பிக்கைமுனை வழியாகக் கீழை நாடுகளுக்குச் செல்ல இயலாமல் போய்விட்டது. எனவே மேற்குப் புறமாக ஒரு கடல் வழியைக் கண்டு பிடித்து அதன் மூலம் கீழை நாடுகளை அடைய அன்னர் விரும்பினர். மெகல்லன் (Magellon) என்ற போர்ச்சுகீசிய மாலுமி, ஸ்பெயின் மன்னரான ஐந்தாம் பிலிப்பின் ஆதரவைப் பெற்று கி. பி. 1519 இல் ஐந்து கப்பல்களுடன் மேற்கு நோக்கிப் புறப்பட்டார். அட்லாண்டிக் கடலில் தென்மேற்கு திசைவழியே சென்று அவர் தென் அமெரிக்காவின் தென் முனையை அடைந்தார். பின்னர் மெகல்லன் நீரிணைப்பைக் கடந்து (நீரிணைப்புக்கு அவரது பெயர் பின்னல் தரப்பட்டது) அவர் பசிபிக் கடலுள் புகுந்து இன்று பிலிப்பைன் தீவுகள் என அழைக்கப்படும் பிரதேசத்தை அடைந்தார். அங்கு வாழ்ந்த சுதேசிகளால் அவர் கொல்லப்பட்டார்; அவருடன் சென்ற ஒரு

கப்பல் மட்டும் தப்பிப் பிழைத்து ஸ்பெயினை அடைந்தது. மெகெல்லனின் பயணத்தால் உலகம் உருண்டை என்பது நிரூபணமாயிற்று.

இத்தகைய கண்டு பிடிப்புகளின் விளைவாக மத்திய தரைக் கடல் தனது வணிக முக்கியத்துவத்தை இழந்தது. அதற்குப் பதிலாக அட்லான்டிக் கடல் வணிகப் பெருவழியாக மாறியது. வெனீஸ், ஜெனேவா, அலெக்ஸாந்திரியா போன்ற நகரங்கள் தமது வியாபார முக்கியத்துவத்தையும், செல்வாக்கையும் இழந்தன. இத்தாலிக்குப் பதிலாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து போன்ற நாடுகள் உலக வியாபாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறலாயின. புதிய உலகமான அமெரிக்காவில் முதலில் போர்ச்சுகீஸியர் களும் ஸ்பானியர்களும் குடியேறி ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் பெற்றனர். இதைக் கண்டு பொறாமையுற்ற இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் அவற்றோடு போர் செய்து நாளடைவில் அங்கு வியாபாரம் செய்யவும் குடியேறவும் உரிமை பெற்றன.

# மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)


| | | |
|---|---|---|
| *Abbot, E.* | ... | Pericles and the Golden Age of Athens |
| *Becker and Lager* | ... | A Survey of European Civilisation |
| *Breasted James, H.* | ... | History of Egypt |
| *Brinton, Christopher and wolffe* | ... | Civilisation in the West |
| *Burnell* | ... | Handbook of Western Civilisation |
| *Burns, E. M.* | ... | Western Civilisations |
| *Bury, J. B.* | ... | History of Greece |
| *Childe, V. G.* | ... | Man Makes Himself |
| *Davis* | ... | History of Medieval Europe |
| *Hayes, C. J.* | ... | History of Civilisations |
| *Hayes and Moon* | ... | Ancient and Medieval History |
| *Manroe, D. C.* | ... | The Middle Ages |
| *Nathaniel platt, M. Jean and Drummond* | ... | Our World through the Ages |
| *Parker, E. H.* | ... | Ancient China |
| *Robello* | ... | History of Civilisations Ancient and Medieval |

| | | |
|---|---|---|
| *Swaine* | ... | History of Civilisations |
| *Toynbee, A. J.* | ... | A Study of History Abridgeded |
| *Tucker* | ... | Life in the Roman World of Nero |
| *Von loon, H. W.* | ... | Story of Mankind |
| *Von Nostrand and Paul Shaffer* | ... | Western Civilisations |
| *Warren Hollister* | ... | Landmarks of the Western Heritage |
| *Webb and Burn* | ... | A Survey of European Civilisation |
| *Weech* | ... | History of the World |
| *Wells, H. G.* | ... | History of the World |

# கலைச்சொற்கள்

**A**

| | | |
|---|---|---|
| Algebra | — | குறியீட்டுக் கணிதம் |
| Altar | — | படையல் மேடை |

**B**

| | | |
|---|---|---|
| Baptism | — | ஞானஸ்நானம் |
| Bas - relief | — | புடைப்புருச் செதுக்கோவியம் |
| Bills of Exchange | — | அன்னியச் செலாவணிச் சீட்டுகள் |
| Botany | — | தாவர இயல் |
| Bullion | — | தங்கக் கட்டிகளி |

**C**

| | | |
|---|---|---|
| Cathedral | — | பெரிய மாதா கோயில் |
| Chivalry | — | வீரப் பெருந்தகைமை |
| Church | — | திருச்சபை |
| Concordat | — | சமய உடன்பாடு |
| Confirmation | — | உபநயனம் |
| Crusades | — | சிலுவைப் போர்களி |

**D**

| | | |
|---|---|---|
| Dialectic | — | சமய தருக்கக் கலை |
| Duel | — | துவந்தப் போர்முறை |

E

Ethics — அற இயல்
Ex-communication — சமய விலக்கம்
Eucharist — புனிதத் திருவிருந்து
Extreme-unction — ஈமச் சடங்குகள்

F

Feudalism — நிலமானிய முறை
Fief — மானியம்
Flying buttresses — உதை கட்டுமானங்கள்

G

Guild — வாணியக் குழு

H

Humanism — மனிததத்துவம், மனி தா பிமானம்
Humanities — மனிதாபிமானப் பாடங்கள்

I

Industrialist — தொழிலதிபர்
Insurance — காப்புறுதிப் பத்திரம்
Interdict — தடையாணை

J

Jehad — சமயப் போர்

L

Landlords — பெருநிலக் கிழார், நிலப்பிரபு
Land - Tenure — நில உடைமை உரிமை

M

Manorial System — பண்ணை முறை
Manor - house — பண்ணை வீடு

| | | |
|---|---|---|
| Minaret | — | உருளை வடிவமானக் கோபுரம் |
| Miniatures | — | சிற்றோவியங்கள் |
| Monastary | — | மடாலயம் |
| Monotheism | — | ஓரிறை வழிபாடு |
| Murals | — | சுவரோவியங்கள் |
| Mysticism | — | அநுபூதி |

**N**

| | | |
|---|---|---|
| Nationalism | — | தேசியம் |
| Nunneries | — | கன்னி மாடங்கள் |

**O**

| | | |
|---|---|---|
| Ordeal | — | கடுஞ் சோதனை முறை |
| Ordination | — | தீட்சை |
| Over - lord | — | மேலதிபர் |

**P**

| | | |
|---|---|---|
| Peace of God | — | சமாதான ஆணை |
| Persecution | — | மத ஒறுப்பு |
| Pessimissm | — | உலகம் துன்பமயம் என்ற கொள்கை |
| Pulpit | — | சொற்பொழிவு மேடை |
| Purgatory | — | அழறு |

**R**

| | | |
|---|---|---|
| Rationalism | — | பகுத்தறிவுவாதம் |
| Rhetoric | — | சொல்லாட்சிக் கலை |
| Representative government | — | பிரதிநிதித்துவ அரசாங்கம் |

**S**

| | | |
|---|---|---|
| Sacrament | — | புனிதச் சடங்கு |
| Sarcophagi | — | கல்லாலானச் சவப்பெட்டி |
| Scholasticism | — | புலமைக் கொள்கை; ஒருவகை மெய்யறிவுத்துறை |

Scriptures — புனித நூல்கள்
Simony — பதவி விற்றல் வாங்கம்

T

Tapestries — திரைச் சீலைகள்
Tenents-in-chief — முக்கிய மானியதாரர்கள்
Tenents — குடியானவர்கள்
Theology — சமய சித்தாந்தம்
Transepts — சிலுவை போன்ற சிறிய குறுக்கு மண்டபங்கள்
Transubstantiation — புனிதப்பொருள் மாறுபாட்டுக் கொள்கை
Trallis — பொற்பின்னல் வேலைப் பாடுகள்
Trivium — முப்பால் கலை
Truce-of God — தற்காலிக அமைதி நாள்கள்

V

Vassals — மானியதாரர்கள்